'பதிவுகள்' சிறுகதைகள்

(தொகுதி நான்கு)

"அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்"



"அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்" என்பதைத்தாரக மந்திரத்துடன், எழுத்தாளர் வ.ந.கிரிதரனை ஆசிரியராகக்கொண்டு மார்ச் 2000 ஆம் ஆண்டிலிருந்து வெளியாகும் இணைய இதழ் 'பதிவுகள்' (பதிவுகள்.காம்). 'பதிவுகள்' இணைய இதழில் வெளியான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் மின்னூற் தொகுப்புகளாக வெளியாகும். இது அவ்வகையில் வெளியாகும் நான்காவது சிறுகதைத்தொகுப்பு.

'பதிவுகள்.காம்' வெளியீடு!

அக்டோபர் 2020

உள்ளே..

1. பறவைப்பூங்கா - சித்ரா ரமேஷ் (சிங்கப்பூர்) -

சித்ரா ரமேஷ்அந்தப் பழங்கால பிரிட்டிஷ் கட்டடத்தை விட்டு வெளியே நடந்தாள். வெயில் முகத்தைச் சுட்டெரித்தது. இதைப் போன்ற உயரமான மேற்கூரையும் வளைவுகளையும், நீளமானத் தாழ்வாரங்களையும் கொண்ட கட்டடம் இன்னும் வேறு ஏதாவது இருக்கிறதா என்று யோசித்துப் பார்த்தாள். ரா•பிள்ஸ் பிளேஸில் இல்லை டோபிகாட் எம்ஆர்டி அருகில் மெக்டொனால்ட் ஹவுஸ் இதே போலத்தான் இருக்கும். உள்ளே போய்ப் பார்த்தால்தான் தெரியும். தினமும் நடந்து போகும் பாதையில் எதிர்ப்படும் மனிதர்கள், முகங்கள், உடைகள், வாசங்கள் பழகிவிடுவது போல் கட்டடங்களும் பழகி விடுகின்றன. சில கட்டடங்கள் சிலீரென்று அளவுக்கதிகமாகக் குளுமையைத் தந்து மரண அறையைப் போல பயத்தைத் தருகின்றன. சில நண்பர்கள் போன்ற இதத்தைத் தரும். சில கட்டடங்கள் அம்மாவைப் போல் பாதுகாப்பைத் தரும். இத்தனை நாட்கள் காலையில் வேலைக்குப் போகும் போதெல்லாம் பாதுகாப்பைத் தந்த கட்டடம் இன்று அவளைப் வெளியேப் பிடித்துத் தள்ளியது.ஆட்குறைப்புச் செய்கிறது என்று சொல்லப் பட்டது. பாதிக்கும் மேற்பட்ட அறைகள் காலியாகவே இருந்து கொண்டுதான் இருந்தது. இப்போதல்ல. நிர்மலா வேலைக்குச் சேர்ந்த அன்றிலிருந்து அப்படித்தானிருந்தது.

நிர்மலாவும் ஷாலினியும் வாக்-இன்-இண்டர்வியூ என்று ஒன்றாக நேர்முகத் தேர்வுக்கு வந்தார்கள். வரவேற்பாளர்களாக இருக்க விரும்புகிறோம் என்று சொன்னதும் இண்டெர்வியூ செய்த பெண்மணி அழகாகச் சிரித்துச் சிரித்துப் பேசி இந்த ஹோட்டலில் வேலை செய்யும் அனைவருக்கும் எல்லா வேலைகளும் கற்றுத் தரப்படும். முதலில் ஹவுஸ் கீப்பராக பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு வேலை நிரந்தரமான பின் வரவேற்பாளராகவும் வேலை செய்யலாம் என்று வாக்குறுதி தந்தார். எல்லா வாக்குறுதிகளும் நிறைவேற்றப் பட வேண்டும் என்ற கட்டாயமா? வாழ்க்கையில் கடவுள் முன் உற்றார் உறவினர் முன் எடுக்கப் பட்ட வாக்குறுதியை தாஸ் காப்பாற்றவில்லை. இதென்ன பெரிய வாக்குறுதி? ஒரு வேலையில் சேர விருப்பம் தெரிவித்தப் பின் இன்னொரு வேலைக்கு மாற விரும்பும் சின்ன விஷயம். ஆனால் இந்தச் சின்ன விஷயம் நிறைவேறாமல் போனது கூட தன்னுடைய துரதிருஷ்டம் என்று நினைக்கவில்லை. அதைப் பற்றிப் பேசி நினைவூட்டலாம் என்றால் மேடம் மேரி சூ அந்த ஹோட்டலில் எங்கேயும் கண்ணில் படவேயில்லை. அவளுக்கும் நிறைவேறாத வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டு ஷாலினி மாதிரி கோபித்துக் கொண்டு வேலையை விட்டுப் போய்விட்டாளா?

இவர்களுக்கு படுக்கை விரிப்புகள் மாற்றுவது, பூச்சாடிகளில் பழையப் பூக்கள் மாற்றி புதுப் பூக்களால் அலங்கரிப்பது, கழிவறையில் வாசனைக் காற்றைப் பரவ விடுவது, குட்டி குளிர்ப்பதனப் பெட்டியில் சீல் செய்து வைக்கப்பட்டிருக்கும் பானவகைகளின் சீல் பிரிக்கப்பட்டிருக்கின்றதா என்று சரிப் பார்த்து போன்ற வேலைகள் தொடர்ந்தன. சீலை

சும்மாத்தானே பிரித்துப் பார்த்தேன் அதிலிருந்து ஒரு சொட்டுக் கூட குடிக்கவில்லை இதை ஏன் பில்லில் சேர்க்கிறீர்கள் என்று அசட்டுக் கேள்வி கேட்கும் பெரிய மனிதர்கள், குடித்து விட்டு அதற்குப் பதிலாக கோக்கோ கோலாவை நிரப்பி என்னது சீல் பிரிக்கப்பட்டுள்ளதா நாங்க ஓப்பன் செய்யவே இல்லையே உங்க ஹவுஸ் கீப்பிங்லே பிரச்சனை என்று சாதிக்கும் சாமர்த்தியசாலிகள் இப்படி நிறைய பேரை சமாள¢த்தாகிவிட்டது. ஒரு நாள் அறை வாடகை இருநூறு முன்னூறு வெள்ளி கட்டத் தயாராக இருப்பவர்களுக்கு ஏனோ இதில் ஒரு அல்பத்தனம் வந்து விடும். ஷாலினிதான் மெள்ள விசாரித்தாள். எங்களுக்கு ஏன் •பிரன்ட் ஆ•பிஸ் வேலையே கொடுப்பதில்லை என்றுக் கேட்டாள். ஹவுஸ் கீப்பிங் வேலைக்கு வந்து விட்டு எப்படி •பிரன்ட் ஆ•பிஸ் வேலை கொடுக்க முடியும் என்று பதில் வந்தது. ஷாலினி அன்று முழுவதும் கொதித்துக் கொண்டிருந்தாள்.

“நம்பளால தலையை விரிச்சு போட்டுக்கிட்டு வேலை செய்ய முடியாதா லா! நம்பக் கையால ரூம் சாவிய எடுத்துக் கொடுத்தா நம்ப கருப்பு ஒட்டிக்கிடுமா”, என்று ஆத்திரப்பட்டாள்.

“ஆமா! பெரிய வேலை! வீட்டுக்குப் பக்கமா •பாக்டரிலே வேலையிருக்கு நிம்மி! வாரம் நாலு நாள் ராத்திரி வேலை! மூணு நாள் லீவு! ராத்திரி வேலை முடியலைன்னா பகல் ஷி•ப்டுக்கு மாறிக்கலாம். நீயும் வந்துடேன்”, என்று தைரியமாக வேலையை விட்டாள். இவளையும் கூப்பிட்டாள். நிர்மலாவுக்கு வழக்கம் போல் தயக்கம். வரவில்லை என்று சொல்லிவிட்டாள்.

“நீ எப்போத்தான் ரொம்ப யோசிச்சிக்கிட்டேயிருக்கறப் பழக்கத்தை மாத்திக்கப் போறியோ? ரொம்ப யோசிச்சா எந்த இடத்திலேந்தும் மாறவே முடியாது”, என்று சொல்லிவிட்டு அவள் வேலை மாறி போய்விட்டாள்.

“ நம்ப ரெண்டு பேரும் தினமும் நல்லா டிரெஸ் பண்ணிக் கொண்டு சிடி பக்கம் வேலைக்குப் போகணும் ஸ்கூல் மாதிரி யூனி•பார்ம், ஷி•ப்ட் வேலைல்லாம் இல்லாம ஆ•பிஸ் வேலைக்குப் போகணும் ”, என்று ஆசைப் பட்டதே ஷாலினிதான்.
அவளால் கிடைத்த வேலைக்குத் தயக்கம் இல்லாமல் மாற முடிகிறது. நிர்மலாவால் முடியவில்லை. அவளுக்குத் தான் செய்யும் வேலையில் எந்தப் பிரச்சனையும் இருப்பதாகத் தெரியவில்லை. தினமும் வித விதமான மனிதர்களைச் சந்திக்க முடிந்தது. தினமும் செந்தோசாவுக்கும் பறவைப் பூங்காவுக்கும் எப்படிப் போவது என்று வழி சொன்னாள். தான் கடைசியாக செந்தோசாவுக்கும் பறவைகள் பூங்காவுக்கும் போனது எப்போது என்று யோசித்துப் பார்த்தாள். தொடக்கநிலை ஐந்தில் படிக்கும் போது ‘இளம்விஞ்ஞானி’ பேட்ஜ் வாங்குவதற்காக மிஸஸ் சான் கூட்டிக் கொண்டுப் போனாள். அந்தப் பறவைகள் இன்னும் உயிரோடு இருக்குமா? கிளிகளும் நாரைகளும் எத்தனை நாட்கள் உயிரோடு இருக்கும்? இருபது வருடம் இருக்குமா?

இயற்கைச் சூழலை விட செயற்கைச் சூழலில் வாழும் பறவைகள் இன்னும் அதிக நாட்கள் வாழலாம். வேளாவேளைக்குத் தவறாமல் உணவு. உடலில் கோளாறு என்றால் உடனடியாக கவனிக்க மருத்துவ வசதிகள். தான் பார்த்த அதே கிளிகள் இன்னமும் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருக்கலாம். கணக்குகள் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கலாம். அதே நாரைகள் இறக்கைகள் விரித்து வரவேற்புத் தந்து கொண்டிருக்கும். தனக்கும் பத்து வருடமாக அதே இடம் அதே வேலை. எண்ணெயிட்டு சீராக
ஓடும் இயங்கும் இயந்திரமாய் ஓட்டம். தீடீரென்று பறவைப் பூங்கா பறவைகளிடம் இந்தப் பூங்காவில் உங்களுக்கு இடமில்லை. இனிமேல் இங்கே உங்களுக்கு வேலை இல்லை என்று துரத்தி விட்டால் அவை எங்கே போகும்? பறக்கும் சக்தி இருந்தாலும் அதை முழுமையாக பயன்படுத்தி பறந்து செல்லப் பழகாதப் பறவைகள். அதிலும் சில அங்கேயே பிறந்து வளர்ந்திருக்கலாம். இரை தேடி அலையும் அவசியமே இல்லாமல் வாழப் பழகிவிட்டப் பறவைகள். என்ன செய்யும்?

சில சமயம் சுவாரஸ்யமான மனிதர்களைச் சந்தித்துப் பேசியதைத் தவிர வேறு எந்தப் பரபரப்பும் இல்லாமல் ஓடியது வாழ்க்கை. உலகத்தில் எல்லா மூலைக்கும் சென்று 'வாழும் கலை' கற்றுத் தரும் குரு அவர். தன் பெட்டியிலிருந்து எடுத்த
கசங்கிப் போன

குர்த்தாவை அயர்ன் செய்ய முடியாமல் ஹவுஸ் கீப்பிங் செய்ய வந்திருந்த நிர்மலாவிடம் இதை அயர்ன் செய்ய உதவ முடியுமா என்று கேட்டதும் நிர்மலாவுக்கு சிரிப்பு வந்து விட்டது. சுற்றிலும் எக்கச்சக்க சிஷ்யர்கள் கூட்டம் இருந்து கொண்டேயிருந்தது. அன்று அதிசயமாய் சுற்றிலும் யாரையும் காணவில்லை. எல்லோரும் வெளியே எங்காவது சுற்றிப் பார்க்கப் போயிருந்தார்கள். மனிதக் கூட்டத்தின் நடுவே வெண்ணிற உடையில் தேவதூதன் போல் நின்று கொண்டு குழந்தைகளுக்குச் சொல்வது போல் கண்களை மூடிக் கொண்டு தியானம் செய்வது பற்றிச் சொல்லிகொண்டிருந்தார். நிர்மலாவுக்கு அந்த மாலை வேலை முடியும் நேரம். சில மேஜைகளும், விரிப்புகளும் எடுத்துக் கொடுக்கப் போயிருந்த போது மேடையில் குழந்தைப் போல சிரித்துக் கொண்டு நின்றிருந்தவரைப் பார்த்தாள். பத்தாயிரம் பேர் இருந்திருப்பார்கள். அதற்கும் மேல் ஒரு கூட்டம் வெளியில் தொலைக்காட்சிப் பெட்டியில் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தது. அனைவரும் கண்களை மூடி தியானத்தில் மூழ்க நிர்மலாவுக்கு வீடு திரும்பும் நேரம். அத்தனை பேரும் கண்கள் மூட இவளுக்கு லேசாகத் தூக்கம் வருவது போலிருந்தது. முதல் நாள் அத்தனைப் பேரையும் வசியப் படுத்தி வாழ்க்கையைப் பற்றி விளக்கியவருக்கு தன் சட்டையை சீராக்கிக் கொள்ளத் தெரியவில்லை. சிலரைப் பார்த்தால் உடனே பேசலாம் என்று தோன்றிவிடும். அவரைப் பார்த்ததும் பேசவேண்டும், எதாவது பேசிச் சீண்ட வேண்டும் என்று தோன்றிவிட்டது.

"என்ன சாமி! ஊருக்கெல்லாம் வாழும் கலை கத்துத் தறீங்க. இந்தக் கலைய நீங்க

கத்துகலையா?", என்று கேட்டதும் அவர் கண்கள் குழந்தையைப் போல் சிரித்தன.

" தமிழ்ப் பொண்ணா நீ! அப்போ உங்கிட்டத் தமிழிலேயே பேசலாமே! என்னை சாமின்னெல்லாம் கூப்பிடாதே! நான் கடவுளும் இல்லை. சாமியாரும் இல்லை. ஒருத்தர் நமக்கெல்லாம் எட்டாத விஷயமாக இருக்கிறார். இன்னொருத்தர் உங்களை தன்னிடம் நெருங்க விடாமல் இருக்கிறார். நான் அப்படியெல்லாம் இல்லை. உங்களுக்கு ரொம்ப நெருக்கமாக இருந்த கிண்டர் கார்டன் டீச்சராக இருக்க விரும்புகிறேன். அதனால் என்னை குருஜின்னு இல்லேனா டீச்சர்ன்னு கூப்பிடு. இப்படிக் கூப்பிட்டால் எனக்கும் உங்களோடு குழந்தை மொழியில் பேச முடிகிறது",.

அவரே தொடர்ந்து " என்னவோ கேட்டியே? வாழும் கலை கற்றுத் தருகிறேன் என்று சாதாரண வாழ்க்கைக் கலை எதையும் கற்றுக் கொள்ளாமல் விட்டு விட்டேன் போலிருக்கிறது. எல்லோராலும் எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள முடிவதில்லையே", என்று மிருதுவாகச் சிரித்தார்.

அவளை உற்றுப் பார்த்து விட்டு " என்ன இவரைப் பார்க்கறதுக்கு எதுக்கு இவ்வளவு பெரியக் கூட்டம் என்று யோசிக்கிறாயா?", என்றார்.

அவள் அவரிடம் தேவையற்ற மரியாதைப் போர்வைப் போர்த்திக் கொண்டு பொய் சொல்லத் தோன்றாமல் "ஆமாம்", என்றாள்.

"உண்மையிலேயே நான் யாருக்கும் எதையும் சொல்லித் தருவதில்லை. எல்லோருக்கும் ஆசைகள், ஏக்கங்கள் வாழ்க்கையில் நிறைய எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்கள்

இருக்கின்றன. இவற்றையெல்லாம் மீறி தனக்கென ஒரு அடையாளம் தேடும் துடிப்பு இழுக்கின்றது. அதைப் பற்றி ஒரு மயிலிறகால் வருடி விடுவது போல் மென்மையாகப் பேசி மன இறுக்கத்தைத் தளர்த்தி விடுகிறேன். எல்லோருக்கும் எதோ ஒரு இழந்த சுகத்தைப் பெற்றத் திருப்தி. அவ்வளவுதான்", என்றார். இவர் பேசுவதைக் கேட்க எத்தனைத் தன்மையாக இருக்கிறது. இதை போல் தன்னிடம் பேசுவதற்குக் கூட யாருமில்லை என்ற எண்ணமே அவளை துக்கத்தில் ஆழ்த்தியது. எவ்வளவு பெரிய மனிதர்! எத்தனை எளிமையாகப் பேசுகிறார்! தனக்கு மட்டும் ஏன் எதுவுமே எளிமையாக அமையவில்லை? காதல், கல்யாணம், குடும்பம், குழந்தைகள் இப்படி எதுவுமே எளிதாகவில்லை. வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் தொழிற்பேட்டையில் ஏதோ ஒரு வேலை, மாதாமாதம் சம்பளம், சீனப் புத்தாண்டு சமயம் போனஸ், பிக்கப் வேன் வைத்துக் கொண்டு சாமான்களை ஏற்றி இறக்கி வியாபாரம் பண்ணிக்கொண்டு, வார இறுதியில் அந்த வேனிலேயே ஜேபிக்கு இல்லை தேக்காவுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குத் தேவையானவற்றையெல்லாம் வாங்கிக் கொண்டு, அடுக்குமாடி

வீட்டின் கீழேயே மினிமார்ட் பூக்கடை போட்டோக்காபி பண்ணும் கடை, மாதம் ஆயிரத்தைந்நூறு வெள்ளி கிடைத்தால் கூடப் போதும் குடும்பத்தை ஓட்டி விடலாம். இரண்டுக் குழந்தைகள். மூத்தது கிண்டர் கார்டன் இரண்டாவது நர்ஸரிப் பள்ளியில் கொண்டு விட்டு பள்ளிக்கூட வாசலிலேயே மூன்று மணி நேரமும் சின்னது அழுகின்றதா என்று பார்த்துக் கொண்டு வீட்டில் சமைத்துக் கொண்டு “பத்து வெள்ளி கொடுத்துட்டுப் போங்க! மார்க்கெட்டுப் போகணும்”, என்று முழுமையாக ஒரு ஆணைச் சார்ந்து வாழும் வாழ்க்கையை அவளால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.

ஷாலினியும் இப்படித்தான் சாதாரணக் கனவுகளுடன் வாழ்க்கையைத் தொடங்கினாள்.

“பரிசம் போடறாங்க! வீட்டுக்கு வா!”, என்று கூப்பிட்டு விஜயனை அறிமுகப் படுத்தினாள். பழக்கப்படாத சேலையில் கால்கள் தரையிலேயே படாதது போல் மிதந்து கொண்டிருந்தாள். விஜய் விஜய் என்று சுற்றிச் சுற்றி வந்தாள். ரிஜிஸ்தர் செய்கிறோம் என்று ஒரு கொண்டாட்டம், விருந்து. வீடு வாங்கிட்டுத்தான் கல்யாணம். சிம்பிளா கோவில்ல சைவச் சாப்பாடு போட்டு நெருங்கின சொந்தக்காரங்களை மட்டும் கூப்பிட்டு செஞ்சா போறும்”, என்று சொல்லிக் கொண்டேயிருந்தாள். ஐந்து வருடமாயிற்று. இருவருமாக சேர்ந்து வாங்கிய வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு கோவிலில் முறைப்படி கல்யாணமில்லாமலேயே கிட்டத்தட்ட கணவன் மனைவியாக வாழ்ந்த அலுப்பு மட்டும்தான் மிஞ்சியது. ஷாலினி இன்னும் நம்பிக்கையோடு கல்யாணம் முடிஞ்சதும் ஹனிமூன் நியுசீலாண்ட் போகலாம்னு இருக்கோம் என்றாள். இனிமேல் புதுமணத் தம்பதிகளாக அவர்கள் எப்படியிருப்பார்கள் என்பதை நினைத்தால் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

தாஸ் இப்படியெல்லாம் காத்திருக்க வைக்கவில்லை. எல்லாம் புயல் வேகத்தில் நடந்து முடிந்தது. பார்த்தவுடன் காதல். அடுத்த சந்திப்பிலேயே தன் நண்பர்கள் எல்லார் முன்னிலையிலும் நாடகம் போல் மண்டியிட்டுத் தன் காதலை ஏற்றுக் கொள்ளச் சொன்னான். அதுவும் அவன் விளையாடுகிற கால்பந்தாட்ட மைதானத்திலேயே! விளையாடும் போதே காதலையும் சொன்ன விளையாட்டு வீரர் என்று உள்ளூர் நாளிதழில் செய்தி வேறு வந்தது. காதலின் உச்சத்தில் இருந்த போது அவன் செய்தது எல்லாமும்

பெரிய புரட்சியாகவும் தன்னை வாழ்விக்க வந்த தேவதூதனாகவும் தெரிந்தது. காதலைத் தெரிவித்ததும் தன் அம்மாவிடம் அறிமுகம் செய்து வைத்தான். மதம் மாறினால்தான் அடுத்தப் பேச்சு என்று அவன் அம்மா சொன்னதும் இதென்ன பெரிய விஷயம் என்று நிர்மலா ஏஞ்சல் என்று பெயர் மாற்றி கிறிஸ்துவ மதத்திற்கு மாறினாள். இதெல்லாம் அம்மாவிடம் சொல்லவில்லை. சொன்னாலும் என்னப் புரியப்போகிறது என்று

சொல்லவில்லை. சர்ச்சில் மோதிரம் மாற்றித் திருமணத்தை உறுதி செய்த போதுதான் அம்மாவிடமும் சின்னம்மாவிடமும் மெள்ளச் சொன்னாள். அம்மாவிடமிருந்து ஒரு உறுமல்தான். பேச்சுக் குறைந்து போனதிலிருந்தே இப்படித்தான். சின்னம்மாதான் அம்மா இதைச் சொன்னாள் அதைச் சொன்னாள் என்று அம்மாவின் ஒவ்வொரு அசைவுக்கும் எதாவது அர்த்தம் சொல்வாள். சின்னம்மா வழக்கதிற்கு மாறாக ஒன்றும் சொல்லவில்லை.

"ஆமா! இந்த ரெண்டு கிழவிகளும் சேந்து உனக்கு கல்யாணம் பாத்து பண்ணி வைக்கப் போறோமான்னு நீயே பாத்துக் கிட்டே! கல்யாணத்தைப் பாக்கறதுக்காவது உங்க ஆத்தாளை கூட்டிக் கிட்டுப் போ!", என்றாள். மரியதாஸ¥க்கு தான் விளையாடுகிற கால்பந்தாட்டம் போல் பந்தை உதைத்து உதைத்துத் தள்ளி கோல் போடும் வேகம்தான் எல்லாவற்றிலும்! மரியதாஸ் முதன் முதலில் வீட்டுக்கு வந்த போது

"என்ன இந்த ரெண்டு பைத்தியக்கார கிழவிகளும் இங்க நம்ம கூடத்தான் தங்கியிருப்பாங்களா?', என்று கேட்டான். அவன் ஏதோ பெரிய ஜோக் அடித்ததைப் போல் விழுந்து விழுந்துச் சிரித்தாள். ஆண்கள் இப்படித்தான் நகைச்சுவையாகப் பேசி மகிழ்விப்பார்கள் என்ற அசட்டுத்தனமான எண்ணம்தான்!

அம்மா ஆசையாக வாங்கி வைத்திருந்த புடவைகளில் எதையுமே இவள் கட்டியதில்லை. புடவை எடுத்துக் கொண்டு வரும் புடவை மூட்டைக்காரரிடம் அம்மாவுக்காக நிர்மலாதான் புடவை தேர்ந்தெடுத்துத் தருவாள். அம்மா கட்டி அழகுப் பார்க்க ஏது நேரம்? சரோங்கும் சட்டையும் தான் அம்மாவின் உடை. எப்போதும் சமையல் வாசம் வீசும் துணிகள். என்றாவது கோவில் போகும் போது ஆசையாக வாங்கி வைத்தப் புடவையில் ஒன்றை எடுத்து கட்டிக் கொள்வாள். அந்தப் புடவையில் மட்டும்தான் அம்மாவின் சமையல் வாசம் வீசாது. குஞ்சலங்களாகத் தொங்கும் முந்தானையைப் பிடித்துக் கொண்டு அம்மாவின் பின்னால் போவாள். தன் கல்யாணத்தன்று அம்மாவைப் புடவை கட்ட வைத்துக் கிளப்பினாள். அம்மாவுக்குப் ரொம்ப பிடித்தமான கிளிப்பச்சை நிறப் புடவை. அம்மா ஏதாவது கோவிலுக்குப் போகப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டு கிளம்பியிருப்பாள். சர்ச்சைப் பார்த்ததும் மிரண்டு போய் உள்ளேயே வரமாட்டேன் என்று வெளியில் நின்று விட்டாள். ஆட்டுக் குட்டியை இழுத்துக் கொண்டு போவது போல் அம்மாவைத் தரதர வென்று இழுத்துக் கொண்டு போகும் படியாயிற்று. தாஸ் என்ன இது இப்படி டிராமா போடறாங்க என்றுப் பல்லைக் கடித்துக் கொண்டான்.

திருமணம் முடிந்ததும் பெரிய விருந்து. தேனிலவு. எக்கசக்கச் செலவு. எதற்கு இத்தனைச் செலவு என்று கணக்குச் செய்து தலைவலிதான் மிச்சம். தன் பக்க விருந்தினர்கள் என்று எண்ணி இருபத்தியைந்து பேர் கூட வரவில்லை. எல்லோரும் தாஸ் கூட்டாளிகள், உறவினர்கள். எல்லோரையும் ரொம்ப நெருக்கமானவர்கள் என்று சொல்லிக் கொண்டான். இத்தனை மனிதர்களிடம் நெருக்கம் என்று காட்டிக் கொண்டவன் உண்மையாகவே

நெருங்கிய மனிதர்களிடம் நெருக்கம் காட்டவில்லை. அதையும் எத்தனையோ நாட்கள் தான் உணரவேயில்லை. மரியதாஸ் அவன் வீட்டுக்கு நிர்மலாவைக் கூட்டிக் கொண்டு போய் குடும்பம் நடத்தவில்லை. இங்கே இவள் வீட்டிலும் வந்து நிர்மலாவுடன் இல்லை. நினைத்த போது வந்து தங்குவான். தங்கிவிட்டு போகும் போதெல்லாம்

"இறநூறு வெள்ளி கொடு ஐந்நூறு வெள்ளி கொடு", என்று தவறாமல் கேட்டு வாங்கிக் கொண்டுப் போவான். பணம் இல்லையென்றால்

"சரி அந்த செயினைக் கொடு வளையலைக் கொடு", என்று உரிமையோடு எடுத்துக் கொண்டுச் செல்வான்.

"ஒருநா தங்கிட்டு பணம் பிடுங்கிட்டுப் போறானே! அவன் குடுத்தனம் நடத்துற வீடா இல்லை வேற எதாவதுன்னு நெனைச்சிக்கிட்டு இருக்கானா?", அம்மாவே முணுமுணுத்த போதுதான் நிர்மலாவுக்கு அவன் ஏன் இப்படி பணம் பணம் என்று அலைகிறான் அப்படியென்ன செலவு என்று கேட்கத் தோன்றியது.

"ஆம்பிளைக்கு ஆயிரம் செலவு இருக்கும். •புட்பால் டீம் வச்சி நடத்தறதுன்னா எத்தினிச் செலவு தெரியுமா? இப்ப செலவழிச்சா அப்புறமா ரெண்டு மடங்காத் திருப்பிடலாம். இதெல்லாம் உனக்குப் புரியாது",

"நா இங்க வரச்ச உன்னோட அம்மாவையும் சின்னம்மாவையும் சும்மா வெளியில வந்து சுத்தாம இருக்கச் சொல்றியா? நா போன் பேசவே முடியலை இப்படிச் சுத்தி சுத்தி நடக்கறதைப் பாத்தா எரிச்சலாயிருக்கு", என்று ஒரு நாள் கத்தினான்.

அம்மாவுக்கு சும்மாயிருக்க முடியாது. எப்போதும் நடைதான்! சாதாரண நடையில்லை. அசுர நடை! எதையோத் தொலைத்து விட்டுத் தேடும் அவசரநடை! கதவைத் திறந்து வைத்து விட்டால் அவ்வளவுதான்! வெளியில் நடக்க ஆரம்பித்து விடுவாள். அந்தக் குடியிருப்புப் பகுதியில் கிட்டத்தட்ட எல்லோருக்கும் அம்மாவைத் தெரிந்திருந்ததால் அம்மா இப்படி தனியே நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் மெள்ள பேச்சுக் கொடுத்து திரும்ப வீடு வரை கொண்டு வந்து விட்டுப் போவார்கள்.

"என்னம்மா! இப்படி நீ கிளம்பிப் போய்டறியே", என்று கேட்டால்

" நான் என்ன சின்னப் புள்ளையா தொலஞ்சுப் போறதுக்கு? இந்தா இருக்கிற கோயிலுக்குப் போனேன்", என்று பதில் சொல்வாள்.
அந்தக் கோவிலை இடம் மாற்றி விட்டார்கள் என்று எத்தனை முறை சொன்னாலும் அம்மாவுக்குப் புரிவதில்லை. என்றாவது அம்மா தெளிவாகப் பேசிக் கொண்டிருக்கும் போது

“அம்மா! அந்தக் கோவிலுக்கு இப்ப பஸ் எடுத்துதான் போகணும்! வேற இடத்துக்கு மாத்திட்டாங்க!”, என்று சொல்லிப் பார்த்தாள்.

அம்மா”கோவிலை வேணா இடம் மாத்தலாம். சாமிய இடம் மாத்த முடியுமா? நான் சின்னப் புள்ளேலேந்து இருக்கிற சாமி இப்பொ எங்கே போயிருக்கும்?”, என்று கேள்வி கேட்ட போது பதில் சொல்ல முடியவில்லை. கல்முகத்துடன் பிரார்த்தனைகளை வாங்கிக் கொண்டு கருணையற்ற விதி படைத்தக் கடவுளிடம் அம்மா கொண்டிருந்த நம்பிக்கைகளை மாற்ற முடியாதுதான்!

“சின்னம்மா! நீங்களாவது கொஞ்சம் பாத்துக்கக் கூடாதா? அம்மா பாட்டுக்கு இப்படித் தனியா கிளம்பிப் போய் அடிபட்டு ஏதாவது ஆச்சுன்னா”, என்று சொல்லிப் பார்த்தாள்.

“ நா ஒத்தி இங்க வந்து மாட்டிக் கிட்டேன். இந்த ஆயா வேலையை வெளியே எங்கியாவது போய்ப் பாத்தேன்னா ஆயிரம் வெள்ளி சம்பளமாவது கிடைக்கும். உங்காத்தாவுக்கு நாந்தான் கதவைத் தொறந்து விட்ட மாதிரி பேசறியே! கதவு கொஞ்சம் தொறந்து இருந்தா காத்தா ஓடிர்றா! உங்கம்மாவைப் பாத்துக்க ஒரு மெயிட் ஏற்பாடு செய்யி! நானும் உன்னிய மாதிரி வேலைக்குக் கிளம்பிடுவேன்”.

சின்னம்மாவுக்கச் சாதாரணமாகவே பேசத் தெரியாது. இப்படி வாயால் கொட்டியே எந்த வேலையிலும் நிரந்தரமாக இருக்க முடிந்ததில்லை. அக்காவும் தங்கையுமாக இப்படி வாழ்ந்து பழகிவிட்டாள். ஆனால் எப்போதும் ஒரு ஆங்காரம்தான்! தன் வாழ்க்கையை எல்லோரும் சேர்ந்து திருடி விட்டது போல் ஒரு பதட்டம்!

“ இப்ப முன்ன மாதிரி பழைய ஆளுங்களைக் காணறதில்லை. பாதிப் பேர் செத்தாச்சு. மிச்சமிருக்கறவங்களும் வீடு மாறி போய்ட்டாங்க! முன்ன பின்னத் தெரியாதவங்களுக்கு நின்னு உதவி செய்யற அளவுக்கு இப்போ யாருக்கு நேரமிருக்கு?”, என்று கேட்டதும் சின்னம்மா ஒன்றும் சொல்லவில்லை. அம்மாவை விட்டால் சின்னம்மாவுக்கும் யாருமில்லை. அம்மாவைப் பார்த்துக் கொள்ள இயற்கையாகவே அமைந்தத் துணை! ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் என்பதுதான் இயல்பு என்றாலும் இருவருக்குமே அது அமையவில்லை. அம்மா அப்பாவைப் பற்றிப் பேசியதேயில்லை. சின்னையாப் பிள்ளை என்று பெயரின் பின்னால் வந்த தொடர்பைத் தவிர வேறு எந்தத் தொடர்பும் இருந்ததில்லை. அதைப் பற்றி எப்போதும் போல் சின்னம்மா மட்டும்

“ கையிலே ஒரு பொம்பளைப் புள்ளையக் கொடுத்துட்டு இருக்கியா செத்தியான்னுக் கூட பாக்கலையே அக்கா!”, என்று எப்போதாவதுப் புலம்புவாள்.

“ஆமா! இருந்திருந்தா இன்னும் மூணு நாலு புள்ளைங்க மட்டும் மிஞ்சியிருக்கும் போவுது போ இந்த மட்டும் கரையேத்தறதுக்கு ஒரு புள்ளையோட விட்டுவிட்டுப் போய்ட்டானே!”, என்று அம்மா அதை பற்றியும் கவலைப் படவில்லை. ஆனால் சின்னம்மாவுக்குத் கல்யாணத்தின் மீது இருந்த நம்பிக்கை மறையவில்லை. ரொம்ப நாள் தனக்கு கல்யாணம் நடக்கும் குழந்தைகள் பிறக்கும் என்ற வாழ்க்கையின் அடிப்படை நோக்கத்தில் கொண்ட அசையாத நம்பிக்கை! அது நடக்கவேயில்லை என்ற நிலை ஆன போது வாழ்க்கையோடு ஏற்பட்டப் பிணக்கு நாளாக நாளாக ஆங்காரமாக மாறிவிட்டிருந்தது. பி சுசீலாப்

பாடல்களை மெல்லிய குரலில் பாடி கொண்டிருந்த சின்னம்மாவின் உருவம் அவள் நினைவிலிருந்து மறைந்து போய்விட்டது.

‘உனக்கு மட்டும் உனக்கு மட்டும் ரகசியம் சொல்வேன் அந்த ரகசியத்தை ஒருவரிடமும் சொல்லிவிடாதே’ என்று பொம்மையை வைத்துக் கொண்டு பாடும் சினிமாக் கதாநாயகியை போல் கற்பனை வாழ்வு மட்டுமே மிஞ்சியது.

தாஸ் வீட்டில் தங்கும் நாள்களில் அம்மாவை ஒரு அறையில் கட்டிப் போட்டது போல் வைப்பது கஷ்டம்தான்! அம்மா உழைப்பில் வாங்கிய வீடு. வருடக் கணக்கில் வெங்காயம் உரித்து மிளகாய் அரைத்து சமையல் வேலை செய்து வாங்கிய வீடு. அதில் அம்மா உரிமையாக நடமாடக் கூடாது என்று அவன் சொன்னதும் அதை அநியாயம் என்று சொல்லத் தெரியவில்லை. ஏன் அவனை எதிர்த்து எதுவுமே செய்ய முடிந்ததில்லை என்பது புரியவில்லை. ஆண்கள் அற்ற வீட்டில் வாழ்ந்துப் பழகிவிட்டவளுக்கு முதல் முதலில் ஒரு ஆணிடம் தன்னைக் கொடுத்த மயக்கமா! அந்த மயக்கம் கூட அவள் எதிர்பார்த்த உறவிலிருந்து மாறுபட்டு அவசர அவசரமாக இயந்திரக் கதியில் இயங்கி முடித்து விடுவான். ஏதாவதுப் பேசுவான் காதில் ஏதாவது கிசுகிசுப்பான் முத்தமிடுவான் என்ற எந்த எதிர்பார்ப்பிற்கும் இடமில்லாமல் இரைத் தேடும் கோழி இரை கிடைத்ததும் கொத்தி முடிந்து இடத்தை விட்டுக் கிளம்பிவிடுவதைப் போல் முடிந்து விடும். அவன் வரும் போதெல்லாம் தோன்றும் பரபரப்பு “சே! இவ்வளவுதானா!”, என்ற ஏமாற்றத்தில் முடியும். எல்லாம் முடிந்த பின் அவனுடன் அவன் உடல் சூட்டை அனுபவித்தப் படி பக்கத்திலேயே படுத்திருக்கலாம் என்று நெருங்குவாள். வந்த வேலை முடிந்த மாதிரி அவளிடமிருந்து விலகி இரவு இல்லை பகல் இல்லை எந்நேரமும் போனில் பேசிக் கொண்டிருப்பான்.

சாதாரணப் பேச்சே கிடையாது. “அவன் என்னை யாருன்னு நினச்சிட்டியிருக்கான்? நான் நேர்ல வந்து பேசிக்கறேன்.மலேசியாலேந்து ஆள் ஏற்பாடு பண்ணியிருக்கேன். இங்க இருக்கறவங்க யாரும் ஒண்ணும் செய்ய முடியாது”, உருட்டல் மிரட்டல் பேச்சுத்தான். பேசி முடிந்ததும் அவசர அவசரமாகக் கிளம்புவான். அந்த அவசரத்திலும்

மறக்காமல் பணம் கேட்டு வாங்கிக் கொண்டுதான் கிளம்புவான்.

சிறு வயதில் பள்ளியில் படிக்கும் போது கூட யாராவது தன்னை அடித்து விட்டார்கள், திட்டிவிட்டார்கள் என்றால் உடனே அம்மாவிடம் ஓடி வருவாள். அம்மா வந்து நாட்டாமைச் செய்ய வேண்டும். சாப்பாட்டுக் கடையில் எத்தனைக் கூட்டமிருந்தாலும் அம்மா அத்தனை வேலையும் விட்டு விட்டு தன்னுடன் பள்ளிக்கு வரவேண்டும். அம்மா அசரமாட்டாள்.

“உனக்கு வாயில்லை! கையில்லை! எங்கிட்ட வந்து சொல்றதை டீச்சர்கிட்டப் போய்ச் சொல்லு!”, என்று சொல்லிவிட்டால் அவ்வளவுதான் தன்னை யாருமற்ற அனாதைச் சிறுமியாகக் கற்பனை செய்து கொண்டு கழிவிரக்கம் அதிகமாக அழ ஆரம்பித்து விடுவாள். அவ்வளவுதான்! அஞ்சலை தன் வேலையை அப்படியே போட்டுவிட்டு அவளுக்காக சண்டை போடக் கிளம்பிவிடுவாள். அப்படி எத்தனை முறை பள்ளிக்கு வந்திருக்கிறாளோ! அப்புறம் வளர வளர

“அம்மா நீ எதுக்கு என் ஸ்கூலுக்கு வர்றே?”, என்று சண்டை போடுவாள். தன்னால் இனிமேல் தன் பிரச்சனைகளை சமாளிக்க முடியும் என்ற தைரியம் வந்ததும் அம்மா தேவையில்லாமல் போயிற்று.

“பெரிய மனுஷியாய்ட்டே! இனிமே நா ஸ்கூலுக்கு வந்தா உனக்குப் பிடிக்காது. சரி சோறு போடவாவது அம்மா வேணுமா?’, என்று அம்மா சிரித்துக் கொண்டே கேட்டாள். உலகத்தில் பாதிப் பேருக்கு மேல் அம்மாவை தங்கள் சுயநலத்திற்கு மட்டும் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். அந்தக் கூட்டத்தில் தானும் ஒருத்தியாகி விட்டதை நினைத்து தன் மீதே சில சமயம் வெறுப்பாயிருந்தது.

தாஸ் பணம் கேட்டபோதெல்லாம் அம்மா குருவி சேர்ப்பது போல் சேகரித்த நகையெல்லாம் கொடுத்தாகிவிட்டது. இதற்கெல்லாம் அம்மாவிடம் அனுமதி கேட்க வேண்டும் என்பதைப் பற்றி யோசிக்கக் கூட இல்லை.

“தாஸ் வர்றப்ப நீங்க ரெண்டு பேரும் உங்க ரூமிலேயே இருங்களேன். அம்மா இப்படி நடக்கறது அவருக்கு ரொம்பத் தொந்தரவா
இருக்கு”, என்று சொன்னதும்
“ ஆமா! பெரிய புருஷனை கண்டுட்டே! நானும் உங்கம்மாவும் பாக்காதப் புருஷன்! இப்படி ராத்திரித் தங்கிட்டு மறுநா உங்கிட்ட பணம் வாங்கிட்டுப் போறவன் பேரு என்ன தெரியுமா? ஒரு நா உங்க மாமியா வீட்டுக்குப் போயிருக்கியா? அவங்கதான் மருமவன்னு துணிமணி, நகைநட்டுன்னு எடுத்துக் கொடுத்திருக்காங்களா? ஏதாவது நான் கேட்டா எனக்கு வாய் ஜாஸ்திம்பே! உங்கம்மாவுக்கு எதுவும் புரியாதுன்னு நீ வேண்ணா

நெனச்சிக்கிட்டு இருக்கலாம். அவளுக்கு எல்லாம் புரியுது. அவ புலம்பறப் புலம்பலை வெச்சுத்தான் சொல்றேன்", என்றாள் சின்னம்மா. அம்மாவுக்கு முன்புப் போல் நிதானம் இல்லை. ஞாபகமும் இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்தால் அவளுக்கு எப்படியோ இதெல்லாம் புரிந்து விடுகிறது.

கடைசியில் அவள் பயந்தது போல்தான் எல்லாம் முடிந்தது. பணம் பணம் என்று எப்போதும் பணத்திற்காக பேயாய் அலைந்தான். ஊரெல்லாம் கடன். எல்லாக் கடன்காரர்களிடமும் நிர்மலா வீட்டு முகவரியைக் கொடுத்து விட்டு எங்கேப் போனான் என்றேத் தெரியாமல் கொஞ்சநாள் அலைந்து கொண்டிருந்தான். கடன்காரகள் கொடுத்தப் பணத்தைத் திரும்பப் பெறும் முயற்சியில் வாசலில் பெயிண்டைக் கொட்டி ஜன்னலிலும் கதவுகளிலும் சிவப்புமையால் எழுதப்பட்ட வாக்கியங்களை போஸ்டர் ஒட்டி கடனைத்திருப்பிக் கட்ட முடியாத அவமானத்தை ஊர் முழுதும் தெரிவித்தார்கள். அம்மா முகத்திலும் சின்னம்மா முகத்திலும் வாசலில் எந்த ஒரு சின்னச் சத்தம் கேட்டாலும் பயரேகை. அக்கம் பக்கத்தினர் அவளிடம் சாதாரணமாகப் பேசவேப் பயந்தனர். போலிஸ், கோர்ட், விசாரணை என்று அவமானப் பட்டு அலைந்து அவன் ஜெயிலுக்குப் போன பிறகுதான் நிம்மதியாக வீட்டில் இருக்க முடிந்தது. ஆனாலும் பணப் பிரச்சனை பூதமாகத் துரத்தியது. வீட்டில் இருக்கும் ஒரு அறையை வாடகைக்கு விடலாம் என்று ஆள் தேடினாள்.

ஒருவருக்கு இருவராக வந்தார்கள். இருவருக்கும் மாறி மாறி ஷி•ப்ட் வேலை. ஒரு சமயத்தில் ஒருவர்தான் வீட்டில் இருப்பார். எப்படியோ அதிகப்படி வருமானம் வந்தால் சரியென்று வாடகைக்கு விட்டாயிற்று. ஆளுக்கொருப் பெட்டிப் பையுடன் தங்குவதற்கு வந்தார்கள். சின்னம்மா கேள்விகளால் குடைந்து எடுத்து விட்டாள்.

" எங்க •பாக்டரிக்குப் பக்கமாயிருக்கு! தேவையில்லாம பஸ்ஸ¤ம் ரயிலும் புடிச்சு அலைய வேண்டாம்னு இந்த ரூமை வாடகைக்கு எடுத்தோம்", என்று ஷண்முகமும் ராஜேந்திரனும் சொன்ன பிறகு கொஞ்சம் சமாதானம் ஆனாள். முதல் மாதம் ரூம் கதவு அடைந்தே கிடந்தது. தேவையில்லாமல் வெளியில் வரவே தயங்கினார்கள்.பிறகு அந்த இறுக்கம் குறைந்து கொஞ்சம் சகஜ பாவம் வர காபி டீ குடிக்க சமையலறையை உபயோகித்துக் கொள்ளலாமா என்றுத் தயங்கித் தயங்கித்தான் ராஜேந்திரன் அனுமதி கேட்டான். சண்முகத்துக்குப் பகலெல்லாம் வேலை. அவன் சாப்பாட்டுக்குப் பிரச்சனையில்லை. ராஜேந்திரனுக்குத்தான் இரவு நேர வேலை. ராத்திரி தூங்குவது போல் பகலெல்லாம் தூங்க முடியாதே! பசித்தால் அதற்காக எழுந்து சாப்பாடுக்கடையைத் தேடிப் போய் சாப்பிட அலுப்பாக இருக்கும். ஒரு அவசர சமையல் செய்து சாப்பிட சமையலறையை உபயோக்க ஆரம்பித்தான். வெளியில் சுதந்திரமாக வந்து அம்மாவுடனும் சின்னம்மாவுடனும் பேசிக் கொண்டிருப்பான். தொலைக்காட்சிப் பார்த்துக் கொண்டிருப்பான். சின்னம்மா சமையல் செய்ய அலுத்துக்

கொள்ளும் போதெல்லாம் சாப்பாடு வாங்கி வருவான். அவனே ஏதாவது சமையல் செய்து தர ஆரம்பித்தான்.

அன்று நிர்மலாவுக்கு தலைவலி. காய்ச்சல் வரும் போலிருந்தது. பசியுடன் வந்தாள்.

“சாப்பிட ஏதாவது இருக்கா”, என்று கேட்டாள்.

“ம்! இன்னிக்கு வெறும் ரொட்டிதான்! கையிலே ஏதாவது காசிருந்தாத்தானே மார்க்கெட்டுக்குப் போய் வாங்கலாம். உங்கம்மாவுக்கு மீன் இல்லேன்னா சாப்பாடு இறங்காதே!”, சின்னம்மா ஆரம்பித்து விட்டாள்.

நிர்மலாவுக்கு அலுப்பாக இருந்தது. தாஸைப் பார்த்து விட்டு வந்த அலுப்பு. வழக்கம் போல் அந்தக் கட்டடத்தையும் சுற்றுப்புறத்தையும் கவனிக்காமல் இருக்க முடியவில்லை. இதுவும் பழங்காலக் கட்டடம் போலத்தான் இருந்தது. சுற்றிலும் பெரிய மைதானம். அதைச் சுற்றிலும் பெரிய உயரமான முள்கம்பி வேலிகள். கம்பிவேலிமுடியும் உயரத்தில் பெரிய வளையங்களாய் சுருட்டப் பட்டிருந்த கம்பிவேலிகள். போகின்ற பாதையெங்கும் மஞ்சள் நிறப் பூக்கள் தீ போல் பரவி கம்பளம் விரித்திருந்தது. தீ மேல் நடக்க முடியுமா? தீ என்பது வெளியில் தகிக்கும் சூடு மட்டும்தானா? உள்ளுக்குள் பொங்கும் வெம்மைதான் உயிரா? பூக்களுக்குள்ளும் இந்த உயிர்த்தீதான் இப்படி மஞ்சள் நிறம் தருகிறதா? இந்தப் பூக்களை இங்கே வளர்ப்பதற்கு தாஸ் உதவியிருப்பானா? அந்த இடத்திற்குப் பொருத்தமில்லாத இதத்தைத் தந்தது அந்த மலர்கள். இவளைப் போலவே பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் காத்திருந்தனர். என்னக் குற்றம் செய்து இவர்களின் கணவர்கள், இந்தக் குழந்தைகளின் அப்பாக்கள், இந்தப் பெற்றோரின் மகன்கள் சிறையில் இருக்கிறார்களோ?

தாஸ் நிர்மலாவைப் பார்த்ததும் பரபரத்தான்.

“பன்னீரைப் பாக்கச் சொன்னேனே! பாத்தியா? அவன் எனக்கு ரெண்டாயிரம் வெள்ளி கொடுக்கணும். ஜோஸப் பணம் தர்றேன்னான். அவனையும் பாத்து வாங்கிடு! நம்ப லாயரைப் பாத்து பெயிலுக்கு ஏற்பாடு செஞ்சியா?”, என்று கேள்விகள்.

“பெயில் எடுக்கவே முப்பதாயிரம் வெள்ளி கட்டணும். அவ்வளவு பணத்துக்கு எப்படி ஏற்பாடு செய்யறது. அதெல்லாம் இப்போ முடியாது. பேசாம மூணு வருஷத்தை நல்லபடியாக முடிச்சுட்டு வாங்க”, என்று சொன்னதும்

“நா வெளிய வந்து என்னை உள்ளத் தள்ளினவங்களை சும்மா விட மாட்டேன். என்னை ஏமாத்திட்டு அத்தனிப் பேரும் வெளில இருக்காங்க!”, என்று ஆத்திரத்துடன் கத்தியதைக்

கேட்டு தாஸ் வெளியே வந்தும் தனக்கு ஒன்றும் இன்பமான வாழ்க்கை காத்திருக்கவில்லை என்பது புரிந்தது. தமிழ் சினிமா கதாநாயகி மாதிரி "நீங்க ஜெயிலேந்து திருந்தி நல்ல மனுஷனா வரணும். அதுவரைக்கும் நானும் உங்க புள்ளையும் காத்திருப்போம்", என்று வசனம் பேச வாய்ப்பில்லை. நல்லவேளை இந்தப் குழப்பமான தாம்பத்தியத்தில் குழந்தை பிறக்கவில்லை. அவன் பெயர் சொன்ன ஆட்கள் யாரும் தாஸ் பற்றிப் பேசக் கூடத் தயாராக இல்லை. முப்பதாயிரம் வெள்ளி கட்டினால்தான் பெயில் என்று லாயர் சொல்லிவிட்டார். இதை அவனிடம் சொன்னால்

"முப்பதாயிரம்தானே! எப்படியாவது புரட்டிக் கொண்டு வந்துக் கட்டிடு. நா வெளியே வந்ததும் அதை உடனே திருப்பித் தந்துடலாம்", என்று பிடிவாதம் பிடித்ததைக் கேட்டுச் சிரிப்புத்தான் வந்தது. கையில் முப்பது வெள்ளி கூட இல்லாமல் வந்திருக்கிறாள். முப்பதாயிரம் வெள்ளி கட்டி இவனை வெளியில் கொண்டு வந்து இவன் குற்ற எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டுமா? முப்பதாயிரம் வெள்ளிக்கு யாரிடம் போய் கையேந்த முடியும்? தண்டனை உறுதியானப் பிறகும்

"லாயரைப் பாத்துப் பேசி அப்பீல் பண்ணச் சொல்லு! அங்கப் போய் அவனைப் பாரு இவனைப் பாரு", என்று வழக்கமான அர்த்தமில்லாதக் கட்டளைகள். எதிர்பார்ப்புகள்.

அவனைப் பார்த்து விட்டு வந்தாலே உடலின் சக்தியெலாம் உறிஞ்சி விட்ட மாதிரி ஒரு பலவீனம் வந்து விடுகிறது. மாதம் ஒருமுறை தாஸைப் போய்ப் பார்க்காமல் இருக்கவும் முடிவதில்லை. அவன் அம்மாவிடம் போய் ஒருமுறைச் சொன்னதற்கு

"அவன் பாவத்தின் சம்பளம் இந்த தண்டனை!", என்று சொல்லி விட்டு

" இந்த முறை அவனுக்காக ஏற்பாடு செய்கிற பிரேயர் மீட்டிங்கில் நீயும் கலந்து கொள். அவன் செய்த பாவத்திலிருந்து மீண்டு வருவான்", என்று வெறும் ஆறுதல் அதுவும் இவளுக்குத் தெரியாத புரியாத வார்த்தைகளில் ஆறுதல். எல்லாம் விதிப் படித்தான் நடக்கும் என்று சொல்வது என்ன மதமாக இருந்தால் என்ன? தன்னுடைய நிலைமையின் தீவிரம் புரியாத போது எந்தக் கடவுளிடமும் போய் முறையிடுவதில் என்னத் தீர்வு கிடைத்துவிடும்?

'ரொம்பப் பசிக்குதே! சாப்பிட ஏதாவது இருந்தா சாப்பிட்டுட்டு ஒரு பனடால் போட்டுக்கணும் ", என்று சொன்னதும்

"இந்தாங்க! இதைச் சாப்பிடுங்க! ரவா உப்புமா! சைவம்தான்!", என்று ஒரு தட்டில் வைத்துக் கொடுத்தான் ராஜேந்திரன்.

“பரவாயில்லை! வீட்ல ரொட்டிதான் இருக்கே! அதைச் சாப்பிட்டுக்கறேன். நீங்க உங்களுக்காகச் செஞ்சதை சாப்பிடுங்க”,

“அட! என்னங்க இதைத் திருப்பிப் பண்றத்துக்கு பத்து நிமிஷம் ஆகாது. சரி நா இன்னும் கொஞ்சம் செஞ்சு எடுத்திட்டு வறேன் ரெண்டு பேரும் ஷேர் பண்ணிச் சாப்பிட்டுக்கலாம்”, என்று சூடாகக் கொடுத்த சாப்பாட்டில் வயிறும் நிறைந்தது. அவன் காட்டியப் பரிவில் மனமும் நிறைந்தது.

“மிஸ்டர் ராஜ்! எனக்கு இந்த மாதிரி அவசரச் சமையலெல்லாம் தெரியாது. கோல்ட் ஸ்டோரெஜ் சூப்பர் மார்க்கெட்டுல கிடைக்கிற ரெடி மெட் •ப்ரோசன் •புட் தான் இந்த மாதிரி அவசரத்துக்கு செய்வேன். இந்த மாதிரி சமையலெல்லாம் பத்தி அவ்வளவாத் தெரியாது”,என்று நிர்மலா சொன்னதும்

“என்னங்க சமையல் பத்தி ஒண்ணும் தெரியாதுங்கறீங்க! எங்க ஊர்லலாம் பொண்ணுங்க வயசுக்கு வந்ததும் முதல்ல கத்துக்கற விஷயமே சமையல்தான். இன்னொத்தன் வீட்டுக்குப் போய் ஆக்கிப் போட வேணாமான்னு கத்துக் கொடுத்துடுவாங்க!”, என்று பெருமையாகச் சொன்னான்.

“உங்க கேர்ள் •பிரண்ட்டும் அப்ப சமையல் நல்லா செய்வாங்கன்னு சொல்லுங்க!”, என்றாள்.

“ ஐயையோ! கேர்ள் •பிரண்ட்டா! தெரிஞ்சப் பொண்ணுங்கக் கிட்டயே அப்படியெல்லாம் போய்ப் பேச முடியாதுங்க! சின்ன கிராமம்! நீங்க நினைக்கிற மாதிரி கேர்ள்பிரண்ட்டு கிட்டக்க எல்லாம் பேச முடியாதுங்க!”,

“ கிராமம்ன்னா அங்கே காதல் கல்யாணம் எதுவுமே கிடையாதா என்ன?சும்மாச் சொல்லாதீங்க! உங்க ஊர் சினிமாவைப் பாத்தா அங்கே காதலைத் தவிர வேறு எதுவும் நடக்கிற மாதிரியேத் தெரியலையே!”,என்றதும்

“அது சினிமாங்க! அதைப் பாத்துட்டு எங்க ஊர்ல எல்லோரும் முறைப் பையனைக் கட்டிக்கறதுக்கு காத்திட்டு இருப்பாங்க! பச்சப் பசேல்ன்னு வயல்ல வேட்டில அழுக்குப் படாம வயல் வேலை செய்யறக் கதாநாயகன். இப்படி கற்பனைச் செய்யறீங்களா? வறண்டு போய் கிடக்கும் பூமி! பாதி ஆளுங்க பசி கண்ணை அடைக்க வயல்லயும் பாசனம் இல்லாம வேறு எந்த வேலையும் செய்யாம சுருண்டு படுத்திருப்பாங்க! பொம்பளைங்க காட்டுக்குப் போய் சுள்ளிப் பொறுக்கறதும், வீட்டில இருக்கிற சின்னப் பசங்கள்ளாம் படிக்காம பீடிச் சுத்திக் கிட்டும் இருக்காங்க! நீங்க கலர் கலராப் பாக்குற கிராமம் வேற!

அங்கே பஞ்சத்துல பரிதவிக்கிற கிராமம் வேற!", என்று சொன்னவனைப் பார்க்கப் பார்க்கப் மனதில் அவன் சொன்ன வாழ்வின் அவலங்கள்
மனதில் சித்திரமாகப் பதிந்தன.

"அப்ப இங்கியே இருந்து நல்லாச் சம்பாதித்து நிம்மதியாக இருந்துவிட வேண்டியதுதானே", என்றாள்.

"அது எப்படிங்க முடியும்? ஊர்ல எக்கச்சக்கக் கடன்! அம்மா அப்பாவைக் காப்பாத்தணும்! குடும்பத்தை முன்னேத்தணும்னு வந்துட்டு நம்ப நினைகிற மாதிரியெல்லம் இருக்க முடியுமா? மாசம் இத்தனி ரூபான்னு அவங்க செலவுக்கு அனுப்பிடணும்.
அப்புறம் கடனை அடைக்க இவ்வளவுன்னு தனியா சேத்து வைக்கணும்.", என்றான்.

அப்படிப்பட்ட ஏழ்மையிலிருந்துதான் இங்கு வந்திருக்கிறான். இந்த இருவேறு வாழ்க்கைத் தளங்களில் இயங்குகிறது அவன் வாழ்க்கை! ஆனால் மீண்டும் ஊருக்குப் போய் வாழ்வதையே விரும்புகிறான். எல்லோர் வாழ்க்கையிலும் தேவைகளுக்கு மேல் ஏதோ அர்த்தம், பிடிப்பு, காதல், புரட்சி எல்லாம் இருக்கிறது. அதைப் போல் தன்னிடம் ஏதாவது இருக்கிறதா என்று தேடிப் பார்த்தாள். தின வாழ்க்கையே போராட்டமாகிவிட்டப் போது இதைப் பற்றியெல்லாம் சிந்தித்து தேவைகளுக்கு மேல் எதையும் தேடி அலையும் மனது தொலைந்து போய் விடுகிறது.

" என்னங்க! நிலா காயற மாதிரி இந்த வெய்யில்ல காலாற நடந்து வர்றீங்க? எம்ஆர்டி வாசல்ல நில்லுங்க! ஐஞ்சு மணிக்கெல்லாம் வந்துடரேன்னு இவ்வளவு லேட்டா வர்றீங்களே!", பேசும் மொழியில் இருந்த மரியாதை அவன் காட்டிய சிடுசிடுப்பில் இல்லை. ராஜேந்திரனுக்கு தொடர்ச்சியாக மூன்று நாள் இரவு நேர வேலை முடிந்தால் இரண்டு நாள் விடுமுறை! ஒருநாள் தூங்கிவிடுவான். இரண்டாவது நாள் இப்படிக் கிளம்பி வந்து விடுவான். இருவரும் சேர்ந்து எங்காவது சுற்றி விட்டு பிறகு தனித் தனியாக வீடு திரும்புவார்கள். எதற்கு இந்த நாடகம் என்பது நிர்மலாவுக்குப் புரியவில்லை. ராஜேந்திரன் தான் தயங்கினான்.

"தேக்கா பக்கம் மட்டும் போவேணாம். தெரிஞ்ச ஆளுங்க கண்ணுலப் பட்டா என்னன்னு சொல்றது?எங்க வீட்டுக்காரின்னு சொல்லலாமா?",
என்றான்.

உடல் நெருக்கம்தான் இப்படி அவனைச் சுதந்திரமாகப் பேச வைக்கிறதோ? அது தற்செயலாக நிகழ்ந்த இரவு! முன்னிரவு நேரம் திடீரென்று மழைப் பிடித்துக் கொண்டது. வெளியில் மூங்கில் குச்சிகளில் தொங்கிக் கொண்டிருந்தத் துணிகளை எடுத்துப் போடலாம் என்று எடுக்க ஆரம்பித்தாள். மழையின் ஈரத்தால் குச்சியில் தொங்கிய

துணிகள் கனத்தன. ராஜேந்திரன் அவன் அறையிலிருந்து வெளியில் வந்து இவளுக்கு உதவி செய்ய ஆரம்பித்தான்.

"இந்த மழை எங்க ஊர்ல பேஞ்சா இப்போ விதை போட்டதுக்கு நல்லாயிருக்கும்", என்றான்.

"ரூம்ல தூங்காமத்தான் முழிச்சுகிட்டு இருந்தேன். நீங்க நடக்கற சத்தம் கேட்டு வெளில வந்தேன். சண்முகம் நைட் ஷோ சினிமா போய்ட்டான்", என்று சம்பந்தமில்லாமல் பேசினான். அவன் கண்கள் மையிட்டுத்
தீட்டியது போல் பெரிய கண்கள்! அவளைப் பார்த்த போது அதில் கன்றுக்குட்டியின் கெஞ்சல் இருந்தது. ஆணின் அனல் கொதிக்கும்
பார்வை!

தனிமையில் இருப்பவர்களுக்கு இரவுகள் பயங்கரமானவை. அப்போது அவர்களுடைய தடைகள், அரண்கள் எல்லாம் உடைந்து விடுகின்றன. பகலின் கண்கூச வைக்கும் ஒளியை இரவுத் திரையாக மூடிவிடுகிறது. உள்ளத்துக் காமம் உடலைத் தாக்கும்
போது பெண் உடல் ஆணுக்கும். ஆண் உடல் பெண்ணுக்கும் தானே ஆறுதல் தர முடியும்? முடிவில்லாத் தேடலைச் சலிப்பின்றிச் செய்யும் வேகம் அவனிடமிருந்தது. அவன் அனுபவமின்மையும் சந்தேகங்களும் அவளுக்குப் புதுமையாக இருந்தது. அவள் சிரித்ததைப் பார்த்ததும்

" எதுக்கு இந்தச் சிரிப்பு! சந்தோஷமா இருக்கீயா?", என்று அவன் ஒருமையில் கூப்பிட்டுக் கேட்டதும் அந்தக் கணம் அப்படியே நின்று விடக் கூடாதா என்றிருந்தது. மனதில் நினைப்பதையெல்லாம் சொல்லிவிட முடியாதே! அவன் தன் அறைக்குத்
திரும்பிப் போகும் போது அம்மா நடக்க ஆரம்பித்து இருந்தாள். நிர்மலாவின் அறையிலிருந்து அந்த நேரத்தில் அவன் போனதைப் பற்றி அவளிடம் கேட்கவில்லை. ராஜேந்திரனைப் பார்க்கும் பார்வையில் மட்டும் ஏதோ ஒன்று இருந்தது. அதைப் பற்றி ராஜேந்திரனே

"உங்கம்மா என்னைப் பாக்கும் போது மட்டும் கொஞ்சம் கஷ்டமாயிருக்கு! உங்களை ஏமாத்திவிட்டதா நினைச்சுட்டாங்களா?", என்று கேட்டான். தனிமையில் காட்டும் ஒருமை இன்னும் வெளியில் கூப்பிடும் போது மரியாதையாகவே தொடர்ந்தது.

"சண்முகத்துக்கு சந்தேகம் வந்துடும் நிர்மலா அதனால உங்களை வாங்க போங்கன்னே கூப்பிடறேன்", என்றான்.

"ஏதோ நினைச்சுக்கிட்டே வந்ததுலே லேட்டாயிடுச்சு! எங்க வேலைத் தேடலாம்னு பாத்தேன்", என்றாள்.

“இப்பப் பாத்துட்டிருந்த வேலைக்கு என்ன ஆச்சு?”,

“அந்த வேலை இனிமே கிடையாது. வேற வேலைத் தேட வேண்டியதுதான்”, என்றதும்

“உங்களுக்கு என்ன கவலை?இந்த மாதிரி வேலை உடனே கிடைச்சுடும்! எங்களை மாதிரி உடனே ஊரை விட்டு ஓட வேண்டாமே?”, என்று அவன் சொன்னதும் ஆமாம் இதென்ன பெரிய விஷயம்! இது இல்லை என்றால் வேறு ஒன்று! என்று மனம் சமாதானமாயிற்று.

“ ரொம்ப சோர்ந்து போயிருக்காப்புல இருக்கு! வாங்க ஏதாவது சாப்படலாம்!”, என்று ராஜேந்திரன் கூப்பிட்டான். அந்த ஆறுதலும் சாப்பாடும் அப்போது தேவைப்பட்டது. சாப்பிட்டு முடிந்ததும் அவன் சிரித்துக் கொண்டே “இன்னிக்கு நா நைட் •ஷிப்ட் போகணும்! நீங்க எனக்காக காத்திட்டு இருப்பீங்களேன்னுதான் ஓடி வந்தேன் நா இப்படியே கிளம்பறேன்”, என்று சொன்னதும் சட்டென்று மனதில் ஒரு வெறுமை. அவள் முகம் மாறியதைக் கண்டு

“பரவாயில்லை! இன்னும் எத்தனையோ நாட்கள் நமக்கு இருக்கிறது. அதிலும் எத்தனையோ இரவுகள்”, என்றான்.

தன்னுடைய அந்தரங்கத்தில் தன்னுடைய உடல் தேவையை மட்டுமே இவன் அறிந்திருக்கிறானோ! இன்று எனக்கு இவனுடைய அருகாமை மட்டுமே வேண்டும் என்பது புரியவில்லையா? தான் விரும்பும் பெண்ணை உடலாக மட்டுமே பார்க்கிறானா? அவசரப்பட்ட அந்த இரவு ஏன் வந்தது? பலவீனப்பட்டப் பின் அதன் மறுபக்கம் தெரிகிறது. ஆண் விளையாடும் விளையாட்டின் வலியில்தான் தன் இன்பத்தை அடைகிறானா? அன்று அவளால் தனியே படுக்க முடியவில்லை. அம்மாவுடன் போய் ஒண்டிக் கொண்டாள். அம்மாவின் கை தன்னிச்சையாக லேசாக அவள் முதுகில் பட்டுக் கொண்டிருந்தது. அந்த இதமானத் தீண்டலே போதுமானதாக இருந்தது. அவளையும் மீறி ஒரு கேவல்! எங்கே சத்தமாக அழுது அம்மாவையும் சின்னம்மாவையும் எழுப்பி விடுவோமோ என்று அடக்கிக் கொண்டாள். அம்மாவின் முலையில் முட்டிப் பால் குடிக்கும் குழந்தையாக அடங்கிப் போனாள்.

புது வேலை! புதிதாக ஒரு வேலைத்திறன் கற்றுக் கொள்ள வேண்டும். பேக்கிங் செய்ய நாங்களே உனக்கு பயிற்சித் தருகிறோம். அதன் பிறகு பேக்கிங் பிரிவில் வேலை! முந்திய வேலையை விட கொஞ்சம் அதிகச் சம்பளம். பேக்கிங் செய்ய கற்றுக் கொண்ட போதே அவள் மேல் முட்டை நாற்றம் வீசுவது போல் உணர ஆரம்பித்தாள். கையில் எப்போதும் வெண்ணெயின் பிசுபிசுப்பு, பாலேட்டின் குழகுழப்பு. அவனில் வைத்து

எடுக்கும் சுடசுட வந்த வித விதமான ரொட்டிகளையும் கேக்குகளையும் பார்க்கவே தனி ரசனையாக இருந்தது. அவளுடன் வேலை செய்யும் அமீனா தான் சொன்னாள்.

“பாடி ஷாப்புல ட்வெண்ட்டி டாலருக்கு ஒரு சோப் கிடைக்கும். கொஞ்சம் எக்ஸ்பென்ஸிவ் தான். அது வாங்கித் தேய்த்துக் குளி. அப்பத்தான் இந்த பேக்கிங் வாசனை உடம்பை விட்டுப் போகும்”, என்றாள். அதை வாங்கித் தேய்த்துக் குளித்தும் ஒரு மாதிரியாகதான் இருந்தது. நாளாக நாளாக சரியாகிவிடும். ராஜேந்திரனிடம் உருவாக்கிக் கொண்ட இடைவெளிப் போல் பழகிவிடும்.

“ஏதோ நா தப்பா பேசிட்டேனா? வேலை கிடைக்கலேன்னு கவலைன்னு நினச்சு சரி நானும் உன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்னு நினைச்சேன். இப்பத்தான் வேலை கிடச்சு உன் மூட் சரியாயிருக்குமேன்னு நேத்திக்கு உன் ரூம் கதவைத் தொறந்தேன். உள்ளே உங்க சின்னம்மா படுத்திருந்தாங்க! என்ன ஏதுன்னு அவங்கக் கேட்டு

குடைஞ்சுட்டாங்க. என் ரூம்ல லைட் •ப்யூஸ் ஆயிடுச்சு! உங்கக் கிட்ட வேற பல்ப் இருக்கான்னு கேக்க வந்தேன்னு சமாளிச்சேன்”, என்றான்.

“சரி! சமாளிச்சிட்டீங்க இல்ல! அப்படியே இருந்துக்குங்க!”, என்றாள்.

“உனக்கு ஏதோ கோபம்! சரி இப்ப அதைப் பத்தி பேச வரலை. எனக்கு இங்க செஞ்ச வேலை முடிஞ்சாச்சு! இன்னும் ஒரு மாசத்துல கிளம்பறேன். அப்புறம் துபாய்லயோ மஸ்கட்லயோ வேலை கிடைக்கும். நம்ப இதையெல்லாம் பத்திப் பேசி ஒரு முடிவு எடுக்கணும்”, என்றான். நிர்மலாவுக்குத் ஒரு கணம் தூக்கிவாரிப் போட்டது.

ஏதோ ஒரு சின்னப் பிரிவுக்குப் பிறகு சமாதானம் சொல்லி பழைய மாதிரி ஆகிவிடும் என்று நினைத்திருந்தவளுக்கு ராஜேந்திரன் சொன்னது ஒரு நிமிடம் மனதில் பதிவாகவில்லை.

“என்ன முடிவு எடுக்க வேண்டும்?”, அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

“எங்கூட இந்தியா வாங்க! எங்க வீட்ல உங்களைப் பத்திச் சொல்றேன். இங்க என்ன செட்டில் பண்ணனுமோ அதைப் பத்தியெல்லாம் பேச வேண்டாமா?”, என்று கேட்டான்.

“என்னால் அப்படியெல்லாம் முடிவு எடுக்க முடியாது. தாஸ் விஷயமா நா இன்னும் டைவோர்ஸ் கேக்கணுமா வேணாமான்னு யோசிக்கவேயில்லையே!”, தடுமாறினாள்.

“என்னை என்ன கைவிட்டுட்டு ஓடிப் போறவன்னு நினைச்சுக்கிட்டு இருக்கியா இல்ல மாசமாசம் நீ உபயோகப்படுத்திவிட்டு குப்பைத்தொட்டியில் போடும் விஷயமா நான்?”, அவன் கேட்ட கேள்வியின் நேர்மையில் அவன் கண்களைப் பார்க்க முடியவில்லை.

“நா உன்னைப் பைத்தியக்காரன் மாதிரி சுத்தி வர்றது உன்னை உண்மையாகவே லவ் பண்றதுனால தான் உனக்குப் புரியலையா?”,. இந்த வாழ்க்கையைத் தவிர வேறு எந்தச் சூழலைப் பற்றித் தெரியாத போது அம்மாவை விட்டு விட்டு தாஸைப் பற்றி கவலைப் படாமல் கிளம்பிவிட முடியுமா? அம்மா அட்டைப் பெட்டிகளைச் சேகரித்துக் கொடுத்து பணம் சம்பாதித்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வாளா? எம்ஆர்டீ நிலையங்களில் கைப்பிடிகளைச் சுத்தம் செய்து, கழிவறை வாசலில் காவல் காத்துக் கொண்டு இரு முதியபெண்களுக்கும் பரிதாபத்துக்குரிய வாழ்க்கைதான் காத்திருக்கிறதா?

“சரி என்னை என்னதான் பண்ணச் சொல்கிறாய்? எல்லாத்தையும் மறந்துவிட்டு ஊருக்குப் போய் திரும்ப வேல பாத்து ஊர்லயே நல்ல பொண்ணாய்ப் பாத்து கல்யாணம் கட்டிக்கறதுக்கு உன் அட்வைஸ் வேணாம். உன் புருஷனைப் பத்தி அப்புறம் யோசிக்கலாம். உங்க அம்மாவையும் சின்னம்மாவையும் ஏதாவது ஒரு ஓல்ட் ஏஜ் ஹோமில் சேத்துடலாம்! இந்த வீட்டில் ஒரு ரூமைப் பூட்டி விட்டு வாடகைக்கு விட்டுடலாம். என்னோட இப்ப கொஞ்ச நாள் இந்தியாவுக்கு வா! எங்க ஊர்ல வந்து இரு! அப்புறம் என்ன செய்யலாம்னு முடிவு செய்யலாம்”, என்று சொன்னது உண்மையாகி விடுமோ என்ற பயம்தான் மிஞ்சியது. அதுவும் அம்மாவையும் சின்னம்மாவையும் அனாதரவாக விட்டுவிட்டுப் போவதா? இந்த

ரெண்டு பைத்தியக்கார கிழவிகளும் நம்மக்கூடத்தான் இருப்பாங்களா என்று தாஸ் கேட்டதற்கும் இதற்கும் அதிக வித்தியாசமில்லை.
ஒரு மாதம்தான்! வாழ்நாளில் ஒரு மாதம் என்பது ஒரு துளிதான்! அதைப் பாதரசத் துளியாக்கினான். பிரிவை பற்றிப் அஞ்சி உறவை விட்டு ஓடும் மனநிலை. பிரிவு என்பது எந்தக் காலத்திலும் ஆணின் ஆயுதம்தானா? இந்தக் கொடூரமானக் காத்திருப்பை மௌனமாக ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.பிரிவு, காத்திருப்பு, கூடல், மீண்டும் காத்திருப்பு இவ்வளவுதான் தன் வாழ்க்கையில் மிஞ்சியிருக்கிறதா? சாயங்காலம் மழை பெய்யும் போதெல்லாம் அவன் மூச்சுக் காற்று தன் மீது படும் உணர்வு! மண்ணுக்கும் வானத்துக்கும் இருக்கும் ஒரே உயிர்த் தொடர்பான மழைதான் அவன் கற்றுத் தந்த அன்பின் அடையாளமா?

“இப்படியே இங்கியே ஏதாவது வேலைத் தேடிக்கிட்டு இருக்கக் கூடாதா?”, என்று கேட்டுப் பார்த்தாள்.

"இல்லை இப்ப எனக்கு கிடச்சிருக்கிற வேலை நல்ல வேலை! நான் எப்படியிருந்தாலும் ஊருக்குத் திரும்பிப் போறதில் எந்த மாற்றமும் இல்லை", என்று தீர்மானமாக சொல்லிவிட்டான்.

அன்று பறவைகள் பூங்கா போயிருந்தார்கள். அதற்கு முதல் வாரம் செந்தோசா சுற்றி வந்தார்கள். எல்லாப் பறவைகளும் சுதந்திரமாக இருப்பதைப் போன்று ஒரு தோற்றம். எத்தனை விதப் பறவைகள். நிஜமாகவே காட்டுக்குப் போனால் கூட இத்தனைப் பறவைகளை ஒரு நாளில் பார்க்க முடியாது. தேடி கண்டு பிடித்துப் பார்க்க ஒருமாதம் ஏன் ஒரு வருடம் கூட ஆகலாம்.

"ராத்திரி லேட்டாக் கிளம்பற •பிளைட்! எதுக்கு ராத்திரி தனியா வந்து கஷ்டப்படறே!", என்று சொல்லிப் பார்த்தான்.

"எனக்கு என்ன ராத்திரிப் பகல்! அதுவும் இந்த ஊர்ல! ராத்திரி நீங்க வெளிலப் போய் பாத்ததில்லையா? ஒரு உலகமே ஓடிட்டு இருக்கும்!", என்றாள்.

யலாம். பிறந்தநாள், தீபாவளின்னு வரும்போது கார்ட் "•போன் பண்ணிப் பேசிக்கலாம். ஈமெயில் அனுப்பிக்கலாம். சாட் செய் அனுப்பிக்கலாம்! ஆனா இதெல்லாம் தேவையான்னு நீதான் முடிவு செய்யணும்", என்று அவன் சொன்ன போது

"நாளைக்கு தாஸைப் பாக்கப் போற நாள்", என்றாள் அவன் கேள்விக்கான அர்த்தமில்லாதப் பதில்!

"அன்னைக்குப் பேர்ட்ஸ்பார்க் போனோமே ஞாபகம் இருக்கா? அதில இருக்கிற பறவைகளைப் பாக்கறச்சே உன் ஞாபகம்தான் வருகிறது. எல்லாம் சுதந்திரமாக பறப்பது போல் ஒரு பாவனையில் பறக்கிறது. உயரத்தில் ஒரு எல்லைக்கு மேல் பறக்க முடியாத படி ஒரு வலை போட்டு வச்சிருக்காங்கப் பாத்தியா? அப்படியே வலையைத் தாண்டிப்பறந்து வந்தாலும் ரொம்ப நாள் வெளியே தாக்குப் பிடிக்க முடியாது. திரும்ப அங்கேயே போய்டும்", என்று சொல்லி நிறுத்தினான்.

நான் மட்டுமில்லை எல்லாப் பெண்களுக்கும் இதைப் போல் ஏதாவது ஒரு கண்ணுக்குத் தெரியாத வலையில் இருப்பதைத்தான் விரும்புகிறார்கள். உனக்கும் கல்யாணம் ஆகும். உன் மனைவியும் இந்த மாதிரி ஒரு வலையில் இருப்பதைத்தான் நீயும் விரும்புவாய். உனக்கு ஒரு பெண் பிறக்கும் அந்தப் பெண்ணையும் இப்படித்தான் வளர்ப்பாய்.அதுவும் தானாக விரும்பி ஒரு வலையைத் தேடிச்செல்லும். கண்ணாடித் தடுப்பிலிருந்து கண் மறைகிற வரை கையசைத்துக் கொண்டேச் சென்றான். பேரிரைச்சலுடன் மழை பெய்து> ஓய்ந்த நிசப்தம். வலி நிறைந்த வெறுமை வீடெங்கும்

நிறைந்திருந்தது. அம்மா மட்டும் தூங்காமல் அதிசயமாக நடந்து கொண்டிருக்காமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். இப்படித்தான் அம்மா வேலை முடிந்த வரும் வரை பசியோடு நிர்மலாவும் அம்மாவுக்காக காத்துக் கொண்டு வாசலிலேயே உட்கார்ந்திருப்பாள். அம்மா சமையல் செய்த அலுப்புடன் வந்தாலும்

"என் ராசாத்தி! அம்மாக்காக காத்திட்டு இருக்கியா?", என்று கொஞ்சலுடன் உள்ளே அழைத்துச் செல்வாள். அம்மாவுக்காக இல்லை அம்மா கொண்டு வரும் சாப்பாட்டுக்காக பசியோடு காத்திருக்கிறாள் என்பது இருவருக்குமேத் தெரியும். இருந்தாலும் அந்த நாடகம் இருவருக்குமே அப்போது பிடித்திருந்தது.

அம்மாவைப் பார்த்தாள். கண்களில் பசி தெரிந்தது. "ஏதாவது சாப்பிடறியாம்மா", என்று கேட்டுவிட்டு குடிக்க ஹார்லிக்ஸ் கலக்கிக் கொண்டு வந்து கொடுத்தாள். பாதிக் குடித்து விட்டு நிர்மலாவுக்குக் கொடுத்தாள். அவளுக்கும் அப்போது ஏதாவது குடிக்க வேண்டும் போலத்தான் இருந்தது.

"வாம்மா! ரொம்ப நேரமாயுடுச்சே! படுப்போம்!", என்று அம்மாவுடன் போய்ப் படுத்தாள். அம்மாவுக்கு முதுகைக் காட்டிக் கொண்டுப் படுத்தாள். அம்மாவின் கை அவள் முதுகை வருடியது. அதன் பின் அவன் விட்டுச் சென்ற வெற்றிடம் சுருங்கிச் சுருங்கி ஒரு ஒளிப் புள்ளியாகி பின்னர் இரவின் இருளில் கரைந்தது.

தாஸிடம் முன்புப் போல் அந்த பரபரப்பு இல்லை. அவனே "நல்லபடியா இருந்தா சீக்கிரம் விட்டுருவாங்களாமே! சீக்கிரம் வரப் பாக்குறேன். அம்மா வந்து பாத்தாங்க. பிரேயர் மீட்டிங் செஞ்சாங்களாம். நீ ஏன் போகல?", என்று கேட்டு விட்டு "பரவாயில்லை நிம்மி! உனக்கு எந்த மாதிரி இருக்கப் பிடிச்சிருக்கோ அப்படியே இருந்துக்க!", என்றான்.

"வுட்லண்ட்ஸ்ல சிவன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் பண்றாங்க! போகணும்", என்று அம்மா முணுமுணுத்தது நினைவுக்கு வர

"சரி! நா கிளம்பறேன்! அடுத்த வாரம் வந்து பாக்கறேன்! அம்மாவையும் சின்னம்மாவையும் கோவிலுக்கு கூட்டிக்கிட்டுப் போகணும்",
என்றாள்.

அந்த இடம் மஞ்சள் நிறப் பூக்களோடு இன்னும் ஆரஞ்சு நிறமும் ஊதா நிறமும்

கொண்ட பூக்களால் நிறைந்திருந்தது. ஏதோ பெயர் தெரியாத பறவைகள் பறந்து கொண்டிருந்தன. வேலை முடிந்து வந்ததிலிருந்தே
வயிற்றைப் பிரட்டுவது போலிருந்தது. வழக்கம் போல் பேக் செய்த வாசனையால் வரும்

பிரட்டல்தான் என்று நினைத்தாள்.
பறவைப் பூங்காப் பறவைகள் இயற்கையாக கூடு கட்டி கூடிக் குலாவி முட்டையிடுமா? தெரியவில்லை. பறவைகள் என்றிருந்தால்
முட்டை போடாமல் இருக்குமா? அப்படியில்லாவிட்டால் அவை பறவையாக வாழ்வதற்கு வேறென்னதான் அடையாளம்?
வீட்டிற்குப் போய் நன்றாக சோப் போட்டுக் குளித்து விட்டுத்தான் கிளம்பவேண்டும்.
சாயங்கால நேரமானதால் எல்லாப் பறவைகளும்
மரங்களில் வந்து அடையும் நேரம். நல்லவேளை இன்று மழையில்லை. வெளியில் இதமான காற்று வீசிக் கொண்டிருந்தது.
மரங்களெங்கும் பறவைகளின் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது.

chitra.kjramesh@gmail.com
பதிவுகள், டிசமபர் 2008 இதழ் 108

2. அப்பாச்சி -எம்.ரிஷான் ஷெரீப், இலங்கை.

தொலைபேசியை வைத்தவளுக்குப் பதற்றமாகிவிட்டது. அடுத்தகிழமை அவளை நிச்சயிக்க திலகன் வீட்டிலிருந்து வர இருக்கிறார்கள். தொலைபேசியை வைத்தவளுக்குப் பதற்றமாகிவிட்டது. அடுத்தகிழமை அவளை நிச்சயிக்க திலகன் வீட்டிலிருந்து வர இருக்கிறார்கள். இப்போதைய பதற்றத்துக்குக் காரணம் அதுவல்ல. வீட்டுவாசலில் போய் நின்றாள். நண்பகலுக்கு முன்னதான வெளிச்சத்தோடு வெப்பத்தையும் சுமந்திருந்த வெயில் அகன்ற முற்றத்தில் அகலப் படுத்திருந்தது. வீதியில் மீன்காரன் போவது தெரிந்தது. வெயிலை எதிர்க்கத் தலையிலொரு தொப்பி. சைக்கிளின் பின்பகுதியில் தராசால் மூடியபடி மீன் பெட்டி. மீன்காரனைக் கண்டால் நிறுத்தும்படி அம்மா சொல்லியிருந்தாள்.

அவளது வீட்டுக்கும் வீதியோரத்தோடு ஒட்டியிருந்த கேட்டுக்கும் இடையில் பாய் போட்டு ஒரு ஊருக்குச் சாப்பாடு போடலாம்.அவ்வளவு பெரிது. இவள் கூப்பிடுவாளென எதிர்பார்த்தோ என்னவோ, அவன் வேக வேகமாகத் தன் சைக்கிளை மிதித்து அடுத்த தெருவுக்குப் போய்விட்டிருந்தான். யாருக்கும் இவளோடு பேரம் பேசி முடிக்கமுடியாது. அதுவும் மீன்காரனோடு பேரம் பேசப்போனால் மீனைத் துப்புரவாக்கும் போது ஒதுக்கப்படும் பகுதிகளுக்காகக் காத்திருக்கும் பூனை கூட 'மீனும் வேண்டாம், அதன் வாலும் வேண்டாம்' என ஓடிப்போகும்.

'தப்பிவிட்டான்' என மனதிற்குள் கறுவிக்கொண்டவள் சமையலறைக்குள் போனாள். அம்மா அரிசி கழுவிக் கொண்டிருந்தாள்.

" அந்தப் பழைய தட்டைக் கொண்டு போ "

" எதுக்கு? எங்க? "

" உன்ர மாமியார் வீட்டுக்கே கொண்டு போகச் சொன்னனான் ? மீன் துண்டுகளைப் போடத்தான். இல்லையெண்டால் புதுத்தட்டெல்லாம் மீன் வாசமடிக்கும் "

" அவன் நிக்காமப் போயிட்டான். நீங்கள் மீன் துண்டு கேக்குறீங்கள். இண்டைக்கு வேற ஏதாவது செய்யுங்கோ."

" வேற ஏதாவது செய்யுறதோ..? உன்ர அப்பாக்கிட்ட மீன் சமைச்சு வைக்குறன். பகலைக்கு வாங்கோ எண்டு சொல்லியிருக்கிறன். அந்த மனுஷன் விழுந்தடிச்சுக் கொண்டு ஓடி வரும்.புளியைக் கூடக் கரைச்சு வச்சிட்டன். மீனெண்டால் அவருக்கு உசிரெண்டு உனக்குத் தெரியும் தானே ?"

"அப்ப பேசாம கடலுக்குள்ள போய் இருக்கச் சொல்லுங்கோ. மீன்காரன் நிக்காமப் போயிட்டான்.நானே இங்க உடம்பு பதறிக் கொண்டு நிக்குறன் "

சொல்லிவிட்டு ஃபிரிட்ஜிலிருந்து ஒரு போத்தல் குளிர்ந்த நீரை எடுத்துக் கொண்டு சாப்பாட்டு மேசை மேல் உட்கார்ந்துகொண்டாள்.

" ஏண்டியம்மா? அவன் நிக்காமப் போயிட்டான் எண்டால் நீ எதுக்குப் பதற வேணும் ? "

" பதறுறதே ? எதுக்குப் பதறுறேன் எண்டு தெரிஞ்சுக் கொண்டால் நீங்களும் ஆடிப் போவியள் "

அம்மா அரிசியை அப்படியே வைத்துவிட்டு சங்கீதாவின் அருகில் வந்தாள். சங்கீதாவின் அம்மா ஒரு வாயில்லா ஜீவன். அப்பாவி. அடுத்தவீட்டுக் குழந்தைக்கு அம்மை ஊசி போட்டார்கள் என்றால் கூடக் கேட்டுக் கண்கலங்குகிற மனசு.

" என்னடி ?அடுத்த கிழமை நிச்சயத்தை வச்சுக் கொண்டு என்னைப் பதற விடுறாய் ? அப்பாவுக்கு விஷயந்தெரிஞ்சால் என்னாகும்?"

" அப்பாவுக்கு எப்படியும் தெரியத்தானே வேணும்...இண்டைக்குப் பகல் சாப்பாட்டுக்கு வர்றப்ப நானே அவரிட்டச் சொல்லப் போறன்..கேட்டு ஆடிப்போகப் போறார் பாருங்கோ. "

அம்மாவின் கண்கள் அதற்குள் கலங்கத் தொடங்கிவிட்டது. இடுப்பில் சொருகியிருந்த புடைவை முந்தானையெடுத்து மூக்கை உறிஞ்சிக் கொண்டாள்.

"அம்மா, நீங்கள் எதுக்கு இப்ப அழுறீங்கள் ? "

" நீதான் ..அடுத்த கிழமை நிச்சயத்தை வச்சுக் கொண்டு இப்ப உனக்கும் மீன்காரனுக்கும் ஏதோ..."

"அடச்சீ..அம்மா..வாயை மூடுங்கோ முதல்ல..நான் சொல்லவந்தது அதில்ல... சித்தப்பா கோல் பண்ணியிருந்தவர் "

அம்மாவிற்கு தனது கணிப்பு தப்பாகிப் போனதில் வெட்கமாகப் போய்விட்டது சங்கீதாவின் தோளில் செல்லமாகத் தட்டி "என்ன சொன்னவர்? " எனக் கேட்டாள்.

" அப்பாச்சி என்னோட நிச்சயத்துக்கு இங்க இருக்கவேணுமெண்டு விரும்புறாவாம். சித்தப்பாவுக்குக் கால்ல ஏதோ வருத்தமாம்.நடக்க ஏலாதாம். முடிஞ்சால் அப்பாவுக்கு

இன்னும் ரெண்டு நாள்ல வந்து அப்பாச்சியக் கூட்டிக் கொண்டு போகச் சொன்னார் "

சங்கீதாவைப் பீடித்திருந்த பதற்றம் இப்பொழுது அம்மாவையும் பிடித்துக் கொண்டது. சட்டென்று அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். அப்பாச்சி என அழைக்கப்படுபவர் சங்கீதாவுடைய அப்பாவின் அம்மா. அவளது அதிரடி மாமியார். 'சூட்டுக் கிழவி' என அவள் மனதிற்குள் மட்டும் அடிக்கடி திட்டிக் கொள்வாள். அந்தளவுக்கு அவரது சொல்லும் செயலும் பெரும் புயலைக் கிளப்பும். அப்பாச்சி ஐந்து வருடத்திற்கு முன்னால் வந்து ஒரு கிழமை இருந்துவிட்டுப்போன போது நடந்த கூத்துக்கள் சொல்லிமாளாது.

போனமுறை சித்தப்பாவே அவரைக் கூட்டிவந்தார். இரயில் நிலையத்திலிருந்து ஒரு ஆட்டோ பிடித்து நேராக வீட்டு கேட்டருகில் வந்து இறங்கினர். சங்கீதாவுக்கு அப்பொழுது பத்தொன்பது வயது. அழகுக்கலை பற்றிப் படித்துக் கொண்டிருந்தாள். படித்ததைச் செய்துபார்க்கத் தங்கையோடு சேர்ந்து தன் நீளத் தலைமுடியை நேர்படுத்தி, அயர்ன் பண்ணிக் கொஞ்சம் செம்பட்டை நிறத்தில் சாயமும் அடித்திருந்தாள். அன்றைக்கு அவளுக்குச் சனி உச்சத்தில் இருந்திருக்கவேண்டும். வீட்டு கேட்டருகில் வந்துநின்ற ஆட்டோவை அவள்தான் முதலில் கவனித்தாள்.

வாசலிலிருந்து ஒரே ஓட்டமாக ஓடி வந்து கேட்டைத் திறந்துவிட்டாள். எண்பது வயதில் சாதாரண தோற்றத்திலிருந்த ஆச்சி முகத்தில் எள்ளும்கொள்ளும் வெடித்தது. அந்த வயதான ரௌத்ரத்தைக் கவனிக்காத இவள் " வாங்கோ ஆச்சி, வாங்கோ சித்தப்பா" என்று ஆச்சி கையைப் பிடித்துக் கொண்டாள்.

"ஆச்சி வாறது இருக்கட்டும்..குமருப்பிள்ள தானே நீ..? இப்படி ஓடி வாறாய்? இப்படியே உன்னை உன்ர அம்மா வளர்த்திருக்குது ? என்ர காலத்துலயும் இருந்தோமே. முத்தத்துல ஒரு ஈ,காக்கை அசைஞ்சாக் கூட வெட்டைக்கு இறங்கேலாது. அவ்வளவு ஒழுக்கமா வளர்ந்தோம். உன்னையும் வளர்த்திருக்குது பார் உன்ர அம்மா "

சங்கீதாவுக்குத் திகைப்பாகிப் போய்விட்டது. சித்தப்பாவைப் பார்த்தாள். 'இது எதையும் கண்டுகொள்ளாதே' என்பது போலக் கண்களால் சாடை செய்தார். பின்னர் அவள் கையில் ஆச்சியின் பயணப்பையைக் கொடுத்துவிட்டு முன் கடையில் வாழைப்பழம் வாங்கிவருவதாகச் சொல்லி ஆச்சிக்குக் களவாக சிகரெட் குடிக்கப் போனார். வாய் சவ சவ எனச் சிகரெட் கேட்டுக் கொண்டிருந்தது அவருக்கு. ஆச்சி முன்னால் அதெல்லாம்... ம்ஹூம்..மூச்.

" என்ன நீ ? சாமத்துல ஊர் சுத்துற மோகினிப் பேயாட்டம் தலையை இப்படி விரிச்சுப் போட்டுக் கொண்டு இருக்கிறாய் ? ஒரு நூல்துண்டாவது கிடைக்கேல்லியே நல்லாச் சடை

பின்னிக் கட்டுறதுக்கு ? "

" ஆச்சி முதல்ல உள்ளே வாங்கோவன், கதைப்பம் "

" ஓம் கதைப்பம் கதைப்பம்." என்ற ஆச்சி அவள் தலைமுடியைப் பிடித்து உற்றுப் பார்த்து,

"அடக் கடவுளே..இங்கே பாரடி..உன்ர தலைமயிரெல்லாம் வெள்ளக் காரச்சியாட்டம் செம்பட்டைக் கலராகிப் போய்க்கிடக்கு . எங்கேடி உன்ரை அம்மா? நல்லா எண்ணெய் வச்சு, வழிச்சுக் கோதிக் கட்டிவிடாம உன்னை இப்படித் திரியவிட்டிருக்கிறாள். அப்படியென்ன செய்து கிழிக்கிறாள் வீட்ட ? நீ இப்படித் திரிஞ்சியெண்டால் உன்னை ஆரு கட்டுவினம் ?" என்றவாறு வாசல்வரை வந்த அப்பாச்சி, முற்றத்தைத் திரும்பவும் பார்த்து வீட்டின் திண்ணையிலிறங்கி வலது கோடிக்குப் போனார்.
பின்னாலேயே சங்கீதாவும் அவரைத் தொடர்ந்தாள்.

" எங்கேயடி இங்க இருந்த பெரிய மாங்காய் மரம் ? " ஆச்சியின் கண்களில் சினம் தெறித்தது.

" காய் நிறைஞ்சு கூரை மேல விழுந்து ஓடெல்லாம் உடையுதெண்டு அப்பாதான் வெட்டினவர் " என்று குரல் நடுங்கச் சொன்னாள்.

" உன்ர அப்பாவின்ர கல்யாணத்தப்ப என்ர கையால நாட்டிக் கொடுத்த மரம். அதப் போய் வெட்டியிருக்கானே. உன்ர அம்மாதான் வெட்டச் சொல்லியிருப்பாள். எனக்குத் தெரியாதெண்டு நெனச்சியே ? "

ஆச்சிக்குக் கோபத்தில் உடல் நடுங்கியது. சங்கீதா அவர் தோளைப் பிடித்து அணைத்து மெதுவாகச் சொன்னாள்.

" ஆச்சி, இப்ப நீங்கள் களைச்சுப்போய் வந்திருக்கிறியள். முதல்ல உள்ள வாங்கோ. ஒரு தேத்தண்ணியக் குடிச்சுப் போட்டு தோட்டத்துக்குப் போகலாம். ஏழெட்டு மணித்தியாலப்பயணமெண்டால் லேசே ? "

இப்பொழுது ஆச்சி கொஞ்சம் சமாதானமானார். அவளது கையை விட்டுவிட்டு விடுவிடுவென்று வீட்டுத் தலைவாசல் வரை வந்தார். ஆனால் உள்ளே போகவில்லை. வைராக்கியம். மருமகள் வந்து தன் வாயால் கூப்பிடும் வரை உள்ளே செல்வதில்லையென்ற வைராக்கியம். சங்கீதாவுக்குப் புரிந்தது.

"அம்மா..அம்மோவ்"

" ஏணடியம்மா இப்படித் தலவாசல்ல நின்றுகொண்டு கூப்பாடு போடுறாய்? நான் உன்ர சாமத்தியச் சடங்குக்கு வந்தப்ப மூங்கில் கேட்டல்லோ இருந்தது. இப்ப என்ன இரும்புக்கு மாறியிருக்குது ? "

" ஓம் ஆச்சி..அது பழசாகிப் போச்சுதெண்டு அப்பாதான் இதைச் செஞ்சு போட்டவர். "

" என்னது பழசாகிப் போச்சுதே ? அதை ஆறுமாசத்துக்கொருதரம் புதுப்பிச்சுக் கட்ட வேணும். அதைக் கூடச் செய்ய ஏலாமல் உன்ர அப்பா சோம்பேறியாகிப் போய்ட்டாரே? உன்ர அம்மாவுக்குச் சொல்றதுக்கென்ன ?. இது ஆஸ்பத்திரி கேட் மாதிரியல்லோ கிடக்கு ? "

" வாங்கோ மாமி..வாசல்லையே நிண்டு கொண்டிருக்கிறியள் ? பின்கட்டுல உடுப்புக் காயப்போட்டுக் கொண்டிருந்தனான். அதுதான் நீங்கள் வந்த சத்தமே கேக்கல்ல..உள்ளுக்கு வாங்கோ " என்றவாறு உள்ளிருந்து அம்மா வந்தாள்.

" வாறன் வாறன்.என்ன இந்த அந்தி பட்ட நேரத்துல உடுப்புக் கழுவுற பழக்கம்? காலையிலேயே கழுவிப் போட ஏலாதே ?..என்ன எல்லாமே மாறிக்கிடக்கு ? நீ இதையெல்லாம் கவனிக்கிறதில்லையோ? இவளிண்ட கொண்டையைப் பார். சேவல் கருமலாட்டம் ஒவ்வொரு முடியும் ஒவ்வொரு நிறத்துல கிடக்கு. அடி ..முந்தானையை ஒழுங்காப் போடடி" எனச் சங்கீதாவின் தோளில் நொடித்தார். அவள் சிணுங்கியவாறு அம்மாவை முறைத்தாள்.

" நானெல்லாம் இவளிண்ட வயசுல கையில ரெண்டு, இடுப்பில ரெண்டெண்டு நாலு புள்ளயச் சொமந்தவள். இவளுக்கு இன்னும் மாப்பிளை பார்க்கலையோ ?"

" பார்த்துக் கொண்டிருக்கிறம் மாமி.. முதல்ல இந்த ரூமுல போய் உடுப்பை மாற்றிக் கொள்ளுங்கோவன். உவர் சித்தப்பா வந்தவரல்லோ ? எங்கே காணோம் ? "

அம்மா சித்தப்பாவைத் தேடி முற்றத்துக்குப் போனார். சங்கீதா ஆச்சியின் பின்னால் அவர் பயணப்பையை எடுத்துக் கொண்டு அவள் அறைக்குப் போனாள். ஆச்சி அறைக்குள் நுழைந்த அடுத்தகணம் அலறியடித்து, சங்கீதாவையும் தள்ளிக்கொண்டு வீட்டு வாசலுக்கு ஓடி வந்து மூச்சிரைத்தார்.

" என்னாச்சுது மாமி என்னாச்சுது? " எனக் கத்திக் கொண்டு முற்றத்திலிருந்த அம்மா உள்ளே ஓடிவந்தார். சித்தப்பா பின்னால் ஓடி வந்து ஆச்சியைத் தாங்கிக் கூடத்திலிருந்த கதிரையில் உட்காரவைத்தார்.

" மகள்..ஒரு கிளாஸ் தண்ணி கொண்டுவாங்கோ " என்றார்.

சங்கீதா ஓடிப்போய்த் தண்ணீர் எடுத்துவந்து கொடுத்தாள். ஆச்சி அதை வாங்கி ஒரே மூச்சில் அவ்வளவையும் குடித்தார். பொக்கை வாயில் வழிந்த தண்ணீர் அவர் நெஞ்சையும் நனைத்தது.

" என்ன அம்மா என்ன ஆச்சுது? "

" உவள் காமாட்சி இருந்தாளே...எங்கட ஊர்க் கோயில் புளியமரத்துல தூக்குப் போட்டுச் செத்தவள்."

ஆச்சி இளைத்து இளைத்துச் சொல்லத்தொடங்கினார். சித்தப்பாவும், அம்மாவும், சங்கீதாவும் எதுவும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

" ஓம் அம்மா. அவளுக்கென்ன இப்ப. அவள் செத்து இப்ப கன நாளாச்சுல்லே..? ஆறுமாசத்துக்கும் மேல ஆகியிருக்கும் "

" உவள் சாகுறதுக்கு கொஞ்சநாள் முன்னாடி எங்கட தோட்டத்துல தென்னமோலை பொறுக்க வந்தாள். அப்ப நான் நல்லா ஏசி அனுப்பிட்டன். இப்ப ... இப்ப.. "

" இப்ப என்ன மாமி ? "

" உவள் பேயாகி நான் போற இடமெல்லாம் வந்து பழி வாங்கக் காத்துக்கொண்டிருக்கிறாள்."

இப்பொழுது சங்கீதாவின் அம்மா நன்றாகப் பயந்துபோனாள். சங்கீதாவின் தோள்களைப் பற்றிக் கொண்டாள்.

" என்ன மாமி சொல்றியள்? "

சித்தப்பா எதுவும் பேசாமல் ஆச்சி போய்ப்பார்த்துப் பயந்து ஓடி வந்த அறைக்குள் போனார். இருட்டுக்குள் இருந்த ஏதோ ஒன்றைப் பார்த்துப் பயந்தவராக அவரும் விரைந்து திரும்பி வந்தார்.

"மகள்..எனக்கு ஒரு கிளாஸ் தண்ணி கொண்டு வாங்கோ " என்றார்.

சித்தப்பாவுக்குத் தண்ணீர் எடுக்கச் சமையலறைக்குள் வந்த சங்கீதாவுக்கு அப்பொழுதுதான்

அந்த ஞாபகம் வந்தது. அவசரமாகத் தண்ணீரைக் கொண்டுபோய்ச் சித்தப்பாவிடம் கொடுத்துவிட்டு அவர்கள் இருவரும் பார்த்துப்பயந்த அந்த அறைக்குள் போனாள். வெள்ளைப் புடைவையில் போர்த்தப்பட்ட உருவம் அசைவுகளேதுமின்றி முகம் முழுதும் சுண்ணாம்படித்த வெள்ளையோடு , வட்ட வட்டமான கண்களை மூடிப் படுத்திருந்தது. அவள் சிறிதும் அஞ்சவில்லை.

அவள் எப்படிப் பயப்படுவாள்? எல்லாம் அவளது கைங்கர்யம் தானே? நேற்று அழகுக் கலை வகுப்பில் படித்த ஃபேஷியல் முறையைப் பரீட்சித்துப் பார்க்க தங்கையின் முகத்திலும், கழுத்திலும் ஏதோ ஒரு வெள்ளைக் கலவையைப் பூசிப் படுக்கவைத்திருந்தாள். வீட்டுச் சமையலுக்குக் கொண்டுவந்திருந்த வெள்ளரிக்காயை வெட்டிக் கண்களை மூடிவிட்டிருந்தாள். தங்கையும் நடந்துகொண்டிருக்கும் அமளி துமளி எதுவும் தெரியாமல் 'கிடைத்ததடா ஓய்வு' என வெள்ளைப் போர்வையால் உடலைப்போர்த்தி நன்றாகத் தூங்கிவிட்டிருந்தாள்.

சங்கீதா அரை இருட்டுக்குள் தூங்கிக் கொண்டிருந்த தங்கையின் தோளில் தட்டி எழுப்பினாள். கண்களை மூடியிருந்த வெள்ளரிக்காய்த் துண்டுகளை எடுத்து அறையின் மூலைக்கு வீசியெறிந்தாள். ஆங்கிலப் பேய்ப்படங்களில் வரும் பிசாசினைப் போல இருந்த சவீதா கண்விழித்து நேரம் காலம் தெரியாமல் சோம்பல் முறித்து " விடிஞ்சுட்டுதே அக்கா ? " என்றாள்.

"ஓம். உனக்கிப்போ நல்லா விடியும் அப்பாச்சிக்கிட்ட இருந்து. முதல்ல எழும்பிப் போய் முகம் கழுவு "

" இவ்வளவு நேரம் வச்சிருந்தது போதுமோ அக்கா? நான் வடிவாகியிருப்பேனே ? " என்றவாறு கட்டிலிலிருந்து எழும்பி நின்றாள்.

சங்கீதா பதில் சொல்லாமல் போர்வையைச் சுருட்டி அவள் முதுகில் அடித்து அவளை குளியலறைக்கு விரட்டிவிட்டாள். பெரியாச்சியின் ஓயாத வாய்க்குப் பூட்டுப் போட்டாயிற்று. அவர் கண்களை மூடி ஏதோ மந்திரங்களை ஓதித் தன் நெஞ்சுக்குள் ஊதிக் கொண்டார். சங்கீதா கூடத்துக்கு வந்து சித்தப்பாவை மட்டும் சாடை செய்து கூப்பிட்டாள். பலி கொடுக்க அழைத்துச் செல்லப்படும் ஆட்டைப் போல மருண்ட பார்வையோடு அவர் அவளை நோக்கி வந்தார். சமையலறைப் பக்கமாகக் கூட்டிப் போய் விஷயத்தைச் சொன்னாள்.

அவருக்குச் சிரிப்புத் தாளவில்லை. அப்பாச்சியிடம் சொன்னால் நன்றாக எல்லோரும் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டி வருமெனச் சொல்லி விஷயம் அவர்களுக்குள்ளேயே மூடி மறைக்கப்பட்டது. அம்மாவையும் அழைத்து விஷயத்தைச்

சொல்லியாயிற்று. அவள் பயத்தில் தான் கோயிலுக்குக் கோழி கொடுப்பதாக நேர்ச்சை வைத்ததைச் சொன்ன போது சிரிப்புப் பலமடங்காகியது. எல்லோரும் சத்தம் வெளியே கேட்காமல் வாயைப் பொத்திச் சிரித்தனர். அப்பொழுதுதான் முகம் கழுவிவந்த சவீதா தன்னைத் தான் பார்த்துச் சிரிக்கிறார்கள் என நினைத்து ஓடிப் போய்க் கண்ணாடியில் முகம் பார்த்தாள்.

எல்லோரும் கூடத்துக்கு வந்தனர். அப்பாச்சி இன்னும் கண்ணை மூடி மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தார். சித்தப்பா "அம்மா " என்றார்.

" ஓமடா... ஒரு தென்னமோலைக்காக ஊர் விட்டு ஊர் வந்து இப்படிப் பேயாய் அலைவாளெண்டு நான் இண்டைக்குத் தான் தெரிஞ்சு கொண்டன்.இனியெண்டால் நான் எல்லோருக்கும் தென்னமோலை சும்மா கொடுப்பன். அவளுக்குச் சொல்லடா..இனியும் என்ர பின்னால பேயாய் வந்து துரத்தாதையெண்டு " என்றார்.

பின்னர் சித்தப்பாவும் மற்றவர்களும் எவ்வளவு சொல்லியும் அந்த அறைக்குப் போகவே மாட்டேன் என்றார். சரியெனச் சொல்லி அம்மாவின் அறைக்குக் கூட்டிக் கொண்டுபோய் ஆடை மாற்றச் சொன்னார்கள். அவர் கையோடு கொண்டுவந்திருந்த பழைய ஆடைக்குத் தன்னை மாற்றிக் கொள்ளும் வரையில் அம்மாவும் அவருடனே இருக்க வேண்டியதாயிற்று. ஆனால் அதற்குப்பின்னர் ஆரம்பித்தது வம்பு. அப்பாச்சி எங்கே போனாலும் அவரது கைத்தடி போல யாராவது துணைக்குப் போகவேண்டியிருந்தது. அம்மா, சங்கீதாவிடம் அப்பாச்சியைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு எல்லோருக்கும் இஞ்சி தட்டிப் போட்டுத் தேநீர் ஊற்றிக்கொடுத்தாள்.

அப்பா வந்ததும் இந்த வீட்டில் பேயிருக்கிறதெனச் சொல்லி அப்பாச்சி அப்பாவையும், அம்மாவையும் ஒரு பிடிபிடித்தார். அப்பா ஒன்றும் புரியாமல் அம்மாவைப் பார்த்து விழித்தார். அம்மா வாய்க்குள் சிரிப்பதைப் பார்த்து முறைத்தார். சித்தப்பா வெளியே கூட்டிக் கொண்டு போய் விடயத்தை விபரித்தபின்னர் அப்பாவும் இரண்டு குரும்பட்டிகளை வாய்க்குள் போட்டு அதக்கியதைப் போலக் கன்னங்கள் விரிய வெகுநேரம் சிரித்தார்.வீடு முழுக்க எல்லோரும் வந்து சேர்ந்ததும் அப்பாச்சியின் அதிகாரம் திரும்பவும் ஆரம்பித்தது.

எவ்வளவு சாப்பிட்டாலும் சதை ஒட்டாத உடம்பு சவீதாவிற்கு. பதினாலு வயது நடந்துகொண்டிருந்தது. ஒட்டடைக் குச்சிக்கு உடுப்புப் போட்டு விட்டது போல வீடு, பள்ளிக்கூடமென வளைய வந்துகொண்டிருந்தாள். அவளுக்குச் சதை பிடிக்க வேண்டுமென அம்மா ஒரு நேர்ச்சையும் வைத்திருந்தாள். ஆச்சியின் பார்வை இப்பொழுது அவள் மேல் படிந்தது. கூப்பிட்டு அருகில் அமர்த்திக் கொண்டாள்.

" ஏண்டியம்மா? இவளுக்கு நீ சாப்பாடு கொடுக்குறியோ இல்லையோ ? இவளைப்பார்த்தால் இவளுக்குக் கொடுக்காமல் எல்லாத்தையும் நீயே விழுங்குற மாதிரியல்லோ கிடக்குது " என்று அம்மாவைச் சாடத் தொடங்கினார்.

" இந்த வீட்டுல இல்லாத சாப்பாடோ மாமி? அதெல்லாம் நல்லாத்தான் கொடுக்கிறன். இவள் தான் ஒழுங்காச் சாப்பிட மாட்டாள் "

" உன்ர சமையலின்ர தரம் எனக்குத் தெரியாதே..பச்சத் தண்ணிக்கு உப்புப் போட்டு அதை ரசம் எண்டு சொல்லுவாய் நீ "

அப்பாச்சி சொன்னதும் அம்மாவின் முகம் வாடிப்போனது. மனதுக்குள் "சூட்டுக் கிழவி, சூட்டுக் கிழவி" எனத் திட்டிக் கொண்டாள். உண்மையிலேயே அம்மாவின் சமையல் வெகுசுவையாக இருக்கும். புளியெல்லாம் கரைத்துப் போட்டு , மசாலா எல்லாம் அரைத்துப் போட்டு அவள் மீன்கறி செய்தாளானால் அந்த வாசனை எட்டி அப்பா ஆபிஸிலிருந்தே மோப்பம் பிடித்து வீட்டுக்கு வந்துவிடுவார்.அம்மா எதுவும் பேசாமல் சமையலறைக்குள் போய் இரவுச் சாப்பாட்டைத் தயார் பண்ண ஆரம்பித்தாள்.

அப்பாச்சி, சவீதாவைக் கூட்டிக்கொண்டு அங்கேயும் வந்துவிட்டார். ஆச்சியின் கண்கள் விறகடுப்பைத் தேடியது. சமையலறையின் மூலையிலிருந்த விறகடுப்பை எப்போதோ அகற்றி கேஸ் அடுப்பில்தான் சமைத்துக்கொண்டிருந்தனர். விறகடுப்பு சம்பந்தமான ஆச்சியின் கேள்விகளுக்கு அம்மாவால் விளக்கம் கொடுக்கமுடியாமல் அப்பாதான் வந்து விளக்கவேண்டியிருந்தது. திடீரென " என்ர அம்மியையும், குளவியையும் எங்கேயடி காணோம்? " என்றார்.

"அதை வெளியில போட்டிருக்கிறம் அப்பாச்சி. " என்றாள் சவீதா.

"வெளியிலயோ..? என்ர அம்மா, எனக்குச் சீதனமாத் தந்தது. அதை உனக்குத் தந்தால் நீ வெளியில வீசுடுவியே..? " என்று காட்டமாக அப்பாவை முறைத்து " இவள் தான். எல்லாம் இவளோட வேலைதான். நினைச்சுக் கொண்டிருப்பாள். ஒருநாளைக்கு என்னையும் இப்படி வெளியில தூக்கிப் போட " என்று அம்மாவையும் சாடி " எனக்கிப்பவே என்ர அம்மியைப் பார்க்கவேணும் " என்று அடம்பிடித்தார்.

"அம்மா, இப்ப இருட்டாகிப் போச்சுது. விடியற்காலையில பார்ப்போம்..வெளியிலயெண்டால் ஸ்டோர் ரூமில வச்சிருக்கிறோம்" என்று பேயை நினைவுறுத்திப் பயமுறுத்தி,ஒருவாறு சமாதானப்படுத்தி விட்டார் அப்பா. ஆச்சி அவரது ஒல்லிக் குச்சிக் கைத்தடி போல சவீதாவைக் கையில் பிடித்துக்கொண்டு அந்தப் பேய் அறையைத் தவிர்த்து வீடு முழுக்க வலம் வந்தார்.

சித்தப்பா டீவியின் முன் தேமே என்று உட்கார்ந்துவிட்டார். அவரது கிராமத்துவீட்டுக்கு இன்னும் டீவி வந்திருக்கவில்லை. டீவியை விட்டு மின்சாரமே இல்லை. தன்வீட்டில் வழமையாக இரவு எட்டு மணிக்கே கும்பகர்ணனுக்குத் தம்பி போலக் குறட்டை விட்டுத் தூங்கி விடுபவர் அன்று டீவியின் முன் உட்கார்ந்துவிட்டார். அசைவதாக இல்லை. கண்ணைக் கூடச் சிமிட்டுவதாக இல்லை.

வீட்டுக்குள் சுற்றி வந்த அப்பாச்சி டீவியைப் பார்த்துவிட்டாள். இருபத்தொன்பது இஞ்ச் கலர் டீவி. சவீதாவின் அடம்பிடித்தலுக்கு அப்பா வாங்கிக் கொடுத்தது. டீவியில் ஓடும் அன்றைய நிகழ்ச்சிநிரலை அறிவிப்பாளருக்கு அடுத்து சவீதா மனப்பாடமாக ஒப்பிப்பாள். அந்தளவுக்கு அவளுக்கும் டீவிக்கும் நெருக்கம். அப்பொழுது இரவுச் செய்தி போய்க்கொண்டிருந்தது.

" உவள் எப்படியடி உந்தப் பெட்டிக்குள்ள போய்க் கதைக்குறாள்? மூச்சு முட்டாதே " என்றார் அப்பாச்சி செய்தி வாசிக்கும் பெண் அறிவிப்பாளரைப் பார்த்து. சவீதாவும், சங்கீதாவும், சித்தப்பாவும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு சிரிக்கத் தொடங்கினர். அப்பாவுக்கும் சிரிப்புச் சத்தம் கேட்டு எட்டிப்பார்த்து விஷயம் தெரிந்து திரும்பவும் அவர் வாயில் குரும்பட்டி.

இரவுச் சாப்பாடு முடிந்த கொஞ்சநேரத்தில் அப்பாச்சிக்குத் தூக்கம் வந்துவிட்டது. அறைக்குள் தனியாகப் போய்த் தூங்கப்பயம். யாரிடமும் சொல்லவும் வெட்கம். " இனி எல்லோரும் தூங்குவம். என்ன? " என்றார்.

" மாமிக்கு நித்திரை வருதே ? மாமி போய்த் தூங்குங்கோ" என்ற அம்மா அப்பாச்சியிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டாள். கடைசியில் அப்பாச்சியை மேலும் உசுப்ப விரும்பாமல் எல்லோரும் நேர காலத்துடன் தூங்கவேண்டியதாகிவிட்டது. இதில் இரண்டு சகோதரிகளுக்கும் தான் கடும் வருத்தம். அன்றைக்குப் பார்த்துப் புதிய தமிழ்ப்படமொன்று டீவியில் போட இருந்தார்கள். நாளைக்கு வகுப்பிலும், பள்ளிக்கூடத்திலும் சினேகிதங்களுக்கிடையில் நடக்க இருக்கும் இப்படம் சம்பந்தமான திரை
விமர்சனத்தில் இவர்களால் கலந்துகொள்ள முடியாது.

அப்பாச்சி தூங்கும்வரை சுலோகங்களைச் சொல்லியபடி இருந்தார். கனவில் காமாட்சியும், புளியமரமும், தென்னஞ்சூளையும் வந்துவிடக்கூடாதென்பது அவரது வேண்டுதலாக இருந்தது. அதிகாலையில் இல்லாத சேவல் கூவி நாலு மணிக்கே எழும்பிவிட்டார். அம்மாவையும் எழுப்பி முகம் கழுவிக் கொண்டு மகள்களை எழுப்பச் சொன்னார்.

இரண்டு அருமைச் சகோதரிகளும் பிறந்த காலம் தொட்டு "சூரியன் கிழக்குத் திசையில் உதிக்கும்" எனப் பாடத்தில் மட்டுமே படித்துவளர்ந்தவர்கள். அவர்கள் சூரியோதயத்துக்கு முன்னர் எழும்பியதாகச் சரித்திரம், விஞ்ஞானம் எதுவுமே இல்லை.
அப்படிப்பட்டவர்கள் ஆச்சியின் சத்தத்துக்குச் சலிப்போடு எழும்பி குட்மோர்னிங் சொல்லிக் கொண்டார்கள்.

அப்பாச்சிக்குத் தேநீர் ஊற்றித்தர அம்மா ஹீட்டரைப் போட்டாள். ஆச்சி அருகில் வந்து ஹீட்டரைப் பார்த்து " என்ன இது? "என்று கேட்டார். ஆச்சிக்கு அம்மா மின்சாரம் கண்டுபிடித்த எடிசனின் கதையிலிருந்து ஆரம்பித்து ஹீட்டரின் உருவாக்கமும் பயன்பாடுகளும் வரை விபரிக்கவேண்டியிருந்தது. எல்லாவற்றையும் பல குறுக்குக்கேள்விகளோடு காதில் வாங்கிக் கொண்ட ஆச்சி " இரும்பைச் சூடாக்கித் தண்ணியில கலந்து , அதுல தேத்தண்ணி ஊற்றி என்னைக் கொல்லப்பார்க்குறியோ? " என அம்மாவைக் கடுப்பாக்கினார்.

பிறகு அம்மா அவருக்காகக் கேத்தலில் தண்ணீர் சுட வைத்துத் தேநீர் ஊற்றிக் கொடுத்தார். அதிலும் ஆயிரம் குறைகள் சொல்லிக் குடித்தவருக்கு நேற்றைய இரவின் அம்மி நினைவுக்கு வந்துவிட்டது. உடனே ஸ்டோர் ரூமுக்குப் போகவேண்டுமெனச் சொன்னார். இன்னும் முற்றாக இருள் கூட விலகியிருக்கவில்லை. அம்மாவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அம்மி இருப்பது ஸ்டோர் ரூமின் உள்ளே ஒரு மூலையில். அதனைத் தேடிப் போவதென்பது ஆபிரிக்காவின் தங்கச் சுரங்கத்துக்குள் போவது போல மிகக் கடினமான வேலை. இடையிடையே தேள், பல்லி, கரப்பான் பூச்சி,எலி எனக் காவல்காரர்களும் எதிர்ப்பட்டு பயமுறுத்துவார்கள். அவைகள் கூடப் பரவாயில்லை. அப்பாச்சியுடன் ஒப்பிடும்போது அவை சாதுக்கள். அப்பாச்சியுடன் ஸ்டோர் ரூமில் மல்லுக்கட்டுவதை மூன்றாம் உலகப்போரை எதிர்கொள்வது போல எண்ணிப்பயந்தாள் அம்மா.

அப்பாவுக்கு அன்று ஆபிஸ் லீவு. அப்பாச்சிக்கு அம்மிக்குளவியைக் கண்டுபிடிக்க அப்பாதான் சரியான ஆள். அவருக்குத் தேநீர் கொடுத்துவிட்டு வருவதாக ஆச்சியிடம் சொல்லிவிட்டு தேநீரோடு விஷயத்தை அவரிடம் சொல்லிவிட்டாள். அப்பாவுக்கு 'இன்றைக்கும் ஆபிஸ் இருந்திருக்கலாமே' எனத் தோன்றியது. துணைக்குச் சித்தப்பாவையும் கூட்டிக் கொண்டு வீட்டின் பின்முற்றத்தின் ஒரு மூலையிலிருந்த ஸ்டோர் ரூமுக்கு அப்பாச்சியுடன் வந்துவிட்டார்.

" எங்கேயடா இங்க வச்சிருந்த கோழிக் கூடு? "

" அது பராமரிக்க ஏலா எண்டு வித்துப்போட்டம் அம்மா. ஏழெட்டு வருஷத்துக்கு முன்னம் இருந்தது. உங்களுக்கு இன்னும் நினைவிருக்கே?"

" ஏன் நினைவில்லாமல்? நான் முட்டை வச்சுக் குஞ்சாக்கிக் கொடுத்தவை. நீயெல்லாத்தையும் வித்துப் போட்டனியோ? நீ எதுமறியாப் பிள்ளை. எல்லாம் உவளின்ர வேலைதான் "

விற்கும் போது அம்மா வேண்டாமெனத் தடுத்தவர். அப்பாதான் கோழி நாற்றம் வீடுமுழுக்க வீசுகிறதெனச் சொல்லி எல்லாக் கோழியையும் கோழிக் கடைச் சந்திரனுக்கு விற்றார். அப்பா எதுவும் பேசவில்லை.

ஸ்டோர் ரூமுக்குள் அம்மி தேடிய பொழுது அப்பாச்சி அப்பாவுக்குக் கொடுத்திருந்த பல பொக்கிஷங்கள் 'இவ்வளவு நாளும் இதற்குள்ளேதான் அடைபட்டுக் கிடந்தோம்' என அப்பாச்சியின் முன்னால் தலை நீட்டின. அப்பாவுக்கான அர்ச்சனைகள் அப்பாச்சியிடமிருந்து வரத்தொடங்கின. அந்த அர்ச்சனைகளில் அம்மாவையும் அவரது ஜாதகத்தோடு சேர்த்துவிட அப்பாச்சி தவறவில்லை.

ஸ்டோர் ரூமினைப் பார்த்துவிட்டு வந்த அப்பாச்சியிடமிருந்து ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாகப் புலம்பல்களும் , வசவுகளும் ஓயாமல் வந்துகொண்டே இருந்தன. அம்மா, அவித்துக் கொண்டிருந்த இடியப்பத்தின் துளைகளில் அப்பாச்சியின் வசவுகளை நழுவவிட்டாள்.

வாசலில் "சங்கீ, சங்கீ" என யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

தனது அழகுக்கலை வகுப்புக்குப் போவதற்கான அலங்காரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சங்கீதாவுக்கு உடனே எழுந்துபோய் வரவேற்க முடியாமல் போனது அழைத்தவளின் துரதிஷ்டம். அழைத்தவள் அன்று யார் முகத்தில் விழித்தாளோ, அப்பாச்சிதான் முதலில் போய் யாரென்று பார்த்தார்.

" ஆரடா நீ? ஆர் வேணும் உனக்கு? " என்றார் அப்பாச்சி அவளைப் பார்த்து. அவள் ஜீன்ஸும், டீசேர்ட்டும் அணிந்து தலைமுடியை பாப் கட் வெட்டியிருந்த பக்கத்துவீட்டுப் பெண். சங்கீதாவுடன் தான் அழகுக்கலை படிக்கிறாள். அவளை வகுப்புக்கு அழைத்துப்போக வந்திருந்தாள். அப்பாச்சியின் கண்களுக்குப் பையனாகத் தெரிந்ததில் ஆச்சரியமேதுமில்லை.

" சங்கி இருக்கிறாளோ ஆண்ட்டி ?"

" அப்படி ஆரும் இங்க இல்லை "

இப்பொழுதுதான் சங்கீதா முன்னால் வந்தாள்.

" உள்ளே வா..இதுதான் என்ர பாட்டி " வந்தவளுக்கு அறிமுகப்படுத்தினாள்.

" நில்லு. ஆரிந்தப் பையன்? அதுவும் பொம்பிளைக் குரலில பேசுறான் ? "

" ஐயோ பாட்டி. இது பையனில்லை. பொண்ணு. "

" இந்த மாதிரி உடுப்பெல்லாம் உடுத்துக்கொண்டிருக்குது ? உன்ர பழைய உடுப்புக்கள் இருந்தாக் கொடு இவளுக்கு..என்ன பேர் சொல்லிக் கூப்பிட்டனீ என்ர பேத்தியை ? சங்கீதா எண்டு இவளோட அப்பாம்மா வடிவா வச்சிருக்காங்கள். முழுப்பேரைச் சொல்லிக் கூப்பிடு...என்ன ? "

வந்தவளுக்குப் பேயறைந்தால் போல் ஆகிவிட்டது. இது போல ஒன்றை அவள் தன் வாழ்நாளில் அனுபவித்ததில்லை. அவள் கராத்தே எல்லாம் கூடக் கற்றறிந்திருக்கிறாள். ஆனால் அப்பாச்சியின் வாய் பற்றி அந்தக் கலையில் சொல்லித்தரவில்லை. தப்பித்தால் போதுமென சங்கீதா அம்மா,அப்பாவிடமும், அப்பாச்சியிடமும் சொல்லிவிட்டு அவளுடன் வகுப்புக்குக் கிளம்பிவிட்டாள். அப்பாச்சி சவீதாவைக் கூட்டிக் கொண்டு முற்றம் முழுதும் ஒவ்வொரு சாணுக்கும் ஒவ்வொரு குறைகள் சொல்லியபடி உலாத்தித் திரிந்தார்.

ஏறத்தாழ ஐந்துநாட்கள் அப்பாச்சியின் அதிகாரம் அந்த வீட்டில் மேலோங்கியிருந்தது. அவர் அந்த வீட்டிலிருந்த நாட்களில் ஒவ்வொருவரும் அப்பாச்சிக்கு எதிர்த்திசையிலேயேதான் மூச்சுக் கூட விட்டார்கள். அம்மாவின் பாடுதான் பாவம். எல்லாவசவுகளின் இறுதியிலும் அம்மாவைச் சாடாமல் அப்பாச்சிக்குச் செமிக்கவில்லை.

அப்படியாகப்பட்ட ,அதிகாரமிக்க அப்பாச்சி தன் மகன் வீட்டுக்கான அடுத்த விஜயத்தை இன்னும் இரண்டுநாட்களில் மேற்கொள்ளவிருக்கிறார் என்ற செய்தி ஒரு பேரிடியாக இப்பொழுது அம்மாவையும், சங்கீதாவையும் தாக்கியிருந்தது. அப்பா வந்தபிறகு அவரையும் தாக்கும்.

இப்பொழுது சித்தப்பாவின் கிராமத்துக்கு மின்சாரம், டீவி எல்லாம் வந்துவிட்டது. கேஸ் அடுப்பும் வந்திருக்கும். ஊருக்குத் தொலைபேசியும் வந்திருந்தது. அப்பாச்சி இருக்கும் வீட்டுக்குள் போனிருந்தால் ஒரு மாத போன் பில் கட்ட அவரது முழுச்சொத்தையும் விற்க வேண்டி வருமென நினைத்தோ என்னவோ அவர் வீட்டுக்குத் தொலைபேசி இணைப்பை எடுக்கவில்லை.அப்பா வந்ததும் அவருக்குத் தகவல் சொல்லப்பட்டது. அவருக்கிருந்த பதற்றத்தில் நல்லவேளை மீன்கறி நினைவில் வரவில்லை. ஒல்லிப்பெண் சவீதாவுக்கும் கூடப் பதற்றமாக இருந்தது. இரண்டாவது நாள் அப்பா ஆபிஸுக்கு லீவு போட்டுவிட்டுத் தன் அம்மாவைக் கூட்டிவர கிராமத்துக்குப்

போனார்.

வீட்டின் கேட் அருகில் ஆட்டோ வந்துநின்றது. இந்த முறை முதலில் அதைக் கவனித்தவள் சவீதா. அப்பாச்சியின் முன்னால் எப்படி நடந்துகொள்ளவேண்டுமெனத் தன் அனுபவங்கள் மூலம் தங்கைக்குப் பாடம் எடுத்திருந்தாள் சங்கீதா. அதன்படி மெதுவாக, நிலத்துக்கும் வலிக்குமோ என்பது போல ஆறுதலாக நடந்துசென்று கேட்டைத் திறந்தாள். தனது நடையைப் பார்த்து அப்பாச்சி பூரித்துப் போயிருக்குமென நினைத்து ஆச்சியின் முகத்தைப் பார்த்தவளுக்கு ஆயிரம் கருந்தேள் ஒன்றாகக் கொட்டிய அதிர்ச்சி. அப்பாச்சியின் முகத்தில் அன்று போல் இன்றும் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

" என்னடி நீ? சித்திரைத் தேர் போல மெதுவாக வர்றாய்? அங்க சாரதா பிள்ளைத்தாச்சியாயிருக்கிறாள். நேற்று வலியெடுக்க ஆரம்பிச்சிட்டுது. அவளிண்ட வீட்டுக்காரன் கூடப் பக்கத்துல இல்ல.என்ன ஆச்சோ? ஏதாச்சோ? நீ என்னடாவென்றால் இவ்வளவு
மெதுவா வாறாய்.. "

அப்பாவுக்கும் , சவீதாவுக்கும் ஆச்சரியமாகப் போய்விட்டது. யார் இந்த சாரதா ? அவளுக்குப் பிரசவ வலியெடுத்தால் அப்பாச்சி எதற்குப் பதற வேண்டும் ? ஒருவேளை வயசான காலத்தில் ஆச்சிக்கு மூளை பிசகிவிட்டதோ ? ஆச்சியின் கையைப் பிடித்த சவீதாவின் கையை உதறிவிட்டு, சாரதா ஏதோ அவர்கள் வீட்டுக்குள்தான் இருந்து துடிப்பதைப் போல அப்பாச்சி விறுவிறுவென வேகமாக வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

சுற்றுமுற்றும் எதையும் பார்க்கவில்லை. வாசலில் அம்மாவின் வரவேற்பிற்காகக் காத்திருக்கவில்லை. நேராக டீவி இருந்த அறைக்குள் போய் " போடடி டீவிய" என்று சங்கீதாவிடம் சொல்லிவிட்டு அருகில் இருந்த கதிரையில் அமர்ந்துகொண்டார் தொலைக்காட்சித் தொடர்களுக்குள் தன்னைத் தொலைத்திருந்த அப்பாச்சி !

rishanshareef@gmail.com
பதிவுகள், டிசமபர் 2008 இதழ் 108

3. ஆப்பிரிக்கப் பஞ்சாயத்து - அ.முத்துலிங்கம் -

ஆப்பிரிக்கப் பஞ்சாயத்துஒரு பேச்சுக்கு இந்த உலகத்தில் நூறு கொசுக்கள் இருக்கின்றன என்று வைத்துக்கொண்டால் அதிலே 50 பெண் கொசுக்களும், 50 ஆண் கொசுக்களும் இருக்கும். ஆண் கொசு கடிக்காது, பெண் கொசுதான் கடிக்கும். கடிக்கும் 50 பெண் கொசுக்களில் 30 கொசுக்கள் மலேரியா கிருமியை காவும் என்றால் அதிலே ஆப்பிரிக்க கண்டத்தை சேர்ந்த கொசுக்கள் 24 ஆக இருக்கும். அந்த 24 கொசுக்களில் இரண்டு சியாரா லியோன் என்ற நாட்டைச் சேர்ந்தவை என்று வைத்துக் கொள்வோம்.

அந்த இரண்டில் ஒரு கொசு என்னைக் கடித்துவிட்டது.

அதுதான் என்னுடைய முதல் மலேரியாக் காய்ச்சல். துரதிர்ஷ்டம் என்னவென்றால் நான் ஆப்பிரிக்கக் காட்டில் இருந்த ஒரு வீட்டில் தனியாக அகப்பட்டுக் கொண்டதுதான். என்னுடைய மனைவியும் பிள்ளைகளும் விடுமுறையில் போய்விட்டார்கள். என்னைப் பார்க்க ஒரு வேலைக்காரன் மட்டுமே இருந்தான். அவனுடைய பெயர் ஸாண்டி. கறுத்த மேனி. கன்னங்களில் சாய்வாக இரண்டு கோடுகள் கிழித்திருக்கும். அவனுடைய இனக்குழுவின் அடையாளம். உயரமாக வாட்டசாட்டமாக இருந்த அவன் ஓர் ஆபத்து என்றால் என்னைத் தூக்கிக்கொண்டு 10 மைல் நடக்கக்கூடியவன். ஒரு தகப்பனைப்போல, ஒரு மகனைப்போல அவன் என்னருகே நின்று என்னைக் கவனித்தான்.

அந்த இரவு வீட்டிலே இருந்த அத்தனை போர்வைகளை போர்த்திய பிறகும் தூக்கி தூக்கிப் போட்டது. அடுத்த நாள் காலை மட்டும் காத்திருக்காமல் என்னைத் தனியாக விட்டுவிட்டு அவன் நடந்து சென்று மருத்துவரை அழைத்து வந்தான். அவர் ஊசி போட்டதும், மருந்து தந்ததும் அரை ஞாபகமாக என் நினைவில் இருந்தது. ஸாண்டிக்கு வெள்ளைக்கார மருந்தில் நம்பிக்கை கிடையாது. தன் கணக்குக்கு •பீவர் மரத்து பட்டையையும் அவித்து அந்த நீரைப் பருக்கினான். அது உடம்பில் தங்கவில்லை. பச்சை நாடாவாக வாந்தி வெளியே வந்து விழுந்தது. எப்பொழுது கண் விழித்தாலும் ஸாண்டி என் முன்னே என்னைப் பார்த்தபடி நின்றான்.

அப்படி ஒருமுறை கண் விழித்தபோது எனக்கு பயம் பிடித்துக்கொண்டது. எனக்கு ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணம். ஒரு பேப்பரில் என்னுடைய முகவரியை எழுதி அப்படி ஏதாவது ஆகிப்போனால் தந்தி கொடுப்பாயா என்று கேட்டேன். தலையை ஆட்டினான். எட்டு மைல் தூரமுள்ள அஞ்சல் நிலையத்துக்கு அவன் நடந்து போகவேண்டும். சிறிது நேரம் கழித்து அவன் என் காலைச் சுரண்டினான். ' மாஸ்ட, தந்தியடிக்க காசு' என்றான். எனக்கு கிலி பிடித்தது. அப்பொழுதே அடித்தாலும் அடித்துவிடுவான் போலப்பட்டது. என் பணப்பையில் இருந்த அவ்வளவு காசையும் அவன் கையில் வைத்தேன். அப்படியே நித்திரையாகிவிட்டேன்.

மூன்றாவது நாள் காலை கண் விழித்தபோதும் அவன் என் முன்னே சிரித்தபடி நின்றான். அவன் கையில் சூப் கோப்பை இருந்தது. அவனைப் பார்த்தபோது அவன் கன்னத்தில் தள்ளிக்கொண்டு நிற்கும் வடு தெரியவில்லை. சப்பையான மூக்கும் அகலமான முகமும் தெரியவில்லை. அவன் நெஞ்சிலே இருந்து தொடங்கும் வைரமான தொடைகளும் என் கண்ணுக்கு படவில்லை. ஒரு தேவதூதன்தான் தெரிந்தான். அவ்வளவு சூப்பையும் ஒரு சொட்டு விடாமல் நான் குடித்தேன். கொஞ்சம் புளிப்பும், ஆப்பிரிக்க உறைப்பும் கலந்து அது சுவையாக இருந்தது.

இரண்டு மூன்று நாட்கள் இப்படி ஓடின. நான் படுக்கையில் இருந்தபடி யன்னல் வழியாக பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு விநோதமான காட்சி தென்பட்டது. ஆறடி உயரமான ஸாண்டி ஒரு சிறு பெண்ணைத் துரத்திக்கொண்டு போனான். அவளுக்கு 12, 13 வயதுதான் இருக்கும். முதுகிலே ஒரு குழந்தையைக் கட்டியிருந்தாள். அது கழுத்து முறிந்ததுபோல ஒரு பக்கத்துக்கு தலையை மடித்து தூங்கிக்கொண்டிருந்தது. ஸாண்டியின் முகத்தில் கோபம் படபடத்தது. வீட்டின் எல்லை வரைக்கும் அவளைக் கலைத்து அவள் போய்விட்டாளா என்று நிச்சயப் படுத்திக்கொண்டு திரும்பினான். மத்தியானம் அவன் சாப்பாடு பரிமாறியபோது என்னப்பா விசயம் என்று விசாரித்தேன். அவன் சொன்ன விருத்தாந்தம் இதுதான்.

அந்தச் சிறுமியின் பெயர் கதீஜா. எங்கள் வீட்டிலிருந்து சிறிது தூரத்திலுள்ள ஒரு வீட்டில் அவள் வேலை செய்தாள். அவளுடைய எசமானும் எசமானியும் இளம் தம்பதியர். இருவருமே வேலைக்குப் போனார்கள். அவர்களுடைய குழந்தையத்தான் அவள் முதுகிலே கட்டியபடி திரிந்தாள். பிள்ளை பார்ப்பதோடு சமையல் வேலையையும் அவள் ஒருத்தியாகவே கவனித்தாளாம்.

'அது சரி, எதற்காக அவளை அந்த விரட்டு விரட்டினாய்?'

அவன் முகம் ஆத்திரத்தால் சிவந்திருக்கவேண்டும், ஆனால் கறுப்பு நிறம்தான் இன்னும் கூடியது. கோபத்தில் நாக்குளறத் தொடங்கியது. எங்கள் வீட்டு வளவில் எட்டுக்கு எட்டு வலையடித்து கூண்டு செய்து அதற்குள் இரண்டு காட்டு முயல்களை வளர்த்தோம். அதைப் பார்க்க வந்திருக்கிறாள் அவள் ஏதோ பாரதூரமான குற்றம் செய்ததுபோல முகத்தை வைத்துக்கொண்டான். 'நாங்கள் வளர்க்கும் முயல்களை அவள் என்ன வந்து பார்ப்பது. இது என்ன நியாயம்?'

பக்கத்து வீட்டு கணவனின் பெயர் ஹு•ரி. அவர் அணை கட்டும் கம்பனி ஒன்றில் வேலை பார்த்தார். இங்கிலாந்தில் படித்து திரும்பிய பொறியியலாளர். அவர் மனைவி அமினாட்டா காரியதரிசி படிப்பு படித்தவர். அவரும் கணவர் வேலை பார்க்கும் அதே கம்பனி மேலதிகாரியிடம் காரியதரிசியாக பணியாற்றினார். அமினாட்டா கொடிபோல

மெலிந்து இருப்பார். தலை மொட்டை போட்ட அழகி. எந்தக் கொடிய வெய்யில் மழை என்றாலும் நீண்ட கறுப்பு ஸ்டொக்கிங்க்ஸ் அணியாமல் அவர் வெளியே புறப்படுவதில்லை. நீளத்துக்கு லேஸ் கட்டிய பூட்ஸ் டக்டக் என்று சப்தம் எழுப்பி அவர் தூரத்தில் நடந்து வரும்போதே அறிவித்துவிடும்.

அவர்கள் மணமுடித்த காலத்திலிருந்து கதீஜா அங்கே வேலைசெய்தாள். '1000 முயல்கள்' என்ற கிராமத்துக்கு போய் அவளைப் பிடித்து வந்திருந்தார்கள். அதென்ன அப்படி ஒரு பெயர் என்று கேட்டேன். ஆப்பிரிக்க கிராமத்துப் பெயர்களுக்கு காரணம் கேட்கக்கூடாது என்றார்கள். முப்பத்து முக்கோடி தேவர்கள் என்பதுபோல இதுவும் ஒரு கணக்கு என்று நினைத்துக்கொண்டேன்.

என் மனைவியும் பிள்ளைகளும் விடுமுறையிலிருந்து திரும்பிய பிறகு நாங்கள் காட்டு முயல்களைப் பராமரிப்பதில் இன்னும் தீவிரமாக ஈடுபட்டோம். முயல்கள் அபாரமாகப் பெருகும் என்று படித்திருந்தேன். ஒரு வருடத்தில் மூன்று தரம் குட்டிபோடும். இரண்டு வருடத்தில் குட்டிக்குமேல் குட்டி போட்டு எண்ணிக்கை நூறுக்கு மேலே போய்விடும். ஆனால் இந்த முயல்களுக்கு அப்படியான ஒரு நோக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆண் அணுகும் போதெல்லாம் பெண் முயல் பைத்தியம் பிடித்ததுபோல முன்னங்காலால் அடித்து விரட்டும். அநேகமாக மார்ச் மாதத்தில் இது நடைபெறுவதால் லூயி கரோல்கூட தன்னுடைய 'அலிஸின் அற்புத உலகம்' புத்தகத்தில் தேநீரில் பைக்கடிகாரத்தை முங்கி எடுக்கும் முயலுக்கு 'மார்ச் ஹேர்' என்று பெயர் சூட்டியிருப்பார்.

காட்டு விலங்குகளைப் பற்றி தெரிந்த ஆப்பிரிக்க நண்பர் ஒருவர் வந்தபோது அவை ஏன் பெருகவில்லை என்று கேட்டேன். பெண் முயல், ஆணுடைய ஆசையை அதிகரிப்பதற்காக அப்படித்தான் அடித்து விரட்டும் என்றார். தன்னுடைய விலையை அது எப்பவும் கூட்டியபடியே இருக்குமாம். ஆப்பிரிக்க வயலட்டும், ஆப்பிரிக்க முயலும் ஒன்றுதான். திடீரென பெருக ஆரம்பிக்கும், திடீரென நிறுத்திக்கொள்ளும் என்றார்.

நாங்கள் முயல்களைப் பார்வையிடும் சமயங்களில் கதீஜா குழந்தையை முதுகில் கட்டிக்கொண்டு கண் படும் தூரத்தில் சுற்றிக்கொண்டே நிற்பாள். தேடக் கிடைக்காத திரவியம் அங்கே இருக்கிறது என்பதுபோல அவள் கண்கள் மினுங்கும். கையசைத்து அவளை எவ்வளவு கூப்பிட்டாலும் கிட்ட வரவே மாட்டாள். ஸாண்டி அவளை அப்படி அச்சுறுத்தி வைத்திருந்தான்.

எங்களுக்கு அயல் வீடு என்றால் அது அமினாட்டாவின் வீடுதான். இன்னும் சில வீடுகள் தூரமாக இருந்தன. அமினாட்டா எங்கள் வீட்டுக்கு ஏதாவது கடன் வாங்குவதற்காக அவ்வப்போது வருவாள். சில சமயம் கால் பாதங்களை மறைக்கும் நீண்ட அங்கி

அணிந்து, பெரிய கவடுகள் எடுத்து வைத்து, ஹ•ரி வருவார். ஏதாவது பழைய ஆங்கில மாத இதழ்கள் கேட்பார். ஆனால் ஒரு போதும் இருவரும் சேர்ந்து வந்ததில்லை. எந்தச் சமயத்திலும் அவர்கள் தங்கள் பிள்ளையை தூக்கி விளையாடியதையும் நான் காணவில்லை. அது கதீஜாவின் முதுகில் நிரந்திரமாக குடியிருந்தது. அவள் போகும் இடமெல்லாம் போனது.

ஆனால் காலம் எப்போதும் ஒரே மாதிரியாக மேடு பள்ளம் இல்லாமல் அலுப்பு தரும்படி இருப்பதில்லை, அல்லவா?

ஒரு சனிக்கிழமை பின்மதியம், மழை பெய்து ஓய்ந்திருந்த சமயம், ஹ•ரியும் அவர் மனைவியும் திடீரென்று ஒன்றாக வந்து கதவை தட்டினார்கள். ஏதோ விவகாரமாக இருக்கவேண்டும் என்று உள்மனது பதைத்தது. அமினாட்டா அன்றைக்கு உடம்பைவிட்டு சற்று விரிந்திருந்த ஆடம்பரமான உடையுடுத்தி எங்கோ புறப்பட்டதுபோல காட்சியளித்தார். நான் உள்ளே அழைத்ததும் இருவரும் வந்து அமர்ந்துகொண்டார்கள். அப்பொழுதுதான் பார்த்தேன், இவர்களுக்கு பின்னால் கதீஜாவும் நின்றாள். வழக்கம்போல குழந்தை அவள் முதுகிலே தூங்கியது. அவளும் உள்ளே வந்து, கால்களை மாறி மாறி தூக்கி வைத்து மனதுக்குள் ஓடும் ஒரு பாடலுக்கு ஆடிக்கொண்டிருந்தாள்.

மூன்றாம் ஆள் ஒட்டுக் கேட்கமுடியாத ரகஸ்யக் குரலில் அமினாட்டா ஏதோ ஹ•ரியிடம் சொன்னார். எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் கடிகாரத்தையே பார்த்தபடி இருந்தவர், ஒரு குறிப்பிட்ட நேரம் வந்ததும் 'உங்களுக்கு தெரியாமல் பல காரியங்கள் நடந்துவிடுகின்றன' என்றார். 'என்ன விசயம், சொல்லுங்கள்?' என்றேன்.

அவர் கதீஜாவை சுட்டிக்காட்டி 'இவள் இப்போது கர்ப்பம்' என்றார். நான் திகைத்துப்போய் அந்தச் சிறுபெண்ணைப் பார்த்தேன். அவள் ஒரு பொருட்டாகவே எங்களை மதிக்காமல் இரண்டு பக்கமும் தலையை வளைத்து ஆடிக்கொண்டிருந்தாள். அமினாட்டா மேலும் நல்லாய் பின்னால் சாய்ந்துகொண்டு ஸ்டொக்கிங்ஸ் அணிந்த தன்னுடைய நீண்ட கால்களை மடிக்காமல் நீளத்துக்கு நீட்டி உட்கார்ந்தார். அவருடைய ஆயத்தத்தைப் பார்த்தால் அன்று முழுக்க அங்கே தங்குவதற்கு தீர்மானித்து வந்தவர்போல இருந்தது.

'இதை ஏன் என்னிடம் சொல்கிறீர்கள்?'

'ஸாண்டிதான் இதற்கு காரணம். உங்களிடம் வழக்கை தீர்த்துவைக்கும்படி கேட்க வந்தோம்.'

இப்படித்தான் நான் ஆப்பிரிக்காவில் பஞ்சாயத்து தலைவர் உத்தியோகம் பார்க்கும்படியான

நிலைமை ஏற்பட்டது.

பஞ்சாயத்துக்கள் எப்படி இயங்குகின்றன என்பது எனக்கு தெரியாது. ஒரு பஞ்சாயத்தை நேரிலே பார்த்த அனுபவமும் இல்லை. 'எத்தனை தமிழ் சினிமா பார்த்திருக்கிறேன், எப்படியும் சமாளித்துவிடலாம். இது தினசரி கிடைக்கக்கூடிய வாய்ப்பா, என்ன?' என்று நினைத்தேன். வழக்கு என்ற வார்த்தை காதில் விழுந்ததும் போட்டது போட்டபடியே மனைவியும் வந்து எங்களுடன் கலந்து கொண்டார். நாலு அங்கத்தவர், ஒரு வாதி, ஒரு பிரதிவாதி.

ஸாண்டியை கூப்பிட்டதும் அவன் ஆடி அசைந்து இரண்டடி தூரத்தை மூன்று நிமிடத்தில் கடந்து வந்து சேர்ந்தான். எதற்கு இவர்கள் கூடியிருக்கிறார்கள், என்னை எதற்காக அழைக்கிறார்கள் என்ற ஒருவித குழப்பமோ, அச்சமோ, வியப்புக் குறியோ அவன் முகத்தில் கிடையாது.

கதீஜாவைக் காட்டி 'இந்தப் பெண் கர்ப்பம் என்று இவர்கள் கூறுகிறார்களே, உண்மையா? என்றேன்.

'எனக்கு எப்படி தெரியும்?' என்றான். என்னுடைய ஆரம்பக் கேள்வியே பிழை.

'நீதான் காரணம் என்று சொல்கிறார்களே?'

'அதுபற்றி நிச்சயமாக எதுவும் சொல்லமுடியாது.'

'நீ அவளுடன் எப்பவாவது பேசிப் பழகி இருக்கிறாயா?'

'இல்லை.'

'அவளுடன் உறவு கொண்டிருக்கிறாயா?'

'அப்படித்தான் நினைக்கிறேன்.'

'எத்தனை தடவை?' இது அவசியமில்லாத கேள்வி, ஆனால் மனித ஆர்வத்தை யார் தடுக்க முடியும்?

'கணக்கு வைக்கவில்லை. பிடித்த தடவை எல்லாம்.'

'அது என்ன பிடித்த தடவை எல்லாம்?'

'மாஸ்ட, இவள் முயல் பார்க்க அடிக்கடி வருவாள். நான் துரத்துவேன். தப்பி ஓடிவிடுவாள். சிலவேளை பிடிபடுவாள். பிடிபடும் சமயங்களில் மட்டுமே உறவுகொள்வேன்.'

'எங்கே உடலுறவு வைப்பீர்கள்?' இதுவும் தேவையில்லாதது.

'முயல் கூட்டுக்குள்தான்.'

ஹூ•ரியும் அமினாட்டாவும் வாய் திறக்கவில்லை. பூரண ஒத்துழைப்போடு விசாரணையை செவிமடுத்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் ஒரேயொரு கேள்வி, ஆனால் அதைக் கதீஜாவிடம் கேட்கவேண்டும். அவளுக்கும் இதில் பங்கிருக்கிறதல்லவா? கதீஜா முதுகில் கட்டிய குழந்தையுடன் நடுக்கூடத்தில் வந்து நின்றாள். ஒரு கன்கூரன் நடனம் ஆட அழைத்ததுபோல இரண்டு கைகளையும் பின்னால் நீட்டி ஆயத்தமாக அசைந்தபடி நின்றாள்.

'நீ உடலுறவுக்கு சம்மதம் கொடுத்தாயா?'

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. அமினாட்டா '1000 முயல்கள்' கிராமத்தில் மட்டுமே புழங்கும் ஒரு கொச்சை மொழியில் நீண்ட நேரம் எதோ கூறினார். அதற்கு கதீஜா பதில் சொன்னாள். அதுவும் மிக நீண்டதாக இருந்தது. முடிவில் என் பக்கம் திரும்பி அவள் சொன்னதை அமினாட்டா மொழிபெயர்த்தார்.

'நான் பெரிய ஓம் சொல்லவில்லை, சின்ன ஓம் தான் சொன்னேன்'

அது என்ன பெரிய ஓம், சின்ன ஓம், நான் மனதிற்குள் நினைத்துக்கொண்டேன். சின்ன ஓம் என்றால் மூன்று மாதத்தில் பிள்ளை பிறந்துவிடுமா? என் மனதுக்குள் நடந்ததை எப்படியோ அறிந்து என் மனைவி சொண்டுக்குள் சிரித்தாரே ஒழிய எனக்கு ஒருவித உதவியும் செய்யவில்லை.

கேள்விகள் எல்லாம் முடிந்துவிட்டன, இப்போது தீர்ப்பு சொல்லும் முறை. ஆனால் ஸாண்டி, தன் நெஞ்சு பொத்தான் சட்டையை ஒரு கையால் பிடித்து திருகியபடி, பேசத் தொடங்கினான். 'இவளுக்கு இங்கே என்ன வேலை? ஏன் சும்மா சும்மா முயல்களைப் பார்க்க வருகிறாள். அதுதான் துரத்தினேன். இவள் வேகமாக ஓடவில்லை. போகப்போக இவள் வேண்டுமென்றே என்னிடம் பிடிபட்டுக்கொண்டாள்' என்று குற்றம் சாட்டினான். நான் , மினாட்டாவையும் கடைசியில் கதீஜாவையும் பார்த்தேன்.
இறுதி முடிவுக்கான கட்டம் நெருங்கி வந்தது. ஆப்பிரிக்காவிலே இப்படியான குற்றத்துக்கு என்ன தண்டனை? தாலிகட்டச் சொல்வதா? இருக்காது. கணவனும் மனைவியும் என்

வாயிலே இருந்து உதிரப் போகும் வார்த்தைகளுக்காக காத்திருந்தார்கள்.

என் சங்கடத்தைப் புரிந்துகொண்டு வூ•ரியே அடி எடுத்துக் கொடுத்தார். 'கர்ப்பம் என்பதை நாங்கள் உறுதிப்படுத்திவிட்டோம். எங்களுக்கு உத்திரவாதம் வேண்டும். பிள்ளை பிறந்ததும் ஸாண்டி மாதாமாதம் பராமரிப்பு பணம் கட்டுவதாக.'

'அவ்வளவுதானா?'

'அவ்வளவுதான்.'

ஸாண்டி பெருத்த குரலில் புலம்பத் தொடங்கினான். 'இவளல்லவோ அத்துமீறி நுழைந்தவள். இவளுக்கல்லவோ தண்டனை கொடுக்கவேண்டும்.' அவனுடைய முகம் அவன் கத்தக் கத்த அகலமாகிக்கொண்டு போனது. மலேரியாக் காய்ச்சலில் நான் படுத்திருந்தபோது எந்த நேரம் கண்ணைத் திறந்தாலும் என் முன்னே தோன்றிய தேவதூத முகம் நினைவுக்கு வந்தது. ஆனால் நீதிபதிக்கு பாரபட்சம் கூடாது. நான் 'பிள்ளை பிறக்கும் தினத்திலிருந்து அவனுடைய சம்பளப் பணத்தில் 25 வீதம் அவன் தரவேண்டும்' என்றேன். அதுதான் தீர்ப்பு.

யாரோ தலையில் அடித்தது போல ஸாண்டி வாய் பிளந்து நின்றான். கணவனும் மனைவியும் திறந்தவாய் மூடவில்லை. ஒரு வேளை தீர்ப்பு பணம் மிக அதிகம் போல என்று நினைத்துக்கொண்டேன். ஸாண்டி மட்டும் தன் காதுகளை நம்பமுடியாமல் 'அவளுக்கு தண்டனை என்ன? அவளுக்கு தண்டனை என்ன?' என்று அரற்றிக்கொண்டே இருந்தான். ஆப்பிரிக்க முன்குடிகள் உடலுறவை குற்றத்துக்கு தண்டனையாக பயன்படுத்தியிருக்கலாம் என்ற விசயம் எனக்கு பல வருடங்கள் கழித்துதான் தெரிய வரும்.

அமினாட்டா ஒரு மகாராணியின் தோரணையுடன் முன்னே நடக்க, அவளுடைய மொட்டைத் தலை சூரிய ஒளிபட்டு பிரகாசித்தது. வூ•ரி மிகத் திருப்தியடைந்தவராக சற்று இடைவெளிவிட்டு நடந்தார். கதீஜா நடனமாடியபடியே அவர்களைப் பின்தொடர்ந்தாள்.

நாளடைவில் கதீஜாவுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இப்பொழுது அவள் தன்னுடைய குழந்தையை முதுகிலே கட்டிக்கொண்டு, எசமானியின்குழந்தையை தள்ளுவண்டியில் தள்ளிக்கொண்டு உலாத்தினாள். ஸாண்டி இல்லாத சமயம் பார்த்து முயல் கூண்டுப் பக்கம் காலடி எடுத்து வைப்பாள். வீட்டினுள்ளே என்ன தலைபோகிற காரியமாயிருந்தாலும் ஸாண்டி பாய்ந்து வந்து அவளை துரத்துவான். அவள் எப்படியோ தப்பி ஓடிவிடுவாள்.

ஒவ்வொரு மாதமும் முதலாம் தேதி அமினாட்டா வந்து ஸாண்டியின் சம்பளத்திலிருந்து பராமரிப்பு காசை பெற்றுப் போவாள். சம்பளத்துக்கு மூன்று நாள் இருக்கும்போதே ஸாண்டி மன்றாட ஆரம்பித்துவிடுவான். 'மாஸ்ட, இந்த மாதம் பராமரிப்பு காசு கொடுக்கவேண்டாம். எனக்கு பணக் கஷ்டம். அடுத்தமாதம் பார்க்கலாம்' என்பான். நானோ பஞ்சாயத்து தீர்ப்புக்கு மதிப்பு கொடுக்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தேன்.

எனக்கு மாற்றல் உத்தரவு கிடைத்தது. நாங்கள் புறப்படும் வேளை வந்தபோது ஸாண்டியை கூப்பிட்டு முயல்களை என்ன செய்யலாம் என்று கேட்டேன். அவன் காட்டுக்குள் விடலாம் என்றான். 'பாவம், செத்துப் போகுமே. அவைகளுக்கு தங்களை பாதுகாத்துக்கொள்ளத் தெரியாதே' என்றேன். அவன் சிரித்தான். 'மாஸ்ட, வேட்டையாடும் மிருகம் என்றால் அது புதிதாக வேட்டை கற்க முடியாது. பட்டினி கிடந்து இறந்துவிடும். முயல் அப்படியல்ல. அது பதுங்கும் மிருகம். பதுங்குவதற்கு பயிற்சி தேவை இல்லை' என்றான். முப்பத்தியொரு முயல்களை எண்ணினோம். அவற்றைப் பிடித்து காட்டுக்குள் விட்டு வந்தபோது முயல்கூடு வெறுமையாகிக் கிடந்தது.

முயல்கள் போன பிறகு, பெரிய ஓம் சொல்லாமல் சின்ன ஓம் சொன்ன பெண், கழுத்து ஆடும் குழந்தையை முதுகிலே கட்டிக்கொண்டு முயல்கள் பார்க்க வருவதை நிறுத்திவிட்டாள். ஸாண்டிக்கும் அவளை துரத்திச் செல்லவேண்டிய அவசியம் நேரவில்லை. 'அவளுக்கு என்ன தண்டனை' என்று அவன் கத்தக்கத்த நான் வழங்கிய தீர்ப்பு அவனுக்கு பிடிக்கவில்லை. அவனும் தன் ஊருக்கு புறப்படப்போவதாகச் சொன்னான். அவனுடைய ஊரின் பெயர் '3000 முயல்கள்' என்றுகூட இருக்கலாம். நான் முதன்முதல் பஞ்சாயத்து தலைவராக பதவியேற்று வழங்கிய தீர்ப்பு அதற்கு பிறகு நடைமுறைப் படுத்தப்பட்டதா என்ற தகவல் என்னிடம் இல்லை.

amuttu@gmail.com
பதிவுகள், அக்டோபர் 2008 இதழ் 106

4. லூசியா - அ.முத்துலிங்கம் -

ஆப்பிரிக்கப் பஞ்சாயத்துஅவன் ஆற்றிலே மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது அவனுடைய கறுப்பு அடிமைச் சிறுவன் ஓடோடி வந்தான். ஓடிவந்த வேகத்தில் அவனுடைய மூச்சு மேலும் கீழுமாக இழுத்தது. 'என்ன என்ன?' என்று கேட்டான் எசமான்.
'அந்தக் கிழவன் உங்களுடன் பேசவேண்டுமென்று எனக்கு சைகை மூலம் சொன்னான். அவனிடம் ஒரு கறுப்பு அட்டை புத்தகம் இருக்கிறது. அது பைபிள்தான்' என்றான் சிறுவன்.
'உனக்கு எப்படி அது பைபிள் என்பது தெரியும்?' அதற்கு அடிமை 'எனக்கு தெரியும் எசமான். என்னுடைய முந்தைய எசமானிடம் ஒரு பைபிள் இருந்தது. அதை நான் பார்த்திருக்கிறேன்' என்றான்.

அந்தச் சம்பவத்திற்கு பிறகு எசமானால் நேராக சிந்திக்க முடியவில்லை. மீன் பிடிப்பதிலும் நாட்டம் குறைந்துவிட்டது. தூண்டிலை எடுத்து சுற்றி வைத்துக்கொண்டு தன் இருப்பிடத்தை நோக்கி நகர்ந்தான். அவன் நெஞ்சு படபடவென்று அடித்தது. அடிமை சொல்வது உண்மையாக இருக்குமா? கூடையையும் மீன்களையும் துக்கிக்கொண்டு அடிமையும் அவன் பின்னால் போனான்.

அன்றிரவு எசமானுக்கு நித்திரை வரவில்லை. அடுத்தநாள் காலை எப்படியும் பைபிளை வாங்கிவிடவேண்டும் என்று முடிவு செய்தான். அவனிடம் இரண்டே இரண்டு புத்தகங்கள்தான் இருந்தன. கடந்த இரண்டு வருடங்களில் அவற்றை பத்து தடவை படித்து அவை மனப்பாடமாகிவிட்டன. கர்த்தரின் கருணையை எண்ணி வியந்தான். பத்தாயிரம் மைல்களுக்கப்பால் காட்டுமிராண்டிகள் வாழும் ஒரு தீவில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் அவனுக்கு ஒரு பைபிளை அனுப்பியிருக்கிறான்.
முழங்கால்களில் உட்கார்ந்து ஆண்டவனைப் பிரார்த்தித்தான். கப்பல் உடைந்ததோடு அதிலிருந்த பொருட்கள் எல்லாம் மூழ்கிவிட்டன. அவனிடம் எஞ்சியது இரண்டு வெள்ளிக்காசுகள், ஒரு தங்கக் காசு, கைக்கத்தி, வாள், சப்பாத்து, அவன் அணிந்திருந்த உடை, இரண்டு புத்தகங்கள். அவனுடைய அடிமை நேற்றிரவு பின்னிய அழகான தொப்பியும் இருக்கிறது. இவை எல்லாவற்றையும் கொடுத்தால்கூட பரவாயில்லை, எப்படியும் பைபிளை வாங்கிவிடவேண்டும்.

பொழுது புலர்ந்ததும் கிழவனைத் தேடி புறப்பட்டார்கள். அந்த அதிகாலையில் அவர்களைப் பார்த்ததில் கிழவன் அதிசயப்படவில்லை. தினமும் அது நடப்பது போலவே முகத்தை வைத்திருந்தான். கிழிந்த ஆடையை உடுத்து குறுக்காலே ஒரு துண்டைக் கட்டியிருந்தான். எசமான் உயரமாக நின்றான். அடிமை பேரத்தை சைகையினால் ஆரம்பித்தான். முதலில் ஒரு வெள்ளிக்காசுக்கு கேட்டுப்பார்ப்போம் என எசமான் நினைத்தான். ஆனால் கிழவன் அடிமைச் சிறுவன் பின்னிய தொப்பியை எடுத்துக்கொண்டு பைபிளை தரச் சம்மதித்தான். தொப்பியை எடுத்து தலையில் மாட்டி தன் சிவந்த

பற்களைக் காட்டிச் சிரித்தான். எசமானும் அடிமையும் திரும்பிப் பாராமல் பைபிளை தூக்கிக்கொண்டு தங்கள் இருப்பிடத்துக்கு போய்ச் சேர்ந்தார்கள்.

பைபிளைத் திறந்து பார்த்தான் எசமான். அவன் கண்கள் பனித்தபடி இருந்ததால் அவனால் எழுத்துக்களை உடனே வாசிக்க முடியவில்லை. திறந்த பக்கத்தில் அவனுடைய கைவிரல்கள் தொட்ட இடத்தை படிக்கத் தொடங்கினான். 16 வது அதிகாரம். புனிதபோலிடம் சிறையதிகாரி தன்னை கடைத்தேற்றுவதற்கு என்ன வழி என்று கேட்கிறான். அதற்கு புனிதபோல் 'நீ யேசுவிடம் விசுவாசமாக ஆஇரு. அவர் உன்னை ரட்சிப்பார்' என்று கூறுகிறான். தன்னுடைய நிலமைக்கும் அது பொருந்தியிருந்ததைக் கண்டு எசமான் மனம் நெகிழ்ந்து உருகினான்.

1611 ல் இங்கிலாந்தின் ஜேம்ஸ் அரசனால் பதிப்பிக்கப்பட்ட பைபிள் அது. அவன் அதைப்பற்றி கேள்விப்பட்டிருந்தாலும் கண்களால் பார்ப்பது இதுவே முதல் தடவை. விலைமதிக்கமுடிஆயாத இந்த பைபிள் ஒரு காட்டுவாசியின் கையில் எப்படி சிக்கியது. கிழவனே அதற்கு பதில் கூறினான். போர்த்துக்கீயர்கள் சிலோனை ஆண்ட காலத்தில் ஒரு போர்த்துக்கீயன் அதனைக் கிழவனுக்கு கொடுத்தான். போர்த்துக்கீயனுக்கு பைபிள் எழுதியிருந்த மொழி படிக்கத் தெரியாது. கிழவன் அதை விற்பதற்கு இத்தனை நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

ரோபர்ட் நொக்ஸ் என்ற ஆங்கிலேயனும் அவனுடைய தகப்பனும் இன்னும் 14 மாலுமிகளும் ஆன் என்ற கப்பலில் ஆசிலோனை அணுகியபோது பெரும்புயலில் அது சிக்கிக்கொண்டது. பாய்மரத்தை வெட்டி புயலிலிருந்து தப்பி மூதூர் கரையோரத்தில் ஒதுங்கிக்கொண்டார்கள். இன்னொரு பாய்மரம் கட்டுவதற்கு அந்தப் பகுதி மக்கள் ஒத்துழைத்தார்கள். அப்பொழுது கண்டி அரசன் இரண்டாம் ராஜசிங்கனுடைய ஆட்சி நடந்துகொண்டிருந்தது. அவன் என்ன நினைத்தானோ அவர்களைச் சிறைபிடித்து கண்டிக்கு அழைத்துவர உத்தரவிட்டான். அவர்களை பல குழுக்களாகப் பிரித்து காவலில் வைத்தான். கூரை போட்ட, சுவர்கள் இல்லாத சிறைகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டன. மலைகளும், காடுகளும் சூழ்ந்த பிரதேசம். ஒடுக்கமான பாதைகள். எல்லா எல்லைகளிலும் காவல் இ\ருந்தது. அந்த ஊர் மக்களே அவர்களுடைய உணவுக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பு. வேறு தேவைகளுக்கு அவர்களாகவே உழைக்கவேண்டும் என்பது மன்னனின் கட்டளை.

கண்டி அரசன் அவர்களைச் சிறை பிடித்த வருடம் 1659. அப்பொழுது ரோபர்ட் நொக்சுக்கு 18 வயது. கப்பல் உடைந்து அவர்கள் தீவிலே ஒதுங்கிய நாளிலிருந்து ரோபர்ட்டின் தகப்பனுக்கு மலேரியாக் காய்ச்சல் கண்டது. மலேரியாவுக்கு என்ன மருந்து கொடுக்கவேண்டும் என்பது அவர்களுக்கு தெரியவில்லை. அவர் நாளாந்தம் மெலிந்துகொண்டே வந்தார். உடம்புத் தோல் வற்றி எலும்புகள் ஒவ்வொன்றும்

தனித்தனியாக தெரிந்தன. ரோபர்ட்டுக்கு தகப்பனை பார்க்க பரிதாபமாகவிஆருந்தது. அவர் கப்பலின் தலைவனாக பல வருடங்கள் பணியாற்றியவர். சிறப்பான நிர்வாகி. அவர் முடிவு இந்த காட்டுவாசிகளின் நடுவே என்று கர்த்தர் எழுதிவைத்ததை நினைத்து வேதனைப்பட்டான்.

ஒருநாள் ரோபர்ட்டை அவர் படுத்திருந்த புல்லுப்பாய்க்கு கிட்ட அழைத்தார். 'என்னுடைய உடம்பிலிஆருந்து உயிர் மெள்ள மெள்ள பிரிகிறதை என்னால் உணரக்கூடியதாக ஆருக்கிறது. மரணம் இவ்வளவு இன்பமானதாயிருக்கும் என்பதை நான் அறியவில்லை. நீ எப்படியும் தப்பித்து போய்விடு. உன் சகவாசத்தில் கவனமாயிரு. கடவுளை தோத்திரம் செய்ய மறக்காதே' என்றார்.

அன்றிரவு அவர் இறந்துபோனார். ரோபர்ட்டுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவனுக்கு ஆதரவாக இருந்தது கறுப்புச் சிறுவன் மட்டுமே. ஊர்க்காரர்கள் உதவ மறுத்துவிட்டார்கள். ஒரு கயிற்றை மாத்திரம் தூக்கி எறிந்தார்கள். அதை வைத்து என்ன செய்வதென்று தெரியவில்லை. தகப்பனுடைய கழுத்திலே கயிற்றைக் கட்டி ஒரு செத்த நாயை இழுப்பது போல இழுத்து காட்டுக்குள் கொண்டுபோனார்கள். அங்கே குழி வெட்டுவதற்குகூட அவர்களிடம் ஆயுதம் எதுவும் இல்லை. ரோபர்ட்டும் சிறுவனும் கையினாலேயே குழி பறித்து அதிலே தகப்பனை புதைத்து, மரத்திலே சிலுவைக் குறி நட்டு, சமாதியின் மேலே ஒரு கல்லையும் வைத்தார்கள். அந்த இடத்தின் பெயர் பண்டாரகொஸ்வத்த என்று சொன்னார்கள்.

தகப்பன் இறந்த பிறகு அவன் கையிலே இருந்த இஆரண்டு புத்தகங்களையும் இரவு பகலாகப் படித்தான். எஞ்சிய நேரத்தில் தொப்பி பின்னினான். அதை அடிமை விற்று வருவான். மிக எளிமையான வாழ்க்கை. அப்பொழுதுதான் கர்த்தரின் கிருபையால் பைபிள் கிடைத்தது. தினமும் பைபிள் படிக்கத் தொடங்கினான். அவனுடைய அப்பாவின் கடைசிநேர அறிவுரையும் நினைவுக்கு வந்தது. எப்படியும் இந்த நாட்டைவிட்டு தப்பிவிடவேண்டும் என்ற வைராக்கியம் பிறந்தது. அப்படி தப்பிச் செல்லவேண்டுமென்றால் அந்த நாட்டு மக்களுடைய மொழியை புரியவேண்டும். மிருகம், பறவை, மரத்தைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தான்.

ரோபர்ட் சிங்களம் கொஞ்சம் கொஞ்சமாக பேச ஆரம்பித்தான். அங்கே வரும் வியாபாரிகளிடம் கண்டியிலிருந்து பாதைகள் எப்படி எப்படி பிளந்து போகின்றன. அவை எங்கே போய் முடிகின்றன. எங்கே எங்கே காவல்கள் உண்டு என்று கேட்டு ஞாபகத்தில் வைத்துக்கொண்டான். கரையோரங்களின் டச்சுக்காரர்களின் ஆட்சி நடந்தது. அங்கே சனங்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை அறியவும் ஆவல். வியாபாரிகள் சந்தேகப்படும்போது கேள்விகளை நிறுத்தினான்.

ஒருநாள் அவன் எதிர்பாராத சம்பம் ஒன்று நடந்தது. நடு வீதியிலே ஒருத்தன் இஆரண்டு கைகளையும் உயரப் பிடித்தபடி ஒரு நீலநிற துணிப் பொட்டலத்தை தூக்கிப் போனான். வீதியிலே நின்ற போன சனங்கள் எல்லாம் தலைகுனிந்து நிலத்தை முத்தமிட்டார்கள். ரோபர்ட் இந்த அதிசயத்தை பார்த்தபடி நின்றான். அப்பொழுது பின்னால் வந்த ஒருவன் அவன் முதுகில் பளீர் பளீர் என்று பிரம்பினால் அடித்தான். அவனுடைய வலி மாறுமுன்னரே அது என்னவென்று விசாரித்தான். அது அரசரின் உடைகள் என்றும் அதை ஒருவன் தோய்ப்பதற்கு ஆற்றுக்கு எடுத்துப்போகிறான் என்றும் சொன்னார்கள். மரியாதை செய்யாதவர்களுக்கு வழக்கமாக மரணதண்டனை கிடைக்கும். அவன் புதிய ஆள் என்றபடியால் பிரம்படியோடு தப்பிவிட்டான் என்று அறிந்தான்.

ரோபர்ட்டுக்கு அப்பொழுது ஒரு விசயம் பிடிபட்டது. மொழியையும் மிருகங்களையும் பறவைகளையும் மட்டும் அறிந்தால் போதாது. மக்களுடைய பழக்க வழக்கங்களும் தெரிந்திருக்கவேண்டும். அவற்றையும் படித்தான். ஆடுகளும் பன்றிகளும் வளர்க்கத் தொடங்கினான். அதில் அவனுக்கு நல்ல லாபம் கிடைத்தது. போதிய பணம் சேர்த்தால்தான் அவன் தப்பலாம். அந்த நாட்டு மக்கள் முழுச்சோம்பேறிகளாக இருந்தார்கள். ஆற்றிலே நிறைய மீன்கள் ஓடின, அவர்களுக்கு பிடிக்கத் தெரியவில்லை. ஒரு மானை வேட்டையாடுவதற்கு முழுக்கிராமமும் படையெடுத்து புறப்பட்டது. யானை பிடிப்பதில் மாத்திரம் அவர்களை வெல்லமுடியாது. அவ்வளவு திறமைசாலிகளாகவிஆருந்தார்கள்.

அவனுடன் கப்பலில் வந்தவர்கள் எல்லாரும் ஒவ்வொருவராக மணமுடித்து அங்கேயே வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்கள். கறுப்பு அடிமைகூட விடுதலையாகி மணமுடித்துவிட்டான். ரோபர்ட்டுடன் கடைசிவரை விசுவாசமாக இருந்தது ஜோனும், ஸ்டீபனும்தான். அவர்கள் மூவரும் சில வருடங்களுக்கு முன்னர் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். மணம் முடித்து அங்கேயே வாழ்நாளை முடித்துக்கொள்ள அவர்களுக்கு சம்மதமில்லை. ஆனால் இளமை போய்க்கொண்டிருந்தது. இதற்கு என்ன வழியென்று யோசித்தபின் அந்த முடிவை எடுத்தார்கள்.

கண்டி ராச்சியத்தில் இரண்டு மனைவிகளை ஓர் ஆண்மகன் வைத்திருப்பது அரிது. ஆனால் பெண்கள் இரண்டு மூன்று கணவன்மாரை வைத்திருந்தார்கள். பிள்ளைக்கு யார் தன்னுடைய அப்பா என்று தெரியாது. மனைவியும் அதுபற்றி கவலைப்படமாட்டாள். அவர்கள் வாழ்ந்த ஊரிலே ஒரு மணவிலக்கான பெண் இருந்தாள். அவள் பெயர் சிந்திரிக்காமல். ஆண் செய்யும் அவ்வளவு காரியத்தையும் அவளும் செய்வாள். அவ்வளவு திடகாத்திரமான பெண். மூன்றுபேரும் அவளை மனைவியாக வரித்தார்கள். அவளும் உடன்பட்டாள். எப்போது வேண்டுமானாலும் யாரும் வந்துபோகலாம். ஒருவரும் கேள்வி கேட்கக்கூடாது என்பதுதான் நிபந்தனை.

அவர்களுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. லூசியா என்று பெயர். கறுப்பு தலைமயிர், நீலக் கண்களுடன் குழந்தை மிகவும் அழகாக இருந்தது. ஆனால் அதனுடைய நிறம் இன்னும் அபூர்வமானது. கறுப்பாக இல்லாமல் வெள்ளையாகவும் இல்லாமல் பொன் தூவிவிட்டது போன்ற சருமம். மூன்று பேரையும் லூசியா அப்பா என்றே அழைத்தாள். ரோபர்ட் அவளுக்கு ரகஸ்யமாக ஆங்கிலம் கற்றுக்கொடுத்தான். நாளாவட்டத்தில் அவள் பைபிளை வாசிக்கவும் துவங்கினாள். ரோபர்ட்டுக்கு லூசியாவைப் பிரிந்து கணமும் இருக்கமுடியாது. லூசியாவுக்கும் அவன்மேல் அதிகப் பிரியம்.

அந்த மூன்று கணவன்மாருக்கும் சிந்திரிக்மல்லை பிடித்ததுபோல அவள் பெயரும் பிடித்திருந்தது. அது ஒரு பூவின் பெயர். அபூர்வமானது அத்தோடு அழகானது. உபயோகமான மலர்கூட. நேரம் என்னவென்று பார்ப்பதற்காக அந்தப் பூ மரத்தை எல்லோரும் தங்கள் வாசல்களில் வளர்த்தார்கள். நடு மத்தியானம் கழிந்து சரியாக 10 நாழிகையானதும் அந்தப்பூ பூக்கும். அடுத்தநாள் காலையில் வாடிவிடும்.

சிந்திரிக்மல் தன் பெயருக்கு ஏற்றபடி வீட்டு வேலைகளை ஒழுங்குடனும் முறைதவறாமலும் செய்தாள். அதிகாலையில் எழுந்துபோனால் தலையில் விறகு கட்டும் இடுப்பில் மண்பானையில் தண்ணீருமாக திரும்புவாள். அவள் கணவன்மார்களிடம் அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்டதில்லை. என்னவென்ன சமையலுக்கு தேவையோ அதையெல்லாம் அவளே சம்பாதித்தாள்.

ஒருநாள் சிந்திரிக்காமல் குரக்கன் மாவைக் குழைத்து உருட்டி புட்டு செய்தாள். மண்பானையின் வாயில் துணிகட்டி அதற்குமேல் வைத்து அவித்த புட்டில் அவளே காட்டிலே பறித்து வந்த தேனைக் குழைத்து லூசியாவுக்கு ஊட்டினாள். தேனில் விட்டுக் குழைக்கும்போது அதில் தேனீக்களும் இருந்தன. எதற்காக அப்படிச் செய்கிறாய் என்று ரோபர்ட் பதறிப்போய் கேட்டான். அவள் குலுங்கி சிரித்தாள். 'தேனீக்களுடன் தேனை சாப்பிட்டல்தான் இனிமையான குரலுடன் வார்த்தைகள் கூர்மையாக வரும். இதுகூடத் தெரியாதா?' என்றாள். அவனுக்கு தெரியவில்லை. 'அப்படியா? நீயும் தேனீக்களை சாப்பிடுவியா?' 'நிறைய. என் வார்த்தைகள் மட்டுமல்ல. என் பற்களும் கூர்மையானவை' என்றபடி அவள் தன் சிவந்த பற்களைக் காட்டியபடி அவனை அணுகினாள். ஒரு கணம் ரோபர்ட் தகப்பனுக்கு கொடுத்த சத்தியத்தை மறந்தான். இங்கிலாந்துக்கு திரும்பி போகும் எண்ணத்தை துறந்துவிட்டு அவளுடன் அங்கேயே தங்கிவிடலாம் என்றும் தோன்றியது. அது நடந்து பல வருடங்கள் ஆகிவிட்டன.

அவர்களுடைய வாழ்க்கை அமைதியாகப் போய்க் கொண்டிருந்தபோது மன்னருடைய கொடுங்கோலைப் பற்றிய செய்திகள் அடிக்கடி வந்தன. ஒருநாள் அரசன் பரிவாரத்துடன் தன்னுடைய தடாகத்தில் நீச்சலுக்கு போனான். அவன் திறமையான

நீச்சல்காரன். ஆனால் அன்று நீந்தும்போது ஒரு பரிசோதனைக்காக நீரில் மூழ்குவதுபோல நடித்தான். பரிவாரத்தில் ஒருவர்கூட அசையவில்லை. இரண்டு ஆளைஞர்கள் பாய்ந்துபோய் நீந்தி அரசரைக் காப்பாற்றினார்கள். அடுத்த நாள் சபைகூடியதும் அரசன் தன்னைக்காப்பாற்றிய இளைஞர்கள் யார் என்று வினவினான். இரண்டு வாலிபர்களும் எண்ணெய்போட்டு சீவி இழுத்த தலைமுடியுடன் முன்னே வந்து அரசருடைய பரிசை வாங்குவதற்காக நின்றார்கள். அவர்களை யானையின் காலில் இடறவைக்கச் சொல்லி அரசன் தண்டனை விதித்தான். நாட்டை ஆளும் ஓர் அரசனை அவர்கள் எப்படி தொடலாம். இது மற்றவர்களுக்கும் ஒரு படிப்பினை என்றான்.

அவர்கள் கேள்விப்பட்ட இன்னொரு கதையும் மனதை நடுங்கவைத்தது. அரசனிடம் ஓர் ஆங்கிலேயர் ஏவல் புரிந்தார். மன்னருக்கு வெள்ளைத்தோல் பணியாளர்களில் விருப்பம் அதிகம். அங்கே உத்தியோகத்துக்கு போனவர்கள் ஒருவராவது உயிருடன் திரும்ப வந்ததில்லை. இது நாடறிந்த ரகஸ்யம். ஆனாலும் பேராசை யாரையும் தடுப்பதில்லை. அரசனுடைய தாராளமான பரிசுகளுக்காக துணிந்து புதியவர்கள் வருவார்கள். ஒருநாள் வெள்ளைக்காரன் அரசனின் பீங்கான் கோப்பையை போட்டு உடைத்துவிட்டான். அதை அரசன் மன்னித்திருப்பான். ஆனால் அவன் பயந்து ஓடி புத்தகுரு வீட்டில் ஒளித்தது மன்னனுக்கு பிடிக்கவில்லை. அவனை கழுவில் ஏற்றிக் கொல்லவேண்டும் என்பது தண்டனை. கழுவேற்றப் போகும்போது பின்னால் அரண்மனை நாய்களும் ஓடும். ஆங்கிலேயனைக் கொண்டுபோனபோது வழியிலேயே நாய்கள் அவன் பின்னாலே பாய்ந்து பிருட்டத்தின் ஒரு பகுதியை தின்றுவிட்டன. அவனைக் கழுவிலே ஏற்றியபோது அவன் பாதி செத்துவிட்டான் என்றார்கள்.

இவற்றை எல்லாம் கேட்டபோது ஸ்டீவனும் ரோபர்ட்டும் தப்பி ஓடுவதற்கான முயற்சியை துரிதப்படுத்த நினைத்தார்கள். ஜோன் மாத்திரம் தான் அந்த எண்ணத்தை மறந்துவிட்டதாகக் கூறினான். லூசியாவையும் மனைவியையும் விட்டுப் போக அவனுக்கு விருப்பமில்லை. அத்தோடு அவனுடைய வியாபாரமும் நல்ல லாபம் ஈட்டியது. இருப்பதை விட்டுவிட்டு இல்லாத ஒன்றைத்தேடிப் போக அவன் மறுத்துவிட்டான்.

எதிர்பாராமல் திசாவ வெண்குதிரையில் ஒருநாள் ஆரோகணித்து வந்தான். அந்தக் கிராமம் அவனுடைய அதிகாரத்துக்கு கட்டுப்பட்டது. அரசனுக்கு யானை பிடிப்பவர்கள் வேண்டுமென்று அந்த தொழிலில் திறமையானவர்களை தேர்ந்தெடுத்துக்கொண்டு காட்டுக்கு சென்றான். அவர்களுடன் ஒரு பெண்யானையும் போனது. அவனுடைய கம்பீரத்தைப் பார்க்க வீதிக்கு ஓடிவந்த இஆரண்டு சிறுவர்களை அவன் அரண்மனை சேவகத்துக்கு பிடித்துப் போனான். தலைவாரி இழுத்து நீண்ட பின்னல்கள் கட்டியிருந்த அந்தச் சிறுவர்களை இழுத்துக்கொண்டு போனபோது தாய்மார் கண்ணீர்

விட்டனர். அந்த பிள்ளைகள் இனிமேல் என்றென்றைக்கும் திரும்பி வரமாட்டார்கள் என்பது அவர்களுக்கு தெரியும்.

அரசனிடமிருந்து செய்தி வந்த அன்று ரோபர்ட்டும் ஸ்டீபனும் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினார்கள். அரசன் முடிதுறக்கவேண்டும் என்று சனங்கள் கிளர்ச்சி செய்தார்கள். அரசன் முந்திக்கொண்டு முடிக்குரிய தன்னுடைய பதினைந்து வயது மகனை நஞ்சு வைத்துக் கொன்றான். தனக்கு ஒரு ஆங்கில ஆலோசகன் வேண்டுமென்று தீர்மானித்து ரோபர்ட்டுக்கு அரசன் செய்திக்குமேல் செய்தி அனுப்பினான். ரோபர்ட் பெரும் பொருளீட்டி செல்வந்தனாகியிஆருந்தான். நல்லாய் சிங்களம் பேசினான். அவனுக்கு பல சலுகைகள் தருவதாக அரசன் ஆசை காட்டினான். மறுத்தால் ராசக்குற்றம் ஆகிவிடும். ஒரே வழி அன்றிரவு எப்படியும் தப்பி ஓடிவிடுவதுதான்.

தன்னுடைய தகப்பனின் சமாதியில் பிரார்த்தனை செய்து ரோபர்ட் விடைபெற ஆயத்தமானான். சிந்திரிக்காமல் அவனிடம் 'லூசியா உங்களுடைய மகள். அது உங்களுக்கு தெரியுமா? இந்த உண்மையை கடைசி நாளன்று நான் மறைக்க விரும்பவில்லை' என்றாள். 'எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறாய்?' 'பிள்ளை உண்டாகும்போது ஒரு தாய்க்கு தெரியும்' என்றாள். 'நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவள் என்னுடைய மகள்தான்' என்றான்.

ரோபர்ட் லூசியாவை தனிமையில் அழைத்துப் பேசினான். 'என் கண்ணே! நான் உன்னை உயிருக்குயிராக நேசிக்கிறேன். உனக்கும் அது தெரியும். எப்படியும் உன்னை இங்கிலாந்துக்கு அழைத்துப்போக திரும்பி வருவேன். நீ எனக்காக் காத்திரு. இரண்டு விசயங்களை மறக்கக்கூடாது. உன் கண்களை நிமிர்த்தி யாரையும் பார்க்காதே. அந்த நீலம் உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும். இரண்டாவது, எந்தச் சந்தர்ப்பத்திலும் உனக்கு ஆங்கிலம் தெரியும் என்பதை சொல்லாதே.' லூசியா அவனைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து 'நிச்சயம் வருவீர்களா?' என்றாள்.

'நிச்சயமாக. உலகம் முழுவதும் டச்சுக்காரர்கள் தோற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் வெல்கிறார்கள். நான் கிழக்கிந்திய கம்பனியில் சேருவேன், அவர்களுடன் திரும்ப உனக்காக வருவேன், கண்ணே' என்றான்.

ஸ்டீபனும் ரோபர்ட்டும் விடை பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் முதுகிலே காவிய மூட்டைகளில் அத்தியாவசியமான பொருட்கள் மாத்திரம் இருந்தன. அவற்றுள் பைபிளும் ஒன்று. வாசலிலே சிந்திரிக்காமல் பூத்து சரியாக ஐந்து நாழிகை கடந்த சமயத்தில் அவர்கள் புறப்பட்டார்கள். அது 1679ம் ஆண்டு மே மாதம். அப்போது லூசியாவுக்கு வயது

14. ரோபர்ட் டுக்கு வயது 37. அவன் சரியாக 19 வருடங்களை சிலோன் மன்னன் இரண்டாம் ராஜசிங்கன் ஆட்சியிலும், 18 வருடங்களை இங்கிலாந்து அரசன் இரண்டாம் சார்ல்ஸ் மன்னன் ஆட்சியிலும் அதுவரை கழித்திருந்தான்.

லூசியாவுக்கு எப்பொழுதும் ரோபர்ட்டின் நினைவாகவே இருந்தது. அது அவளுக்கே ஆச்சரியம். ரோபர்ட்டுடைய பெயரை தல்லிபத் இலையில் எழுதி எழுதிப் பார்ப்பாள். பிறகு கிழித்து எறிந்துவிடுவாள். அவன் எப்பொழுது திரும்பி வருவான் என்று நாட்களை எண்ண ஆரம்பித்தாள். பண்டாரகொஸ்வத்தவை தாண்டியவுடன் இங்கிலாந்து வந்துவிடுமென்று அவள் நினைத்தாள். அது பத்தாயிரம் மைல்கள் தள்ளியிஆருக்கும் ஒரு நாடு என்பது அவளுக்கு தெரியாது.

1680 மார்ச் 28ம் தேதி புதுவருடம் பிறந்தபோது முதல் தவறு ஏற்பட்டது. அன்று மன்னரின் பீரங்கி வெடிக்கும் சத்தம் அவர்களுக்கு கேட்கும். கழுத்தை முறித்து அண்ணாந்து பார்க்க வைக்கும் கம்புகளில் வண்ண வண்ண கொடிகள் பறக்கும். அரசர் தலை முழுகியதை பறை அறிவித்ததும் குடிகளும் முழுகி புத்தாடை புனைவார்கள். அதன் பிறகு கொண்டாட்டம் ஆரம்பமாகும். பரிசுகள் கிடைக்கும். திசாவ பரிவாரத்துடன் உலா போனபோது லூசியா ஆர்வம் தாங்காமல் எட்டிப் பார்த்தது மிகப் பெரிய தவறு. அவளுடைய நீலக் கண்கள் ஜொலித்தன. அவளையும் இன்னும் சிலரையும் திசாவ பிடித்து அரண்மனைக்கு புது வருடப் பரிசாக அனுப்பிவைத்தார்.

அரண்மனை சமையலறையில் அவளுக்கு பணி. அவளுடன் சேர்த்து அங்கே 12 இளம்பெண்கள் வேலைசெய்தார்கள், அவர்கள் எல்லொருமே அழகாக இருந்தார்கள். அழகான பெண்களை பிடித்து அனுப்பச் சொல்லி திசாவமாருக்கு கட்டளை இருந்தது. இதை அவள் பின்னர்தான் தெரிந்துகொண்டாள். அவளுடைய வேலை சமைத்த உணவை தட்டங்களில் ஏந்தி அரசருக்கு எடுத்துப்போவது. அவற்றை வெள்ளைத் துணி போட்டு மூடியிருப்பார்கள். அவளுடைய வாயும் மூக்கும் கறுப்புத் துணியால் கட்டப்பட்டிருக்கும். முப்பது தட்டங்கள் வரிசையாகப் போகும். அவர்களுடைய மூச்சுக் காற்று மன்னரின் உணவில் படாமல் எச்சரிக்கையாக இருப்பார்கள். அவளுடைய வாழ்க்கை படாடோபமாகவும் சந்தோசமாகவும் போய்க் கொண்டிருந்தது. அவள் இரண்டாவது தவறைச் செய்யும்வரைக்கும்.

ஓர் ஆங்கிலேயன் ஒருநாள் அரசனுடன் உணவருந்த வந்தான். அவன் பேசிய ஆங்கிலத்தை ஒருவன் மொழிபெயர்த்தான். இவள் அரசரின் வலது பக்கம் நின்றாள். மொழிபெயர்ப்பாளன் இடதுபக்கம் நின்றான். முப்பது பதார்த்தங்களில் அவ்வப்போது ஒன்றை அரசர் ருசி பார்ப்பார். பிறகு கையை துடைப்பதற்கு அவளுடைய தொடையையோ, பிருட்டத்தையோ, கால்கள் சந்திக்கும்

பிரதேசத்தையோ பயன்படுத்துவார். சிலவேளை அடுத்த
உணவை அவர் தொடுவதற்கு தீர்மானிக்கும்வரை அவர் கைகள் அங்கேயே இருக்கும். அந்த மொழிபெயர்ப்பாளன் அன்று என்ன கவனத்தில்
இருந்தானோ அந்த ஆங்கிலேயன் சொன்னதை தப்புத் தப்பாக மொழிபெயர்த்தான். இவள் கேட்டுக்கொண்டு மௌனமாக இருந்தாள்.

அன்று சமையலறையில் அவளுடன் வேலைசெய்த உற்ற சிநேகிதி ஒருத்திக்கு இதைச் சொன்னாள். அரசருக்கு ஒவ்வொரு அறையிலும்,
ஒவ்வொரு வீதியிலும், ஒவ்வொரு கிராமத்திலும் ஒற்றர்கள் இருந்தார்கள். இவள் சொன்னது அன்று இரவே அரசர் காதுகளுக்கு
எட்டிவிட்டது. சேவகன் வந்து அரசர் அழைப்பதாகக் கூறியதும் லூசியா நடுங்கினாள். இனிமேல் தான் திரும்பி வரப்போவதில்லை என்பது
தெரிந்தது. தெய்வத்திடம் மன்றாடினாள். கழுமரத்தில் ஏற்றவேண்டாம். யானை மிதித்து கொல்லவேண்டாம். மலை உச்சியிலிருந்து என்னை தள்ளிக்
கொல்லட்டும், ஆண்டவனே என்று பிரார்த்தித்தாள்.

ஆனால் மன்னர் சிரித்தபடியிஆருந்தார். லூசியா கைகளைக் குவித்து, நெற்றியின் ஓரத்தில் வைத்து தலையை சாய்த்து, அரசகுலப் பெண்கள்
செய்வதுபோல வணக்கம் சொன்னாள். உனக்கு ஆங்கிலம் தெரியுமா, பெண்ணே? 'ஆம், மாட்சிமை தங்கிய அரசரே' என்றாள். அவள் வழக்கம்போல
கறுப்பு துணியினால் தன் வாயையும் மூக்கையும் கட்டவில்லை. அவளுடைய தலைமயிர் ஒழுங்காக வாரப்பட்டு மடித்து கட்டப்பட்டு தலைக்கு
மேலேயிருந்தது. மெல்லிய ஆடை மறைக்காத உடம்பு பகுதி பொன் தூவியதுபோல மினுமினுத்தது. கண்கள் நீலமாக மிதந்துகொண்டிருந்தன.
பயத்தினால் அவள் கால்கள் நடுங்குவதுகூட அவளுடைய அழகை அதிகப்படுத்தியது. மன்னர் அதிசயித்துவிட்டார். இப்படியான ஓர் அழகுப்பதுமை
தன்னுடைய சமையலறையில் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறதா? இவ்வளவு காலமும் அவர் கண்களிலிருந்து எப்படி தப்பினாள்.

'உனக்கு ஆங்கிலம் தெரியும் என்பதை ஏன் என்னிடம் நீ சொல்லவில்லை?'

'நீங்கள் கேட்கவில்லை, மாட்சிமை தங்கிய அரசரே.'

தேனுடன் சேர்த்து தேனீயை சாப்பிட்டதனாலோ என்னவோ அவள் குரல் இனிமையாகவும் அதே சமயம் கூர்மையாகவும் வெளிவந்தது. அரசர்
அவளை அருகே கூப்பிட்டார். அவள் தாடையைப் பிடித்து திருப்பி கண்களை பார்த்தார். சிறிதுநேரம் திக்குமுக்காடிப்போனார். பற்களைப் பார்த்தார்.

அவை வெள்ளை வெளேரென்று இருந்தது அவருக்கு பிடிக்கவில்லை.
அவற்றை பழுப்பு நிறமாக்கச் சொன்னார். பிறகு இரண்டு கைகளையும் எடுத்து அவள் இடையையும் பிருட்டத்தையும் மார்பையும் ஆராய்ந்து,
தடவி திருப்திப்பட்டார். 'இன்றிரவே என்னுடைய சயன அறை மஞ்சத்துக்கு வந்துவிடு' என்றார். அந்தக் கணமே அவள் 37 வது ஆசைநாயகியாக
நியமனம் ஆனாள்.

அன்று சேடிகள் லூசியாவை பட்டுடையினால் அலங்கரித்தார்கள். அவள் தன் வாழ்நாளில் கண்டிராத நகைகளை எல்லாம் அவளுக்கு அணிவித்தார்கள்.
அவற்றை எந்த அங்கத்தில் அணிவது, எப்படி பூட்டுவது என்பதெல்லாம் லூசியாவுக்கு தெரியவில்லை. அவளுடைய எடை கூடி நடப்பதற்கே
சிரமப்பட்டாள். அவள் நடக்கும்போது உடம்பிலிருந்து பலவிதமான ஒலிகள் எழுந்தன. சேடிகள் லூசியாவை மஞ்சத்துக்கு அழைத்துவந்தபோது
அடிமைகள் அரசனுக்கு இரவு ஆடை அணிவித்துக்கொண்டிருந்தார்கள்.

அவளுடைய சேடிகள் பக்கத்திலே நிற்க லூசியா தலைகுனிந்து நின்றாள். பஞ்சணையில் சாய்ந்தபடி அவள் அழகை அரசன் சில கணங்கள்
ரசித்தான். பிறகு கைகளைத் தட்டினான். அவ்வளவு நேரமாக ஆடைகளை புனைந்து, ஆபரணங்களை ஒவ்வொன்றாகப் பூட்டிய சேடிகள் அவற்றை
அவசர அவசரமாக கழற்றத் தொடங்கினார்கள். கழற்றி கழற்றி தட்டத்தில் அடுக்க அதன் உயரம் கூடிக்கொண்டுவந்தது. இறுதியில் லூசியாவின்
உள்ளாடை தெரியத் தொடங்கியதும் அரசன் காலினால் ஒரு சேடியை எட்டி உதைத்தான். அவள் விழுந்து எழுந்து ஓடினாள். மற்றவளும் உரித்த
துகிலையும், குவித்த ஆபரணத்தட்டையும் கையில் ஏந்தியபடி கணத்தில் மறைந்தாள்.

'நான் புள்ளிபோட்ட பட்டத்து யானையில் அவ்ருத்த பவனி வரும்போது நீ எனக்குப் பக்கத்தில் அமரவேண்டும்' என்றான் அரசன். அவள் தலையை குனிந்து சரி என்பதுபோல ஆட்டினாள். 'ஓ, நான் மறந்துவிட்டேன். ஆங்கிலத்தில் சொல்' என்றான். அவள்
பதிலை ஆங்கிலத்தில் சொன்னாள். 'என்னுடைய அம்மாவின் பெயர் உனக்கு தெரியுமா? டொன்னா காதரீனா. அது போர்த்துக்கீயர்கள் சூட்டிய கத்தோலிக்க பேர். உன்னுடைய பெயர் லூசியா. எங்கள் பையனுக்கு என்ன பெயர் வைக்கலாம்?' என்று
கேட்டுவிட்டு அவன் இடியிடியென்று குலுங்கி சிரித்தான். பிறகு 'ஓ, என் நீலக்கண் ஆங்கிலக்காரியே' என்று அவளை இழுத்து தன்னுடம்போடு அணைத்தான். அவனுடைய பெரிய ஆகிருதிக்குள் அவளுடைய சிறிய உடல்
சுலபமாக மறைந்துகொண்டது

லூசியா திரும்பி மன்னரைப் பார்த்தாள். ஓர் அசிங்கமான உடல் மஞ்சத்தின்மீது

குறுக்காகப் படுத்துக் கிடந்தது. மன்னருடைய வயிறு மேலுக்கு போவதும் கீழுக்கு வருவதுமாக இருந்தது. எப்படித்தான் உற்று நோக்கினாலும் காற்று அந்த உடலுக்குள் எந்த வழியாக உள்ளே போகிறது என்பது தெரியவில்லை. ஆனால் அது வெளியே வரும்போது பேரிரைச்சலுடன் வந்தது. லூசியா எங்கே படுக்கலாம் என்று சுற்றுமுற்றும் ஆராய்ந்தாள். அங்கே சேவை செய்த பதினாறு தாதியரில் ஒருத்திகூட அவள் எங்கே சயனிக்க வேண்டும் என்பதை சொல்லிக் கொடுக்கவில்லை.

வெளியே கறுப்பு அடிமையின் காலடி சத்தம் கேட்டது. அவன் யாரைக் காவல் காக்கிறான் என்ற எண்ணம் திடீரென்று எழுந்தது. ஒருவேளை அவள் தப்பி போய்விடாமல் இருக்கத்தான் அவன் அந்தளவு பெரிய வாளை உருவிக்கொண்டு உலாத்துகிறானோ? மன்னருடைய தாடி அவருடைய வெள்ளை உள்ளாடையில் உரசி மடிந்துபோய் கிடந்தது. தலையில் மன்னருக்கு முக்கால்வாசி வழுக்கை. அவர் நாலு மூலை கிரீடம் அணிந்திருந்தபோது அந்த வழுக்கை சாமர்த்தியமாக மறைக்கப்பட்டிருந்தது. அவர் கால்களுக்கிடையில் கிடந்தது வெள்ளை உள்ளாடை வழியாகத் தெரிந்தது. அது இஆறந்துபோன வௌவால் போலவே அவளுக்கு அப்போது தோன்றியது.

நாழிகைப் பாத்திரத்தில் மறுபடியும் தண்ணீர் நிறைத்து வைக்கும் சத்தம் கேட்டது. நாலு நாழிகைகள் ஓடிவிட்டன. நாளை இரண்டு ஆங்கிலேயத் தூதுவர்கள் மன்னனைப் பார்க்க வருவார்கள் என்று மன்னன் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. அவர்கள் என்ன காரியமாக வருகிறார்கள் என்பது அவளுக்கு தெரியவில்லை. திரை மறைவிலிருந்து அவள் அவர்கள் பேசுவதைக் கேட்பாள். பின்பு அரசருக்கு அதை சொல்லவேண்டும். அரண்மனை மொழிபெயர்ப்பாளரில் மன்னர் சந்தேகம் கொண்டிருக்கிறார். அவருக்கு என்ன தண்டனை கிடைக்கும்? முதலைகளுக்கு தின்னக் கொடுப்பார் என்றே நினைத்தாள்.

இந்த தூதுவர்களை அவளுடைய அப்பா ஏற்பாடு செய்திருக்கலாம் என்று பட்டது அவளுக்கு. தான் அரசருடைய 37 வது ஆசைநாயகியான செய்தி அவருக்கு போயிருக்குமா? அது தெரிந்தால் தன்னை விடுவிக்கும் முயற்சியை நிறுத்திவிடுவாரா? அவர் சந்தோசப்படுவாரா அல்லது துக்கப்படுவாரா? அவளால் ஒன்றுமே யூகிக்க முடியவில்லை. ஆசைநாயகி என்றாலும் அவருக்கு தன் மகளை எப்படி மறக்கமுடியும்?

வரப்போகும் தூதுக்குழுவுடன் தனிமையில் பேசுவதற்கு ஏதாவது வழியிருக்குமா என்று லூசியா யோசித்தாள். இரண்டாவது ராஜசிங்கனின் 37 வது ஆசைநாயகி ஆங்கிலம் பேசுவதைப் பார்க்கும்போது அந்த தூதுவர்களின் முகம் எப்படிப் போகும் என்பதை நினைத்தபோது அவளுக்கு சிரிப்பாக வந்தது. அவளுடைய அப்பாவின் வீரச்செயல்களை மற்றவர்கள் சொல்லி அவள் கேட்டிருக்கிறாள். எப்படியும் அவளை

அழைத்துப்போக அவர் வருவார். நாளைக்கே அவளுக்கு விடுதலை கிடைத்தாலும் கிடைக்கலாம்.

அவள்போல அன்றிரவு முழுக்க தூங்காமல் இருவர் இருந்தனர். ஒருவன் வாள் உருவிய கறுப்பு அடிமை. மற்றவன் நாழிகை பாத்திரத்தை நிறைத்து வைக்கும் நாழிகைக்காரன். யார் தூங்கினாலும் நாழிகைக்காரன் தூங்க முடியாது. அவன் தூங்கினால் காலம் நின்றுபோகும். அவனுடைய மூச்சும் நின்றுபோகும்.

நாழிகைக்காரன்போல அவள் தூங்காமல் கழித்தது 1680 ம் ஆண்டு நவம்பர் மாதத்து 6 ம் தேதி இரவு. ரோபர்ட் நொக்ஸ் வழி தெரியாமல் பல மாதங்கள் காட்டில் அலைந்து கடைசியாக சிலோனின் டச்சுப் பிரதேசத்திலுள்ள அரிப்புக் கோட்டைக்கு போய்ச் சேர்ந்தான். அங்கே மேசையில் டச்சுக்காரர்களுடன் உட்கார்ந்து, இருபது வருடங்களுக்கு பிறகு, பீங்கான் கோப்பையில் உணவருந்தினான். அடுத்தநாள் யாழ்ப்பாண பட்டினத்தின் கோட்டை அதிபதியுடன் கொழும்புக்கு பயணமாகி அங்கிருந்து ஆஇங்கிலாந்துக்கு கப்பல் ஏறினான். இந்தப் பயணத்தை செய்துமுடிக்க அவனுக்கு 16 மாதங்கள் பிடித்தன. இந்த 16 மாதங்களில் ஒருநாள்கூட அவன் பைபிளை வாசிக்கத் தவறவில்லை. லூசியாவுக்கு வாக்கு கொடுத்ததுபோல கிழக்கிந்திய கம்பனியில் அவன் சீக்கிரம் சேருவான். அப்போது சிலோன் நிலவரங்கள் பற்றி அவர்களிடம் தன் அபிப்பிராயத்தை கூறுவதற்கு அவனுக்கு நிறைய வாய்ப்பு கிட்டும்.

மேலும் ஏழு வருடங்கள் கழித்து இரண்டாம் ராஜசிங்கன் இறந்துபோவான். அப்போது லூசியாவுக்கு வயது 22 ஆகும். அரசனின் மரணத்தை தொடர்ந்து நாட்டில் குழப்பங்கள் உண்டாகும். டச்சுக்காரருடைய ராச்சியம் முடிந்து ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பமாகும். அதற்கெல்லாம் ஆஇன்னும் 118 வருடங்கள் அவள் காத்திருக்கவேண்டியிருக்கும்.

amuttu@gmail.com

5. இழப்பு - குரு அரவிந்தன்

சிகப்பு மஞ்சள் விளக்குகள் மின்னிக்கொண்டிருக்க, இராணுவ நோயாளர் காவுவண்டி ஒன்று அலறி அடித்துக் கொண்டு மருத்துவமனை வாசலில் வந்து நின்றது. என்னவோ ஏதோவென்று மருத்துவமனை ஊழியர்கள் எட்டிப் பார்த்தனர். காவுவண்டிக்கு பாதுகாப்பாய் வந்த இன்னுமொரு வண்டியில் இருந்து குதித்து இறங்கிய இராணுவத்தினர் ஆயுதங்களோடு தடதட என்று உள்ளே நுழைந்தனர். வெளிநோயாளர் பயந்துபோய் ஒதுங்கி நிற்க, வரவேற்பு மேசையில் இருந்த பெண் பதட்டத்தில் தன்னை அறியாமலே சட்டென்று எழுந்து நின்றாள்.

'டாக்டர் எங்கே..?' அதிகாரக்குரலில் மிரட்டினான் துப்பாக்கியோடு உள்ளே நுழைந்த இராணுவ சிப்பாய்.

பயத்தில் வார்த்தைகள் வெளிவர மறுக்கவே, அவள் மருத்துவரின் அறையை நோக்கிக் கையை நீட்டினாள். எந்தவித தயக்கமும் இல்லாமல் அவன் கதவை உதைந்து தள்ளித் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

'டாக்டர் ரொம்ப அவசரம், உடனே வாங்க, எங்க காப்டனுக்கு உடனே சத்திர சிகிச்;சை செய்யணும்.' என்றான்.

'என்னாச்சு..?' வைத்திய கலாநிதி சிவகுமாரன் பதட்டப்பட்டார்.

'கிளைமோர் குண்டு வெடிச்சதாலே எங்க காப்டன் ஆபத்தான நிலையில இருக்கிறார். உடனே வாங்க..!' அவசரப்படுத்தினான் சிப்பாய்.

கடமை அழைத்த வேகத்தைவிட, துப்பாக்கி முனையின் அழைப்பு அவரை உடனே எழுந்திருக்க வைத்தது. இப்படியான நேரங்களில் பாதிக்கப் பட்டவர்களின் மனநிலை எப்படி இருக்கும் என்பதை அவர் நன்கு புரிந்து வைத்திருந்தார். எனவே அதிகம் அலட்டிக் கொள்ளாது, சத்திர சிகிச்சை அறைக்குள் சென்றபோது, அவரது உதவியாளர்கள் இராணுவ அதிகாரிக்கு செலைன் கொடுத்து, அவசரமாக செய்யவேண்டிய உதவியை செய்து கொண்டிருந்தார்கள்.

மரணத்தின் பிடியில் அகப்பட்டுத் தவிப்பவன்போல, வேதனையில் முனகிக் கொண்டிருந்தான் அந்தநோயாளி. மரணபயம் குறித்த அவனது வேதனையில் அவனது முகம்; சகிக்கமுடியாதபடி அப்படியே இறுகிப் போய்;க்கிடந்தது. நிறைய இடங்களில் இரத்தம் வழிந்து இராணுவ சீருடையில் ஆங்காங்கே கறை படிந்திருந்ததிலிருந்து அந்த முனகலின் தேவை கருதிய வெளிப்பாடு என்னவாய் இருக்கும் என்பது அவருக்குப் புரிந்து

போயிற்று. அவரவர் சுயமாக அனுபவிக்கும் போதுதான் இப்படியான வலியும் வேதனையும் எப்படிப்பட்டது என்பது அவர்களுக்குப் புரியும் என்பதைத் தனது தொழில் ரீதியான அனுபவத்திலிருந்து அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார். உதவியாளர்களிடம் அவனுடைய சீருடையை அகற்றி சத்திர சிகிச்சைக்குரிய உடையை அணிவிக்கச் சொன்னார். சீருடையில் நடமாடும் வெறிபிடித்த இந்த வக்கிரங்கள் எல்லாம், அந்த சீருடை இல்லாவிட்டால் வெறும் பூஜ்யங்கள்தான் என்பதில் அவருக்குச் சிறிதளவும் சந்தேகமே இல்லை! ஒன்றா இரண்டா, துப்பாக்கி ரவைகள் துளைத்ததுபோல பட்ட இடமெல்லாம் சின்னச் சின்னக் காயங்கள். அவசரமாக எக்ஸ்றே எடுத்து, நோயாளிக்கு மயக்க மருந்து கொடுத்தார்கள்.

கையுறையை மாட்டும்போதுதான் கவனித்தார், துப்பாக்கியோடு உள்ளே நின்ற சிப்பாயை! அவனை வெளியே போகும்படி சைகையிலே காட்டினார். வெளியே போகாவிட்டால் சத்திர சிகிட்சையைத் தொடங்கமாட்டார் என்பதை அவன் புரிந்து கொண்டிருக்க வேண்டும், வேறு வழியில்லாமல், பரம விரோதிபோல அவரை முறைத்துப் பார்த்து விட்டு அவரைத் தனது மொழியில் நன்றாகத் திட்டிக் கொண்டே வெளியேறினான்.

சின்னஞ் சிறிய ஆணிகள், பிளேட்டுத் துண்டுகள், சைக்கிள் பால்சுகள் என்று அத்தனையும் காப்டனின் உடம்பைப் பதம் பார்த்திருந்தன. சத்திர சிகிச்சை மூலம் ஒவ்வொன்றாக அவற்றை வெளியே எடுக்க முயற்ச்சி செய்து கொண்டிருந்தவரின் மனதை அதிர்ச்சியும், ஆச்சரியமும் முழுமையாக ஆக்கிரமித்திருந்தன. இதை வெடிக்க வைத்தவனின் மனதிலே எவ்வளவு கோபமும், பழிவாங்கும் வெறியும் இந்த ஆக்கிரமிப்பு ராணுவத்தின் மேல் இருந்திருக்க வேண்டும், இந்தத் தருணத்திற்காக எத்தனை நாட்கள் ஊனுறக்கம் இல்லாமல் அவன் தவம் கிடந்திருப்பான் என்று உடலைக் கீறி வெளியே எடுத்த ஒவ்வொரு பொருளையும் பார்த்தபோது, தனக்குள்ளே கணக்குப் போட்டுக் கொண்டார். எங்கேயாவது சைக்கிள் பால்சுகளைக் கண்டால் ஆக்கிரமிப்பு இராணுவம் ஏன் வெருண்டடித்துப் பயந்து ஓடுகிறது என்ற உண்மையும் அவருக்கு இப்போது புலனாகியது. உயிரோடு போராடிக் கொண்டிருக்கும் வேற்று இனத்தவனான அந்த அதிகாரி உயிர் தப்புவானா இல்லையா என்ற இறுதி முடிவைக் காலன், தமிழரான இவரது கையிலே ஒப்படைத்திருந்ததை நினைத்துப் பார்க்க அவருக்கே வியப்பாக இருந்தது.

தமிழ் இனத்தையே கூண்டோடு அழிக்கப் போவதாக சவால் விட்டு விட்டு வந்து, இந்த நாடே தங்கள் இனத்திற்குத்தான் சொந்தம் என்ற ஆணவத்தோடு, ஆயுத பலத்தால் தமிழரின் பாரம்பரிய மண்ணை ஆக்கிரமித்து, அந்த புனிதமண்ணில் நிலை கொண்டிருக்கும்; ஆக்கிரமிப்பு ராணுவத்தின் அதிகாரிதான் இவன் என்பது எல்லோருக்கும் தெரியும். மண்ணாசையாலும், பெண்ணாசையாலும் வெறி பிடித்தலையும் இவனைப் போன்றவர்களைக் காப்பாற்றுவதிலேயோ, அல்லது உயிர் தப்பவைப்பதிலேயோ அவருக்கு

எந்தவித ஈடுபாடும் மனதார இருக்கவில்லை.

'பாரம்பரியமாய் நாங்கள் வாழ்ந்து வந்த எங்கள் தாய்மண்ணை ஆக்கிரமித்து, எங்கள் இனத்தையே அழித்தொழித்து, இந்த மண்ணிலே தங்கள் இனத்தைக் குடியேற்றும்; பரமஎதிரி இவன். இவனைப் போன்ற இனவாதிகள் எல்லாம் விபத்து நடந்த இடத்திலேயே இறந்து போயிருந்தால் எங்களுக்குச் சற்று நிம்மதியாவது இருந்திருக்கும்' என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டார். இப்போ நோயாளியாக இவரிடம் வந்தபின், தனது கடமையில் இருந்து நழுவ அவருக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. தன்னை நம்பி வந்த ஒரு நோயாளி இவன் என்ற கடமை உணர்வோடு, இனமத பேதம் எல்லாவற்றையும் மறந்து விரைவாகச் செயற்பட்டார்.

கடினமான உழைப்பில், நேரம் நீண்டு கொண்டு போனதே தெரியவிலிலை. கடிகாரத்தைப் பார்த்தார். மருத்துவபீடத்தில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருக்கும் தனது மகனை, வகுப்பு முடிந்ததும் அங்கு சென்று வீட்டிற்கு அழைத்துக் கொண்டு செல்வதாக உறுதியளித்திருந்தார். இப்போதைக்கு இந்த இடத்தை விட்டு நகரவேமுடியாது, எப்படியாவது அவன் சமாளித்துக் கொள்வான் என்ற நம்பிக்கையோடு மீண்டும் நோயாளி மேல் கவனம் செலுத்தினார்.

நேரகாலம் இல்லாமல் இப்போதெல்லாம் சத்திர சிகிட்சை ஒரு சாதாரண நிகழ்வாய்ப் போய்விட்டது. இராணுவம் வலிந்து ஆக்கிரமித்த மண்ணில் தினமும் இப்படி ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. முன்பெல்லாம் வாழ்ந்து, அனுபவித்த முதியோர்தான் தேவை கருதி அடிக்கடி வைத்திய சாலைக்கு வருவார்கள். இப்போ நிலைமை ரொம்பவும் மாறிவிட்டது. வயது வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் பலதரப்பட்ட வைத்தியத்திற்காகவும் வருகிறார்கள். இந்த வைத்திய சாலையில் சத்திர சிகிச்சைக்குப் பொறுப்பாக இருந்த மற்றவைத்தியர் சமீபத்தில் மாற்றலாகிப் போய்விட்டபடியால் இவர் மட்டும்தன் அங்கே மிஞ்சியிருந்தார். எனவே இங்குவரும் எல்லா அவசரசத்திர சிகிச்சையையும் அவரே தனியே கவனிக்க வேண்டியிருந்தது. யுத்தப் பிரதேசத்தில் தொழில் செய்ய யாருமே விருப்பப்படவில்லை. இப்படியான நேரங்களில் ராணுவத்தையும் போராளிகளையும் சமாளிக் வேண்டிய பெரும் பொறுப்பு அவரிடம் இருந்தது. 'ஏன் சிகிச்சை செய்தாய்' என்று மிரட்டல்கள் வரும்போதெல்லாம் 'கடமையைத்தான் செய்தேன்' என்று துணிந்து சொல்ல வேண்டும். இல்லாவிட்hல் இடமாற்றம் எடுத்துக் கொண்டு எங்கேயாவது கண்காணாத இடத்திற்குப் போகவேண்டும், அல்லது வேலையை இராஜினாமா செய்துவிட்டு வீட்டிலே சிவனே என்று உட்கார்ந்து இருக்க வேண்டும். இத்தனை பிரச்சனைகளுக்கு மத்தியிலும், மருத்துவக்கல்லூரி இறுதி ஆண்டில் படிக்கும் மகனின் படிப்பு முடியட்டும் என்ற எண்ணத்தோடுதான் பல்லைக் கடித்துக் கொண்டு நாட்களை எண்ணிக் கொண்டிருந்தார். தன்னைப் போலவே அவனும் இந்த மண்ணில் படித்து ஒரு புகழ்பெற்ற மருத்துவராக வந்து, மக்களுக்குச் சேவை

செய்யவேண்டும் என்ற படித்த சாதாரண பெற்றோருக்கு இருக்கும் ஆசைதான் அவருக்கும் இருந்தது.

சத்திர சிகிட்சை அறையைவிட்டு வெளியே வந்தபோது, தாதி அவரைநோக்கிப் பரபரப்பாக ஓடி வந்தாள். முகத்திலே கவலை தோய்ந்து இறுகிப்போயிருந்தது.

'என்ன..?' என்றார்.

'சத்திர சிகிச்சை முடிஞ்சுதா டாக்டர்..?'

'ஆமா, நோயாளி தப்பிப்பிழைச்சிட்டான்.'

'பிழைச்சிட்டானா..? காப்பாற்றிவிட்டீங்களா..?' இனம்புரியாத வெறுப்பு, அவளின்; பெருமூச்சில் கலந்திருந்ததை அவர் அவதானித்தார். அவளது அந்த வெறுப்பு நியாயமானதுதான், இது அவளின் தனிப்பட்ட வெறுப்பல்ல, ஒட்டு மொத்தமாக அங்கேயுள்ள ஊழியர்களின் வெறுப்பையும் உள்வாங்கித்தான் அவள் பிரதிபலிக்கிறாள் என்பதையும் அவர் அறிவார். நாட்டு நடப்பும் அப்படித்தான் இருந்தது.

ஆத்திரப்பட்டு அறிவிழந்து விடாமல் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, எங்கள் முன்னோரின் அறிவுரையின்படி சந்தர்ப்பத்திற்கு ஏற்பநடந்து கொள்வதில் எந்தத் தப்புமில்லை என்பது அவரது வாதமாக இருந்தது. திருவள்ளுவர்கூட 'காலம் கருதி இருப்பர் கலங்காது ஞாலங் கருதுபவர்' என்று ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார். எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு, ஓடுமீன் ஓட உறுமீன் வரும் வரையும் காலம் கனியட்டும் என்று விழிப்போடு காத்திருப்பதே சிறந்தது. இதை எங்கள் இனத்தின் பலவீனம் என்று ஆக்கிரமிப்பு இராணுவம் தப்பாக நினைக்கக்கூடாது, அப்படி நினைத்து, இனவொழிப்பு நடவடிக்கையில் மீண்டும் இறங்கினால் அதுவே அவர்களுக்கு அவர்களாகவே தோண்டிய புதைகுழியாய்க் கூடப் போய்விடலாம். எடுத்துக் கொண்ட குறிக்கோளை முக்கிய லட்சியமாய்க் கொண்டு, சாதிக்க வேண்டியது இன்னும் நிறையவேயிருக்கிறது, எனவே தேவை கருதிப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை நினைத்துப் பார்த்து விட்டு அவர் சொன்னார்,

'ஒரு வைத்தியருக்குரிய என்னுடைய கடமையைத்தானே நான் செய்தேன். என்னுடைய கையில் எதுவுமில்லை, நான் ஒரு காரணி அவ்வளவுதான், எல்லாம் அவன் செயலே!' என்றவரின் குரல் கம்மியது.

'எது கடமை..?' அவள் எதையோ சொல்லத் தயங்குவது தெரிந்தது.

தான் செய்த காரியத்தில் அவளுக்குத் தொடுகிலும் சம்மதமிருக்காது என்பது அவருக்குத் தெரியும். அவளும் தொடக்கத்தில் மனிதாபிமானத்தோடு சேவை மனப்பான்மையோடுதான் தாதியாக சேவை செய்தாள். ஆனால் இந்த சீருடை அணிந்தவர்கள் கிருசாந்தி என்ற பாடசாலை மாணவியை கதறக்கதற பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிவிட்டு, அதை மூடி மறைப்பதற்காக அவளைக் கொன்று புதைத்ததைக் கேள்விப்பட்டதில் இருந்து அவளுக்குச் சீருடை அணிந்து கொண்டு திரியும் இவர்கள்மேல் சொல்லமுடியாத வெறுப்பு. அது போன்ற பல சம்பவங்கள் அதன்பின் நடந்தேறிவிட்டன. அந்தக் காழ்ப்புணர்வின் வெளிப்பாடுதான் இது என்பதை அவர் ஊகித்துக் கொண்டார்.

'என்ன ஒரே பதட்டமாய் இருக்கிறாய்?' அசதியோடு அவளிடம் கேட்டார்.

'வந்து.., அவசர சிகிச்சைக்காக காவுவண்டியிலே இரண்டு, மூன்று நோயாளியைக் கொண்டு வந்தாங்க, வாசலிலே காவலுக்கு நின்ற இராணுவ சிப்பாய்கள் உள்ளே அனுமதிக்க மறுத்திட்டாங்க!'

'அப்படியா..? இப்போ எங்கே அவங்க..?' கடமை உணர்வோடு கேட்டார்.

'ரொம்ப நேரம் காவுவண்டி வெளியே காத்திருந்திட்டு, வேறு வழியில்லாமல் எங்கேயாவது வேறு வைத்தியசாலைக்கு கொண்டு போகமுடியுமா என்று முயற்சி செய்யப்போவதாக சொல்லித் திரும்பிப் போயிட்டாங்க!'

'ரொம்ப ஆபத்தான நிலையில் இருந்தாங்களா?'

'ஆமா, துப்பாக்கிச் சூட்டுக்காயம், இரத்தசேதமாம்! அவசர சத்திர சிகிச்சை செய்தால் எப்படியும் அவங்க தாப்பிவிடுவாங்க என்று சொன்னாங்க.'

'எங்கே இருந்து கொண்டுவந்தாங்க? சத்திரசிகிச்சை செய்யக்கூடிய வேறு வைத்தியசாலை ஒன்றும் அருகே இல்லையே!'

'மருத்துவகல்லூரிக்கு முன்பாகத்தான் கிளைமோர் குண்டு வெடிச்சதாம். அதிலேதான் நீங்க சத்திர சிகிச்சை செய்து பிழைக்கவைத்த இந்த இராணுவ காப்டன் அகப்பட்டிருக்கிறார்.'

'மருத்துவக் கல்லூரிக்கு முன்பாகவா? அங்கேயா நடந்தது?' டாக்டரின் குரல் பதட்டத்தில் சட்டென்ற அடைத்துக் கொண்டது.

'ஆமா, கப்டன் காயமடைந்த ஆத்திரத்தில் கூடவந்த இராணுவத்தினர் மருத்துவக் கல்லூரிக்குள்ளே புகுந்து கல்லூரி மண்டபத்திற்கு தீவைச்சது மட்டுமல்ல, அங்கே நின்ற

மாணவர்களையும் நோக்கிச் சாரமாரியாகச் சுட்டிருக்கிறாங்க. அதிலேதான் அந்த மாணவங்க காயப்பட்டாங்களாம்!'

'மருத்துவக் கல்லூரி மாணவங்களா..?' வார்த்தைகள் தேங்கி வெளிவர மறுத்தன.

'ஆமா டாக்டர்..!'

'எத்தனை பேரைக் கொண்டு வந்தாங்க? அவங்க முகத்தையாவது நீ பார்த்தியா?' பதட்டத்தோடு எழுந்து நின்றார் சிவகுமாரன்.

'இல்லையே டாக்டர், உயிருக்குத் துடிச்சிட்டு இருப்பதாக கொண்டு வந்தவங்க சொல்லி மன்றாடினாங்க, ஆனால் அவங்களை உள்ளே கொண்டுவர சிப்பாய்ங்க விடவேயில்லை!'

'ஏன்..? ஏன் தடுத்தாங்க..?' கடமையைச் செய்ய முடியாமல்போன ஏமாற்றமும் அதுசார்ந்த இயலாமையும் அவரை வாட்டத் தொடங்கின.

'காப்டனின் சத்திரசிகிச்சை முடியாமல் யாரையும் உள்ளே விடமாட்டோம் என்று சொல்லித் தடுத்திட்டாங்க. அதுமட்டுமல்ல காப்டனுக்கு ஏதாவது ஆச்சுதென்றால் எங்களையும் சுட்டுப் பொசுக்கி விடுவோம் என்று துப்பாக்கியைக் காட்டி மிரட்டினாங்க.'

'உண்மையாவா..? எனக்கு இதெல்லாம் தெரியாமல் போச்சே..!'

இங்கே எல்லாமே துப்பாக்கி முனையில் தான் நடக்கிறது என்பதை நினைக்க, குழப்பமும் அது சார்ந்த கவலையும் அவரைச் சூழ்ந்து கொண்டது. அதன் தாக்கத்தால் மனம் உடைந்துபோன சிவகுமாரன், தலையிலே கை வைத்தபடி அருகே இருந்த நாற்காலியில் யோசனையோடு உட்கார்ந்தார்.

இந்த நேரம் பார்த்து மேசையில் இருந்த தொலைபேசி அலறியது. இராணுவ மேலிடத்தின் அழைப்பாக இருக்கலாம், எடுக்காவிட்டால் அது குறித்த பிரச்சனைகள் இன்னும் பூதாகரமாய் வெடித்துவிடும் என்ற நினைப்பில் வேண்டா வெறுப்பாய் எடுத்துக் காதில் வைத்தார்!

என்றுமில்லாதவாறு கத்திக் குழறியழும் மனைவியின் அவலக்குரல் மறுபக்கத்தில் செவி வழி புகுந்து அவரை அப்படியே உறைய வைத்தது!

kuruaravinthan@hotmail.com
பதிவுகள், நவம்பர் 2008 இதழ் 107 -

6. றைட்டோ - சாந்தினி. வரதராஜன்

சாந்தினி. வரதராஜன் இலைகள் கூட அசையாது நிற்கும் வெப்பியரா காலத்தில் மழை கொட்டிக்கொண்டிருந்தது. இருட்டும் வெளிச்சத்தை விரட்டிக்கொண்டிருந்ததால் பகல் மறைந்த காலம் நீண்டு கொண்டேபோனது. இங்க எல்லாமே மாறிப்போய்விட்டது எண்டு ரவிக்கு தொலைபேசியில் சொல்லக்கூட பயமாக இருந்தது. வெளியில அந்த சனியன்கள் இந்த மழைக்கு என்ன செய்யுங்கள்? . இதுகள் எங்கட வீட்டு வாசலில மண்மூட்டைக்குள்ள பதுங்கிக்கொண்டு எப்ப பார்த்தாலும் ஆரோ வருவினம் எண்ட மாதிரி தெருவையே பார்த்துக்கொண்டிருக்கிறதை வெளிநாட்டாக்கள் பார்த்தால் ஏதோ எங்களை பாதுகாக்கத்தான் இவை இருக்கினம் எண்டுதான் நினைப்பினம். லாஸ் மிக் றூயிக் (என்னை அமைதியா இருக்கவிடு) சுமி டொச்சில் புலம்பிக்கொண்டிருந்தாள். எத்தனையோ காலமாய் இதைத்தான் நாங்களும் சொல்லிக்கொண்டிருக்கிறம்.. வாழ்க்கை பாதளத்தின் நடுவே மெல்லிய கயிற்றில் ஊசாலடிக்கொண்டிருப்பதைப்போல ஓர் உணர்வு எழுந்து கொண்டே இருந்தது. அப்போதெல்லாம் வீடு செல்லல் பற்றிய நினைவுகள் எப்போதும் மனதில் நடந்து திரியும் கனவாகத்தான் இருந்தது.

நினையா பிராகாரம் அதுவும் ஒரு விடியாத இரவில் என்னையும் பிள்ளைகளையும் ஜேர்மன் அரசாங்கம் நாடு கடத்திய நிகழ்வை நினைத்தால் இப்பவும் மனம் நடுங்கியது. விமான நிலையத்தில் எதை நினைத்து அழுவது? ;எங்களை காணமல் ரவி தேடப்போகிறரே எண்டு அழுவதா? நானும் பிள்ளைகளும் இனி என்ன செய்யப்போகிறம் எண்டு அழுவதா? எதுக்கெண்டு அழுவது? ஐரோப்பிய தெருக்களில் எங்கள் முகங்களில் வாசித்த அதே வார்த்தையை இங்கும் அகதிகள்;, சிகோனியர்(நாடோடிகள்) என தங்களுக்குள் கதைத்துக்கொண்டு எங்களை பரிதாபமாக பார்த்தார்கள். இவர்களுக்கு என்ன தெரியும்? இருப்பை தொலைத்து தெலைத்து அலையும் எங்களைப்பற்றி, நாங்கள் வாழ்ந்த அந்த சந்தோஷமான வாழ்க்கையை பறித்தவர்களைபற்றி இவர்களுக்கு என்ன தெரியும்? எவ்வளவோ சொல்லலாம் சொல்வதற்கு என்னிடம்தான் எந்த மொழியும் இல்லை.

இப்போதெல்லாம். நட்சத்திரங்களெல்லாம் தொலைந்துபோய் கிடக்கும் இரவு நேரங்கள் அமைதியாக கழிவதே இல்லை எப்பவும் ஏதாவத ஓர குரல் கத்தி குளறிக்கொண்டே இருக்கும். அந்த அழுகை ஒலியை இயமனின் முகம் கொண்ட அந்த பச்சை வாகனம் உறுமியபடி அள்ளி அழித்துக்கோண்டே போகும.; இப்படி அழும் சத்தத்தை அதுவும் குளறி அழும் சத்தத்தை முன்பு ஒருபோதும் நான் கேட்டதே இல்லை. பின்னொரு நாள் அந்த அழுகை சத்தத்தை முதல் முதலாக ராகினி வீட்டில கேட்டனான் அப்போது எங்கள் தெருக்களில் நாங்கள் மட்டுமே வாழ்ந்த காலம் அது. எங்கள் தெரு எங்களின் பாதங்களை மட்டும் தடவிக்கொடுத்துக்கொண்டிருந்தது. நாங்கள் சிரிப்பதை பார்த்து அதுவும் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்த காலம். நாங்கள் ஓடிவிளையாடினோம், விழுந்தோம், பின் எழுந்தோம். சோளகக்காத்து வீசும் பொழுது இலைகளை சுருட்டி சுருட்டி

காலுக்குள் விடும். அப்பொழுது புதிதாக வரும் சினிமாபட நோட்டீசை எடுத்து வீசியபடி கார் பறக்கும் நாங்களும் பறந்து பறந்து ஒருவரை ஒருவர் தள்ளி விழுத்தி முழங்கால் உரச விழுந்து எழுந்தோம்.. அதிலும் எம்.ஜி;ஆர், சிவாஜி எண்ட சண்டையும் பெரிதாகவரும். அந்தப்பொழுதில்தான் எங்கள் தெருவே ஒரு நாள் அழுதது. நிம்மியோடும் என்னோடும் கதைத்துக்கொண்டு வண்ணார்பண்ணை சிவன்கோயில் மட்டும் சிரித்தபடிவந்த ராகினியின்ர மாமா கண்ணாதிட்டிபக்கம் திரும்பேக்க கையைகாட்டிட்டு போனவர் யப்பான்நகைக்கடையிலையே செத்துப்போனார். அப்பத்தான் அத்தை, அக்கா, அம்மா எல்லாரும் ஐயோ எண்டு குளறினவை. நானும் நிம்மியும் நடுங்கிப்போனம். எங்கட ஆச்சி சாகேக்க இப்படி ஆரும் அழவே இல்லை. நால்லா வாழ்ந்திட்டு செத்துப்போனா மனுசி எண்டுதான் சொன்னவை. அம்மாவும், பெரியம்மாவும் மட்டும் அழுதவை. பந்தம் பிடிக்கேக்க திருராசா சொன்னவன் நீ கையைக்காட்டு எங்கட ஆச்சிதானே கை அழுகாது எண்டு இவன் எப்பவும் இப்பிடித்தான் என்னை ஏமாத்திறவன் எண்ட பயம் எனக்கு பந்தம் பிடிக்கவே பயமா இருந்தது. பிறகு பழையபடி நமச்சியவாய பதிகம் பாடேக்கையும் நெல்லுப்பொரி தூவேக்கையும் பயம் வந்திட்டுது. அதுக்கு பிறகு கொட்டடி நமச்சிவாய பள்ளிக்கூடத்துக்கு போகேக்க அதாலபோற சவத்துக்கு நெல்லுப்பொரி தூவியிரிப்பினம் அதை உழக்காமல் கவனமா நடந்தால் அதுக்குள்ள ராகினியும் திருராசாவும் என்னை தள்ளி தள்ளி விடுவினம். இவை எப்பவும் இப்பிடித்தான். எனக்கு ஏதாவது செய்வினம் அல்லது நான் சொல்லிறதை நம்பாமல் நையம் காட்டி சிரிப்பினம். எங்கட அம்மாவுக்கு எலிசபத் மகாராணி ஒரு குடை பரிசா குடுத்தவ எண்டு சொன்னா அதுக்கும் சிரிப்பினம். நான் அம்மாவைக்கொண்டு சத்தியம் பண்ணினான். அம்மா கவனமா வைத்திருக்கிற குடையின்ர கைபிடியில அவவின்ர படம் இருக்கு வாங்க காட்டிறன் எண்டு சொல்ல. தங்கட வீட்டு குடையிலையும் அவவின்ர படம் இருக்கு எண்டு சொல்லி பெரிசா சிரிச்சவை.

சிரிப்பு அதை மட்டும்தான் எங்கட தெருவும், வீடும், படிகளும், மரங்களும் கேட்டு கேட்டு மகிழ்ந்த காலத்தை நான் பார்த்திருக்கின்றேன்.. வர்ணம் விசிறிய வானவில்போல் வாழ்ந்த அந்த வாழ்க்கையை இனி நான் எங்கபோய் தேடுவன்? .என் சின்ன வயதில் மனிதர்களோடு பேசியதைவிட மரங்களோடு பேசியது அதிகம் கொய்யாமரமும், மாமரமும், நாவல்மரமும் நான் மிகவும் நேசித்த என்ரை செரிமரமும், பாலைமரமும் என்னிடம

(2)

கதைகேட்கும.; ஆனால் திருராசா ராகினிமாதிரி என்ர எந்தக்கதைக்கும் நையம் காட்டி சிரிக்கமாட்டினம், எவ்வளவு கதையும் சொல்லலாம் அம்மாவிடம் சொன்னால் அடிப்பா எண்ட பயக்கதையும் சொல்லலாம். அது ஆருக்கும் சொல்லாது. பொகவந்தலாவில இருந்து அண்ணா வேலைக்கு அனுப்பின நடராசா அம்மாவுக்கு முன்னால சின்ன பாப்பா சின்ன பாப்பா எண்டு என்னோட விளையாடுவான். ஆனா வைக்கல் பட்டறைக்கு பின்னால

நிண்டு ஏதோ எல்லாம் காட்டி என்னை கூப்பிடுவான். எனக்கு காச்சல் வந்திட்டுது பிறகு அவனைக்கண்டா எனக்கு பயம் பயமா இருக்கும். அம்மா கேட்பா உன்னைக்கண்டா என்னத்துக்கு இவள் பயப்பிடுறாள்? அவனும் தெரியாத மாதிரி முகத்தைவைச்சிருப்பான் அம்மா பார்க்காத நேரம் பார்த்து கண் மடலை கையால மடக்கி சிவப்பாக்குவான். எனக்கு இன்னும் பயம்வரும். ஆனா அம்மாட்டை சொல்லவும் பயமா இருக்கும் அம்மா எனக்குத்தானே அடிப்பா. இந்த அம்மா எப்பவும் இப்பிடித்தான் ஆரும் பிழைவிட்டாலும் எனக்குத்தான் அடிப்பா. மெத்தைக்கு,தலையணிக்கு பஞ்சு மாற்றி தைக்க வாற ரெயிலர் கடைசி அறைக்குள்ள தைச்சுக்கொண்டு இருப்பார் ஒழிச்சு பிடிச்சு விளையாடேக்க சொல்லாதேங்க ரெயிலர் எண்டு சொல்லிப்போட்டு ரெயிலரின்ர காலுக்க ஒழிப்பன் மெத்தையின்ர துணியில பெரிய ஒருசதத்தை வைச்சு உருட்டி உருட்டி தைப்பார் அதை பார்க்க அவருக்கு பக்கத்திலையே நிற்பன் அப்ப எனக்கு தையல்மெசி;ன் எட்டாது நுனிக்காலை ஊண்டி எழும்பி எழும்பி பார்ப்பன் அவரும் ஏதோ எல்லாம் செய்து காட்டுவார். எல்லாவற்றையும் ஆருக்காவது சொல்லவேணும் போல இருக்கும். ஆருக்கு சொல்ல? மரங்களுக்கு மட்டும் சொல்லிக்கொண்டே இருப்பன். அம்மா அடிக்கிறதுக்கு பிரம்பெடுத்தால்போதும் ஓடிப்போய் கொய்யாமரத்தில ஏறியிருப்பன் எப்பிடியாவது இறங்கிவருவதானே அப்ப பார் எண்டு அம்மா சொல்லிக்கொண்டு போவா நான் கொய்யா மரத்துக்கு அம்மாவைபற்றி பொய்யெல்லாம் சொல்லுவன். பின்னால இருக்கிற ஜயனாருக்கு நேர்த்திவைப்பன் அம்மா கட்டாயம் இந்த வருஷம் வில்லூண்டி பிள்ளையார் திருவிழாவுக்கு முதல் செத்துப்போயிரவேணும். அப்பத்தான் எங்கட திருவிழாவுக்கு என்னை விரதம்பிடிக்க சொல்லமாட்டா, மூலஸ்தானத்துக்கு முன்னால இருத்தி தெற்பை போடேக்க சப்பாணம் கொட்டு எண்டு துடையில நுள்ளமாட்டா, பிறேமக்கா வீட்டுக்கு விளையாடப்போகலாம் கடவுளே. பிறகு அதே மாதிரி அம்மா கோயிலுக்கு போகேக்க விழுந்திட்டா முகமெல்லாம் காயம் எல்லாம் என்னல வந்தது நான் அழுதுகொண்டு அடிவளவுக்க ஓடிப்போய் ஜயானரே நான் மூண்டுதரம் துப்பிறன் நேர்த்தியை மறந்திடு எண்டு கெஞ்சினனான். நான் நேர்த்திவைச்சதாலதான் நீங்க விழுந்தனிங்க எண்டு அம்மாட்ட சொல்லுவமோ? அதுக்கும் அம்மா அடிச்சிட்டா. பிறகு வேப்பமரத்தில கட்டியிருக்கிற ஊஞ்சலில ஆடி ஆடி நாவல்மரத்துக்கு சொன்னனான். கதை கேட்பவர்களைவிட கதை சொல்லிக்குத்தான் அதில் இன்பம் அதிகம். இப்படியே கதைகேட்டும் கதைசொல்லியும் வாழ்ந்த காலம் எமக்கு தெரியாமலே மெல்ல மெல்ல நழுவிய எதிர்பாராத இரவொன்றில் வீட்டையும் மரங்களையும் தனியேவிட்டுவிட்டு வெளியேறிய பொழுதும் கதை சொல்ல ஆருமில்லாமல் இந்த வீடும் மரங்களும் எங்களை தேடித்தவித்திருக்கும். அவைகள் இப்பவும் காயப்பட்ட உடலோடும், மனதோடும் வயது முதிர்ந்தபடி என்னையே பார்த்து கொண்டிருந்தன. அவைகளின் குரல்கள் மாறமல் மிகுதி கதையை சொல் சொல் என கேட்டு அவதிப்படுத்திக்கொண்டிருந்தன. .எதைச்சொல்வது எதிலிருந்து ஆரம்பிப்பது என்ரை அம்மாவை உங்களை எல்லாவற்றையும் தனியாக விட்டு விட்டு போன கதையையா? ஜரோப்பா தெருவெல்லாம் அகதியாக அலைந்தையா? எச்சில் கோப்பைகளையும்,

அவர்களின் மலசலகூடங்களை கழுவி கழுவி அழுத கதையையா எதைச்சொல்ல? எங்கு தொடங்கி எங்கு முடிக்க? அந்த பத்துவருடக்கதையை எப்படி சொல்லி முடிப்பன்? இழப்பையும் துயரங்களையும் எங்கேயாவது ஒரு மூலையில் குவித்துவிடவேண்டும் என்று எத்தனை நாளாய் காத்திருந்தனான்

வேறென்ன சொல்வேன் சொல்வதற்கு எவ்வளவோ இருக்கிறது. எல்லாமே வெளிச்சத்தில் நடந்து இருட்டில் மறைந்த கதைகள் இல்லை அத்தனையும் நிஜங்கள் இருளை காட்டி வெளிச்சத்தில்தானே வாழ்கின்றீர்கள் என்றார்கள் சாத்தான்கள். இல்லை என்று மனம் சொன்னாலும் ஓம் எண்டுதான் தலை தன்பாட்டில் ஆட்டியது. இல்லை என்று சொன்னவர்களின் இரத்தத்தை மண் உறிஞ்சி சிவப்பானது. வெளியே எறிவதற்கு பெருமூச்சை தவிர வேறு எதுவும் இல்லாத நாளொன்றில் கதைகேட்ட மரங்களையும் படிகளையும் விட்டுவிட்டு வீட்டுக்கும் மண்ணுக்கும் புறமுதுகு காட்டியபடி வெளியேறிய இரத்தம்தோய்ந்த பல கால்களோடு சேர்ந்து நடந்த கால்கள் ஏழு மலை தாண்டி, ,ஏழுகடல் தாண்டி தப்பிவிட்டோம் என்ற நினைப்பு எழுந்தபொழுது பேய்கள் உலாவும் இன்னொரு தேசத்தில் விழுந்துகிடந்தேன்.

(3)

என்னை மீட்க குதிரை குளம்பொலி ஒலிக்க எந்த இளவரசனும் வரவே இல்லை. சாபத்தால் எல்லாவற்றையும் மறந்த துஷ்யந்தன்போல் ரவி வேலைநாட்களையும் டொச் மார்க்கையும் மட்டும் கணக்கு பார்த்துக்கொண்டிருந்தார் நானும் சகுந்தலையைப்போல் ஏதாவது நினைவிருக்கா என்று புலம்பியபடி சந்திக்கும் அத்தனை இலையுதிர்ந்த மரங்களோடு மனதை பகிர்ந்து குளிரில் விறைக்கும் பாதங்கள்போல் மனதும் மரத்துபோகும். ஆனாலும் இழுத்து இழுத்து நடந்தேன் எங்காயவது எங்கேயாவது ஒரு நதியின் கரைகிடைக்கும் என்ற நம்பிக்கையோடு.

அகதிவாழ்க்கை என்வீட்டுக்கு பின்புறத்தில் யாருக்கும் தெரியாத ஆற்றைத்தான் ஓடவிட்டது. போர்க்காலத்து பாழடைந்தவீடும்;, சிறுவயதில் அக்காவுக்கு அளவில்லாத சட்டையைதந்தாலே அழுது அடம்பிடிக்கும் எனக்கு முகம் அறியாத வெள்ளையர்களின் பழைய உடைகளும், மணி அடிக்கும்பொழுது வரிசையாக பிச்சைக்கு நிற்பதுபோல் நின்று வாங்கும் உணவும் அந்த ஆற்றின் நீரை அதிகப்படுத்தியது. ஏதோ இவர்களின் எச்சில் பாத்திரம் கழுவுவதற்கும் குப்பைகளை துப்பரவு செய்வதற்காகவும் சாபம்பெற்று பிறந்தவள்போல் என்னை சபித்த மந்திரவாதியும் மந்திரக்கோலை தொலைத்துவிட்டு தேடிக்கொண்டிருக்கின்றான். நானும் சாபவிமோசனம் பெறுவதற்காய் அந்த மந்திரவாதியை தேடிக்கொண்டே இருக்கிறன். என் எல்லாக் கனவுகளும், அந்த நிலாக்கால நினைவுகளும் இந்த கடல் தாண்டிய பயணத்தில் புதைந்து போய்விடுமென நான் நினைத்தே பார்க்கவில்லை. அவைகளை நான் எங்குபோய் தேடுவேன்.? இப்படித்தான் எல்லாரும்

எதையாவது தொலைத்துவிட்டு தேடிக்கொண்டே இருக்கிறார்கள். தேடல் ஒரு முடிவிலி.

தொலைந்த அத்தனையும் கிடைத்துவிட்டால். என்ரை அம்மாவின் விரலோடு கடைசிநேரம் மட்டும் இருந்த எழுத்து மோதிரம் இப்ப என்ரை விரலில அதை தடவும் போதெல்லாம் சின்ன வயதில படித்த அலாவுதீன் கதைதான் நினைவில்வரும் அதில வாறமாதிரி ஒரு பூதம்வந்து என்ன வேண்டும் எண்டு கேட்டா எல்லாவற்றையும் என்ரை அம்மாவோடு வாழ்ந்த அந்த சின்னப்பருவம், யாழ்தேவிபோல் நீண்டு கொண்டே போகும் என்ரை குஞ்சு அம்மான்ரை அந்த அழகான வீடு;, சின்ன மழைக்கும் நிறைந்து வழியும் அந்த சின்னக்கிணறு, மழைக்காலம் வந்துவிட்டால் சாமிநாதனிடம் கொப்பி தாள்களை கிழித்து நானும் அக்காவும் கால்களை கீறி கொடுத்துவிடுவோம் எனக்கு பிடித்த சிவப்பு நிறத்திலும் அக்காவுக்பிடித்த பச்சை நிறத்திலும் மிதியடி கட்டை வந்துவிடும். அதைபோட்டபடி முற்றத்தில் ஓடும் வெள்ளமெல்லாம் நடந்துதிரிவம் பிறகு இரவில கால்; கடிக்கத்தொடங்கிவிடும் அதற்கும் சாமிநாதன்தான் வேப்பம்கொட்டை புகைபோட்டு அக்காவையும் என்னையும் கதிரையில இருத்திவிட்டு புகைகாட்டுவார். எதைவேண்டாமென்று சொல்ல முடியும்? எல்லா நினைவுகளையும் என்னுள் சுமந்தபடி பனிபடர்ந்த பாதையெல்லாம் நடந்து நடந்து பாதைகள் நீண்டதே தவிர என் நினைவுகள் விழுந்து கிடக்கும் எந்த இடத்தையும் பார்க்க முடியாமல் எல்லா பாதைகளும் மூடப்பட்டுக்கிடந்தன. என் அம்மாவின் உடலை எரித்த அந்த இடம், என் நினைவுகளை தன்னுள் புதைத்து பெருமூச்சை விட்டு பின் நினைவுகள் மங்க மங்க விழித்து விழித்து என்னை தேடிய விழிகள் நிரந்தரமாக மூடிய அந்த கடைசி அறையை பார்க்கும் அந்த நிமிடங்களுக்காக உயிர்வாழலாம் என்ற என் வலிகளை எந்த கவிஞ்சானாலும் கவிவடிக்கமுடியாத வலிகள் அவை..

வீடு செல்லல் நினைத்தே இராத நாளொன்றில் நடந்து முடிந்துவிட்டது. இனி பார்ப்பேனா என்று ஏங்கிய அத்தனையும் பார்க்கபோகின்றேன் என்ற நினைப்பு அப்போது மனதை நிறைத்து மகிழ்வை தந்தாலும் நாடு கடத்தல் அதுவும் ரவி இல்லாத பொழுதொன்றில் நடந்தேறியது அழமுடியாத அதிர்ச்சியாக இருந்தது. நானும் பிள்ளைகளும் என்ன செய்யப்போகின்றோம் ? என்ற கேள்வி மட்டும் நீண்டு கொண்டேபோனது. ஆனால் தெருக்கள் மட்டும் சுருங்கி சிறுத்துபோய் கிடந்தன. முன்பெல்லாம் பொண்ட் ரீயுட்டரிக்கும், றிமகோலுக்கும் சைக்கிளில் போகும் பொழுது ஏதோ நீண்ட தூரம் போவதுபோல் இருக்கும். செந்தில் மாஸ்ரர் பொருளாதார வாகுப்பு எடுக்க முதல் போய் சேரவேண்;டும் எண்டு எப்படி அவசரமா போனாலும் பிந்திவிடும். நான் வகுப்புக்கு வந்தாப்பிறகுதான் நீர் வருவீராக்கும் எண்டு சொல்லி அவரும் களைச்சுபோய்விடுவார். ஆனா இப்போ பஸ் நிலையத்திலிருந்து எங்கட ரோட்டுக்கு வர ஐந்து நிமிடம் போதும்போல் இருந்தது.எல்லாமே ஒரு குச்சு ஒழுங்கைபோல் இருந்தது.

(4)

எங்கு பார்த்தாலும் பச்சை மயம் இதுதான் எங்கள் ஊரின் நிறமோ என நினைக்கவைத்தது. பச்சை வாகனம், பச்சை உடை, பச்சை தொப்பி பச்சை நிறத்தை என்னை அறியாமல் மனம் வெறுக்கத்தொடங்கியது . ஏதோ ஒரு அன்னிய நாட்டுக்குள் நடப்பதுபோல் மனம் படபடத்தது. பிள்ளைகள் ஏதும் அறியாது சிரிப்போடு எல்லாவற்றையும் ரசித்தார்கள். பச்சை தொப்பிக்குள் மறைந்து கிடக்கும் அந்தக்கண்களை நேருக்கு நேராக பார்ப்பதை தவிர்த்தபடி நகர்வது சிறுவயதில் விளையாடிய கிளித்தட்டைத்தான் நினைவுபடுத்தியது. கிளி கடைப்பிள்ளையார் கோவில் ஒலிபெருக்கியிலிருந்துவரும் எம்.ஜியாரின் பாட்டை முனு முனுத்தபடி எங்களை கவனிக்காதுபோல் நிற்பார். நாங்களும் கிளியின்ர கண்களையே பார்த்தபடி மெல்ல அடுத்த கோட்டுக்குள் தாவுவோம் அப்ப பார்த்து முதுகில் ஒரு அடிவிழும் கிளியாக அடிக்கடி ரஞ்சன்தான் வருவான். அந்த வலிமாறமுதல் திரும்பவும் விட்ட இடத்தைபிடிக்க முயற்சி செய்வோம். சிறுவயது விளையாட்டுக்கள் வாழ்க்கையோடு ஒத்துநடந்தபடி இருப்பதை நினைக்க ஆச்சரியமாக இருந்தது. ஜேர்மனில் ரஞ்சனையை சந்தித்தபொழுது அவனும் இப்படித்தான் சொன்னான் ஒரு நாள் அதிகாலை எல்லோரையும் சந்தி காம்புக்குவரும்படி ஒலிபெருக்கியில் அழைத்துவிட்டு வரிசையாக நிற்கவைத்து கண்ணைகட்டிவிட்டு இழுத்து செல்லும்போது எவடம் எவடம் புளியடி புளியடி விளையாட்டு நினைவில்வந்து அந்த நிலையிலும்தான் சிரித்து அதற்கும் அடிவாங்கியதாக சொல்லிசிரித்தான்.

எனது வீடு என் பிள்ளைகள் நித்திரைகொள்ளும்வரை வாய்ஓயாது சொல்லி சொல்லி மகிழ்ந்த என்ரை அம்மான்ரவீடு தன் முகம் இழந்து நின்ற காட்சியைக்கண்ட பிள்ளைகள் ஏமாற்றத்தோடு என்னை பார்த்தார்கள். என்னால் அழமட்டும்தான் முடிந்தது. இடிபாடுகளுக்கிடையிலும், பத்தைகளுக்கிடையிலும் சிக்குண்டு கிடக்கும் என்ரை அம்மான்ர வீடும் என்னை பரிதாபமாக பார்த்தது. சிலநேரம் வீட்டுக்கும் என்னை அடையாளம் தெரியேல்லையோ? இல்லையே சந்தியில வாசுகி கண்டிட்டு நான் அப்பிடியே இருக்கிறன் எண்டுதானே சொன்னவள். வீடு என்னோடு கதைத்தது. அதன் குரல் மட்டும் மாறமல் அப்படியே இருந்தது. வீட்டிடம் கேட்பதற்கு நிறைய கதைகள் இருந்தன என்ரை அம்மாவை பற்றின கதைகள் நிறைந்துபோய் கிடந்தன. இவைகளுக்குள்ள இருந்து இந்த வீட்டை எப்படி வெளியில எடுக்கப்போகிறன்? முன்பும் இப்படித்தான் சிரித்த முகங்களோடு இருந்த எங்கட தெரு வீடுகளின் மேல் மரணநிழல்கள் படரும் நிலை வந்தபோது உயிர்களை பிடித்தபடி சமைத்த உணவு ஆறுமுன் திறந்த கதவுகளை மூடமறந்து ஓடினோம் எம்முதுகளின் பின் அன்னிய மொழிகளின் கூக்குரலும் எம் மொழிகளின் அலறலும் கேட்டபடி இருந்தது விரைவாக ஓடினோம். துயர்பெருகி நெருப்பொன்று மனதினுள் எழ ஒரு கணம் மூச்சு வாங்க முகங்களை திருப்பிய பொழுது ஓலம் எழும்பிய குரல்களோடு கரும்புகையும் சேர்ந்து பரவின அக்காட்சி கண்களில் இப்பவும் விரிந்துகொண்டே போனது. பின் ஒரு நாள் வீட்டுக்கு திரும்பிய பொழுது வீட்டைப்பார்த்து அம்மா அழுத அழுகை. எல்லா நினைவுகளும் அம்புலிமாமாவில் வாசித்த சிந்து பாத்கதையில்வந்த முதுகைவிட்டு இறங்காத கிழவன் மாதிரி எல்லாம் ....

நாலுபக்கமும் மதில்களும் வேலிகளும் உடைத்தும் வெட்டியும் விழுந்து கிடந்தன. ராகினிவீடும், லலிதாவீடும், பின்வீட்டு கமலராணிவீடும் ஒரே வளவுக்குள் இருப்பதுபோல் எந்த வளவுக்கும் எல்லையும் இல்லை. பொட்டுக்களும் இல்லை. முன்பெல்லாம் வேலிக்கு பொட்டுவைப்பது ஒரு உறவுப்பாலம்போல இருந்தது. எங்கட வீட்டு பொட்டால் புகுந்து ராகினிவீட்டுக்குபோய் பிறகு ராகினிவீட்டு பொட்டால்போனால் பின்வீட்டு ராணி அக்காவீட்டுக்குபோய் ஆஸ்பத்திரி ரோட்டுக்கு போயிடலாம். ஆரு போனாலும் ஆரது எண்டு கேட்பினம் பெயர் சொல்லவே தேவையில்லை அது நான் எண்டால் காணும் அம்மாவும் ஆ பரமேஸ்வரியே எண்டு கேட்பா நாங்களும் பலகைகட்டையை பிள்ளை எண்டு தூக்கிக்கொண்டு பொட்டுக்குள்ளாலையே போய்வருவம். இரவு படுக்கப்போவதற்கு முதல் சரியா எட்டுமணிக்கு ராகினி, கமலா, நாளாயினி, சீனி அக்கா நான் எல்லாரும் அந்தப்படியில பொன்னுக்கோனுக்காக காத்திருப்பம். பெயரைப்போலவே வித்தியமான மனிதர். தன்ரை படத்துக்கு சிதம்பரத்தம் பூவைத்து குற்றாயினவார் எண்ட தேவரத்தை பாடுவார். இரவு எங்களுக்கு கதைசொல்லி அவர்தான். எப்பபார்த்தாலும் ஆனைக்கோட்டைக்கு வில்லுவண்டில் பூட்டி நல்லெண்ணை வாங்கபோற கதையைத்தான் மாற்றி மாற்றி சொல்லுவார். அப்பவெல்லாம் ஆனைக்கோட்டைக்கு போய்வர இரண்டு நாள் பிடிக்குமாம்

(5)

ஏன் பொன்னுக்கோன் நாங்கள் அத்தானின்ட காரில மானிப்பாய்க்கு போகேக்க ஆனைக்கோட்டை டக்கெண்டு வருகிது எண்டு கேட்டா இப்பமாதிரி றோட்டே அப்ப இருந்தது சரி என்னத்தில விட்டனான் சரியா பன்னிரண்டு மணிக்கு சலங்கை சத்தத்தோட மோகினி பிசாசு வரும.; இப்ப அக்கா நான் ராகினி கமலா எல்லாரும் நெருக்கி இருப்பம். நான் உடன வேட்டியை களற்றி தலைப்பாகை கட்டினா மோகினி பிசாசு மறைஞ்சிடும் எண்டு சொல்லி முடிப்பார் .நாங்க வெட்கத்தில சட்டையால முகத்தை முடுவம். எத்தனை தரம் கேட்டாலும் பயம்தரும் அலுக்காத கதை அது. ஆனா கதை முடிய அம்மாவை பின் லையிற்றைபோட்டிட்டு பொட்டுக்குகிட்ட வாங்கோ எண்டு அழுது கொண்டு நிற்பம். றோட்டால போற வேலையும இல்லை. அதுவே பிறகு ஆமிக்கு பிடிபடாமல் திரியிறதுக்கும் நல்ல விஷயமா இருந்தது. அடிவளவு வேலி அடைக்கிற நாளெல்லாம் ராகினியின்ர அம்மா வேலிஅடைக்கிற திருநாவுக்கரசோடே சேர்ந்து கதியாலை கொஞ்சம் கொஞ்சமா எங்கட வளவுக்க வைப்பா அப்ப அக்காவும் நானும் அம்மாட்ட ஓடிப்போய் சொல்லுவம். அம்மா சொன்னவ மகேஷ்போகேக்க கொண்டா போகப்போறா. இப்ப வீட்டை வித்துப்போட்டு ராகினிவீடு கனடாவுக்கு போயிட்டினம். அமுதக்காபிரான்ஸ்சுக்குபோயிட்டா. கமலராணிவீடு எங்க போயிருப்பினம்.? அவையின்ர கிணத்துக்கட்டு வெறுமையாக கிடந்தது. எல்லா முகங்களையும் அந்தந்த இடத்தில் நிற்கவைத்து பார்க்க சிரிப்புத்தான் வந்தது. முன்பு சரியா ஏழுமணிக்கு பிறந்தநாள் வாழ்த்து தொடங்க போடுற றேடியோ இரவின்மடியில் மட்டும்

பாடிக்கொண்டே இருக்கும். பொங்கும் பூம்புனல் தொடங்க நாங்களும் வீட்டுக்கும் கிணற்றடிக்குமாய் ஓடத்தொடங்குவம். நாங்கள் குளிக்கிறதையும், முகம் கழுவுறதையும் பார்க்கிறதுக்காக இந்தக்கிணற்றுகட்டில ஏறிநிற்கிற கண்ணன், முகுந்தன் ஆரையும் காணவே இல்லை எந்த ஐரோப்பாதெருவெல்லாம் அகதியாய் அலைகிறார்களோ? ராகினிவீட்டிலும் புதுமுகங்கள் எல்லா உறவுகளும் தொலைந்திருந்த ஊரில் நிழலைக்கண்டால் கூட பயமாக இருந்தது. ஆனால் ஒழுங்கைக்குள்ள தனந்திரனைம், வாசுகியையும் கண்டவுடன் சந்தோஷமாக இருந்தது. தனேந்திரன் எல்லாவற்றாலும் மாறியிருந்தாலும் குதிக்கால் நிலத்தில் படாமல் இப்பவும் தொங்கி தொங்கி நடந்துதிரிவதை பார்க்கும் பொழுதெல்லாம் சின்ன வயது நினைவுகள்எல்லா இடங்களிலும் விதைத்துபோய் கிடந்தன. எத்தனை நினைவுகள் எவ்வளவு சந்தோஷம் நிறைந்த வாழ்க்கை அது. எல்லாத்தையும் இழந்துவிட்டோமா அல்லது தொலைத்துவிட்டு தேடித்திரிகின்றோமா? ராகினி வீட்டில் புதுக்குழந்தைகள் நாங்கள் விளையாடித்திரிந்த அதே இடத்தில் பிளேன்கோடு கீறி றைட்டோ எண்டு கேட்க என்னுடைய பிள்ளைகள் முள்ளி (அவுட்) எண்டார்கள்.

வாழ்க்கையில் பல பக்கங்களை கறையான் அரித்துவிட்டிருந்தது ஆனாலும் அவற்றை எடுத்து தூசிதட்டி பார்க்க மனம் தூண்டிக்கொண்டே இருந்தது. அடிவளவில் போய் நின்றால் பண்ணை பாலத்தில் வாகனங்கள் போகும் பொழுது ஒரு சத்தம் கேட்கும் அம்மாவோடு படுத்திருந்து எத்தனை வாகனம் போனது எண்டு எண்ணியபடியே நித்திரை ஆகிவிடுவேன். அந்த சத்தத்தை இப்ப இரவில கேட்க பயமாக இருந்தது.. வெளிநாட்டில் பத்துமணிக்கு பிறகு வீடுகளுக்குள் நடந்தாலே கீழ் வீட்டுக்கு இடைஞ்சல்வந்துவிடும் எண்ட பயத்தில் முயல்மாதிரி பூனைமாதிரி நடக்கும்பொழுதெல்லாம் இரவிரவாக கடைப்பிள்ளையார் கோவில் திருவிழாவில் சங்கர் ஐயரின் பிள்ளைகள் மருதமலை மாமணியே முருகையா, யாருக்காக இது யாருக்காக எண்டும் பாடிறது யாழ்ப்பாணம் முழுக்க கேட்கும். இந்திரா, கலா பிறேமக்கா எல்லாரும் இப்ப பிள்ளையார் கோவில் படியில இருந்து நாடியில கையை ஊண்டிக்கொண்டு கேட்டுக்கொண்டு இருப்பினம். சிக் இந்த ஐயா என்னை விடமாட்டார் எண்டு கவலைப்பட்டுக்கொண்டு படுத்திருக்க விடிஞ்சிடும். திருவிழா இல்லாத நாளில ஆடிக்காத்துக்கு கற்குளத்தில விண்கட்டி போட்டிக்கு பறக்கவிடுற எட்டுமுள பட்டம், பாம்பு பட்டங்களின்ற விண்சத்தம் கேட்டபடி இருக்கும் ஒண்டுமே இல்லாட்டி ஆட்டுக்காற கோபலும் சறோவும் சவுந்தர்ராஜன், சுசிலா மாதிரி மாறி மாறி பாட்டு பாடுவினம் இவைகளை கேட்டபடிதான் அந்த தெருவே நித்திரை கொள்ளும். கொட்டடி நமச்சிவாய பள்ளிக்கூடத்தில மணிச்சத்தம், தேவாரம் பாடுறசத்தம், பாண்வருகிது பாண்வருகிது எண்டு குழந்தைகளும் காகங்களும் கத்தி கரையும் எந்த சத்தத்தையும் காணவே இல்லை. எல்லா குழந்தைகளின் சங்கீத குரல்களெல்லாம் எங்கேயோ தொலைந்துபோயிருந்தன வெறுமை எங்கு பார்த்தாலும் வெறுமையும் தூரோகமும்.பரந்து போய்கிடந்தன. மனிதர்கள் மட்டுமா எங்களுக்கு தூரோகம் செய்கிறார்கள். நாங்கள் நம்பியிருந்த வில்லூண்டி பிள்ளையாரும், ஐயானரும், வைரவரும்,

நல்லூர் முருகனும் சேர்ந்து தூரோகம் செய்துவிட்டார்கள். கடிதம் எழுதும்போது கூட ஊசிமயம் பிள்ளையார் துணை எண்டு எல்லாவற்றுக்கும் அவர்கள்தான் துணையெண்டு நம்பியிருந்தோம் எல்லாரும் சோந்து நம்பிக்கை தூரோகம் செய்துவிட்டார்கள். எங்கேயாவது ஒரு மூலையில் போயிருந்து அழவேண்டும்போல் இருந்தது. எந்த மூலையை பார்த்தாலும் ஏதோஒரு நினைவு அல்லது ஏதோ ஒரு குரல் கேள்வி கேட்டபடியே இருந்தது. றைட்டோ பிள்ளைகள் விளையாடிபடியே இருந்தார்கள்.

(6)

எப்போதும் என் கனவுகளை ஏதாவது ஒரு துப்பாக்கி சத்தம் கலைத்தபடியே இருக்கும். சத்தத்தை கேட்டவுடன் நெஞ்சு படபடத்தது. ஐயோ என்ரை பிள்ளைகள் எண்டபடி ஓடினேன் பக்கத்து வீட்;டு முற்றத்தில் ஒரு குழந்தைகளையும் காணவில்லை. இவர்கள் மட்டும் கீழே கிடந்த குருவியை பார்த்தபடி இருந்தார்கள். எனக்கு என்ன செய்வது எண்டே தெரியவில்லை. என்னைக்கண்டவுடன் அவர்கள் அழத்தொடங்கி விட்டார்கள். அம்மா அம்மா அந்த மாமா அவர்தான் அம்மா இந்த போகலை (பறவை) சுட்டவர். எனக்கு எரிச்சலாக இருந்தது. இவனை என்ர பிள்ளைகள் மாமா எண்டு நினைக்குதுகளே. கடவுளே இவர்களைப்பற்றி எதுவும் அறியாத இந்தக்குழந்தைகளுக்கு எப்படி சொல்லுவன்? எந்த மொழியில் சொல்லி விளங்கப்படுத்துவன்? இரவுமுழுவதும் பிள்ளைகள் அந்தக்குருவியைப்பற்றியே கதைத்தபடி இருந்தார்கள். அது இன்னொரு குருவியோட சேர்ந்து எங்கட மாமரத்தில வீடு கட்டிக்கொண்டிருந்ததாக சங்கீத சொல்லிக்கொண்டே இருந்தாள். பாவம் அது ஒவ்வொரு தடியாய் கொண்டுவந்;தது நானும் பார்த்தனான் எண்டு சுமி சொல்லேக்க அவளின்ர கண்கள் கலங்கியிருந்தன. விடிந்ததும் ஒண்டுமே நடக்காததுபோல எங்கட செவ்விளனி மரத்தில ஓலைபிடிங்கி நாக்கு வழித்துக்கொண்டிருந்தான். இவன்தான் பொல்லாதவனா இருக்கவேணும். ஐயாவும் சாமிநாதனும் இந்த மரங்களை நடவும் வளாக்கவும் பட்டபாடு எவ்வளவு குப்பைகள் சாணி எண்டு உரம்போட்டு பார்த்து பார்த்து வளர்த்தவை. இவன் ஏதோ தன்ரை முப்பாட்டன் நட்ட மரம்மாதிரியெல்லோ நினைக்கிறான். ஒரு நாளைக்கு ஒரு ஓலையெண்டு பார்த்தாலும் முப்பது ஓலையை அனியாயமாக்கிறான். மரத்தை மட்டுமல்ல எங்கட எல்லாம் தங்களுடையது எண்டுதானே சொல்லினம் இவன் நாக்கு வழிக்கிற மாதிரி மனதில இருக்கிற அழுக்கையும் வழிசசால் எவ்வளவு நல்லா இருக்கும். மற்றவன் நான் பார்க்கிற நேரமெல்லாம் மெல்லிசா சிரிப்பான். பிள்ளைகளோட கையைக்காட்டி கையக்காட்டி கதைப்பான். இந்தப்பிள்ளைகளுக்கு சொன்னாலும் விளங்குதில்லை. அந்த சனியன்களுக்கு கிட்ட போகவேண்டாம் எண்டு சொன்னாலும் கேட்கிதுகள் இல்லை. அண்டைக்கும் இப்பிடித்தான்; முற்றவெளி முனியப்பர்கோவில், நூல்நிலையம், நான்படித்த றிமகோல், பூங்கா எண்டு ஒவ்வொன்றா காட்டிக்கொண்டு வரும் பொழுது திடீரென்று எப்படி முளைத்து வந்தார்களோ பச்சை பிசாசுகள் எலும்புமட்டுமே உள்ள உடம்பை அதுவும் இல்லாததுபோல் வளைத்தும் மடித்தும் பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். மனிதர்களின்

மறுபக்கத்தை அறியாத பிள்ளைகள் எல்லாவற்றையும் வேடிக்கை பார்க்கவேண்டும் எண்டு அடம்பிடித்தார்கள். வீட்டுக்குபோனாலும் தெரியாத மனிதர்கள் எதையும் பகிர்ந்து கொள்ள பயமாக இருந்தது. கடவுளே ரவியும் இல்லாமல் இந்தப்பிள்ளைகளோட நான் என்ன செய்யப்போகிறன்.? இண்டைக்கு எப்பிடியும் இதைப்பற்றி ரவியோட கதைக்கவேணும்.

பயம்மட்டுமே நிறைந்த வாழ்க்கை இது என் வீடுதானா? எண்ட சந்தேகத்தையும் எழுப்பிக்கொண்டிருந்தது. என்னோடையே எப்பவும் வாழ்ந்து கொண்டிருக்கும் என்ரை தொலைந்துபோன வீட்டை நான் தேடிக்கொண்டே இருந்தன். எல்லா வீட்டின் மூடின கதவுகளும் என்னை பயப்படுத்திக்கொண்டே இருந்தன. வெளிநாட்டிலும் மூடின கதவுகளை பார்க்கும் பொழுதெல்லாம் சின்னவயதில் படித்த சுகாதார புத்தகத்தில் காலை எழுந்தவுடன் என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்விக்கு மூடின யன்னல்களை திறந்தபடி முதுகாட்டிய ஒரு அம்மாவின் படம் நினைவில் வரும். இப்படித்தான் எதை பார்த்தாலும், கேட்டாலும் எல்லா நினைவுகளும் ஓடிவந்து முன்னுக்கு நிற்கும். எல்லாத்தையும் மறக்கவேணும் மற மற எண்டு மனம் சொன்னாலும் எதை மறக்கிறது? இந்த வீட்டில என்ரை அம்மாவோடு வாழ்ந்த வாழ்க்கையையா ? அல்லது ஜேர்மனியில் வாழ்ந்த வாழ்க்கையையா? எதை மறக்கிறது எல்லா நினைவுகளும் என்னை துண்டு துண்டாக உடைத்தெறிந்து கொண்டிருப்பதை தவிர வேறு எதுவும் செய்வதாக தெரியவில்லை. வாசுகியோடு சோந்து கொட்டடி சந்தியிலிருந்து பொன்னுத்துரை வீடுமட்டும் நடந்து ஒவ்வொரு வீட்டையும் பார்த்தபொழுது இந்த வீடுகளெல்லாம் எத்தனை தலைமுறைகளின் சிரித்த முகங்களை மட்டும் பார்த்து பழக்கப்பட்ட வீடுகள். இது எங்கட மாமிவீடு;, இதுவும் மாமிவீடு இது ஜெயாஅண்ணன் வீடு, முன்வீட்டு அன்ரி வீடு ரோசாப்பூவை பிச்சா அடிப்பன் எண்டு கத்திற சுப்பிரமணி அண்ணையின்ர குரலும். த பலன்ஸ் சீற் எண்டு இங்கையும் அங்கையும் நடக்கிற மீனாட்சி ரீயூட்டரி சத்திய மூர்த்தி மாஸ்ரின் எல்லா குரல்களும் அங்கேயே உறைந்து போய் கிடந்தன.

எந்த மூலையை பார்த்தாலும் ஏதாவது ஒரு நினைவு எழுந்தபடியே இருந்தன. சந்தியில் இருக்கும் கோடலிகந்தையர் வீட்டு அத்திமரம் முன்புபோலவே அத்திக்காய்களை றோட்டெல்லாம் பரப்பிவிட்டிருந்தது. லைடன் காமன்ஸ் பனியனும் கால்மேசும் அவித்த தண்ணி குளோறின் மணத்தோட ஓடின வாயக்கால் வறண்டுபோய் கிடந்தது. குளோறினைப்பற்றி விளங்காமல் கொட்டடி பள்ளிக்கூடம் விட்டுவரும்பொழுதெல்லாம் அந்த தண்ணீருக்குள் கால் அளைந்து விளையாடமல் வீட்டுக்கு வருவதே இல்லை. பள்ளிக்கூடத்து மூலையில அந்தமாமரம் அப்படியே நிண்டது. அந்த மரத்துக்கு கீழே சிவஞர்னம் ரீச்சர் கதிரைபோட்டிருந்து கொண்டு கேள்வி கேட்பா நாங்கள் மாமரத்தில இருந்து குருவிச்சை விழுமா எண்டு அண்ணாந்து பார்த்துக்கொண்டிருப்பம். இங்கதான் இதிலதான் கொடிவிழாவுக்கு கொடியேற்றி பத்துசதத்திற்கு கொடிவாங்கி சட்டையில குத்திறதும். அதோடசேர்த்து அம்மா சட்டையை தோய்த்தற்கு அழுத

அழுகையையும் இப்பொழுது நினைக்க சிரிப்புத்தான் வந்தது. வாசுகி எனக்கு மனோரஞ்சிதப்பூவை பிடிங்கி கைக்குள்வைத்தாள் என்ன பழம் ? எண்டு கேட்டாள் ம் பாலப்பழம் கண்ணை மூடி பாலப்பழத்தை நினைத்தேன் என்ன ஆச்சரியம் அதே மணம் மணக்கத்துடங்கியது. பிறகு மாம்பழம் இந்த மனோரஞ்சிதப்பூவை எப்பவும் கைக்குள்ளவைத்திருக்கிற கனகாம்பி, யோகாம்பி அவையின்ர அண்ணா எல்லாரும் எங்க வாசுகி இருக்கினம்? அவை பிரான்ஸ்சில எண்டு நினைக்கிறன். சீனிவாசகம்றோட், ஆஸ்பத்திரிறோட் எண்ட விலாசம் எல்லாம் மாறி பிரான்ஸ், ஜேர்மன் ,லண்டன் எண்டு மாறிப்போய் கிடந்தது. எல்லாமே மாறித்தான் போய்விட்டது. ஆனால் எந்த மாற்றமும் இயற்கையாக நடக்கவில்லை. அடுத்தவீட்டில் எது நடந்தாலும் எதுவுமே நடவாதமாதிரி மௌனமாக இருப்பவர்களை பார்க்கும் போது எரிச்சல் எரிச்சலாக வந்தது. மிகச்சிறுமியாக இருந்தபொழுது லேக்கவுசில் வேலைபார்க்கும் யோகாம்பியின் அண்ணா ஒரு நாள் அழுது கொண்டு இருந்தார் அப்பொழுதுதான் கெந்தி கெந்தி சைக்கிள்பழகும் காலம். உங்கட அண்ணா ஏன் அழுகிறார்? அண்ணாத்துரை செத்துப்போயிட்டாராம். அவர் உங்கட புங்குடுதீவில இருக்கிற சொந்தக்காரரா? இல்லை இந்தியாவில இருக்கிறவராம். அதுக்கேன் உங்கட அண்ணா அழுகிறார்? அழுதோம் யார் செத்தாலும் அழுதோம் நாய் செத்தாலும் அழுவோம், காகம் செத்தாலும் பாவம் எண்டுதான் சொல்லுவம். எல்லாம் மாறித்தான் போயிற்றுது வாசுகி. அவள் ஏனோ மௌனமாக வானத்தை பார்த்தாள்.

வரும் வழியில் பச்சை பிசாசுகளின் கூட்டம் தெருவை மறித்து நின்றது. பிள்ளைகள் இப்போது என்கைகளை இறுக்கி பிடிக்கத்தொடங்கிவிட்டார்கள். நானும் வாசுகியின் கையை இறுகபிடித்தேன். அவளின்கை ஈரமாகிக்கொண்டு வந்தது. எலும்புக்கூடுகள் அடுக்கப்பட்டுக்கிடந்தது இதில் தன்டைய கணவரினது எதுவாக இருக்கும் என்று தடுமாறிக்கொண்டிருந்த பெண்ணைப்பார்க பாவமாக இருந்தது. இவையள் எப்பிடி செத்திருப்பினம். சாப்பிட்ட சோறு தொண்டைக்குள்ள இறங்க முதல் இழுத்திட்டு போய்சுட்டிருப்பாங்கள், இல்லாட்டி போயிற்றுவாறன் எண்டு தானும் நம்பி மனைவியையும் நம்பவைத்திட்டு போகேக்க, விட்டிட்டு போன வீட்டை பார்க்க வரேக்க ஏதோ ஒன்று நடக்கேக்க எல்லாவற்றையும் பார்த்தபொழுது தலை சுற்றியது. அழுகை அழுகை எங்கு பார்த்தாலும் அழுகை. நெஞ்சு படக் படக் என்று அடிக்கும் சத்தம் வெளியில் கேட்கும்போல இருந்தது. சரி போகலாம் எண்டு சொல்லும் மட்டும் பயம். பிள்ளைகளின் கண்களில் சிரிப்பு மறைந்து மெல்ல பயம் படரத்தொடங்கிவிட்டது. சிலவேளைகளில் போகச்சொல்லிவிட்டு கடவுளே எண்டு நினைத்து ஒரு அடிவைப்பதற்கிடையில் திரும்பவும் கூப்பிடும்போது முன்பு நானும் அக்காவும் தும்பிபிடிப்பதற்காக பாம்ஸ் மரத்துக்கு அடியில பதுங்கியிருப்பம். பிறகு அதின்ர வாலில நூலை மெல்லிசா கட்டியிற்று பறக்கவிடுவம். அதுவும் புழுகத்தோட பறக்கும். கொஞ்சத்தூரம் பறக்கவிட்டிட்டு திரும்பவும் இழுப்பம். சில நேரங்களில விரலில ஊண்டி கடிச்சிட்டு நூலோடேயே பறந்துபோயிடும். அந்த நினைவுதான் வந்தது. இன்பம் மட்டுமே நிறைந்து கிடந்த பெருவெளிகளின் ஒவ்வொரு துகள்களுக்குள்ளும் எத்தனையோ கதைகள்

புதையுண்டுபோய் கிடந்தன.

திரும்பவும் மாமரத்தில் குருவிகளின் சத்தம் கேட்கத்தொடங்கிவிட்டது. சங்கீதாவுக்கும் சுமிக்கும் ஒரே சந்தோஷம். அம்மா அம்மா அங்க பாருங்க திரும்ப கூடு கட்டிட்டினம். பிள்ளைகளின் சிரிப்பையும் கூட்டையும் முறைத்தபடி பார்த்துக்கொண்டிருந்தான். அவனை பார்க்கும் பொழுதெல்லாம் ஏதோ ஒரு பயமும் படபடப்பும் வந்துகொண்டே இருக்கும். யாரோடு இதைப்பற்றி கதைப்பது. வாசுகி வீட்டுக்கு போனபின் பழையபடி தனிமை பயம் ரவியோடு கதைக்கவேண்டும். ஆமிக்காரர்ஏன் நெடுக எங்களை மறிக்கினம்?, எலும்புகூடுகளை பார்த்து அவைஏன் அழுதவை? நித்திரை கொள்ளும் மட்டும் கேள்விகளை அடுக்கியபடியே இருந்தாள் சுமி அந்தக்குருவிகளுக்கு பெயரும் வைத்துவிட்டாள். அப்பாட்டை சொல்லி குருவிகளுக்கு சாப்பாடு அனுப்ப சொல்லவேணும் சங்கீதா ஏதோயோசித்தபடி இருந்தாள். அவளிடம் சின்னதா ஏதோ மாற்றம் தெரிந்தது. ; எப்ப அம்மா விடியும்? குருவிகளை பார்க்கவேணும் எண்டபடீயே சுமி நித்திரை கொண்டுவிட்டாள்.

(8

மரணம் பற்றிய கற்பனையும் எதிர்பார்ப்பும் எவ்வளவு பயங்கரமானது என்பதை அதை அனுபவித்தவர்களுக்கு மட்டுமே புரியும். ஏதோ நடக்கப்போகிறது நடக்கப்போகிறது எண்டு மனம் சொல்லிக்கொண்டே இருந்தது. சங்கீதாவை பார்த்தேன் அழுதுகொண்டு படுத்திருந்தாள். ஏன் குஞ்சு அழுகிறீங்க எண்டு கேட்டவுடன் என் நெஞ்சோடு தன் முகத்தை வைத்து இறுக்கிகட்டிப்பிடித்தாள் அவளின் உடம்பு நடுங்கியபடி இருந்தது. கடவுளே நான் என்ன செய்ய ? பயத்தை வெளிக்காட்டாமல் தடவிக்கொண்டிருந்தேன். எப்ப அம்மா நாங்கள் அப்பாட்டை போறது? சூல (பாடசாலை) தொடங்கப்போகிது. கேள்வி தொங்கியபடி நின்றது.

வெளியில் விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகள் கத்திக்கொண்டு வந்து என்னை கட்டிப்பிடித்து அழுதார்கள். எனக்கு என்ன செய்வது எண்டே தெரியவில்லை. . என்ன என்ன குஞ்சுகள். அம்மா அம்மா போகல் எண்டு விக்கினாள் சுமி. அங்கே அந்தக்குருவிகள் மாமரத்துக்கு கீழே அண்ணாந்து படுத்துக்கிடந்தன. பார்த்து பார்த்து நம்பிக்கையோடு கட்டின அந்தக்கூடும் பிய்த்து எறியப்பட்டு கிடந்தது. நான் அவர்களை பார்த்தபொழுது அவனின் சிரிப்பு எனக்கு பலதையும் விளங்கப்படுத்தியது. மற்ற ஆமி என்னை பார்ப்பதை தவிர்த்துக்கொண்டிருந்தான். பக்கத்துவீட்டுப்பிள்ளைகள் விளையாடத்தொடங்கிவிட்டார்கள். சங்கீதா என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். குஞ்சு அப்பாவோட கதைச்சனான். என்ன என்பதுபோல் நிமிர்ந்து பார்த்தாள். அப்பாவுக்கு லண்டனில் எல்லாம் சரிவந்திட்டுதாம்.

எங்கட ஜேர்மனி?

எங்கட ஜேர்மனி அவளின் கேள்வி என்னை என்னவோ செய்தது.

அம்மா எண்டாள்.

ம்

சொல்லுங்கோ

நாளைக்கு நாங்கள் கொழும்புக்கு போறம்.

ஏன்?

அப்பாட்டை போறம். ராகினி வீட்டில் பிள்ளைகள் ரைட்டோ ?எண்டு சத்தமாக கேட்டார்கள். சுமி விறாந்தை படியிலிருக்கும் தூணைக்கட்டிப்பிடித்துக்கொண்டே முள்ளி என்றாள் இன்னும் சத்தமாக.

svaratharajah@hotmail.com
பதிவுகள், அக்டோபர் 2008 இதழ் 106

7. வீட்டுக்கு வந்த வால் நட்சத்திரம் - புதுவை எழில் -

வீட்டுக்கு வந்த வால் நட்சத்திரம் சென்ற ஆண்டு வந்த வத்தலகுண்டு மாமா 'குடிலில் ஒளிரும் விடிவெள்ளி' பற்றி நிறைய செய்திகள் சொன்னாரு இல்ல! நம்ப ஏசு பொறந்தப்ப ஏதோ நட்சத்திரம் வந்துச்சு...அது வால் நட்சத்திரம் அப்டின்னு...ஏதேதோ கேள்விப் பட்டத பத்தி கேட்டப்ப 'தம்பி... ...அடுத்த ஆண்டு வரும் போது மறக்காம கேளு... சொல்றேன்னு" சொன்னாரு இந்த ஆண்டு மாமா வருவாருன்னு காத்திருந்தோம். ஆனா வரலையே! அவருக்கு ஏதோ அவசர வேலையாம். அதுக்கு பதிலா "வால் நட்சத்திரத்தையே அனுப்பி வைக்கிறேன். ஆனா ஜாக்கிரதைன்னு" போன்ல சொன்னாரு! எங்களுக்கு ஒண்ணும் புரியல! ஆனா காத்திருந்தோம். கடைசில வால் நட்சத்திரம் வந்து சேர்ந்தப்ப மயக்கம் போடாத குறைதான்!

மாமா எச்சரிச்ச மாதிரி வந்தது என்னவோ சரியான வால் நட்சத்திரம்தான்! பேரு பாலு! சரியான வாலு! அவரோட 5 வயது பேரன். அடேங்கப்பா கத்ரீனா கெட்டது போங்க! கிறிஸ்மஸ் நேரம் ஆச்சா... அம்மா பலகாரம் செஞ்சு ருசி பாக்க வைக்க வேண்டியதுதான். அஞ்சு நிமிஷத்துல தட்டு காலி! கைய போயி கழுவுடான்னா "வாணாம் பாட்டி, வெரலு எல்லாம் நக்கிப் புட்டேன்"ங்குறான். இந்தப் பயகிட்ட இருந்து பலகாரங்களை எப்படி பாதுகாப்பதுன்னு அம்மாவுக்கு ஒரே கவலை! வயசு பொண்ண ஊட்ல வச்சுக்கிட்டு சுத்தி சுத்தி வர வாலிப் பசங்ககிட்ட இருந்து அவள காப்பாத்த கவலை படுற அம்மாகாரி மாதிரி அம்மா அலைபாஞ்சி போனா!

சும்மா சொல்லக் கூடாது! பய படு சுறுசுறுப்பு! சாப்பாட்டுல மட்டும் இல்ல... எல்லாத்துலயும்தான். வருங்காலத்துல பெரிய அரசியல் தலைவனா வருவான் போல! வந்த அடுத்த நாளே எங்க அடுக்கு மாடி வீடுகள்ல குடிஇருக்கும் வாண்டுகள சேத்து பு8 கூட்டம் போட்டுபுட்டான்! எல்லாருக்கும் லீவு வேறு! கேக்கணுமா! பத்தாம் மாடியில இருந்து தடதடன்னு கடைசி அடுக்கு வீடு வரை ஓடுறது என்னா... உய்உய்னு விசில் சத்தம்தான்! மத்தியானம் யாரும் தூங்க முடியல. இவன் வெளியில இருந்தாலாவது வீPட்ல பிரச்சனை கொறையுமுனு பாத்தா வெளியில பிரச்சனை இவனால ரெண்டு மடங்கு ஆகிப் போச்சு! எல்லாரும் எங்க வீடு வரை வந்து பிராது குடுத்துட்டு போனாங்க!

என்ன பண்றதுன்னு யோசிச்சோம்! "மிச்சம் மீதி பலகாரம் செய்ய இவன சித்தாளா வச்சுக்க! சித்தாளு வேல எட்டாளு வேல...மா"ன்னு அம்மாவுக்கு சோப் போட்டோம். அம்மா அரண்டு போயிட்டா! முடியவே முடியாதுன்னுட்டு. ரொம்ப வற்புறுத்துனா ஸ்டிரைக்தான்னு பயமுறுத்துனா... ஆனா பயலோ 'பாட்டி, பாட்டி நான் ஒனக்கு ஒதவி செய்றேனே... அம்மாவுக்கு நான் தான் ஒதவி செய்வேன்...ஒனக்கும் ஒதவி செய்றேனே... பிளீஸ்'னு கெஞ்சறான். நாங்களும் ஒத்து ஊத

ஒரு வழியா அம்மா அரை மனசோட ஒத்துக்கிட்டா! அப்பாடான்னு நாங்க ஆளுக்கொரு வேலைய பாக்க கிளம்பிட்டோம்.

அம்மா வடைக்காக பருப்பை அரைத்துக் கொண்டு பரபரப்பா வேலையில மூழ்கி இருந்தா! கூடவே அப்பப்ப வெங்காயம், பச்ச மொளகா நறுக்கிக்கிட்டுனு ஒரே பிசியா இருந்தா. பாலு பய சத்தத்தையே காணோம். நாங்க நிம்மதியா அவங்க அவங்க வேலைய பாத்துக்கிட்டு இருந்தோம். "அடப் பாவி"ன்னு ஒரு சத்தம் உக்கிராண அறையில் இருந்து கேட்டது. கத்ரினா வேகத்துல பய வெளியே ஓடியாறான். கண்ணகி போஸ்ல ஆனா கைல கரண்டிக் காம்போடு அம்மா பின்னால ஓடியாறா... அப்பா, அண்ணா, தங்கச்சி, நானு எல்லாரும் என்னவோ ஏதுவோன்னு பதறி போனோம்!

அம்மா மூச்ச இரைக்க கத்தறா :' இவன் கண்ணுல படாம மைசூர் பாகு செஞ்சு உக்கிராண அறையில வச்சிருந்தேனா... எப்படிதான் இந்த கழுகு மூக்குல வேர்த்துதோ...பாவி, பாதிக்கு மேல தின்னு தொலைச்சிட்டானே... கடங்காரன்...."

'அட, சரிசரி விடு! சின்ன பய..."அப்பா அம்மாவ சமாதானப் படுத்துனார். "அது இல்லிங்க! கடல மாவு..இவ்வளவு தின்னா வயிறு என்னாத்துக்கு ஆவறது..." அம்மா அந்த ஆத்திரத்திலும் அந்த வாலுக்காக அனுதாபப் பட்டாள்!

"சரிமா, நீ போய் உன் வேலைய பாரு! மலை ஜோடிக்க போறேன். அவன நான் பாத்துக்கிறேன்..." - அம்மாகிட்ட சமாதானம் பேசி அனுப்பிவிட்டு அந்த வால் நட்சத்திரத்தை தேடுனா ஆளு சிட்டா பறந்துட்டான். மேல் வீடு கீழ் வீடுன்னு எல்லா இடத்திலேயும் தேடி கடைசியா எட்டாம் மாடி வீட்டுல புடிச்சேன். டிவி முன்னால, ஒரு கைல ரிமோட் கண்ட்ரோலும் மறு கைல பாப் கார்ன் பாக்கெட்டுமா!

வீட்டுக்காரர் கை எடுத்துக் கும்பிட்டார் - "ரொம்ப புண்ணியமாப் போவுங்க... தயவு செஞ்சி இந்த (குரங்கைன்னு சொல்ல வந்தவரு) பிள்ளைய கூட்டிக்கிட்டு போயிடுங்க! வந்ததுல இருந்து சானல மாத்தி மாத்தி ணயி பண்ணி இதொடு மூணாவது தடவையா ரவுண்டு வந்துட்டான்! டிவிக்கு ஏதாவது ஆயிடுமோன்னு பயமா இருக்கு..."

ஒண்ணும் பேசாம பாலுவ இழுத்துக்கொண்டு வந்தேன். மொதல்ல கொஞ்சம் முரண்டு புடிச்சான்! "மலை ஜோடிக்க ஒரு கை கொடுடா ராஜா"ன்னு தாஜா பண்ணிக் கொண்டு வந்து சேர்ந்தேன்.

மலை ஜோடிக்க ஆரம்பித்தேன். பயலும் கொஞ்சம் கை கொடுத்தான். அப்பப்ப உக்கிராண அறை பக்கம் போய் நோட்டம் விட்டான். அம்மா முன் ஜாக்கிரதை முனியம்மா ஆகி உக்கிராண அறைக்கு பெரிய பூட்டாவே போட்டு விட்டாள். பெரிய அண்ணன்

அவ்வப்போது வந்து பார்த்து திருத்தங்கள் சொன்னார். மாலை ஆறு மணி ஆகி இருக்கும். பெரும்பாலும் மலை முடிந்துவிட்டது. இனி மின்சார பல்புகளை போட்டு எரிய விடவேண்டியதுதான்
பாக்கி. குட்டி குட்டி விளக்குகளை மலையைச் சுற்றி வளைத்துப் போட்டேன். ஏறக்குறைய நான்கு சர்க்யூட்டுகள். பிளக்கை போட்டால் ஒண்ணு கூட எரியல. பாலுவ கூப்ட்டு பிளக்கு பக்கத்துல நிக்க வச்சேன். யாரும் பிளக்க போடமா பாத்துக்கன்னு
உத்தரவு! அண்ணன் வேறு பக்கத்துல வந்து நின்னுக்கிட்டாரு. ஒவ்வொரு சர்க்யூட்டு, பல்புன்னு சரிபாத்துக் கிட்டு வர்றேன். கழுத ஒதைச்சா மாதிரி ஒரு ஒதை. கைகால் எல்லாம் ஒதறிப் போச்சு!
"அண்ணே, வெளையாட கால நேரம் இல்லியா! இப்ப போய் இப்படி ஒதைக்கலாமா"ன்னு கேட்டேன். அண்ணன் முழிக்கிறாரு! "நான் ஒண்ணும் பண்ணலியே!' என்கிறார். 'டேய் பாலு பிளக்கை போட்டியா"ன்னு கேட்டேன். இல்லேனு தலை ஆட்டுனான்.
"சரி போடாதே'ன்னு சொல்லிட்டு மறுபடி செக் பண்ண கைய வெச்சேன். அவ்ளோதான் மறுபடி செம ஒதை! இப்போ புரிஞ்சு போச்சு... பயதான் பிளக்க போட்டிருக்கான் அதான் செம ஷாக்
அடிச்சுருச்சு! "ஏண்டா இப்படி பண்ணன்னு" கைய ஓங்கினா, " பிளக்கை சொருவுனா என்னா ஆகும்னு பாக்கத்தான்" ங்கிறான் பாவிப் பய மவன்!

ஒரு வழியா அத சரிபண்ணியாச்சு. இன்னொரு ஒயரை வெட்டி இணைக்க பிளேடைத் தேடுனா... அது இவன் கையில... "டேய் வாணாம்... வெட்டிக்குவ..." நான் சொல்லிக்கிட்டு இருக்கும் போதே 'வீல்'னு சத்தம். பாலு கைல இருந்து ரத்தம். "ஓ"ன்னு
அழுகை வேற... எல்லாரும் வந்து கூடிட்டாங்க. தங்கச்சி போய் டிங்ஞ்சர் எடுத்து வந்தா. அப்பாவும் நானும் பாலுவ புடிச்சுக்கிட்டோம். அண்ணன் பக்குவமா அவன் கைல டிங்ஞ்சர் போட்டு
சின்ன கட்டும் போட்டு விட்டார். அப்படியும் அவன் வாலுத்தனம் அடங்குல... சமையல் கட்டுக்கும் வரவேற்பு அறைக்குமா சுத்திகிட்டே கெடந்தான்... சமையல் கட்டுல வடை சுட்டுகிட்டு இருந்த அம்மா அவனை பல முறை விரட்டி விட்டாள். அங்க போய் ஒளியறதும் இங்க தாவி குதிக்கறதுமா ஒரே
அட்டகாசம். "ஒரு எடமா உட்காரேண்டா"ன்னு முதுவுல ரண்டு வச்சேன்.

மலை முடிச்சாச்சு! லைட் போட்டாச்சு! மலை கீழ் பக்கமா தாள சுத்தி மூடியாச்சு! அம்மா வடை சுட்டு முடித்த கையோடு பல வீடுகளுக்கு பலகாரம் கொடுத்து அனுப்பத் தொடங்கினா. தங்கச்சியும் நானுமா புது உடுப்புல மாத்தி மாத்தி பலகாரம் கொண்டு போய் கொடுத்துகிட்டு இருந்தோம்.

டெலிபோன் மணி அடிச்சுது. எடுத்து பேசிய அம்மாவின் முகம் எட்டுக் கோணலாக மாறியது! "என்னது எங்க வீட்டு வடையில மருந்து வாசனையா...? மசாலா கொஞ்சம் கூட

போட்டுட்டேன் போல...அதான்!" அம்மா சமாளித்துக் கொண்டு பதில் கூறினாள்! அப்பா உக்கிராண அறையில போயி மிஞ்சி இருந்ததுல ஒரு வடைய புட்டு வாயில போட்டவரு தூ தூன்னு துப்புனாரு. "ஆமாண்டி வடையில மருந்து வாசனைதான் வருது... இம் அயோடின் டிங்ஞ்சர் வாசனை..." - அப்பா சொல்ல அம்மா 'ஙே"ன்ன முழிச்சா! "வடையில மருந்து வாசனை எப்படி?" - யாருக்கும் புரியல!

"கண்டுபுடிச்சிட்டேன் கண்டுபுடிச்சிட்டேன்"ன்னு ஆர்க்கிமடீஸ் "யூரேக்கா யுரேக்கா"ன்னு கத்துன மாதிரி தங்கச்சி கத்துனா! "நம்ம பாலுவோட வாலுத்தனம் தாம்மா. அவன் வெரல வெட்டிகட்கிட்டான்னு டிங்ஞ்சர் போட்டு கட்டு கட்டுனோம்ல... பாவி வெரல வச்சுக்கிட்டு சும்மா இல்லாம அடுப்பங்கரையில போயி வடை மாவ ஒரு கலக்கு கலக்கி இருக்கான் போல! அதான் மருந்து வாசனை அடிக்குது வடை" என்றாள். "எங்க அந்த பய"ன்னு அம்மா கேட்க அப்பத்தான் கவனிச்சோம்... கொஞ்ச நேரமா அவன் சத்தத்தையே காணோமுன்னு.

எங்க போயிருப்பான்? வீடு முழுக்க தேடியாச்சு... ஆள காணோம். பரபரக்க நான் ஒரு பக்கம் தங்கச்சி ஒரு பக்கமா ஒடுனோம். எல்லா வீடுகள்ளயும் தேடுனோம். பயல காணோம்! எல்லாருக்கும் ஒரே கலவரம்.

மறுபடியும் டெலிபோன் மாமாதான்! பேரனுக்கு வாழ்த்து சொல்ல கூப்ட்டாரு. "பய வெளியே போயிருக்காண்ணா..." - அம்மா ஒரு வழியா சமாளிச்சா! அதுக்குள்ள பல டெலிபோன்கள்... வடையில மருந்து வாசனைன்னு. மசாலா அதிகம்னு அம்மா சமாளிச்சுக்கிட்டு இருந்தா! எங்கு தேடியும் பாலுவைக் காணோம்! ராத்திரி சாப்பாடு யாருக்கும் எறங்கல! மணி வேற ஆகிக்கொண்டே இருந்தது. இரவு சாமப் பூசைக்கு வேற போவனுமே! மணி பத்து பத்தரை இருக்கும்! பேசாம போலீசுக்கு போவ வேண்டியதுதான்னு முடிவுக்கு வந்தோம்.

அப்ப - மலை ஒரு குலுங்கு குலுங்கியது! எங்களுக்கு தூக்கி வாரி போட்டது. மறுபடியும் ஒரு குலுக்கல்! அட மலையில என்ன பூகம்பமா? எல்லாரும் திகீலோட மலைய பாக்க, "இம் பசிக்குது பாட்டி"ன்னு... சோம்பல் முறிச்சுக்கிட்டே மலை தாளை கிழிச்சுக்கிட்டு வெளியே வந்தான் பாலு.

"அடப் பாவி! எப்படா அதுக்கு உள்ள போன"ன்னு நான் அதட்ட அத்தனை பேரும் அவன் மேல் பாய்ந்தோம். அவன் மாவுல கைய போட்டுட்டு பாட்டி அடிக்க போறான்னு பயந்து போய் விளையாட்டா உள்ள போய் ஒளிஞ்சுகிட்டு இருக்கான். அது தெரியாம நானு மலை தாளை போட்டு மூடிட்டேன் போல. உள்ள பதுங்குன பய அசந்து போய் தூங்கிட்டான்!

எல்லாரும் அவன் மேல பாயவே டக்குனு குடில் முன்னாடி மண்டி போட்டு, 'சேசு பாப்பா, சேசு பாப்பா சீக்கிரம் வந்து பொறந்துடுங்க... ஒங்க கூட நானு வெளையாடனும்"... கண்ணை மூடிக்கொண்டு பய பக்தியா அவன் செபிக்க நாங்க அந்த வால் நட்சத்திரத்தை - எங்கள் வீட்டுக்கு வந்த அந்த வால் நட்சத்திரத்தை அப்படியே அணைத்துக்கொண்டோம்.

ஆம், ஆயிரம் தவறுகள் செய்தாலும் ஏசு பாப்பாவை நம் மனக்குடிலில் பிறக்க அழைத்து விட்டால் நாமும் பாலுவைப் போல் நல்ல பிள்ளையாகிவிட மாட்டோமா!

albertgi@gmail.com

பதிவுகள், தை 2009 இதழ் 109

****

7. உயிர்க்காற்று - கே.எஸ்.சுதாகர்

கதை ஒன்று.
களம் : இலங்கை

படார்' என்றொரு சத்தம். நான் விழித்துக் கொண்டேன். இரவுப்பொழுதாகையால் அந்தச் சத்தம் பெரிதாகக் கேட்டது. எத்தனை மணியாக இருக்கலாம்?

அப்பா வழக்கமாக நேரத்திற்கு (நாலரை ஐந்து மணியளவில்) எழும்பி சுவாமி கும்பிடத் தொடங்கி விடுவார்.

"அது என்ன சத்தம்?" படுக்கையிலிருந்தபடியே அப்பாவும் கேட்டார். எல்லாரும் எழுந்து கொண்டோம். விளக்கைப் போட்டோம். ஆளாளுக்கு ஒவ்வொரு அறையாகத் தேடுதல் செய்தோம். ஒன்றையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்பா மணிக்கூட்டைப் பார்த்தார். மணி மூன்று பதினைந்து.

"சரி எழும்பி விட்டேன். இனிச் சுவாமியைக் கும்பிடுவோம்" காலைக்கடன்களை முடித்து குளித்து பூக்கூடையை எடுத்துக் கொண்டார். தேவாரம் பாடியபடியே பூக்கள் கொய்வதற்காக முற்றத்திற்கு விரைந்தார். நாங்கள் மீண்டும் உறங்க முயற்சி செய்தோம். மனதில் பயம். அந்தச் சத்தம் இப்பவும் காதிற்குள் ஒலித்தபடி.

அப்பாவின் தேவாரங்களைக் கேட்டபடியே கண்ணயரும்போது, "ஓடி வாங்கோ! ஓடி

வாங்கோ!!" என்ற கூக்குரல் சுவாமிப்பட அறையிலிருந்து கேட்டது.

சுவாமிப்பட அறையில் - ஒரு பக்கச் சுவரில் நீட்டிற்கு தட்டு அடித்து, அதிலே நிறைய சுவாமிப்படங்களை வைத்திருந்தார் அப்பா. அவற்றின் மத்தியில் இருந்த ஒரு படம் நூற்றியெண்பது பாகையால் திரும்பி எதிராகி நின்றது.

அறையின் ஜன்னல்கள் எதுவுமே திறந்திருக்கவில்லை. காற்றும் ஒன்றும் பெரிதாக வீசவில்லை. நாங்கள் திகைத்துப் போனோம். இது எப்படி நடந்தது?

அப்பா கொஞ்ச நேரம் அந்தப்படத்தையே உற்று நோக்கியபடி இருந்தார். பின்னர் அந்தப்படத்தை திருப்பி நேராக வைத்தபோது அவர் கைகள் நடுங்கின.

முருகன் படம். கற்பூரம் சாம்பிராணி கொழுத்தி மணி அடித்து தேவாரங்கள் பாடினார்.

அம்மா எல்லாரிற்கும் சுடச்சுட தேநீர் வைத்துத் தந்தார். நானும் அண்ணாவும் படிப்பதற்காக புத்தகங்களை மேசை மீது பரப்பினோம். புலன்கள் ஒன்றாகவில்லை. ஆளாளுக்கு எப்படி நடந்திருக்கலாம் என்று கதைத்தபடி இருந்தோம். அப்பா கும்பிட்டு முடித்து சாய்வணைக்கதிரையில் சரிந்தார்.

விடியத் தொடங்கியது.

சற்று நேரத்திற்கெல்லாம் படலையில் அரவம் கேட்டது. "துரை... துரை..." என்று கூப்பிட்டபடியே ஒருவர் சைக்கிள் மணியையும் அடித்துக் கொண்டு சைக்கிளில் இருந்து குதித்தார். அப்பா அரிக்கன் விளக்கைத் தூக்கிக் கொண்டு 'கேற்' வரைக்கும் சென்றார். கேற்றைத் திறந்து, வந்தவரைக் கூட்டிக் கொண்டு உள்ளே வந்தார். அது சிவம் மாமா. அவர் வளவளவென்று கதைத்தபடியே வந்தார். அப்பாவின் குரலிலும் ஏதோ கலவரம் தெரிகிறது.

உள்ளே வந்தவர் "தம்பி இறந்து போனார்" என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு வீட்டிற்குள்ளே சென்று உடுப்பை மாற்றத் தொடங்கிவிட்டார். சிவம் மாமாவை இரு என்று கூடச் சொல்லவில்லை. அம்மாதான் அவருடன் பேச்சுக் கொடுத்தார்.

"என்ன நடந்தது?" - "ஹாட் அற்றாக்!" - "எத்தினை மணிமட்டிலை?" - "விடியப்புறம் மூன்று மணிமட்டிலை"

அம்மா இரண்டு சொல்லுக் கதைக்கவில்லை. அப்பா வெளிக்கிட்டுக் கொண்டு வந்துவிட்டார்.

"நான் போட்டு வாறன். விடிஞ்சாப்பிறகு நீங்களும் வெளிக்கிட்டு வாங்கோ" சொல்லிவிட்டு வந்தவருடன் கூடச் சென்றார். பின்னர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. திரும்பவும் வீட்டிற்குள் வந்தார்.

"அந்த முருகன் படம் - என்ரை தம்பி வாங்கித் தந்ததுதான்" என்றார்.

***** ***** *****

கதை இரண்டு.
களம்: அவுஸ்திரேலியா

ஒருமுறை எனது ஆசன வாயில் நோய் வந்து கஸ்டப்பட்டுப் போனேன். Fistula என்று அந்த நோயைச் சொல்வார்கள். மலம் சிரமமில்லாமல் வெளியேற உதவும் சுரப்பிகளின் துவாரம் அடைபடுவதால், சுரப்பிகளிலிருந்து வெளிவரும் நீர் வெளிப்படாமல் கிருமிகள் அதனைப் பாதிக்கும். மூன்றுமுறை சத்திரசிகிச்சை செய்தபின்னர்தான் ஓரளவு முன்னேற்றம் வந்தது. கார் ஓடும் போதும், இருக்கும்போதும் 'போதும்' என்றாகிவிடும். தலையணை போன்ற வட்ட வடிவிலான 'பிளாஸ்ரிக் குஷன்' ஒன்று எப்போதும் என்னுடன் கூடவே பிரயாணம் செய்யும்.

ஒருமுறை இராசு மாமா என்னைப் பார்க்க வரும்போது - இப்படியானவர்கள் அமருவதற்காக மருத்துவ ரீதியில் செய்யப்பட்ட பிளாஸ்ரிக்கிலான வளையம் ஒன்றிருப்பதாகச் சொன்னார். "எங்கே மாமா அதை வாங்கலாம்?" - "•பார்மசியில் வாங்கலாம்"
- "அதற்கு என்ன பெயர்?" - அவர் அதன் பெயரை மறந்துவிட்டார். "நான்கூட அதைத்தான் பாவிக்கிறேன். நெடுகலும் கார் ஓட வேண்டி வாறதாலை நோ வராமலிருக்க பாவிக்கிறனான்" சொல்லிக் கொண்டே காருக்குள் வைத்திருந்த அந்த வளையத்தை எடுத்து வந்தார். அந்த வளையத்தில் கூட அதன் 'பிறாண்ட் நேம்' இருந்ததேயொழிய அதன் பெயர் இருக்கவில்லை. பெயர் இல்லாத அதற்குள் மேலும் காற்றை ஊதினார் இராசு மாமா. தனது ஞாபகமாக அதை என்னிடம் தந்தார். தான் இன்னொன்று வாங்குவதாகவும் சொன்னார். அவரது அந்தக் கருணை உள்ளத்தை நான் வியந்தேன்.

கடந்த மூன்று நான்கு வருஷங்களாக அந்த வளையத்தைத்தான் பாவித்து வருகின்றேன். ஒரு 'ஷொக் அப்ஷோவர்' மாதிரி அது என்னைக் காத்து வருகின்றது. காரிற்குள் அதை நிரந்தரமாக விட்டு வைத்திருக்கின்றேன். அதற்குள் திரும்பவும் காற்றை ஊதவேண்டிய தேவை இற்றைவரை எனக்கு ஏற்படவில்லை.

இராசு மாமாவிற்கு திடீரென்று வருத்தம் கண்டது. சத்திரசிகிச்சை செய்த வைத்தியர்கள் அவர் பிழைப்பது மிகவும் கஸ்டம் என்று சொல்லிவிட்டார்கள்.

அவருக்கும் அது தெரிந்தே இருந்தது. அடிக்கடி வைத்தியசாலை சென்று அவரைப் பார்த்து வந்தேன். அவர் வாங்கித் தந்த வளையத்தை அவருக்கு நினைவூட்டினேன். அவர் ஊதித்தந்த காற்றுடன் பத்திரமாக இருப்பதாகவும் சொன்னேன். திரும்பிப் படுப்பதற்கெல்லாம் மிகவும் கஸ்டப்பட்டார். அந்த வளையத்தைப் போல தனது உடம்பு பூராவும் 'கவர்' பண்ணக்கூடியவாறு ஏதாவது இருந்தால் நல்லாக இருக்கும் என்றார்.

இராசு மாமாவை வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போகும்படி சொல்லிவிட்டார்கள். இருக்கும் காலங்களை - மகிழ்ச்சியாக - உறவினர்களுடனும் நண்பர்களுடனும் கழிப்பதற்காக அந்த ஏற்பாடு. நோயின் உபாதை நீங்குவதற்கு மாத்திரம் மருந்து கொடுத்தார்கள். இராசு மாமா சிரித்தபடியே காலத்தைக் கழித்தார்.

அடிக்கடி அவரிடம் போய் உரையாடிவிட்டு வருவேன். அப்படி ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை அங்கிளைச் சந்தித்துவிட்டு வந்து ஒரு குட்டித்தூக்கம் போட்டேன். மாலை நான்குமணி இருக்கும். இராசு மாமா இறந்துவிட்டார் என்ற செய்தி வந்தது.
அடித்துப்பிடித்துக் கொண்டு மீண்டும் அவர்களின் வீட்டிற்குப் புறப்பட்டேன். காரிற்குள் ஏறி இருந்தபோது முற்றாக ஒரு வேறு அனுபவத்தை நான் பெற்றேன். அந்த பிளாஸ்ரிக் வளையத்தினுள் இருந்த காற்று சுத்தமாக முழுவதும் வெளியேறி சுருங்கி இருந்தது. எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. இது எப்படி நடந்தது?

இரவு திரும்பி வரும்போது ஒரு மணியாகிவிட்டது. மறக்காமல் அந்த வளையத்தை எடுத்து வந்து காற்றினால் நிரப்பினேன். எங்காவது ஓட்டை இருக்கின்றதா எனச் சோதித்தேன். எந்தவிதமான துளைகளும் இல்லாமல் இருந்தது. இப்போது அந்த வளையத்தினுள் என்னுடைய 'உயிர்க்காற்று" புகுந்து கொண்டது.

kssutha@hotmail.com
பதிவுகள் 01 ஏப்ரில் 2011

8. அலைவுறும் உறக்கமோடு ஒரு கடிதம் - திலகபாமா

அன்புள்ள நிஷாந்த், நீ நலமாயில்லை அல்லது நலமாயிருப்பதாய் நம்புவதாய் எழுதிய கடிதத்திலிருந்து எனது பதில் துவங்குகின்றது. உன் எழுத்துக்கள் நடுங்குவதைக் கண்ணுற்ற நான் அதைத் தவிர்க்கவே இக்கடித்தை எழுதுகின்றேன். எல்லாரும் குழந்தைகளை யசோதைக்கு கண்ணன்போல் கடவுளே வாய்த்தாலும் நாகரீகத்திற்கு துல்லிய இயந்திரமாய் பழக்கிய காலத்தில் நான் உனை காடுகளை முகரவும் தூரத்து ஆபத்தில் காலடிச் சுவட்டை வாசிக்கவும் காற்றில் மிதந்து வந்த தேனின் வாசத்தைப் பற்றிக் கொண்டு பூக்களிடம் சேகரிக்கவும் கற்பித்தவள் சிங்கங்களின் தேசம் முயல்களின் தேசம் என மற்றவர்கள் பிரித்து வைத்த காலகட்டத்தில் நெருக்கடியில் வாழ்ந்து கொண்டு ஒவ்வொன்றின் ஒவ்வொருவரின் பெறுமானமும் பெருமதிப்பும் வேறு வேறானவை அதற்கான புரிதலே வாழ்க்கை எனவும் சொல்ல முயற்சித்தவள். இன்று நீ காடுகளின் இளவரசனாய் பதினாறாம் வயதில் முடி சூடுவதை கண்டு மகிழ்ந்தவள். பால் வேறுபாடுகளற்று பழக முடிந்தவன், பால் வேறுபாடுகளோடு வாழ நேரும் சந்தர்ப்பங்களைப் போதிக்க வேண்டிய தேவை வந்த போது எனை விட நீ அதிர்ந்தாய் ஆம் பதினாறு வயதில் மீண்டும் பள்ளியில் பெண்களோடு உனது படிப்பு காலங்கள் அமைந்த போது நான் கவலைப் படவில்லை. ஏனெனில் ஆண் பெண் வேறு பாடுகளற்று எப்பவும் நேசிக்க கற்றுத் தந்திருந்ததாக நம்பியிருந்தேன். ஆம் நீயும் அதுவரை அப்படித்தானிருந்தாய். உனது 12 வயது அத்தை மகன் அத்தையை பேருந்தில் இன்னொரு ஆண் பக்கத்தில் உட்காருவதை தவிர்க்கச் சொன்ன போது , நீயும் நானும் எனது நண்பர்களும் பயணிக்க நேர்ந்த சம்பவத்தை நினைவு கூறாமல் இருக்க முடியவில்லை.

மூவர் அமரும் அந்த ஆட்டோவில் உன்னை எங்களிருவருக்கு இடையில் அமரச் சொன்ன போது நீ ஓர இருக்கைதான் எனக்கு வேண்டும் என்ற போது , உனது அத்தை மகன் போல சமூகம் கற்றுத் தந்த பேதங்களை பதிய விடாது இயல்பாய் இருக்கின்றாய் என்று மகிழ்ந்தேன். ஆணிடம் இருந்து விலகி இருக்கக் கற்ற போலித்தனம் இயல்பாய் இருந்து கொள்ள எனைக்கூட அனுமதிக்கவில்லையே என்று முதலில் வருத்தப் பட்டேன். நண்பர் என்ற அடிப்படையிலிருந்து எனையுமறியாமல் ஆண் நண்பர் என மனம் வாசித்துக் கொண்டிருந்ததை கடக்க உதவிய தருணங்கள் அவை. ஆனால் முதல் பருவத் தேர்வு முடிந்து நீ விடுமுறைக்கு என்னோடு வந்து இருந்த போது உன் மனம் என்னோடு சொல்லாமல் சில சந்தோசங்களை அனுபவித்துக் கொண்டிருந்ததை உணர்ந்தேன். நீ எப்பவும் தனிமை விரும்பினாய். பேசுவதைக் குறைத்துக் கொண்டாய். நான் பார்க்காத நேரத்தில் சிரித்தும் மகிழ்ந்தும் கொண்டாய் (பார்க்கவில்லை என நம்பிய நேரத்தில் தடாலென்று ஒரு பொழுது

உனது மகிழ் உலகத்திலிருந்து மீண்டு வந்தாய். நீ ஒரு பெண்ணின் புன்னகைகளை சேகரிக்கத் தொடங்கிய போது எனது அம்மாவும் தெரு முக்கில் நான் பார்க்கக் காத்திருந்த வாலிபனும் நினைவில் வராமல் இல்லை. வந்த போது உனக்குக் கடிதம் எழுதினேன். புன்னகைகளை பத்திரப் படுத்திக் கொள் அதன் உற்சாகம் உனக்கு படிக் கட்டாக இருக்கட்டும் என்று. சொல்ல மறந்தும் மறுத்தும் போன ஒன்றுண்டு. இப்புன்னகைகள் வெயிலும் மழையும் சந்திக்கின்ற போது வந்து போகின்ற வானவில். வானவில் என்றதும் மறைந்து விடுமோ என்று கவலைப் படாதே. வாழ்வில் எல்லா சம்பவங்களும் உணர்வுகளும் வானவில் தான். அதை தரிசிப்பவன் பாக்கியசாலி. நீ பாக்கியசாலி பலபேர் அதை பார்ப்பதே இல்லை அவர்களின் அவசர நெருக்கடியில் தரை பார்த்தே நடந்து போய் விடுகின்றனர். சிலர் தூறுகின்ற மழையில் நனையப் பயந்து ஒதுங்கி விடுகின்றனர். சிலர் அடிக்கின்ற வெயிலைக் குறை சொல்லிய படியே கடந்து போய் விடுகின்றனர். காட்டின் அரூபச் சுவைக்கு பழக்கப் பட்ட நீதான் வானவில். வண்ணம் தோன்றிய வினாடியில் மழை வெயில் சூழல் எல்லாம் தாண்டி உணர்ந்து கொண்டாய் புன்னகையை அதன் சுகத்தை, அது உனக்குள் செய்யும் மாய வித்தையை நானும் அதே புன்னகைகளை சேகரித்திருக்கின்றேன். உனது ஆச்சி வீட்டில் எனக்கென்று இருந்திருந்த இன்றும் இருக்கின்ற மர அலமாரியில் அதன் ஈரச் சுவடுகளை நீ உணரலாம் ஆனால் எனது புன்னகைகள் தவறுகளாகப் பார்க்கப் பட்டன. எனது நீள கூந்தலுக்குள்ளும் செருகிய தாவணிக்குள்ளும் புதைத்து வைக்க நிர்பந்திக்கப் பட்டேன். நானோ தடைகள் வருகின்ற போது கடந்து கொண்டே இருப்பேன்.ஆண் உடைந்து விடுவான் என நம்பியதால் நேசம் விளைவித்தவனிடம் ஆசை விளைவித்து விடக் கூடாது என நானே பலமுறை புதைந்து கொண்டேன். அதனால்தான் நீ புண்னகைகளை சேகரித்த போது மகிழ்ந்தேன். நுண்ணுணர்வு கொண்டவன் என்று. அரூபமாய் இருந்த உணர்வுகளை , நண்பனாய் பெண்ணோடும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றும், ஆணாக எதிர்பார்த்து உடையக் கூடாதென்றும்உணர்த்தக் கடமைப் பட்டுக் கடிதம் எழுதினேன்.நீயோ என் கடித்திற்கு முன்பாகவே பதில் எழுதி வைத்திருந்தாய். சரி உன்னோட கேள்வி பால்ய கால புன்னகைகளை அம்மா என்னசெய்தாள் என்று வாழ்க்கை என்பது நான் ஆசைப் பட்டது என்பது மட்டுமல்ல என் எதிராளி ஆசைப்படுவதும் நிராகரிப்பதும் கூடத்தான். என் எதிராளியின் பலமும் பலவீனமும் கூடத்தான் . நான் சேகரித்த புன்னகையின் சுகம் என் எதிராளியின் பலவீனங்களை குறை சொல்ல விடவே இல்லை. ஆனால் பலங்களை மட்டும் பலன்களாக அடையவே எல்லாரும் விரும்புகின்றனர். என் குடும்பமும் கூட அவர்கள் ஆணாக எப்பவும் என்னிடம் எதிர்பார்க்கும் போதும் நான் பெண்ணாக முதன் முதல் அடையாளம் கண்ட வானவில் தந்த புன்னகையை எனைச் சுற்றிய அரணாக்கிக் கொண்டேன். நினைவு தெரிந்த நாளிலிருந்து காடுகளிடையே வளர்ந்தவள் முகம் பிரதி பலிக்கும் கண்னாடிச் சன்னலும் பயிற்றுவிக்கப் பட்ட முட்டாள்களின் நகரத்திலும் வாழ நேர்ந்ததை அனுபவமாகவே எடுத்துக் கொள்ள புன்னகைகள் கற்றுக் கொடுத்தது. உன் பள்ளித் தோழிகள் இருவரை இரு வேறு

சந்தர்ப்பங்களில் சந்தித்த சம்பவம் நினைவில் வருகின்றது. பொருட் காட்சியில் சந்தித்த உனது ஆரம்ப கால பள்ளித் தோழியுடன் நீயும் நானும் அணுகிய போது அவள் அம்மாவின் கண்களில் என் தாயின் கலவரத்தைப் பார்த்தேன் பாவமாயிருந்தது.

அதுவரை அண்ணன்களின் அருகாமையையே தவிர்க்கப் போதித்தபடி இருந்த என் அம்மா முதன் முதலாய் ஒரு சாவு வீட்டில் வந்திருந்த மாமா பையனிடமிருந்து எனை ஒளிக்கப் பாடுபட்டது இன்று நினைத்தாலும் சிரிப்பு வருகின்றது. இயல்பாகப் பழகியிருந்தால் சாதாரணமாக முடிந்து விட்டிருக்கக் கூடிய விசயம், என் புன்னகைகளை சேகரிப்பவனாய் அவனை மாற்றியதையும் உணர்ந்திருந்தேன்.என் அம்மாவின் தவிப்பு உணர்ந்து , அவன் உணர்வை புரியாதவளாய் கடந்து போய்க் கொண்டே இருந்தேன்.ஆனால் நானும் என் மடியில் புன்னகைகளை ஒளித்திருந்தேன் என்பதே உண்மை என் அம்மாவின் அன்றைய தவிப்பு உனது தோழியின் தாயிடமும் கண்ட போது உனக்கு புரிய வைக்க முடியுமென்று நம்பி நான் உனது பழைய மாணவர்களை சந்திக்க பள்ளி போவதை தள்ளிப் போட்டேன். என் அம்மா எனை ஒளித்ததும் நான் உனை தடுத்ததும் ஒன்றல்ல என்று நீ புரிவாய் என்று நம்புகின்றேன்.

இன்னுமொரு சம்பவம் என் தவிர்த்தலை இயல்பு என புரிய வைக்கும். தற்போதைய பள்ளித் தோழியை அவரது தந்தையுடன் நாம் உணவு விடுதியில் சந்தித்த போது நான் உனை மேசையில் உடன் அமர அழைத்தேன். நீ மறுத்து விட்டாய். . நீ மறுத்து வெளியே ஓடிப் போனாய். உன் நண்பர்கள் என காரணம் சொன்னாய் இணைந்து உணவு விடுதியில் அமர்ந்திருப்பதை உனது நண்பர்கள் கேலி செய்யக் கூடும் உனை கூசச் செய்யும் விதமாக எனப் புரிந்து கொண்டேன். பேதங்களற்று உணரத் தொடங்கி விட்ட நீ பேதங்களோடு வாழ்கின்ற உலகத்திற்கு முன்னால் எப்படி நகர வேண்டும் என்றும் உணர்ந்து கொண்டாய் சரி மற்றவர்களை விடுவோம் நம் இருவருக்கிடையில் வருவோம். நீ தனிமையை விரும்பிய காலத்தில் உன் புன்னகைக்கு காரணமானவள் பற்றி உன் இயல்பான பேச்சிலேயே புரிந்து கொண்டேன். ஆனால் நீ எனக்கு சொன்னாய் இது உனது கப்போர்டு அதை திறக்க வேண்டாம் என்று. உனது அந்தரங்கங்களை புரிந்தேன்(புரிந்து கொள்ள முயன்றேன்) நிஷா. நீ எனை நண்பனாய் உணர்ந்த போதும் உனக்கென்று அந்தரங்கம் இருக்குமென்று நம்பினேன். அதில் அத்து மீறி நுழைய விருப்பப் படவில்லை. நீ சொல்லாமலேயே புரிந்து கொண்டேன் என்று காண்பிப்பது உனை நிர்வாண அதிர்ச்சிக்கு ஆளாக்கும் என்பதால் விலகியே உன்னோடு இருந்தேன்.ஆம் இது என்னை விட இனி உனக்கான உலகத்திற்கு நான் விடுகின்ற வெற்றிடம்.

இன்று அரூபமாய் உன்னிடம் இருக்கின்ற புன்னகைகளை ரூபமாயும் நீ சந்திக்க உன்னோடவே தூக்கிக் கொண்டு போக விரும்பினால் காடுகளிடை பழக்கப் பட்ட நீ நகரங்களிலும் வாழப் பழகனும். உன் எதிராளியின் வேர்கள் நகரத்திலிருக்கிறது நிஷா.

நகரத்திற்கு வந்து காடுகளின் ஆத்ம ருசியை அவளுக்குள் ஊட்டும் போது காட்டின் குளிரோடும் நகரின் கதகதப்போடும் உன் வாழ்வு இனிக்கும்.

உனது கடிதம் போல நானும் என் தந்தையிடம் எனது புன்னகை மந்திரங்களை நண்பனாய் பகிர்ந்த போது அதிர்ந்தேன்.எங்களது இருதரப்பு புன்னகை மட்டுமே என் தந்தையின் பார்வையில் போதுமானதாக இல்லை வாழ்வியல் அடிப்படையிலிருந்து அவன் நிராகரிக்கப் பட்டான். எனைப் போஷிக்க முடியாதவனெனறு நான் எப்பவும் அவனிடமிருந்து தூரமாக வைக்கப் பட்டேன். காடுகளோடு பழகிய நான் அதன் ஆத்ம ருசியை காட்டத் தயாராக இருந்த போது அதை ஏற்றுக் கொள்ளும் திட தோள் அவனிடமில்லாது போயிற்று.

என் திருமண மேடையின் எதிரில் என் புன்னகை அமர்ந்திருக்கப் பார்த்து மகிழ்ந்த போது அரூபமாகவே புன்னகைகளை தூக்கிக் கொண்டு பயணிப்பது சாத்தியமென்று விளங்கிற்று . வாழ்க்கையில் நீர் போல காற்று போல புன்னகை நிறமற்றும் உடலற்றும் இருந்ததால் எல்லா கூட்டுக்கும் அதுவானது.

என் புன்னகைகளின் விதைகளை எதிரியிடமும் ஒவ்வொரு நண்பனிடமும் கூட இன்று விதைத்து விடுகின்றேன். எனை அவர்களுக்கானவளாய் ஆக்கிவிடாதபடிக்கு வியாபித்த படியே நகர மகிழ்ச்சி எனக்கும் அவர்களுக்குமானதாயிற்று.

இந்த அனுபவத்தில் உன் புன்னகைகள் முகிழ்க்கக் தொடங்கிய போது உன் தோள்களின் திடமேற்ற உன் மீது திணித்தல்களை சொடுக்கினேன். பூத்த புன்னகைகள் காயாகி கனியாகிற போது நீ விளைகிற நிலமாக இருந்தே ஆக வேண்டும். இப்பொழுது நகரத்திற்கு பழக்குகின்ற அம்மாவாக நீ அடையாளமிட்டு வருத்தப் பட்டாய்.

இல்லை உன்னை நகரத்திற்கு பழக்க முடியாது , நல்லதுமில்லை என நானறிவேன். காடு காடாகவே தொடர்ந்து இருப்பதில்லை. அது நகரமாதலே அதன் உயிர்ப்பு உன் காட்டின் விதையை நகரத்தில் விதைத்து விட சொல்லித் தருகின்றேன். என் தந்தையை இரண்டு வருடம் வெறுத்தது போல் எனை வெறுக்காதே எனது தந்தை என்னிலிருந்து புன்னகையை விலக்கினார். நான் உன் காதலைக் கையேந்த உனை வலுவாக்க முயற்சித்தேன் இக்கடிதம் என் செய்கைகளின் மொழி சொல்லும் மௌனத்தின் வலி சொல்லும் . மகளாயிருந்தவள் மகனை வழி நடத்தும் விதம் சொல்லும். காடுகளைப் சுவாசிக்கப் பழகியவன் பாதையில் நிலமும் வானும் நீரும் கூட வரும், வளரும். எல்லாவற்றையும் சுவைக்கும் திறம் பெறுவாய்.

சமூகமோடு இணைந்து அதுவாக நீயாகாது அதை நகர்த்துவதே வாழ்வு. மகிழ்வோடு வாழ்ந்து போனான் என்பதை விட மகிழ்வோடு வாழ வைத்தும் போனான் என்பதும்

வாழ்வு இக்கடிதம் உன்னில் என்ன மாற்றம் விளைவிக்கும் என யூகம் செய்து விட முடியவில்லை. ஏனெனில் நீ ஏற்கனவே இருக்கின்ற உலகின் படிமம் அல்ல. புதிய வார்ப்பு. புதிய அறிவியல் கண்டு பிடிப்பு போல என் ஆத்ம முயற்சிகளின் விளைவுகள் எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள எப்பவும் தூங்காத கண்களுடன் அலைவுறுகின்றேன். ஒரு நாள் உன் மடி எனை உறங்கச் செய்யுமா நிஷா இவ்வுலகின் புதிய ஆண்மகனை தந்து விட்டேன் என்ற திருப்தியோடு

அம்மாவாகவும் இருக்க ஆசைப்படும் நண்பன்

தீபா

thilaga bama < mathibama@yahoo.com
பதிவுகள் 22 ஜூன் 2011

9. விருந்து - கே.எஸ்.சுதாகர்

- அட சாந்தன்! நீங்கள் எப்ப ஒஸ்ரேலியா வந்தனியள்?

- ஆர் குமரனோ? நாங்கள் இஞ்சை வந்து ஒண்டரை வருஷமாப் போச்சு. எப்பிடி உன்ரை பாடுகள் போகுது? நீ வெளிக்கிட்டு ஒரு பத்துப் பதின்மூண்டு வருஷம் இருக்கும் என்ன?

- பரவாயில்லை சாந்தன். இப்ப நாங்கள் 'டிலகேயிலை' இருக்கிறம். நீங்கள்?

- நாங்கள் 'அல்ற்ரோனா'விலை.

- அப்ப கிட்டடத்தான். என்ன ஒரு பிள்ளையோடை நிப்பாட்டிப் போட்டியள் போல.

- உம். ஒண்டு காணும். இந்த 'லவற்ரன் மாக்கெற்றிலை' எல்லாம் மலிவு எண்டிச்சினம் குமரன். ஆனா வந்து பாத்தாத்தான் தெரியுது.

- பழைய இரும்புச் சாமானுகளும், படு குப்பை விலையும். அவிச்ச சோளன் ஒண்டு ஐஞ்சு டொலர் சொல்லுறான்.

- நீங்கள் வாற சனிக்கிழமை, எங்கடை வீட்டுக்கு டின்னருக்கு வரவேணும்.

- குமரன் இப்பென்ன அவசரம் டின்னருக்கு? இஞ்சாரும் பவானி, வாற சனிக்கிழமை என்ன மாதிரி?

- ஒரு புறோகிறாமும் இல்லை.

- அப்ப வரலாம் குமரன். ஆனா ஒண்டு குமரன். கனக்கச் சமைச்சுப் போடாதையுங்கோ.

- அப்ப என்ர பிஸ்னஸ்காட். இதிலை என்ர ரெலிபோன் நம்பரும் அட்றசும் கிடக்கு.

xxx

- ஆரப்பா அது? அடிக்கடி சாந்தன் சாந்தனெண்டு பேரைச் சொல்லிக் கூப்பிட்டது? 'சேர்' எண்டெல்லே உங்களோடை வேலை செய்யிற எல்லாரும் உங்களைக் கூப்பிடுறவை.

- அது அந்தக் காலம் பவானி. இப்ப படிப்பிக்கிற ரீச்சரையே, பிள்ளையள் பேர் சொல்லிக் கூப்பிடுகிற காலம். உவன் குமரன் எண்டு, நாச்சிமார் கோயிலடியிலை இருந்து அப்ப

'சீமென்ற் பக்டரிக்கு' வேலைக்கு வாறவன். 'கிளறிக்கல்' உத்தியோகம்.

- கண்ட கிண்ட ஆக்களிட்டையெல்லாம் சாப்பிடப் போக வேணுமே?

- என்ன செய்யிறது? நாலு மனிசர் தேவையெண்டா போகத்தான் வேணும்.

xxx

- ஆரோ ரெலிபோனை அடிச்சு அடிச்சுப் போட்டு வைக்கினம். ஹலோ எண்டாச் சத்தமில்லை. குமரனவையாத்தான் இருக்கும்.

- சரி பவானி. அதுக்கேன் சரியாக் கோபப்படுறாய்? எனக்குச் சரியாப் பசிக்குது. ஏதாவது இருந்தாக் குடும். சாப்பிட்டிட்டு கொஞ்சம் றெஸ்ற் எடுத்திட்டுக் குளிப்பம்.

- டின்னருக்குப் போறதுதானே எண்டு சொல்லி, ஒண்டும் நான் சமைக்கேல்லை. பிள்ளைக்கும் 'சீரியல்'தான் குடுத்தனான். தண்ணியைத் தண்ணியைக் குடிச்சு ஒட்டகம் மாதிரி இருக்கிறன் நான்.

- ஒண்டையும் சாப்பிடாமல் போய் 'எப்படா சாப்பாடு வரும் வரும்' எண்டு காத்திருக்கிறதை விட கொஞ்சம் சாப்பிட்டிட்டுப் போனா நல்லா இருக்குமெண்டு. எங்கை பிள்ளை பவானி?

- அவள் உங்காலை எங்கையும் விளையாடிக் கொண்டிருப்பாள்.

- அது சரி பவானி உமக்கொண்டு சொல்ல வேணும். மற்ற வீடுகளிலை போய் குசினியையும் ரொயிலற்றையும் எட்டிப் பாக்கிறது போல குமரன் வீட்டிலையும் போய் மானத்தை வாங்காதையும். குமரன் நல்ல துப்பரவு.

- உது சரிவராது. குமரன் துப்பரவாக இருக்கட்டும். சமைக்கிறது அவற்றை மனிசிதானே! எனக்கு குசினி ரொயிலற் துப்பரவாக இருக்காட்டி சாப்பாடு செமிக்காது.

- என்னவோ சொல்லிப் போட்டன் பவானி. எங்கடை நட்பைக் குலைச்சுப் போடாதை.

xxx

- என்னப்பா மாட மாளிகையாக் கிடக்கு. இடம் மாறி வந்திட்டோமோ?

- சரியோண்டு நம்பரைப் பார் பவானி.

- இதுதான். இதுதான். நாங்கள் மூண்டு வீடு 'றென்'றுக்கு மாறியாச்சு. வீட்டுக்குப் போகேக்கை ஒரு கழுவித் துடைப்பு, வீட்டை விட்டுப் போகேக்கை ஒரு கழுவித் துடைப்பு. ஆற்றையோ வீட்டைக் கழுவிக் கழுவித் துடைச்சு கையும் தேஞ்சு போச்சு.

- பொறுமப்பா இப்பதானே நாட்டுக்கை நுழைஞ்சிருக்கிறம். புதுசாக் கட்டுறதுதானே!

- அங்கை 'கிளறிக்கல்' உத்தியோகம் எண்டு சொன்னியள். கிளறி எடுத்த கல்லிலைக் கொண்டோ இப்ப இஞ்சை வீடு கட்டியிருக்கினம். நீங்களும் ஒரு 'போமன்' உத்தியோகமும். எப்பவோ சொன்னனான் வெளிநாடு போமன் போமன் எண்டு.
கேட்டால்தானே இந்த 'போமன்'.

- ஏய்! இஞ்சை பார். சுவரிலை 'மைக்' ஒண்டு கிடக்குது. நாங்கள் கதைக்கிறது எல்லாம் உள்ளுக்கை கேட்கப் போகுது.

- சரி. சரி. பெல்லை அடியுங்கோ.

xxx

- வாங்கோ சாந்தன். வாங்கோ, எப்பிடி இடத்தைச் சுகமாக் கண்டு பிடிச்சியளோ? நாட்டுப் புதினங்கள் எப்பிடி?

- உனக்கென்னப்பா குமரன், வீடெல்லாம் வாங்கி நல்ல வடிவா வைச்சிருக்கிறாய்.

அதுக்கு நான் பட்ட கஸ்டங்களைச் சொல்லி விளங்காது. இது என்ர மனிசி மகாலட்சுமி.

- வணக்கம்.

- வணக்கம். நான் சாந்தன். இது என்ர மனிசி பவானி. இது எங்கடை குழந்தை ரேனு. அண்டைக்கு நீங்கள் மாக்கெற் வரேல்லை என்ன?

- ஓம் பாருங்கோ.

- இஞ்சாருங்கோ? ரொயிலற் ஒருக்கா போக வேணும். எங்காலில் பக்கமெண்டு கேளுங்கோ?

- பொறு பவானி. உமக்கு முதல் அவசரமா நான் போக வேணும். ஆ குமரன், உங்கடை ரொயிலற்றை ஒருக்கா நான் யூஸ் பண்ணலாமோ?

- நீங்க இஞ்ச வாருங்கோ பவானி. பிள்ளை கையிலையே நித்திரை போலக் கிடக்கு. உள்ளுக்கை கொண்டு வந்து படுத்திப் போட்டு, இப்பிடி வாங்கோ நாங்கள் ஏதாகிலும் கதைப்பம்.

- உங்கடை குசினியை ஒருக்காக் காட்டுங்கோ மகாலட்சுமி அக்கா. நீங்க அக்காவோ தங்கச்சியோ? அக்காதானே! சட்டையிலை ஏதோ பிரண்டு போய்க் கிடக்கு.

- இதுதான். இதுதான்.

- இதென்ன பளிச் பளிச்செண்டு நல்ல பொலிஸ்சாக் கிடக்கு உங்கடை குசினி.

- இது சமைக்கிற குசினி இல்லை பவானி.

- அப்ப?

- இது வடிவுக்குக் கட்டின குசினி. சமைக்கிறதெல்லாம் கராஜ்சுக்கைதான். அங்கை சமைச்சுப் போட்டு, பிறகு இஞ்சை எடுத்து வந்து வைக்கிறனாங்கள்.

- ஏன் மகாலட்சுமி அக்கா இவ்வளவு சாப்பாடு கறியள்? உங்களுக்கு வீண் சிரமம்.

- ஒவ்வொரு கிழமையும் சனி அல்லது ஞாயிறு மட்டிலைதான் சமைக்கிறனான் பவானி. தேவைக்குத் தக்க மாதிரி குட்டிக் குட்டி பிளாஸ்ரிக் பாக்குக்குள்ளை போட்டு 'பிறீசருக்குள்ளை' வைச்சு விடுவன். நீங்கள் கிழமைக்கு எத்தினை தரம் சமைப்பியள்?

- ஏழ் மூண்டு இருபத்தொண்டு!

- இன்னும் ஏழாம் வாய்ப்பாட்டிலேயே இருக்கிறியளா?

- ஏன் சிரிக்கிறியள் அக்கா? இவருக்கு ஒவ்வொரு நாளும் சமைக்க வேணும். நீங்கள் எத்தினை தரம் சமைப்பியள்?

- வாய்ப்பாடே கிடையாது. கிழமைக்கு, வெறும் மூண்டுதான். உங்கடை பிள்ளைக்கு இப்ப என்ன வயசாகுது பவானி?

- மூண்டு முடிஞ்சுது அக்கா. உங்கடை பிள்ளைக்கும் அதே வயசுதானே. ஆனா நல்ல வளர்த்தியாக் கிடக்கு. ஏதாவது ஸ்பெஷலா சாப்பாடு குடுக்கிறனியளோ? நல்லா மொழு மொழுவெண்டு உருண்டு திரண்டு வடிவா இருக்கிறான்.

- அப்பிடியொண்டும் பெரிசா இல்லை. நானும் உயரம், அவரும் உயரம். அதாலை பிள்ளை கொஞ்சம் வளர்த்தி. நீங்கள் இரண்டு பேரும் கட்டை. அதாலை பிள்ளையும் கட்டை. வேணுமெண்டா கொஞ்சம் பாலைக் கூடக் குடுத்துப் பாருங்கோ. எங்க உங்கடை ஹஸ்பனட் இன்னும் ரொயிலற்றாலை வரேல்லைப் போல கிடக்கு.

- அவர் எதிலையும் ஸ்லோ(slow). எப்பிடி உங்கடை ஹஸ்பன்ரை வேலை போகுது? அவருக்கு வேலையிலை சற்றிஸ்பக்சன்(satisfaction) இருக்கா? இவரெண்டா சதா வேலை வேலையெண்டபடி.

- படிச்ச ஆக்களைக் கலியாணம் கட்டினா உப்பிடித்தான். வேலையையே கட்டிப் பிடிச்சுக் கொண்டு இருப்பினம்.

- மகாலட்சுமி அக்கா, உங்கடை அவருக்கு இப்ப என்ன சம்பளம் மட்டிலை வரும்?

- என்ன ஒரு நாப்பது நாப்பத்தைஞ்சு 'கே' (K) மட்டிலை வரும்.

- அதென்ன 'கே'?

- எல்லாரும் அப்பிடித்தான் சொல்லினம். ஒரு வித்தியாசமா இருக்கட்டுமெண்டு நானும் சொல்லுறன். ஆ, உங்கை உங்கடை ஹஸ்பனும் வந்திட்டார்.

- என்ன சாந்தன் ரொயிலற் கழுவிப் போட்டு வாறாப் போல கிடக்கு.

- சரியாச் சொன்னியள் குமரன்.

- வாங்கோ சாந்தன், முதலிலை கொஞ்சம் தண்ணி வென்னி எடுப்பம். அப்பதான் சாப்பாடு இறங்கும்.

- சாப்பாடு நல்லாத் தூக்குத் தூக்குது குமரன்.

- அப்பாடா ஒரு மாதிரி ரொயிலற்றுக்குள்ளையிருந்து வந்திட்டியள் என்ன. நான் ஒருக்கா ரொயிலற் போயிட்டு வாறன் மகாலட்சுமி அக்கா.

xxx

- சாப்பாட்டுக்குத் தாங்ஸ் குமரன். சாப்பாடு ரொம்ப ரொம்ப பிரம்மாதம்.

- எனக்கு சொல்லாதையுங்கோ சாந்தன். இஞ்சை பக்கத்திலை நிக்கிறவாக்குச் சொல்லுங்கோ.

- மகாலட்சுமி, சாப்பாடு ரொம்பப் பிரம்மாதம். இரசம் சொல்லி வேலையில்லை. அதிலும் அந்த இறைச்சிக் கூட்டு, இறால் குழம்பு, அப்பப்பா. இதுகளின்ர றிசிப்பியை ஒருக்கா என்ரை மனிசியிட்டைக் குடுத்து விடுங்கோ.

- சும்மா புகழாதையுங்கோ. தப்பினோம் பிழைச்சோம் எண்டு ஒரே ஓட்டமா ஓடுறியள். உங்கட வீட்டையும் வந்து ஒருநாள் சாப்பிட்டா, பவானியின்ர கை வண்ணத்தையும் தெரிஞ்சிடலாம்.

- கட்டாயம் ஒரு நாளைக்கு எங்கடை வீட்டையும் வரவேணும் மகாலட்சுமி அக்கா. அப்ப நாங்கள் போட்டு வாறம்.

xxx

- இஞ்சாருங்கோ, பிள்ளையின்ர தொப்பியை மகாலட்சுமியக்கா வீட்டிலை விட்டிட்டு வந்திட்டோமப்பா. கொஞ்சத் தூரம்தானே வந்திருப்பம்.

- ஒருக்கா காரைத் திருப்புங்கோ.

- உமக்கு எப்பவும் ஏதாகினும் ஒண்டை விட்டிட்டு வராட்டி பத்தியப்படாது. சரி. போய் எடுத்து வருவம்.

- இதென்னப்பா இருட்டுக்கை நிண்டு கொண்டு குமரனும் மனிசியும் ஏதோ கொழுத்திப் போடினம். வெடிகிடி பூவுறிஸ் கொழுத்தி விளையாடினமோ? எங்கடை பேரும் இடைக்கிடை அடிபடுது. இப்ப போனா விஷயம் குழம்பிப் போகும்.

- உம். குனியுங்கோ. மூண்டு தரம் துப்புங்கோ. சம்பளம் கேக்க வந்திட்டாளாம் சம்பளம். எங்கையப்பா உவையளைத் தேடிப் பிடிச்சியள்?

- நாளைக்கு உங்கடை வேலை பறி போனாலும் போகும். நீயும் குனியடா ஒருக்கா.

- பிள்ளைக்கு விளங்காது. நீ சுத்திப் போடு மகாலட்சுமி.

- துப்படா மூண்டு தரம். மொழுமொழுப்பா இருக்கிறியாம். நாளைக்கு வயித்தாலை அடிச்சுக் கட்டிலிலை கிட.

- பிள்ளையின்ர நாக்கிலை தொட்டு வை மகா. நான் என்ன செய்யிறது. அவன்ர மனிசி உன்னைக் கேட்டதுக்கு. சாந்தன் ஏதேனும் கேட்டவனோ? அவன்தான் என்ர பிறண்ட். அந்தப் பிள்ளையின்ர தொப்பியை இப்ப என்ன செய்யிறது?

- அதை உங்கை வையுங்கோ. கார் அல்லது அடுப்புத் துடைக்க உதவும். ஹோம் லோன் என்னண்டு எடுக்கிறதாம். அது வேறை பிரச்சினை அவளுக்கு. நீங்க இரவிரவா திண்டது பாதி தின்னாதது பாதியா இரண்டு மூண்டு வேலை செய்ததெல்லாத்தையும் இனிச் சொல்லிக் கொண்டிருங்கோவன்.

- சரி வாப்பா மகா.

- நாவுறு எரிஞ்சு முடிஞ்சாப்போலதான் நான் வருவன். பாருங்கோ ஏதாகிலும் நெடிகிடி வருகுதாண்டு. சரியான நாவுறு.

xxx

- எட சாப்பாடு முடிஞ்சு வீட்டை போய்ச் சேர முதலே நாவுறு கழிக்கிறான்களப்பா. என்ன ஜென்மமோ? இந்த லட்சணத்தில தொப்பி இல்லாத குறை.

- என்னப்பா வெறும் கையோடை வாறியள்? 'போக்கிமோன்' தொப்பியல்லே?

- 'போக்கிமோனோ'? நாட்டிலை இப்பிடியும் போக்கிரிமோன்கள் இருக்கினமெண்டு இண்டைக்குத்தான் தெரிஞ்சு கொண்டன் பவானி.

- என்னப்பா என்ன உளறுகிறியள்?

- நாங்கள் வீட்டை போய்ச் சேரமுதலே நாவுறு கழிக்கிறான்களப்பா! முதலிலேயே சொன்னனான்தானே! நீங்களும் உங்கடை ஆக்களும். குப்பைச் சனங்களப்பா. எடுங்கோ காரை. உங்களுக்கு இன்னுமொண்டு சொல்லவேணும். முதலிலை சொல்லியிருப்பன். சொன்னா என்ன சொல்லுவியள்? நட்பைப் பிரிக்கிறன் நாட்டைப் பிரிக்கிறன் எண்டு சொல்லுவியள்.

- புதிர் போடாம சொல்லு பவானி.

- ஹரே ராமா கோயிலுக்குப் போகேக்கை - வழியிலை பத்துச் சிக்கின், பத்து டொலர் எண்டு சொல்லி வாங்கி வந்தவையாம். அந்த நாறின சிக்கினைத்தான் எங்களுக்குச் சமைச்சுத் தந்திருக்கினம். நீங்களும் இறைச்சிக் கூட்டு வலு பிரமாதம் எண்டிட்டு வாறியள். அந்த லட்சணத்திலை சாப்பிட்டு முடிய முதல், பொலித்தீன் பாக்குகளுக்கை சாப்பாடு கறியளைப் போட்டு பிறீசருக்குள்ளை வேறை தள்ளுகிறா.

\- ஒவ்வாக், ஒவ்வாக்.

- இன்னுமொண்டு. இதைச் சொல்ல எனக்கே சத்தி வருது. வாங்கி வந்த சிக்கினையும் வெட்டுறதுக்கு ஒரு இடம் இல்லையெண்டு, பாத்துறூமுக்கும் ரொயிலற்ருக்கும் போற இடைவெளியிலையல்லே வைச்சு வெட்டியிருக்கினம்.

- என்னண்டு உனக்கெல்லாம் இது தெரியும் பவானி?

- இறைச்சித் துண்டெல்லாம் பூ மழை போல சுவர் முழுக்கக் கிடந்ததைக் காணேல்லையே நீங்கள்?

- ஒவ்வாக்!

- விருந்து விருந்து எண்டு கூட்டி வந்தியள். இப்ப உந்தச் சத்திக்கு ஒரு மருந்து வாங்க முடியேலாமல் கிடக்கு. சத்தி எண்டாலும் 'டொக்ரரிட்'டைக் காட்டி ஒரு 'பிறிஸ்கிரிப்ஷன்' வாங்கேலாட்டி 'பாமஷிக்'காரன் மருந்து தரான். காருக்கை சத்தி
எடுத்து எடுத்து காரே நாறிப் போச்சு.

- பொறு பவானி. நான் படுற அவஸ்தையிலை நீ வேறை. வயித்தை வலிச்சு வலிச்சு வருதப்பா!

- கெதியிலை ஓடி வீட்டை போய்ச் சேருங்கோ. ஏதோ பழமொழி சொல்லுவினம். விருந்தோ மருந்தோ எண்டு. ஒண்டுமே இப்ப வருதில்லையப்பா.

- இப்ப உதுவா முக்கியம்.

< kssutha@hotmail.com>
பதிவுகள் 22 ஜூலை 2011
****

10. பூப்பும் பறிப்பும் - நவஜோதி ஜோகரட்னம் (லண்டன்)

துரும்பு ஒன்று காற்றிலே பறக்கும்போது அது ஏன் பறக்குது என்பது ஞானிக்குத் தெரியுமாம். அவர்கள் சகுனங்களை அறிவார்களாம். பிறர் வார்த்தைகளிலிருந்து அவர்கள் உள்ளத்தை அறிவார்களாம். முகச்சாடைகளிலிருந்து அவர்கள் சுபாவத்தை அறிவார்களாம் என்றுதான் அறிந்திருக்கிறேன். ஆனால் சாதாரண மனிதர்களாகிய எமக்கு இவை முடியாமற் போகின்றது. திருமணமாகி ஐந்து வருடங்களாகக்; காத்திருந்து கிடைத்த அழகான அருமை மகள். அக்குழந்தை மார்பில் வாய் புதைந்து கொடுத்த வலிகள் இன்னும் மாறாது எடையற்ற மலர்களாக அந்தத் தாயுள் விரிவதுண்டு. இப்போது வயது ஒன்பது ஆரம்பித்திருக்கிறது அக்குழந்தைக்கு. பாடசாலைக்கு கூட்டிச்செல்வது மட்டுமல்ல, சனிக்கிழமைகளில் இங்குள்ள தமிழ் பாடசாலைகளில் பரதநாட்டியம், வீணை போன்ற கலைகளையும் தன் குழந்தைக்கு கற்றுக் கொடுப்பதற்காக ஓய்வின்றி அலைந்துகொண்டிருப்பவள் அந்தத்தாய்.

'மம், வெயர் இஸ் மை ஸ்கூள் ரை?' 'என்ர வைற் சொக்ஸை காணவில்லை' என்று ஒரு பிரச்சனை எழுப்பித்தான் காலையில் பாடசாலைக்கே புறப்படுவாள். எல்லாவற்றையும் உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் தேடி எடுத்துத் தயார் செய்து பாடசாலைக்கு அழைத்துச் செல்வதில் பெருமிதம் அடைவாள் அந்தத்தாய்.

"செல்வக் குஞ்சு பள்ளிக்கூடத்தால்; வந்தால் எல்லாவற்றையும் அவற்றிற்குரிய அந்தந்த இடத்தில் ஒழுங்காக வைத்துப் பழக வேண்டுமடா செல்லம். அப்படி வைத்துப் பழகினால் ஒன்றும் தொலைய மாட்டாது. சின்ன குட்டிப் பெண்பிள்ளைப் பெண்ணெல்லோ! பிள்ளைக்கென்று தனியான சின்ன அறை இருக்குத்தானே! உடுப்புகளை கூட அடுக்கி எல்லாம் ஒழுங்காக வைத்துப் பழக வேண்டும் கண்ணா!" என்று, தான் கன்னியர் மடத்தில் படிக்கும்போது சிஸ்டமார் சொல்லிக்கொடுத்தவற்றை அப்படியே சொல்லுவாள் அம்மா.

தன் அருமை மகள் பிறந்த நாள் தொடக்கம் குளிப்பாட்டும் தொட்டியில்; அவளை குளிப்பாட்டி, குளிர்படாமல் அணைத்து வைத்திருப்பதும், வீட்டில் மின்சாரத்தில் இயங்கும் கீற்றரைப் போட்டு சூடாக வைத்திருந்து, வாசம் நிறைந்த ஓடிக்கொலோனை பஞ்சுகளால் ஒத்தி எடுத்து காது, மூக்கு ஈரங்களை தடவி எடுத்து குளியலை ஒரு பரவசமூட்டும் பகிர்தலாக்கிவிடுவாள் அந்தத் தாய். அவள் வளர்ந்து வரும் ஒவ்வொரு வயதும், அவள் சம்பந்தப்பட்ட எந்த ஒரு விடயமும் இனிய நாட்களாகி ஒரே பரபரப்புத்தான் அம்மாவுக்கு.

லண்டனில் பார்த்தால் பிள்ளைகள் கிடு கிடுவென்று விரைவாக வளர்ச்சி அடைந்து விடுகின்றார்கள். உணவுவகைகளின் வித்தியாசங்கள்;; முக்கியகாரணம் என்றுதான் எங்கட

கண்டுபிடிப்பு. தனது மகளுக்கு வயது ஒன்பதாக இருந்தாலும் அவளின் உடலில் மாற்றங்கள் அப்பட்டமாகத் தென்பட்டுக்கொண்டிருந்தது. அறிவிலும், உடலிலும் அவளில் பெருமளவில் மாற்றங்களை அவதானிக்க முடிந்தது. உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய அழகிய சிலையாக தாயுள்ளத்தில் அச்சிறுமி மலர்ந்தாள்.

ஷாம்போ நுரை தலையில் பூக்க மெதுவாகக் கோதியபடி 'கண்ணை மூடிக்கொள் செல்லம்' என்று அவளுக்கு மூச்சு முட்டிவிடுமோ என்ற ஒருவித பயத்தில் ஒரு கையை சிறு குடையாகக் குவிய வைத்து ஷவரைத் தலையில் பிடித்துத்தான்
தலையில் குளிப்பாட்டுவாள். 'இங்கேயெல்லாம் சோப் போட்டு நல்லாக ஊத்தைகள் போக குளிக்கவேண்டும்' என்று அம்மாவின் கை விரல்கள் பிள்ளையின் உடல் பூராகவும் பரவும். தனது செல்ல மகளின் இளமார்பையும், குட்டிவயிற்றையும்,
அவதானித்த அம்மாவிற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தபோதும், இன்னும் விபரம் புரியாத சிறுபிள்ளைதானே என்ற ஒருவித பயமும் அவளுள் சிதறிச் சித்திரமாகியது.
ஷவர்லிருந்து தொடர்ந்துவரும் வெள்ளிவயரைப் பிடித்து சோப்பை கழுவியபடி " இங்கேயெல்லாம் இனி சதைகள் வைக்கும்;. வீக்கம் என்று பயந்திடாதேயம்மா. ஒருநாள் திடீரென்று வயிற்றுக்குக்கீழே வலிக்கும். ரத்தம் கசியும். குஞ்சு நீ
பயப்படக்கூடாதடா. அம்மாவிடம் வந்து உடனேயே சொல்ல வேண்டும சரியா" என்று கூற நினைத்தவள் எதுவுமே கூறாது தனக்குள் சிரித்துக்கொண்டாள். அம்மா... எங்கட செல்லம் இப்ப பெரிய ஆளாக வளர்ந்துகொண்டிருக்கிறாள். ஓ.. விரைவில்
கொண்டாட்டம் ஒன்று வரஇருக்கிறது என்று மட்டும் சொல்லிச்சிரிக்க... அவள் கொஞ்சம் வெட்கப்பட்டு அம்மாவின் கையைத்தட்டிவிடுவாள்.

- அங்கால போங்க மம்மி

-இது பெண்கள் எல்லாருக்கும் இருக்கிறதுதான். மம்மிக்கு, அன்ராவுக்கு, அம்மம்மாவுக்கு, உன்ர நண்பியின்ர மம்மிக்கு ...

- அப்போ எப்ப மம்மி எனக்கு அப்படி வரும்?

- என்றைக்கோ ஒருநாள் வரும். நீங்க இப்ப குட்டிப் பெண்பிள்ளை தானே!

- வந்தால் எனக்கு ராதா அக்கா மாதிரி வடிவான சாறி உடுத்தி கனக்க நகைகள் எல்லாம் போட்டு ஆட்களைக் கூப்பிட்டு செலிபிறேற் பண்ணுவீங்களோ?

- குஞ்சு இப்படிக் கேட்கிறீங்க... பிள்ளைக்கு செலிபிறேற் பண்ணாமல்... ஊரில இருக்கிற அம்மப்பா ஒரே பிள்ளையின்ர கொண்டாட்டத்தை பார்க்கவேண்டுமென்று ஆவலோடு போனில் பேசுவார். உங்களுடைய அன்ரிமார், மாமாமார் அதாவது அவருடைய

எல்லாப் பிள்ளைகளும் வெளிநாட்டுக்குப் போட்டார்கள் என்று தனிய கவலையோடுதான் இருக்கிறார்.

- அப்போ அம்மம்மா எங்கே மம்மி?

- அம்மம்மாவை சுனாமி வந்து இழுத்துக்கொண்டுபோட்டுதடா குஞ்சு.

- அப்போ அம்மப்பா தனியவோ சிலோனில இருக்கிறார்? பாவம் அம்மப்பா.

மிருகங்கள்எந்தத் தடயத்தையும் விட்டுவைக்காமல் தன் தாயைக் விழுங்கிய மரணத்தை நினைத்து திடீரென மௌனமானாள் அம்மா... நான் வீட்டில் கடைக்குட்டி என்பதால் என்தாயின் குரல் 'ரோகினி' என்று என்பெயரைச் சொல்வதில்தான் அதிக ஆனந்தம் அடைவதுண்டு. இளம் மஞ்சள்நிறச் சேலைதான் எனதுதாய் விரும்பி உடுப்பாள். என் அம்மாவின்...அந்த முகத்தின் இதமான அழகு, கண்களின் உண்மை, விரல்களின் குளுமை, குரலின் இனிமை எல்லாமே அவள் நினைவில் வந்து மாய உலகிற்குள் நுழைத்தது அவளை. லண்டனில் போட்டி போட்டுக் கொண்டு வாராவாரம் கலைநிகழ்ச்சிகள் நடாத்தி கலைகளை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது நல்ல ஆரோக்கியமான விடயம் தான். கலை அரங்கேற்றங்களும் போட்டி போட்டு அளவுக்கு மீறிய ஆடம்பரங்களோடும், பணச்செலவுகளோடும் செய்கின்றார்கள். பிறந்தநாள் திருமணக் கொண்டாட்டங்களுக்குக்கூட குறைவில்லை. பருவமெய்துவது கூட இப்போது கட்டாய ஆடம்பரக் கொண்டாட்டமாகிவிட்டது. சிவப்புக் கம்பளம் விரித்துஇ வயதுவந்த பெண்பிள்ளையை 'பல்லக்கில்'தூக்கிச் சென்று வசதி படைத்த அயல்நாட்டில் கொண்டாடியதைப் பார்த்த நண்பி இவளுக்கு வியப்புடன் கூறியது வினோதமாகத் தெரிந்தது. ஆனால் தனது ஒரே மகளின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்பது மட்டும் இப்போது அவளுள் சித்திரமாகி மிதந்து வந்தது.

தைப் பொங்கலன்று அவள் வீட்டிலும் பெரிய பொங்கல்விழா நடந்துகொண்டிருந்தது. சிறுமியாக இருந்த பெண் இப்போ வயதிற்கு வந்துவிட்டாள். அவள் எதிர்பார்த்திருந்த புதுமலர்ச்சிப் பருவம் அடைந்துவிட்டாள். மிதந்து மேலேறும் நினைவுகள் வந்து திக்கற்றுப் பரவிக்கொண்டிருந்தது அந்தத்தாயின் உள்ளத்தை... உடலில் ஏற்படும் அத்தனை வலிகளையும் அச்சிறுமி தன் தாயிடம்தான் மனம்விட்டுக் குழந்தைபோல் கூறுவாள். நட்பு என்பது இரு உடல்களில் உறைந்துள்ள ஓர் இதயம் என்று சோக்கிரட்டீஸ் சொன்னது மாதிரித்தான் அவர்கள் இருவரும் திகழ்ந்தார்கள்.

- மம்மி நான் பாடசாலைக்குப் போக வேணும் எத்தனை நாட்களுக்கு இப்படி வீட்டில் இருக்க வேணும்? ஸ்கூல் வேலைகள் எல்லாம் கனக்க மிஸ்பண்ணப் போறன் மம்மி...

- இல்லையடா கண்ணா முதற்தரம் வரும்போது நாம் மிகவும் கவனமாக உடம்பைத் தேற்றிக் கொள்ள வேண்டும். உடம்பு வலி குறையத் தொடங்கும்போது ஸ்கூலுக்குப் போகலாம். என்னடா செல்லம் இரண்டு கிழமையால ஸ்கூலுக்குப் போகலாம். எதற்கும் ஸ்கூல் பாக்கில் நாப்கின் எப்பவும் பாதுகாப்பாக வைத்து விடுவேன். அப்படி ஏதும் உபயோகிக்கவேண்டி வந்தால்… நான் சொல்லித்;தந்தபடி..ம்.. ம்; என்னடா?

சில மாதங்களின் பின் குளிர் கொஞ்சம் குறைந்து வெய்யிலும் வரும்போது பெரிய கொண்டாட்டமாகச் செய்வோம.; இப்படியான கொண்டாட்டங்கள் இங்கு அவரவர் வசதிகளைப் பொறுத்து வீடுகளிலும், பெரிய மண்டபங்களிலும் அமைதியாகவும், ஆடம்பரமாகவும் கொண்டாடுகின்றார்கள். அதற்கிடையில் எல்லா ஆயத்தங்களையும் செய்ய வேண்டும்? முக்கியமாக அம்மப்பாவை இந்தச் சாட்டைக் காரணங்காட்டி இலங்கையிலிருந்து இங்கு கூப்பிடவேண்டும். தான் பிறந்து வளர்ந்து இதுவரை நேரில் பார்த்திருக்காத அம்மப்பாவின் வரவை சிறுமி பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. இருந்தும் அம்மாவின் அதீத பரபரப்பைப் பார்த்த சிறுமியின் முகம் பூத்துக் குலுங்கும் ரோஜாப்பூவைப்போல் சிரிப்பில் மலர்ந்துகொண்டிருந்தது.

தாம்பாளங்களில் வெள்ளைக் கண்ணறைத் துணிகளால் மூடப்பட்டிருந்த பல வகையான பலகாரங்கள் மஞ்சள், குங்குமம், பழங்கள், நெய்யும் சீனியும் சேர்த்துச் செய்த அரிசிமா உருண்டைகள்இ உழுத்தம்மாக் களி, பூத்தட்டுக்கள், குத்துவிளக்குகள் போன்ற அலங்கரித்த தட்டுக்களையெல்லாம் பூப்புநீராட்டுவிழாவிற்கு வர்ணப் பட்டாடைகளோடு வந்திருந்தபெண்கள் பலர் கையில் ஏந்திய வண்ணம் நின்றுகொண்டிருந்தார்கள். மேளக்கச்சேரியும், நாதஸ்வர இசையும் ஒலிப்பெட்டியில்; கோர்வையாக முழங்க… மங்கலத்தில் தோய்ந்து களை கட்டிக் கொண்டிருந்தது மண்டபம். அழகிய மஞ்சள் நிற பட்டு மினுங்கல் சாறியோடும், நகைகளின் ஜொலிப்போடும் , பூவாசனையோடும் பருவமடைந்தபெண் அந்தச் சமயத்தின் தனி அழகோடிருந்தாள்…

ஒளியில் ஜொலிக்கும் தனது பேத்தியின் அழகை ஏதோ ஒரு வகையான உறைந்த மௌனத்தில், சிலமாதங்கள்தான் இலங்கையிலிருந்து வந்த அம்மப்பா ரசித்துச் சிரித்துக்கொண்டிருந்தார். சிறுமியின் பெற்றோர்களின் மனமோ உறவினர்கள், நண்பர்கள், அறிமுகமானவர்கள் என்று பலபேரின் அன்பின் பக்கங்கள் திறந்து அவர்களுள் புரண்டுகொண்டிருந்தது.

- பிள்ளை, இங்கு வந்ததின் பின் இந்தக் குளிருக்காக்கும் உடம்பெல்லாம் சரியான வருத்தமாக இருக்கிறது. என்ன இருந்தாலும் எங்கட ஊரில இருக்குமாப்போல சுகம்… அந்த சந்தோஷம்… நான் ஊருக்குத் திரும்பப்போறன். நான் தனிக்கட்டையெண்டாலும் என்ர மாமி, மச்சாள்மார் இருக்கிறாளவை. நீ யோசிக்காமல் என்னை அனுப்பிவிடு - என்ற தந்தையின் வேண்டுகோள் ரோகினிக்கு ஆச்சரியத்தை

கொடுத்தது.

- என்ன அப்பா 'பிள்ளையின் கொண்டாட்டம் முடிந்த களை இன்னும் ஆறவில்லை. எவ்வளவு சிரமப்பட்டு உங்களை இங்கு அழைத்தோம். இப்படி அவசரப்பட்டு ஊருக்குப்போக வேண்டும் என்கிறீர்கள்? இப்படித்தானே இங்கு இருக்கும் எத்தனையோ பிள்ளைகள் தங்களுடைய அம்மா, அப்பாமார்களை ஏதோ ஒரு சாட்டை வைத்து விசாவை எடுத்துகூப்பிட்டுவிட்டு பிள்ளைகளோடு சேர்ந்து சந்தோஷமாக இருக்கினம். இப்போ உங்களுக்கு என்ன குறையெண்டு கண்டு ஊருக்கு வெளிக்கிட யோசிக்கிறியள்? லண்டனில் இல்லாத மருந்து வசதிகளே ஊரில இருக்கு…-

என்று மகள் கூறிக்கொண்டேயிருந்தாள். மறைக்க முடியாத குற்ற உணர்வு அசிங்கமாக அவர் முகத்தில் படலமிட்டிருப்பதை எவருமே அறியமாட்டார்கள்.

தனது மகளின் எந்தப் பேச்சையும் அப்பா பொருட்படுத்தவேயில்லை. கலகலத்த சிரிப்புக்கள் அவருள் கலங்கிக்கொண்டிருந்ததுபோல் இருந்தது… மிகவும் அவசரமாக தனது காரியத்தில் கண்ணாயிருந்து சில நாட்களில் இலங்கைக்குப் புறப்பட்டுவிட்டார் அப்பா…

மிருகங்கள்சிறுமி பெரியவளாகி பெரிய கொண்டாட்டங்கள் இடம்பெற்றாலும் அந்த உணர்வே அவளுக்குக் கிடையாது. பாடசாலைத் தோழிகளை காணவேண்டும்… அவர்களோடு சேர்ந்து விளையாடவேண்டும்… பேசவேண்டும்… பாடசாலையில் இடம்பெறும் மேல்நாட்டு நாட்டியத்தின் தாள அடிகளைப் பழகவேண்டும்… பாடசாலையில் நடைபெறும் விழாவில் அதனை ஆடிக்காட்ட வேண்டும்… அம்மாவும் அப்பாவும் வந்து அதனைப் பார்க்க வேண்டும்… மகளின் அழகை ரசித்த அம்மா, மக¡ளை வருடிவிட்டு அழைத்துச் செல்கிறாள் பாடசாலைக்கு. அம்மாவின் கண்களின் மிருதுவான பார்வை அவளை ஆனந்தத்தில் அடைகாப்பதுபோல் இருந்தது. சின்னக் குட்டிப் பெண்ணாக இருந்த தன் ஆசை மகள் இருந்தாப்போல இவ்வளவு வளர்ந்துவிட்;டாளே! அவளில் மிளிரும் விழிகள்… ஒருபோதும் கண்டிராத அவளின் கவர்ச்சி…தொலைக்காட்சியில் தான்; பார்த்து மகிழும் முத்தமிடுகின்ற அழகிய பூவிதழ்கள் போன்று விரியும் உதடுகள் … தனது கணவரின் கவர்ச்சியோடு அமைந்த அவளின் அசைவுகள்… தன்னைப்போன்ற இதமான சாயல்…தன் மகளில் பூத்துக் குலுங்குவதை பாடசாலை வாசலில் நின்று அவளைப் பின்புறம் பார்த்தவாறே பரபரப்பாகி தன்னுள் சுழன்றுகொண்டிருந்தாள் அம்மா. தினமும் தனது புத்திரி குறித்து புதுப்புது விதமான கனவின் மிதப்புக்களில் நாட்கள் நகர்ந்தன அம்மாவுக்கு.

வாரஇறுதிநாளன்று மதியம்போல் பாடசாலையில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

- மிஸிஸ். ரோகினி மதிவண்ணன்..?

- யேஸ் ஐ ஆம் மிஸிஸ் ரோகினி மதிவண்ணன்.

- ஐ ஆம் கோலிங் ஃறொம் யுவர் டோட்டேர்ஸ் ஸகூல். யுவர் டோட்டர் இஸ் நொட் வெல். சி ஹாஸ் எ ரெம்பரேச்சர். கான் யு கம் ரு ஸ்கூல் அஸ் சூன் அஸ் பொசிபிள்? (உங்களுடைய மகளுக்கு உடம்பு கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது. வழமைக்கு மாறாக அவள் காணப்படுகின்றாள். உடல் ரெம்பரேச்சரும் காணப்படுகின்றது. உடனடியாக நீங்கள் பாடசாலைக்கு வர முடியுமா?)

உடம்பு பூவாகி மலர்ந்து இன்னும் சரியான வலுவடையாத தேகம்… சிறிது நாட்கள் ஓய்வாக வீட்டில் இருந்துவிட்டு, இன்று பாடசாலைக்குப் போனதும் துள்ளி ஓடியாடி விளையாடியிருப்பாள். உடல் நல்லா நொந்துவிட்டதுபோல்… பயமும், பதற்றமும் தாயுள்ளத்தின்; மனதை வேகமாக்கி அழுத்துகிறது… மிகவும் அவசரமாக தன்னை தயார் செய்துகொண்டு பாடசாலைக்குப் புறப்படுகின்றாள் அம்மா.

பாடசாலையின் மெடிக்கல் அறையில் பெண் ஒருவர் அவள்; அருகில் நின்றுகொண்டிருந்தார்.

- மிஸிஸ் ரோகினி மதிவண்ணன், சிறிது மயக்கமாகவும் இவள் காணப்படுகின்றாள். எதற்கும் இவளை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று பரிசோதிப்பது நல்லது - என்று பாடசாலையின் முதலுதவி வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கும் அந்தப்பெண் கூறினாள்.

காலையில் பரவசத்தோடு பாடசாலைக்குச் சென்ற தனது மகளின் கோலத்தைக் கண்டதும்… அந்தப் பெண் அப்படிக் கூறுவதும்… அம்மாவுக்கு என்றுமில்லாதவாறு மூச்சிழைத்து களைப்பு ஏற்படுகின்றது. கண்களில் நீல ஒளி படருவதுபோலிருந்தது…
தனது மகள் ஒன்றும் பேசாது மௌனமாகவே இருந்தாள். அம்மாவின் விழிகளில் எழும் வினாக்களுக்கு அவளால் பதில் கூறத் தெரியவில்லை. இன்னும் விபரம் தெரியாத சின்னவள் தானே! அம்மாவின் தவிப்பு… அவளின் உள்ளத்தில் ஊடுருவும் நெருடல்… வைத்தியசாலையின் அவசரப்பிரிவிற்கு அம்மா மகளை கொண்டு செல்கின்றார். லண்டனில் அவசரப்பிரிவில்தான் அதிக நேரம் காத்துக்கொண்டிருக்க வேண்டும். நீண்டு மினுமினுக்கிற கைகளால் தன்தாயை அணைத்தபடி தன்தாயின் தோளில் சாய்ந்து உறங்கிவிட்டாள்.

வைத்தியரின் திடீர் அழைப்பு… விபரங்கள் எல்லாவற்றையும் பதிவு செய்துகொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன…நாடித் துடிப்பை பரிசோதித்த வைத்தியர்.

இவளுக்கு ரத்தப் பரிசோதனையும் மேற்கொள்ள வேண்டும் என்கிறார்.
பரிசோதனைகளை யாவும் மேற்கொண்ட பின் 'இப்போது நீங்கள் வீடு செல்லலாம். ரத்தப் பரிசோதனையின் முடிவு தெரிந்ததும் உங்களது குடும்ப வைத்தியருக்கு அறிவிப்போம்' என்றுவிட்டு விடைபெற்றார் வைத்தியர்.

அம்மாவின் முகத்தில் திகிற் புள்ளிகள் சுழன்றுகொண்டிருந்தன... எதனையும் வெளியிற் காட்டிக்கொள்ளாது 'வாம்மா' என்று தனது அழகுச் செல்வத்தை இறுகப் பற்றிக்கொண்டு அழைத்துச் செல்கிறார் வீட்டுக்கு.
எல்லோரும் தூங்கும் இரவுகளில் தன் மகளின் படுக்கையோரம் உட்கார்ந்திருந்தாள் அம்மா. தன் மகளின் உடலில் எதையோ தேடிக் கொண்டிருந்தாள்; அம்மா... அவளின் உறக்கத்தில் ஊருவும் நெருடலால் விழித்துக்கொண்டேயிருந்தாள் அம்மா.

அம்மாவும் அப்பாவும் ஒரே வேலைப்பராக்குளில் ஓடித்திரிவதுண்டு. அம்மப்பா வீட்டில் துணைக்கு இருக்கிறார் தானே என்ற துணிவில் அம்பப்பாவுடன் தன் மகளை பாதுகாப்பாக விட்டுச் சென்று வெளிவேலைகளைக் கவனித்துவிட்டு வருவதுண்டு
சிறுமியின்; அம்மாவும் அப்பாவும்.

"நீ பிறந்த பின்னர் உங்கட அம்மா பிள்ளையின்ர அழகான புகைப்படங்கள்தான் அனுப்புவாள். எவ்வளவு அழகாக இருந்தாய் குஞ்சு. நான் ஆசையில உன் புகைப்படத்துக்குத்தான் எப்பவும் முத்தம் கொடுப்பதுண்டு. நான் இப்படி என்னுடைய பேத்தியை
நேராக வந்து பார்த்துக் கொஞ்சுவேன் என்று எதிர்பார்க்கவில்லை ... எங்கே அம்மப்பாவுக்கு ஒரு முத்தம் தாங்கோ" என்று அவள் இடுப்பைத் திமிற திமிற இழுத்து மடியில் வைத்துக் கொஞ்சுவதுண்டு அம்மப்பா... சிலவேளைகளில் மூச்சு அனலாய்ப்
பறப்பதுண்டு அம்மப்பாவுக்கு...
ஒருநாள் நண்பர் ஒருவரின் மகளின்; அரங்கேற்றத்திற்கு அம்மாவும் அப்பாவும் செல்லவேண்டியிருந்தது. அம்பப்பாவோடு பத்திரமாக இருக்க வேண்டும்! அம்மாவின் அன்புக்கட்டளை! தொலைக்காட்சியில் வரும் சிறுவர் நிகழ்ச்சிகளை பார்ப்பதில் மூழ்கிப்போயிருக்கிறாள் சிறுமி. தனது உடலில் விழிகள் பல மொய்த்து உறுத்துவதுபோல உணர்ந்தாள்...நரை முடிகள் நிறைந்த உடலில் அவள் முகம் நெருக்கப்படுகின்றது. தளிர் விட்ட உடம்பை கரடுமுரடான கறுத்த கைகள் தடவுகின்றன...இள
மார்பகங்கள்... அவள் கன்னங்கள் ... உதட்டில் என்று முத்தங்கள்... வலுவான இறுக்கத்தில் அசிங்கமான கிழட்டுக்காமத்தின் புகைச்சல்... கோபமாகக் கத்திய பிள்ளை உறங்கிவிட்டாள்.... அந்நிகழ்வை சிறுமிக்கு எவருக்கும் சொல்லத்
தெரியவில்லைப்போல்...

காலையின் வாகன ஒலிகள். விழித்தபடியே படுத்திருந்த அம்மா. பெற்சீற்றை

விலத்திவிட்டுப் தன் மகளைப் பார்க்கிறாள். ஐயையோ! இந்த மாதிரி மேல் கொதிக்கிறதே. மருந்துப்பெட்டியிலிருந்து காய்ச்சல் மருந்து எடுக்கப் போகின்றாள் அம்மா.
தொலைபேசி மணி அடித்துக் கொண்டது.

மெடிக்கல் சென்ரரிலிருந்து பெண் அழைக்கின்றாள்.

- உங்கள் மகள் விடயமாக உங்களுடன் டொக்டர் அவசரமாக கதைக்க விரும்புகிறார். காலை பத்து மணிக்கு உங்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மகளுடன் உடன் வாருங்கள் மிஸிஸ் ரோகினி மதிவண்ணன் -

- மிஸிஸ் ரோகினி மதிவண்ணன். அப்செற் ஆகவேண்டாம். மனதைத் திடமாக்கிக் கொள்ளுங்கள். உங்களது மகளின் ரத்தப் பரிசோதனையில்… உங்கள் மகள்… ஐ ஆம் வெறி சொறி ரு சே… ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

- என்ன டொக்டர்… -

- உங்களின் சிறு பிள்ளை கர்ப்பமுற்று இருக்கின்றாள்…

மிருகங்கள்எப்படி டொக்டர்..? இருதயம் பலமாகக் குலுங்கி இடித்தது… ஆ… இது என்ன தெய்வமே! எனது ஒரே ஒரு செல்வக் குழந்தை. ஜன்னலில் ஆடும் மரக்கிளைகள் பலமாக சுழன்று அடித்துக்கொண்டிருந்தது அவளுக்கு. அப்படி இருக்கவே
முடியாது… இப்போதானே அவள் வயதுக்கு வந்தவள்… ஒன்றுமே புரியாத குழந்தை டாக்டர்; … ஐயோ இது என்ன கொடுமையான செய்தியைக் கூறுகின்றீர்கள் டொக்டர்… மீட்க முடியாத சோகத்தில் அம்மாவின்; மனம் கேவி கண்களில் நீர்
கோர்த்துக்;கொண்டே இருந்தது… எதுவுமே பேச முடியாத இயலாமையில் அம்மாவின் தலை விறைத்தது. அவளின் உடல் கழன்று உருண்டு போனதுபோலிருந்தது. இருதயம் உலர்ந்து சருகாகி நொருங்கியது. இலங்கையில் ஏற்பட்ட சுனாமி…
இலங்கையில் இடம்பெற்ற போர்;… போன்ற மிகக் கொடுமையான அழிவுகளை விடவும் இதனை அவளால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை… அவளின் உடல் எடையற்று வெறுமையாக மாறிக்கொண்டிருந்தது…

5.4.2011. (உண்மைச் சம்பவத்தைத் தழுவியது)

Navajothy Baylon < navajothybaylon@hotmail.co.uk>
பதிவுகள் 06 September 2011

11. நாசிலெமாக் - - கமலாதேவி அரவிந்தன்-

கோப்பையைத் தூக்கிப்பிடித்து, மேலே அண்ணாந்து காப்பி குடிக்க முயன்றதில் இந்த முறையும் தோல்விதான். பழக்கமின்மையால் காப்பி சிதறி, டீ ஷர்ட்டெல்லாம் நனைந்து வேறு உடை மாற்ற அறைக்குள் ஓடும் பூங்கொடியைப் பார்க்கப் பார்க்க, தனலெட்சுமிக்குப் பற்றிக் கொண்டு வந்தது கோபம். என்னாச்சு இந்தப் பெண்ணுக்கு? கொஞ்ச நாட்களாகவே மகள் அடிக்கும் லூட்டி, சில சமயங்களில் எரிச்சலைக் கூடக் கொடுத்தது. காப்பியை உறிஞ்சி, மிடறு மிடறாய்க் குடிப்பது தான் பூங்கொடிக்குப் பிடிக்கும். அப்படி ரசித்துக் குடிப்பது பார்க்க என்னமோ தியானம் போல் இருக்கும். அப்படி மெய்ம் மறந்து காப்பி குடிக்கும் பெண் இப்ப கொஞ்ச நாட்களாய் தான் இப்படி அண்ணாந்து குடிக்கிறாள். வெறும் தண்ணீரை[பச்சைத்தண்ணீரை]அப்படி குடிப்பதில் சிரமமில்லை. ஆனால் சூடு காப்பியையும், அப்படி சர்க்கஸ் வேலையாய் குடிக்க முற்பட்டு, பிறகு உடையெல்லாம் சிதறி, அசடு வழிய அறைக்குள் ஓடுவதைப் பார்க்கும் போது தான்,கோபம் வருகிறது.

அதற்குள் இன்னொரு ஆச்சரியத்தைத் தந்தாள் பூங்கொடி.

பச்சை ஸ்கர்ட், பச்சை பிளவுஸ், பச்சைக் காதணி, என பச்சைப் பாவையாய், அறைக்குள்ளிருந்து வெளியே வந்த பூங்கொடியைப் பார்த்து, பேச்சிழந்துபோனாள். உண்மையில் பச்சை அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காத கலர். என்ன கண்றாவி கலர்மா அது?!என்று பச்சையைக்கண்டாலே காததூரம் ஓடும் பெண், இப்பொழுதெல்லாம் அடிக்கடி இப்படி பச்சைக்கலரில் உடை அணியத் தொடங்கியிருந்தாள். தனலெட்சுமியின் வருத்தமெல்லாம் இது எங்கே போய் நிற்குமோ, என்பதில் தான். பூங்கொடி சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்தவள். தமிழ் நாட்டிலேயெ பிறந்து வளர்ந்து, வேலைக்காக மட்டுமே சிங்கப்பூருக்கு வந்திருக்கும் முருகேசனிடம், இந்தபெண்ணுக்கு,எப்படி இவ்வளவு ஈர்ப்பு ஏற்பட்டது என்பது தான் தனலெட்சுமிக்கு புரியாத புதிராக இருந்தது. முருகேசனுக்கு பச்சை பிடிக்கும் .முருகேசனுக்கு, டம்ளரை அண்ணாந்துகுடித்தால் பிடிக்கும்,முருகேசனுக்கு இது பிடிக்கும் ,அது பிடிக்கும், என்று, இப்படி இன்னும் என்னென்ன அந்த முருகேசனுக்காக, கூத்துக்கட்டி அடிக்கப் போகிறாளோ, என்று நினைக்கும்போதே, "ஆயுசு நூறு".

"வணக்கம் அம்மா! " , என்ற முகமனோடு வாசலில் வந்து நின்றான் முருகேசன்.

பூங்கொடி சற்று பார்க்கக் கூடிய நல்ல நிறம்.ஆனால் முருகேசனோ தொட்டு பொட்டு வைத்துக்கொள்ளும் அட்டிக் கறுப்பு. கண்கள் கூட சற்று மாறுகண்தான். பார்க்கவும் சுமாரான தோற்றமே.. மொச்சைப்பல் தெரிய சிரிக்கும்போது கூட அப்படியொன்றும் லட்சணமில்லைதான். ஆனால் , படிய வாரிவிடப்பட்ட தலைமுடியும், வெளேர் என்ற

பற்களைக் காட்டி,அழுத்தமும் திருத்தமுமான கணீர்ப்பேச்சுமாய்,முருகேசன் வந்து நின்றால் ,என்னமோ வானத்து தேவனே எதிரில் வந்து ,வரம் கொடுப்பது போல் பூங்கொடி அப்படி மெய்ம் மறந்துபோய் நிற்பாள். அந்த நகாசு பூச்சு ஒன்றுதான் முருகேசனின் கம்பீரம். நாட்டு நடப்பை அப்படிப்பேசுவான். ஆனால் பேச்சினூடே,இடைச்செருகலாய், "ஊரிலிருந்தவரை சிங்கப்பூருன்னா என்னமோ உலக அதிசயம்னுதான்
தோணுச்சி..ஆனா என்ன ஊரு இது? இங்கே பாக்கறதுக்கு அப்படி என்ன இருக்கு? என்னா, கொஞ்சம் பணம் சம்பாதிக்கலாம்.ஆனா, அதுக்கும், ரெண்டெரட்டி ஆடம்பர செலவும் இருக்கே? முதல்ல இந்த ஊரு பொண்ணுங்களுக்கு அடக்க ஒடுக்கம்னு ஒண்ணு இருக்கா? இதுங்க டிரஸ்ஸும், வேஷமும்,!
பூங்கொடி, நீ மட்டும் அப்படியெல்லாம் வேஷம் போட்டுராதே? என்ன?" என்று சொல்லும்போது, "உன் அறிவுரைகள் அனைத்தும் சிரசாய் வகிப்பேன், "என்பது போல் சிலிர்த்துப்போய் நிற்பாள் பூங்கொடி.ஆனால் தாங்கமாட்டாமல், தன லெட்சுமி தான் வெடிப்பாள்." ஏன் இந்த ஊர் பொண்ணுங்க கிட்டே அப்படி என்ன குறை கண்டுட்டிங்க?"

"என்னம்மா? அப்படி கேட்டுட்டீங்க ? ஒரு பொட்டு வைக்கிறாங்களா? கண்ணைக்குத்தறாப்பில லிப்ஸ்டிக்கைப் பூசிக்கிட்டு ... அரையும் குறையுமா உடுத்தறதா அழகு? நாளும் கிழமையுமா தலை நிறைய பூ வச்சு, மஞ்சள் பூசின முகமும், நெற்றியில்
பளிச்சுனு பொட்டுவச்சுக்கிட்டு, பாங்கா ஒரு புடவையும் கட்டி, எங்கூரு பொண்ணுங்க எதிரில வந்தா அப்படியே கையெடுத்துக் கும்பிடத்தோன்றும்."

அதற்கு மேலும் முருகேசன் தொடர்ந்தால் எங்கே அம்மா வாயிலிருந்து, சாட்டையடியாய் வார்த்தைகள் விழுமோ, என்ற பயத்தில் பூங்கொடிதான் முருகேசனைக் கூட்டிக்கொண்டு அலுவலகத்துக்கு நகர்ந்து விடுவாள். ஆனால் மனசுக்குள் அவளுக்கே முருகேசனின் இந்த பேச்சு சற்று அதீதமாகத்தான் பட்டது.சிங்கப்பூரில் பொட்டும் பூவும் வைத்து, மஞ்சள் பூசின முகத்தோடு, அலுவலகம் போனால் அடுத்த நாளே அவள் சீட்டு கிழிந்துவிடும். ஏனெனில் பூங்கொடி வரவேற்புப் பிரிவின் உயர் அதிகாரி.சீன,மலாய், என பல இன மக்களிடையே புழங்கும் அவளுக்கு அதற்கேற்ற நாகரீகத்தோடு உடை அணிந்து போகாவிட்டால், அலுவலகத்தில் எடுபடாது. "இப்படியெல்லாம் முருகேசனிடம் சொல்லவேண்டுமென்றுதான் நினைப்பாள்.ஆனால் முருகேசன் பேசத் தொடங்கிவிட்டால் ஒரு வார்த்தை மறுத்துப் பேசத் தோன்றாது. என்னமோ அப்படி ஒரு கவர்ச்சி அவன் பேச்சில் ....

இருவருமே பக்கத்து பக்கத்து அலுவலகத்தில், தான் வேலை செய்தனர்.அலுவல் சம்பந்தமாக முருகேசன் பூங்கொடியின் அலுவலகம் வந்தபோதுதான், இருவருக்கும் பழக்கமானது.அழகிய கோட்டும், மெலிதான ஒப்பனையில், பூவாய் மலர்ந்து நின்ற

பூங்கொடியை பார்த்தவுடனேயே , கிட்டே வந்து பேசத் தொடங்கினான் முருகேசன். அவன் பேச்சில் அப்படியே கரைந்து போனாள் பூங்கொடி. அந்த பேச்சின் வசியத்துக்கு முன்னே,அவன் கறுத்த நிறமோ, தோற்றமோ ஒரு பொருட்டாகவே தெரியவில்லை.ஆனால் அவளுக்குப் புரியவே புரியாத புதிர், "ஆம்பிளைக்கு அழகுங்கிறது, வெள்ளைத்தோலோ, கவர்ச்சியோ அல்ல..அவனுடைய சாமர்த்தியம் ,சம்பாத்தியம்,நல்ல மனசு தான்!" என்று அடிக்கடி சொல்லும் அம்மா தன லெட்சுமிக்கு ஏன் முருகேசனைப்பிடிக்கவில்லை என்பதுதான்.! எது எப்படியிருந்தாலும் பூங்கொடிக்கு முருகேசனை ரொம்பவும் பிடித்திருந்தது.பொண்ணுண்னா, என்று முருகேசன் கோடிட்டுக் காட்டிய லட்சணங்களை தேவ மந்திரமாய், பின் பற்ற முயற்சித்ததில்,ஒன்றுதான் அண்ணாந்து குடிப்பது. டம்ளரை வாயில் வச்சு , எச்சில் பண்ணிக்குடிக்கிற பொம்பளையோடு ஒருத்தன் குடும்பம் நடத்துவானா? என்று அவன் கேட்டால், அதானே, என்று தலையாட்டவே அவளால் முடிந்தது.

அன்று அப்படித்தான் பாரதி கண்ட புதுமைப் பெண்களைப் பற்றி, அவளுக்கு மந்திரோபதேசம் செய்துகொண்டே,நடந்து வந்தபோது,ஒரு விசித்திர சம்பவம் நடந்தது. மதிய உணவுக்காக இருவரும் அலுவலகத்தை அடுத்திருந்த உணவகத்தை நோக்கி நடந்துபோது,ஏதோ தொண்டைக்கமறல் ஏற்பட்டு, புளிச்சென்று நடுரோட்டில் காறி உமிழ்ந்தான்` முருகேசன். உடனே,பூங்கொடி எடுத்து நீட்டிய டிஷ்யூவையும், வாயைச்சுற்றி,துடைத்துவிட்டு,சடாரென்று, அதையும் கீழே போட்டுவிட்டு, நடக்க பூங்கொடிக்குத்தான் துணுக்கென்றாகிவிட்டது. சிங்கப்பூரில் இப்படி நடுத்தெருவில் காறி உமிழ்வதும், கண்ட இடத்தில் குப்பை போடுவதும் குற்றம் என்பது கூட முருகேசனுக்குத் தெரியாதா என்ன ? ஆனால் ஆகி முதிர்ந்த திமிரோடு ,ஞான் இப்படித்தான், என்று காட்டிக்கொள்கிறாரா? முதலில் பூங்கொடிக்குக் குழப்பமாகவே இருந்தது, என்றாலும், இந்த செய்கையும் கூட ஏதோ விதத்தில் பிடித்துதான் இருந்தது, ஹ்ம்ம், இதுக்கும் கூட துணிச்சல் வேணுமில்லே?

உணவகத்தினுள் நுழைந்தவுடன், வழக்கம்போலவே முருகேசன், சாதம், கறி, கூட்டு, காய்கறி, என விமரிசையாக வாங்கிக் கொண்டான். அன்று ஏனோ பூங்கொடிக்கு , இலையில் பொதிந்து, பூங்கூம்பாய் கண்ணாடிக்குமிழில் வீற்றிருந்த ,நாசி லெமாக், கைக்கண்டவுடன் வாயூறிப்போனாள். எவ்வளவு நாளாச்சு? இந்த சுவையான தேங்காய் சாதமும், பொரித்தமீனும், சம்பாலும் சாப்பிட்டு! நாக்குச்சொட்ட நாசி லெம்மாக்,கை சம்பாலில் தொட்டு, தீமூனை [வெள்ளரித்துண்டுகளை], கடித்துக்கொண்டு, பொரிச்ச மீனையும் ,ஒரு வாய் கடித்துக்கொண்டு, ஒரு கணம் உலகமே இன்பமயமாகிப் போனது. அப்படி சுவைத்து சாப்பிட்டாள் பூங்கொடி. முருகேசன் ஏனோ பேசவே இல்லை. அதுபோலவே வீடு திரும்பும் வழியில்,நெகிழித்தாளில் அழகாக பேக் செய்யப்பட்ட, டுரியான் பழங்களைக்கண்டவுடன், உடனே ஒரு பேக்கட் வாங்குவதற்காக விலை கேட்க, சரேலென்று முருகேசன் விடுவிடுவென்று நடந்து போனான்.

”என்னாச்சு முருகேசன்? ஏன்? என்று ஓட்டமும் நடையுமாய், முருகேசனை அடைந்தபோது, முருகேசன் நெருப்பாய் உமிழ்ந்தான் வார்த்தைகளை. ”இதோ பாரு, பூங்கொடி,அந்த எழவெடுத்த பழத்தோட வீச்சம், இவ்வளவு தூரத்துக்கு அப்பாலும் கூட நாறுது. அதே போலதான், ஏதோ இலையில் பொதிஞ்ச கருமத்தை, என்ன ருசியோ,அப்படி வாங்கித் திங்கறே? நமக்குன்னு பாரம்பரியம் உடையில் மட்டுமில்ல, சாப்பாட்டுலயும் கூட இருக்குங்கிறதை நீ ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கறே? பூங்கொடி அப்படியே ஸ்தம்பித்துப்போனாள். நாசி லெமாக் அவளுக்கு மிகவும் பிடித்தமான உணவு, டுரியான் பழமும் கூட சிங்கப்பூரர்களுக்கு, பிடித்த பழம்தானே. இதெல்லாம் கூடவா முருகேசனுக்குப் பிடிக்காது ? பூங்கொடி உள்ளூரக் காயம், பட்டுப்போனாலும் 'ஞான் தான் வாங்கலயே முருகேசன்' என்று எவ்வளவோ சமாதானம் செய்ய வேண்டியிருந்தது, முருகேசனை சகஜ நிலைக்குக் கொண்டுவர. எல்லாம் கொஞ்ச நேரத்துக்குதான். பிறகு முருகேசன் பேசத் தொடங்கி விட்டான்.

முருகேசன் தமிழ்ப் பற்று கொண்டவர், தமிழ் பாரம்பரியத்தில் அதீத பற்றுக்கொண்டவர், இந்தகாலத்தில் இப்படியெல்லாம் யார் இருக்கிறார்கள்? எல்லாம் நல்லதுக்குத் தானே சொல்றார் ? இவரைப்போல் சுத்ததமிழ் மகன் சல்லடை போட்டுத்தேடினாலும் சிங்கப்பூரில் கிடைக்குமா? முருகேசன் விருப்பப்படி மாறவேண்டியது தானே நமது கடமை என்று மனதைத் தேற்றிக்கொண்டாள் பூங்கொடி,. சரியாக இரண்டு நாட்களுக்குப்பிறகு,இன்னொரு சகுனம் பிடித்த சம்பவம் நடந்தது.
அலுவலகத்தில் மிகவும் மும்முரமான வேலை நெருக்கடி நேரத்தில் அவளது கைத்தொலைபேசி ஓயாமல் சிணுங்கியது. பூங்கொடியால் தொலைபேசியை எடுக்கவே முடியவில்லை. இடைவிடாது தொலைபேசி அழைத்துவிட்டு, எடுக்காத பட்சத்தில் , பிறகு குறுந்தகவல் வந்தது. வேறு யார்? முருகேசன் தான். முருகேசனுக்கு அவளை உடனே பார்க்கணுமாம். வெட்கத்தில்அப்படியே மனசு மலர்ந்து போனது. ஹ்ம்ம். இந்தக் காதல் படுத்தும் பாடு. பூங்கொடிக்கும் கூட முருகேசனைப்பார்க்கணும்போல் மனசு பறவாய்ப் பறந்தாலும்,உடனே போகமுடியவில்லை.
ஒருமணிநேரம் கழித்தே வெளியே வரமுடிந்தது.

"வா! பூங்கொடி”என்று பரக்கப்பரக்க , அழைத்துக்கொண்டுபோய்,வழக்கமான உணவகத்தில், உட்கார்த்திவிட்டு,சற்று வெட்கத்தோடு நெளிந்தான் முருகேசன். ஊரிலிருந்து கடிதம் வந்திருக்கு , பூங்கொடி, அம்மாதான் அனுப்பியிருக்காங்க” என்றபோதே, பூங்கொடிக்கு ஆவலில் மனசு படபடத்தது. சட்டென்று கையில் வைத்திருந்த கவரைப் பிரித்து,, நாலைந்து புகைப்படங்களை பூங்கொடி கையில் கொடுத்தான். இளம்பெண்கள். தலையில் பூ வைத்து, பொட்டு வைத்து, மஞ்சள் பூசின முகத்தோடு,புடவைகட்டி, கறுப்பாய், இள நிறத்தில் ,மாநிறத்தில், எனப்பலவித தோற்றங்களில் , ”முருகேசனின் எங்கூரு பொண்ணுங்க” சாயலில் புகைப்படங்கள்.

"இதில எந்தப்பொண்ணு எனக்குப்பொருத்தமான பொண்ணுண்னு, நீ தான் எனக்கு பார்த்துச்சொல்லணும், பூங்கொடி.! எனக்கானா ஒரே வெட்கம் போ ! எனக்கும் உன்னை விட்டா யாரிருக்கா சொல்லு," அமிலக்கட்டி உடைந்து , அப்படியே தேகம் முழுவதும் , பொசுங்கிப் போனாற்போல், ஒரு கணம் உறைந்து போனாள். பேசவே முடியவில்லை.

"அட, என்னாச்சு? பூங்கொடி? என்று அவன் மேலும் தூண்ட, மெல்ல கேட்டாள்.

"அப்படீன்னா இத்தனை நாளும்,நீங்க, எங்கூட, பழகினது, சுற்றினது, எல்லாம் ..."

முருகேசனின் முகம் இருண்டது. "நீ என்ன சொல்றே?"

"இங்கே ஆபீசிலே, வீட்டிலே, ஏன், நம்மைத்தெரிஞ்சவுங்க எல்லோருமே நம்மை ..." தொடரக்கூட முடியாமல், துக்கம் தொண்டையை அடைத்தது பூங்கொடிக்கு.

"*சீ, சீச்சீ*, அப்படிக்கூடவா நினைப்பாங்க?, என்ன உளறரே பூங்கொடி?அட, சிங்கப்பூரிலெ இதெல்லாம் சகஜம் தானே? ஒரு பொண்ணு எத்தனை பேர் கூட வேணும்னாலும் பழகலாம். நினைச்ச நேரத்துக்கு, யார் கூட வேணும்னாலும் வெளியே போகலாம், வரலாம் தானே? இந்த ஊரிலே இதெல்லாம் ரொம்ப சர்வ சாதாரணம்தானே? அப்படியிருக்க, நீயும் நானும் வெளியிலே சுத்தனதை வச்சா கதை கட்டப்போறாங்க? இதெல்லாம் சும்மா உம் பிரம்மை, பூங்கொடி" என்று அவன் நீட்டி முழக்கியபோது, அப்படியே செருப்பால் அடிபட்டதுபோல் , துடித்துப்போனாள்.

நட்டநடுரோட்டில் காறி உமிழ்வதும், கண்ட கண்ட இடத்தில் குப்பை போடுவதும்போல்தான், இவனுக்கு சிங்கப்பூர் பெண்களும். சம்பாதிக்கவும் பணம் பண்ணவும் மட்டுமே சிங்கப்பூர். மற்றபடி வாழ்க்கைக்கு, அவனுடைய ஊர்க்காரப்பெண்கள் தான்
கற்புக்கரசிகள். மணக்கப்போகிறான் என்று நம்பி, இவனுடைய கபர்தாரும், அலட்டலையும் கூட சகித்து, ஆசைப்பட்ட உணவைக் கூடத் துறந்து,
பிடித்த உடையைக் கூட மறுத்து, சதா இவனுடைய துப்பு கெட்ட அதிகாரத்துக்கு, செவிசாய்த்து நின்ற தன்னுடைய முட்டாள்தனத்தை நினைக்க நினைக்க,நெஞ்சு ரணமாகியது.

"அட, என்ன எழுந்துட்டே பூங்கொடி? இன்னும் சாப்பிட்டு கூட முடிக்கலையே "

"முருகேசன், எப்பவுமே நாந்தானே சாப்பாட்டுக்கு காசு கொடுப்பேன். இன்னைக்கு ஒரு

நாளாவது, இப்படி ஓசியிலே சாப்பிடாமெ, சுத்தத் தமிழ் மகனா, மானமுள்ள தமிழ் மகனா, உங்க சாப்பாட்டுக்கு நீங்களே காசு குடுங்க" என்றவாறே விடுவிடுவென்று நடந்த பூங்கொடியால், கண்ணீரை மட்டும் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

அழகான கண்ணாடிக்குமிழில் அன்றைய சுவையான நாசி லெமாக்கை, வாங்க வாடிக்கையாளர்கள் வரிசை பிடித்து நிற்கத் தொடங்கியிருந்தார்கள்.

kamaladeviaravind@hotmail.com

பதிவுகள் 08 September 2011

12. சிவப்பு விளக்கு எரியும் தெரு - நடேசன்(அவுஸ்திரேலியா)

"உலகம் சுருங்கிவிட்டது" என்று எல்லோரும் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். அதை ஜெனிவாவுக்கு வந்தால் இலகுவாக புரிந்து கொள்ளமுடியும். பூகோளத்தில் உள்ள சகல நாட்டை சேர்ந்தவர்களும் வந்து போவார்கள். அந்த நாடுகளுக்கு பொதுவான நிறுவனங்கள் இந்த ஜெனிவா நகரில் இருப்பதால் எப்பொழுதும் மகாநாடுகள் கருத்தரங்குகள் என நடைபெறுவதால் ஹோட்டல்கள் எல்லாம் நிரம்பியே வழியும். வெளிநாட்டவர்கள் தொகை உள்நாட்வர்களுக்கு சமமானது. இப்படியான ஜெனிவாவில் ஐந்து
நாட்கள் ஒரு ஹோட்டலில் தங்கி நாலு இரவுகள் அந்த ஹோட்டலின் உணவை அருந்தினார் சோலர் ரெக்னோலஜி பொறியிலாளர் சம்பந்தமூர்த்தி. அவரது நாக்குக்கு திருப்தியில்லை.

எவ்வளவுதான் தரமான சுவி;ஸ் வெள்ளை வைனாக இருக்கட்டும். நாக்கில் சர்க்கரையாக கரையும் சீஸாக இருக்கட்டும் நமது காரம் மணம் குணம் எந்த சாப்பாட்டுக்கு வரும்?; யாழ்ப்பாணத்து மட்டுவில் கத்தரிக்காயோ அல்லது சாவகச்சேரி
முருங்கைக்காயோ இந்த நாட்டில் கிடைக்காவிடிலும் நமது நாக்குக்கு வட இந்திய சாப்பாடாவது சாப்பிட்டால் மட்டுமே இன்று பொச்சம் அடங்கும் என்ற ஆவலில் நாக்கில் எச்சில் ஊறத் தொடங்கியது.

மேலும் சுவிஸ் சாப்பாடு; சாப்பிட்டால் நாக்கு செத்து விடும் என தீர்மானித்து அந்த மாலைப் பொழுதில் சிறிது தொலைவில் இந்திய உணவுக்கடை இருப்பதாக விசாரித்து அறிந்து கொண்டு பிளாட்பாரம் வழியே நடந்தார். ஐரோப்பிய கோடைகாலம். கடைகளுக்கு உள்ளே இருப்பவர்களைவிட பலர் கடைகளின் வெளியே உள்ள பிளாட்பாரங்களில் விரித்த குடைகளின் கீழ் உணவருந்தினர.; இந்த ஐரோப்பியர் ஒவ்வொரு மாலை சாப்பாட்டையும் சடங்காக்கிறார்கள். நம்ம சனம் கல்யாணம் சாமத்தியம்
மரண வீட்டைத்தான் சடங்காக கருதும.; அது மட்டுமா? கோப்பையில் போட்டு வழித்து வாய்க்குள் அமுக்கிய பின்புதான் பேசுவதற்கு வாயை திறக்கும். சாப்பட்டை தின்று முடித்துவிட்டு கதைக்கச் சொல்லி தகப்பனிடம் பல முறை சிறுவயதில் அடி வாங்கியது சம்பந்தமூர்த்திக்கு ஞாபகத்திற்கு வந்தது. இங்கை சனம் ஒவ்வொரு வாய் சாப்பாட்டுக்கும் இடையில் அரைமணித்தியாலம் பேசுதுகுள்.

மாலை ஆறுமணிதான் இருக்கும். மாலை வெயில் மஞ்சள் நிறத்தில் மங்களகரமாக அழகிய ஜெனிவாவை மெதுவாக இன்னும் போர்த்தியபடி இருந்தது, நடைபாதையில் சில நகைக் கடை மற்றும் கடிகாரக்கடைகளைத் தவிர மற்றவை எல்லாம் சாப்பட்டுக்கடைகள்தான். பல தேசத்தவரது கடைகள் இருந்தன. பல நாட்டு கடைகள்

மட்டுமல்ல பல நாட்டு ஆண்களும் பெண்களும் ஜாடை காட்டியது அற்புதமாக இருந்தது. எதிரில் போனவர்களை விலத்திக்கொண்டு நடக்கும் போது ஒரு வானவில்லின் நிறப்பிரிகையாக இருந்தது. உலகத்தின் பலவிதமான முகங்கள் நிறங்கள் கண்கள் என தோன்றியது. கறுப்பிலும் தென் ஆபிரிக்க நிலக்கரி கறுப்பு, எத்தியோப்பிய கோப்பி கறுப்பு, சோமாலிய பழுப்பு கறுப்பு என பல ரகம்;. இதேபோல் வெள்ளையில் பலவிதமான வெளுப்புகள். இப்படி கலர்களைக் கண்டபோது எல்லோரும் ஒரே நிறமாக இருந்தால் அது எவ்வளவு சலிப்பாக இருக்கும். இயற்கையை விட சிறந்த ஓவியன் உலக்தில் இல்லை.

அந்த இந்தியக்கடையை கண்டாலும் உடனே அங்கு இருந்து விடாமல் நேராக ஜெனிவாவின் வாவி;யை நோக்கிச் சென்றார். அந்த வாவியில் இறங்கு துறையில் இருந்து பெரிய படகு ஒன்று பல உல்லாசப்பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்ல ஆயத்தமாகியது . நேற்று இரவில் அதே படகில்; சம்பந்த மூர்த்தியும் இருந்தர். மூன்று மணிநேரம் அந்த விசேடமான விருந்து கொன்பரன்சுக்காரருக்காக ஒழுங்கு படுத்தப்பட்டது. விருந்தின் போது அந்தப் படகு சுவிஸ்லாந்தையும் பிரான்ஸ்ஸையும் பிரிக்கும் அந்த வாவியை சுற்றி வந்தது.

சிறிது நேரம் அந்தப் படகைப் பார்த்து விட்டு மீண்டும் உணவுக்கடையை நோக்கி நடந்து வந்த போது அந்த வாவியின் கரையில் பறவைகள் சோடியாக இருந்தன.

'முட்டை இட்டு அடைகாக்கும் ஸ்கண்டினேவிய வாத்துக்கள்' என அந்த வழியால் அவைகளை புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த இளைஞன் சொன்னான்.

'ஸ்கண்டினேவிய வாத்துக்கள் இந்கே வந்தால் சுவிட்சர்லாந்து வாத்துக்கள் எங்கே போகும்? 'ஒரு நகைச்சுவையாகக் கேட்டுவைத்தார்சம்பந்தமூர்த்தி.

'அவை மெடிரேனியன் நாடுகளான ஸ்பெயின் இத்தாலி போர்த்துக்கல் என தெற்கே போகும்.'

சம்பந்தமூர்த்தியின் முகத்தை கூர்மையாக பாரத்துவிட்டு மீண்டும் 'ஸ்கண்டினேவிய நாட்டு வாத்துக்கள் அடைகாக்க வெப்பத்தை தேடி இங்கு வருவது போல் இங்குள்ளவை இன்னும் அதிகமான வெப்பத்தை தேடி மெடிரேனின் கால நிலைக்கு செல்கின்றன' என கூறிவிட்டு நகர்ந்தான் அந்த இளைஞன்.

அந்த இளைஞன் பறவைகள் விடயம் தெரிந்தவன் போல் இருக்கிறது என நினைத்துக்கொண்டு, 'நான் கொன்பரன்சுக்கு வந்தது போல் நீங்களும் அடைகாக்க வந்திருக்கிறீர்கள் ஆனால் உங்களுக்கு பாஸ்போட், சுங்கம் என்பன கிடையாது.' என்றார்.

இருளாகி விட்டதால் இந்தி;ய ரெஸ்ரோரண்டுக்குச் சென்று வெளியே இருந்த ஆசனத்தில் இருந்து கொண்டு பியரை ஓடர் பண்ணிவிட்டு சுற்றிப் பார்த்தார். வானவில் நிறங்களில் பலர் இருந்தார்கள். அவர்களில் இருவர் சம்பந்தமூர்த்தியின் கவனத்தை கவர்ந்தார்கள் அறுபது வயதான ஐரோப்பிய பெண் மிக மெலிந்தவள். ஒருகாலத்தில மிக அழகியாக இருந்த தொல்லியல் அடையாளங்கள் அவளில் இருந்தன. எதுவித அலங்காரமும் அற்று பிரான்ஸிய தொனியுடன் ஆங்கிலத்தில் பக்கத்தில் இருந்த இளைஞனுடன் அன்னியோன்னியமாக பேசிக்கொண்டிருந்தள் . அவனுக்கு பதினெட்டு அல்லது இருபது வயதான இந்திய முகச்சாடையுடன் வெளிறிய கோதுமை நிறம். இருவருக்கும் முக நிற ஒற்றுமை இல்லை. எனவே தாயும் மகனுமாக இருக்க முடியாது. இருவரும் சிகரட்டை புகைத்துக் கொண்டிருந்தனர். சம்பந்த மூர்த்தி அவர்களைப் பார்த்த போது அந்தப் பெண் 'ஹலோ' என்றள்.

அவள் ஹலோ சொல்லி விட்டு திரும்பிய போது அந்த இளைஞனும் சிநேகமாகப் பார்த்து புன்னகைத்தான்.

பதினைந்து நிமிடத்தின் பின் அந்த இளைஞன் அந்த ஹோட்டலில் இருந்து வெளியேறிவிட்டான்.

சம்பந்தமூர்த்தி அப்பொழுது பியரை முடித்து விட்டு, பியரின் கடைசித் துளிகளை உடனடியாக விழுங்காமல் இவ்வளவு காலம்

குடித்தவற்றோடு ஒப்பிட்டு இரசித்த போது அந்தப் பெண் எழுந்துவந்து மார்கி என தன்னை அறிமுகப்படுத்தினாள்.

'இந்தியாவா'

இந்தியா இலங்கையர்களின் அரசியல் கலாசாரத்தில் மட்டுமல்ல தனி மனிதர்களின் தோற்றத்திலும் ஆட்சி செய்கிறது.

'இல்லை. இலங்கை. ஆனால் அவுஸ்திரேலியா'

'இந்த இளைஞனை நான் நேபாலில் இருந்து இங்கு படிப்பதற்கு ஸ்பொன்சர் செய்கிறேன்'

'என்ன படிக்கிறான்?';

'ஹோட்டல் முகாமைத்துவம்'

அந்தப் பெண்ணில் இருந்த காந்தத்தாலும் சாப்பிடும் போது பேச்சுத்துணையை தேடியதாலும் அவளுக்கு வைனை ஓடர் பண்ணிய போது வேண்டாம் என்றாலும் மீண்டும் வற்புறுத்தி கேட்டபோது மறுக்கவில்லை. வைனை ஓடர் பண்ணிய போது 'வைற் பிளீஸ்' என பரிசாரகரிடம் கூறிவிட்டு ' இந்த நாட்டில் வைற் வைன் நன்றாக இருக்கும்' என சம்பந்தமூர்த்தியை பார்த்து கூறிவிட்டு சிகரட்டை நீட்டினாள் .

'இதை மறந்து பல காலமாகிவிட்டது' என்றார் சம்பந்த மூர்த்தி

'இளம் வயது பழக்கம் தொடர்கிறது' என்று அவள் சொன்ன போது வழமையாக புகைப்பவர்களது பூனை இருமல் வந்தது.

'சுவிஸ்- பிரான்ஸா இல்லை பிரான்ஸ் -பிரான்ஸா?

'நான் ஜெனிவாவில் பிறந்து வளர்ந்தேன் இந்த இடங்கள் எல்லாம் நான் ஓடித் திரிந்து தொழில் பார்த்த இடங்கள்.'

'என்ன தொழில் பார்த்தீர்கள்'

சிரிப்பு மட்டும் அவளிடம் இருந்து வந்தது.

சம்பந்தமூர்த்திக்கு ஆவல் மேலீட்டாலும் நாகரீகம் கருதி 'நேபால் சென்றீர்களா' என பேச்சை மாற்றினார்.

இந்தியாவில் பலகாலம் இருந்தேன். அதன் பின் தான் நேபால் சென்ற போது இந்த இளைஞனின் தந்தை எனது வழிகாட்டியாக இருந்தார். அவர் மரணம் அடைந்து விட்டார் எனக்கூறி மீண்டும் இருமினாள்

'இன்று வீடு போகும் முன்பு இந்த கடைகளின் பின்;னால் இருக்கும் பாதையில் நடக்கப் போகிறேன் என்னோடு துணைக்கு வர முடியுமா?'

உணவை முடித்து விட்டு நடப்பது சம்பந்தமூர்த்தியின் சர்க்கரை வியாதிக்கு நல்லது என்பதால் அந்த வேண்டுகோள் சாதகமாக இருந்தாலும் மனதில் சிறிது நெருடியது. எதற்காக இவள் எனது துணையை கேட்கவேண்டும்? அறுபது வயதுப் பெண்ணால் என்ன நேர்ந்து விடப்போகிறது?. அதைவிட இரவு என்பதே இல்லாமல் வெளிச்சமாகவும் தெருவெல்லாம் பலர் அங்கும் இங்கும் திரிந்தபடி இருந்தார்கள்.

இதைவிட சம்பந்தமூர்த்திக்கு இரவு பன்னிரண்டு மணி வரையும் விழித்து இருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இருவரும் எழும்பி ஹோட்டலின் பின்பகுதிக்குச் சென்ற போது அங்கு நைட்கிளப்புகளுக்கு பின்புறம் ஆண்களும் பெண்களும் நின்றார்கள். சிறிது தூரம் போன போது சில பெண்கள் தனியாகவும் கூட்டமாகவும் நி;ற்பது தெரிந்தது.

'இதுதான் ஜெனிவாவின் ரெட் லைட் பகுதி. நான் பத்து வருடங்கள் இந்தப் பெண்கள் போல் இங்கு வேலை செய்தேன்.

மவுனத்தால் பதில் அளித்த சம்பந்தமூர்த்திக்கு பாலியல் தொழிலாளியாக இருந்து ஓய்வு பெற்ற பெண்ணோடு ஜெனிவாவின் ரெட் லைட்பகுதியில் வலம் வந்து கொண்டிருக்கிறேன் என்பது ஆச்சரியத்தையும் வெட்கத்தையும் கொடுத்தது.
'என்ன பேசாமல் வருகிறீர்கள்?'

'இதில் என்ன பேச இருக்கிறது. ஆனால் இந்த இடத்திற்கு வருவதற்கு ஏன் என் துணை உங்களுக்கு தேவைப்பட்டது என்பதுதான் புரிவில்லை?

'வயது கூடும் போது கடந்த கால நினைவுகள் மட்டும்தான் நம்மோடு துணையாக வருவது என்பது உங்களுக்கு தெரியும். பழைய இடங்களை பார்க்க விருப்பமாக இருந்தாலும்; இரவில் வருவதற்கு துணிவு கடந்த இரு வருடங்களாக இல்லாமல் போய்விட்டது.

இப்போதைய நண்பர்களை நான் அழைத்து வர முடியாது. அதே வேளையில் நீங்களும் நானும் அறிமுகமற்றவர்கள். மேலும் இருவரும் மீண்டும் சந்திக்கப் போவதில்லை. இன்று என்னால் திறந்த உள்;ளத்தோடு பேச ஒருவர் கிடைத்தது எனது மனதில் நனவிடை தோய்தலுக்கு வசதியாகிவிட்டது.; அது எனது அதிஷ்டம்.'

நேரடியான நேர்மையான பேச்சின் உண்மை குழந்தைகளின் மாபிள் பளிங்குத்தரையில் தெறித்து விழுந்தது போல் இருந்தது.

அடுத்த சந்தால் திரும்பும் போது இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் நின்றார்கள். அவர்கள் பேரம் பேசுவது கேட்கா விட்டாலும் புரிந்தது. அடிப்படையான மனித தேவைகளையும் உணர்வுகளையும் புரிந்து கொள்ள மொழி தேவையில்லை.
அதிலும் காமத்தை தீர்த்துக்கொள்ள ஆதி மனிதன் என்ன மொழிபேசினான்?. மிருகங்கள் மொழியா பேசுகின்றன? அங்கு நடக்கும் பாலியல் சந்தை நிலைவரத்தை புரிந்து கொள்ள மொழி ஒரு தடையாக இருக்கவில்லை.

‘இவர்கள் எலலோரும் கிழக்கு ஐரோப்பிய பெண்கள். ஆனால் வறுமையில் வேலைக்கு ஆசைகாட்டி அழைத்து வரப்பட்டு பின் இந்த வேலைக்கு தள்ளப்படுகிறார்கள்’.

சம்பந்தமூர்த்;திக்கு வாயை வைத்திருக்க பொறுக்கவில்லை

‘எல்லோருக்கும் வறுமை என சொல்லமுடியுமா?’

‘மற்றவர்களுக்காக நான் பேசமுடியாது. நான் ஆரம்பத்தில் அசட்டுத் தைரியத்தில் அதோடு வன்மத்தில் ஈடுபட்டேன் பணம் வந்ததும் பரவாயில்லை என்ற உணர்வு வந்தது’

‘பிறகேன் இடையில் வெட்டிக்கொண்டு இந்தியா போனீர்கள்?’

‘எனது சொந்தக் கதையை கிண்டுகிறீர். ஆனால் ஒரு அத்தியாயம் மட்டும்தான் என்னால் சொல்லமுடியும்’

‘எனக்கு இன்று நித்திரை கொள்ளமுடியாது என் மனைவியை நடுநிசியில் ஜெனிவா ஏர்போட்டில் பிக்கப்;பண்ணவேணும். இப்பொழுது பத்து மணிதான்.

‘அப்படியானால் இரண்டு மணித்தியாலம் என்னை வைத்திருக்க ஏற்பாடா? அந்தக் காலத்தில் எனது மணித்தியாலத்தின் விலை அதிகம்’ என்றாள் பெரிய சிரிப்புடன்.

‘எனக்கு பேச்சுத்துணை தேவையாக இருக்கிறது. அதற்காக நான் மன்னிப்பு கேட்கப்போவதில்லை’

‘எனது பதினாறு வயதில் அம்மாவும் அப்பாவும் பிரிந்துவிட்டதால் நான் இடர்பட நேர்ந்தது. பல போய்பிரண்ட்ஸ். அதில் ஒருவன் மூலம் போதை மருந்து பழக்கம் வந்தது. அதனால் பணம் தேவைப்பட்டது. அதே நேரம் எனது தாய் தந்தையை பழி வாங்குவதற்கும் இது ஒரு வழி என எண்ணினேன். இந்த முதல் இல்லாத வியாபாரத்தில் என்னை முதலாக்கினேன். ஆனால் சில வருடத்தில் எங்களது கோஷ்டியில் பலருக்கு எயிட்ஸ் என்ற புதிய நோய் வந்ததும் நான் பயந்து போனேன். அப்படியே இந்தியாவுக்குப் போய் ரிசி கேசத்தில் ஒரு ஆச்சிரமத்;தில் தங்கி இருந்தேன் சில காலம் இருந்த போது இத்தாலியன் ஒருவனேடு மீண்டும் வட இந்தியாவில் சுற்றிவிட்டு மீண்டும் வந்த போது எனக்கு முப்பது வயதாகிவிட்டது. பயண முகவர் நிலயத்தில் சில வருடம் வேலை செய்துவிட்டு இம்முறை நேப்பாளத்திற்கு சென்ற போது அங்குள்ள பிரான்சிய உதவி ஸ்தாபனத்தில் வேலை கிடைத்தது. வாழ்க்கையில் பலகாலம் அதாவது பதினாறு வருடங்கள் நேபாளதில் இருந்தேன். இப்பொழுது அம்மா மிகவும் வயோதிபத்தை அடைந்ததால் இப்பொழுது ஜெனிவாவில் இரண்டு

வருடமாக தங்கி இருக்கிறேன்.

‘ஒரு விதத்தில் பார்த்தால் நீங்கள் அதிர்ஷ்டசாலி. பிரச்;சினையான தொடக்கமாக இருந்தாலும் மிகவும் இலட்சியமான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறீர்கள.; இன்னும் வாழ்ந்து வருகிறீர்கள்’

‘எனக்கு பணத் தேவையோ அல்லது பணத்தில் அதிக ஆவலோ இல்லாத படியால் தெருவில் இருந்து நினைத்தவுடன் வெளியேற முடிந்தது.

‘ஆச்சிரமத்தில் சேர்ந்த பின்புதான் அப்படியான மன நிலை வந்திருக்கவேண்டும்?’

‘ஆச்சிரமம் பேருக்குதான். அங்குள்ள துறவிகளுக்கு ஆசைகள் மற்றவர்களை விட அதிகம். ஆனால் வித்தியாசமான விடுமுறை காம்ப் போன்றது. இயந்திரமயமற்ற வாழ்வு எனக்கு பிடித்திருந்தது. இதைவிட இந்திய கிராமத்து மக்களை எனக்கு மிகவும் பிடிக்கும்.

வறுமையிலும் பெருமையாக வாழுவதும் இந்தி பேச தெரிந்து கொண்டதாலும் எங்கும் எனக்கு விசேட மரியாதை கிடைத்தது . எங்கும் முக்கிமானவளாக கருதப்பட்டேன்.

‘நானும் இந்தியாவில் வாழ்ந்திருக்கிறேன். இந்தியாவில் வெள்ளைத்தோலுக்கு எப்பொழும் விசேட மரியாதை உள்ளது.’

‘நானும் அதைப்பார்த்திருக்கிறேன். ஆங்கிலேயர் ஆண்டதால் வந்ததா?’

‘ஆங்கிலேயர் வர முன்பே இருந்த சாதிப்பிரிவினை என்ற வர்ணாசிரமத்தால் வந்திருக்க வேண்டு;ம். தற்போது உலகத்தில் நிறபேதம் பார்ப்பதில் முதன்மையானது இந்தியாவாக இருக்கும் என நினைக்கிறேன்.’

‘உங்கள் விமர்சனம் காட்டமாக உள்ளது. நான் நினைத்தேன் ஐரோப்பியரிடம் இருந்துதான் நிறபேதம் வந்தது என்று.’

‘ஐரோப்பியரில் பலர் நிற பேதத்தில் இருந்து பல தூரம் போய்விட்டார்கள் போல் எனக்குத் தெரிகிறது.’’

இருவரும் பேசிக்கொண்டு சிறிய சந்தில் வந்த போது எதிரில் வெள்ளைக்கார பெண்ணும் ஆபிரிக்க பெண்ணும் எதிராக வந்து பின்பு திரும்பிப் பார்த்தபடி நடந்தார்கள்.

'இவர்கள் ஏன் நம்மை பார்க்;கிறார்கள் தெரியுமா?. இங்கு வரும் ஆண்கள் கிராக்கி தேடியோ அல்லது போதை மருந்து தேடியோ மட்டும்தான் வருவார்கள். அவர்களின் முகத்தில் எதையோ தேடும் பாவனை தெரியும் .அவர்களை இந்த பெண்களால் உடனே அடையாளம் கண்டு கொள்ள முடியும். இந்த இடத்தில் இந்த நேரத்தில் எங்களைப் போல் பொருத்த மற்றவர்கள் வரமாட்டார்கள். அதுதான் அதிசயமாக பார்க்கிறார்கள்.'

'உங்களிடம் நான் பாடங் கற்றுள்ளேன். இன்னும் அரை மணிநேரத்தில் நான் இரயில்வே நிலயத்திற்கு போக வேண்டும்.'

'நானும் ரயிலில் தான் வீடு செல்ல வேண்டும். இந்த வழியால் திரும்பி நடந்தால் ஜெனிவா ரயில் நிலயம் வரும்.'

இருவரும் திரும்பி நடந்த போது மிக வெளிச்சமான வீதி வந்தது. இரவிற்கான அறிகுறி இல்லாமல் ரயில்வே நிலையம் கலகலப்பாக இருந்தது. மாக்கி விடைபெற்றுக்கொண்டு புற நகர் ரயிலில் ஏறிச்சென்றாள். சம்பந்தமூர்த்தி விமான நிலயத்துக்கு செல்லும் வண்டியில் ஏறினார்.

இரவு மட்டும்தான் இந்த ஹோட்டலில் தங்கமுடியும். அடுத்த நாள் பாரி;ஸ் செல்லத் திட்டம் இருந்தது. அவுஸ்திரேலியாவில் இருந்து வந்து இறங்;கிய சாலினி ஒரு நாள் தங்கிவிட்டு செல்வோம் என்ற போதுதான் சம்பந்தமுர்த்திக்கு பிரச்சினை உருவாகியது.

'இரவு மட்டும்தான் இந்த ஹோட்டலில் தங்க முடியும். நாளை எந்த அறையும் காலி இல்லை என்பதாக எனக்கு சொல்லி விட்டார்கள்';

'இந்த ஹோட்டல் இல்லா விட்டால் வேறு ஒன்று'

'சரி அதை நாளை பார்போம்';.

ஒரு கிழமை பிரிந்திருந்ததால் இருவரும் போர்வைக்குள் வேகமாக உட்புகுந்தனர்

காலையில் சம்பந்தமூர்த்தி ஹொட்டல் அறை ஒன்று தேடிக்;கொண்டு காலை ஆறு

மணியளவில் ஜெனிவாவின் மூலை முடுக்கெல்லாம் திரியவேண்டி இருந்தது. ஆறு நாள் மட்டும் தங்குவதாக பதிவு செய்த ஹோட்டலில் அடுத்த நாள் இருக்கவில்லை. அதிகாலையில் எழுந்து இருவரும் ஒவ்வொரு ஹோட்டலாக தேடினார்கள். பெரிய ஹோட்டல்கள் கை விரித்தார்கள். சிறிய தெருக்களில் சென்றுதேடவேண்டும் என்ற போது முக்கியமாக நேற்று இரவு மாக்கியுடன் தெருவலம் வந்த பகுதியில் சம்பந்த மூர்த்தி மனைவியை விட்டு விட்டு தான் மட்டும் சென்றார். பெரும்பாலும் தெரு மேக்கப் போடாத நடு வயது பெண்ணைப் போல் களையிழந்திருந்தது.

பெரும்பாலான ஹோட்டல்களில் கை விரித்து விட்டார்கள்.

சிறிது தூரம் சென்ற போது ஒரு ஹோட்டலுக்கு முன்பாக ஒரு சிறிய மதுக்கிளப்; இருந்தது. அந்த மது கிளப்புக்கு முன்பாக இரண்டு பெண்கள் நின்றார்கள். அதில் வெள்ளையாக இருந்த பெண் சிகரட்டை புதைத்தபடி நின்றாள். அவளுக்கு அருகாமையில் காப்பி கொட்டையை சிறிது அதிகம் வறுத்தது போன்ற கறுப்பு நிறமான இருபத்தைந்து வயது கூட நிரம்பாத அழகிய ஆபிரிக்க பெண் அவளுக்கு சிறிது தூரத்தில் நின்றாள். அவளை கடந்து ஹோட்டலுக்குள் நுழைந்த சம்பந்தமூர்த்தி கவுண்டரில் இருந்த பெண்ணிடம் அறை காலியாக இருக்கிறதா என்ற போது அவள் ஆமென்றாள். அந்த மகிழ்ச்சியில் கடன் அட்டையை கொடுத்து ஒரு நாள் பதிவு செய்து விட்டு வெளியே வந்த போது சம்பந்த மூர்த்தியை அந்த காப்பிக் கொட்டை அழகி கைகளால் அழைத்தபோது சம்பந்தமூர்த்தி சிறிது தயங்கினார். அவள் விடவில்லை

'இங்கே வா'

'ஏன்?'

'தயவு செய்து வா'

அவளது குரலில் ஒரு பரிதாபம் இழையோடியது. காலை ஆறுமணிக்கு இவள் ஏன் கூப்பிடுகிறாள். மேலும் அறை கிடைத்த சந்தேசம் மனதில் பதட்டத்தை நீக்கி இருந்தது. மனம் இவள் ஏன் கூப்பிடுகிறாள் என்பதை அறிய விரும்பியது நெருங்கியதும் அந்தப்பெண்ண் தனது மேற்சட்டையின் இரண்டு பொத்தான்களை கழற்றி தனது முலையில் பெரும்பகுதியை வெளிப்படுத்தி 'உனக்கு விருப்பமா? என்றாள்.

மருத்துவ விற்பனைப் பிரதிநிதி தனது மருந்துகளின் சாம்பிளை காட்டுவது போல் இருந்தாலும் மனதில் இருந்த மகிழ்ச்;சியால் எந்த பதட்டமும் ஏற்படாமல் 'இது மிகவும் காலைப் பொழுதாக இருக்கிறது. எனக்கு தற்போது மூடில்லை.'

‘எனக்கு பணம் வேண்டும்’

‘என்னை மன்னித்துக்கொள். நான் தயாரில்லை’ எனக் கூறிவிட்டு வேகமாக அந்த இடத்தை விட்டு அகன்று தனது பழைய ஹோட்டலுக்கு சென்று இடம் பிடித்த கதையை வெற்றிகரமாக சாலினிக்கு சொன்ன சம்பந்தமூர்த்தி அந்த ஆபிரிக்க பெண்ணின் கதையை சொல்லவில்லை.

--

மதியம் பன்னிரண்டு மணிக்கு மேல் புதிய ஹோட்டலுக்கு சாலினியுடன் சூட்கேசை தள்ளியபடி வந்துகொண்டிருந்தபோது மீண்டும் அந்த கப்பிக் கொட்டை அழகி எதிர்ப்பட்டாள். இவள் நம்மை விடமாட்டாள் போல் இருக்கிறது என நினைத்த போது அவள் அருகில் வந்து விட்டாள். அவளை விலத்த முடியாத நடை பாதை.
‘உமக்கு இளம் பெண்களை பிடிக்காது. நேற்றும் ஒரு கிழவியுடன் போகிறீர் இன்றும் இந்த மத்திய வயது பெண்ணுடன் ஹோட்டலுக்கு போகிறீர். உமக்கு ஏதாவது பிரச்சினையோ? என ஆங்கிலத்தில் வழியை மறித்து கேட்டாள். அந்த இடத்தில் புராணகாலத்தைப் போல் நிலம் பிளந்து தன்னை உள்வாங்கிவிடாதா என நினைத்தபடி கோடைகாலத்தில் நடுப்பகலில் ஜெனிவா சூரியனை பார்ப்;பது சாலினியின் முகத்தை விட சாந்தமாக இருக்கும் என நினைத்து ஆகாயத்தை பார்த்தார்.

நில நடுக்கம், சுனாமி அருகாமையில் உருவாகுவதற்கான அறிகுறிகள் தென்படுவதை வனவிலங்குகள் மட்டுமா அறியும்? சோலர் ரெக்னோலஜி எஞ்ஜினியரும் அறிந்து கொள்வார்.

uthayam@optusnet.com.au
பதிவுகள் 28 செப்டெம்பர் 2011

13. முயல்களும் மோப்ப நாய்களும்! - மூதூர் மொகமட் ராபி (இலங்கை) -

திடீரென தூக்கம் கலைந்து விட்டது எனக்கு. வீட்டுக்குள்ளே ஒரே புழுக்கமாக இருப்பதால் நாங்கள் எல்லோருமே எங்கள் வீட்டு மொட்டை மாடியில்தான் உறங்குவது வழமை. சிறிது நேரமானதும் வாப்பா என்னையும் தம்பிகளையும் தூக்கம் கலைந்து விடாமல் வீட்டினுள்ளே படுக்கையறையினுள் கிடத்தி விடுவார். ஆனால் இப்போது ஒருவரையும் காணவில்லை. அவர்களைத் தேடியபோதுதான் சட்டென என்னருகில் படுத்திருக்கும் எனது செல்ல அர்னப்பின் நினைவு வந்தது. எங்கே போயிருப்பான்? ஒருவேளை வீட்டுக்குள் இறங்கி விட்டானோ? உச்சி வானிலே ஒட்டியிருந்த பிறை நிலாவின் சிறு வெளிச்சத்தில் ஒரு மூலையில் ஏதோ ஒன்று அசைவது போல... ஓ! அது.. அர்னப்தான் மாடிப்படியில் இறங்கித் துள்ளித் துள்ளி ஓடுகிறான்.

'ஹேய்! ஆர்னப்..!ஆர்னப்!! ஓடாதே!'

என்று கத்தியபடி நான் அதன் பின்னாலேயே துரத்திச் செல்வதற்குள் அவன் எங்கள் மொட்டைமாடியிலிருந்து வீதிக்கு இறங்கிச் செல்லும் படிக்கட்டுகளைத் தாண்டி எதிர்வீட்டு இக்ரமின் குடியிருப்பு வளாகத்துக்குள்ளே ஓடிச் சென்று மறைந்து விட்டான்.'சே!' என்று அலுத்துக் கொண்டேன். அந்த வீட்டுக்குள் நாங்கள் விளையாடும் பந்து போனாலே திரும்பத்தேடித் தரமாட்டார்கள். மிகவும் தொந்தரவு கொடுத்தால் புதிதாக ஒரு பந்து வாங்க பணம் கொடுப்பார்களேயன்றி பந்தைத் தேடுவதற்கு விடுவதில்லை. அதுவும் நள்ளிரவைத் தாண்டியிருக்கும் இந்த நேரத்தில் அவனைப் பற்றிப் பேசக்கூட முடியாது. எனக்கு அழுகை அழுகையாக வந்தது. ' சே!என்ன மாதிரி மனிதர்கள் இவர்கள்?' என்று யோசித்தவாறு மொட்டை மாடி கைப்பிடிச் சுவரிலே சாய்ந்து கொண்டேன். இருளிலே அமைதியாக மூழ்கியிருந்த எதிர்வீட்டு மாடிக்குடியிருப்பைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தூரத்திலே தெரிந்த பள்ளிவாசலின் மினாராக்கள் மெல்லிய நிலவொளியில் எடுப்பாகத் தெரிந்தன. எங்கோ ஒரு நாய் நீளமாய் ஊளையிட்டது.

நாய் என்றதும் சட்டென இக்ரமின் நினைவுதான் தோன்றியது. அவனுக்கு நாய்களை ஏனோ கண்ணிலே காட்டக் கூடாது. அவற்றை எங்கே கண்டாலும் துரத்தித் துரத்தி அடிப்பான். மற்றப்படி மிருகங்களிடமெல்லாம் மிகுந்த இரக்கமுள்ளவன் அவன். அவன் வீட்டிலே பறவைகளும் முயல்குட்டிகளுமாய் எங்கு பார்த்தாலும் செல்லப் பிராணிகள்தானாம். அவற்றிலே அளவு கடந்த பிரியம் கொண்டவன் அவன்.

இக்ரம் எங்களோடு கால்பந்து ஆட வந்து சேர்ந்த காலத்திலிருந்தே நாய்களை பார்த்தால் இருக்கிற வேலையை விட்டு விட்டுக் கற்களைப் பொறுக்கிக் கொண்டு துரத்துவான். எப்படியும் கண்ணில் பட்ட நாய்களை அடித்துத் துரத்தி விட்டுத்தான்

திரும்பவும் வந்து விளையாடுவான். அவனிடம் இதுபற்றி கேட்க நினைத்து ஒருநாள் கேட்டும் விட்டேன்.

'இக்ரம், நாய்களோட உனக்கு என்னடா அப்படி வெறுப்பு?'

'சே! நீ ஒரு முஸ்லீமாடா, இப்படிக் கேட்கிறாய்? வெறுக்கப்பட்ட பிராணி அல்லவாடா அது?'

'சரிடா..நாங்க அதைப்போய் அளையக் கூடாதே தவிர..அதுகளை ஏன்டா தண்டிக்க வேணும்? அதுவும் உயிர்கள்தானேடா, இக்ரம்'

'இல்லடா, அதுகள் கெட்ட மிருகங்கள். நான் வளர்க்கிற எத்தனை முயல்களைக் கடிச்சி குதறியிருக்கு தெரியுமா உனக்கு?'

'அது கூடாதுதான்..ஆனா அதுக்கு நீ கடிச்ச நாயை மட்டும் அடிக்கலாம். ஏன்டா சும்மா இருக்கிற நாய்களையெல்லாம் கொல்ல நினைக்கிறாய்?'

'எல்லா நாய்களுமே முயல்களுக்கு எதிரிதான்டா! நாய்களைக் கொல்றதில பாவமே இல்ல!'

'சரி..சரி ரெண்டு பேரும் பேச்சை விடுங்கடா..போய் விளையாடுவோம்!' என்று எங்கள் மற்ற நண்பர்களின் இடையூறோடு அந்த உரையாடல் அன்று முடிந்தது. ஆனாலும் நாய்கள் உண்மையிலேயே கொல்லப்பட வேண்டியவைதானோ என்ற குழப்பம் எனக்கேற்பட்டது மட்டும் உண்மை. இக்ரம் சொல்வது போல நாய்களையெல்லாம் அழித்தால்தான் முயல்களையும் செல்லப்பிராணிகளையும் காப்பாற்ற முடியுமோ...அப்படியானால் லவ்பேர்ட்ஸ்களை பிடித்துத் தின்னும் பூனைகளை இக்ரம் ஏன் கொல்வதில்லை? என்று கேட்க வேண்டுமென மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்.

இக்ரம் எங்களது மனதிலே சில மாற்றங்களை ஏற்படுத்தி விட்டான். அவன் எங்களுக்கொல்லாம் அறிமுகமானதே ஒரு விசித்திர அனுபவம்தான்.

எங்கள் குடும்பம் இந்த வீட்டிற்கு குடிவந்த காலத்திலிருந்தே இக்ரம் இருக்கும் அந்த மாடி வீட்டுக் குடியிருப்பு எங்களுக்கெல்லாம் சற்று வினோதமாகத்தான் இருந்தது. நாங்கள் இருக்கும் பிரதேசம் இராணுவ அதிகாரிகளின் குடும்பங்கள் வாழும் குடியிருப்பு என்பதால் இங்குள்ள மனிதர்களின் நடவடிக்கைகள் சற்று விறைப்பாகத்தான் இருப்பதுண்டு. எப்போது பார்த்தாலும் புழுதி கிளப்பும் வாகனங்களும் விறைப்பான மனிதர்களும் தாராளமாகப் புழங்குவதுண்டு
எங்கள் வீட்டின் மொட்டைமாடியிலிருந்து இக்ரமின் மாடிக் குடியிருப்பின் மேல்தளத்தைத்

தெளிவாகப் பார்க்க முடியும். அங்கே ஒன்றிரண்டு குடும்பங்கள் பெண்கள் குழந்தைகள் என்று வசிப்பது மட்டும்தான் தெரியும். ஆனாலும் அவர்கள் அதிகம் அயலவர்களாகிய எங்களோடு பழகுவதோ பேசுவதோ கிடையாது. எப்போதாவது மாலைவேளைகளில் மாடியிலிருந்து கீழிறங்கி வருவதுண்டு. வீதியைச் சிறிதுநேரம் வேடிக்கை பார்த்துவிட்டு சென்றுவிடுவார்கள்;. பெண்கள் வெளியே வருவது மிகவும் குறைவு. அப்படி வந்தாலும் முகம் மட்டும் தெரியும்; உடையணிந்து குழந்தைகளுடன்தான் வருவார்கள்.

ஒருநாள் நானும் எனது நண்பர்களும் அருகிலுள்ள மைதான மேட்டிலே கால்பந்து ஆடிக் கொண்டிருக்கும்போது ஒருதடவை அவர்கள் வீட்டுக் குழந்தைகள் வீதியிலே விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தோம். அவர்களிடையே எங்கள் வயதொத்த ஒர் அழகான சிறுவன் நாங்கள் விளையாடுவதையே ஏக்கமாய் பார்த்தவாறு நின்றிருந்தான். அவனைப் பார்க்க ஏனோ பாவமாக இருந்தது.

'வா! பந்து விளையாடலாம்'

என்று சைகையால் அழைத்தேன். உடனே அவன் உற்சாகமாகி வீதியைக் கடந்து ஓடிவரத் தயாரானவுடன் யாரோ அதட்டும் குரலில் திருப்பியழைத்தார்கள். அவனது விழிகளிலே பூத்திருந்த பிரகாசம் சட்டென வடிந்த துயரத்தை அன்று நான் பார்த்தேன். அதனை மறக்க பல நாட்களானது எனக்கு.

மற்றொருநாள் நாங்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது அந்தச் சிறுவன் கால்பந்து விளையாடும் உடையிலே சப்பாத்துகள் அணிந்து கம்பீரமாக நின்றிருந்தான். அவன் கையிலே ஒரு விலையுயர்ந்த அழகான கால்பந்து இருந்தது. நாங்களும் விளையாட வந்ததை மறந்து அவனையே வைத்த கண்வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தோம்.

எங்களது உடைகளையும் அழுக்குப் பந்தையும் கிழிந்த சப்பாத்துக்களையும் ஒருமுறை பார்த்துக் கொண்டோம். 'அங்க பாருடா! என்ன மாதிரி ஜேஸி..பூட்ஸ் பார்த்தியா? இதெல்லாம் எங்கடா இருக்கு..'

'அந்த பந்தைப் பாருங்கடா! எப்படிப் பளபளக்குது..? நிச்சயமா வெளிநாட்டுலதான் அதை வாங்கியிருப்பான்'

என்றெல்லாம் வியந்தபடி நண்பர்கள் நாங்கள் ஒன்றுகூடிப் பார்த்திருக்க, அவனாகவே எங்களை வருமாறு அழைத்தான். அதற்காகவே காத்திருந்த நாங்கள் குதூகலத்தில் துள்ளிக் குதித்தோம். ஆனாலும் அவனருகே நின்றிருந்த சில முரட்டு ஆண்களைப் பார்த்துவிட்டு சற்றுத் தயங்கினோம்.

'பரவாயில்லை வாருங்கள்!' என்று எங்களைக் கூப்பிட்டு அந்தச் சிறுவனை எங்களோடு அழைத்துச் செல்ல அனுமதித்தார்கள் அந்த ஆசாமிகள். நாங்களும் மகிழ்ச்சி மேலிட ராஜமரியாதை தந்து அவனை விளையாடக்கூட்டிச் சென்றோம்.

அன்றிலிருந்து இக்ரம் எங்களோடு கால்பந்தாடுவது வழமையாகிப் போனது. அவனது குடும்பத்தினரும் எங்களைப் பார்த்து சிறிது புன்முறுவல் செய்யலானார்கள். சில வேளைகளில் மைதானத்திலே இருக்கும்போது அந்த வீட்டுப்பெண்கள் எல்லோருக்கும் வாழைப்பழங்கள் மற்றும் தின்பண்டங்கள் கொடுத்தனுப்புவார்கள்;. அவ்வளவு ருசியான பழங்களை நாங்கள் ஒருபோதும் கண்டதேயில்லை. அத்தனை அன்பானவர்களாயிருந்தும் ஒருதடவை கூட அவர்களது வீட்டிற்கோ அல்லது வளவிற்குள்ளோ எங்களை அழைத்ததில்லை. அனுமதித்ததும் கிடையாது.

திடீரென ஒருநாள் இக்ரம் விளையாட வரவில்லை. அவன் மட்டுமல்ல அந்த வீட்டிலிருந்து எவரையும் வெளியே காணவில்லை. அந்த வீட்டின் யன்னல்கள் கூட அடைத்திருந்தன. அந்த மாடிக்குடியிருப்பு வளாகத்திற்குள்ளிருந்து புழுதி இறைத்தபடி சில வாகனங்கள் அடிக்கடி சென்று வந்தன. தவிர இக்ரமைக் காணவேயில்லை.

இக்ரம் வந்ததிலிருந்து அவன் கொண்டு வரும் புதிய பந்திலே விளையாடிய எங்களுக்கு மீண்டும் பழைய கிழிந்து போன அழுக்குப் பந்திலே விளையாடும் நிலை. ஆட்டத்தின் இடையிலே வாழைப்பழங்களும் கிடைக்கவில்லை. இக்ரமைப் பற்றி யாரிடமும் கேட்கவும் முடியவில்லை. தினமும் அவனைக் காத்திருந்து கண்கள் பூத்தபின் வேறுவழியின்றி விளையாடலானோம்.

பத்து அல்லது பதினைந்து நாட்கள் இப்படியே கழிந்தது. ஒருநாள் நாங்கள் பாடசாலை விட்டு வரும்போது இக்ரமின் எதிர்மாடிக் குடியிருப்பிலே ஆள்நடமாட்டம் தெரிந்தது. சந்தோசம் பொங்கிட மாலையானதும் மைதானத்துக்குப் படையெடுத்தோம். இக்ரமைத் தேடி அவன் வீட்டு முன்புற வாசலுக்குச் சென்றிருந்த எங்களுக்கு அந்த வளாகத்தினுள் நின்றிருந்தவர்களைப் பார்த்ததும் ஆச்சரியமாக இருந்தது. அவர்களில் யாரையும் இதற்கு முன் பார்த்ததில்லை. அவர்கள் அனைவரும் முற்றிலும் புதியவர்களாக இருந்தார்கள். பழையவர்கள் எவரையுமே காணவில்லை.

'ஏய்! பையன்களா, என்ன வேணும் உங்களுக்கு?'

'இக்ரம் இருக்கிறானா?' என்று நாங்கள் கேட்டதும் தங்களுக்குள் ஒன்றுகூடி ஏதோ ஒரு புரியாத மொழியிலே கிசுகிசுத்து விட்டு, 'இப்போ அவனைப் பார்க்க முடியாது. என்ன விசயம்?' என்று கேட்டார்கள். கால்பந்து ஆடும் விடயத்தைப்பற்றி அவர்களிடம்

கூறினோம். மீண்டும் தங்களுக்குள் கிசுகிசுத்த பின் அவர்களில் ஒருவன் மாடியேறி வீட்டினுள்ளே சென்றான். சிறிது நேரத்தின் பின்பு திரும்பி வந்து, 'நீங்களெல்லாம் உங்க மைதானத்துக்குப் போகலாம். இக்ரம் வருவான்' என்றான். எதுவும் பேசாமல் மைதானத்தை நோக்கி நம்பிக்கையின்றி நடந்தோம்.

'என்னடா இவன்களெல்லாம் ரோபோ மாதிரி இருக்கிறான்கள்? இக்ரம் எப்பிடிடா அந்த வீட்டுக்குள்ளே இருக்கிறான். ஆமி கேம்ப் போல இருக்கு வீடு?'

'ஓம்டா நானும் பார்க்கிறன். இக்ரம் ஸ்கூலுக்கே போறதில்லையாம். யாரோ வாகனத்துல வந்த சொல்லிக் கொடுத்திட்டுப் போறாங்க.. அவங்க வீட்டுக்கு எல்லாமே வெளியில இருந்து வந்துதாண்டா வருது. அவன் அவ்வளவு பெரிய ஆளாடா?'

'இல்லடா அவங்க யாரோ பெரிய இடத்து ஆட்கள் போல இருக்குது. அதாலதான் இவ்வளவு கெடுபிடி!'

'என்றாலும் இது மிச்சம் ஓவர்தான்டா!'

இப்படியே எங்களுக்குள் பேசியவாறு நடந்து கொண்டிருக்கும் போது பின்னாலே ஓடிவந்து சேர்ந்தான் இக்ரம். அவன் கையிலே நிறைய அட்டைப் பெட்டிகள் இருந்தன. எல்லோரும் ஆவலாக ஒடிச் சென்று அவனைத் தூக்காத குறையாக மைதானத்துக்குக் கொண்டு வந்தோம். அட்டைப் பெட்டிகளை ஆவலாய்த் திறந்து பார்த்தால், அத்தனையும் விலையுயர்ந்த புத்தம்புதிய கால்பந்து சப்பாத்துக்கள். எங்களுக்காக இக்ரமின் தாய் கொடுத்தனுப்பியிருந்தார். எங்களது மகிழ்ச்சிக்கு அளவே இருக்கவில்லை. ஆனந்தக் கூத்தாடினோம்.

இக்ரம் எங்கள் எல்லோருக்கும் ஏறத்தாழ ஒரு இரட்சகனாய் ஆனான். ஒவ்வொரு நாளும் அவன் கொண்டு வரும் சொக்லேட்டுக்கள், பாலாடைக்கட்டிகள், பழங்கள் மற்றும் அழகிய ஜேஸிக்களால் எங்கள் கால்பந்து அணி வளமாகிக் கொண்டேயிருந்தது.
தவிர அவன் ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரனாகவுமிருந்தான். அதனால் நாங்கள் எல்லோரும் அவனுடன் மிகுந்த விருப்பமாக இருந்தோம்.
தினமும் சிறிது நேரம் மைதானத்தில் ஒன்றுகூடிப் பேசிக் கொண்டிருந்து விட்டு கலைந்து போவது கால்பந்தாட்ட நண்பர்கள் எமது வழமை. அவரவர் குடும்பம், பாடசாலை, பிடித்தவை பிடிக்காதவைகள் பற்றியெல்லாம் அளவளாவுவோம்.

இக்ரம் தனது வீட்டில் வளர்க்கும் முயல்குட்டிகள், லவ்பேர்ட்ஸ் மற்றும் நாய்களிலே தனக்கிருக்கும் வெறுப்பு பற்றித்தான் அதிகம் பேசிக் கொண்டிருப்பான். அதுவும் இல்லையென்றால் கால்பந்து விளையாட்டைப் பற்றிப் பேசுவானே தவிர அவனது

குடும்பம் பற்றி எதுவும் கூற மாட்டான். எதேச்சையாக பேச்சு வந்தால் உடனே மௌனமாகி விடுவானே தவிர வீட்டிலுள்ளவர்களைப் பற்றித் தப்பித் தவறிக்கூட ஒரு வார்த்தை பேசமாட்டான். இக்ரம் எல்லோருடனும் நன்றாகப் பழகிய போதிலும் தனது வீட்டுக்கு எங்களை அழைக்கவோ அல்லது கூட்டிச் செல்லவோ மாட்டான்.

அதேபோல எங்கள் வீடுகளுக்கும் வரமாட்டான். இது ஒன்றுதான் எங்களுக்கு அவனிடம் இருந்த ஒரேயொரு சங்கடமான விடயம். ஆனாலும் எங்கள் கால்பந்தாட்டத்துக்கும் நட்புக்கும் அதனால் எந்தக்குறையும் இல்லையைன்பதால் அதைப் பொருட்படுத்தாமல் விட்டு விடுவோம்.

ஒருநாள் விளையாட்டு முடிந்ததும் என்னைத் தனியாக அழைத்துச் சென்றான் இக்ரம். அவனது கண்கள் இலேசாகக் கசிந்திருந்தன. முகம் சற்று வாடியிருந்தது.

'என்னடா இக்ரம் ஏதும் பிரச்சினையா ?'

'ஒண்டுமில்லடா..கொஞ்சம் எங்கட வீடு வரைக்கும் கூட வந்துட்டுப் போ'

'என்ன உன்ட வீட்டுக்கா?!' என்றேன் ஆச்சரியம் தாளமுடியாமல். 'ஒருவேளை எங்களுக்குத் தந்த சப்பாத்துகளையெல்லாம் திருப்பிக் கேட்கப் போகிறானோ' என்று பயந்தபடி அவனைப் பின்தொடர்ந்தேன் 'கொஞ்சம் இங்கேயே நில்லு வாறேன்' என்று கூறி வீட்டுக்கு அருகேயுள்ள குறுகிய ஒழுங்கைக்குள் என்னை நிறுத்தி உள்ளே ஓடிப்போனவன் சிறிது நேரத்தில் கையிலே ஒரு சணல் பை ஒன்றுடன் வந்தான். அதற்குள்ளே ஏதோ அசைந்தவாறிருந்தது.

'இந்தா! இது என்ட செல்லப் பயல் அர்னப். இதை இனி நீதான் வச்சுக்கோ!' என்;று கவலையுடன் நீட்டினான் அதை. அவன் தந்தது, கொழுகொழுவென்று பார்ப்பதற்கு அழகாக இருந்த ஒரு சின்ன முயல் குட்டியை. ஒரு வெண்பஞ்சுக் குவியலை வாங்குவது போல அதை ஆசையாக கை நீட்டி வாங்கிக் கொண்டேன். இக்ரம் தனது முயல்களிலே எவ்வளவு இரக்கமும் ஆசையும் உள்ளவன் என்பது எனக்குத் தெரியும். அப்படியானவன் ஏன் தன் செல்ல முயலை திடீரென எனக்கு தரவேண்டும் என்றுதான் புரியவில்லை. அதை அவனிடம் கேட்டபோது, தனது முயல்கள் பறவைகளெல்லாம் வேறு எங்கோ கொண்டு செல்லப்படப் போவதாக மட்டும் சொல்லிவிட்டு ஓடிவிட்டான். அதற்கு மேல் அவனிடம் பேச முடியவில்லை.

அன்றுதான் நானும் நண்பர்களும் கடைசியாக இக்ரமைக் கண்டோம். மறுநாள் நாங்கள் வழமைபோல அந்த இடத்திற்குச் சென்றபோது அவர்களது வீட்டு வாசலிலே இராணுவ முகாம்களிலிருப்பது போல தடுப்புகள் அமைத்திருந்தார்கள். அதனுள்ளே

இருந்தவர்கள் கூட வேறு புதியவர்களாக இருந்தார்கள். இக்ரமை பற்றி விசாரித்தபோது கொஞ்சம் கூட இரக்கமின்றி சத்தம்போட்டுத் துரத்திவிட்டார்கள்.
மிகுந்த கவலையுடன் மைதானத்துக்குப் போனோம். இக்ரம் கால்பந்து உட்பட எல்லாவற்றையும் எங்களிடம் தந்து விட்டுத்தான் போயிருந்தான். ஆனாலும் அவனில்லாமல் முன்பு போல எங்களால் உற்சாகமாக விளையாட முடியவில்லை. தவிர பாடசாலையில் தவணைப்பரீட்சை ஆரம்பமானதால் வீட்டிலுள்ளவர்கள் எங்களை விளையாடுவதற்கு அனுமதிக்கவில்லை. அதனால் அவன் வீட்டுப்பக்கம் போகவேயில்லை. என்றாலும் எனது வீட்டு மொட்டை மாடியிலிருந்து தெரியும் அவனது குடியிருப்பு வளாகத்தை அடிக்கடி ஏக்கத்தோடு பார்த்துக் கொள்வது எனது வழமையானது.

'ஓ! இக்ரம் நீ எங்கே இருக்கிறாய்?'

இக்ரம் தூக்கிக் கொடுத்த தினத்திலிருந்த நான்தான் அவனுடைய செல்ல முயலை வளர்த்து வருகின்றேன். எங்கள் வீட்டில் எல்லோருக்கும் 'அர்னப்' மீது கொள்ளை ஆசை. என்னருகிலேயேதான் இரவில் படுத்துறங்கும். ஆனால் அடிக்கடி இக்ரமின் வீட்டுப் பக்கமாக ஓடிவிடுவதுதான் அதனிடம் உள்ள ஒரேயொரு கெட்ட பழக்கம். மீண்டும் அதைத் தேடிப்பிடித்துத் திரும்பக் கொண்டு வருவதற்குள் களைத்துப் போய்விடுவேன். ஆனால் இப்போது இந்த நடுச்சாமத்திலே எதுவும் செய்ய முடியாது.

'சரி, காலையில்தான் இதைப்பற்றிக் கேட்கலாம். தூக்கமும் கலைந்து விட்டது. கீழே இறங்கிப்போய் வீட்டுக்குள் போய் தூங்கலாம்.'

என்று நினைத்துக் கொண்டு வீட்டுக்குள் இறங்கும் படிக்கட்டில் நான் காலை வைத்ததுதான் தாமதம்! தலைக்குமேலாக வானத்திலே ஒரு பெரிய சப்தம் கேட்டது. அண்ணாந்து பார்த்தபோது திடீரென எங்கிருந்தோ வந்த இரு ஹெலிகாப்டர்கள் காற்றைக் கிழித்தெறியும் விசிறிகளின் ஒலியுடன் எங்கள் மொட்டை மாடிக்கு மேலாக மிகத்தாழ்வாக பறந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அந்த கரிய இராட்சத் தும்பிகளின் வயிற்றிலிருந்து இராணுவச் சிப்பாய்கள் போலிருந்த சிலர் எதையோ பிடித்துக் கொண்டு சட்டென கீழே இறங்கினார்கள். அவர்களிலே மூன்று அல்லது நான்கு பேர் எங்கள் மொட்டை மாடித்தளத்தில் குதித்து இறங்கினார்கள். இறங்கியதுதான் தாமதம், கண்மூடித் திறப்பதற்குள் துப்பாக்கிகள் மற்றும் நவீன தொலைநோக்கிகளுடன் சட்டென தரையில் படுத்துக்கொள்வதைக் கண்டேன்.
ஏனையவர்கள் எங்கள் பக்கத்திலிருந்த மாடிக்குடியிருப்பின் சந்துபொந்துகள் எங்கும் தொப்தொப்பென துப்பாக்கிகள் சகிதம் இறங்கித் தரையிலே படுத்துக் கொண்டார்கள்;. மேலே பறந்த ஹெலிகாப்டர் சுழற்றிய காற்றினால் கிளம்பிய புழுதிப்படலம் கண்களைக் குருடாக்கியது. சுற்றிலும் என்ன நடக்கின்றது என்பதை நான் புரிந்து கொள்வதற்கிடையில் 'டவுண்! போய்..!! டவுண்!' என்று கத்தியபடியே என்னை நோக்கிக்

கூச்சலிட்டபடி ஒரு சிப்பாய் ஓடிவந்தான். எனது கால்களைத் தனது ஒருகாலால் தட்டிவிட்டு தோள்பட்டையில் பிடித்து இலாவகமாய் வீழ்த்தி தரையோடு குப்புறப்படுக்க வைத்த கையோடு அவனும் துப்பாக்கியோடு வீழ்ந்து படுத்தான்.
சத்தம் கேட்டு நித்திரை கலைந்து மேலே ஓடி வந்த எனது தந்தை மற்றும் தாய் குடும்பத்தினரையும் மொத்தமாக பிடித்து, 'கோ! கோ பெக்!! கெட் இன் ஸைட்.. கோ!!' என்று உள்ளே தள்ளி விட்டு மொட்டை மாடிக் கதவை அடைத்தான் மற்றொரு சிப்பாய். உள்ளேயிருந்து எனது தாயும் தம்பிகளும் பயத்திலே அழுவது கேட்டது.
ஹெலிகாப்டரிலிருந்து இறங்கிய சிப்பாய்கள் பலர் எங்கள் மொட்டை மாடியின் சுற்றுச் சுவரில் மறைந்தவாறு எதிர்ப்புறமுள்ள இக்ரமின் குடியிருப்பை சூழ்ந்து குறிவைத்து படுத்திருந்தார்கள்.

ஹெலிகாப்டர்களிலிருந்து கடைசியாக இறங்கிய சிப்பாய்களின் கைகளிலே உறுதியான பட்டிகளால் பிணைத்திருந்த இரண்டு பெரிய அல்சேஷன் மோப்ப நாய்கள் பயங்கரமாக உற்றுப் பார்த்தவாறு இறங்கிச் சென்றன. அவற்றின் கோரைப் பற்கள் உலோகம் போல பளபளத்தன. யார் இவர்களெல்லாம் ஏன் இப்படியெல்லாம் நடக்கின்றது? எதற்காக இக்ரமின் வீட்டைச் சுற்றி இவ்வளவும் நடக்கின்றது?

எதுவுமே விளங்கவில்லை எனக்கு.

திடீரென வானத்திலிருந்து தீப்பிழம்பு ஒன்று சீறிக்கொண்டு வந்து வெடித்துக் காதைச் செவிடாக்கியது. அதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுகள். எங்கும் ஒரே புகைத்திரள். சிறிது நேரம் என்ன நடக்கிறது என்றே புரியவில்லை எனக்கு.

'ஓ! சுடாதீங்க அங்க..என்ட முயல் குட்டி இருக்கு ...சுடவேணாம்...முயல்குட்டி அங்க இருக்கு!' என்று கத்தினேன். 'வாட்? கீப் கொயட் போய்!' என்று அதட்டினான் என்னருகே படுத்திருந்த சிப்பாய். அவன் நீச்சல் கண்ணாடிபோல எதையோ கண்களிலே அணிந்து பார்க்கவே வினோதமாக இருந்தான். அவனது ஒருகை என்னை வலது தோள்பட்டையைப் பிடித்து எழுந்திருக்க விடாமல் தரையிலே அழுத்திக் கொண்டிருக்க மற்றக் கை இயந்திரத் துப்பாக்கியின் விசையிலே தயாராயிருந்தது.

'சுடாதீங்க! என்ட அர்னப்! அங்க இருக்கிறான்..!' என்று இக்ரமின் வீட்டைக் காட்டிக் கத்தினேன். ஹெலிகாப்டரின் விசிறி ஒலியிலே நான் கத்தியது என்னைப் பிடித்திருந்த அந்தச் சிப்பாய்க்கு கேட்கவில்லை.

'வாட்?' காதிலே அவன் அணிந்திருந்த இயர்போனை சிறிது அகற்றி விட்டு, ' யூ வோன்ட் டு கோ தாட் ஹவுஸ்?' என்றான் ஆங்கிலத்தில்.

'நோ..மை...ரபிட், அர்னப்' என்றேன்.

'வாட்...யுர் பாதர்?' என்றான் புரியாமல். நான் கைகளால் முயல்குட்டிபோல சைகை காட்ட, ' ஓ! டோண்ட் வொறி!' என்று சிரித்தான்.

இதற்கிடையில் எதிர்வீட்டிலிருந்து துப்பாக்கியால் திருப்பித் தாக்கினார்கள். அதனையடுத்து மேலே பறந்து கொண்டிருந்த ஹெலிகாப்டர்களில் ஒன்று தீப்பற்றியவாறு வெடித்து விழுவதையும் கண்டேன். உடனே என்னோடிருந்தவன் உட்பட சிப்பாய்கள் அனைவரும் உசாராகி, எனது அழுகையையும் புறக்கணித்துவிட்டு இக்ரமின் மாடிக்குடியிருப்பை நோக்கித் துப்பாக்கியால் சல்லடையிட்டு ஓய்ந்தார்கள்.

சிறிது நேரத்தில் பெருமழையடித்து ஓய்ந்தது போல வெடிச்சத்தம் ஒய்ந்தது. சிப்பாய்கள் எல்லோரும் எங்களை விட்டுவிட்டு இக்ரமின் மாடிக்குடியிருப்புக்குள் இறங்கி ஒடிச் சென்றார்கள். மாடிச்சுவரின் மேலாகப் பார்த்தபோது அந்த வீட்டின் கண்ணாடிகள் நொருங்கிக் கிடப்பதைக் கண்டேன். இருட்டிலே சரியாக எதுவுமே தெரியவில்லை. டோர்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி பலர் நடமாடுவது தெரிந்தது. சில நிமிடங்களிலே நாங்கள் கால்பந்தாடும் மேட்டில் நின்றிருந்த ஹெலிகாப்டர்களில் அவசர அவசரமாக எதையெல்லாமோ ஏற்றிக் கொண்டிருந்தார்கள். எல்லாமே தெளிவில்லாமல் தெரிந்தது. இராட்சத விசிறிகள் புழுதி கிளப்பியபடி வானிலே எழுந்து திரும்பிய கதவுகளற்ற ஹெலிகாப்டர்களில் ஒன்றிலே அமர்ந்திருந்த சிப்பாய்கள் கீழிருந்த எங்களைப் பார்த்து கைகளையுயர்த்தி வெற்றி முழக்கமிட்டபடி சென்றார்கள். அவர்களின் முழங்கால்களுக்கிடையே நாக்கைத் தொங்க விட்டபடி நின்றிருந்தது ஒரு மோப்ப நாய்.

அந்த நாயின் வாயிலே தொங்கிக் கொண்டிருந்தது சிவப்பு நிறம் தோய்ந்த ஒரு வெண்பஞ்சுக் குவியல்!

ifar.rafi27@gmail.com
பதிவுகள் 25 அக்டோபர் 2011

14. தண்டணைகளின் மகிழ்வில் - திலகபாமா -

திலகபாமா தாலிகள் விதவிதமானவை. எல்லாரும் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆண்கள் தூக்கிப் பிடித்த சாதியத்திற்கேற்ப தாலிகள் உருவாயிருக்கிறதென்று. இல்லை இல்லை . கொல்லன் கை பிடித்து நெருப்பில் வெந்து அச்சுப் பதிக்கப் படுவதல்ல தாலிகள். பெண்ணின் எண்ணத்தில் கனலாகி , நினைவில் விழுந்திருக்கும் வாழ்க்கையின் அச்சுப் பதியலாகி ஆளுக்கொரு தினுசாய் கழுத்தில் கிடக்கின்றன.

தாலிகள் எல்லாப் பெண்கள் கழுத்திலேயும் ஏதாவது ஒரு ரூபத்தில் கிடக்கின்றன. கணவர்களால் பூட்டப் பட்டிருக்கின்றன. அவர்கள் தேடுகின்ற நேரம் மட்டும் பூக்களாக உயிர்த்திருக்கச் செய்து விட்டு மிச்ச நேரங்களில் கல்லாக உறைந்து விட வரம் தந்ததாய் பெருமை பேசிக் கொண்டிருந்தன. கல்லாக இருந்து இருந்து இறுகிப் போன மனம் தேடுகின்ற நேரம் அல்லது தொடுகின்ற நேரத்தில் பூத்து விடச் சாத்தியமற்று இறுக்கத்தின் வலியை உணரட்டும் என்று மகரந்தங்களை பாறையாகவே வைத்து பூவிதழ்களால் சூடித் தருகின்றன. தான் நினைத்த வாசம் வீசுவதாக மகரந்தங்கள் மூடிக் கிடந்த போதும் உரத்து பெருமை பேசித் திரிகின்றன.

எப்பவாவது வாய்க்குமா? என் கனவு பொழுது போல, அதில் நான் விரும்பும் என் காதலன், பூவாக்கப் பட்டான் என் தொடுகையில், என்னோடு கூந்தலில் எப்பவும் இருக்கின்றான் மாலை நேரத்து பெண் கூந்தல் மலர் தாங்குவது என் அடையாளத்திலா?
நான் விரும்புகின்றபோது அவன் ஆணாகி என் காதலனுமாகினான், மீண்டுமொரு பொழுதில் பூவாகி என் கூந்தலிலேகினான்.அவனென் கழுத்தில் தாலி பூட்ட முடியா காதலனுமாகினான்.

கழுத்தில் இல்லாத தாலி பற்றி எனக்குள் ஏன் இவ்வளவு நெடிய சிந்தனைகள். யோசித்தபடி சிரித்துக் கொள்கின்றாள்.மடிப்புக் கலையாத அந்த மேலாடையின் மேல் கல்லூரி காலங்களில் ஆடிய நீள சங்கிலி நினைவுக்கு வருகின்றது. அப்பவும் அவளைப் பார்த்தவுடன் அந்தச் சங்கிலி பற்றிப் பேசுபவர்களுக்கு அவரவர்கள் விரும்பும் பதில் தந்தாள். ஆம் எதிர்படும் ஆசிரியை ஒரு நாள் கேள்வி கேட்கின்றார். அழகா வித்தியாசமா இருக்கே இந்த டாலர். எங்க செய்தது.

செய்ததிலே ஒன்றும் பெரிய விசயமில்லை. அந்த வடிவத்தை வரைந்து கொடுத்தது என் அம்மா. இன்னொன்று இது போல் கண்டிப்பாக இருக்காது.

ஆசிரியை யோசித்தபடி சிரிப்பை வீசி விட்டு நகருகின்றார். அவருக்குள் இவள் நிஜமாகவே பணிவாக உண்மைத் தகவலைத் தந்திருக்கிறாளா இல்லை கிண்டலடிக்கிறாளா?

எதிரே கண்டதும் ஏன் பெண்களுக்கு ஆபரணங்கள் தான் பட்டுத் தொலைக்கின்றது. இன்னமும் அதைத் தாண்டிய என் அறிவும் ஆளுமையும் காணத் தர முடியாததாக நான் வைத்திருக்கிறேனா. இல்லை கண் முன்னே அது தெரிந்தாலும் இதுவரை அதன் சுயத்தை தன் வழியில் அனுபவித்திராதவர்களுக்கு அது உணர்வாகிடவே போவதில்லையோ , சந்தனக் காட்டை உணர்ந்து விடாத விறகு வெட்டியாய்

குறை சொல்லவும் மனமின்றி அவர்கள் எதிர்பார்த்த பதிலும் தரத் தயாராகவின்றி சங்கிலிக்குள் தன் தாயின் ஆளுமைத் திறனை அழுத்திச் சொன்னதை புரிந்து கொள்ள முடியா கேள்விகளுடவே இதோ இன்னும் நகலுகின்றாள்.

திருமணமாகி 15 வருடங்கள் கழித்து மீண்டும் அதே கல்லூரிக்குள் சிறப்புப் பேச்சாளராக அழைக்கப் பட்டு வருகை தந்திருக்கின்றாள். கல்லூரி தன் முகங்களில் புதிய சாயங்களை பூசிக் கொண்டிருந்த போதும் அதன் அதே ஆத்மாவை உலவ விட்டபடி இருந்ததை உள்ளே நுழைந்த சில நிமிடங்களில் மரம்பட்டு வீசிய காற்றை நுகர்ந்த மாத்திரத்திலேயே உணர்ந்து விடுகின்றாள். அது சஞ்சீவினிக் காற்று போலும் அவளை மெல்ல தூக்கிக் கொண்டு போய் இளமைக் காலத்திற்குள் இறக்கி விட்டுவிடுகின்றது.

இமைக் கால உடல் தாங்கியவளாய் கற்பனை மிதப்பில் அரங்கத்தினுள் நுழைகின்றாள். வாசலில் சந்தனம் குங்குமம் , பூக்கள் கற்கண்டுகள் வரவேற்கின்றன. அதை விட கூடுதலாக பன்னீர் செம்போட நின்ற மாணவிக்களுக்கிடையில் அவளையும் காண்கிறாள்.நலம் தானா? சிரிப்பினில் அவளையே அவள் விசாரித்தபடி உள்ளே புகுகின்றாள்.

கண்களால் பேசிக் கொள்ளும் மாணவிகள் வண்ணங்களால் வெளிப்படுத்திக் கொள்ளும் உடைகள். ஒவ்வொரு முகத்திற்குப் பின்னும் இன்னுமொரு அழகிய ஆளுமைகள் நகர்வதை ரசித்தபடி நகர்ந்தேன். அரங்கில் இருந்தவர்களோடு வணக்கம் சொல்லி மேடையில் அமர்ந்து விட வரவேற்புரை துவங்குகின்றது.மேடையில் மின்விசிறி ஏற்கனவே இருந்த மார்கழியை வெயிலும் தொலைக்க முடியாது சேர்த்துக் கொண்டு சுழல விரல் நுனியில் குளிர் உறைகின்றது. அருகில் இருந்த ஆசிரியையிடம் மின்விசிறியை நிறுத்திக் கொள்ளலாமே இரகசியக் குரலில் கேட்கின்றேன். ஏன் குளிருதா?

ஆம்

“உடம்பில் சக்தி இல்லையென்று அர்த்தம் எனக்கெல்லாம் வியர்க்கின்றது”

தன்னை மட்டுமே முன்னிறுத்தி பதில் பேசித் தொலைக்கும் கூட்டம். எதையும்

எதிர்பார்க்காது போர்த்திய பொன்னாடையை விரித்து விரல் நுனிகளை மூடிக் கொள்கின்றேன் மெல்லிய சிரிப்போடு. பெண்ணிய பேச்சுக்கள் போய் கொண்டிருக்க இடைவேளையின் வெளியில் வருகின்றேன் பழைய முகமொன்று கண்ணில் தெரிகின்றது பழகிய முகம்

ஏய் நீ தீபாதானே? இங்கே எங்கே இப்படி?

இன்னைக்கு தமிழ்த்துறையில் நடக்கின்ற கூட்டத்திற்கு நான் தான் சிறப்பு விருந்தினர் அப்படியா? ஆச்சரியம் தான். படிக்கும் போது மேடையில பேசமாட்டியே எங்க இருக்கிற?

பேச்சு உதடு வழி வந்து கொண்டிருக்க கண்கள் கழுத்தில் வீழ்ந்து வழிந்து கொண்டிருந்தது. கழுத்தில் முத்து மாலை மேல் கண் போய் மீண்டு கொண்டே இருந்தது.

ஆமா படிக்கிற வரைக்கும் மேடையில நான் எதுவும் பேசினதில்லை , ஆடிருக்கேன் , நடிச்சிருக்கேன் . ஆனா இப்போ நிறைய பேசுகின்றேன்.

“ஓ எங்கே இருக்கிற? பிள்ளைகள் எத்தனை?”

கேள்விகளும் பதில்களும் நீண்டு கொண்டே போனாலும் சிந்தனையும் பார்வையும் என் கழுத்தைத் தாண்டவில்லை என உணர்ந்து கொண்ட தருணமிதில் அந்தக் கேள்வியும் வந்து விழுந்தது.

கழுத்தில் என்ன தாலியைக் காணோம்? புரட்சியா கல்யாணமாகிடுச்சா ஆகலையான்னு கேட்கவா வேண்டமான்னு சந்தேகமா இருக்கு

கேளுங்க அதுனால என்ன ? பதில் சொல்றேன் என்று சொல்லி விட்டு பதில் சொல்ல விருப்பமற்றே நகலுகின்றேன்
மேடை என் வசமாகின்றது. ஒலி பெருக்கி என்னிடமிருந்து வாங்கித் துப்ப முடியா பேச்சாய் நான் என்னுடன் பேசிய படியே இருக்கின்றேன்.எதிர்த்திருந்த மாணவிகளுக்கு என் விளக்கங்கள் உரத்த குரலாய் கொட்டிக் கொண்டே இருக்கின்றது. அவை என் காதுகளுக்குள் கேட்ட போதும் மனம் இன்னும் வேறேதோ பதில்களை தேடிய படி அலைகின்றது.

“ நான் கல்யாணம் ஆனவளா இல்லையா சொல்வதற்கு தாலிதான் வேண்டுமா? அப்போ ஆண் கல்யாணம் ஆனவனா இல்லையா ? எதை வைத்துச் சொல்லுகின்றோம் ஆனால் உணர்தலோடு தனக்கு திருமணமான விடயத்தை ஒரு ஆணால் தந்து
விட முயுமென்றால் அதை விட பொறுப்புணர்வு கொண்ட பெண்களால் முடியாதா என்ன?

தாலி தேவையா?

மனதில் ஓடிக் கொண்டிருந்த கேள்விகள் என் காதுகளில் உரத்துக் கேட்ட போது தான் என் மன உரையும் தொடர் நூலாய் இழுவையோடு வெளி வந்து ஒலி பெருக்கியில் ஓடிக் கொண்டிருக்கின்றது என்று உணர்கின்றேன். பேசிக் கொண்டிருந்த விசயங்களோடு மனத்தின் பேச்சும் சரியான தருணத்தில் கைகோர்த்து விடுகின்றது.

கூட்டத்திலிருந்த மௌன உறைதல் சம்மதமெனும் அடையாளமல்ல ஆழமான சிந்தனையில் உறைந்து போயிருக்கின்றது என்று புரிந்து கொள்ள முடிந்தது. யோசிக்க வேண்டியது தானே எனும் அமைதியில் விதை உறக்கமாய் உறைந்து கிடந்தது

அப்பொழுது கீழே முன்வரிசையில் இருக்கும் என்னைப் பார்க்கின்றேன் தாலி இல்லா இன்னொமொரு கழுத்து . வாயற்ற கழுத்து ஏளனப் புன்னகையில் என் பேச்சின் கன மௌனம் தாண்டிய கைதட்டலில் துடைத்து எறிந்தது.

ஏற்கனவே அது தாலியையும் இப்படி ஒரு துச்சத்தில் தான் கழற்றி எறிந்தது தாலி விழுந்த கணத்தின் கணத்தை எண்ணிப் பார்க்கின்றது. தாலியற்று ஆனால் தாவணி போட்ட நாள் முதலாய் தாய் பண்ணிப் போட்டிருந்த அந்த சங்கிலியில் பூக்கூடை நிறைந்திருந்தது பூக்களால்.வண்ண வண்ண கற்கள் தங்களைப் பூக்களாய் மாற்றிக் கொண்டிருந்தன. இடையில் ஓடிய ஒரு கம்பி பாம்பாய் விசமூச்சு வெளித் தெரியாது உலவிக் கொண்டிருந்த சுகமான பொழுதுகள்.ஆம் அழுத்தங்கள் மேல் விழுகின்ற வரைக்கும் துப்பப் படுவதில்லை விசங்கள் அதுவரைக்கும் எல்லாமே நல்ல பாம்புகள் தாம். அவள் கழுத்துச் சங்கிலியும் பாம்புதான்

தூரத்தில் கல்லூரிக்குள் அவனைச் சந்தித்த நொடியில் உள்ளூற அடிவயிற்றிலிருந்து பந்தொன்று எழும்பி நெஞ்சில் மோதி அழுத்தத் துவங்கியதை எல்லாப் பெண்களும் போலவே தீபா கணக்கியல் புத்தகங்களைக் கொண்டு அழுத்தத் திஒடங்கினாள் ஆனால் விழிகளின் படபடப்பும் நடையின் தயக்கமும் யார் மேல் விழுந்த காதலோ அவனுக்கு மட்டும் மௌனமாகத் தன் இதயத் தகவலை அனுப்பியதை அவளும் அறிந்திருக்கவில்லை அவனும் அறிந்திருக்கவில்லை

ஒரு நாள் மாலை கல்லூரி மரங்கள் பறவைகளீன் இரைச்சல்களை மட்டும் விதைத்துத் தூவிக் கொண்டிருந்த பொழுதினில் அவள் பூக் கூடை டாலரைப் பற்றி அவன் பேசிய குழைந்த வார்த்தைகளின் இதம் பறவைகளின் கூட்டில் குஞ்சினைப் பொரிக்கச் செய்திருந்தது. அவை மெல்ல மெல்ல தாய் மென்று தொண்டையில் அடக்கிய அழுத்தத்தை தின்று சிறகுகளை துளிர்க்கச் செய்தன. தாய்ப்பறவை அது சிறகு முளைக்கத் துவங்கியதையும் மறந்து ஊட்டிக் கொண்டே இருந்தது. அவள், அவன் அவளின்

இருப்பை, காதலின் மனத்தை , பறை சாற்றித் தீரு மட்டும் திணித்துக் கொண்டே இருந்ததைப் போல . தன் மேலமர்ந்து காதலைத் திணித்துக் கொண்டிருந்ததை சிறகுகளை அழுத்தித் திணித்துக் கொண்டிருந்ததை உணர்ந்த பொழுதினில் தன் வீட்டுக்குத் தெரியாமல் வெறுங்கையோடு அவன் வீட்டுக் கதவு தட்டினாள். தெரியும் இந்த நேரம் அவன் நண்பர்களோடு பெருமை பேசி சுத்தி வரும் நேரம் என்று வாசலில் நிற்கையில் சுவரில் இருந்த திருஷ்டி தேங்காய் பூதம் தோழிகளின் கேலிக் குரலாய் முகம் காட்டியது.

ரொம்ப விளையாட்டாய் உனக்கானவன் அவன் எனக்கானவன் என்று பேசத் தொடங்கிய விளையாட்டுப் பேச்சுகள் நாங்களே அறியாத இடத்தில் எங்களை வைத்தே விளையாடிக் கொண்டிருந்தன.

“அவன் உனக்கு மட்டுமா ஆளு? நேத்து கூட மாலதி கூட நின்று பேசிக் கொண்டிருந்தாண்டி அவளும் மரத்தில் கை வைச்சிருக்க எப்ப வேணுமின்னாலும் கை படலாம் பட்டு கோபப் பட்டா மன்னிப்பு கேட்டு தவிர்த்திடலாம், கண்டும் காணாம விட்டா அப்படியே தொடரலாமுங்கிற விடலைத்தனம் அவன் உடலசைவு முழுக்க தெரிஞ்சது . கெட்டிக் காரன் தான், நல்ல குடும்பந்தான் ஆனா விடலைத் தனம் மாறலியே யோசிடி“

சொல்லிய படி நகன்ற தோழியின் வசனம் பூதமாய் மிரட்டிய உண்மையாய் இருந்த போதும் இதோ வாசலில் பயனற்று ஆடவிட்டதைப் போன்று ஆதியிலும் வசனத்தை தொங்க விட்டபடி நகன்றிருந்தாள்

அவன் செய்கையும் பேச்சுக்களும் இரண்டு மூன்று பெண்களுக்குள் எப்பவும் அவனுக்கான போட்டி இருப்பதாக பார்த்துக் கொண்டான். போட்டிகளூடாக தரையில் ஊன்றாது பெண்களின் இழுத்துக் கட்டிய கயிறுகளின் இடுகையிலேயே மிதக்கும் பாரமாக மாறி மிதந்தான்

என்னிடமும் இதற்கு முன் இருந்த பெண் நட்புகளெல்லாம் அவனை தக்க வவத்துக் கொள்ள அருகதையும் திறமையும் அற்றவர்கள் என என்னிடம் கேலியோடு சொல்லிப் போனான். அதன் மூலம் என் அருகதையும் இருப்பும் திறமையும் மறைமுகமாக அவனது இருப்பு என்னுள் நிறையுமாறு இருக்க எதிர்திசையில் இருந்து கொம்பு சீவி விடுகின்றான். புரிகின்ற போதும், உரத்துச் சொல்லி வென்றதாய் சொல்ல தோற்க வேண்டிய நிர்பந்தங்கள்.

இறுதியில் வென்றது அவனை வென்று விட்டதாய் பெருமை பூசித் திரிந்த நாட்களின் சாய முகங்கள். அது கழன்று உதிர்ந்து போனதை காணச் சகியாது மீண்டும் மீண்டும் வண்ணங்கள் தேடி அலையும் மனம் கிடைத்தவற்றிலெல்லாம் வண்ணங்களைத்

தேடித் தவிக்கின்றது. நெருஞ்சியின் மஞ்சள் நிறம் சிவப்புப் பூக்களின் நீலச் சாயம், உதடுகள் நிறச் சிவப்பு மாற்றித் தரும் பழத் தோல்கள் , வண்ணத்துப் பூச்சியின் தொட்டால் ஒட்டிக் கொள்ளும் பட்டு வண்ணத் தூள்கள் எல்லாம் கைவசம் தேடித் தேடிச் சேர்த்தாள் இன்னது என்று பிரித்தரிய முடியா நிறங்களுடன் இப்பொழுது இவள் முகம் செயித்ததாய் சொல்லித் திரிய , மனத்திலோ தோற்றுப் போனதின் வலி

வலியைத் தொலைக்க இன்றவன் வாசலில் நின்றாள். நின்றதின் அழுத்தம் அந்த வீட்டுக்குப் பயம் தர அவன் அழைத்து வரப் பட்டான். தவிர்க்க முடியாது தாலி கட்டினான். விரும்பியது தானே கிடைத்ததாய் சூள் கொட்டிக் கொண்டான். நான் பாடுபட்டு வந்து சேர்க்க அதுவாய் வந்து தன் தோளமர்ந்ததாய் பெருமை பேசித் திரிந்தான் என் வெற்றியை அவன் கையகப் படுத்திக் கொள்வது தெரிய வர கழுத்திலிட்ட தாலி அவசரத்தில் சவரன் கம்பியாய் இருந்திருந்த போதும் பெரும் பாரமாய் உணரத் துவங்கியது.

உணர்தலும் பேசுதலும் எப்பவும் தன்னந்தனியளாய் என்னோடு மட்டுமே பேசிக் கொண்டிருக்க பலநேரம் மொழி பற்றாமலேயே போய் விடுகின்றது. அதன் போதாமையை உணர்ந்த பிறகு பலநேரம் பேச்சே பயனற்றதாய் தெரிய மௌனமும் மனஇறுக்கமும் பெரிய ஆறுதலாய் இருந்தது

தன்னோடு எப்பவும் தனியே பேசிக் கொள்வதின் பழக்கத்தில் வார வாரம் செல்லுகின்ற கோவிலின் துர்க்கையம்மன் தோழியாகிப் போனாள். அவளோடு உரத்துப் பேசத் தேவையில்லை. காதில் கேட்கவில்லை என்றோ புரியவில்லை என்றோ திருப்பிக் கேட்காதவள் அவள். செவ்வாய்க் கிழமையில் இரண்டாய் அறுத்து பிழிந்து திருப்பிய எலுமிச்சம் பழத்தில் , என்னைப் போலவே என்னோடு மௌனமாக உரையாடிக் கொண்டிருந்தாள் துர்க்கை. காம்பின் அடிப்பகுதி ஓட்டையாகாது விளக்கு ஏற்ற ஆடாது அசையாது எரியும் விளக்கில் துர்க்கை என்னோடு பேசிக் கொண்டிருந்தாள். யாராவது அபிசேகம் செய்து புதுத்தாலி போட்ட அன்று மட்டும் தாலியோடு இருந்தாள் . மற்ற நாட்களில் சிவப்பு சீலை கட்டி தாலியற்ற கழுத்தோடு விழியில் சிரித்தபடி இருந்தாள்.

ஆயிற்று திருமணம் வென்று விட்டதாய் நினைத்திருந்த காலங்களில் குழந்தையின்மை தோல்வியாய் கவ்விக் கொண்டு போனது. எனது தோல்வியில்லை என்று எங்கள் இருவருக்கும் தெரிந்த போதும் அவனை குறை சொல்லி விடக் கூடாது என்று நான் தயங்கித் தயங்கி நிற்க , மெல்ல குறை என் மேல் என்று நிழல் கவியத் தொடங்கியது. நான் தயங்கியது போல் அவன் தயங்காமல் தவிர்த்தது என் மேல் பழியாகிப் போனது அவன் குடும்பத்தார் கூடவே இருந்தும் பேசமுடியாமலும் என் குடும்பம் தூர இருந்ததால் பேச முடியாமலும் என் தனிமை என்னோடவே ஆகிப் போனது.

இணை மான்கள் இருந்திருந்த கொஞ்சத் தண்ணீரை ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்தலாய் குடிக்காமலே இருந்ததாய் படித்த காலத்தில் பக்கங்களுக்கிடையில் சிகியிருந்த சங்கப் பாடல் காட்சி நினைவுக்கு வந்து , பிடி மான் குடிக்காது காத்துக் கிடக்க கிடா கிடந்த நீரில் தன் கொம்பின் அழகைப் பார்த்து மகிழ்ந்த வண்ணம் குடித்து முடித்து விடுதலாய் காட்சி மாறி என் கண் முன் வந்து போகின்றது

காலம் ஒரு கணத்தில் நெகிழ அதில் முளை விட்டது இளங்குருத்து. பாறைக் கசிவாய் செடி முளைத்தலாய் .பத்திரப் படுத்தியது சூழல் நிம்மதிப் பெருமூச்சு விட்டு ஆசுவாசப் படுத்தி மௌனம் மூச்சில் பேச்சில் திளைத்திருந்த வேளை அவன் வீட்டு படியிறங்கிப் போவதன் வாசம் என் மூக்கு உணர்ந்து கொண்டே இருந்தது

படியிறங்கிய போதும் அவன் தீர்மானத்தின் வெற்றியாய் பிரகடனப் படுத்துகின்றான். அவன் இப்பொழுதெல்லாம் அழைத்து வருகின்ற உடன் வேலை செய்யும் தோழிகள் வீட்டின் மையம் வரை வந்திருந்தனர். அது அவர்கள் எல்லை என்று எனக்கு உணர்த்தப் பார்த்த அந்த நொடிகளைக் கடந்து அவை அதை மீறிக் கொண்டு படுக்கையறைக்குள்ளாக நுழைந்திருப்பதை மறைக்கப் பார்ப்பது தெரிந்தது. புலிகள் பசுத்தோல் போர்த்திக் கொண்டு நம்பி விடுவான் மேய்ப்பன் என்று நிணைக்கின்றன.தெரியாதிருப்பதாய் காட்டிக் கொண்டு விருந்துபச் சாரங்கள் நடத்தப் பட்டுக் கொண்டே இருக்கின்றன.

என் முன்னாலிருந்த அவர்களுக்கிடையேயான தூரங்கள் எந்த இடத்தில் அற்றுப் போகக் கூடும் என்பது எனக்குத் தெரிந்தே இருந்தது. இதே போல எத்தனை தூரங்களை எனக்கும் அவனுக்குமான போலித் தூரங்களை அடுத்தவர் எங்களது நெருக்கத்தை உணர்ந்து விடக் கூடாது என்று பொய்யாக உருவாக்கி வைத்திருக்க நடத்திய திருகு தாளங்களை எனக்கான அன்பாக எத்தனை காலம் ரசித்திருக்கின்றேன்

இன்று அது வேறொருத்திக்காக என்று மாறித் தொலைய கைகாட்ட முடியாத கடியாக விசம் ஏறியும் உயிர்த்திருக்க வேண்டிய கட்டாயங்கள் , தாலியின் கணத்தை ஏற்றிக் கொண்டே இருந்தது. ஆறு மாதங்களுக்கு ஒரு புது தோழி தோன்றினாள் நான் சாட்சியமிட்டு சொல்ல முடியாத நன்னடத்தைச் சான்றிதழ் தாங்கும் போலி நடவடிக்கைகளைத் தெளிவாகச் செய்தனர், உண்மைகளை மறைத்து விடும் கவசமாக. மிதி பட்டும் கூவ முடியாத குற்றம் சாட்ட முடியா இடம் ஒவ்வொரு ஆளுக்கான வெறுப்பாய் உருமாறியது.

சமீப காலமாக அம்மா வீட்டாருடனான உறவு மெல்ல தன்னை புதுப்பித்துக் கொண்டது என்னோடு. நானோ என் இறந்த கால முடிவுகள் நிகழ்கால வழ்வாகி , எதிர்கால பாதையாகி இருப்பதாக காட்டிக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயத்தில். நிர்ப்பந்தம்

தந்த இறுக்கம்

கெட்டிக் காரத்தனமாய் வாசிக்கப் பட்டுக் கொண்டிருக்க பாராட்டுரைகளை நிராகரிக்க முடியா கள்ள மௌனம் நிரம்பச் செய்திருந்த சூழலது.பாராட்டுரைகளை நிராகரித்தால் தோல்வி அடைந்தவளாவேன். ஒத்துக் கொள்ளும் பட்சத்திலோ அவனின் கள்ளத் தனங்களை "கண்ண" பெருமையாய் வாசித்து விட நேர்ந்து நிஜமாகவே தோற்றும் போவேன் வெளியே தெரியாத படிக்கு.

என் கெட்டிக் காரத் தனம் என்ற வர்த்தைக்கு பின்னால் சிலரின் கயமைத் தனம் என்ற வார்த்தை தம்மை ஒளித்துக் கொண்டு திரிகின்றதே. குடும்பமோ மகள் தன் தேர்வில் வென்று விட்டதாய் மார்தட்டிக் கொள்ள இடமளித்து விட்டு மகிழ்ந்திருக்க, அவனோ தானே தோளமரும் புறாக்களை பெருமையாய் பேசி மீசை முறுக்கிய படி நகல சிரித்தபடி இரத்தம்வடிதலை சந்தித்துக் கொண்டிருந்தாள்.

பொய்யாய் கண்ணீரின் உவர்ப்பை மறைத்த நாட்கள், தொடர்ந்து சொன்ன பொய்யின் சௌகரியம் அப்படியே அதன் முகமாகிப் போக உவர்ப்பை இனிப்பென்றே சொல்லித் திரிகின்றேன். நான் சொல்லத் தொடங்கிய பொய்யை நானே நம்பத் தொடங்கி விட்டேன். சூழ்ந்திருந்த எல்லாருமே அதை இனிப்பென்றார்கள் என் வாய்மொழியை வழி மொழியாக்கி. தொடக்கத்திலிருந்தே யாருக்கான கௌரவமாகவே தொடங்கிய காதல் காதலாகவே இல்லாது போயிருப்பது உரைக்க ஒரு நாள் சோப்பிட்டுக் கழுவவென்று கழட்டிய தாலியை திருப்பி எடுத்துப் போட மறந்திருந்தேன். அவனோ தாலி இல்லாத கழுத்து பற்றி கவலைப் படத் துவங்க முதன் முறையாய் கவலைப் படத் துவங்குகின்றான் என்பது தந்த மகிழ்ச்சி மீண்டும் முறுக்கேறியது.

தாலி எடுத்துப் போட்டுக் கொள்ள மனம் மறுத்துக் கொண்டேயிருக்க திருப்பதி உண்டியல் காசோடு சேர்த்து வைத்தாள். அந்தக் காசுகள் அதைக் கடத்திக் கொண்டு போய் உண்டியலிலும் சேர்த்து விட்டது நானே அறியாப் பொழுதொன்றில். இன்னும் அவன் ஒவ்வொரு கல்யாண வீடு போகும் போதும் தாலி போடச் சொல்லி கேட்ட படியும் , கழற்றியதற்கு காரணம் கேட்டபடியும் பதிலை எதிர்பாராது நகலுகின்றான்.

பிறந்த வீடும் சரி புகுந்த வீடும் சரி கேட்டால் அதிர்ச்சியான தகவலை தந்து விடுவாளோ என்ற பயத்தில் கேள்விகளை மண்ணிட்டு புதைத்து விட்டுப் போகின்றது. மழை கண்ட ஒரு நாளில் அது முளைக்கலாம்

காதோடு அருகில் வந்து ஏதும் பிரச்சனையா என்று போலிக் கவலையோடு விசாரிக்கும் பெண்கள், அவள் பிரச்சனையில் நாம் நுழையலாமா என்ற தயக்கமோடு கழுத்தில்

காணலியே என்ற ஒற்றை வரிக் கேள்வியில் சில ஆண் நண்பர்களும் தூர நின்று கொள்ள என் உணர்வு பேசாத மொழியோடு சுற்றிக் கூட்டமிருக்க

ஒவ்வொரு சொந்தங்களின் திருமண வீட்டிற்கும் கோவில்களுக்கும் விருந்தினராய் போகும் போதும் ஒரு முறையாவது கேட்டு வைக்கின்றான். கழுத்தில் போட்டுக் கொண்டு வரக் கூடாதாவென்று

எதுவுமே நடக்க வில்லை என்பதாய் மறைத்துக் கொண்டாலும் பேச முடியாத உணர்வு உறுத்தும் தண்ணடனையத் தந்து விட்ட மகிழ்வின்

"தனிமையில் ஒற்றை நிலவாய் " இருந்து கொண்டே இருக்கின்றேன்

mathibama@yahoo.com
செப்டம்பர் 2009 இதழ் 117

15. தினம் தினம் தீபாவளி - வி.ல.நாராயண சுவாமி (மயிலை ரங்கநாதன் தெரு, தியாகராய நகர். சென்னை)

தினம் தினம் தீபாவளிதெருவெங்கும் காகிதக்குப்பைகள் ... சென்னை நகரம் முழுவதுமே புகை மண்டலமாய்க் காட்சியளித்தது ... அணுகுண்டின் (ஆடம் பாம்) ஓசை செவிகளைக் கிழித்துக்கொண்டு மனதுக்குள் இறங்கிக்கொண்டிருந்தது. ஆங்காங்கே வெடித்துச் சிதறிக்கொண்டிருந்த சரவெடிகளின் சத்தம், அந்த வழியாக கடந்து செல்பவர்களின் குலையையே நடுங்கச் செய்துகொண்டிருந்தது. அங்கிருந்தவர்களுக்கு, தான் ஏதோ இந்திய நாட்டின் எல்லையில் இருக்கிறோமோ என்பது போல் ஒரு உணர்வு. அந்த அளவுக்கு, தெருவே வெடிச் சத்தத்தில் அலறிக்கொண்டிருந்தது. ஆனால் அந்த வானம் மட்டும், பட்டுக் கம்பளம் போர்த்தப்பட்டதுபோல், பூ மத்தாப்புகள் சிதற சிரித்துக்கொண்டிருந்தது ... வெடியின் திரியைப் பற்ற வைத்தவுடன் உடனே வெடிக்காமல், சற்று உயரச் சென்று வானத்தைப் அழகுபடுத்துவதுபோல் அங்கேயே பல வண்ணங்களுடன் வெடித்துச் சிதறும் வகையிலான வெடிகள் இந்த வருடம் அதிகம் வந்திறங்கியிருந்தது.

அந்தத் தெருவிலேயே சற்று வசதி படைத்தவன் மகேஷ். மகேஷின் அப்பா ராமலிங்கம் ஒரு பெரிய தொழிலதிபர். சிறு வயது முதலே, சகல வசதிகளுடன் வாழ்வை அனுபவித்துக் கொண்டிருப்பவன் மகேஷ். ஒரே பிள்ளை என்பதால், வீட்டில் இவனை தங்கத் தட்டில் வைத்துத் தாங்கிக் கொண்டிருந்தனர் மகேஷின் பெற்றோர். மகேஷ் இப்போது சென்னையிலுள்ள பிரபலமான கல்லூரி ஒன்றில் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருக்கிறான்.

எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை. சென்னை.

" அம்மா ... ரொம்ப வலிக்குதே ... அம்மா ... அம்மா ... என்னால முடியலங்க ... ரொம்ப வலிக்குதுங்க ... " - பிரசவ வலியில் துடித்துக் கொண்டிருந்த செல்வியின் கதறல் அந்த வீட்டையே கலங்கடித்துக்கொண்டிருந்தது.

" கொஞ்சம் பொறுத்துக்கோம்மா ... கணேஷ் ஆட்டோவ கூட்டிட்டு வர போயிருக்கான் ... இப்ப வந்துடுவான் ... கொஞ்சம் வலிய தாங்கிக்கோம்மா ... " - செல்வியை சமாதானப் படுத்திக் கொண்டிருந்தாள் அவளின் மாமியார்.

" ரொம்ப வலிக்குதும்மா ... என்னால தாங்கவே முடியலம்மா ... ".

செல்விக்கு, இது முதல் பிரசவம் என்பதால், பயம் கலந்த கண்களுடன் வலியில் வாடிக்கொண்டிருந்தாள்.

மூச்சிரைக்க ஆட்டோ நிறுத்தத்திற்கு ஓடி வந்த கணேஷுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. தீபாவளி என்பதால் ஆட்டோ எங்குமே இல்லாததைப் பார்த்த கணேஷின் மனம் பதறியது. என்ன செய்வதென்றே புரியாமல் திகைத்துப்போய் நின்றான். அப்போதுதான் தூரத்தில் ஒரு ஆட்டோ வந்து கொண்டிருந்தது. ஏற்கனவே அந்த ஆட்டோ சவாரியுடன் வந்து கொண்டிருப்பதை ஓரளவு அருகில் வந்தவுடன்தான் கணேஷால் உணர முடிந்தது. வேறு வழியே தெரியாமல் இறைவனை வேண்டிக்கொண்டு நடுரோட்டில் அந்த ஆட்டோவை நோக்கிப் பாய்ந்து அதை வழிமறித்தான்.

" சார் ... என்னோட மனைவி பிரசவ வலியில துடிக்குறா சார் ... கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்க சார் ... எங்கயுமே ஆட்டோ இல்ல சார் ... நீங்கதான் சார் உதவி பண்ணனும் ... " - என்று அந்த ஆட்டோ ட்ரைவரிடமும், சவாரியாக வந்திருந்த இருவரிடமும், கால்களில் விழாத குறையாக கெஞ்சினான் கணேஷ்.

அவர்கள் ஆட்டோவை விட்டு இறங்க, கணேஷ் ஆட்டோவில் ஏறி வீட்டை நோக்கி விரைந்தான். ஆட்டோ வீட்டின் முன் சென்று நின்றது.

" அம்மா ... நான் இவள ராஜு ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டு போறேன் ... நீங்களும் அப்பாவும் அப்பறமா வாங்க ... " - என்று
சொல்லியவாறே செல்வியைத் தூக்கி ஆட்டோவில் ஏற்றி மடியில் படுக்க வைத்துக்கொண்டான் கணேஷ்.

" சார் ... ராஜு ஹாஸ்பிடல் போகணும் ... கொஞ்சம் சீக்கிரமா போங்க சார் ... " - என்றான் ஆட்டோ ட்ரைவரிடம் கணேஷ். ஆட்டோ சீறிப் பாய்ந்துகொண்டிருந்தது ... சிறிது தூரம் சென்றவுடன் பிரதான சாலையில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலால், ஆட்டோ மேற்கொண்டு செல்ல முடியாமல் அந்தக் கூட்டத்திலேயே அகப்பட்டுக் கொண்டுவிட்டது.

" இதோ வந்துடுச்சும்மா ... கொஞ்சம் பொறுத்துக்கோ ... " - என்று செல்வியை தேற்றிக் கொண்டிருந்தான் கணேஷ்.

" கடவுளே ... இந்த நேரத்துலதானா இப்படி ஃட்ராபிக் ஜாம் ஆகணும் ... " - என்று பல்லைக் கடித்தபடியே மனதுக்குள் கடவுளைத்
திட்டிக்கொண்டிருந்தான் கணேஷ்.

மயிலை ரங்கநாதன் தெரு, தியாகராய நகர். சென்னை.

வீட்டில் அழைப்பு மணி ஒலித்தது ... எழுந்து போய் கதவைத் திறந்தான் மகேஷ் ...

" ஹாய் மகேஷ் ... தீவாளி விஷஸ் டு யு டா ... ஹவ் ஆர் யு மகேஷ் ... எப்படி போய்ட்டிருக்கு தீபாவளில்லாம் ... " - மகேஷின்
நண்பன் சுரேஷ்.

" ஹாய் சுரேஷ் ... ஐ அம் ஃபைன் டா ... தீபாவளி நல்லா போய்ட்டிருக்கு ... வாட் எ சர்ப்ரைஸ் டா ... நீ எப்படி இருக்க ... " - மகேஷ்.

" ஐ அம் டூயிங் குட் டா ... உன்ன பாத்து ரொம்ப நாளாச்சு ... அதானலத்தண்டா சும்மா பாக்கலான்னு வந்தேன் ... " - சுரேஷ். வீட்டில் செய்த இனிப்புகளை ஒரு தட்டில் வைத்து மகேஷின் தாய் எடுத்து வந்து கொடுத்தாள்.

" எப்படிம்மா இருக்கீங்க ... இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்மா ... " - என்றான் சுரேஷ்.

" நான் நல்லாயிருக்கேம்பா ... நீ எப்படி இருக்க ... உன்ன பாத்து எவ்வளவு நாளாச்சுப்பா ... வீட்டுல அம்மா அப்பா எல்லாம் எப்படி இருக்காங்க ... " - என்றாள் மகேஷின் தாய்.

" நான் நல்லாயிருக்கேம்மா ... வீட்லயும் அம்மா அப்பா எல்லாரும் நல்லா இருக்காங்க .. " - சுரேஷ்.

மகேஷும் சுரேஷும் பள்ளி நண்பர்கள். பன்னிரண்டாம் வகுப்பு வரை ஒன்றாகப் படித்தார்கள். மகேஷுக்கு மிகவும் நெருங்கிய நண்பன் என்றால், அது சுரேஷ்தான். சுரேஷ் ஒரு ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றாலும், இவர்கள் இருவருக்குள்ளும் எந்த ஒரு சமயத்திலும், எந்த ஒரு விஷயத்திலும், ஏழை பணக்காரன் என்ற ஒரு வேறுபாடு இருந்ததே இல்லை. அந்தப் பள்ளியே இவர்களின் இணை பிரியா நட்பைப் பார்த்து வியந்து நின்றது. அப்படி இருந்த இவர்களது நட்பு, கல்லூரியிலும் தொடர முடியாமல் போனதற்கு, சுரேஷின் குடும்ப வறுமையே காரணம். மகேஷ் வசதி படைத்தவன்தான் என்றாலும் கூட, அவன் +2 தேர்வில் எடுத்த மதிப்பெண்கள் ஒரு நல்ல கல்லூரியில் சேர அவனுக்கு கை கொடுப்பதாக இல்லை. ஆனால் சுரேஷ், தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுத்திருந்தாலும் கூட, அவனுடைய ஏழ்மை, அவன் ஒரு நல்ல கல்லூரியில் சேர முட்டுக்கட்டையாக இருந்தது. மகேஷின் அப்பா சுரேஷுக்கு பணம் கொடுத்து உதவத் தயாராக இருந்தபோதும் கூட, சுரேஷும் அவனது குடும்பம்பத்தாரும் அதனை ஏற்க மனமில்லாமல் போக, அரசுக்கல்லூரியில் வணிகவியல் இளங்கலைப் பட்டப்படிப்பிற்கு சேர்ந்தான் சுரேஷ். அப்போது பிரிந்த இருவரும் மீண்டும் சந்திக்க இன்றுதான் காலநேரம் இடம் கொடுத்திருக்கிறது.

தியாகராய சாலை, தியாகராய நகர். சென்னை.

" எனக்கு ரொம்ப பயமா இருக்குங்க ... என்னால தாங்கவே முடியலங்க ... அம்மா ... அம்மா ... " - செல்வி.> " பயப்படாதம்மா ... நான் இருக்கேன்ல ... ஒன்னும் ஆகாது ... கவலப்படாத ... " என்று கணேஷ் செல்வியை தேற்றிக் கொண்டிருக்கும்போதே அவனையும் அறியாமல் அவன் கண்களிலிருந்து நீர்த்துளி கசிந்துகொண்டிருந்தது. டாக்டர் பிரசவத்திற்கு குறித்துக் கொடுத்த நாளுக்கு இன்னும் சுமாராக இருபது நாட்கள் இருந்தாலும், செல்விக்கு முன்னதாகவே திடீரென வலி வந்துவிட்டது. செல்வி பிரசவ வலியில் துடிப்பதைப் பார்த்து கணேஷால் சகித்துக்கொள்ளமுடியவில்லை. மனதுக்குள் ஏதேதோ நினைத்துக்கொண்டு புலம்பியவாறே ட்ரைவரை விரட்டினான் கணேஷ். " ட்ரைவர் ... வண்டிய கொஞ்சம் வேகமா ஓட்டுங்க ..." என்று உரத்த குரலில் கத்தினான் கணேஷ். அந்த ஓட்டுனர் மட்டும் என்ன செய்வார் பாவம். கணேஷின் நிலையை நன்கு உணர்ந்திருந்தவர், " சார் ... நான் பாத்து வேகமாதான் போயிட்டிருக்கேன் ... சாயங்கால நேரங்குறதால, எங்க பாத்தாலும் ஒரே கூட்டமா இருக்கு சார் ... மெயின் ரோடு வேற ... பக்கத்துல இருக்குற ஏதாவது தெரு வழியா போனா, கூட்டம் கொஞ்சம் கம்மியா இருக்கும் சார் ... சீக்கிரம் போயிடலாம் ... கவலப்படாதீங்க ... " என்றார் மெலிந்த குரலில்.

மயிலை ரங்கநாதன் தெரு, தியாகராய நகர். சென்னை.

" சுரேஷ் ... இந்தாடா, இத புடி ... இந்த வருஷம் பத்தாயிரம் ரூவாய்க்கு பட்டாசு வெடில்லாம் வாங்கிருக்கோம் ... இன்னிக்கு பூரா ஆச தீர எல்லாத்தையும் வெடிச்சுடனும் ... வா, போய் வெடிக்கலாம் ... " என்றபடியே ஒரு பெரிய பையினை சுரேஷின் கையில் திணித்தான் மகேஷ்.

இவ்வளவு பட்டாசுகளை தன் வாழ்நாளிலேயே பார்த்திராத சுரேஷ், ஆச்சர்யத்தில் வாய்பிளக்க நின்றான்.

" இல்ல மகேஷ் ... நீ போய் வெடி ... நான் வேண்ணா கூட இருந்து பாக்குறேன் ... "

" காலேல ஆரமிச்சு, நீ வீட்டுக்கு வர்றதுக்கு கொஞ்ச நேரம் முன்னாடி வரைக்கும் நான் வெடி வெடிச்சுட்டுதாண்டா இருந்தேன் ... மத்யானம் சாப்டதத் தவிர இன்னிக்கு பூரா நான் பண்ண வேல அது ஒண்ணுதான் ... " என்று சொல்லிக்கொண்டே வலுக்கட்டாயமாக சுரேஷை வீட்டின் முற்றத்திற்கு இழுத்து வந்தான் மகேஷ்.

வீட்டில் ஒரே பையன் என்றதால், மகேஷ் தன் சிறுவயதில் விரும்பிக்கேட்ட கடலைமிட்டாய் முதல், இன்று அவன் படித்துக் கொண்டிருக்கும் கல்லூரி வரை, அவன் கேட்ட எதனையும் மறுக்காமல் கொடுத்த மகேஷின் அப்பா, இந்த தீபாவளிக்கு அவனுக்காக வாங்கிக்கொடுத்திருப்பது பதினைந்தாயிரம் ருபாய் மதிப்புள்ள துணிமணிகள்

மற்றும் பத்தாயிரம் ரூபாய்க்கு பட்டாசு வெடிகள்.

மகேஷும் சுரேஷும், வீட்டின் முற்றத்தில் பட்டாசுகளை வெடிக்கத் தொடங்கினர். இருவரும் சரவெடி மற்றும் அணுகுண்டுகளை வெடித்து மகிழ்ந்தனர். அறிவியல் விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம் ஐயா அவர்களைப் போல் இவர்களும் விண்ணில் ஏவுகணைகளைப் (ராக்கெட்) பறக்க விட்டுக்கொண்டிருந்தனர்.

தணிகாசலம் சாலை, தியாகராய நகர். சென்னை.

ஆட்டோ தியாகராய சாலையிலிருந்து தணிகாசலம் சாலை வழியாகச் சென்றுகொண்டிருந்தது.

" ஆஸ்பத்திரிக்கு இன்னும் அஞ்சு நிமிஷத்துல போயிடலாம் சார் ... " என்று கணேஷையும் செல்வியையும் தேற்றிக்கொண்டிருந்தார் அந்த ஆட்டோ ஓட்டுனர்.

கணேஷுக்கு அவர் சொன்ன வார்த்தைகள் எதுவுமே மனதுக்குள் இறங்கவில்லை. கிட்டத்தட்ட ஒரு நடைபிணம் போலவே அந்த ஆட்டோவுக்குள் சென்று கொண்டிருந்தான்.

ஆட்டோ தணிகாசலம் சாலையிலிருந்து, மயிலை ரங்கநாதன் தெருவை நோக்கித் திரும்பியது. அந்தத் தெருவே ஒரே புகை மயமாய்
இருந்தது.

மயிலை ரங்கநாதன் தெரு, தியாகராய நகர். சென்னை.

அப்போது மகேஷ் சற்றும் எதிர்பாராத வகையில், ராக்கெட் வைக்கப்பட்டிருந்த பாட்டில் கீழே விழ, அதிலிருந்த ராக்கெட் அந்த வழியாக வந்துகொண்டிருந்த ஒரு ஆட்டோவின் உள்ளே சரசரவெனப் பாய்ந்தது. திடீரென ஆட்டோவுக்குள் வந்த ராக்கெட்டால் நிலைதடுமாறிய ஓட்டுனர் எவ்வளவோ முயற்சி செய்தும், தன் கட்டுப்பாட்டினை இழக்க, அந்த ஆட்டோ கவிழ்ந்தது. தெருவெங்கும் இரத்த வெள்ளம். அந்த ஆட்டோவில் இருந்த மூவரும் மயங்கிக் கிடந்தனர். சத்தம் கேட்டுப் பதறியடித்து வெளியே வந்த ராமலிங்கம், இரத்தம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டு நிலைகுலைந்து போனார். உடனே, ரத்தத்தில் உறைந்திருந்த மூவரையும் தனது காரில் ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தார்.

அப்போலோ மருத்துவமனை, சென்னை.

மிகுந்த பதட்டத்துடன் மகேஷின் குடும்பத்தினர் மருத்துவமனையின் மேசையில்

அமர்ந்திருந்தனர். மிகவும் கஷ்டப்பட்டு, கணேஷின் வீட்டைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, கணேஷின் குடும்பத்தினரும் மருத்துவமனைக்கு விரைந்து வந்து கொண்டிருந்தனர்.

செல்விக்கு சிகிச்சையளித்துக்கொண்டிருந்த அறையிலிருந்து டாக்டர் ஒருவர் வெளியே வந்தார்.

" டாக்டர் ... " - பதட்டத்துடன் ராமலிங்கம்.

" அவங்களுக்கு ஆண் கொழந்த பொறந்திருக்கு ... "

" அந்த அம்மாவுக்கு ஒன்னும் ... " என்று தயங்கியபடியே இழுத்தார் ராமலிங்கம்.

" யாரோட உயிருக்கும் எந்தப் பிரச்சனையும் இல்ல ... இரத்தம் ரொம்ப வெளியேறியிருக்குறதால மயக்கம் தெளிய இன்னும் கொஞ்ச நேரமாகும் ... "

இந்த வார்த்தைகளைக் கேட்ட பின்புதான் ராமலிங்கத்திற்கு உயிரே வந்தது.

" உங்கள சீஃப் டாக்டர் பாக்கனும்னு சொன்னார் ... " என்று சொல்லிவிட்டு கணேஷ் இருந்த அறைக்கு விரைந்தார் அந்த டாக்டர்.

பேராபத்திலிருந்து காப்பாற்றியதற்காக நன்றி கலந்த அன்புடன், தன் பாலிய சிநேகிதராகிய சீஃப் டாக்டரைக் காண மெதுவாகக் கதவைத் தட்டியபடி அறைக்குள் நுழைந்தார் ராமலிங்கம்.

" வாடா ... உக்காரு ... " என்றார் சீஃப் டாக்டர்.

" நீ பாக்கனும்னு சொன்னேன்னு டாக்டர் சொன்னாங்க ... " என்றான் ராமலிங்கம்.

" ஆமாண்டா ... இன்னும் கொஞ்சம் தாமதமாயிருந்தாக்கூட இவங்கள காப்பாத்தியிருக்குறது ரொம்ப கஷ்டமாகியிருந்திருக்கும். சரியான நேரத்துல கூட்டிட்டு வந்ததாலதான் எங்களால காப்பாத்த முடிஞ்சுது ... அந்த ட்ரைவரோட நிலைமைதான் கொஞ்சம் மோசமாயிருக்கு ... உடல் முழுக்க தீக்காயங்கள் நிறையா இடத்துல பட்டிருக்கு ... "

" உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையே ... காப்பாத்திட முடியும்ல ... " என்று நடுங்கியபடியே கேட்டார் ராமலிங்கம்.

" காப்பாத்திடலாம் ... ஆனா மறுபடியும் பழைய நிலமைக்கு வர்றதுக்கு கொஞ்ச நாளாகும் ... இது தவிர உன் கிட்ட இன்னொரு விஷயம் பேசணும் ... இது நான் எனக்குள்ள ரொம்ப நாளா யோசிச்சிட்டிருந்த ஒரு விஷயம் ... "

" எதுன்னாலும் தயங்காம சொல்லுடா ... "

" வருஷா வருஷம் தீபாவளி அப்படிங்குறது எல்லாருக்கும் ஒரு சந்தோஷமான நாளாத்தான் இருக்கும் ... ஆனா அந்த சந்தோஷமான நாள்ள கூட பல ஆயிரம் பேர் பட்டாசுகலால தீக்காயங்கள் பட்டு சிகிச்சைக்கு வர்றாங்க ... அப்படி வர்றவங்கள்ல சில பேர் உயிருக்காகப் போராடி இறந்தும் போயிடுறாங்க ... இன்னும் சில பேர் வெடிச்சத்தத்தால அதிர்ச்சிக்குள்ளாகி தன்னோட உயிரையே விட்டுடறாங்க ... உண்மைய சொல்லனும்னா நம்மளோட குடும்பத்துல யாராவது நேரடியா பாதிக்கப்படுற வரைக்கும் இதப்பத்தி எல்லாம் நம்ம யாரும் கவலப்படுறதில்ல ... பல ஆயிரங்கள் குடுத்து நம்ம வாங்கி வெடிக்கிற வெடிகள் சில நிமிடங்கள்ல கரியாகிடுது ... கொஞ்சம் யோசிச்சுப்பாத்தா, நம்ம கரியாக்கினது வெறும் பணத்த மட்டும் இல்ல ... ஒரு வகையில, பல குழந்தைகளோட படிப்பையும் சேத்துதான் ... ஆமாம் ... பட்டாசுத் தொழிற்சாலைகள்ள வேலைக்குப் போற குழந்தைகள் எல்லாரும் தன்னோட படிப்ப அடமானம் வச்சிட்டுதான் பட்டாசு உற்பத்தி பண்றாங்க ... "

" ஒரு வகையில யோசிச்சுப் பாத்தா, அந்த பட்டாசு உற்பத்தி இல்லேன்னா அந்தத் தொழிற்சாலைகள்ள வேலை பாக்குற குழந்தைகளோட குடும்பம் என்ன ஆகும் ... அதனாலதானே அவங்களுக்கு வருமானமே கிடைக்குது ... அது தவிர அந்தக் குடும்பங்களுக்கு தன்னோட குழந்தைகள படிக்க வைக்கிற வசதியும் இருக்காது ... " என்றார் ராமலிங்கம்.

" வருமானம் வருதுங்குறதுக்காக நம்ம எதிர்கால இந்தியாவோட தூண்களா விளங்கப்போற குழந்தைகளோட படிப்ப கெடுக்குறதுங்குறது எந்த விதத்திலும் சரியாகாது ... குழந்தைகளுக்கு இலவசக் கல்வியக் குடுத்து, அந்தக் குடும்பங்களும் வறுமையின்றி வாழ ஏதாவது செஞ்சாகனும் ... "

" நீ சொல்றது சரிதான் ... அவங்களோட வாழ்க்கைய சீராக்குறதுக்கு என்ன பன்னலாம், நீயே சொல்லேன் ... "

" அதுக்காகத்தான் என்னோட மனசுல ரொம்ப நாளா அசை போட்டுட்டிருந்த ஒரு யோசனை ... அரசாங்கத்தையே குற்றம் சொல்லிட்டு முடங்கிப்போய் உட்கார்ந்திருக்காம, நம்மளால முடிஞ்ச எதையாவது செய்யனும்னு தோனுச்சு ... அத உன்கிட்ட சொல்லனும்னுதான் உன்ன வர சொன்னேன் ... "

" நல்லதாப்போச்சு ... சொல்லுடா ... நம்மால ஏதாவது நல்ல காரியம் பன்ன முடியும்னா, நிச்சயமா அத செய்யலாம் ... "

" நம்ம நாட்டுல இருக்குற ஒவ்வொரு குடும்பமும் தீபாவளிக்கு பட்டாசுக்காக செலவு பண்ற பணத்துல ஒரு பங்க, அந்தப் பட்டாசு தொழிற்சாலைகள்ள வேலை பாக்குற குழந்தைகளுக்கும் அந்தக் குழந்தைகளோட குடும்பங்களுக்கும் குடுக்க தானே முன் வரணும் ... அதுக்கு நம்ம ஒரு தொண்டு நிறுவனம் ஆரம்பிச்சு, அது மூலமா நம்மால முடிஞ்சத செய்யணும் ... மொதல்ல அந்தக் குழந்தைகளுக்குக் கல்வி, அப்பறம் அந்தக் குடும்பத்துல இருக்குறவங்களுக்கு சரியான வேலை வாய்ப்பு ... இத நம்ம செஞ்சதுக்கப்பறமா நம்மளோட தொண்டு நிறுவனத்த மக்கள்கிட்ட பிரபலப்படுத்தி அது மூலமா நேரடியா மக்களே அந்தக் குழந்தைகளுக்கு உதவ வழி வகை செய்யணும் ... இது மட்டும் நடந்துட்டா, அந்தக் குடும்பங்களுக்கு தினம் தினம் தீபாவளிதான் ...
மக்கள் பட்டாசுக்காக செலவு செய்யறத கொறச்சிகிட்டா, அசம்பாவிதங்களும் குறையும், குழந்தைத் தொழிலாளர் முறையும் ஒழியும் ... இதுதாண்டா என் மனசுக்குள்ள இருந்த விஷயம் ... "

" அருமையான யோசனை ... நல்ல விஷயம் ... இன்னிக்கே அதுக்கான ஏற்பாடுகளைப் பண்ண ஆரம்பிக்கலாம் ... " என்று ராமலிங்கம் சொல்ல இருவரின் முகத்திலும் ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி துளிர் விட்டிருந்தது.

ஐந்து வருடங்களுக்குப் பின் ...

எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை. சென்னை.

மாலை நேர மஞ்சள் வெயில் பொன்னைப் போல் மின்னிக் கொண்டிருந்தது. தேநீர் அருந்தியவாறே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தான் கணேஷ்.

" இந்தாங்க ... தீபாவளிப் பலகாரம் சாப்பிடுங்க ... " என்றாள் பாசத்துடன் செல்வி.

குழந்தைக்கும் இனிப்பை ஊட்டிவிட்டு, " நிலா நிலா ஓடி வா, நில்லாமல் ஓடி வா ... " என்று குழந்தைக்குப் பாடம் கற்றுத்தரத் தொடங்கினாள் செல்வி.

மயிலை ரங்கநாதன் தெரு, தியாகராய நகர். சென்னை.

புத்தாடைகளை உடுத்திக்கொண்டு வெளியே கிளம்பத் தயாரானான் மகேஷ்.

" அம்மா ... நான் எங்க ஃப்ரெண்ட்சோட மெரீனா பீச்சுக்கு போயிட்டு வரேன் ... " -

என்றபடியே விரைந்தான் மகேஷ்.

" பாத்து போயிட்டு வாடா ... " - வழியனுப்பி வைத்தாள் மகேஷின் அம்மா.

பின்னர் பூஜையறைக்குச் சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த அகல் விளக்குகளை வரிசையாக வீட்டின் முற்றத்தில் அழகாக அடுக்கி வைத்து தீபம் ஏற்றினாள்.

தொலைபேசியில் அழைப்பு மணி ஒலித்தது.

" ஹாய் ராம் ... எப்படி இருக்க ... " - அப்போலோ மருத்துவமனையிலிருந்து சீஃப் டாக்டர்.

" ஹாய் டா ... நான் நல்லா இருக்கேன் ... நீ எப்படி இருக்க ... உனக்கு என்னுடைய தீபாவளி வாழ்த்துக்கள் ... வீட்டுல எல்லாரும் எப்படி இருக்காங்க ... " - ராமலிங்கம்.

" ரொம்ப நன்றி ... விஷ் யு த சேம் ... வீட்டுல எல்லாரும் நல்லா இருக்காங்க ... " - மறுமுனையில் டாக்டர்.

" நம்மளோட முயற்சிய ஆரம்பிச்சு, இன்னியோட அஞ்சு வருசம் ஆகுது ... " - பெருமிதத்துடன் ராமலிங்கம்.

" ஆமாம் ... இப்பல்லாம் பட்டாசுகளுக்காக மக்கள் செலவு பன்ற தொகையும், பட்டாசுகளால நடக்குற விபத்துக்களும் ரொம்பவே கொறஞ்சிருக்கு ... " - டாக்டரின் குரலில் ஒரு சந்தோஷம் தெரிந்தது.

" மக்கள் கிட்ட நிச்சயமா ஒரு விழிப்புணர்வு பொறந்திருக்கு ... அதுக்கு நம்மளும் ஒரு வகையில காரணமா இருந்துருக்கோம்னு நினைக்கும்போது ரொம்ப பெருமையா இருக்குடா ... " - பெரிதாக ஏதோ ஒன்றை சாதித்த சந்தோஷத்தில் ராமலிங்கம்.

வெளியே ... புகையும், குப்பைகளுமில்லாமல், தெருவே அமைதியாகக் காணப்பட்டது. சத்தமின்றி, ரத்தமின்றி அழகாய் ஒரு தீபாவளி நடந்துகொண்டிருந்தது

நவம்பர் 2009 இதழ் 119
narayanaswamy.v.l@oracle.com

16. அவள் - ராமசந்திரன் உஷா -

தூரத்தில் லாரி ஒன்று வரும் வெளிச்சத்தைப் பார்த்ததும், அவள் தன்னை திருத்திக் கொண்டு சாலையின் விளிம்பில் வந்து நின்றாள். சிறிது வேகத்தை மட்டுப்படுத்தியவாறு வந்த வண்டி, அவளைப் பார்த்ததும் மீண்டும் வேகமெடுத்தது. லாரியின் வேகத்தோடு எதிர் காற்றில் காறி உமிழும் சத்தமும், அதனுடன் எச்சில் துளிகளும் அவள் மீது விழுந்தன. வாயில் வந்த கெட்ட வார்த்தைகளைச் சொல்லி மண்ணை வாரியிரைத்தாள்.

பசியில் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. சில நாட்களாய் வெறும் டீயும், பன்னும் தான். அதுவும் இன்று வாயில் விழவேயில்லை.

நேரம் எவ்வளவு என்று தெரியவில்லை. கிராக்கி எதுவும் மாட்டும் என்ற நம்பிக்கை அவளுக்கு சுத்தமாய் போய்விட்டது. அவளுக்கு பிறகு வந்த தேவியும், அர்ச்சனாவுக்கு ஆள் கிடைத்துவிட்டார்கள். வாயில் வந்த கெட்ட வார்த்தைகளால் உலகையே சபித்துக் கொண்டிருந்தாள் அவள். பசி வேறு காதை அடைத்தது.

கிராக்கிகள் கிடைக்காவிட்டால், அவள் கதி என்ன என்றக் கேள்வியே சில நாட்களாய் அவள் மனதில் சுற்றிக் கொண்டிருக்கிறது. பசிக்கும் வயிற்றுக்கு எதைப் போடுவது? அவளுக்கு வேறு வேலை யார் தருவார்கள், தந்தாலும் அவளுக்கு செய்ய முடியுமா? யோசனையில் இருந்தவள், அவளை அறியாமல் அரிப்பு எடுத்த இடத்தில் சொறிந்துக் கொண்டிருந்தாள். எதிரில் வந்த எவனோ ஒருவன், அதைப் பார்த்து காறி உமிழ்ந்ததும் தான், தன் செயல் புரிந்தது அவளுக்கு.

ஆயா உயிருடன் இருந்தவரை ஒரு பெண் குழந்தையை எடுத்து வளர்க்குமாறு எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். ஆனால் அவளுக்குதான் மனம் வரவில்லை. இன்னொரு பெண் ஜன்மத்தை இந்த சகதியில் தள்ள அவளுக்கு விருப்பம் இல்லாமல் போனது.

பிறகுதான் தெரிந்தது, உறவு என்று நினைத்த ஆயாவே அவளை சின்ன குழந்தையில் எங்கிருந்தோ தூக்கிக் கொண்டு வந்து வளர்க்கிறாள் என்று. அன்று கோபத்தில் ஆயாவை சுவரில் பிடித்து தள்ளிவிட்டாள். தன் தாயைப் பெற்றவள் என்றுதான் இவ்வளவு நாளாய் கதைச் சொல்லியிருக்கிறாள் கிழவி! தான் இப்படி கேடுக்கெட்ட குழியில் தள்ளப்பட்டோமே என்று அன்று முழுவதும் அழுது புலம்பினாள். மறுநாள் அவளின் ஓரே துணையான ஆயாவும் இறந்துப் போனது.

"நானும் பொண்ணுன்னு இந்த உலகத்துல!" முடிக்காமல் துக்கம் தொண்டையை

அடைத்தது.

விவரம் தெரிஞ்சதுல இருந்து எல்லாம் பார்த்து பார்த்து பழகிப் போய் விட்டது. பத்துவயதில் ஒரு கிழவன் மேல விழுந்தப் போது, பெரியதாய் ஒன்றும் பயம் வரவில்லை அவளுக்கு.

திரும்ப இன்னொரு லாரி வரும் சத்தம். தெரு விளக்கு வெளிச்சத்துக்கு அடியில் வந்து நின்றாள். உடம்பில் ஒட்டாத நைலான் சேலையால் கசகசவென்று இருந்தது. இந்த பூ ஒண்ணு! கழுத்தில் வேர்த்து ஊத்தியது. லாரியின் வெளிச்சம் அருகில் தெரிந்ததும், பரபரவென்று உடைகளை தளர்த்திக் கொண்டு எதிர்கொண்டு நின்று சைகை செய்தப் பொழுது, வேகம் குறைந்த வண்டி அவளைப் பார்த்ததும் மீண்டும் வேகம் எடுத்தது.

இனியும் காத்திருந்து பயனில்லை என்பது அவளுக்கு தெளிவாய் தெரிந்தது. மணி எவ்வளவு ஆயிற்று என்று யோசிக்கும்பொழுது, அந்தப் பக்கமாய் வந்த தேவி, " இன்னாக்கா? இன்னுமா நின்னுனுகீரே?" என்றவளிடம் காசு ஏதாவது இருக்குமா என்று தயக்கமாய் கேட்டதும் அவள் இல்லை என்பதுப் போல தலையை ஆட்டினாள்.

"போன வாரம் பித்தள தேசா ஒண்ணும் உன்னாண்ட ஈடு வெச்சி பத்து ரூபா வாங்கினேனே, அத்த நீயே வெச்சிக்கோ, அம்பது ரூபா இருந்தா கொடு தேவி" என்றுக் கேட்டவளிடம், " அம்பது ரூபா தாளாது. இந்த முப்பது ரூபா வெச்சிக்கோ. அப்ப வாங்கினது பத்து, இப்ப முப்பது. மொத்தம் நாப்பது ரூபா. கணக்கு சரியாயிடுச்சு" என்றவள். ஜாக்கெட்டில் இருந்து, ரூபாய் தாள்களை எடுத்து அவளிடம் நீட்டியவள், " மொதல்ல எதுனாச்சும் வாங்கி துன்னு" என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினாள்.

பத்து நாளாய் முற்றிலும் கிராக்கி நின்றுப் போனது. ஆறு மாசம் முன்னால, அந்த மஞ்ச சட்டக்காரன், வந்துபோனதில் இருந்து, இந்த அரிப்பு. மெடிகல் ஷாப்ல இருந்து மருந்து வாங்கி சாப்பிட்டும், இன்னும் அதிகமாயிற்றே தவிர குறையவில்லை. மெடிக்கல் ஷாப்புக்காரன் அவளைப் பார்த்தாலே துரத்த ஆரம்பித்தான்.

இன்னைக்கு தான் தேவி சொன்னாள், முகம் முழுவதும் தடித்து இருக்குறது என்று. திரும்ப, திரும்ப என்ன செய்வது என்று பயத்தில் அவளுக்கு அழுகைதான் வந்தது. தெரு விளக்கு முற்றிலும் அணைந்துப் போனது. இருட்டில் உட்கார்ந்தவள், அடுத்து என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

என்ன தோணியதோ, மடமடவென்று எழுந்து கடை வீதியை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். கொக்கியில் எந்த மீன் சிக்குமோ என்ற எண்ணம் பார்வையில் தெரிய, நடப்பதே அவள்

வழக்கமாய் இருந்தது. ஆனால் இன்று யாரையும் நிமிர்ந்தும் பார்க்காமல் அவள் நடந்தாள்.

பாண்டியன் கடைக்கு சென்று இரண்டு தோசையும் தின்று பசிதீயைக் குறைத்தாள். சூடான டீயை வாயில் ஊற்றிக் கொண்டதும்தான் பார்வை தெளிவானது. பழைய பாக்கியையும், இன்று தின்றதற்கு கணக்கு தீர்த்துவிட்டு, மிச்சமிருந்த சில்லறையில் இரண்டு தயிர் பாக்கெட்டும், ஊறுகாயும் கேட்டதும், " எந்த கபோதி மாட்டினான் உன்னாண்ட? பணம் பொறளுது?" என்று நக்கல் அடித்தவாறு அவள் கேட்டதைக் கொடுத்தான் பாண்டி.

செல்லும் வழியில் புதராய் மண்டியிருந்த தங்கரளி செடியைப் பார்த்ததும் அப்படியே நின்றாள். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு சட்டென்று நாலு கொத்து அரளி காய்களை பறித்து மடியில் கட்டிக் கொண்டாள். ஓலை குடிசையின் கதவை சாத்தியவள், சிம்னி வெளிச்சத்தில் அரளி விதையை நன்றாக அரைத்தாள்.

அரைத்ததை எடுத்து இரண்டு பாக்கெட் தயிரை விட்டு நன்றாகக் கலக்கினாள். அண்ணாந்து வாயில் விடும் பொழுது, அவள் கண்கள் கலங்கிவிட்டது. அப்படியே கீழே வைத்துவிட்டு, சுவற்றில் ஒட்டி வைத்திருந்த சாமி படங்களுக்கு அருகில் சென்று உற்றுப் பார்த்தாள். கண்ணில் நீர் நிறைந்திருந்ததால், படங்கள் மங்கலாய் தெரிந்தன.

"ஏஞ்சாமி! போன பொறப்புல என்னா பாவம் செஞ்சேன்? ஏந் இந்த ஈனப் பொழைப்பு? இப்படி ஆம்பிளைங்களால பொம்பளைங்க அசிங்கப்படணும்னு ஏன் சாமி படச்சே?" என்று திரும்ப, திரும்ப கேட்டவாறு சுவற்றில் முட்டிக் கொண்டாள். சில நிமிடங்களுக்கு பின்பு அப்படியே தரையில் சரிந்து அமர்ந்தாள்.

சுற்றும் முற்றும் பார்த்தாள். செத்து தொலையலாம் என்று தீர்மானமாயிற்று, ஆனால் இந்த அசிங்கம் பிடித்த இடம் வேண்டாம். செத்துப் போய் அழுகி நாறிப் போனால்தான் பிறருக்கு தெரியவரும். வேலு தோட்டத்துக்குப் போய் அந்த கிழவனுடன் பேசிவிட்டு சாகலாம் என்று முடிவெடுத்தவள், கும்பாவை புடைவை முந்தானியில் மறைத்துக் கொண்டு தோட்டத்தைப் பார்த்து நடந்தாள்.

வேலு பண்ணையாரின் தோட்டத்திற்கு யாரும் வர அஞ்சுவார்கள். காவல்கார கிழவன் ஆயாவின் பழைய கிராக்கி, வயசானதும் எப்பொழுதாவது வீட்டுக்கு வந்து சும்மா பேசிவிட்டுப் போகும். அவளுக்கு பொழுதுப் போகவில்லை என்றால் தோட்டத்துக்குப் போய் வருவாள். நிலா வெளிச்சத்தில், குளுகுளுவென சுகமாய் இருக்கும். கிழவனும் ஏதாவது பழைய கதை, சாமி கதை சொல்லும்.

தோட்டத்து வாசல் பக்கத்தில் இருந்த குடிசையில் யாரையும் காணோம். மணி அவளின் காலடி ஓசையைக் கேட்டதும் தலையை தூக்கிப் பார்த்துவிட்டு, மீண்டும் கண்ணை மூடிக் கொண்டது. மோட்டார் ரூமில் போய் பார்க்கலாம் என்று நடக்கும் பொழுது பேச்சு சத்தம் கேட்டது. பண்ணையாரா? பார்த்தால் தொலைச்சி புடுவாரே? பயந்துப் போய் அங்கு அடர்ந்து பரவியிருந்த ஆலமரத்தில் விழுதுகளில் தன்னை மறைத்துக் கொண்டு மெதுவாய் எட்டிப் பார்த்தால் கயிற்றுக் கட்டிலில் கிழவனின் மகன் சாமியும் அவன் புதுசாய் கல்யாணம் கட்டிய சுகந்தியும்!

கிழவனிடம் சாமி கதைக் கேட்டு சாகும்பொழுதாவது புண்ணியம் தேடிக்கொள்ளலாம் என்று நினைப்பில் மண் விழுந்ததே என்று அவள் கண்கள் கலங்கின. திரும்பிப் போகவும் மனமும், உடலும் ஒத்துழைக்கவில்லை. யாராவது பார்த்தாலும் பிரச்சனையாகிவிடும் என்ற பயத்தில் கடவுளை மனதில் நினைத்தவாறு, ஊறுகாயாயை நாக்கில் தடவிக் கொண்டு கும்பாவில் இருந்ததை மடக் மடக் என்றுக் குடித்தாள். குடல் ஏற்றுக் கொள்ள மறுத்து வெளியே தள்ளப்பார்த்தது. ஆனால் எலுமிச்சை ஊறுகாய் பலத்தில் அதை உள்ளே தள்ளினாள். புளிப்பும், கசப்பும், துவர்ப்புமாய் இருந்தது.

ஆலமர விழுதுகள் நன்கு அடர்த்தியாய், அருகே அருகே வளர்ந்து நிலா வெளிச்சம் உள்ளே புக முடியாமல் இருண்டு இருந்தது.அடி மரத்தின் பொந்தில் நன்றாக மறைத்துக் கொண்டு, சௌகரியமாய் சாய்ந்து உட்கார்ந்துக் கொண்டாள்.

"யாராவது வந்துடரப்போறாங்க மாமா" என்று சுகந்தி சிணுங்க, " கெழவன் பண்ணையாரோடு பாண்டிசேரி போயிருக்கு. யார் வந்தாலும் மணி கொரல் கொடுக்கும். எத்தினி நாள் ஆசை தெரியுமா? இந்தமாதிரி நிலா வெளிச்சத்துல, கயித்து கட்டிலுல... " என்றுச் சொல்லிவிட்டு "நிலா காயுது, நேரம் நல்ல நேரம்" என்று பாட ஆரம்பித்தான். மனைவியைக் கொஞ்சும் கணவனின் செய்கைகள் அவளுக்கு புதியதாதலால் தன்னையறியாமல் பார்க்க ஆரம்பித்தாள். எப்பொழுதோ பார்த்த பயாஸ்கோப் படங்களின் செயற்கைதனமும், அவள் இதுநாள் வரைக் கண்ட இயந்திர தனமான ஆண், பெண் உறவில்லாமல், கணவன் மனைவியைக் கொஞ்சும் அழகு அவளுக்கு புதுமையாய் இருந்தது.

அரளி விதை தன் சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்தது. அவளுக்கு வயிற்றைப் புரட்டியது. வாந்தி வரும் போல இருந்தது, ஆனால் வரவில்லை.

"எனக்கு வெக்கமாய் இருக்கு மாமா" என்று சுகந்தி கெஞ்ச, " கட்டின புருஷன்கிட்ட இன்னாடி வெக்கம்" என்று அவளை முத்தமிட தொடங்கினான். கால் விரலில் இருந்து அவன் முத்தமிடுவதைப் பார்க்க ஆச்சரியமாய் இருந்தது அவளுக்கு. சுகந்தியும்

அரை கண் மூடி அப்படியே லயிக்க, அவன் விரல்கள் சுகந்தியின் உடலெங்கும் விளையாட ஆரம்பித்தது. பார்க்க பார்க்க அவளுக்கு இப்படிக்கூட உண்டா என்று ஆச்சரியமாய் இருந்தது.

வயிறு பயங்கரமாய் வலிக்க ஆரம்பித்தது. மூக்கில் இருந்து நீரும், வாயில் இருந்து நுரையும் வழிய ஆரம்பித்தது. பல்லைக் கடித்துக் கொண்டு புதரில் சாய்ந்துக் கொண்டாள். லேசாய் மயக்கம் வந்தது.

அவள் கண் முன்னால் காயும் நிலா வெளிச்சத்தில் உடைகள் மூடியும், மூடாத அழகிய இளமையான உடல்கள், காணும் காட்சிகள், முயக்கத்தில் இணைந்த அவர்களின் இன்ப முணங்கல்கள், அந்த இயற்கையின் அற்புதமான கூடலின் கிளுகிளு இன்பம் இங்கு இவள் உடல் எல்லாம் பரவியது.

அப்பொழுது முழுவதும் பார்க்க முடியாமல் அவள் கண்கள் மூடின. ஆணும் பெண்ணும் கூடுவது இவ்வளவு அழகா என்ற நினைப்பில் முழுமையாய் மயக்கம் அவளை தழுவும்பொழுது, உதட்டில் இன்ப புன்னகை அப்படியே உறைந்துப் போனது.

ramachandranusha@rediffmail.com
யூன் 2005 இதழ் 66

17. கொள்ளை! - சாயிதாசன் -

ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டதும்,.அந்த வீட்டினுள் இருந்தவர்கள் உற்சாகத்துடன் வாசலுக்கு விரைந்தனர். சந்தேகமில்லை, ஆட்டோவில் இருந்து இறங்கியது சாக்ஷ¡த் சாரியேதான். நீண்ட நாட்கள் 'ஆடிட்' டூரை முடித்துக்கொண்டு சென்னை திரும்பி இருக்கிறான்.ஒரே நொடியில் ஆட்டோவிலிருந்த ஹாண்ட்பேக்குகளையும் சூட்கேஸ்களையும் தூக்கமுடியாமல் தூக்கிச்சென்றுசென்று வீட்டு ஹாலில் சேர்த்தார்கள் அவன் குடும்பத்தினர். ஒவ்வொரு முறை அவன் சென்னை திரும்பி வரும்போதும் வீடே திமிலோகப்படும். போர் முனையில் வெற்றிகண்டு ஊர் திரும்பும் ஒரு போர் வீரனுக்குக் கிடைப்பதைப்போல் பிரமாதமான வரவேற்பும் உபசாரமுமாக அமர்க்களப்படும். அதே சமயம் எல்லாருடைய மனமும் ஆவலால் பரபரக்கும்.. கஸ்டம்ஸ் அதிகாரிகளைப் போல --லக்கேஜ்களுக்குள் என்னென்ன பொருள்கள் ஒளிந்துகொண்டிருக்கின்றன என்று அறிந்து கொள்ளத் துடிப்பார்கள்.

அன்றும் வழக்கம் போல் இதே தான் நடந்தது.

'சாரி' என்று நெருங்கிய வட்டாரத்தில் அழைக்கப்பட்ட ரங்காச்சாரி ஒரு பிரபல நிறுவனத்தின் ஆடிட் டிபார்ட்மெண்டில் ஆபீஸர் பதவி வகித்து வந்தான். அந்த நிறுவனத்திற்கு இந்தியா முழுவதும் பல கிளை அலுவலகங்கள் இருந்தன.அதனால் மாதத்தில்
குறைந்தது இருபது நாட்களாவது அவன் வெளியூர்களில் டூரில் இருப்பது சர்வசாதாரணமாகிவிட்டது.

ஆரம்ப காலத்தில் சாரியால் இந்த மாற்றத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறியது உண்மைதான். . அடிக்கடி தொடர்ந்து பயணம் செய்வதும், குடும்பத்தைப் பிரிந்து நீண்ட நாட்கள் வெளியில் இருப்பதும், வெவ்வேறு ஊர்களில் கண்டகண்ட இடங்களில் சாப்பிடுவதும் அவனுக்குப் பழக்கமில்லாத, முற்றிலும் பிடிக்காத அனுபவங்கள். "தெரியாத்தனமாக இங்கே வந்து மாட்டிக்கொண்டு விட்டோமே, மன அமைதியையும் சந்தோஷத்தையும் பறி கொடுத்துத் தவிக்கிறோமே" என்று கவலைப்பட்ட நாட்கள் கூட உண்டு, ஆனால் அதெல்லாம் பழைய கதை.

இப்போது?சொல்லவே தேவையில்லை. நிலைமையே தலை கீழாக மாறிவிட்டது. சாரி ருசி கண்ட பூனையாக மாறி¢விட்டான் எந்தக் காரணத்த்ற்கும் அவன் அந்த டிபார்ட்மெண்டை விட்டு நகரத் தயாரில்லை. விடாப்பிடியாக.இதே டிபார்ட்மெண்டில் தொடர அவன் தீவிரமாக முயன்றதற்கு விசேஷ காரணங்கள் உண்டு.. .எப்போதுமே இந்த ஒரு டிபார்ட்மெண்டுக்கு மட்டும் தனி கௌரவமும் அந்தஸ்தும் உண்டு என்பது மட்டுமல்ல. இங்கு பணி புரிவதில் எக்கச்சக்க சலுகைகளும் , அளவிட்டுச்

சொல்ல முடியாத உபரி லாபங்களும் இருந்தன என்பதுதான் மற்றொரு ரகசியக் காரணம்.

ஆடிட்குழு என்றாலே கிளை அதிகாரிகளுக்குச் சிம்ம சொப்பனம்தான். அவர்களைக் கண்டாலே உயிரை எடுக்க வரும் யம கிங்கரர்களைக் கண்டுவிட்டது போல் ஒரு பயம், நடுக்கம். நிர்வாகக்குளறுபடிகளையும் நிதிவிஷயங்களில் குறைபாடுகளையும் தவறுகளையும் துருவித் துருவிக் கண்டு கொள்ளக்கூடிய கழுகுக்கண்கள் படைத்த எமகாதகர்களாயிற்றே! தப்பித் தவறி அவர்களிடம் எசகு பிசகாக மாட்டிக் கொண்டு விட்டால் போதும். நொந்து நூலாகி விட வேண்டியதுதான். மேலதிகாரிகளிடமிருந்து செம்மையான டோஸ் கிடைப்பது ஒரு புறம். மற்றொறு புறம் கான்பிடென்ஷியல் ரிபோர்ட்டில் தாறுமாறாக ரிமார்க்குகள் ஏறிவிடும்., இதன் விளைவாக இன்கிரிமெண்ட் கட், பிரமோஷன் தடைப்படல், தண்ணிஉயில்லாக்காட்டுக்கு மாற்றல் -- இப்படிப்பட்ட ஏதேனுமொறு விபரீத தண்டனையை ந்¢ச்சயமாக எதிர் கொள்ள நேரிடும்.

இந்த இடத்தில் மற்றோரு விஷயத்தையும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

கிளை அலுவலக நிர்வாகிகளையும் அலுவலர்களையும் பரிதாபத்திற்குரிய அப்பாவிகளாக நினைத்து விட வேண்டாம். அங்கிருந்த சிலர் ஆடிட்டர்களுக்குச் சற்றும் சளைத்தவர்களில்லை. ஆடிட்டுக்காக வந்திருப்பவர்களின் 'வீக்' பாயின்ட்களைத் துல்லியமாக துப்பறிந்து அறிவதில் அசகாய சூரர்கள்.. அந்த பலவீனங்களை வைத்தே அவர்களைத் தங்கள் பக்கம் ஈர்க்க எடுக்கும் முயற்சிகளில் அவர்கள் சாணக்கியத்தனம் பிரமாதமாக வெளிப்படும்..இந்த ஆடிட் அசுரர்களிடமிருந்து காயப்படாமல் தப்புவதற்காக மூளையைக் குடைந்து சில வியூகங்களையும் உபாயங்களையும் தந்திரங்களையும்-- இதே நிலையிலிருக்கும் மற்றவர்களும் பயனடையும் வகையில்-- கண்டுபிடித்துள்ளது சரித்திர முக்கியத்துவம் பெற்ற ஒரு நிகழ்ச்சி. வி.ஐ.பி விருந்தாளிகளைப் போல முகம் கோணாமல் அவர்களைத் தகுந்த முறையில் கவனித்து, உபசரித்து திருப்தி செய்து சரிக்கட்டுவதன் மூலம் சிக்கல்களையும் ஆபத்துககளையும் ஓரளவாவது தவிர்க்கலாம் என்பது பாரம்பரியமாக அவர்கள் கற்றுக் கொண்ட பாலபாடம்.

இதையே தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டுஆதாயம் பெற்றுப் பிழைக்கும் சில அதிசய ஜென்மங்கள் ஆடிட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். நம் கதையின் நாயகன் ரங்காச்சாரி இந்த வித்தையில் கரைகண்டவன்.

எல்லாரும் சாப்பிட்டு முடித்ததும், ஊரிலிருந்து வந்த லக்கேஜ்கள் பிரிக்கப்பட்டன. ஆவல் மேலிட சாரியின் மனைவியும், குழந்தைகளும் அவனைச் சூழ்ந்துகொண்டனர்.-- தெரு செப்பிடுவித்தைக்காரனைச் சுற்றி எதிர்பார்ப்புடன் ஒரு கும்பல் சூழ்ந்திருக்குமே அதே போல.

சாரி முதலில் பெட்டியிலிருந்து ஒரு கண்ணைக்கவரும் பட்டுப்புடவையை எடுத்து மனைவி மைதிலியிடம் நீட்டினான்.

"ரொம்பக் காஸ்ட்லியான புடவை, தர்மாவரம் பட்டாம், உன் கலருக்கு எடுப்பாஇருக்கும்" -- அவன் பார்வையில் நீண்ட நாள் பிரிவின் வேட்கை அப்பட்டமாகத் தெரிந்தது.

"இவ்வளவு விலை கொடுத்து எனக்கெதுக்கு இந்தப் புடைவை? காஸ்ட்லின்னா விலை எவ்வளவு?"

"யாருக்குத்தெரியும்? அந்த பிராஞ்ச் மானேஜர் அவனுக்குத் தெரிஞ்ச கடையிலே வங்கிக்குடுத்தான். பணத்தை குடுத்தே தீருவேன்னேன். கடைசி வரையில் வாங்கிக்கவே மாட்டேன்னுட்டான். வற்புறுத்தாமெ விட்டுட்டேன்'"

அடுத்த படியாக ஒரு முத்து மாலை, நிறைய கண்ணாடி வளையல்கள்.

"காயத்ரி, இது உனக்கு. ஹைதராபாத்திலே செயற்கை முத்தும், கண்ணாடி வளையல்களும் விசேஷம்னு என்கூட வந்த ஆபீசர் வாங்கி என் தலையிலே கட்டிட்டான்"

"£நீ£ங்க அவருக்குப் பணம் குடுத்தீ£ங்களா?' ஆச்சரியத்துடன் கேட்டாள் காயத்ரி, அவன் மகள்.

"சரிதான், நான் என்ன இளிச்சவயனா பணம் தர. மரியாதைக்காக குடுக்கறாப்லே பாவ்லா காட்டிட்டு அவன் வேண்டாம்னவுடனே பேசாமெ இருந்திட்டேன்"

அடுத்ததாக பெட்டியிலிருந்து வெளியில் வந்தது ஒரு பெரிய பொட்டலம்;

" தென் ஆற்காடு ஜில்லாவிலே வேர்க்கடலை பிரசித்தம். இதுலே எட்டுகிலோ இருக்கு. இதுவும் ஓசிதான்"

இதே போலத்தான் ஒவ்வொரு ஐட்டமாக பெட்டிகளிலிருந்து வெளியே வந்தது.-- ஸ்வீட் பாக்கெட்கள், , அழகிய வேலைப்பாடு கொண்ட பாய்கள், பெட்ஷீட்கள், ஜமுக்காளங்கள்,.கலைவண்ணப் பொருள்கள்,பொம்மைகள்--மதுரை மல்லிகை, திருநெல்வேலி ஹல்வா, பண்ருட்டி பலாப்பழம், விஜயவாடாவிலிருந்து கூடைபங்கனபள்ளி மாம்பழம் -- இப்படி விதம் விதமாக.

"ஏம்ப்பா,எனக்கு ஏதும் கிடையாதா? என்னைதான் எப்பவும் நீங்க மறந்திடுவீங்க"-- என்றான் அவர் மகன் கண்ணன், பொய்க் கோபத்தோடு.

"ஏண்டா, உன்னை மறப்பேனா? உன் விஷயங்கள்தான் எனக்குக் கொஞ்சமும் சிரமம் வைக்கலை. கடை கண்ணின்னு அலையாமே எல்லாம் ஆபீஸ்லேயே கிடைச்சுட்டது. அந்தப் பையிலே இருக்கிறது எல்லாம் உனக்குத்தான், ஜாக்கிரதையா யூஸ் பண்ணு. இனிமே சும்மா என்னை நச்சரிக்கக்கூடாது"

காலேஜில் படிக்கும் கண்ணன், சந்தோஷத்துடன் அந்தப்பையைத் திறந்து கீழே கவிழ்த்தான். அதிலிருந்து ஒரு ஸ்டேஷனரிக் கடையே வெளியில் குதித்தது--பல ரகப் பென்சில்கள், விதவிதமான பால்பாயின்ட் பேனாக்கள், பைல்கள்,கம்ப்யூட்டர் பேப்பர்,ரப்பர் பேண்ட், ஜெம்க்ள¢ப், குண்டூசி, ஸ்டேப்பிளர், மெமோ பேட்கள் --இவை நாலாப்புறமும் சிதறின.

அன்று இரவு மைதிலி கணவனிடம் கேட்டாள்

"ஏங்க, நீங்களும் ஏழெட்டு வருஷமா இந்த ஆடிட் டிபார்ட்மென்டிலே குப்பை கொட்டிகிட்டிருக்கிறீங்க. மாசத்திலே இருபது நாளாவது வெளியூர்லே தங்கிடறீங்க..வேலை முடிஞ்சு ஆய்ஞ்சு ஒய்ஞ்சு திரும்பி வரீங்க,. வீட்டு விஷயங்களை சரிவரக் கவனிக்க முடியறதில்லை. இப்படி ஓயாமெ உழைச்சா உங்க உடம்பு என்னத்துக்கு ஆகும்? பேசாமெ, 'இனிமெ ஆடிட்டே வேண்டாம். உள்ளூர் ஆபீஸ்லெயே ஒர்க் பண்றேன்'னு எழுதிக் குடுத்திடுங்களேன்" என்றாள் அக்கறையோடும் .பரிவோடும்.

அவள் எதோ சொல்லக்கூடாததைச் சொல்லிவிட்டது போல் சாரி ஆத்திரமடைந்தான்.

" என்னடி உளர்றே நீ ?. இந்த டிபார்மென்ட்லே இருக்கற வரைதான் நமக்கு ராஜபோகமான வாழ்க்கை. முதல்லே அதை நல்லாப் புரிஞ்சிக்கோ.எப்படியாவது இந்த டிபர்ட்மெண்டிலே நுழைஞ்சிடனும்னு எத்தனை பேரு தலைகீழா நிக்கறாங்க தெரியுமா உனக்கு? கொஞ்சம் நிதானமாயோசிச்சுப் பாரு. இந்த எட்டு வருஷத்திலே இந்தியாவிலே இருக்கிற சுற்றுலா ஸ்தலங்கள், பிரசித்தியான கோவில்கள், கோடைவாசஸ்தலங்கள் எல்லாத்தையும் கைப்பணம் செலவில்லாமெ பார்த்துட்டேன். அனேகமா போன எல்லா இடங்களிலேயும் போட்டி போட்டுக்கொண்டு எங்களுக்கு ஆபீஸ் ஸ்டா·ப் வீடுகளிலேயே தடபுடலா விருந்துச் சாப்பாடு கிடைச்சுடுது. ஊர் சுத்திப்பார்க்க மானேஜர் காருடன் வந்திடுவார். .ஆடிட் ஆபீஸர் கண்ணசைச்சாப் போதும். எதுவாயிருந்தாலும் தவறாமே கிடைச்சுடும். .. முக்கால் வாசி¢ இடங்களிலே ஓசிக்காரிலெ சுத்தினாக்கூட முதல் வகுப்பு ரயில் கட்டணம் 'க்ளெயிம்' பண்ணி வாங்கிடறோம். சுருக்கமாச் சொன்னா, இங்கேயிருந்து கிளம்பினதுக்கப்புறம், வீடு திரும்ப ரயிலேர்ற வரையிலெநான் என் பர்ஸைத் திறந்ததே இல்லை. கணக்குப் பார்த்ததிலே ஒவ்வொரு டிரிப்புக்கும் அட்லீஸ்ட் நாலாயிரம் ரூபாயாவது எக்ஸ்டிராவாக் கிடைக்குதுனு

தெரியுது. இதை எந்த மடையனாவது விடுவானா?"

"ஏங்க இதெல்லாம் தப்புன்னு உங்க மனசுலே கொஞ்சம் கூட உறுத்தாதா?"--நீண்ட நாட்களய் மனதை நெருடிக்கொண்டிருந்த கொண்டிருந்த சந்தேகத்தை ப்ளிச்சென்று ஒரு கேள்விக்கணையாய் வீசினாள் மைதிலி.

"போடி பைத்தியம், இதிலே நீ பயந்து சாகறப்பிலே பெரிய தப்பு ஒண்ணும் இருக்கறதா எனக்குத் தோணலை.. தெய்வம் கூரையைப் பிச்சிகிட்டுத் தராமெ, எனக்கு ஆடிட் வேலை மூலமாத் தருதுன்னு வச்சுக்கோயேன். சந்தர்ப்பம் வாய்க்கறப்போ அதை நல்லாப் பயன்படுத்திக்கிறது தான் புத்திசாலித்தனம். தெரியாமலேயா சொன்னாங்க அந்த காலத்துப் பெரியவங்க-- "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ன்னு". இங்கிலீஷ்காரன் இன்னும் பிரமாதமாச் சொல்லியிருக்காகான்-"ஆப்பர்சூனிடி நாக்ஸ் அட் யுவர் டோர் ஒன்லி ஒன்ஸ்"னு"

..எந்த விஷயத்திலும் இப்படி அடவடியாகவும் எதிர்மறையாகவும் பேசும் கணவனின் விதண்ட வாதத்தை மைதிலியின் மனம் ஏற்க மறுத்தது

ஒரு வருஷம் உருண்டோடியது.

சாரி அலுவலக விடுமுறை பயணச் சலுகையை உபயோகித்து வடக்கே உள்ள பிரசித்தி பெற்ற சுற்றுலா ஸ்தலங்கள்,புண்ய ஷேத்திரங்கள், மலைவாசஸ்தலஙகள் இவற்றிற்குக் குடும்பத்தோடு செல்லத் திட்டமிட்டிருந்தான். மேற்படி இடங்களில் உள்ள கிளை அலுவலக அதிகாரிகள் அவன் குடும்பத்தோடு தங்குவதற்கும், சாப்பாட்டிற்கும் தகுந்த ஏற்பாடுகளைச்செய்து தருவதாகவும், அருகில் உள்ள இடங்களைச் சுற்றிப்பார்க்கத் தங்கள் கார்களையும், டிரைவரையும் அனுப்பி உதவுவதாகவும் வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். அதுவே அவன் தெம்புடன் இந்தத்திடீர் பயணத்தை மேற்கொள்ள ஊக்கத்தை அளித்தது.

ஆபீஸ்லோனில் அவன் கட்டிய வீடு வலசரவாக்கத்தில் இருந்தது. சுற்றுப்பயணம் முடிந்து சென்னை திரும்ப குறைந்தது ஒரு மாதமாக ஆகும் என்பதால், சாவியை அடுத்த தெருவில் வசித்தஅவர் நண்பன் ரமணியிடம் கொடுத்து அவ்வப்போது போய் வீட்டைக் கவனித்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

டெல்லிக்குச்சென்று இரண்டு நாட்கள் குடும்பத்திற்கு ஊர் சுற்றிக்காண்பித்தான்.மூன்றாவது இரவு அலைச்சலால் களைத்துப்போய், சீக்கிரமே படுக்கச்சென்றுவிட்டார்கள்.

ஆழ்ந்து நித்திரையில் இருந்தபோது, செல்போன் அலரறியது.

எதிர் முனையில் மிகுந்த பதட்டத்துடன் பேசியது ரமணிதான்.

"நேத்து ராத்திரி ஒரு அசந்தர்ப்பத்தினாலே நான் உங்க வீட்லே படுத்துக்க முடியலை. காத்தாலே போய் பார்த்தப்போ திருடங்க புகுந்து, வீட்லே இருந்ததையெல்லாம் கொள்ளை அடிச்சிகிட்டுப் போயிருக்கானுங்க. போலீஸ்லே ரிபோர்ட் பண்ணியிருக்கோம். நீ உடனே கிளம்பி வா."

சாரியின் தலையில் பேரிடியாக விழுந்தது இந்தச் செய்தி. அவன் அடைந்த அதிர்ச்சி வார்த்தைகளில் அடங்காது. பித்துப் பிடித்தவன் போல் செய்வதறியாது திகைத்தான். முடிவில் வேறு வழியின்றி ஆழ்ந்த வருத்ததோடும் பதட்டத்தோடும் குடும்பத்தை அழைத்துக்கொண்டு சென்னை திரும்பினான்.

வீட்டில் அவன் கண்ட காட்சி அவன் ரத்தத்தை உறைய வைத்தது.

.வீடே தலை கீழாகப் புரட்டிப் போடப்பட்டிருந்தது. கதவுகள் தாறுமாறாக உடைக்கப்பட்டிருந்தன. துணிகளும் தட்டுமுட்டு சாமான்களும் வீடெங்கும் சிதறிக்கிடந்தன. பீரோக்கள்,அலமாரிகள் எல்லாம் பரக்கத் திறந்து காலியாகக் காட்சியளித்தன.. அவற்றில் இருந்த பணம், நகைகள், பட்டுச் சேலைகள், வெள்ளிச்சாமான்கள் எல்லாம் களவாடப்பட்டிருந்தன.வீட்டின் ஹாலில் இருந்த டூஇன் ஒன், கம்ப்யூட்டர், கலர் டி,வி இவை எல்லாம் கூடக் காணப்படவில்லை.. விலை மதிப்புடிடைய பொருள் ஒன்று கூட திருடர்கள் பார்வையிலே இருந்து தப்பவில்லை.
அதைவிட வேடிக்கையான விஷயம் என்னவென்றால், வந்திருந்த திருட்டுக் கும்பல் ப்ரிட்ஜைத் திறந்து அதிலிருந்த ரொட்டி, வெண்ணை, பிஸ்கட்,கூல்டிரிங்குகள் இவைகளைக் கூட விட மனமின்றி ஆற அமர ரசித்து, ருசித்து, சாப்பிட்டு காலி செய்திருக்கிறார்கள்!..

.திருட்டுப்போன பொருள்களின் மொத்த மதிப்பு பல லட்சங்களை எட்டியது. தன் இழப்புகளை நினைத்து சாரி துடித்துப்போனான். அவனுக்குத் தலை சுற்றியது..நினைக்க நினைக்க நெஞ்சு வேகமாகப் படபடத்தது. வாழ்க்கையின் மீதே விவரிக்கமுடியாத வெறுப்புத் தோன்றியது

அப்போது போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜ் வந்தார், அவனிடம் சில விசாரணைகள் செய்வதற்கு.

அவரை கண்டதுமே சாரி உணர்ச்ச ¢வசப்பட்டுப் போனான்..அடக்கி வைத்திருந்த ஆத்திரம், கோபம் எல்லாவற்றையும் வார்த்தைகளாகக் கொட்டினான் படபடப்போடு.

" பார்த்தீங்களா சார், இந்த அக்கிரமத்தை? நெஞ்சே வெடிச்சிடும் போல இருக்கு. காலம் இப்படியா கெட்டு குட்டிச்சுவராப் போகணும்? நியாயத்திற்கும் நேர்மைக்கும் இங்கே சுத்தமா இடமே இல்லாமப் போயிடுச்சேன்னு ரொம்ப வருத்தமாயிருக்கு..தனி மனுஷனோட சொத்துக்களுக்குக் கொஞ்சமும் பாதுக்காப்பே இல்லை. பயந்து பயந்து வாழ வேண்டிய பரிதாப நிலை ஜனங்களுக்கு. பிறத்தியான் உழைச்சு சம்பாதிச்சு சேர்த்ததை எல்லாம் இப்படி உடம்பை அலட்டிக்காம சுலபமாத் திருடிக்கிட்டுப் போறாங்களே, என்ன அல்ப புத்தி சார் இது?. உருப்படுவானுங்களா இவங்க? நாமெ பண்றது சரியில்லேன்னு இவங்களுக்குக் கொஞ்சம்கூட உறைக்காதா? நாமே கஷ்டப்பட்டு உழைச்சுச் சம்பாதிச்ச பணத்திலே வாங்கற பொருள்களைத் தவிர, மற்ற எதையும் எடுத்துக்க நினைக்கிறது மகா பாவச்செயல்னு இவங்க மண்டையிலே ஏறாதா? திருட்டுக்கொடுத்தவங்க படற கஷ்டத்தையும் அவஸ்தையையும் இவங்க ஒரு நிமிஷம் கூட நினைச்சுப் பார்க்க மாட்டாங்களா?சோ¡ம்பேறித்தனமாப் பிறத்தியாருடைய பொருள்களைக் களவாடி உல்லாச வாழ்க்கை நடத்தற இந்த அயோக்யனுங்களுக்கெல்லாம் சட்டம் தர்ற தண்டனை கொஞ்சம் கூடப் போதாது,ஸார். ஏன்னா ஜெயிலுக்குப்போயிட்டு வந்தாக் கூட திருந்தறதில்லயே இவங்க? கொஞ்சமும் பயமில்லாம அதே தொழிலைத்தானே திரும்பவும் செய்யறானுங்க. இதுக்கு நல்ல ஒரு தண்டனை என்ன தெரியுமா ? சில நாடுகளிலே செய்யறாப்பிலே திருடறதுக்கு அவங்க உபயோகிச்ச கைக¨ளை ஈவிரக்கமில்லாமெ கம்ப்ளீட்டா வெட்டி எடுத்துடணும்.... அப்போதான் அராஜகம் பண்ற இவங்களுக்குப் புத்தி வரும்.."---..ஆவேசமாக இதே பாணியில் பேசிக்கொண்டேபோனான்.சாரி.

அருகிலிருந்து உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்த மைதிலி அடக்கமுடியாமல் "கொல்'லென்று சிரித்து விட்டாள் கோபத்தோடு அவளைப் பார்த்து முறைத்தான் சாரி. காரணம் புரியாமல் போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களிருவரையும் மாறிமாறிப் பார்த்து விழித்தார்!

gurusubra@vsnl.net
யூன் 2005 இதழ் 66

18. முகதரிசனம்! - குமரவேலன் -

ராகவனுக்கு சென்ற சில நாட்களாகவே தொடர்ந்து அந்தக் கவலை மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

அவனுடைய ஒரே மகன் விக்ரமைப் பற்றி அவன் மனைவி காதில் போட்ட அந்த செய்திதான் அதற்குக் காரணம்.

கடந்த சில நாட்களாக விக்ரம் ,டி.வி.யில் எப்படியாவது ஒரு புரோக்ராமில் தலை காட்டி நடித்துவிட வேண்டும் என்று தீவிர ஆர்வத்துடன் இருப்பதாகவும், தினம் இதைப் பற்றியே சதா புலம்பிக் கொண்டிருப்பதாகவும் கூறி வருத்தப்பட்டாள் அவன் மனைவி ராஜி. இரவு தூக்கத்தில் கூட அவன் சில சமயங்களில் டயலாக் பேசுவதை ராகவனே கேட்டிருக்கிறான்.

தானுண்டு தன் படிப்பு உண்டு என்று பரம சாதுவாக இருந்தவனுக்கு இப்படி ஒரு விபரீத ஆசை திடீரென்று எப்படி வந்தது? தீர யோசித்துப்பார்த்தபோதுதான், ராகவனுக்குச் சட்டென்று பொறி தட்டியது.

சில பழைய சம்பவங்கள் அவன் நினைவில் திரைப்படமாய் விரிந்தன. .

அவன் தம்பி மகன் தினேஷ் ஒரு நாள் காலையில் வந்து உற்சாகம் பொங்க, " பெரியப்பா, நேத்து காத்தாலே எட்டு மணிக்கு நிலா டி,வி பாத்தீங்களா?" என்று கேட்டான். விக்ரம் அப்போது அருகில் இருந்தான்.

"இல்லையே கண்ணா, என்ன வி§சேஷம்?"

"அடாடா, நல்ல தமாஷை மிஸ் பண்ணிட்டீங்களே. நானும் அப்பாவும் நங்கநல்லூர் கோவில் கும்பாபிஷேகத்துக்குப் போயிருந்தோம். டி,விலே அதைக் காமிச்சாங்க. ஒரு இடத்திலே நான் தலையை சொற்¢ஞ்சிகிட்டதும் , சோம்பல் முறிச்சதும், பெரிசா வாயத் திறந்துகொட்டாவி விட்டதும் அப்படியே காமிச்சுட்டாங்க. வயிறே புண்ணாறாப்பில ஒரே சிரிப்புத்தான் போங்க" --எந்த முயற்சியும் இல்லாமல் சின்னத்திரையில் தன் முகத்தைக் காட்டிவிட்ட பெருமை அவன் முகத்தில் தாண்டவமாடியது.

அதே போலத்தான் அவன் ஆபீஸ் நண்பன் ரகுவின் பெண் சுலக்ஷணா ஒரு நாள் வந்து தன் பிரதாபத்தை அளந்தாள்.

"நேத்து சூரிய டி,வி.லே நடத்தின 'குவிஸ்'லே நான் இருந்தேனே எல்லாரும் பாத்தீங்களா?"

அவர்கள் அந்த நிகழ்ச்சியைப் பார்த்திருந்தார்கள்.பாவம்! அந்தப் பெண். ஒரு கேள்விக்குக்கூட பதில் சொல்லத்தெரியாமல் 'திருதிரு'வென்று முழித்துக்கொண்டு பரிதாபமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். ஆனாலும் கூடத் திரையில் முகத்தைக் காட்டிவிட்ட ஒரு பெருமிதம் அவள் பேச்சில் தொனித்தது.

எதிர் வீட்டுப் பெண் குண்டுக் கலா சின்னத்திரையில் பக்தி சீரியல்களில் குட்டித் தெய்வமாகத் தோன்றி தட்டுத் தடுமாறி மழலை மொழியில் டயலாக் பேசுவதை பார்த்திருப்பீர்களே! அவள் அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு வந்து, "அங்கிள், எப்படி என் நடிப்பு? பரவாயில்லியா " என்று விசாரிக்காமல் போக மாட்டாள். "பிரமாதம்'- என்று சர்டிபிகேட் தரும் வரையில் நகர மாட்டாள். அவளுக்கு சின்னத்திரையில் ஏக டிமாண்ட். பிரபல குழந்தை நட்சத்திரம் என்று பத்திரிகைகள் புகழ்ந்து எழுதுவதையெல்லாம் கொண்டு வந்து காட்டி ஒவ்வொரு இடத்திலும் தனக்குக் கிடைத்த சம்பளத்தையும் பற்றி பேசிப் பெருமையடித்துக்கொள்வாள். கேட்டுக் கொண்டு சாதுவாக உட்கர்ந்திருக்கும் விக்ரத்தைச் மறைமுகமாகச் சீண்டி வெறுப்பேற்றுவதைப்போலத் தோன்றும்.

விக்ரம் பள்ளியில் படிக்கும் சில பேர் தவறாது சீரியல்களில் நடிப்பதும் விளம்பரப் படங்கள் மூலம் திடீர் பிரபலமடைந்து கர்வத்துடன் அலட்டிக் கொள்வதும் பற்றி அவனே வீட்டில் விலாவாரியாக அடிக்கடி சொன்னதுண்டு சின்ன வயதிலேயே அவர்கள் நடிப்பின் மூலம் பெரிய தொகைகளை சம்பாதிப்பது அவனைத் தூண்டிவிட்டு அவனுள் மறைந்து கிடக்கும் நடிப்பு வெறியை விஸ்வ ரூபம் எடுக்க வைத்திருக்கக் காரணமாய் இருக்கலாம் என்பதுதான் அவன் பெற்றோருடைய கணிப்பு.

ஒரு நாள். ராகவன் வீட்டிலிருந்த போது விக்ரம் அவன் நண்பன் ஒருவனை-- ராஜேஷாம் அவன் பெயர்-- அழைத்து வந்திருந்தான். அந்தப் பையன் அட்டகாசமாகப் பேசிச் சிரித்துக்கொண்டு ரொம்ப ஓவராக போலித்தனமான ஷோ காட்டிக்கொண்டிருந்தான். ராகவனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

"அப்பா இவன் யார் தெரியுதா?" -- விக்ரம் ராகவனிடம் கேட்டான்.

அடிக்கடி பார்த்த முகம் போல் இருந்தது. எங்கே என்பது மட்டும் ராகவன் நினைவிற்கு வரவில்லை

" என்னப்பா முழிக்கறீங்க? ஏ-ஒன் பிஸ்கட் விளம்பரப் படஙகளில் விதவிதமாக கலர் டிரஸ்ஸோட பிஸ்கட்டை தின்னுகிட்டே "எனக்குப் பிடிச்சது 'ஏ-ஒன்'தான்.உங்களுக்கும் தானே" அப்படின்னு சொல்லிட்டு கண்ணடிச்சி டான்ஸ் ஆடிச் சிரிப்பானே, அந்தப்

பையன்தாம்ப்பா. அவங்க அப்பா யாரையோ சிபாரிசு பிடிச்சு இந்தச் சான்ஸ் கிடைச்சதாம். அந்த விளம்பரத்திற்கு சொளையா எட்டாயிரம் ரூபாக் குடுத்தாங்களாம்."

அவன் உற்சகமாகச் சொன்னதை ரசிக்கும் நிலையில் ராகவன் இல்லை. அவன் சாமர்த்தியமாக எதைக் கோடிட்டுக் காட்டுகிறான் என்பது ராகவனுக்குப் புரியாததா? ரொம்ப தர்ம சங்கடமான நிலைமை.

" அங்கிள், விக்ரம் என்னை விட ரொம்ப கெட்டிக்காரன். ஸ்கூல் டிராமாக்களி£லே பிரமாதமா நடிச்சு நெறைய பரிசு வாங்கியிருக்கானே, நீங்க கொஞ்சம் 'டிரை' பண்ணினா அவனுக்கு டி.வி.யிலே நல்ல வாய்ப்பு கிடைக்குமில்லே. அவனும் கண்டிப்பா சக்கைப் போடு போட்டு சீக்கிரமே நல்ல பேரு எடுத்துடுவான்." என்று அவன் வாதாடியபோது ராகவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. விக்ரம் அவனை இதற்காகவே அழைத்துக்கொண்டு வந்தானோ என்ற சந்தேகம் கூடத் தலைதூக்கியது.

விக்ரம் இவர்களையெல்லாம் தூக்கியடிக்கக்கூடிய திறமைகளைப் பெற்றவன் என்பதில் ராகவனுக்கும் ராஜிக்கும் துளிக்கூட சந்தேகமே கிடையாது. ஆனால் இந்த வயதில் படித்து முன்னேறுவதில் முழுக் கவனமும் இருக்கவேண்டும் என்பதும் எக்காரணம் கொண்டும் நடிப்பு, வி¨ளையாட்டு, கலை போன்ற விஷயங்களில் மனதைத் திருப்பிவிட்டு முன்னேற்றத்திற்குத் தானே தடைக்கற்களை ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது என்பது ராகவனுடைய ஆணித்தரமான அபிப்ராயம்.

ஆனால் புத்திமதிகள் எதுவுமே விக்ரம் காதில் ஏற மறுத்தன. அவன் விடாப்பிடியாகத் தன் குறிக்கோளையே உடும்புப் பிடியாக பிடித்துக்கொண்டு நச்சரித்தான்.
வீட்டுக்குத்தெரியாமல் பல கம்பெனிகளுக்குக் குழந்தை நடிகனாக விண்ணப்பித்துப் பார்த்தான். முயற்சிகள் வெற்றியைத் தராதது ஏமாற்றத்தை அளித்து, அவனை மனதளவில் பாதித்தது. படிப்பிலிருந்து அவன் கவனம் சிறிது சிறிதாக சிதறுவதும் கண்கூடாகவே தெரிந்தது.
அவன் ஆர்வத்தை முளையிலேயே கிள்ளி எறியும் நோக்கத்துடன் அவனை எத்தனையோ முறை கண்டபடி திட்டித் தீர்த்தான் ராகவன்.
ஆனால் கண்டிப்பும் அடக்குமுறையும் அதிகமாக அதிகமாக, அவன் வெறியும் தணியாமல் இன்னும் தீவிரமாகக் கொழுந்து விட்டு எழுந்தது என்பதுதான் உண்மை.

ஒரு நாள் அவன் கோபம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது அவன் அம்மாவிடம், "எப்படியாவது நானே என் சுயமுயற்சியாலேயே , டி.வி.யில் தலை காட்டுகிறேனா இல்லயா, பாரு" என்று ஆவேசத்துடன் சவால் விட்டானாம்.

சரியாக ஒரு வாரம் கழித்து-----

அன்று இரவு ஆபீஸிலிருந்து வீடு திரும்பிய ராகவன் அவன் வீட்டு வாசலில் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. ராஜி தலை விரிகோலமாய், அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாய் சோகமே உருவாக நின்று கொண்டிருந்தாள்.

"என்னங்க, விக்ரம்பய ஸ்கூல்லே இருந்து இன்னும் வரலேங்க. காத்தாலே இருந்தெ ரொம்ப டல்லாத்தான் இருந்தான். எப்போதும் போல யார்கிட்டேயும் கலகலப்பாப் பேசலை. அப்பவே என் மனசுலே ஏதோ பயம் வந்திட்டுதுங்க. ..இப்போ ஆளையே காணோம்...ஐயோ, நான் என்ன பண்ணுவேன், என் பிள்ளைக்கு என்ன ஆச்சோ தெரியலியே! எசகு பிசகா ஏசாவது பண்ணிகிட்டானா, இல்லை யாராவது கடத்திகிட்டுப் போயிட்டாங்களா தெரியலியே, டே, கண்ணா, எங்கேடா இருக்கே, பிள்ளையாரப்பா, என் பையனை சீக்கிரமா தேடிக் குடுப்பா..கிடைச்சதும், உனக்கு நூத்தியெட்டு தேங்காய் உடைக்கிறேன்...ஏங்க, ஏன் இப்படி சிலை மாதிரி திகைச்சு நின்னுகிட்டு இருக்கிங்க...அவனைத் தேடிக் கண்டுபிடிக்கிற வழியைப் பாருங்க"" என்று துக்கம் பொங்க சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசினாள்.

ராகவன் துரித கதியில் தேடல் வேட்டையில் இறங்கினான். அவன் நண்பர்களும் நெருங்கிய சொந்தக்காரர்களும் அவனுக்கு உதவ முன் வந்தனர். விக்ரமின் பள்ளிக்கூடம், அவன் டீச்சர்கள், அவன் நண்பர் வட்டம், அவன் அடிக்கடி போகும் விளையாட்டு மைதானம், கோவில், மார்க்கெட் ஆகிய இடங்களிலெல்லாம் விசாரித்து சல்லடை போட்டுத் தேடி அலுத்துப் போய் திரும்பினார்கள். அடுத்த நாள்-- அதற்கடுத்த நாள்-- இப்படி ஒரு வாரம் ஓய்வு ஒழிச்சலின்றி முனைந்து தேடியும் பலனில்லை.
விக்ரம் திரும்பி வரவும் இல்லை, அவனைப் பற்றி எந்தத் தகவலும் கி¢டைக்கவுமில்லை.

ராகவனும் ராஜியும் ஒரு நாள் கூட அவனை விட்டுத் தனியே இருந்ததில்லை. அருமை மகனின் பிரிவு அவர்களை வாட்டி வதைத்தது. சாப்பாடு, தூக்கத்தை மறந்து இளைத்துத் துரும்பானார்கள். வீடே களையிழந்து ஒரு சூன்யம் கப்பியது போலிருந்தது.

ஒரு மாதம் விளையாட்டுப் போல் பறந்தோடியது.

அன்று இரவு . ராஜி தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் அமர்ந்திருந்தாள். திரையில் ஏதோ ஆன்மீக நிகழ்ச்சி ஓடிக்கொண்டிருந்தது. மனம் அதில் சற்றும் லயிக்காமல் கவலையுடன் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வெறித்த பார்வையுடன் எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்தாள். ராகவன் கிராஸ்வேர்ட் போடுவதில் மும்முரமாக இருந்தான்.

சட்டென்று, சானலை மாற்றிய ராஜி சற்றும் எதிர் பாராமல் திடீரென்று உரத்த குரலில் திடுக்கிட்டு அலறினாள்; "ஏங்க, அங்கே பாருங்க. நம்ம பிள்ளை விக்ரம், அடே, கண்ணு எப்படி இளைச்சுக் கறுத்துப்போயிட்டே என் செல்லமே, நீ உயிரோட

இருக்கறதைப் பார்த்ததே என் வயத்திலே பாலை வார்த்தாப்பிலே இரூக்குடா, மகனே, ஐயோ, எங்கேடா இரூக்கே, என்னப்பா செய்யறே? என்ன கஷ்டப்படறயோன்னு நினைச்சு நினைச்சு நாங்க இங்கே துடியாத் துடிக்கிறோமே. திரும்பி சீக்கிரமா வந்துடுடா, கண்டிப்பா உன்னை எதுவும் சொல்ல மாட்டோம்" என்று ஏதேதோ கோர்வை இல்லாமல் பேசினாள்.

ராகவன் பார்த்தான். ஆம், சந்தேகமே இல்லை, விக்ரம் தான் அது. ஒரு கையில் ஒரு பாத்திரத்தில் சுண்டலுடனும், மற்றொரு கையில் ஒரு டின்னில் முறுக்கு, தட்டை முதலிய தின் பண்டங்களும் வைத்துக்கொண்டு, சென்னைக் கடற்கரையில் அந்த டி.வி.க்கு. பேட்டி கொடுத்துக்கொண்டிருந்தான்.

" நான் திருச்சியிலே படிச்சிக்கிட்டு இருந்தேன். ரொம்ப நாளா எனக்கு நடிக்கணும்கற ஆசை கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. என்னை ஊக்குவிச்சு என் திறமைகளை வெளியில் கொண்டு வர என் பெத்தவங்க கொஞ்சம் கூட முயற்சி செய்யலை. என்னைச் சரியாப் புரிஞ்சிக்காமே என் ஆர்வத்தை நசுக்கிவிடப் பாடுபட்டாங்க. கண்டபடி ஏசி என் மனதைப் புண்படுத்தியதில் நான் மனம் உடைந்து சென்னைக்கு ஓடி வந்து விட்டேன். அனாதையாய்த் திரிந்த என்னை என் முதலாளி ஆதரவு அளித்து தன் வீட்டில் வைத்து வளர்க்கிறார். இப்போ நான் அவர் கிட்டேயே வேலை பார்க்கிறேன். அவர் செய்த உதவிக்குக் கைமாறாக அவர் வீட்டில் தயாரிக்கப்படும் தின்பண்டங்களை கடற்கரையில் விற்றுத் தருகிறேன். என் கைச் செலவுக்கு மாதா மாதம் ஒரு தொகையும் தருகிறார்.பழகிய சில நாட்களிலேயே அவர் என்னை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார். என் ஆர்வத்தை அறிந்து 'குழந்தைத் தொழிலாளிகள்' நிகழ்ச்சியில் இந்தப் பேட்டிக்கு ஏற்பாடு செய்தவர் அவர் தான், நான் என் அம்மாவிடம், 'என்றாவது ஒரு நாள் நான் டி.வி.யில் தோன்றுவேன்' என்று சவால் விட்டுவிட்டு வந்தேன். சொன்னதை சாதித்துக் காட்டிவிட்டதில் எனக்கு ரொம்ப சந்தோஷம்..ஆனால் என் பெற்றோர்கள் இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது........."

வெறித்து வெறித்து தொலைக்காட்சிப் பெட்டியையே பார்த்துக்கொண்டிருந்த ராஜி, 'இந்த டி.வி.சனியனாலே தானே என் குடும்பத்திலே இத்தனை குழப்பமும் கஷ்டமும் ?இதுக்கு ஒரு வழி பண்ணினாத்தான் எனக்கு நிம்மதி' என்று என்று அருகிலிருந்த பூச்சாடியை எடுத்து தொலைக்காட்சிப்பெட்டியின் மேல் வீசினாள். பலத்த இடியோசையுடன் அது சுக்கு நூறாக உடைந்து வீடெங்கும் சிதறியது.. அடுத்த நிமிடமே பதற்றத்தில் மூச்சு வாங்க மயக்கமாகிக் கீழே சரிந்தாள்.

thambudu@hotmail.com
மே 2005 இதழ் 65

19. சுனாமி வைத்தியம்! - என்.எஸ்.நடேசன் -

நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்களில், மிருகவைத்தியர்களிடம் வருடம் ஒருமுறை பரிசோதித்து தடுப்பூசி போட்டுக் கொள்பவர்கள் ஒருவகை. உடல் நலம் கெட்டபோது மட்டும்வந்து மிருகவைத்தியரிடம் சிகிச்சை பெறுபவர்கள் இன்னெருவகையினர். இந்த இரண்டாவது வகையினர் என்னைப் பொறுத்த வரையில் சுனாமி வகையரா. ஏதாவது பா¡¢ய நோய் ஏற்பட்டிருக்கும்போது, நாள்பட்ட பின்பு தான் மருத்துவ உதவியை நாடுவார்கள். மூன்று நாட்கள் உணவு உண்ணாத நாயாகவோ, ஐந்து நாட்கள் மலம் கழிக்காத பூனையாகவோ இருக்கும். நோயின் மூலத்தை அறிய இரத்த பரிசோதனை, X Ray என பல விடயங்களில் ஈடுபடவேண்டும். இவர்களுக்கு அதிக பணமும், வைத்தியர்களுக்கு பிரயத்தனமும் தேவைப்படும். சிலவேளைகளில் சிகிச்சைக்கு காலம் சென்றும் போய்விடும். ஒழுங்காக வருடா வருடம் வருகை தருபவர்கள் சிறிய குணக்குறைவு ஏற்பட்டவுடனேயே தங்கள் செல்லபிராணிகளை வைத்தியரிடம் கொண்டுவந்து விடுவார்கள். ஒரே மருந்தில் அதிக செலவற்று குணமடைய கூடியதாக இருக்கும்.

செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்களில், மிருகவைத்தியர்களிடம் வருடம் ஒழுங்காக வருபவர்கள் தங்கள் விடயத்திலும் இப்படியான ஒழுங்கு முறையை கடைப்பிடிப்பவர்களாக இருப்பார்கள். வருடத்துக்கு, இருமுறை இரத்த அழுத்தம், வருடம் ஒரு இரத்த பரிசோதனை, இருவருடத்துக்கு ஒருமுறை மார்பக பா¢சோதனை என செய்வார்கள். வளர்ந்த நாடுகளில் இப்படியான ஒழுங்கான பரிசோதனைகள் நாட்டில் சுகாதார செலவை குறைக்கும்.

மாரியில் பெய்யும் மழையின் அளவுகளை தெரிவதன் மூலம் வெள்ளத்தை தவிர்க்க முடியாவிட்டாலும் குறைந்தபட்சம் அழிவுகளை தவிர்த்துக் கொள்ளமுடியும்.

நான் அறிந்த சுனாமிக்குடும்பத்தின் கதை இது.

எட்டு வருடங்களுக்கு முன்பு ஜேம்ஸ்சும் அவர் மகன் டேவிட்டும் இரண்டு அழகான ஜேர்மன் செப்பேட் எனப்படும் அல்சேசன் நாய்களை எனது கிளினிக்கு கொண்டு வந்தனர். ஜேம்ஸ்க்கு பாரிய உடம்பு, நிறைமாத வயிறு, பேசும்போது மூச்சு இழைக்கும். டேவிட் இருபது வயது இளைஞன்.

'இரவு முழுவதும் வாயால் அதிக எச்சில் வடிந்தபடி இரண்டு நாய்களும் ஒரே இடத்திலே நிற்கின்றன. அமைதியற்ற நிலையில் காணப்படுகின்றன. இரவு சாப்பாடையும் உண்ணவில்லை. அதிசயமாக இருகிறது" என்றார் ஜேம்ஸ் மூச்சு இரைக்க நான்

கூர்ந்து பார்த்தபோது எச்சில்வடிவதோடு வாய்களையும் திறக்கமுடியாமல் இருந்து கண்களும் மேல் பக்கமாக செருகியபடி 'சிலுக்கு சுமிதா" வின் கண்களை போல் இருந்தது.

'எதாவது நச்சுப் பொருளை உண்டிருக்க வேண்டும். எதுவென்று தொ¢யாமல் விசேட சிகிச்சை அளிக்கமுடியாது. இரத்த பரிசோதனைக்கு அனுப்பி விட்டு இரண்டு நாய்களுக்கும் சேலையின் ஏற்றுகிறேன். தற்போது எனது பொறுப்பில் விட்டு விட்டு போங்கள்" என இருவரிடமும் கூறினேன்.

இரத்த பா¢சோதனையில் எதுவும் இல்லை. டேவிட் இடம் தொலைபேசியில் 'உங்கள் வீட்டில் ஏதாவது போதை மருந்து அல்லது தூக்க மாத்திரைகள் உள்ளதா" எனக்கேட்டேன்.

'கஞ்சா கலந்த கேக்குகள் இருந்தன. அவற்றை நாய்கள் உண்டிருக்கலாம். அப்பாவிடம் சொல்ல வேண்டாம்" என்று கூறினான் டேவிட் இரண்டு நாட்களில் இரண்டு நாய்களும் முற்றாக, குணமடைந்துவிட்டன.

இரண்டு வருடத்தின் பி;ன்பு ஒரு மாலை நேரம் பெண் நாயை ஜேம்ஸ் கொண்டுவந்து "டொக்டர், குட்டி போட கஸ்டப்படுகிறது" நாயை இரவிரவாக சிசோ¢யன் செய்து குட்டியை எடுப்பததேன்.

அதன்பின் சில வருடம் காணவில்லை. வீடுமாறி விட்டார்களோ எனக்கூட நினைத்தேன்.

மீண்டும் டேவிட் ஒரு நாயை கொண்டுவந்தான். 'இது புதிதாக இருக்கிறதே? வேண்டினீர்களா?".

'இல்லை நீங்கள் சிசேரியின் பண்ணி எடுத்து குட்டி. இதன் பெயர் ரிபல்" என்றான்.

'என்ன பிரச்சனை" என்றேன், நாயின் அழகை பார்த்தபடி. எந்த நாய்களிலும் இல்லாத கம்பீரம் அழகும் இந்த ஜேர்ம்ஸ்செப்பேட்டிடம் உள்ளது. இவற்றின் புத்தி கூர்மையும் கீழ்படிவும் பிரசித்தியானது.

'கால்மூட்டு வீங்கி இருக்கிறது."

தொட்டுப்பார்த்த போது சூடாக இருந்தது. 'சீழ்பிடிந்து இருக்கிறது" என்று சொல்லிவிட்டு, மெதுவாக சீழை ஊசியால் குத்தி எடுத்தேன். டேவிட், அப்பா எப்படி, பலகாலமாக காணவில்லை? என்றேன். வேலை செய்யும் போது சம்பாசணையை வைத்திருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக.

'அப்பா இரண்டு கிழமைக்கு முன்பு இறந்து விட்டார்"

திடுக்கிட்டு நிமிர்ந்து 'என்ன நடந்தது" என்று அதிர்ச்சியுடன் வினவினேன்.

'அப்பா டாக்சி ஓடுவது உங்களுக்கு தொ¢யும் தானே? சிவப்பு லைட்டில் நின்றபோது இதயம் நின்று விட்டது. கார் லாம் போஸ்டில் அடித்து நின்றது."

'காருக்குள் யாரும் இல்லையா?"

'ஆஸ்பத்திரியில் ஒருவரை இறக்கி விட்டுவரும் போது நடந்தது."

'நம்பமுடியாமல் இருக்கிறது. எனது அனுதாபங்கள்"

'அப்பாவுக்கு இதய வருத்தம் இருப்பது தெறியாது. காரணம் கடந்த பத்து வருடங்களாக வைத்தியா¢டம் செல்லவில்லை."

'அப்பாவை போல் பலர் உண்டு" - என்று கூறி விடை பெற்றேன்.

சில வருடங்களின்பின் டேவிட்டை மீண்டும் நடத்தி வந்த போது ஆண் நாயின் சிறுநீரோடு இரத்தம் வருவதாக சொன்னான்.

இரத்த பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை செய்து X Ray ம் எடுத்து புற்றுநோய் கட்டி வந்து இருப்பதாக கூறினேன்.

"என்ன செய்யலாம் டொக்டர் என்றான் தற்பொழுது விதையை சந்திர சிகிச்சை மூலம் எடுத்தால் புற்றுநோய் சிறிதாகும்" என்று கூறினேன்.

'சரி" என்று சம்மதித்து நான்கொடுத்த படிவத்தில் கையெழுத்திட்டான்.

'டேவிட், எப்பொழுது நீங்கள் வந்தாலும் சீரியசான நோயாகத்தான் இருக்கும். வருடாவருடம் வந்து நாய்களை பரிசோதித்தால். செலவும் குறைவு. பல நோய்களை தவிர்த்து கொள்ளளாமே" என்றேன்.

டேவிட்டின் சிரிப்பு பதிலாக வந்தது.

'மிருகங்களைத்தான் இப்படி கொண்டுவருவது பரவாயில்லை. நீங்களாவது அப்பாபோலில்லாமல் ஒழுங்காக வைத்தியரிடம் போக வேண்டும். ஆஸ்திரேலியாவில்

இலவச வைத்தியம் வசதிகள் இருந்தும் ஏன் பாவிப்பதில்லை?."

இதை சொல்ல நினைத்தேன். மிருகங்கள் பற்றிய ஆலோசனையோடு நின்று விடுவது என நினைத்ததால் சொல்லவில்லை.

uthayam@optusnet.com.au
மார்ச் 2006 இதழ் 75

20. காதலின் பாதையில்.. - ஷண்முகி -

தொலைபேசி மணி நீண்ட நேரமாக அடித்துக்கொண்டே இருந்தது. விடிய இரண்டு மணிக்குத்தான் நித்திரைக்குப் போன கிருஷ்க்கு இந்த அழைப்பு எரிச்சலையே ஊட்டியது. நேரத்தைப் பார்த்தான் மணி ஐந்தை எட்டிப்பிடித்துக் கொண்டிருந்தது. "ஓ.. god இனி படுக்கேக்க முதல்ல இந்த டெலிபோன் ரிசிவரை எடுத்து வைச்சுப்போட்டுத்தான் படுக்க வேண்டும் என்னுடைய நித்திரையும் குழம்பிப்போட்டுது சே . . சே" என தனக்குள் புறுபுறுத்துக் கொண்டவன் ஏதும் அவசர செய்தியாக இருக்குமோ என்று எண்ணிக்கொண்டே "ஹலோ கிருஷ் ஹியர்" என்றான்.

"?லோ" மறுமுனையில் ஒரு பெண்ணின் குரல் வசந்தனை ஒருக்கா இந்த நம்பருக்கு 81751 எடுக்கச்சொல்லுங்கோ. வார வெள்ளிகிழமை flight என்று சொல்லி விடுங்கோ நன்றி" என்றவள் இணைப்பைத் துண்டித்துக் கொண்டாள். அவள்தான் வசந்தனின் வருங்கால மனைவி சந்தியா. இங்கு வருவதற்கு எல்லாம் முற்றாகியநிலையில், வரும் நாளை அறிவிக்கும் தொலைபேசி அழைப்பிற்காக காத்திருப்பதை வசந்தனின் மூலம் அறிந்திருந்தான் கிருஷ்.

கிருஷ், வசந்தன் இருவருமே ஒரே அறையில் ஒரு சில வருடங்களாக வாழ்பவர்கள். இங்குவந்தபின்தான் இருவருக்குமே பரிச்சயம் ஏற்பட்டது. இருவரும் இணைபிரியா நண்பர்கள் என்று சொல்வதற்கொன்றும் பெரிதாக இல்லை. ஆனால் ஒருவரின் குடும்பத்தைப்பற்றி மற்றொருவர் பரஸ்பர நட்புடன் அறிந்திருந்தார்கள். மற்றும்படி இருவரின் பழக்க வழக்கங்களிளும், குணநடையிலும் பலப்பல வித்தியாசங்கள். இருவரின் கருத்துகளுமே பெரும்பாலும் ஒன்றுக்குப் பின் முரண்பாடாகவே அமைந்திருக்கும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில்கூட இறுதியில் இருவரும் எந்த விதமான பிரச்சனைக்கும் முகம் கொடுக்காமல் வழமைபோல் ஒன்றாகி இணைந்து விடுவார்கள்.

கிருஷ் இன்றைய வாழ்க்கை முறையோடு தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டு, வாழ்க்கையை ரசித்து, அனுபவித்துக்கொண்டிருந்தான். அதன் பாதிப்பு அவனது உடை, நடை, பேச்சு, பழக்கவழக்கங்களிலும் ஒட்டிக் கொண்டிருந்தது. தமிழ் பேசும் போதுகூட பெரும்பாலும் அதை ஆங்கிலம் போல் தான் பேசுவான். கிருஷ்ணகுமார் என்ற தன் வடிவான பெயரைக்கூட நாகரீகத்துக்கு ஏற்றவாறு, சிறிய பெயராக, அனைவரும் அழைப்பதுக்கு வசதியாக கிருஷ் என்று மாற்றிக்கொண்டான். மனதில் பட்டதை நேருக்குநெராக ஒப்புவிக்கும் சுபாவம் உடையவன்.

ஆனால் . . . வசந்தனை பொருத்தமட்டில் இந்த வெளிநாட்டு வாழ்க்கை ஒன்றும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. அனேகமாக தான் உண்டு தன் வேலையுண்டு என்று தான் இருப்பான். தன்னுடைய மொழி, குடும்பம், தன்னுடைய தாயகம் என்ற

கோட்பாட்டோடு அதற்குள் ஆட்பட்டு ஒன்றி வாழ்ந்து கொண்டிருந்தான்.

கதவு திறக்கும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான் கிருஷ். வசந்தன் வந்து கொண்டிருந்தான். "?¡ய் வசந்த் உம்முடைய ஆள் வாரப்போறாவாம். ஒருக்கா டெலிபோன் எடுக்கட்டுமாம்" என்று கிருஷ் கூறியதும் வேலை அலுப்பால் வீடு வந்த வசந்தன் அடைந்த மகிழ்சிக்கு அளவேயில்லை. தன் மேசை மேலிருந்த படத்தையே ஒருகணம் பார்த்துக்கொண்டிருந்தான். வெளிநாடு வருவதற்குமுன் அவனும் சந்தியாவும் சேர்ந்து எடுத்துக்கொண்ட படம் அது. தன்னை மறந்து கனவுலகில் மிதக்க ஆரம்பித்தான் வசந்தன்.

வசந்தன் கையிலிருந்த படத்தைப் பார்த்த கிருஷ் "என்ன உம்முடையவ உம்மைவிட உயரம் போல இருக்கிறா" என்றான்.

"ஓம், ஓம் அவ என்னைவிட உயரந்தான். காதலுக்கு கண் இல்லை என்பார்களே. அது இதுதான். உயரம் பார்த்து வருவதில்லையே காதல்" காதலின் சுகானுபங்களை அறிந்த இறுமாப்பில் கூறினான் வசந்தன்.

"புடலங்க காதல். நான் சொல்றன் என்டு குறை நினைக்காத எனக்கென்றா இந்த கண்டதும் காதல். காதலுக்கு கண்ணில்லை. இதிலெல்லாம் எனக்கு கொஞ்சமும் நம்பிக்கையில்லை. காதல் என்றால் அந்தஸ்து, அறிவு, அழகு எல்லாம் பார்த்துதுதான் வரவேண்டும். வாழப்போறது நாம்தானே அத்தோடு கண் மூடித்தனமான இந்தக் காதல் தான் இந்த divorce க்கும் முக்கிய காரணம்" என்றான் கிருஷ்.

"உந்த விசர்க்கதைய விடும். உனக்கென்னடா காதலைபற்றித் தெரியும். காதல் புனிதமானது. காதலை.. . . அதன் மென்மையான இன்ப உணர்வுகளையும், பிரிவின் சோகத்தையும் அணுஅணுவாக உணர்ந்து அநுபவித்தவன் நான். என் சந்தியாவைப்பற்றி எனக்குத்தான் தெரியும்." அவள் மீது கொண்ட நிதர்சனமான காதலால் வசந்தனின் குரல் சற்றே உணர்ச்சி வசப்பட்டு இருந்தது.

okay cool down வசந்த். I have only told you my opinion dont't get angry. உம்முடைய மூடையும் குழப்பிப்போட்டன். I am really very sorry, இனிய கனவுகளுடன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டியவனிடம், ஏற்பட்ட வாக்குவாதம், வசந்தனின் மனதை காயப்படுத்தியிருக்குமோ . . . என எண்ணி பகிரங்கமாகவே தன் மன்னிப்பைக் கேட்டுக்கொண்டான் கிருஷ்.

வெள்ளிக்கிழமை அன்று இருவரும் இணைந்து விமானநிலையத்துக்குக்கு போனார்கள். சந்தியாவைக் காணப்போகப்போகிறோம் என்ற ஆதங்கத்தோடு காத்திருந்தான் வசந்தன். அவன் அடிக்கடி முணுமுணுக்கும் அந்தப் பாடல் இப்போதும் அவன்

நெஞ்சுக்குழிக்குள் ஒலித்துக்கொண்யே இருந்தது.

சந்தியாவும் வந்துவிட்டாள். முதன்முதலாக சந்தியாவைக் கண்ட கிருஷ் உண்மையிலே அதிர்ச்சியடைந்தான். சக்கரவண்டியில் சந்தியா வந்து கொண்டிருந்தாள். வாழ்நாள் முழுவதும் சந்தியாவின் வாழ்க்கை இந்த சக்கர நாட்காலிக்குள்தானா தஞ்சமடையப்போகிறது. அன்று அந்த படத்தைப் பார்த்து வாக்குவாதப்பட்டுக் கொண்டோமே உண்மையில் சந்தியா இப்போது வசந்தனை விட உயரமில்லை. வசந்தன் எத்தனை பெரிய மனதோடு அவளை ஏற்றுக் கொண்டிருக்கிறான். அதற்கும் எத்தனை பெரிய மனது வேண்டும்.

அதிலிருந்து மீள்வதற்குள் "சந்தியா இவன் என்னுடைய room mate கிருஷ்" என்று அறிமுகம் செய்து வைத்தான் வசந்தன். "?லோ வணக்கம்" என்று கிருஷ் கூறியபோதும் அவனுடைய கண்கள் சக்கரவண்டியையே நோக்கிக் கொண்டிருந்தது.
"இதென்ன உங்கட காலுக்கு என்ன நடந்தது" தன் மனதிலுள்ளதை மறைத்து வைக்க முடியாமல் கேட்டும் விட்டான் கிருஷ்.

"ஓ . . . இதுவா. இவர் சொல்லேல்யோ ஆமிக்காரங்கள் வைச்ச கண்ணிவெடியில என்னுடைய கால் போட்டுது." அவள் சாதரணமாக கூறினாள்.

கிருஷ் வசந்தனை பார்க்கின்றான். காதலின் வலிமையை முதன்முதலாக கண்கூடாக பார்த்து உணர்ந்து கொண்டான். காதலின் பாதையில் . . . சந்தியா மீது வசந்த் கொண்ட காதல் தியாகமாக அவன் கண்முன் வியாபித்து நின்றது. அவனையறியாமல் "really you are great" அவனை நெஞ்சாரஸ மனதாரஸ வாழ்த்தினான் கிருஷ் என்ற கிருஷ்ணகுமார்.

shanmuhi@hotmail.com
மார்ச் 2006 இதழ் 75

21. மீண்டும் வருமோ எனது தேசம்! - குகன்

சிறுமி ரம்யா சூரியனை நோக்கி ஒரு படகு செல்வதுப் போல் காட்சி. தமிழக எல்லையை நுழைந்து தமிழகத்தை நோக்கி வந்துக் கொண்டு இருக்கிறது. ரம்யா தன் சிறு பொம்மை வைத்துக் கொண்டு தன்னை சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாமல் வருகிறாள்.

" தாத்தா... நாம்ம எங்க போரோம்...! அம்மா, அப்பா எப்போ வருவாங்க்"

ரம்யாவின் மழலைக் கேள்விக்கு அவள் தாத்தா சங்கரன் கண்ணீரில் பதிலளித்தான்.

" நாம்ம வேற ஊருக்கு போறோம்...நாம்ம போனதும் அவங்க வருவாங்க"

இலங்கை ராணுவ தாக்குதலில் ரம்யாவின் அப்பா,அம்மா இருவரும் கொல்லப் பட்டனர்.தன் பேத்தி ரம்யாவின் உயிரையாவது காப்பாற்ற தமிழகத்தில் அகதிகளாக் சங்கரன் வருகிறான். மழலைப் பேச்சு துடுக்கெனும் குணம் ரம்யாவுக்கு.... று வயது தான் இருக்கும். இலங்கையில் என்ன நடக்கிறது என்றுக் கூட தெரியாது.புது ஊருக்கு போகும் மகிழ்ச்சியில் இருக்கிறாள்.

"தாத்தா. ஊருக்கு போனதும் ஹேமாவுக்கு ஒரு அழகான பொம்மை வாங்கனும். அவளுக்கு அடுத்த வாரம் பிறந்த நாள் வருது"

பாவம் ஹேமாவும் அவள் பற்றோரும் ராணுவ தாக்குதலில் இறந்ததை அந்த பிஞ்சுக் குழந்தைக்கு எப்படி சொல்லி புரிய் வைப்பது.

இலங்கை அகதிகள் எல்லோரும் ரமணாதப்புரத்தில் வந்தடைந்தனர். ஒவ்வொருவரின் மனதில் தாய் நாட்டை இழந்த சோகம், உறவுகளை இழந்த தூக்கம். னால் ரம்யாவுக்கு மட்டும் புது ஊருக்கு வந்த மகிழ்ச்சி.

அரசாங்க அதிகாரி ஒவ்வொருவரின் பெயரை எழுதிக் கொண்டு இருந்தார்.ரம்யா சையாக மேஜையில் இருக்கும் அதிகாரியின் பேனாவை எடுத்தாள்.

"ஏய் யார் நீ !... போய் உன் இடத்துல உக்காரு..." மிரட்டலாக பேசினார்.ரம்யா பயந்து தன் தாத்தாவிடம் ஒடி வந்தாள்.

"ஏன் தாத்தா எல்லோரும் இங்க வந்தோம்.எல்லோரும் ஏன் அலுவுறாங்க !. அம்மா, அப்பா எப்போ வருவாங்க ?"

"வருங்வாங்கம்மா ......"

"இங்க இருக்குறவங்கள பார்த்தா பயமா இருக்கு. நம்ம ஊருக்கே போலாம் தாத்தா.."

"முடியாதும்மா... அங்க சண்டை நடக்குது. நாம போகக் கூடாது !"

"ஏன் சண்டை நடக்குது ?"

தாத்தாரம்யாவின் கேள்விக்கு சங்கரனால் பதில் சொல்ல முடியவில்லை. இருந்தும் சங்கரன் பதில் அளித்தான்.

" சண்டைப் போட்டு யாரு ஜெய்கிறாங்களோ அந்த இடம் அவங்களுக்கு சொந்தம். சண்டை முடிஞ்சதும் நாம போலாம்"

"தாத்தா ! அங்க சண்டை எப்போ முடியும்... நாம ஏப்போ திரும்பி அங்க போவோம்"

இதற்கு பதில் ??????

ஒவ்வொரு இலங்கை தமிழர்களுக்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும். காலமே உன்னிடமாவது பதில் உண்டா......

jbkannan@rediffmail.com
யூன் 2006 இதழ் 78

22. குற்றம் புரிந்தவன். - குமரவேலன் -

வசந்த் ஜுவல்லரி தியாகராயநகரிலேயே பிரபலமான பெரிய நகைக் கடை. வசந்த்லால் சேட்டின் அப்பா காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கடை கிட்டத்தட்ட அறுபது வருஷங்களை நெருங்கிக்கொண்டிருக்கிறது. ராமன் அந்தக் கடையில் தான் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். வயது முப்பது. கல்யாணமாகாத பிரம்மச்சாரி. வயதான விதவைத் தாயார்,அண்ணன் கோவிந்தன், அண்ணி மீனா இவர்களுடன் பழையமாம்பலத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்தான்.

ராமனுக்குச் சின்ன வயதிலிருந்தே படிப்பே ஏறவில்லை.அப்பாவும் அகால மரணமடைந்து விட்டார். கண்டித்து வளர்க்க ஆளில்லாமல் பத்தாம் வகுப்புடன் படிப்புக்கு 'பை' சொல்லிவிட்டு தீய சகவாசம், குடி, சீட்டாட்டம் என்று பொழுதுபோக்கிக்கொண்டு எதிர் காலத்தைப்பற்றிக் கவலைப்படாமல் இஷ்டம் போல் வாழ்ந்து வந்தான். வீட்டுக்கு அடங்காத பிள்ளையாகக் அவிழ்த்து விட்ட காளை போல் ஊர் சுற்றி கெட்ட பெயர் சம்பாத் ¢த்துக்கொண்டிருந்தான்.

காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு அல்லவா? கண்ணெதிரே மகன் இவ்வாறு கெட்டுச் சீரழிந்து போவதை லட்சுமி அம்மாளின் தாயுள்ளத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. .

லட்சுமி அம்மாளின் தம்பி சுந்தரம் சென்னையில் ஒரு பிரபல பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியராக இருந்தார்.நல்ல செல்வாக்கு உடைய மனிதர். ஊரின் பெரிய புள்ளிகளுடனும் உயர் பதவி வகித்தவர்களுடனும் அவருக்கு நெருங்கிய பழக்கம் உண்டு.
அவரிடம் ராமனை அனுப்பினால் அவனுக்கு ஏதாவது வேலை வாங்கிக் கொடுத்து நல்ல வழிகாட்டிக் கவனித்துக் கொள்வார் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

அப்படியே செய்தார்கள். அவர்கள் நினைத்ததும் வீண் போகவில்லை. சுந்தரம் வசந்திடம் சிபாரிசு செய்து அவனுக்கு நகைக்கடையில் வேலையும் வாங்கிக்கொடுத்தார்.

ராமனும் திருந்தியவனாய் மிகவும் சந்தோஷமாக வாழ்க்கையை நடத்தி வந்தான். சம்பளம் சொற்பமாக இருந்த போதிலும் .தாராளமாகச் செலவு செய்தான். அம்மாவுக்கு விலையுயர்ந்த புடவைகளை வாங்கிக்கொடுத்தான். டாக்சி வைத்து அம்மாவை சென்னையைச் சுற்றியுள்ள §க்ஷத்திரங்களுக்கு அழைத்துச் சென்று காட்டினான். வீ£ட்டுக்கு பிரிட்ஜ், டி,வி ஆகியவற்றை வாங்கிப்போட்டான். வெளி மனிதர்களின் பார்வைக்கு அவன் தன் நிலைமைக்கு மீறி ஆடம்பரமாக இருப்பதாகத் தோன்றியது உண்மைதான்.ஆனால் அவன் அம்மாவிற்கோ ராமன் ஒரு உத்தம புத்திரனாக மாறிவிட்டதாக நினைப்பு!

கோபாலனுக்கு மட்டும் மனதில் ஏதோ சந்தேகமும் உறுத்தலும் இருந்துகொண்டே இருந்தன. வெள்ளைக்காரன் கம்பனியில் ஸ்டெனோவாக இருக்கும் அவனுக்கு அங்கு நல்ல் சம்பளம். அவனாலேயே குடும்பச் செலவுகளை சமாளிக்க முடியாமல் விழிபிதுங்கித் திணறியபோது, ஒரு நகைக் கடையில் சாதாரண சம்பளத்துக்கு வேலை பார்க்கும் தம்பியால் எப்படி இவ்வாறு 'தாம்தூமெ'ன்று செலவழிக்க முடிகிறது? இதில் ஏதோ மர்மம் இருப்பதாய் அவனுக்குப் பட்டது. ஒன்றிரண்டு முறை ஜாடை மாடையாகத் தம்பியிடம் கேட்டும் கூட அவன் திருப்திகரமான பதிலைத் தராமல் ஏதேதோ சொல்லி மழுப்பியது அவனுடைய சந்தேகங்களை ஊர்ஜிதம் செய்தது.

அடுத்த தை மாதம். கல்யாண சீசன். அது மாதிரி முக்கியமான நாட்களில் நகைக்கடைகளில் கூட்டம் நிரம்பி வழியும். நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பெயர் பெற்ற வசந்த் ஜுவல்லரியில் கேட்கவே வேண்டுமா?.

அன்று எதிர் பாராத அளவிற்குக் கூட்டம். கடை ஆட்கள் பம்பரமாய்ச் சுழன்று சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

ராமன் தாலிகள் விற்கும் கவுன்டரில் சேல்ஸ்மன்.ஒரு வட நாட்டுக் குடும்பம் தாலி வாங்குவதற்காக வந்திருந்தது-- நாலைந்து ஆண்களும் ஆறேழு பெண்களும் இருந்தார்கள். ராமனுக்குத் தெரியும். இந்த மாதிரி ஆட்களை சுலபத்தில் திருப்திப்படுத்த முடியாது.பெண்கள் ஒவ்வொரு டிஸைன் தாலியாக எடுத்துப் போடச் சொன்னார்கள். அலமாரிகளே கிட்டத்தட்டக் காலி. அவைகளை ஆண்களிடம் காட்டி அவர்களுடைய யோசனையைக் கேட்டார்கள். ஒருவருக்குப் பிடித்தது மற்றவருக்குப் பிடிக்கவில்லை இப்படியாக வியாபாரம் இழுத்துக்கொண்டே போயிற்று. அவர்கள் நடந்துகொண்ட விதத்தைப் பார்த்தால் சீக்கிரத்தில் வியாபாரத்தை முடிப்பதாகத் தோன்றவில்லை மேஜையில் விதவிதமான தாலிகள் இறைந்து கிடந்தன. எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்துத்தான் அவர்களுக்குப் பிடித்ததைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதால் அவைகளை எடுத்து அலமாரியில் வைக்கவும் அவர்கள் விடவில்லை.
ராமனுக்கு அலுப்புத் தட்டியது. சட்டென்று ஒரு நொடி சுதாரித்துக்கொண்டான். அவர்கள் தங்களுக்குள் தீவிர விவாதத்தில் ஈடுபட்டிருந்தபோது,அவன் மின்னல் வேகத்தில் கடைக்குள்ளே சென்று விட்டுத் திரும்பி வந்தான்.

அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு மனிதன் மட்டும் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தது ராமனுக்குத் தெரியாது. அந்த ஆள் மட்டும் தாலி செலக்ஷனில் பங்கேற்காமல் ஒரு மூலையில் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது சற்று வித்தியாசமாகத்தான் இருந்தது. அவன் கைகளில் நிறையப் பைகளை வைத்திருந்தான். பார்த்தாலே அந்த வட நாட்டுக் கும்பலின் வீட்டின் வேலைக்காரனாக இருக்கலாம் என்று தோன்றியது. ஒரு வழியாக அவர்கள் தங்களுக்குப் பிடித்தமான தாலிகளை

வாங்கிக்கொண்டு கிளம்பியபோதுதான் ராமனுக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

நிறைய வாடிக்கையாளர்கள் வரும்பொதெல்லாம் முதலாளி ஸ்டாக்கைச் சரி பார்ப்பது வழக்கம்.அன்றும் கடை மூடுவதற்கு முன்னால் நகைகளின் கையிருப்பை சரிபார்த்தபோது அவருக்கு ஒரு அதிர்ச்சி! நான்கு தாலிகள் குறைவாயிருந்தன. அவருக்குக் கையும் ஓடவில்லை .காலும் ஓடவில்லை.மனதில் பெரும் குழப்பம். ஆனாலும் ராமனை அவர் எள்ளளவும் சந்தேகிக்கவில்லை. காரணம் அவன் சுந்தரத்திற்கு உறவு. சுந்தரம் எந்த அப்பழுக்கும் இல்லாத கண்ணியமான பெரிய மனிதர்.

இருந்தாலும் உண்மையான நிலையை அறிய, ராமனிடம் துருவித் துருவி விசாரித்தார். எப்படித் திருட்டுப் போயிருக்கலாம் என்று பலவித யூகங்கள்; கடைசியில் அன்று கடையில் தாலி வாங்கியவர்களின் விலாசங்கள் பில் புத்தகத்திலிருந்து திரட்டப்பட்டன. வடநாட்டுக் குடும்பத்தினர் கும்பலாக வந்திருந்ததால் அவர்கள் மீது லேசாக சந்தேகம் படர்ந்தது,

முதலாளி வசந்த், ராமன், மற்றும் சில கடை ஊழியர்களுடன் முதலில்அந்த விலாசத்திற்கு விரைந்தனர். நடந்ததைச் சொன்னார்கள்.

குடும்பத் தலைவர் பதறிப் போனார். அவரும் ஒரு வியாபாரியானதால் வசந்தின் நிலைமை கண்டு இரக்கப்பட்டார். அதே சமயம் தங்கள் மீது இம்மியளவும் சந்தேகப் பட வேண்டாம் என்றும் தங்கள் குடும்பத்தில் யாருமே அந்த அளவுக்குக் கீழ்த்தரமாக நடக்கக் கூடியவர்கள் இல்லை என்றும் மன்றாடினார். வசந்திற்கும் அவர் கூறியதில் நியாயம் இருப்பதாப் பட்டது. அவர்கள் நடந்து கொண்ட விதம் கண்ணியமாகவும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டும் இருந்தது.

ஆனால் அங்கிருந்த வேலையாள் மட்டும் ராமனையே வைத்த கண் வாங்காமல் முறைத்துப்பார்த்துக் கொண்டிருந்தான். ஏனோ ராமன் அவன் பார்வையை தவிர்த்து வேறெங்கோ பார்த்துக்கொண்டிருந்தான்.

திருட்டு எப்படி நடந்திருக்கும்?-இதுதான் வசந்தின் மண்டையைக் குடைந்த கேள்வி.

அப்போது ராமன் அந்த வேலையாளை சுட்டிக் காட்டி அந்த ஆளைத் தான் சந்தேகப் படுவதாக வசந்தின் காதில் கிசுகிசுத்தான்.

வசந்த் அவனை அருகில் அழைத்தார்.எதிர்பாராதவிதமாகப் பொறி கலங்கும்படி பளாரென்று அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். ஒரு சின்ன விசாரனையே நடத்தினார். உரத்த குரலில் மிரட்டினார். கொஞ்சமும் இதை எதிர்பார்க்காத அந்த ஆள்

பதறிப் போனான். அவர் கால்களில் தடாரென்று விழுந்து அழ ஆரம்பித்தான்.

அப்போது அந்தக் குடும்பத்தலைவர் குறுக்கிட்டுப் பேசினார்.

"அந்த ஆள் எங்கள் வீட்டு வேலையாள் கன்யாலால். எங்களுக்கு தூரத்து உறவு கூட. பாவம் பிறவியிலேயே ஊமை. ஆனால் நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் அவனை யாரும் மிஞ்ச முடியாது.கை படு சுத்தம். இன்று அவன் கவுண்டருக்கு அருகில் கூட வராமல் தூரத்தில் தான் நின்றுகொண்டிருந்தான்.அவன் கண்டிப்பாக இந்தத் திருட்டுக்குக் காரணமாக இருக்க முடியாது என்பதை நான் திட்ட வட்டமாகச் சொல்ல முடியும். அதனால் எக்காரணம் கொண்டும் அவனைத் தயவு செய்து சந்தேகப்படாதீர்கள்." என்று கெஞ்சாத குறையாகக் கேட்டுக்கொண்டார்.

ஆனால் வசந்திற்கோ ராமன் சொன்னது உண்மையாயிருக்குமோ என்று சந்தேகம். அதனால்,விழிகளை உருட்டிக்கொண்டு மீண்டும் கண்யாலாலை நோக்கிக் கத்தினார்: "திருட்டுப் பயலே உண்மையைச் சொல்லி¢டு, நீதானே அந்தத் தாலிச் சரடுகளைத்திருடினாய்? அதையெல்லாம் எங்கெ ஒளிச்சு வச்சிருக்கே, மரியாதையாத் திருப்பிக் கொடுத்துட்டா, இத்தோட விட்டுடுவோம். இல்லைன்னா போலீசுலே கம்ப்ளைன்ட் பண்ண வேண்டி வரும். அப்போ உன் கதி என்ன ஆகும்னு உனக்கே தெரியும், ஜாக்கிரதை"

தன்மீது அபாண்டமாகப் பழி சுமத்தப்படுவதை எண்ணிக் கலங்கிய கன்யாலால் கண்ணீர் விட்டுப் புலம்பினான். ஜாடையால் கெஞ்சினான்.திருடவே இல்லை என்று சத்தியம் செய்து காட்டினான்.எல்லாருடைய காலிலும் மாறி மாறி சாஷ்டாங்கமாக விழுந்தான். திரும்பத்திரும்ப எல்லோரையும் கும்பிட்டு, தனக்கு எதுவுமே தெரியாது என்பதை ஜாடை முலம் அறிவித்தான்.அவனைப் பார்ப்பதற்கே பரிதாபமாயிருந்தது.

போலீசில் புகார் தரலாம் என்று ஒரு கடை ஊழியர் சொன்னபோது, ராமனுக்கு அதில் ஏனோ ஒப்புதல் இல்லை. அவன் முகத்தில் ஏதோ கவலை படர்ந்திருப்பதும் அவன் பதட்டத்தோடிருப்பதும் நன்றாகவே தெரிந்தது. அவன் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருக்கலாம். இருந்தாலும் தன் பங்கிற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற உந்தலில் கன்யாலிடம், "டேய் உன் மீதுதான் எங்களுக்கெல்லாம் சந்தேகம், உண்மையைச் சொன்னால் பிழைத்தாய். இல்லாவிட்டால் நடக்கறதே வேறு" என்று மிரட்டிப்பார்த்தான்

அப்போதுதான் அந்த நாடகத்தின் எதிர்பாராத கிளைமாக்ஸ் அரங்கேறியது.

கண்யாலால் கோபத்துடனும் வெறியுடனும் ராமன் மேல் புலிபோலப் பாய்ந்தான். அவன்

சட்டையைப் பிடித்துப் பயங்கரமாக உலுக்கினான். பேச முடியாவிட்டாலும் சைகை மூலமே தன் மனதில் தேங்கி இருந்தவற்றை வெளியிட்டான்.
கூடியிருந்தவர்களுக்கு அவன் கீழ்க்கண்டவாறு சொல்லத் துடிக்கிறான் என்பது புரிந்தது. ஒரு கைதேர்ந்த நடிகனைப் போல் தன் உணர்ச்சிகளைத் தத்ரூபமாக நடித்துக்க் காட்டி விளங்க வைத்தான்.

"அடே அயோக்கியா! என்னையா திருடன் என்கிறாய். நீ தான் அந்த நகைகளைத் திருடியவன் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். எந்தக் கோவிலிலும் சத்தியம் செய்யத் தயார். நீ பூனை போல் பதுங்கி கைகளில் தாலிகளை மறைத்துக்கொண்டு கடைக்குள் சென்றதை நான் என் கண்களாலேயே பார்த்துவிட்டேன். கடையினுள் சென்று, கணக்கு லெட்ஜர்களுக்கு நடுவில் அவசரமாக ஒளித்து வைத்ததும் எனக்கு நல்லாவே தெரியும். என் வாயாலே உன்னைக் காட்டிக் கொடுக்க வேண்டாம் என்று தான் பொறுமையா இருந்தேன். என்னை உண்மையைச் சொல்லும்படி நீயே உசுப்பிவிட்டுட்டே. நீ எடுக்கல்லேன்னு இந்த சாமி படத்துக்கு முன்னாடி சத்தியம் செய், பார்க்கலாம்"

ராமன் எதிர்பாராத இந்த பலத்த தாக்குதலால் நிலை குலைந்து சிலையனான். ஒன்றும் பதில் சொல்லத் தெரியாதவனாய்த் தவித்தது அவனைக் குற்றவாளி என்று காட்டிக்கொடுத்தது. எல்லாரும் கடைக்குப்போனார்கள். லெட்ஜர்களுக்கு நடுவில் தாலிகள் ஒளித்து வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. வசமாக மாட்டிக்கொண்ட ராமன் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. எத்தனை நாட்களாக அவன் இப்படி மற்றவர் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு இப்படித் திருடியிருக்கிறானோ என்ற கேள்வியும் எழுந்தது. அவன் மாமா சுந்தரத்துக்கு விஷயம் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது. " நன்றி கெட்ட அந்தப் பயலை போலீசில் ஒப்படைத்துவிடுங்கள். அதுதான் அவனுக்குச் சரியான் தண்டனை. என் முகத்திற்காகப் பார்க்க வேண்டாம்," என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் சுந்தரம்.

சுந்தரத்தின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த விரும்பாததால் வசந்லால் அப்படிச் செய்யவில்லை . வேலையை விட்டு ராமனை உடனடியாக நீக்கியதோடு நின்றுவிட்டார்.

இன்னொரு சந்தோஷ சமாசாரம்! கன்யாலால் அந்த ஜுவல்லரியில் இரண்டாவது வாட்ச்மேனாக அமர்த்தப்பட்டார்.

லட்சுமி அம்மாள் கதறவில்லை, கண்ணீர்விடவில்லை. "அவன் ரொம்ப நாளாவே ஆடம்பரமா செலவு செஞ்சப்பவே என் மனசுக்குள்ளே லேசா பொறி தட்டிச்சு. பெரியவன் சொன்ன போதும் நான் நம்பலை. ஆனா திருட்டும் நம்பிக்கைத் துரோகமும் பண்றவனுக்கு கடைசியிலே இது தான் கதி. நன்றாக அனுபவிக்கட்டும்" என்று தனக்குத் தானே சமாதானம் செய்துகொண்டாள். அவள் பார்வையில் பெரிய மகன் கோவிந்தன்

இப்போது சத்புத்திரனாகத் தெரிந்ததில் சற்றும் ஆச்சரியமில்லை.

e-mail: gurusubra@yahoo.com

செப்டம்பர் 2006 இதழ் 81 -

23. ஒரு கைதியின் மௌனம் கலைந்தபோது..! - குரு அரவிந்தன் -

என்றுமில்லாதவாறு அந்தச் சிறைச்சாலை பரபரப்பாக இருந்தது. கடந்த இரண்டு நாட்களாக சிறைச்சாலையின் முன்பகுதியை மட்டும் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டிருந்தபோதே யாரோ அங்கு வருகை தரப்போகிறார்கள் என்பதைக் கைதிகள் புரிந்து கொண்டார்கள். இப்படியான சம்பவங்கள் சுதந்திரதின விழாவின் போதோ அல்லது அரசியல் வாதிகள் யாராவது பிறந்ததினம் கொண்டாடும் போதோ மட்டும்தான் நடப்பதுண்டு. அப்போதெல்லாம் வாய்க்கு ருசியாய் நல்ல சாப்பாடும் இனிப்பும் கிடைக்கும். சுதந்திரதின விழா என்றால் சிறிய குற்றம் செய்து சிறைக்கு வந்தவர்களில், நன்னடத்தையில் உள்ளவர்களுக்குச் சில சமயம் சிறையிலிருந்து விடுதலையும் கிடைப்பதுண்டு;. சென்ற மாதமே, தேசியக் கொடியேற்றி ஜனகனமன பாடிச் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் எல்லாம் முடிந்துவிட்டன. எனவே யாரோ அரசியல் வாதிகள்தான் வரப்போகிறார்கள் என்பதைக் கைதிகள் ஊகித்துக் கொண்டார்கள். என்றுமில்லாத அதிசயமாய் அன்று சிறை அதிகாரிகள்கூட நேர்த்தியாக உடை அணிந்து வந்திருந்தார்கள். அதிகாலைத் தூக்கத்தைக் கலைத்துக் கொண்டு சிறைச்சாலையில், பெண்கள் பகுதியில் பவானி படுத்திருந்த அறை வாசற் கதவு திறக்கப்பட்டது. என்ன, ஏது என்று தெரியாததால், பவானி வெறுமனே கண்களை மூடிக் கொண்டு தூங்குவது போன்ற பாவனையோடு மௌனமாகப் படுக்கையிலேயே கிடந்தாள். யாரோ அருகே நடந்து வரும் சத்தம் கேட்டது.

'எழுந்திரு..!' என்றாள் அருகே வந்த பெண் பணியாளர். பவானி எழுந்து நின்று நித்திரைத் தூக்கத்தோடு சோம்பல் முறித்தாள். வந்தவள் வாட்டசாட்டமாய் சிறைப் பணியாளருக்கு உரிய சீருடையில் இருந்தாள். பெண்மையின் நளினம் கொஞ்சம்கூட இல்லாமல், ஆண்மைத் தன்மையின் அகங்காரத்தோடு இருப்பதுபோலத் தோற்றம் தந்தாள். இப்படிப் பட்டவர்களிடம் வாய் திறந்தாலே, 'படார்' என்று கன்னத்தில் ஓங்கி அறைதான் விழும் என்பதைச் சிறைச்சாலையில் பெற்ற அனுபவமூலம் உணர்ந்து கொண்ட பவானி, எதுவும் பேசாது அவளையே பார்த்தபடி நின்றாள்.

'இந்தா இதைப்பிடி, குளிச்சு உடைமாத்திக் கொண்டு சீக்கிரம்வா' என்று அவளது கையிலே சலவை செய்த வெள்ளைநிற சேலையையும், மேல் அங்கியையும் திணித்தாள் அந்தப் பெண் பணியாள்.

எதுவும் பேசாது பவானி குளியலறைக்குச் சென்று குளித்து உடை மாற்றிக் கொண்டு வந்தாள். தனக்குமட்டும் அதிகாலையில் ஏன் இந்த உபசாரம் என்பது அவளுக்குப் புரியவில்லை. ஆண் பெண் என்ற வித்தியாசம் இல்லாமல், சந்தர்ப்பம் கிடைத்தால் அவளது இளமையைப் பருகத்துடிக்கும் எத்தனையோ வக்கிரப் பேர்வழிகள் அங்கேயே கண்முன்னால் காத்திக்கிறார்கள் என்பதை அவள் அறிவாள். சிறைச்சாலைக்குள் நடக்கும்

எத்தனையோ வேண்டாத சம்பவங்கள் பற்றி ஏற்கனவே இவள் நிறையக் கேள்விப் பட்டிருந்ததால் கொஞ்சம் நடுக்கமாகவே இருந்தது.

'தலை வாரினியா, இதென்ன பத்திர காளிமாதிரி முடியை விரிச்சு விட்டிருக்கிறாய், போடி சீக்கிரம் தலையை வாரிட்டுவா!' என்று மீண்டும் விரட்டினாள் அந்த பணியாளர். யாரோ என்னைப் பெண் பார்க்க வருவதுபோல் ஏன் இந்த ஆர்ப்பாட்டம்? இவள் அவசர அவசரமாகச் சீப்பை எடுத்து தலை வாரிக் கொண்டை முடிந்து கொண்டு வந்தாள். முகத்திலே ஒருவித சோகம் குடியிருந்தாலும், அன்றலர்ந்த தாமரையாய் முகம் பளீச்சென்றிருந்தது.

கறுப்பென்றாலும் இவளிடம் ஒருவித வசீகரம் குடிகொண்டிருக்கிறது என்பதை மனதுக்குள் பதித்துக் கொண்டாள் அந்தப் பெண் பணியாளர்.சற்று நேரத்தால் பெரிய அதிகாரி ஒருவர் அங்கே வந்தார். 'இவளா..?' என்ற சந்தேகத்தோடு அவளை மேலும் கீழும் பார்த்தார். 'பெயர் என்ன?' என்று கேட்டார், 'பவானி' என்று ஒற்றைச் சொல்லில் இவள் பதில் சொன்னாள். 'திமிர் இன்னும் அடங்கவில்லை' என்று மனதுக்குள் கறுவிக்கொண்டு, அவளது அறை சுத்தமா இருக்கிறதா என்று எட்டிப் பார்த்தார்.

'நீயா பொறுப்பு?' என்று, திரும்பி அந்தப் பெண் பணியாளரைக் கேட்டார்.

'ஆமா!' என்றாள் அவள்.

'அவளைச் செக் பண்ணினியா?' சந்தேகத்தோடு கேட்டார்.

'இல்லை!' என்றாள்.

'திரும்பவும் ஒரு தப்புச் செய்ய இடம் கொடுக்காதே, கூட்டிட்டுப்போ..!' குரலில் அதிகாரத் தோரணை தெரிந்தது. பெண் பணியாளர் பயந்துபோய் பவானியின் கையைப் பிடித்து தறதறஎன்று ஒதுக்குப் புறமாய் இழுத்துச் சென்றாள். பிடியின் இறுக்கத்தில் வேதனை தாங்க முடியாமல் பவானி கையை உதறவே பணியாளருக்குக் கோபம் வந்துவிட்டது.

'ஏன்டி கொண்டதுதான் கொண்டீங்க உங்க ஊரிலை வெச்சுச் செய்திருக்கலாமே, ஏன்டி இங்கை வந்து தொலைச்சீங்க?' கடுப்போடு திட்டினாள். அவள் ஏன் தன்னைத் திட்டுகிறாள் என்பது மற்றக் கைதிகளுக்குப் புரியாவிட்டாலும் அவள் என்ன சொல்கிறாள் என்பது பவானிக்குப் புரிந்தது.

மறைவான ஒரு இடத்தில் அவளை விட்டு, அவளது ஆடைகளை உருவினாள் அந்தப் பெண் பணியாளர். பவானியோ வெட்கப்பட்டு இரண்டு கைகளையும் மார்புக்குக் குறுக்கே

கட்டிக் கொண்டு அவமானப்பட்டு நின்றாள்.

'நீ கெட்ட கேட்டுக்கு, உனக்கு வெட்கம் வேற வருகுதாக்கும்..!' என்று எரிச்சலோடு ஏசிக் கொண்டே, பவானி உடம்பில் ஏதாவது மறைத்து வைத்திருக்கிறாளா என்ற சந்தேகத்தோடு அவளது உடம்பில் ஓரிடமும் மிச்சம் விடாமல் தடவிப் பார்த்தாள். அவளது கைபட்ட இடமெல்லாம் நாக்கிளிப்புழுக்கள் ஊர்வது போன்ற உணர்வில், அவமானம் தாங்க முடியாமல் பவானி அப்படியும் இப்படியும் நெளிந்தாள்.

'சரி, டான்ஸ்ஸாடினது போதும், சீக்கிரம் வா!' என்று சொல்லிக் கொண்டே அந்தப் பணியாளர் இடத்தை விட்டகலவே, பவானி தாறுமாறாய்க் கிடந்த சேலையை எடுத்து மீண்டும் அணிந்து கொண்டு தனது அறைக்குச் சென்றாள்.

'இந்தபார், உன்னைப் பார்க்கப் பெரிய இடத்தில இருந்து வர்றாங்க. பவ்வியமாய் நடந்து கொள்ளணும், புரியுதா?' என்று அந்த அதிகாரிஅதட்டவே, அவள் சரி என்று தலை அசைத்தாள்.

'ஏதாவது ஏடாகூடமாய் நடந்து கொண்டியோ அப்புறம் எங்கிட்ட தப்பமாட்டாய், புரியுதா?' மீண்டும் மிரட்டினார்.

திடீரென யாரோ தடதடவென்று ஓடிவந்தார்கள். நிமிர்ந்து பார்த்தாள். கறுப்புப் பூனைகள். இவர்கள் எங்கே இங்கே? அரசியலோடு தொடர்புடையவர்கள் யாராவது வருகிறார்களோ?

அவர்கள் எல்லாப் பக்கமும் சூழ்ந்து கொண்டு, தங்களின் கட்டுப்பாட்டில் அந்த இடத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்களில் ஒருத்தன் வாக்கிரோக்கியில் ஏதோ சொல்லவே, சற்று நேரத்தில் அந்தப் பரபரப்புக்கு மத்தியில் திடீரென அந்தப் பெண்மணி தோன்றினாள். அவளது நடையிலும், பார்வையிலும் இளமைத் துடிப்பு துள்ளித் தெறித்தது. வெளிநாட்டு நாகரிகத்தில் வளர்ந்தவள்போலத் தோன்றினாலும், அடக்க ஒடுக்கமாய் அழகான பச்சை நிறத்தில் சேலை அணிந்திருந்தாள்.

அவள் சென்ற அறைக்குப் பவானியை அந்த அதிகாரி அழைத்துச் சென்றார்.

பவானி உள்ளே வந்ததும், தனிப்பட்ட முறையில் பவானியோடு ஏதோ பேச விரும்பியவள்போல, அருகே நின்ற மற்றவர்களைப் பார்த்து வெளியே செல்லும்படி சைகை செய்தாள்.

தயக்கத்தோடு அவர்கள் விலகிச்சென்றதும், ஒரு கணம் பவானியைத் தீர்க்மாகப் பார்த்துவிட்டு, 'உட்காரு' என்றாள். பவானி முதலில் தயங்கினாலும் ஏதோ மந்திரத்திற்குக்

கட்டுப்பட்டதுபோல அருகே உட்கார்ந்தாள்.

'என்னை யாரென்று உனக்குத் தெரியுதா?'

பவானி 'தெரியாது' என்று தலையசைத்தாள்.

'நான்தான் பிரியதர்ஸினி! என்றாள்.

பவானி, யாராய் இருக்கும் என்று சிந்தனையை ஓடவிட்டாள்.

'இன்னும் உனக்குப் புரியலையா?' என்றாள்.

மீண்டும் பவானி 'இல்லை' என்று கைகளை விரித்து சைகை செய்தாள்.

'என்னுடைய அப்பாவின் மரணத்திற்கு நீயும் ஒரு காரணம்!' என்றாள் அவள் நிதானமாக.

இப்போ பவானிக்கு ஏதோ புரிவதுபோலவும், அதேசமயம் திடீரென அவளைப் பார்த்ததில் அதிர்ச்சியாகவும் இருந்தது. என்னைத்தேடி இவள் இங்கே எதற்கு வந்தாள்? பவானியின் மனதைப் படித்தவள்; போல அவளே பதில் சொன்னாள். 'எனக்கு நிம்மதியில்லை. நடந்ததை எல்லாம் மறந்திடணும் என்றுதான் இருந்தேன். ஆனால் முடியலையே, என்ன நடந்தது என்று எனக்குத் தெரியணும்!' என்றாள்.

அவள் என்ன சொல்ல முற்படுகிறாள் என்பது இவளுக்குப் புரியவில்லை.

'உன்னோடு கொஞ்சம் தனியே பேசணும்!' என்று சொன்னவள், திடீரென

'நீயேன் இப்படிச் செய்தாய்?' என்று கேட்டாள்.

கேட்கும்போதே அவள் அழுதுவிடுவாள் போல இருந்தது.

பவானி அதற்குப் பதில் சொல்லத்தயங்கினாள்.

ஒற்றை வார்த்தையில் சொல்லக்கூடிய பதிலா, சொல்லி முடிப்பதற்கு!

பவானியின் நீண்ட மௌனம் அவளை மேலும் சங்கடப்பட வைத்தது. இவளிடம் இருந்து ஏதாவது முறையில் பதில் எடுக்கவேண்டும் என்பதில் அவள் ஆர்வம் காட்டினாள்.

'என்னுடைய அப்பா மிகவும் நல்லவர், அவருடைய நல்ல குணங்கள் பற்றி உனக்குக் கொஞ்சம்கூடத் தெரிந்திருக்க நியாயமில்லை! என்ன இருந்தாலும் நீ இதைச் செய்திருக்கக்கூடாது..!' என்றவளின் கண்கள் கலங்கின.

அவள் மனசுக்குள் அழுகிறாள் என்பது இவளுக்குச் சட்டென்று புரிந்தது.

அதே போன்ற வலியையும் வேதனையையும் இத்தனை காலமாய் இவளும் அனுபவித்துக் கொண்டுதானே இருக்கிறாள் என்பது அவளுக்குப் புரிந்திருக்க நியாயமில்லை. அவள் குளிரூட்டிய அறையில் சொகுசுமெத்தையில் படுத்துக் கொண்டு அனுபவிக்கும் அதே வேதனையை, இவளோ சீமென்ட்டுத் தரையில் காற்றோட்டமில்லாத சிறைச்சாலையில் கைதியாய் இருந்து கொண்டு அனுபவிக்கிறாள். அவ்வளவுதான்!

'அவள் என்ன சொன்னாலும், ஏசினாலும் பேசினாலும் தேவையில்லாமல் நீ வாய் திறக்கக்கூடாது' என்று சிறைச்சாலை அதிகாரி காலையில் திரும்பத் திரும்ப இவளை எச்சரித்துவிட்டுச் சென்றது ஞாபகம் வந்தது. எனவே மௌனம் காப்பது நல்லது என்று நினைத்தவள், வாய் திறவாது நினைவுகளை மீட்டிப் பார்த்தாள்.

'எனக்கும் புரியுது பிரியா, உன்னுடைய அப்பா மிகவும் நல்லவர்தான் ஆனால் தவறானவர்களால் வழிகாட்டப்பட்டு அவர்கள் விரித்த வலைக்குள் சிக்கிக் கொண்டு கண் மூடித்தனமாய் இருந்ததால் வந்த வினைதான் இது! நீ உன்னுடைய அப்பாவை மட்டும்த்தான் இழந்தாய், நான் என் குடும்பத்தையே இழந்து விட்டேன் என்பது உனக்குத் தெரியுமா?; என்னுடைய அப்பாவும், எங்கள்மேல் அன்பையும், பாசத்தையும் அள்ளியள்ளிக் கொட்டியவர்தான் என்பது உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. வயதான காலத்தில் காந்தியின் பக்தரான அவர் எந்த ஒரு பிரச்சனையும் வேண்டாம் என்றுதானே தானும் தன்பாடுமாய் வீட்டிலே அடைந்து கிடந்தார். காரணமில்லாமல் அவரை வெளியே இழுத்து வந்து வீதியில் வைத்துச் சுட்டுக் கொன்றபோது இதே கேள்விதான் என் மனதிலும் எழுந்தது. சமாதானத்தை நிலை நாட்டவந்தவர்களா, அல்லது எங்களைக் கொன்று குவிக்க வந்வர்களா என்ற சந்தேகம் அப்போதுதான் எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்டது. நியாயம் கேட்டதற்காகவே என்னுடைய அக்கா அந்த சிப்பாய்களால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டாள் என்பதாவது உனக்குத் தெரியுமா பிரியா? இதுபோன்ற வேதனை தரும் பலசம்பவங்கள் எங்க மண்ணிலே நடந்தது உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை, ஏனென்றால் எல்லாமே மூடிமறைக்கப் பட்டுவிட்டன. வேலியே பயிரை மேய்ந்தால் யாரிடம் நாங்கள் முறையிடுவது? பவானியின் நீண்ட மௌனத்தால் பிரியா மீண்டும் நிலை குலைந்தாள்.

'சொல்லேன், நீ ஏன் இப்படிச் செய்தாய்?' இவளது கைகளைப் பற்றிக் கொண்டு, விடை தெரிந்து கொள்ளும் ஆவலில் அவள் மீண்டும் கேட்டாள்.

பதில் சொல்வதா, விடுவதா? இனியும் பொறுப்பதில் பயனில்லை என்று பவானி நினைத்தாள். அவளை அறியாமலே, ஆற்றாமையால் மனசுக்குள் வெந்து கொண்டிருந்த வார்த்தைகள், மௌனத்தை உடைத்து கொண்டு வெளியே தெறித்தன.

'ஏன்னா, என்னுடைய அப்பாவும் நல்லவர்தான்!' என்றாள் பவானி.

எதிர்பாராமல் வந்து விழுந்த வார்த்தையின் உண்மை சுடவே, அந்த அதிர்ச்சியில் பிரியா கலங்கிப்போனாள். இவளது கைகளைப் பற்றியிருந்த அவளது கைகள் தானாகவே தளர்ந்தன.

'ஐயாம் ஸொறி..!' என்று மட்டும் சொல்லிவிட்டு நடைபிணமாய்; வெளியேறினாள் பிரியா.

மே 2008 இதழ் 101

kuruaravinthan@hotmail.com

24. மீளவிழியில் மிதந்த கவிதை - குரு அரவிந்தன் -

மின்னல் அடித்ததுபோல எல்லாமே சட்டென்று நடந்துவிட்டது. அதிர்ச்சியில் இருந்து நான் மட்டுமல்ல, அவளும் மீளவில்லை என்பதை அவளது அந்தப் பிடி உணர்த்தியது. ஏவ்வளவு லாவகமாய் அவள் என்னைக்கடந்து சட்டென்று திரும்பி பின்பக்கமாய் வந்து என்னை இறுக்கி அணைத்தாள் என்பது எனக்கே வியப்பாக இருந்தது. தன்னைப் பாதுகாக்க என்னை முன்னால் தள்ளி நிறுத்தினாளோ, அல்லது எனது ஆண்மையில் அவளுக்கு இருந்த அதீத நம்பிக்கைதான் காரணமோ தெரியவில்லை, எதுவாய் இருந்தால் என்ன, என்னை நம்பிச் சரணடைந்தவளைக் காக்கவேண்டியது எனது பொறுப்பு என்பதை உணர்ந்து அவளுக்கு அடைக்கலம் கொடுத்தேன்.

தற்செயலாகத்தான் அது நடந்தது, பாடசாலையால் வரும்போது அவளது பென்சில் பெட்டி தெருவில் விழுந்து விடவே அதைக் குனிந்து எடுக்க முயன்றபோது, முன்வீட்டு வாசலில் படுத்திருந்த நாய் தன்னைத் தாக்கத்தான் எதையோ எடுக்கிறாள் என்ற பயத்தில் அவளைத் துரத்தத் தொடங்கியது. அந்த சமயம் பார்த்து நானும் எங்கள் வீட்டுக் கேற்ரைத் திறந்து வெளியே வந்தேன். அதனால்தான் பாதுகாப்புத்தேடி ஓடிவந்து அருகே நின்ற என்னைக் கட்டிப்பிடித்தாள். அழகு ஓவியம் ஒன்று இதமான உடம்பும் சதையுமாய் என்னைத் திடீரெனக் கட்டிப் பிடித்ததில் நான் அதிர்ந்து போனதென்னவோ உண்மைதான். அதுவும் சிலநாட்களாக யார்மீது எனக்கு ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டிருந்ததோ, அவளே வலியவந்து என்னை அணைப்பதென்றால்? ஒரு ஸ்லோமோஷன் காட்சிப்படம் போல அந்தக் காட்சி என் மனதில் திரும்பத்திரும்ப நிழலாடிக் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. சொர்க்கத்திற்குப் போனது போன்ற அந்த இனிய சுகம் அதிக நேரம் நீடிக்கவில்லை. அதிர்ச்சியில் இருந்து அவள் மீண்டபோது, பெண்மைக்கே உரிய நாணம் அவளைச் சட்டென்று விலகி நிற்கவைத்தது. வேர்த்து வியர்திருந்த முகத்தில் இன்னமும் பயக்களை தெரிந்தது. இப்பொழுதும் அவளது உடம்பு லேசாகப் பதறிக் கொண்டிருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. மூச்சு வாங்க ஓடி வந்ததில் அவளது மார்பகம் மேலும் கீழும் ஏறி இறங்கியது. பாடசாலையின் மெல்லிய வெள்ளைச் சீருடை ஆங்காங்கே வியர்வையில் தோய்ந்து போனதில் அந்த இடத்தை மட்டும் சூரியவெளிச்சம் வட்டம் போட்டு அதிசயமாய்க் காட்டியது. வயசுக் கோளாறோ என்னவோ எனது பார்வை சட்டென்று அங்கேபட்டுத் தெறித்தபோது, அவள் என்னை அணைத்தபோது ஏற்படாத உணர்வு அந்த வனப்பில் கிளர்ந்தெழுந்தது. வேறு நேரம் என்றால் எனது பார்வையின் உக்கிரத்தை அவள் புரிந்து கொண்டிருப்பாள், இப்போதைய நிலையில் சுயமாக இயங்க முடியாமல் தடுமாறியதில் அவள் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை என்பது எனக்குப் புரிந்தது. தப்பாத இடத்தில் தப்பான பார்வை என்பதால் வலிந்து பார்வையைத் திசை திருப்பினேன்.

‘இதிலே கொஞ்ச நேரம் இருங்க..!’ அருகே இருந்த மரக்குற்றியைக் காட்டிச் சொன்னேன்.

அவள் பாதையைத் திரும்பிப் பார்த்தபடியே தயக்கத்தோடு உட்கார்ந்தாள். உட்கார்ந்ததும் ஓடிச்சென்று ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தேன்.

அதை வாங்கிய அவள் என்ன செய்வது என்று தெரியாமல் உட்கார்ந்தபடியே என்னை மேலும் கீழும் பார்த்தாள்.

'பயந்து போயிட்டீங்க, இதைக் கொஞ்சம் குடியுங்க..' என்றேன்.

சுயமாக இயங்கமுடியாமல் எனது வழி நடத்தலுக்காகவே காத்திருந்தவள்போல, மளமளவென்று தண்ணீரைக் குடித்தாள்.

முருகனுக்கு ஒரு பிள்ளையார் யானை உருவில் வந்தது போல எனது காதலுக்குப் பைரவர் நாயின் உருவில் உதவிக்கு வந்தாரோ? என்று தெருவிலே விழுந்து கிடந்த புத்தகங்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கும்போதும் மனசுக்குள் யோசித்தேன். பொறுக்கிய புத்தகங்களை அப்படியே எடுத்து வந்து அவளிடம் கொடுத்தேன். வாங்கிக் கொண்டாள், நன்றி சொல்லவில்லை. தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே தெரியாத அதிர்ச்சி நிலையில் அவள் இருந்தாள்.

'ஆ யூ ஓகே..?' என்று வினாவினேன்.

கனவுலகிலிருந்து கலைந்து 'ஓம்' என்று என்னை நிமிர்ந்து பார்த்துத் தலை அசைத்தவள், மீண்டும் மெல்லத் தலை குனிந்தாள். அதுவே அவள் அழகிற்கு அழகு சேர்த்தது.

சற்றே தலை குனிந்தாள், சாமீ! இவளழகை
எற்றே தமிழில் இசைத்திடுவேன்? கண்ணிரண்டும்
ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனோ?
மீள விழியில் மிதந்த கவிதையெல்லாம்
சொல்லில் அகப்படுமோ?

ஏக்கப் பெருமூச்சு விட்டபடி மெதுவான எழுந்து வீதியத் திரும்பிப் பார்த்தபடியே வீடு நோக்கி நடந்தாள். என்னைத்தான் திரும்பிப் பார்த்தாளோ அல்லது திரும்பவும் தன்னை அந்த நாய் துரத்தலாம் என்ற பயத்தோடு திரும்பிப் பார்த்தாளோ தெரியவில்லை. அவளுக்கு சற்றுமுன் நடந்ததை நினைத்துப் பயம் இருந்திருக்கலாம். நாய் துரத்தாவிட்டாலும் என் மனம் அவளைப் பின்னால் துரத்திக் கொண்டே சென்றதை அவள் அறிந்திருக்க நியாயமில்லை. ஏக்கப் பார்வையோடு அவள் பிரிந்தபோது, பாரதி கண்ட கனவுகளை எனக்குச் சொந்தமாக்கி, அவளிடம் கண்ட அந்த ஆளை விழுங்கும் அழகை எனக்குள் மென்று சுவைத்துப் பார்த்தேன். நான் நானாக இல்லை என்பதை என்னைவிட்டு

அவள் பிரிந்த அக்கணமே நான் உணர்ந்து கொண்டேன்.

அவள் என்னைவிட ஒரு வகுப்பு மேலே படித்துக் கொண்டிருந்தாள். பள்ளிச் சீருடையில் கூட்டமாக மாணவிகள் போகும்போது மற்றவர்களைவிட அவள் மட்டும் வித்தியாசமாய் என் கண்களில் பட்டாள். தினமும் எத்தனையோ பெண்களைப் பார்த்தாலும், என்னைக் கவரக்கூடிய ஏதோ ஒருவித கவர்ச்சி அவளிடம் இருந்திருக்கிறது. அதுதான் என் மனம் நேரகாலம் தெரியாமல் அவளைத் துரத்தித் திரிகிறது என்பதை நான் புரிந்து கொண்டேன். அவள் கல்லூரி சீருடையில் மட்டுமல்ல எந்த உடையிலும் சிரித்த முகத்தோடு அழகாகவே இருந்தாள். அந்த நிகழ்வின்பின் என்னைக் கண்டால் ஒரு புன்சிரிப்புடன் தலை குனிந்து கொள்வாள். பெண்மையின் நளினம் அவளது ஒவ்வொரு அசையிலும் வெளிப்படுவதைத் தினமும் அவதானித்தேன். எனக்குள் மெல்ல மெல்லக் காதலை வளர்த்துக் கொண்டேனே தவிர காதலைச் சொன்னதில்லை. சொல்ல நினைத்தாலும் விலாங்கு மீன்போல நழுவிக் கொண்டேயிருந்தாள். ஒரு நாள் படிப்பதற்கு ஏதாவது கதைப்புத்தம் இருக்குமா என்று வலிய வந்து கேட்டாள். கிடைத்த சந்தர்ப்பத்தை ஏன் நழுவவிடுவான் என்று குறுஞ்சிமலர் நாவலை அவளிடம் கொடுத்தேன். படித்துவிட்டு மிகவும் அருமையான நாவல் என்று வர்ணித்தாள். ஏன் என்று வினாவினேன். அதில் வரும் கதாநாயகனின் பெயர் தனக்கு மிகவும் பிடித்த பெயர் என்றாள். அதன்பின் எங்களிடையே புத்தகப் பரிமாறல் அடிக்கடி தொடர்ந்து கொண்டிருந்தது. நாட்டின் போர்ச் சூழல் காரணமாக நாங்கள் பயந்து பயந்தே தினமும் வாழவேண்டி வந்தது. ஒருநாள் எங்கள் ஊரைநோக்கி இராணுவம் திடீரென முன்னேறுவதாகச் செய்தி வந்தது. நாங்களும் எங்கே போவது என்று தெரியாமல் அவசரமாக இடம் பெயர்ந்தோம். உயிர் வாழ ஆசைப்பட்டு ஆளுக்கொரு திசை நோக்கிச் சென்றதால் அவளை நான் மீண்டும் சந்திக்கவில்லை. நான் புலம் பெயர்ந்து வெளிநாடு வந்திருந்தேன். அவளும் அப்படியே ஏதாவது வெளிநாட்டிற்குப் போயிருக்கலாம் என்று என்னைச்சமாதானப் படுத்திக்கொண்டு மறைமுகமாக அவளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன்.

மின்னஞ்சல்கள் தினமும் நிறைய வந்து குவிந்து கொண்டிருக்கும். இலவசம் என்பதால் விரும்பியவர்கள் எல்லாம் திக்கெட்டில் இருந்தும் அனுப்பிக் கொண்டிருப்பார்கள். வேண்டாதவற்றை அழிப்பதே மிகவும் சிரமமாக இருக்கும். அன்றும் ஆர்வம் காரணமாக நண்பன் ஒருவன் அனுப்பிய மின்னஞ்சல் ஒன்றைத் திறந்து பார்த்தேன். வன்னியில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் பிரதி பெறுபவளின் பக்கம் என் கவனம் திரும்பியது. அவளேதான், இயக்கப் பெயராக இருக்கலாம் பெயர் மட்டும் மாற்றப்பட்டிருந்தது. அப்படி என்றால் அவள் அங்கேதான் இருக்கிறாளா? இது எப்படிச் சாத்தியமாயிற்று, ஒரு நாயைக் கண்டு பயந்து அந்த ஓட்டம் ஓடியவள், துப்பாக்கி ஏந்துவாளா? என்னால் கடைசிவரை நம்பமுடியாமலே இருந்தது. தமிழர் வாழ்ந்த நிலமெல்லாம் இராணுவத்தால் மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கப்பட்டது. யுத்தம் ஓய்ந்து வன்னி நிலம் பறிபோனபோது அவளுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. எந்த

ஒரு செய்தியும் அவளைப்பற்றிக் கிடைக்கவில்லை. தினமும் வரும் திடுக்கிடும் செய்திகளைக் கேட்கும்போதும், படங்களைக் காணொளிகளைப் பார்க்கும் போதும் அவளை நினைத்து என் மனம் வேதனையில் தடுமாறும்.

காதலர் தினத்திலன்று ரோஜாப்பூக்களை ஏந்திய கைகள் எல்லாம் அன்று கார்த்திகைப் பூக்களை ஏந்தி நின்றன. கார்த்திகைப் பூக்கள் சூடுவதற்கல்ல, அர்ப்பணிப்பதற்கே என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும் அர்பணிக்கும் அந்த மலர்கள் நிச்சயமாக அவளுக்காக இருக்கக்கூடாது என்று ஒவ்வொரு தடவையும் என்மனம் சுயநலமாய் நினைக்கவைக்கும். ஏனோ இம்முறை மட்டும் மலர் வைக்கும்போது என்னை அறியாமலே குலுங்கிக் குலுங்கி அழுதேன். அன்று காணொளியில் பார்த்த அந்தக் காட்சி, அவளது அந்த அலங்கோலம் என்னை மீண்டும் மீண்டும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உறைய வைத்திருந்தது. 'எதற்காக?' என்ற கேள்விக்குமட்டும் இதுவரை பதிலே கிடைக்கவில்லை.

மண்மீது கொண்ட காதலால்
மண்ணின் மானம் காக்கத்
தன்னையே தந்த அவளது அந்த
மீள விழியில் மிதந்த வலியெல்லாம்
சொல்லில் அகப்படுமோ?

Kuru Aravinthan < kuruaravinthan@hotmail.com
28 பெப்ருவரி 2011 1

25. - விதை - - ராம்ப்ரசாத் (சென்னை) -

வானம் பிரகாசமாக இருந்தது. அத்தனை வெயில். வெம்மை அதிகமாயிருந்ததாலோ என்னவோ ஒட்டுமொத்த சனமும் கிடைத்த நிழல்களில் பதுங்கிக் கொள்ள, அதையும் தாண்டி சிலர் வேகமாக பைக்குகளிலும், கார்களிலும் இடமும் வலமுமாக கடந்து போய்க்கொண்டிருந்தனர். கார்களில் சொல்வோர் பாடு பரவாயில்லை. ஏசி இருக்கும். பாவம், நடைராஜாக்கள் பாடி திண்டாட்டம்தான் என்று நினைத்துக்கொண்டே அன்னை பொறியியல் கல்லூரிக்கெதிரே இருந்த நிழற்குடையில் நின்றிருந்தார் வேதம்.

அவரைப் பற்றிய மேல்விவரங்கள் கொஞ்சம். அவர் ஒரு போலீஸ் அதிகாரி. வயது 42. உயரம் ஐந்தரை அடிக்கும் மேல். வாட்டசாட்டமான உடல்வாகு. கூடுவாஞ்சேரி போலீஸ் நிலையத்தில் சப் இன்ஸ்பெக்டர். அவர் அப்போது நின்றிருந்த இடத்துக்கு பக்கத்தில் தான் அவருக்கு வீடு. மதிய உணவுக்கு வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுத்தான் ஆபீஸ் செல்வார். சாப்பிடும் நேரம் வரை, டிரைவர் ஜீப்பை பெட்ரோல் போல எடுத்துசெல்வார். சாப்பிட்டவுடன், வேதம் மெயின் ரோட்டிலுள்ள அந்த பேருந்து நிலைய நிழற்குடையில் காத்திருக்க, ஜீப் வந்ததும் ஏறிக்கொள்வார். இது தினமும் நடக்கும் ஒரு நிகழ்வு. அப்படி அவர் அன்று காத்திருக்கையில் தான் அதை கவனித்தார்.

அவள் அழகாக இருந்தாள். உயரம் ஐந்தரை அடி. சுண்டினால் ரத்தம் வரும் நிறம். அவள் அந்தப் பொறியியல் கல்லூரி வாசலைத்தாண்டி வெளியே வருவதைப் பார்க்கையில் அவளுக்கு ஒரு பதினெட்டு வயதிருக்கலாமென்று தோன்றியது. அதற்கு காரணங்கள் இல்லாமலில்லை. அவள் கையில் இருந்தது ஒரு டிரா∴ப்டர். இது பொறியியல் கல்லூரிகளில் முதலாமாண்டு படிக்கும் மாணவர்கள் இன்ஜினியரிங் டிராயிங் பாடத்துக்குப் பயன்படுத்துவது. பொதுவாக முலாமாண்டு மாணவர்கள் பதினெட்டு வயதானவர்களாகத்தான் இருப்பார்கள். கிட்டத்தட்ட அவரின் மகள் வயதுதான். ஆனால், இறுக்கமாய் கறுப்பு நிறத்தில் ஒரு டி & ஜி டிசர்ட், டெனிம் ப்ளு நிறத்தில் அதைவிட இறுக்கமாய் ஒரு ஜீன்ஸ் பாண்ட் அவளின் அவயங்களை மிக மிக சத்தமாகக் கூவிக் காட்சிப்பொருளாக்கிக்கொண்டிருந்தன.

அந்த பஸ்ஸ்டாண்டில் அவரைப் போல் வெகு பலர் ஓரக்கண்களால் அவளையே நோட்டம் விடுவது தெரிந்தது. அதில் சிலர் அவளை விழுங்கிவிடுவது போல் பார்ப்பதையும் அவரால் கவனிக்கமுடிந்தது. இவர் கவனித்துக்கொண்டிருக்கையிலேயே சிலர் ரோட்டைக் கடந்து அவள் நின்ற பேருந்து நிறுத்தத்திற்கு சென்று நின்றுகொண்டனர். அவள் இது எதையும் கவனியாது தன்னுடைய மொபைலை நோண்டுவதும், அவ்வப்போது அதில் எதையோ படித்துவிட்டு சிரிப்பதுவுமாக இருந்தாள். வேதத்துக்கு நடப்பது எதுவும் சரியெனப் பட்டிருக்கவில்லை. அவர் ஆயாசம் கொண்டவராய் பக்கவாட்டில் திரும்ப அவர் கண்ணில் பட்டது அந்தக் காட்சி.

அந்த பஸ் ஸ்டாப்பின் அடுத்த முனையில் கால்களில் சப்பணிக்கால் போட்டு அமர்ந்திருந்த ஒருவன் அந்தப் பெண்ணையே வெறித்துக்கொண்டிருந்தான். வயது இருபத்தியிரண்டு இருக்கும். வெளுத்துப்போன சட்டை,அதில் ஆங்காங்கே நூல் வெளியே வந்திருந்தது, சில இடங்களில் பொத்தான்களே இல்லாமல் சேஃப்டி பின் போடப்பட்டிருந்ததை இங்கிருந்தே கவனிக்க முடிந்தது. புழுதிபட்ட தலைமுடி, சவரம் செய்யப்படாத முகம், ஒல்லியான உருவம், அடர் காப்பி நிறத்தில் ஒரு பாண்ட், அதுவும் கசங்கி சுருங்கி படுமோசமான நிலையில், காலில் செருப்பு கூட இருக்கவில்லை. அவன் கண்களைப் பார்க்கும் திசையை அவதானிக்கையில் அது அந்தப் பெண்ணின் கழுத்துக்குக் கீழே நிலைகுத்தியிருப்பதை அவரால் உணர முடிந்தது.

சற்று தொலைவில் ட்ராஃபிக் போல. கார்களும், சரக்கு லாரிகளும் விடாமல் ஹாரன் சத்தத்தை வைத்தே கூக்குரலிட்டுக்கொன்டிருந்தன. சிலர், கார் கண்ணாடி ஜன்னலைத் திறந்து எட்டிப்பார்த்து கத்தவும் செய்தனர். தவறாக எதையும் அனுமானித்துக்கொள்ளும் முன் ஒருமுறைக்கு இருமுறை சரி பார்த்துக்கொள்ளத்தோன்றியது. சற்றே அவர் பக்கவாட்டில் நடந்து அவனைக் கடந்து சிறிது தள்ளி நின்றுகொண்டு எதிரே பார்த்தார். அவள் இப்போதும் அவளின் மோபைலையே பார்த்தபடி நின்றிருந்தாள். அவர் திரும்பி அவனைப் பார்த்தார். அவன் பார்வை இப்போதும் அவள் மீதே. அதுவும் அவளின் கழுத்துக்கு கீழேயே. கொஞ்சம் விட்டாலும் ஓடிப்போய் அவள் கை பிடித்து இழுத்துவிடுவான் போலிருந்தது. அவருக்கு கோபம் வந்துவிட்டது.
அவனை நோக்கி திரும்பி நடந்து அவன் முன்னே நின்றார். அவன் பார்வை இப்போது அவளிடமிருந்து திரும்பி அவரின் போலிஸ் பூட் ஷூவில் நிலைகுத்தி நின்றது. அவனை மிரட்டும் தோணியில் அவர் லேசான அடித்தொண்டையால் உரும, அவன் திரும்பி மேலே தலை திருப்பி அவரைப் பார்த்தான். அவன் முகத்தில் எந்தவித சலனமும் இல்லாமல் இருந்தது அவர் கோபத்தை மேலும் கிளறி விட்டது.

'டேய், யார்ரா நீ?' அவனை அவர் அதட்ட, சில நொடிகள் அமைதி. பின்,

'ஸ்ஸ்.. ஸார், யாருங்க? என்னையா?' அவன் முகத்தில் இப்போதுதான் ஏதோ ஒன்றை புதியதாக கேள்விப்பட்டதான உணர்வு தெரிந்தது.

'என்னையே திருப்பி கேக்கறியா? நீ யார்ரா? இங்க என்ன பண்ற' இந்த முறை சற்று முரடாகவே கேட்டார் அவர்.

அவன் கேள்விகள் தெரிந்த காரத்தில் சற்று பயந்திருக்கவேண்டும் அல்லது வினோதமாக உணர்ந்திருக்கவேண்டும். எழுந்துகொண்டான். எழுகையில் அவன் பலவீனமாக இருப்பதாகத் தோன்றியது. அவன் உயரம் அப்போதுதான் தெளிவாகத் தெரிந்தது. ஆறு அடி இருக்கலாம். ஒல்லியாக இருந்தான். அவன் கைகள் நிதானமின்றி காற்றில்

பலவீனமாக அலைவதாகத் தோன்றியது.

'ஸ்ஸ்..ஸார், நா.. நான் .. இங்க.. சும்ம்ம்மா...' என்றபடியே அவன் இழுக்க, அவர் கோபம் எல்லையை மீறியிருக்கவேண்டும். நாக்கைத் துறுத்தி பற்களுக்கிடையில் கடித்தவாறே சற்று சுளித்தபடி அவர் வலதுகையை தூக்கி அவனை அறைய ஓங்க, அவன் அப்போதும் ஏதொரு உணர்ச்சியும் அற்று நின்றிருந்தான். அவர் கையைத் தடுக்கவோ, அல்லது அடி மேலே படாமல் தவிர்க்கும் தன்னிச்சை முறுவலிப்போ கூட இல்லாமல் இருந்தது அவருக்கு வினோதமாய்ப் பட்டது.

ஓங்கிய கை அந்தரத்திலேயே நிற்க, அவர் புருவங்களைச் சுறுக்கி அவனை சந்தேகமாய் பார்க்க, அவன் குருடோ என்று முதன் முறையாகத் தோன்றியது. மெதுவாக உயர்த்திய கையை கீழிறக்கிக் கொண்டு அவனையே பார்த்தார் அவர். அவன் பார்வைக் கோணத்துக்கு நேர் எதிரே அவர் நின்றிருந்தபோதும், அவரின் கண்ணையோ, முகத்தையோ பார்க்கும் தோரணையில் இல்லாமல், எதையோ பார்த்த வகைக்கு அவன் நின்றிருந்தான்.

'ஒனக்கு கண்ணு தெரியாதா?'.

'காது தெரியும் சார்'.

'என்ன?'.

'எல்லாருக்கும் கண்ணுல குடுக்குற பார்வைய ஆண்டவன் எனக்கு காதுல குடுத்துட்டாரு சார். பெறவி குருடன் சார் நானு. சார், உங்க சூவுல லேஸூ இல்லதானே சார். காலு வழுக்கும் சார் வெய்யில்ல. அதனால சீக்கிரம் லேஸூ போட்டுடுங்க சார்'.
அவன் தன்னைப் பற்றி தானே அப்படிச் சொன்னது வித்தியாசமாயும், அவரால் ஜீரணித்துக்கொள்ள முடியாததாயும் இருந்தது. அத்தனை நேரம் அவன் தன் கண்களுக்கு பொறுக்கியாய் தெரிந்ததும், இப்போது சட்டென ஒரே நொடியில் அவன் அப்பாவியாய்த் தெரிவதும் அவரின் மேலோட்டப் பார்வைகளின் குறிப்புக்களை அவருக்கு எழுதித் தந்திருந்தன.

மேலும், அவர் காலில் இருந்த ஷூவில் லேஸூ இல்லை தான். இரண்டு நாட்களாகவே இல்லை. எங்காவது பாட்டா ஷூகடை இருந்தால் வாங்க வேண்டும் என்று நினைப்பார். ஆனால் வேலை பலுவில் மறந்து போவார். லேஸூ இல்லாமல் நடந்து இந்த இரண்டு நாட்கள் பழகியும் விட்டது தான். லேஸூ இல்லாதது தெரியக்கூடாது என்றுதான் பாண்டால் மூடி கவர் செய்திருந்தார். பிறவிக்குருடன். ஷூ என்ன நிறம், எப்படி இருக்குமென்று கூடத்தெரியாது. அப்படியிருக்கையில் எப்படிக் கண்டுபிடித்தான். அந்த பேரிரைச்சலிலும் லேஸூ இல்லாத ஷூவை அதன் சப்தங்களை வைத்தே

கண்டுகொண்டது ஆச்சர்யத்தை அளித்தது.

'நீ பிறவியிலேயே குருடு தானே. என் கால் ஷூ லேஸ் இல்லன்னு எப்படி கண்டுபுடிச்ச?'.

'சார், உங்களுக்கு கண்ணு இருக்கு. அதனால காதுக்கு கேக்குற சத்தங்கள நீங்கலாம் அதிகம் கவனிக்க மாட்டீங்க. என் பாட்டி விறகு வெட்றப்போ பாத்துக்கிட்டு நிக்கிற எனக்கு கால்ல சிலாம்பு குத்தக்கூடாதுன்னு பக்கத்து வீட்டு மிலிட்டரி மாமா குடுத்த ஷூ ரெண்ட என் காலுல மாட்டிவிட்டுச்சு. அதுல லேஸூ இருக்காதுசார். அத போட்டுக்கிட்டு இழுத்து இழுத்து நடப்பேன் நான். அந்த ஷூவையோ, இல்ல இப்போ நான் போட்டுக்கிட்டு இருக்குற டிரஸ்ஸையோ நான் என் காதால்தான் பாத்திருக்கேன். எனக்கு தெரியும் சார் அந்த சத்தம்' என்றான் அவன். அவன் பார்வை அவரின் கண்களை முட்டாமல், அவரின் பேச்சில் சத்தங்கள் பிறக்கும் திசையை குத்துமதிப்பாகத் தேடி நொடிக்கு நொடி அலைந்துகொண்டிருந்தது.

'ஹ்ம்ம் சரி.. உன் பேரன்ன?'

'பாண்டி சார்'.

'இங்க என்ன பண்றபா?'.

'தெரியல சார். எங்க போறதுன்னு தெரியல'. அவன் தலைகுனிந்துகொண்டான். வாழ்க்கையில் ஒரு மனிதன் செல்ல வேண்டிய திசை தெரியாமல் அல்லாடுகையில் அவன் இயலாமை அந்தத் தலைகுனிவில் அப்பட்டமாய்த் தெரிந்தது.

'ஏன், உனக்கு வீடு இல்லை?. அப்பா அம்மா?'.

'இல்ல சார், நான் பொறக்குறதுக்கு முன்னாடியே அப்பா செத்துட்டார். அம்மா என்னை பெத்துபோட்டுட்டு போய் சேர்ந்துட்டா சார்'.

'ஓஹ்... அப்ப சொந்த ஊரு? இவ்ளோ நாள் யாரோட இருந்த? உனக்கு வீடு எங்க?'.

'சொந்த ஊரு மாயாரம் பக்கம் பேரளம் சார். பாட்டி தான் வளத்துச்சு. வெறகு வெட்டும் சார். நான் தூக்கிட்டு வருவேன். வித்தா சில நேரம் சோறு பொங்குற அளவுக்கு காசு கிடைக்கும், சில நேரம் கடலமுட்டாய்க்குதான் மிஞ்சும். விக்கிலனா பட்டினிதான் சார். பட்டினி கெடந்தாலும் ஒறவுன்னு சொல்லிக்க அது இருந்துச்சி. போன வாரம் அதும் செத்துபோச்சி சார். ஒத்த ஆளால வாடகை குடுக்க முடியல. வீடுன்னு ஒண்ணும் இல்ல. குருட்டுப்பயன்னு யாரும் வேலையும் குடுக்கல சார். அக்கம்பக்கம்

என்னை பிச்சக்காரனாக்க பாத்தானுவ. அங்க இருக்க புடிக்கல. இருக்குற பணத்தை வச்சு மெட்ராஸ் போய் பொழைக்கலாம்னு வந்தேன் சார். நான் குருடுன்னு யாரும் வேலை தரல சார். பிச்சையடுத்து பொழைக்கிறதுக்கு போய் சேர்ந்துடலாம்னு இங்கயே உக்காந்துட்டேன் சார்.'

கேட்டுக்கொண்டிருந்த வேதத்துக்கு அதிர்ச்சியாக இருந்தது. குருடன். அதுவும் பிறவியிலிருந்தே. இறைவனாய்ப் பார்த்து தரும் வாழ்க்கை. அதை அப்படியே ஏற்கத்தான் வேண்டும். அதற்கு மறுப்பு சொல்ல யாராலும் முடியாது. ஆனால், அந்த வாழ்க்கையை எப்படி வாழவேண்டுமென்று அவன் தான் முடிவுசெய்யவேண்டும். சொல்வது எளிது. செய்வது கடினம். அவர் தன் கண் பார்க்க பல பேர் பலவற்றை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் செய்ததில்லை. இவன் சொல்லவேயில்லை. ஆனால் சாகவும் துணிந்துவிட்டான்.

அடுத்த வேளை உணவுக்குக் கூட வக்கில்லாமல் , ஆனால் நெஞ்சு நிறைய வைராக்கியத்துடன், வாழ்க்கையை முடித்துக்கொள்ளவும் துணியும் ஒரு உலகம். அவர் அதுவரை பார்த்ததேயில்லை. சிக்னல்களிலும், கோயில்களிலும் குருட்டு மனிதர்கள் எத்தனையோ பேருக்கு ஐம்பது காசு, ஒரு ரூபாய் நாணயங்களை பிச்சை போடும்போது வராத கழிவிரக்கம், சிந்தனை, அனுசரனை, மரியாதை இப்போது இவனிடம் வந்தது அவருக்கு. அவன் ஒரு பரிசுத்தத்தை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு நிற்பது போன்றதான உணர்வு அவனைப் பார்க்கையில்.

'எப்போ கடைசியா சாப்பிட்ட?'.

'நாலஞ்சு நாளாவுது சார். அதும் கூட பாதி பச்சத்தண்ணி தான் சார்'.

'ஹ்ம்ம்... ' என்றுவிட்டு பாக்கேட்டில் கைவிட்டு ஒரு சின்ன ஃபைவ் ஸ்டார் சாக்லேட்டை எடுத்து நீட்டினார் 'இந்தா இத சாப்பிடு'.

'சும்மா ஏதும் வேணாம்'. அவன் தலையை இடமும் வலமுமாக ஆட்டியபடி ஆணித்தரமாய்ச் சொன்னான். அவன் மறுப்பில், செயற்கை தெரியவில்லை. அதற்கான தேவையும் அவனிடம் இருக்கவில்லை என்பதாகத் தோன்றியது.

ஸ்திரமாக அவன் வேண்டாம் என்றது பாதையில் போக எத்தனித்து, கண்ணாடிக் கதவில் முட்டியது போன்றதான உணர்வைத்தந்தது. அவன் அத்தனை ஸ்திரமாக இருந்தது, அவனைப் பற்றிய அவரின் கணிப்பைத் தவறாக்கியிருந்தது. ஒன்றுமேயில்லாத இவனிடமும் இத்தனை வைராக்கியமா என்று நினைத்துக்கொண்டார். ஏன் கூடாது எனவும் தோன்றியது.

'சரிப்பா, இந்தா இத புடி..' என்றுவிட்டு கையிலிருந்த ஃபைலை அவனிடம் தந்துவிட்டு 'இத தூக்கிக்கிட்டு என் கூட வா. இந்த வேலைக்கு சம்பளமா இத வச்சிக்க' என்றார். ஆமோதிப்பாய் சரி என்றுவிட்டு இரண்டு கைகளையும் நீட்டினான் அவன். இடது கையில் ஃபைலையும் வலது கையில் அந்தச் சாக்லேட்டையும் வைத்தார் வேதம். ஃபைலை கக்கத்தில் வைத்து இடுக்கிக்கொண்டு, வலதுகையிலிருந்த சாக்லேட்டை வேகமாக உரித்து உண்ணத்துவங்கினான் அவன். அவன் உணடு முடிக்கக் காத்திருந்தார் வேதம்.

'என்னோட வரியா, வேலை தரேன், மாசம் ஆயிரம் ரூபாய் சம்பளம் தரேன், பண்றியா?'. அவன் சாக்லேட் கவரைக் கசக்கி உள்ளங்கையில் வைத்து அழுத்திக்கொண்டு கக்கத்தில் வைத்திருந்த ஃபைலை கைகளில் இறக்கிக் கொள்கையில் கேட்டார் அவர்.

'ஐயா....' என்று இழுத்தபடியே கண்ணீர் மல்க அவன் கீழே அவர் காலடியில் குனிந்து வலது கையால் துழாவ, அவசரமாய் தூக்கி நிறுத்தினார் வேதம்.

அவருக்குப் பின்னால், ஒரு போலீஸ் ஜீப் கிறீச்சிட்டு வந்து நின்றது.

'வா என்னோட' என்றுவிட்டு அவன் கையைப் பிடித்து ஜீப்புக்கு அழைத்துச்சென்று பின்னால் கான்ஸ்டபுள் கனகு என்கிற கனகராஜ் அருகில் அமரவைத்துவிட்டு, முன்னால் ஏறிக்கொண்டார்.

'செல்வம், ஜீப்ப வேளச்சேரி ஆபிஸுக்கு விடு'. டிரைவர் ஜீப்பை விரட்டத்துவங்க ஜீப் அவரின் ஆபிஸை நோக்கி விரையத் துவங்கியது.

வழியெங்கும் அவருக்கு சிந்தனையாகவே இருந்தது. கடவுள் கொடுத்த வாழ்க்கை. குருட்டு வாழ்க்கை. அது பாதி தூரத்திலேயே அஸ்தமனத்தில். ஆனால், நெஞ்சில் அவனுக்கு இருக்கும் வைராக்கியம் இருக்கிறதே. கொலைப் பசிக்குக் கூட விட்டுக்கொடுக்க முடியாத வைராக்கியம். தன் கண்ணில் இவன் இன்றைக்குப் பட்டிருக்கவில்லையெனில் ரோட்டோரமாய் அனாதைப் பிணம் என்று தனக்கு வாக்கிடாக்கியில் மெசேஜாகியிருப்பான் இவன். ஆனால் அதைப் பற்றி இவன் துளியும் கவலைப்படவில்லை. சாப்பிடும் ஒவ்வொரு பருக்கையும் உழைப்பின் ஊதியமாக இருக்கவேண்டும் என்று நினைப்பவன். இரண்டு கை, இரண்டு கால், கண், காது, மூக்கு என இருந்தும் ஊனமில்லாத உடல்கள், ரயில் நிலையங்களிலும், பேருந்துகளிலும் பிக்பாக்கேட் என ஊரை அடித்து உலையில் போடுவது இருக்க, இப்படியும் சில ஆத்மாக்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஊனமுற்ற யாருக்கும் மனம் ஊனமாயிருப்பதில்லை. ஆனால், உடலில் ஊனமில்லாத அனேகம் பேருக்கு மனம் ஊனமுற்றுத்தானிருக்கிறது. விந்தை உலகம்.

ஜீப் கிறீச்சிட்டு ஒரு வீட்டின் வாசலில் நின்றது. அது ஒரு இரண்டடுக்கு வீடு. வாசலில் பெரிய போர்டு. வேதம் சிஸ்டம்ஸ். வேதம் இறங்கிக்கொண்டு பின்னால் சென்று கான்ஸ்டபிளை விட்டு அவனை இறங்கச் சொல்லி இருவரையும் வீட்டிலுள்ளே அழைத்துப்போனார்.

ஒற்றை அறைதான் இருந்தது. வெளியே பார்த்த வீட்டின் ஒரு பகுதியை நிரந்தரமாகத் தடுத்து ஒரு கடைக்கு வாடகைக்கு விடும் நோக்கத்தில் கட்டப்பட்டிருந்தது. அது இப்போது வேதத்தின் ஆதாரங்களை அலசிஆராயும் இடமாக இருக்கிறது. அறையில் ஒரு ஓரத்தில் ஒரு பெரிய மேஜையில், கேஸட் போட்டு கேட்கும் ஆடியோ செட் ஆடையில்லாமல் எலும்புக்கூடாய் கிடந்தது. அதனருகே ஒரு கம்ப்யூட்டரும் பக்கத்தில் அனேகம் பத்திரிக்கைகளும் சில தஸ்தாவேஜ்களும் கிடக்க, அவைகளைத்தாண்டி ஒரு பெரிய ஸ்டீல் பெட்டி இழுத்தால் வெளிவரக்கூடிய பல்வேறு பெட்டிகளைக் கொண்டிருந்தது. சில பெட்டிகள் திறந்திருக்க, உள்ளே வரிசையாய் அடுக்கப்பட்ட கேஸட்களும் அவற்றின் மேல் சில பெயர்களும் எழுதப்பட்டிருந்தன. Local, Vizuppuram, Thindivanam இன்னும் என்னென்னவோ. அந்த மேஜைக்கும் முன்னே நீளவாக்கில் ஒரு சோபாவும், பக்கவாட்டில் இரண்டும் சேர்களும் கிடக்க, மேஜையை ஒட்டினாற்போல் ஒரு கதவு மூடப்பட்டிருந்தது. பாத்ரூமாக இருந்திருக்கலாம்.

'உக்காரு கனகு. உக்காருப்பா பாண்டி' என்று சொல்லிவிட்டு அந்த நீண்ட சோபாவில் அமர்ந்துகொண்டார். பாண்டியை ஒரு சேரில் உட்கார வைத்துவிட்டு தானும் பக்கத்திலேயே அமர்ந்து கொண்டார் கனகு என்கிற கனகராஜ்.

'பாரு பாண்டி, என்கிட்ட வர கேஸ்கள்ல சில ஆதாரங்கள் கிடைக்கும். அதுல பலது டேப். அத ஓடவிட்டு அதுல என்னென்ன குரல் பதிவாகியிருக்கோ அதையெல்லாம் நீதான் பிரிச்சி சொல்லனும். சில நேரங்கள்ல சில குத்தவாளிங்களோட குரல் அந்த டேப்புல இருக்கான்னு நீ கண்டுபுடிச்சி சொல்லனும். அதான் உன் வேலை. அதுக்கு தான் உனக்கு இங்கே சம்பளம். ரொம்ப கவனமா செய்யனும். நீ சொல்றத வச்சித்தான் ஒரு நிரபராதி குற்றவாளி ஆகுறதும், ஒரு குற்றவாளி நிரபராதி ஆகுறதும். மாசம் சம்பளம் ஆயிரம் ரூபாய். வீட்டு மொட்டை மாடில கொட்டா போட்டுத்தாரேன். நீ அங்க தங்கிக்கோ'

'சரி சார்' என்றபடியே ஆமோதிப்பாய் தலையை ஆட்டியபடி கேட்டுக்கொண்டான் பாண்டி.

கூடவே அமர்ந்திருந்த கனகு என்கிற கனகராஜ் ஏதோ சொல்ல எத்தனித்தவராய்த் தொடங்கி, பாண்டியை நினைத்து சற்று தயங்கியவராய் வேதத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தார். அவர் தன்னிடம் ஏதோ சொல்ல நினைப்பதை அவரின்

பார்வையிலேயெ புரிந்துகொண்டார் அவர்.

'சரி, கனகு ..அந்த தாம்பரம் கொடவுன் திருட்டு கேஸ் என்னாச்சு?' என்றபடியே அந்த அறையை விட்டு வெளியே வந்தார். அதையே எதிர்பார்த்தவர்போல் உடனே கனகு எழுந்துகொண்டு வேதத்தை தொடர்ந்து அவரும் வெளியே வந்தார்.

'சார், என்ன சார், அவன் ப்ளைன்ட் சார், அவனப்போயி இங்க...' என்றுவிட்டு இழுத்தார் கனகு.

'கனகு, ரெண்டு நாளா என் ஷூல லேஸூ இல்ல. உங்களுக்குத் தெரியுமா?' கேட்டார் வேதம்.

'அப்படியா, தெரியாதே சார்'.

'ஆனா, இவன் கண்டுபுடிச்சிட்டான். அதுவும் ஜி.எஸ்.டி ரோட்ல இருந்த ட்ரா∴பிக் சத்தத்துல. பொதுவா மாற்றுத்திறன் இருக்கறவங்க எல்லாருக்கும் அந்த ஊனத்த பாலன்ஸ் பண்ண வேற ஏதாவது திறமை இருக்கும் கனகு. இவனுக்கு அசாத்தியமா கேக்குற சக்தி இருக்கு. சத்தங்கள மொழிபெயர்க்கத்தெரிஞ்சிருக்கு. நமக்கெல்லாம் கண்ணு இருக்குறதுனாலயே காது சொல்றத நாம நம்ப மாட்டேங்குறோம். அதுல சில நேரம் தவறுகள் நடக்கலாம்தான். இந்த ரெண்டு நாளா நீங்க என் கால் ஷூ லேஸ கண்டுபிடிக்காம விட்டா மாதிரி. பாண்டி மாதிரி ஒரு புலன் இல்லாதவன் இன்னும் அதிகமா உண்ணிப்பா கவனிப்பான். அதனால அவன் நமக்கு நிறைய பயன்படுவான்னு தோணுது. அத ஏன் நமக்கு சாதகமா நம்ம இன்வெஸ்டிகேஷன்ஸ்க்கு யூஸ் பண்ணக் கூடாது? அவனுக்கும் அவனோட கவுரவத்தை விட்டுக்கொடுக்காம வாழ ஒரு வாழ்க்கை கிடைக்கும். நான் இன்னிக்கு இவன பாக்கலன்னா இவன் செத்தே போயிருக்கலாம். இந்த வேலை அவனுக்கு ஒரு மறுவாழ்வ நிச்சயமா தரும் கனகு'. சொல்லிக்கொண்டே இருந்தவரை வாய்பிளந்து கேட்டுக்கொண்டிருந்தார் கனகு. அங்கே ஒரு மறுவாழ்வுக்கான விதை ஆழமாக விதைக்கப்பட்டுக்கொண்டிருந்தது.

- (ramprasath.ram@googlemail.com)

1 -ஏப்ரில் 2011 -

26. சலனங்களுக்கு வயதில்லை - - நடேசன் (ஆஸ்திரேலியா) -

காலை எட்டு மணியளவில் ஜெனிவாவில் ஒரு குறுக்குத் தெருவில் சம்பந்த மூர்த்தி நின்றுகொண்டிருந்தார். அந்தத் தெருவின் ஒரு மூலையில் ரூரிஸ்ட் ஆபீஸ் இருந்தது. அங்கே நின்றால் 'நீங்கள் அல்ப்ஸ் மலைகளுக்கு செல்லும் வாகனத்தை பிடிக்கலாம்'; என ஏற்கனவே பஸ் ஸ்ராண்டில் இருந்த பெண் அரைகுறை ஆங்கிலத்தில் கூறி இருந்தாள். பிரான்ஸ்சும் ஆங்கிலமும் கலந்த அந்த பதிலில் சம்பந்த மூர்த்தி; முடிந்தவரை ஆங்கிலத்தை பிரித்து எடுத்து புரிந்து கொண்டு தெருவைக் கண்டு பிடித்தது தன்னை ஒரு சாதனையாளனாக தனக்குள் மெச்சிக்கொண்டார். அவர் மட்டும்தான் அந்த இடத்தில் தனியாக நின்றுகொண்டிருந்தார். அந்த இடத்துக்கு முன்பாக உள்ள இத்தாலிய ரெஸ்ரோரண்டில் இரண்டு பெரிய மீசையுள்ளவர்கள் காலை உணவுக்காக கதவுகளை திறந்து கதிரைகளை தூக்கி அடுக்கிக் கொண்டிருந்தாரர்கள். அவர்களிடம் சென்று பேச முயற்சித்தாலும் அங்கும் சம்பந்த மூர்த்தியின் ஆங்கிலம் அவருக்கு கை கொடுத்தவில்லை.

சிறு வயதில் யாழ்பாணத்தில் பிரன்சிய மொழி படிக்க அலயனஸ் பிரான்ஸ் என்ற நிறுவனத்திற்கு ஒரு நாள் மட்டும் போய் விட்டு நிறுத்த்p க்கொணட தவறை நிதை;து சம்பந்த மூர்த்தி கவலைப் பட்டுக்கொண்டார். ஐம்பது வயதுக்கு மேல் கவலைப்பட்டு என்னசெய்யமுடியும்? இலங்கையில் எஞ்ஜினியராக இருந்து ஆங்கிலம் பேசும் நாட்டுக்கு போகவேண்டும் என பிடிவாதமாக ஆவுஸ்திரேலியா வந்தாலும் இப்பொழுது வேலைசெய்யும் எஞ்ஜினியரிங் கம்பனி இருந்து சோலர் ரெக்னோலஜி சம்பந்தமான மகாநாட்டுக்கு ஜெனிவா வந்துள்ளார். மகாநாடு நேற்று முடிந்ததால் இன்று சனிக்கிழமை அல்ப்ஸ் மலைக்கு சுற்றுப்பயணம் போய் வந்து விடலாம் என நினைத்து ஏற்கனவே ரிக்கட்டைப் பெற்றுக்கொண்டு காத்து நிற்கிறார். இன்று இரவு அவுஸ்திரேலியாவில் நாளை இவரதுமனைவி வந்ததும் நாளை பாரிசுக்கு பிரயாணம் செய்வதற்குள் இந்த ஒரு நாள் பிரயாணம் அவசரமாக ஒழுங்கு செய்யப்பட்டது. 'இந்த இடத்துக்கு அல்ப்ஸ் செல்லும் வான் வருகிறதா' என அழகியஆங்கிலத்தில் வந்த குரலுக்குரியவரைத் திரும்பிப் பார்த்தார் சம்பந்த மூர்த்தி முப்பத்தைந்துக்கும் நாற்பதுக்கும் இடைப்பட்ட வயதான பெண் ஐரோப்பிய கோடைகால உடையில் சிறுகைப்பையை சுழற்றிபடி நின்று கொண்டிருந்தாள்

'நானும் அப்படித்தான் நினைக்கிறேன';.

'நன்றி'

'ரிக்கட் வாங்கிவிட்டீர்களா'

'இல்லை'

'சிறிது தூரத்தில் உள்ள பஸ் நிலையத்தில் ரிக்கட்டை வாங்குங்கள்.'

'நான் வாங்கிவருகிறேன். என்னை விட்டு போய்விடாதீர்கள்? எனக் கூறிவிட்டு சம்பந்த மூர்த்தி தோளில் தனது கையால் சிறிது தட்டிவிட்டு ரூரிஜ்ட் பஸ் நிலயத்தை நோக்கி அவசரமாக நடந்ததாள்.

இவ்வளவு நேரமும் அவளை சாதாரணமாக பார்த்துக்கொண்டிருந்த சம்பந்த மூர்த்தியின் கவனத்தை தூண்டிவிட்டாள். ஐந்தரை அடிக்குமேல் உயரத்துடன் தலைமயிர் மங்கிய பொன்னிறம் அல்லது தாமிர நிறத்துடன் சில வெள்ளைமயிர்கள் சேர்ந்து இருந்தது.

தலைமயிர் பின் கழுத்துக்கு மேல் வெட்டப்பட்டு கழுத்தை மேலும் நீளமாக காட்டியது . மேக்கப்; அற்று ஐரோப்பிய சம்மருக்கு உரிய இறுக்கமற்ற மேல்சட்டையுடன் முழங்;கால் வரையான கீழ்பாவாடை. அலட்சியமான உடையலங்காரத்தை மீறி இயற்கையான உடலமைப்பு அவளை அழகியாக காட்டியது. காலில் போட்டிருந்த காலணி சாதாரணமாக தெருவில் நடப்பதற்கு போடுவது. அதிலும் குதிக்கால் சிறிது உயர்ந்து இருந்தது. அதிக கவனம் எடுக்காத உடை அலங்காரம் ஏதாவது பெரிய பதவி வகிப்பவளாக இருக்கலாம்.

ஆனால் எப்படி அல்ப்ஸ் மலைக்கு இந்த உடுப்புபில் வருகிறாள். நிச்சயமாக குதிக்கால் உயர்ந்த பாத அணி பொருத்தமில்லாதது. கையில் ஒரு சிறு கை பை மட்டும் இருந்ததால் இவளிடம் வேறு உடுப்பு இருக்கவில்லை. ஏதோ ஹோட்டலில் இருந்து கடைவீதிக்கு வருபவள் போல் அல்லவா வந்திருக்கிறாள்?.

இப்படி சம்பந்த மூர்த்தி நினைத்துக்கொண்டிருக்கும் போது ஒரு இந்தியர் வந்து சேர்ந்தார். அவரும் டெல்லியில் இருந்து ஏதோ சேர்ச்சுகளின் மகாநாட்டுக்கு வந்திருந்தவர். அவரிடம் பேசிக்கொண்டிருந்த போது இந்த பெண் ரிக்கட்டை எடுத்துக்கொண்டு மீண்டும் வந்திருந்தாள். இதே நேரத்தில் வான் சாரதியும் வந்து விட்டார். இப்பொழுது மொத்தமாக ஐந்து பேர் அல்ப்ஸ் மலைக்கு அந்த வானில் பிரயாணத்துக்கு பதிவு செய்திருந்தார்கள். மற்றய இருவரில் ஒருவர் அமரிக்கர் மற்றவர் ஈரானை சேரந்தவர். நான்கு ஆண்களுடன் ஒரு பெண் ஏறுங்கள் என கூறினதும் சம்பந்த மூர்த்தி தனக்கு பக்கத்தில் நின்ற பெண் முதலாவதாக ஏறட்டும் என நினைத்து தயங்கினார்.

அந்தப்பெண் வண்டியின் பின சீட்டில் ஏறிவிட்டு கையை நீPட்டி சம்பந்த மூர்த்தியின் பையை வாங்கிய படி தனது அருகில் இருக்கும்படி அழைத்தாள். வண்டியின் பின்சீட்டுகள்

சம்பந்த மூர்த்திக்கு பிடிப்பதில்லை. தலையை சுற்றும். அதுவும் மலையை நோக்கி செல்வது இந்தப் பிரயாணத்தில் வாந்தி வரக்கூடும் எனப் பயந்தாலும் பெண் ஒருத்தி தன் அருகில் வந்து உட்காரும்படி அழைப்பதை எப்படி மறுப்பது என்பதால் அவள் அருகே உட்காந்தார். முன்பாக உள்ள சீட்டுகளில் அமரிக்கரும் ஈரானியரும் அமர்ந்தனர். சாரதிக்கு பக்கத்தில் இந்தியர் அமர்ந்து கொண்டார்.

எனது பெயர் நிக்கி தென் ஆபிரிக்கா என்று தன்னை அறிமுகப்படுத்திவிட்டு தனது பையில் இருந்து விலைகூடிய லென்ஸ்சுகளுடன் நிக்கோன் கமராவை எடுத்தாள்.

'நான் சம்பந்த மூர்த்தி. எஞ்ஜினியர். ஆவுஸ்திரேலியாவில் இருந்து வந்திருக்கிறேன். நீங்கள் படம் எடுப்பவரா?'

'இல்லை. நான் தொழில்சங்கத்தில் மருத்துவ பகுதியில் வேலை செய்கிறேன். பொழுது போக்காக படம் எடுக்கும் வேலையை செய்கிறேன';;

'இல்லை நான் ஒரு சிறிய நிக்கோன் வைத்திருக்கிறேன். அதை வெளியில் எடுக்க வெட்கமாக இருக்கிது'

'சின்ன கமாராக்களால் நல்லபடம் எடுக்கலாம். எனது படங்களை நான் உங்களுக்கு ஈ மெயிலில் அனுப்புகிறேன்';.

இந்த வேளையில் ஜெனிவா இருந்த பள்ளத்தாக்கை விட்டு வான் மலை அடிவாரத்தில் செல்லத் தொடங்கியது. அழகான பகுதிகளை சாரதி விபரிக்க தொடங்கினார். நிக்கியின் கமராவால் வானுக்குள் இருந்த படி கண்ணாடி வழியாக இயற்கை அன்னை தாராளமாக அள்ளித் தெளித்திருக்கும் கண்களை பறிக்கும் காட்சிகளை படம் எடுக்க தொடங்கியபோது பெரும்பாலான தடவைகள் சம்பந்த மூர்த்தியைத்தாண்டித்தான் எடுத்தாள். சம்பந்த மூர்த்தி; ஒதுங்கி படமெடுக்கு வசதியாக இருந்தார். பலமுறை அவரது தோள்களில் கமராவை நிலைப்படுத்தி படங்கள் எடுத்தாள்.

உயரமான மலைகளின் அடிவாரத்துக்கு வந்ததும் வாகனம் நிறுத்தப்பட்டது. இயற்கையின் உபாதையை தணிப்பவர்களும் கால்களை நீட்டவிரும்புவர்களும் இறங்கினார்கள். சம்பந்த மூர்த்தி இறங்கி சில பழங்களை வேண்டிவந்து நிக்கியிடம் கொடு;துவிட்டு அருகில் நின்ற சாரதியிடம் 'மலையின் உச்சியில் என்ன வெப்ப நிலையாக இருக்கும்?'

'2-4 சென்ரிகிறேட்க்கு இடையில் இருக்கலாம்'

நிக்கி உங்கள் உடைகள் இந்தக் குளிரைத்தாங்கும் என நினைக்கிறீர்களா?'

அதைப்பற்றி நான் நினைக்கவில்லை. நேற்று முழுவதும் கொன்பரன்ஸ். எதுவும் யோசிக்காமல் படுத்தது விட்டு;. அவசரத்தில் எழும்பிவந்துவிட்டேன். மலை உச்சியில் உடுப்புகள் வாடகைக்கு எடுக்க முடியுமா? என திரும்பி சாரதியை கேட்டாள்

'உடைகள் மற்றும பனி சப்பாத்துகளை வாடகைக்கு எடுக்கவேண்டிவரும். உங்கள் காலணி ம ii யேற உதவாது' என கூறியபடி சிரித்தான்

'நிக்கி என்னிடம் ஒரு காஸ்மீர் சுவட்டர் உள்ளது. உங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிடில் அதைத் தரமுடியும்';என்றார் சம்பந்த மூர்த்தி

'நான் சந்தோசப்படுவேன்.'; என வாங்கி அணிந்து கொண்டாள்.

மீண்டும் வான் ஏறி மலையை நோக்கி பயணித்தது.வளைவானபாதை பச்சைபசேலென்று இருந்தது. இடைக்கிடைய அரிவிகளும்; குடி இருப்புகளும் அந்த பிரதேசத்தின் கண்ணுக்கும் கமராவுக்கும் காட்சி வடிவங்களாக்கியது. சம்பந்த மூர்த்தி பக்கம் பள்ளத்தாக்கானபடியால் நிக்கி சம்பந்த மூர்த்தியில் சாய்ந்தபடி படங்களாக எடுத்துக் கொண்டிருந்தாள்.பெண் உடலின் நெருக்கமான நிலையை உணரத் தொடங்கியபோது மலைப்பாதையின் வளைவுகள் சம்பந்த மூர்த்தி தலையை சுற்றத் தொடங்கியது.

'நிக்கி எனக்கு தலை சுற்றுகிறது. இந்த வளைவுகளால் எதற்கும் கவனமாக இரு. சிலவேளை வாந்தி வரக்கூடும்'என்றார் சம்பந்த மூர்த்தி.

'அதற்கென்ன இப்படியே குனிந்திரு'.என்று சொல்விட்டு சம்பந்த மூர்த்தி மேலாக படத்தை எடுத்துககொண்டிருந்தாள். இப்பொழுது அவளது முழங்கைகளை சம்பந்த மூர்த்தி முதுகில் பதித்து படத்தை எடுத்துக்கொண்டிருந்தாள்.

சம்பந்த மூர்த்திக்கு அவளுடன் அன்னியோன்னியமாக இருந்தது இன்பமான குறுகுறுப்பை அளித்த நேரத்தில் ஒருவித கூச்சத்தையும் அளித்ததுத்தது.

வாகனம் மலை அடிவாரத்தில் நிறுத்தப்பட்டது. அங்கிருந்து மலை உச்சிக்கு கேபிள் காரில் சென்றார்கள்;. கேபிள்காரில் சிறிது விலகி நின்றார் சம்பந்த மூர்த்தி; ஆனால் நிக்கி தனது கைப்பையை சம்பந்த மூர்த்தியிடம் கொடுத்து விட்டு தூரத்தில் தெரிந்த பனிபடர்நத மலைசிகரங்களை படம் எடுததுக்கொண்டிருந்தாள.; மலை உச்சிக்கு சென்றதும் சம்பந்த மூர்த்தியை காத்திருக்க சொல்லிவிட்டுபனிசப்பாத்துகளை வாடகைக்கு எடுக்கும் இடத்தில் மறைந்து திரும்பிய போது மற்றய மூவரும்

சாரதியுடன் முன்னே சென்றுவிட்டனர்.

இப்பொழுது மலையேறும் இடத்தில் திடீரென வீசிய பனிப்புகாரால் மிகவும் சிறிய தூரம்தான் கண்களுக்க புலப்பட்டது. சம்பந்த மூர்த்திக்கு சாரதியின் பச்சை மேல்சட்டை அடையாளமாக இருந்தது. சம்பந்த மூர்த்தியின் கையை இறுக்கமாக பிடித்தபடி நிக்கி வந்தபோது 'ஏதாவது பிரச்சனையா? நிக்கி என்றார்

'இல்லை எனது கண்ணாடி மேல் பனிபடர்ந்து மறைக்கிறது. கண்களுக்கு போடும் லென்சை ஹோட்டலில் விட்டுவிட்டு வந்துவிட்டேன்.'

'மலையேற எந்த ஆயுத்தமும் இல்லாமல் வந்திருக்கிறீர்கள';

'நல்லவேளை உங்கள் உதவி கிடைத்து.'

'நான் இல்லாமல் விட்டாலும் எந்த ஆணும் உங்களுக்கு உதவி செய்திருப்பார்கள்.'

சடப் நான் மேக்கப் கூடபோடாமல் வந்தாதீருக்கிறேன். இரண்டு ரீன் ஏஜ் பிள்ளைகளைப் பெற்றுள்ளேன். அப்படி இருந்தும் நீங்கள் சொல்வது இந்த குளிரைவிட புல்லரிக்க வைக்கிறது.

' நான் உங்கள்ளோடு தென் ஆபிரிக்கா வருவதாக தீர்மானித்துள்ளேன்'

'ஆகா ஆகா இப்படி பொய்கள் இந்த இடத்தில் சொல்வது எனக்கு பிடித்திருக்கு.'

இருவரும் மலையின் உச்சிக்கு வந்த போது எங்களை பார்த்தபடி மற்றயோர் சாரதியுடன்; நின்றார்கள்

சாரதி நகைசுவையாக 'இருவரும் எங்களைவிட்டு பிரிந்து வீட்டீர்கள் என நினைத்துக்கொண்டு தென் ஆபிரிக்கா துரதராலயத்துக்கா இல்லை ஆவுஸ்திரேலியாவுக்கா அறிவிப்பது என யோசித்துக்;கொண்டிருந்தோம்.

'நிக்கியின் கண்களுக்கு லென்சு இல்லாத படியால் நான் நின்று கூட்டி வரவேண்டி இருந்தது.'

'நான் எந்த ஆயுத்தமும் இல்லாது வந்து இவருக்கு பிரச்சனை கெர்டுக்கிறேன் என்றாள் நிக்கி

'எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை'

'இங்கே வந்து பாருங்கள்'

சிறுகுழந்தைபோல் கைகளை ஆட்டி எல்லோரையும் அந்த இடத்துக்கு அழைத்தாள். நாங்கள் எல்லாரும் அந்த இடத்தை எட்டி பாரத்த போது அந்த பனிபடர்ந்த உச்சியில் சரிவாக ஒரு கருங்கல்லுப் பாறை நீட்சியாக இருந்தது. அதன் கூர்மையான முனையில உறை பனி படரமுடியவில்லை. வழுவழுப்பான பாறையாதலால் அதில் பனி தேங்கி நிற்க முடியவில்லை. அந்த முனையின பக்க வாட்டில் சிறு வெடிப்பு இருந்தது.அந்த வெடிப்பில் மலர்ச் செடி படர்ந்து அழகான ஊதா நிற மலர்களை ப+த்த படி அந்த பாறையின் முனையை ஆக்கிரமித்தபடி இருந்தது. எங்கும் உறைபனிபடர்ந்து வெண்மையான எந்த உயிரினமும் உறைந்து போகும் குளிரில் விடாப்பிடியாக வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த மலர் செடி வாழ்க்கையின் பிடிப்புக்கு ஒரு முன்னுதாரணமாக பாறை முனையில் வாழ்ந்து காட்டியது.

'இது ஒரு வாழ்கையின் தத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது' என கூறி நானும் எனது சிறிய கமராவால் படம் எடுத்தார் சம்பந்த மூர்த்தி.

'ஓவ்வொரு தற்கொலைப் போராளிகளையும் இங்கே கொண்டுவந்து இந்த மலர்செடியை காட்டவேண்டும'; என்றான் அந்த ஈரானியர்

'நானும் அதைத்தான் நினைத்தேன் நண்பரே. அதை நீங்கள் சொல்லிவிட்டீர்கள் என்றார் சம்பந்த மூர்த்தி;.

'இப்படியான வாழ்வுக்காகத்தான் நானும் இந்த பனிக்காலத்தில் ஒவ்வொரு நாளும் இந்த மலைக்கு வந்து போகிறேன்.வெயில்காலம் நான் மகனிடம் பிரேசில் சென்று விடுவேன். இப்பொழுது இந்த மலை உச்சியில் உள்ள இந்திய உணவுச்சாலைக்கு போவோம்'

மலைக்கு ஏறிப்போகும் போதே இந்திய உணவு பனிப்புகாரில் தவழ்ந்து எல்லோரினதும் மூக்கில் நூழைந்தது.

'தண்டூரீ சிக்கினின் மணம்' என்றான் எமது டெல்லிக்காரர். அமைதியாக வந்த கொண்டிருந்தவரது முகத்தில் சிரிப்பும் நடையில் உற்சாகமும் தெரிந்தது.

உணவுச்சாலை உச்சியில் இருந்தாலும் சகல வசதிகளுடனும் இருந்தது. இந்திய உணவுவகைகளுடன் ஐரோப்பிய உணவுகளும் இருந்தது. ஒவ்வொருவரும்; தங்களுக்கு

பிடிதத்மான உணவுகளை தட்டில் போட்டுக்கொண்வந்ததும் மீண்டும் தற்கொலை போராளிகள் பற்றிய பேச்சு வந்தது.

'எமது நாட்டில் முல்லாக்கள்தான் இதற்கு காரணம். மதத்தின் பெயரால் இது நடக்கிறது' என்றார் ஈரானியர்.

மதம் மடடுமல்ல எங்கள் நாட்டில் இன விடுதலை என்று சொல்லிக்கொண்டு தற்கொலைப்போராளிகள் ஆகிறார்கள். தீவிரமான கோட்பாடுகள் கருத்தியல்கள் மனத்தில் புகுத்தப்படும் போது மனிதர்கள் வெறும் புள்ளிகளாக ஆக்கப்படுகிறார்கள்.தேசியவாதம் மார்க்சியம் மற்றும் மதங்கள் முக்கியத்துவப்படும்போது இந்த நிலை ஏற்படுகிறது.இந்தியாவில் சாதிக்காக அமரிக்காலில் நிறத்துக்காகவும் உயிர் கொடுக்கும் நிலை இருக்கிறது.' என்றார் சம்பந்த மூர்த்தி

'அமரிக்கா போன்ற நாடுகள் மற்றய சிறிய நாடுகளுடன் நடந்து கொள்ளும் முறைகளும் இதற்கு காரணம்' என்றார் அமரிக்கர்

'அரசியல் பேசி பிரயோசனம் இல்லை. எமது நாட்டில் எயிட்சைபற்றி நான் தொழிலாளர்களுடன் பேசினாலும் அரசியலாக்கப்படும்' என விரக்தியுடன் சொன்னாள் நிக்கி

தென்னாபிரிக்காவில் எயிட்ஸ் அரசியலாக்கப்படுவதை நானும் கேள்விப்பட்டிருக்கிறேன என்றார்; அமரிக்கர்.

'உலக காற்பந்து போட்டி தென்னாபிரிக்காவில் நடந்ததால் எயிட்ஸ் கூடி இருக்குமா?' என்றார் ஈரானியர்

'நீங்களே அனுமானித்துக்கொள்ளுங்கள்;'; என கண்ணை சுழட்டினாள்

மலையின் கீழே இறங்கி வரும்போது பனிச்சரிவில் சறுக்கும் இடம்வந்தது பிளாஸ்ரிக்போட்டை எடுத்துக்கொண்டு சிறு குழந்தைகள் போல் எல்லேரும் சறுக்கினர்கள் . நாய்கள் இழுக்கும் பனிசறுக்கு வண்டியில் சம்பந்த மூர்த்தி நிக்கியுடம் சென்றார். 'பலநாட்களுக்க பிறகு இன்றுதான் சந்தோசமாக இருக்கிறேன் என நிக்கி சொன்னதும் திடுக்கிட்டு திரும்பினார் சம்பந்த மூர்த்தி.

'என்ன இப்படிச்சொல்கிறீர்கள்'

நான் அதை பேசி இந்த அழகிய சூழலை பாதிப்படைய விரும்பவில்லை.

நாய் இழுக்கும் பனிச்சறுக்கு வண்டியின் பயணம் முடிவுக்கு வந்தது.நாய்களுடன் சிறிது பேசிவிட்டு வந்தாள். வண்டி இழுத்த களைப்பில்அந்த நாய்கள் எவரையும் பொருட்படுத்தவில்லை. ஒரு கடுவன் எல்லோரையும் பார்த்து முறுகியது

மலைப்பிரயாணம் முடிவுக்கு வந்து வானில் ஏறியதும் மீண்டும் ஜெனிவா நோக்கி பிரயாணம் தொடங்கியது. எதுவும் பேசாத நிக்கி தனது காமராவுககு ஓய்வுகொடுத்து விட்டு தனது போனில் சிறு தகவலை அனுப்பிக்கொhண்டிருந்தாள்.

'இன்று எனது மூத்த மகனுக்கு பரீச்சை இருக்கிறது. கவனமாக செய்யும் படி தகவல் அனுப்பினேன்.'

அப்பொழுது தான் சம்பந்த மூர்த்திக்கு வீட்டுக்கு தகவலை அனுப்புவதற்கு நினைவு வந்தது. அவரது மனைவி இன்று இரவு ஜெனிவா ஏர் போட் வர இருப்பதும் நினைவுக்கு வந்துது.

'நீங்கள் சொல்லியதும்தான் எனக்கு செய்யவேண்டிய விடயம் நினைவுக்கு வந்தது. இன்று நள்ளிரவுக்கு எனது மனைவியை ஏர் போட்டில் சந்திக்கவேண்டும்.'

'ஆண்களே இப்படித்தான்' என சிரித்தாள்

சம்பந்த மூர்த்தி சிரித்து விட்டு எதுவும் பேசவில்லை.

மிகுதிப் பிரயாணம். அமைதியாக தொடர்ந்து டைறைவர் மட்டும் சுவிட்சலாந்தைப் பற்றிய விபரங்களை சொல்லிக்கொண்டுவந்தார்

இறங்கியதும் ஒவ்வொருவரும் விடைகொடுத்து பிரியும் போது நிக்கி சம்பந்த மூர்த்தியின் சுவட்டருக்கு 'நன்றி' என கொண்டு வந்து தந்தாள். அப்பொழுது பக்கத்தில் உள்ள கபேயில் 'காப்பி குடிப்போமா' என கேட்டுவிட்டு அவளது அனுமதியை எதிர்பார்காமல் பக்கதிலே இருந்த கபேயில் சென்று சம்பந்த மூர்த்தி அமர்ந்தார்.

'நான் சொன்ன ஒரு வார்தையால் திரும்பி வரும் பயணம் உங்களுக்கு உற்;சாகம் இல்லாமல் போய்விட்டது. எனது பிழை. நீங்கள் மிகவும் மென்மையானவர் போல் இருக்கிறது.'

'எதைச் சொல்கிறீர்கள்.'

'ஆண்கள் எல்லாரும் அப்படித்தான் என்றதை'

'அந்த வசனம் என்னை பாதிக்கவில்லை.'

''பின்பு என்ன?'

'நீங்கள் பலகாலத்துக்கப் பிறகு சந்தோசமாக இருக்கிறேன் என்றதுதான் என்னைப்பாதித்தது.'

வந்த காபியை எடுக்கப்போன நிக்கியின் முகத்தில் இருள் கவிந்தது

'மன்னிக்கவேண்டும. நீங்கள் கேட்டதால் சொன்னேன்.'

'அது பற்றியென்ன. என்னை அறிந்திராத ஒர் மனிதரான நீங்கள் எனக்கு இன்று சகல உதவியும் செய்தீர்கள். அதை மதித்து நான் கூறியவிடயம்.'எனக் கூறும்போது கணகள் கலங்கியது.

'பிளீஸ்'

'நான் ஏன் உங்களுக்கு பொய் சொல்ல வேண்டும். எனது கதை ஒரு சோகக் கதை. அதை சொல்லி உங்க¡ளை பாதிக்க வேண்டாமென நினைத்தேன். ஆனாலும் சொல்லுவது எனக்கு ஆறுதல். எனது கணவர் தென் ஆபிரிக்க விமானத்தில் பைலட்டாக வேலை செய்கிறார்.

இரண்டு பையன்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு என்னுடன் கட்டிலில் படுப்பதை தவிர்த்துக்கொண்டுவந்தார். இதைப் பொறுக்கமுடியாமல் நான் அவரை எதிர்வு கொண்டபோது தனக்கு ர்ஐஏ இருப்பதாக கூறினார்.

இது எப்படி வந்தது எனக்கேட்டபோது ஆண் தொடர்பால் வந்ததாக கூறினார். எனக்கு இதைக்தாங்க முடியவில்லை. என் பாதிப்பு இரண்டுவிதமானது.நான் காதலித்து மணந்தவர் ஆண்களுடன் படுப்பவர் இத்துடன் நான் எயிட்ஸ பரவலை தொழிலாளர் மத்தியில் பரவாமல் திட்ங்கள் போடும் திணைக்களத்து உயர் அதிகாரி. நான் விவாக விடுப்பு எடுக்கும் போது இவைகளை வெளிப்படையாக சொல்லவேண்டும். இதனால் மனத்தில் ஒரு பூகம்பத்தை அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறேன். அல்ப்ஸ மலையில் இந்தவிடயத்தை சொல்லி இருந்தால் அந்த வெப்பம் பனியை உருக்கி பாரிய பனிசரிவை உருவாக்கிவிட்டிருக்கும்.'

'உனது நிலையை என்னால் புரிந்து கொள்ளமுடிகிறது.'

'நீங்கள் அருமையான மனிதர். நான் போகவேண்டும.';

'என்னுடன் உணவை அருந்தி விட்டு சென்றால் என்ன நிக்கி?

'அது அபாயமானது. ஏற்கனவே உங்களை நான் விரும்பத் தொடங்கிவிட்டேன். இதை தொடரக்கூடாது என்பது எனது விருப்பம்'

எழுந்து கட்டியணைத்து கன்னத்தில் முத்தத்தை கொடுத்து விட்டு உதடுகளை விரலால் தொட்டு ' இந்த உதடுகளை இன்று வரும் உங்கள் மனைவிக்காக ஈரமாக வைத்திருங்கள்' என அணைப்பில் பிரிந்து சென்றாள்

'நிக்கி உன்னை வாழ்க்கையில் மறக்க முடியாது.'

'உங்களையும்தான.; ஏன் தெரியாமா?'

'இல்லை'

'எல்லா போட்டோக்களிலும் உங்கள் சுவட்டரைத்தான் அணிந்திரு;கிறேன்' எனக் கூறிவிட்டு அந்த தெருவில் இருந்து காலையில் வந்த மதிரி மறைந்தாள்.

சம்பந்தமூர்த்தியின் சலனங்கள் அல்ப்ஸ் மலையில் உச்சியில் சந்தித்த பனிப்புகாரைப்போல் மெதுவாக விலகியது.

26 ஏப்ரில் 2011
சிறைப்பட்டிருத்தல் - 2006

uthayam@optusnet.com.au

27. புதிய வருகை - - கே.எஸ்.சுதாகர் (ஆஸ்திரேலியா)

உண்மையில் நேற்றைய தினமே குழந்தை பிறந்திருக்க வேண்டும். ஒரு நாள் பிந்தி விட்டது. இரவு பகலாக விழித்திருந்ததில் செல்வாவிற்கு இந்தக் அதிகாலை வேளையிலும் அசதியாக இருந்தது. வைத்தியசாலைக்குப் போவதற்கு ஆயத்தமாகக் காரை வீட்டு முகப்பினிலே நிறுத்தியிருந்தான் அவன்.

"சாந்தினி வெளிக்கிடுவம் என்ன!"

சாந்தினி பயந்தபடியே படுக்கைக்கும் கழிவறைக்குமாக, தனது பென்னாம் பெரிய வயிற்றையும் தூக்கிக் கொண்டு நடை பயின்று கொண்டிருந்தாள். செல்வாவிற்கு அவளைப் பார்க்கக் கவலையாக இருந்தது. சாந்தினி வெளிக்கிடுவதற்கு அரைமணி நேரமாவது எடுக்கும் என்று நினைத்தவாறே ரெலிவிஷனிற்கு முன்னால் அமர்ந்தான் செல்வா. நேற்றைய தினம் 'சிற்றியில்' நடந்த ஊர்வலமொன்று செய்தியினூடாகப் போய்க் கொண்டிருந்தது. புதிதாக நாட்டினுள் வருபவர்களுக்கு எதிராக, சுலோகங்களைத் தாங்கியவாறு மௌரி இன மக்களும் வெள்ளையினத்தவர்களுமாகப் போய்க் கொண்டிருந்தனர்.

அடுத்த 'யுனிட்'டில் வசிக்கும் மாட்ரா கதவைத் தட்டினாள். நிலமையை விசாரித்தாள். சாந்தினியின் வயிற்றை மெதுவாகத் தடவி விட்டு சின்னக் குழந்தையைப் போலச் சிரித்தாள். அவளின் கனிவான பேச்சு சாந்தினிக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுத்தது. தாங்கள் 'ஹமில்டன்' போவதாகவும் டேவிட்டின் மகளின் வீட்டில் இரண்டொரு நாள்கள் தங்கிவிட்டு வருவதாகவும் கூறிச் சென்றாள். டேவிட்டும் அவனது மனைவி மாட்ராவும் எப்போதாவது இப்படிப் போய் தங்கிவிட்டு வருவார்கள். நியுசிலாந்தில் ஹமில்டன் ஆக்லாந்திலிருந்து ஒன்றரை மணித்தியாலம் கார் ஓடும் தூரத்திலுள்ளது.

இவர்களின் வீடு பிரதான சாலையிலிருந்து கீழே இறங்கிச் செல்லும் சிறு பாதையில் இருக்கின்றது. ஒருபுறத்தே மூன்று யுனிட்டுகள் இருந்தன. அதில் முதலாவதில் இவர்களும், அடுத்ததில் டேவிட்டும், மற்றதில் அடிக்கடி மாறிச் செல்லும் மனிதர்களுமாக இருந்தார்கள்.

சிறு பாதையின் எதிர்ப்புறத்தில் இருந்த வீட்டிலிருந்து கிறேஷ் இவர்களின் வீட்டையே பார்த்தபடி நின்றிருந்தாள். அவளது கையில் இருந்த அன்றைய தினசரிப் பேப்பரான 'நியுசிலாண்ட் ஹெறால்ட்' இவர்களின் திசை நோக்கிப் படபடத்தது. ஏதாவது இலங்கை சம்பந்தமான தகவல்கள் வந்தால் கொண்டு வந்து காட்டுவாள். அடிக்கடி வருவது நாட்டுப் பிரச்சினைதான். எழுபத்தெட்டு வயதைத் தாண்டிவிட்ட அவள் இன்னமும் துடிப்புடனே காணப்படுகின்றாள். இவர்களுக்குக் கரைச்சல் கொடுக்கக் கூடாது

என நினைத்தாளோ தெரியவில்லை,

மாட்ராவுடன் கதைத்துவிட்டுத் திரும்பிப் போய் விட்டாள்.

சாந்தினி இரண்டு நாள்களுக்கு முன்பும் ஒருதடவை 'கிறீன்லேன்' ஹொஸ்பிட்டல் போய் திரும்பியிருந்தாள். பத்துப்பதினைந்து நிமிட இடைவெளியில் வலி - வந்து வந்து போனால் உடனே வைத்தியசாலைக்கு வரும்படி ஆலோசனை சொல்லியிருந்தார்கள். மூன்று மாதமளவில் 'ஸ்கானிங்' செய்தபோது என்ன குழந்தை என்று கண்டுபிடிக்க முடியாமல் இருக்கின்றதென்று டாக்டர் சொன்னார். ஸ்கானிங்கில் 'தெரியவில்லை' என்று ஆசிய நாட்டவர்களுக்குச் சொன்னால், பெரும்பாலும் பெண் குழந்தைதான். கள்ளிப்பாலின் மகத்துவம் மேற்குநாடுகள்வரை பரவிவிட்டது. கிறேஷ் கூட சாந்தினிக்குப் பெண் குழந்தைதான் பிறக்கும் என்று அவளின் வயிற்றைப் பார்த்துச் சொன்னாள். குழந்தை எதுவென்றாலும் அவர்களுக்கு மகிழ்ச்சிதான். குழந்தை இல்லாமல் ஏங்குபவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும்.

"இஞ்சாருங்கோ, நனாவைக் கொஞ்ச நாளாக் காணேல்லை. ஒருக்கா என்னண்டு எட்டிப் பாருங்கோ"

"கிழவி இப்பதான் உதிலை வெளிக்கிட்டபடி ஒரு பேப்பரோடை நிண்டதப்பா. வந்தா எங்கடை நேரத்தைத்தான் கொண்டு போகும்."

இரண்டு மூன்று நாட்களாக கிழவியின் ஆரவாரம் இல்லைத்தான். இல்லாவிடில் பூங்கன்றுகளுக்கு நீர் வார்ப்பாள் அல்லது வளவிற்குள் அங்குமிங்குமாக நடந்து தான் நாட்டி வைத்திருந்த பூங்கன்றுகளை ரசித்துக் கொண்டிருப்பாள்.

செல்வாவும் சாந்தினியும் இந்த நாட்டிற்கு வந்து எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஆரம்பத்திலிருந்தே இதே தெருவில்தான் இருக்கின்றார்கள். முன்பு ஒரு படுக்கை அறை கொண்ட யுனிட்டில் இருந்தார்கள். வசதி மிகவும் குறைந்த மலிவான வாடகை வீடு. இப்ப அழகான மிகவும் வசதி வாய்ந்த 'கராஜ்' கொண்ட யுனிட். இதுவும் வாடகை வீடுதான். அப்போதெல்லாம் வேலை கிடைக்காத காலங்களில் இந்த வீதியால் கடைகளுக்கு நடந்து போய் வந்திருக்கின்றான். 'இந்த வீடுகளில் இருப்பதற்கு எங்களுக்கும் ஒரு காலம் வராதா?' என்று மனம் ஏங்கும். அப்படிப்பட்ட வீடொன்றில் இருந்து, இந்தக் கிறேஷ் இரண்டு மூன்று வயது வந்தவர்களையும் போட்டுக் கொண்டு லாவகமாகக் கார் ஓட்டுவாள். வீட்டிற்குள்ளாலேயே கராஜ்ஜிற்குப் போய், 'றிமோற் கொன்ரோலினால்' கராஜின் கதவைத் திறந்து கொண்டு காரை எடுத்து வருவாள். அவள் காரில் வரும் அழகை எத்தனையோ தடவைகள் பாதை மருங்கில் நின்று பார்த்திருக்கின்றான்.

கிறேஷ் தன்னை நனா என்று கூப்பிடும்படி முதற்சந்திப்பிலேயே இவர்களிடம் கூறியிருந்தாள். முதற்சந்திப்பு! அது நடந்து ஒரு இரண்டரை வருடங்கள் இருக்கும். இப்பொழுது சற்று முன் நின்றாளே, கையில் பேப்பருடன் இவர்களின் வீட்டை நோக்கியபடி, அப்பிடித்தான் அன்றும் நின்றாள்.

நனாவின் சினேகிதி ஒருத்தி இவர்கள் இருக்கும் வீட்டில் முன்பு இருந்தாள். இப்பொழுது அவள் வயது முதிர்ந்தவர்கள் தங்கும் இடத்தில் இருக்கின்றாள். அவள் அங்கு போக இவர்களுக்கு இந்த வீடு கிடைத்துக் கொண்டது. தினமும், அந்தப் பழைய நினைப்பில்தான் இவர்களின் வீட்டை நோக்கியபடி நனா நிற்கின்றாளா?

நனா தனது வீட்டில் முப்பது வருடங்களாக இருக்கின்றாள். அவளுக்கு நான்கு பிள்ளைகள். நான்கு பேரும் நான்கு வெவ்வேறு திக்குகளில் இருக்கின்றார்கள். இங்குள்ளவர்களில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பெற்றோர்களின் தயவில் தங்கியிருப்பதில்லை. அவர்களுக்கு அரசு பணம் கொடுக்கிறது அல்லது சுயமாகச் சம்பாதிக்கின்றார்கள். ஒருவரும் இன்னொருவர்மீது தங்கியிருக்கத் தேவையில்லை. அது இவர்களின் வாழ்க்கை முறை. அதுவே இந்த நாட்டிலிருக்கும் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே நெருக்கம் இல்லாததற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும்.

"என்ர புருஷன் என்னை விட்டுப் போய் முப்பது வருடங்களாகி விட்டன. அதுக்குப் பிறகு நான் என்ரை பிள்ளைகளை வளர்க்கக் கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் போனன். இப்ப அவங்க நாலு பேரும் குடும்பமா நல்ல சந்தோஷமாக இருக்கினம். எப்பவாவது ஈஸ்டர், பிறந்தநாள், மதர்ஸ் டே, கிறிஸ்மஸ் எண்டு வந்து போவினம். அதிலை ஒண்டும் தப்பில்லை" நனா உதடுகள் நடுங்க மெல்லிய குரலில் சொன்னாள். கணவர் இறந்த பின்னும், பிள்ளைகள் வெவேறு இடங்களுக்குப் போன பின்னும் கிழவி யாருக்கும் தலை குனியாமல் ராசாத்தி போல வாழ்கின்றாள். அதற்கு இந்த நாடு உத்தரவாதம் அளிக்கிறது.

"எங்கட நாட்டிலை பெற்றோரைப் பிள்ளைகள் தெய்வமாகத்தான் நினைப்பினம்" என்று சாந்தினி கிழவியை இடைமறித்தாள்.

"உண்மைதான். தேசத்துக்கும் காலத்துக்கும் ஏற்றபடிதானே வாழவேண்டும். எந்தப் பெற்றோரும் எந்த நாளுமே இளமையா இருக்க முடியுமா? முதுமை வரத்தானே செய்யும்! அப்போது எங்கடை வாழ்க்கை முறை சிலவேளை அவர்களுக்குப் பிடிக்காமல் இருக்குமல்லவா?"

அவளின் தனிமை பூச்செடிகளும் புத்தகங்களும் கம்பளி உடுப்புகள் பின்னுவதும் இன்னும் பிற சுகமான நினைவுகளுமாகக் கழிகின்றன. இப்பொழுதெல்லாம் நனாவினால் கார் ஓட்ட

முடிவதில்லை. காரையும் விற்றுவிட்டாள். கடைகளிற்கும் வைத்தியசாலைக்கும் வாடகைக் காரில் போய் வந்தாள். இடையில் ஒருநாள் - நடு இரவில் அம்புலன்ஸ் ஒன்று அலறிக் கொண்டு வந்து நனாவை ஏற்றிச் சென்றது.

இரண்டுநாள்கள் கழித்து திரும்பவும் வீட்டிற்கு வந்த அவள் மீண்டும் சுறுசுறுப்பாகிவிட்டாள். முதுமையை அவள் ஒரு பொருட்டாக நினைத்ததே இல்லை. அவள் அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் எழும்பி விடுவாள். காலையில் தினசரி பேப்பர் படிப்பாள். இரவில் புத்தகம் படிப்பதும் கம்பளி உடுப்புகள் பின்னுவதையும் வழமையாக வைத்திருந்தாள். இரவு பன்னிரண்டு மணிக்குள் உறங்கவே மாட்டாள்.

அவளிடமிருந்து கற்றுக்கொள்வதற்கு நிறையவே இருக்கின்றன.

செல்வா வேலைக்குப் போகும் பகல் நேரங்களிலெல்லாம் சாந்தினியின் பொழுதுகள் நனாவுடன்தான். அப்பொழுதெல்லாம் சாந்தினிக்கு நனாவுடன் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது கதைக்காவிட்டால் சரிவராது. முதலில் 'ஹலோ, சீ யூ, பாய் பாய்' என்று சொல்லித் திரிந்த சாந்தினி, நனாவைச் சந்தித்துப் பழகியதில் 'ஹவ் ஆ யூ' போன்ற தொடர் வசனங்களையும் பேசப் பழகிக் கொண்டாள். தினமும் நனா வீட்டிற்குள்ளிருந்து தள்ளாடி வாசலிற்கு வந்து, அங்கிருந்தபடி சாந்தினியை நோக்கி ஒரு "•ப்ளையிங் கிஸ்" விடுவாள். அதைப் பக்குவமாக ஏந்தி இங்கிருந்தபடியே சாந்தினி திரும்பவும் விடுவாள். பொழுது விடிந்து நனா வெளியே வந்தால், ஓடோடிச் சென்று அவளை விழுத்தி விடுமாப் போல் கட்டிப் பிடிப்பாள் சாந்தினி. ஊரிலிருக்கும் தனது அம்மாவைத் தான் கவனிக்கவில்லையே என்ற ஏக்கம், கிழவியில் தணியும்.

இவர்களின் வருகையின் பிற்பாடு நனாவின் வாழ்க்கையில் திருப்பம் ஏற்பட்டது. செல்வாவும் சாந்தினியும் விழுந்து விழுந்து நனாவிற்கு உதவி செய்தார்கள். ஒரு வெள்ளைக்காரப் பெண்ணுக்கு தாங்கள் உதவி செய்வதைப் பெருமையாக எண்ணினார்கள். நனாவைக் காரின் முன்சீற்றில் இருத்தி, தானே காரை ஓட்டிச் செல்வதில் சாந்தினிக்கு அலாதிப் பிரியம். ஆரம்பத்தில் இவர்களின் உதவியை நனா எதிர்த்தாள். அவளிற்குத் தானே தன் சொந்தக் காலில் நிற்பதற்குத்தான் பிரியம். சொந்தக் காலில் நிற்பதற்குத்தான் இந்த நாடு சிறுவயதில் இருந்தே கற்றுக் கொடுக்கின்றது. அந்தப் பாரம்பரியத்தை முறியடித்து இவர்கள் வெற்றி கொண்டார்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் அவளைக் கடைகளுக்குக் கூட்டிச் சென்றார்கள். "பாத்தியளே, ஒரு வெள்ளையை எங்கட பக்கம் திருப்பி விட்டோமே!" என்றாள் வீறாப்பாக சாந்தினி. நனாவுடன் பழகுவதால் நுனி நாக்கில் 'இங்கிலிஸ்' தவழுகின்றது என்றாள். நனாவிற்குக் காலில் புண் என்றால் இவர்களுக்குக் கழுத்திலே நெறி போட்டது போல. "•ப்ளையிங் கிஸ்"கள் வீட்டிற்கு வீடு பறந்தன.

சாந்தினி கர்ப்பமானாள். அதன் பின்பு சாந்தினியும் நனாவும் தினமும் கொஞ்சத்தூரம் நடை பழகினார்கள். இப்போது இரண்டு பேரினதும் நடை ஒரே மாதிரித்தான். தள்ளாத வயதில் கிழவியும், வயிற்றைத் தள்ளிக் கொண்டு நிற்கும் சாந்தினியையும் ஒரு சேரப் பார்ப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

வாசலில் வந்து, இடுப்பை ஒரு புறமாகச் சரித்துக் கொண்டு "நான் ரெடி" என்றாள் சாந்தினி. வீட்டை விட்டு வெளிக்கிடுகையில் ரெலிபோன் அடித்தது. ஆராவது நண்பர்கள் அல்லது மாமாவாக இருக்கலாம் என்றாள் சாந்தினி. சற்று நேரம் தாமதித்துப் போகலாம் என்று நின்று கொண்டார்கள். ரெலிபோன் மீண்டும் அடித்தது. றிசீவரைத் தூக்கும்போது 'படக்' என்று மறுமுனையில் அடித்து வைக்கப்பட்டது.

"உது அவங்கடை வேலைதான்" என்றாள் சாந்தினி. கொஞ்ச நாட்களாக நாட்டில் கள்வர்களின் திருவிளையாடல்கள் அதிகரித்துவிட்டன.

போனகிழமை தியேட்டரில் நல்ல 'த்ரில்' படம் ஓடியது. தமிழில் 'த்ரில்' படம். படம் பார்த்துவிட்டு குலை நடுக்கத்துடன் வீடு வந்து சேர்ந்தவர்களில் பலருக்கு கள்வர்கள் 'த்ரில்' காட்டியிருந்தார்கள். தகவல் தொழில் நுட்பப் பரிமாற்றம் நாட்டில் வெகுவாகத்தான் முன்னேறிவிட்டது.

செல்வா நாட்டிற்கு வந்த புதிதில் பஸ்சினில் 'கிளின் இனிங்ஸ்' போய் வீட்டிற்குத் தேவையான பொருள்களை வாங்கி வருவான்.

பஸ்சிற்கு போக வர இரண்டு டொலர் போதும். வீடு வந்தவுடன் பஸ்சினிலிருந்து பொருள்களை இறக்கி, வரிசையாக நிற்கும் 'போஸ்ற் பொக்ஸ்' அருகில் வைத்துவிட்டு, ஒவ்வொன்றாக வீட்டிற்கு எடுத்துச் செல்லுவான். பிரதான வீதியிலிருந்து கீழே இறங்கிச் செல்லும் சிறுபாதை வழியாக நேராக நடந்து போனால் வீடு வரும். சிலவேளைகளில் கொஞ்சப் பொருள்களை எடுத்துக் கொண்டுபோய் வீட்டினில் வைத்துவிட்டு, களைப்பாறி தேநீர் குடித்துவிட்டு மீண்டும் போய் மிகுதிப் பொருள்களை எடுத்து வந்திருக்கின்றான். அவ்வளவிற்கு அப்போதெல்லாம் பயம் இருக்கவில்லை. இப்போது ஒரு குடையை வைத்துவிட்டு வந்தாலும் அந்த இடத்தில் பத்திரமாக இருக்காது.

"என்ன உதுக்குப்போய் கடுமையா யோசிக்கிறியள். நனா வீட்டை வடிவாப் பாத்துக் கொள்ளுவா. எதுக்கும் அவவிட்டை ஒருக்காச் சொல்லிப் போட்டுப் போனால் நல்லது" என்றாள் சாந்தினி.

செல்வா நனாவின் வீட்டிற்கு ஓடினான். அப்பொழுது நனா பேசி தனது நேரத்தை வீண்டித்துவிடுவாள் என்ற எண்ணம் தோன்றவில்லை.

தேவை என்ற ஒன்று வரும்போது மனம் ஓடத்தான் செய்கின்றது. நனா வீட்டில் இருக்கவில்லை.

"கிழவி பூசி மினுக்கிக் கொண்டு எங்கையோ போயிட்டுது" ஏமாறத்துடன் செல்வா சொன்னான்.

"இப்ப என்ன லட்சமா எங்கடை வீட்டிலை கொட்டிக் கிடக்கு. வாங்க போவம்" என்று இழுத்தாள் சாந்தினி.

சொன்னா என்ன, சொல்லாட்டி என்ன நனா வீட்டைப் பார்த்துக் கொள்ளுவாள் என்ற தைரியத்தில் வீட்டைப் பூட்டிக் கொண்டு காரை தெருவிற்குள் செலுத்தினான் செல்வா.

*** *** ***

வைத்தியசாலையில் ஒன்றும் குழந்தை சுகமாகப் பிறந்து விடவில்லை. சாந்தினிக்கு முதலில் ஏதோ களிம்பு பூசினார்கள். பின் முள்ளந்தண்டில் ஊசி ஏற்றினார்கள். அதற்கும் சரிவராவிடில் 'சிசேரியன்' என்று சொல்லிவிட்டார்கள்.

அடுத்த அறையில் இருந்த 'மெளரி' இனப்பெண்ணிற்கு குழந்தை பிறந்திருக்க வேண்டும். அவர்களின் அறை ஒரே ஆரவாரமாக இருந்தது.

திபுக்குத் திபுக்கு என்று பெரிய உருவங்களில் அவளின் உறவினர்கள் வந்தும் போய்க் கொண்டும் இருந்தார்கள்.

என்னதான் இருந்தாலும் குழந்தை பிறக்கும் போது, அந்தக் குழந்தையின் தந்தை 'டெலிவரி றூமிற்குள்' உடன் இருந்தாக வேண்டும் என்பதும் தொப்புள் கொடியை அவனே வெட்ட வேண்டும் என்பதும் செல்வாவின் மனதை நெருடத்தான் செய்தது.

மதியம் வந்தவர்களுக்கு, இரவு ஏழு மணியளவில் குழந்தை கிடைத்தது. சுகப் பிரசவம். பெண் குழந்தை. செல்வா உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ரெலிபோன் செய்தான். நனாவையும் டேவிட்டையும் ரெலிபோனில் பிடிக்க முடியவில்லை. நேரம் இருட்டி விட்டபடியால் மாமாவின் குடும்பம் மாத்திரம் அடித்துப் பிடித்துக் கொண்டு எட்டு மணிக்குள் வந்து சேர்ந்தார்கள். மாமி குடு குடுவென்று நடந்து வந்து, கொண்டு வந்த பொக்கிசத்தை சாந்தியின் கண் பார்வைக்குக் கிட்ட வைத்தாள்.

செல்வா வந்தவர்களுக்கு 'சொக்லேற்' கொடுத்தான். மாமாவிற்கு ஏழு வயதில் ஒரு பெண்ணும் ஐந்து வயதில் ஒரு ஆணும் இருந்தார்கள்.

அவர்கள் உள்ளேயும் வெளியேயுமாக ஓடித் திரிந்தார்கள். பெண் 'சொக்லேற்றைச்' சாப்பிட்டுவிட்டு பேப்பரை தவறுதலாக வாசலில் போட்டு விட்டாள். இதை அவதானித்துக் கொண்டிருந்த மௌரி மனிதன் ஒருவன் அதை எடுத்து குப்பைத் தொட்டியினுள் போடும்படி அவளிடம் சொன்னான்.

"தாங்கள் படு குப்பை. அடுத்தவருக்கு சுத்தத்தைப் பற்றிச் சொல்லித் தர வந்திட்டினம்" என்று கோபத்துடன் புறுபுறுத்தான் செல்வா.

"அவையள் தங்கட வீட்டைக் குப்பையா வைச்சிருந்தாலும், நாட்டை நல்ல வடிவாகத் தான் வைச்சிருக்கினம்" மகள் செய்ததுதான் பிழை என ஒத்துக் கொண்டார் மாமா.

"தம்பி செல்வா! இண்டைக்குப் பேப்பர் பாத்தனீரோ?"

"இல்லை மாமா. எங்கை எனக்கு நேரம். ஏன் என்ன புதினம்?"

"புதிசா நாட்டுக்கை வாற 'ஏசியன்ஸ்' பற்றி ஏதோவெல்லாம் உளறித் தள்ளியிருக்கிறார்" எங்கடை பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்.

"துவங்கிவிட்டினம் அரசியல். உதுகளைப் போட்டிட்டு இஞ்சை வந்து குழந்தையைப் பாருங்கோ" என்று மாமி கத்தினாள். மாமா தொட்டிலைச் சுற்றிச் சுற்றி வந்து குழந்தையைப் பார்த்தார்.

"காது கொஞ்சம் கறுப்பாக் கிடக்கு. இக்கணம் கறுப்பிச்சியா வருவாளோ?" என்று சமசியப்பட்டார்.

"ஏழெட்டு வருஷமாப் பிள்ளையில்லாமல் தவமாய்த் தவமிருந்து பெத்திருக்குதுகள். இவருக்குக் கறுப்பும் சிவப்பும்."

"எனக்குத் தெரிஞ்சு, பிள்ளையில்லாமல் வந்த கனபேருக்கு இஞ்சை பிள்ளை பிறந்திருக்கு. அதுக்கு நியூசிலாந்துச் சுவாத்தியமும் ஒரு காரணம் எண்டு நினைக்கிறன்" என்று மேலும் தனது கண்டுபிடிப்பை வெளியிட்டார் மாமா.

சற்று முன் குதூகலித்த அறை இப்பொழுது வெறிச்சோடிப் போயிருந்தது. சாந்தினியும் குழந்தையும் களைப்பு மிகுதியினால் உறங்கிப் போயிருந்தனர். செல்வா இரவு அங்கேயே தங்குவதற்கு வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் அனுமதி பெற்றுக் கொண்டான்.

இளைப்பாறும் அறைக்குள் ரி.வி, செய்தித்தாள் பார்ப்பதும், மனைவியையும் குழந்தையையும் பார்ப்பதுமாக அவன் பொழுதுகள் கரைந்தன. அடுத்த அறைக்குரிய மௌரி மனிதன் இளைப்பாறும் அறைக்குள் இருந்து அன்றைய தினசரியை விடுத்து விடுத்துப் பார்த்துவிட்டு செல்வாவிடம் நீட்டினான்.

"முற்றிலும் வேறுபட்ட மொழி மற்றும் கலாசாரத்தைச் சேர்ந்தவர்கள் அளவுக்கு மீறி, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் போவதானது அந்த நாட்டில் பாரிய தாக்கங்களை ஏற்படு த்துகின்றது. இதனால் சமூக கலாசார ரீதிகளில் நியூசிலாந்தவர்கள் இன்று, வந்தேறு குடிகளைக் கண்டு பயப்படுகின்றார்கள்" என்று கூறியிருந்தார் பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர்.

"நியூசிலாந்தவர்களில் அதிக தொகையினரால் ஆசிய மக்களை சகிக்க முடியவில்லை. இதற்கு எதிராக இனத்துவ இணக்கத்தைப் பரப்பும் செய்திகளை மனித உரிமைகள் ஆணையம் எடுத்து வரு கின்றது. மேலும் வயோதிபர்களே அதிகம் வாழும் எமது நாட்டில் தொழில் செய்யக்கூடியவர்கள் தொகை குறைந்து வருகின்றது. போதுமான வருமானம் வேண்டும். இங்கு வருவோரின் வாழ்வை வளமாக்குவதில் நாம் முன்னிற்க வேண்டும்" என்கின்றனர் இனங்களுக்கிடையே சமூகநிலை பற்றி ஆராய்ந்தவர்கள்.

செல்வா மேலோட்டமாக அந்தச் செய்தியைப் பார்த்துவிட்டு அந்த மனிதனை நிமிர்ந்து நோக்கினான்.

"உங்களுக்குக் குழந்தை பிறந்ததில் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?" என்று அவனைப் பார்த்துக் கேட்டான். அந்தக் கேள்வி மௌரி மனிதனை விசனத்துக்குள்ளாக்கியிருக்க வேண்டும்.

"இது என்னுடைய மூன்றாவது குழந்தை. எனது மனைவிக்கு ஏகப்பட்ட வருத்தங்கள். என்றாலும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றேன்.

எவருக்கும் குழந்தை பிறந்தால் மகிழ்ச்சியைத்தான் குடுக்கும்." என்றான் கோபத்துடன்.

"அப்படியெண்டால் இந்த நாட்டிற்குப் புதிதாக வரும் மனிதர்களை ஏன் நீங்கள் வெறுக்கின்றீர்கள்?"

"அது வேறை, இது வேறை!"

"எப்படி வேறாகும்?"

"குழந்தைகள் எல்லா விஷயத்தையும் தெரிந்து வைத்துக் கொண்டு பிறப்பதில்லையே!" பெரிதாக ஏதோ தத்துவத்தைச் சொன்னவன் போல முகத்தைத் தடவிக் கொண்டான் அவன்.

"இஞ்சை பாருங்கள். உங்களுக்கு நான் ஒன்று சொல்ல வேண்டும். உண்மையில் இந்த நாடு எங்களுடையது. 'வைற் பீப்பிள்' இந்த நாட்டைப் பிடித்தவுடன் நாங்கள் இரண்டாம்தரப் பிரஜைகள் ஆகி விட்டோம்."

"அப்பிடித்தான் எங்களுக்கும் நடந்தது. நாங்களும் எமது நாட்டினில் இப்பொழுது இரண்டாம்தரப் பிரஜைகள்தான்"

"இப்பொழுது தெரிகின்றதல்லவா புதியவர்களின் வருகையை நாம் ஏன் எதிர்க்கின்றோம் என்று. எங்கடை மக்களுக்கே இஞ்சை வேலையில்லாமல் இருக்கு. புதிதாக வருபவர்களும் இங்கு வந்து சுரண்டுகின்றார்கள்."

இளைப்பாறும் அறை வாசல்வரை சாந்தினி மெதுவாக நடந்து வந்து உள்ளே எட்டிப் பார்த்தாள்.

"நான் வீட்டிற்குப் போக வேண்டும். போய் வருகின்றேன்" என்று விடைபெற்றுக் கொண்டான் அந்த மௌரி மனிதன்.

"ஆரப்பா உந்த மனிசன்? பாக்கப் பயமாக் கிடக்கு" என்று சாந்தினி கேட்டு வாய் மூடுவதற்குள், அந்த மௌரி மனிதன் திரும்பி வந்து செல்வாவின் தோளினில் கை பதித்தான்.

"இங்கு குடியேறுபவர்கள் நியூசிலாந்தவரை புரிந்து அறிந்து நடக்க வேண்டும். அதே போல நியூசிலாந்தவரும் புதிதாய் வருவோர்மீது நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும்" என்று சொல்லிவிட்டு தன் பாட்டில் நடந்து போனான்.

*** *** ***

இரு நாட்களின் பின்பு ஒரு மதியம் வீடு திரும்பியிருந்தார்கள். எல்லா வேலைகளையும் முடித்து ஓய்ந்து போயிருந்த வேளையில் 'இஞ்சாருங்கோ' என இராகமிழுத்தாள் சாந்தினி.

"இஞ்சாருங்கோ, நனா இன்னும் வந்து எங்கடை பிள்ளையைப் பாக்கேல்ல. ஏதேனும் எங்களோடை கோபமோ?"

"நனாவுக்கு நாங்கள் வந்தது இன்னமும் தெரியாமல் இருக்கலாம். ஒருக்கால் சொன்னால் நல்லது."

"அச்சாப் பிள்ளையல்லே! ஓடிப்போய் ஒருக்கா சொல்லிப்போட்டு வாங்கோ"

செல்வா நனாவின் வீட்டிற்கு ஜெற் போல ஓடினான். பெல்'லை அழுத்தினான். வீடு பயங்கர அமைதியில் சூழ்ந்திருந்தது. உள்ளே எந்தவித சலனமும் இல்லை. ஒருவேளை உள்ளே கிழவி இல்லையோ? கதவைக் கைகளினால் பலமாகத் தட்டினான்.
இவனது செய்கையை அவதானித்த டேவிட் தானும் கிழவியின் வீட்டிற்கு வந்தான்.

"காலமை நானும் பாத்தனான். கிறேஷைக் காணேல்ல. எங்கேனும் தூரத்திற்குப் போயிருப்பாளோ?" என்று சொல்லிக் கொண்டே வீட்டைச் சுற்றி ஒருமுறை பார்த்தான் டேவிட். ஜன்னல் ஒன்று சிறிது நீக்கியிருந்தது. அதற்குள் முகத்தைப் புதைத்து உள்ளே நோட்டமிட்டான்.

ஏதோ சந்தேகம் கொண்டவனாக தனது வீட்டிற்கு விறுவிறெண்டு அடியெடுத்து வைத்தான்.

"பொலிசைக் கூப்பிடுவம்!"

பொலிஸ் வந்தது. தனது திறப்புக் கோர்வையினால் கதவின் துவாரத்தை நோண்டினார்கள். கதவு திறந்து கொண்டது.

கிழவி அழகாக அன்றலர்ந்த தாமரை போலக் கதிரையில் இருந்தாள். அவளிற்குப் பக்கத்தில் இருந்த 'ஹொவி ரேபிள்' என்னும் கோப்பி மேசையில் குடித்து முடிக்கப்பட்ட தேநீர்க் கோப்பை ஒன்று கிடந்தது. தேநீரின் மயக்கத்தில் விழுந்து இறந்து போய்விட்ட ஒரு பூச்சியை எறும்புக்கூட்டமொன்று இழுத்துக் கொண்டிருந்தது. பக்கத்தில் 'நியுசிலாண்ட் ஹெரால்ட்' பேப்பர் விரித்தபடி, புதியவர்களின் வரவினால் நாட்டினில் ஏற்படும் அவலத்தைக் காட்டியபடி கிடந்தது. அதற்கும் மேலே பின்னிமுடிக்கப்பட்ட ஒரு குழந்தையின் குளிர் உடுப்பு ஒன்று இருந்தது. செல்வா அந்தக் குளிர் உடுப்பைத் தூக்கிப் பார்த்தான். அதற்குள்ளிருந்து ஒரு 'காட்' கீழே விழுந்தது.

"ஒன்றையும் தொடாதீர்கள்" என்று வந்த பொலிஸ்காரர்களில் ஒருவன் சத்தமிட்டான்.

ஆனாலும் அந்த விழுந்து கிடந்த அந்த அட்டையில், அழகாகச் சிரித்தபடி இருக்கும் பெண் குழந்தையின் படத்தையும் 'For new born baby' என்று எழுதிக் கிடந்ததையும் பார்க்கக் கூடியதாகவிருந்தது.

kssutha@hotmail.com 26 ஏப்ரில் 2011

28. திரிபு - கமலாதேவி அரவிந்தன், சிங்கப்பூர்

வியர்வையில் ஊறிய டீ ஷர்ட்டும், மெது ஓட்டத்துக்கான ஜோகிங் ட்ரேக் கால்சராயுமாய், கல்சீட்டில் வந்தமர்ந்த சசிரேகாவுக்கு மூச்சு வாங்கியது. நியாயப்படி ஜோகிங் செய்பவர்கள் பாதியிலேயே இப்படி வந்தமர்வதில்லை. மூன்று ரவுண்டு ஓடிவிட்டுதான் சசிரேகாவும் வந்து அமர்ந்தாள். அதற்குமேல் மெது ஓட்டமல்ல, நடைகூட கஷ்டமாக இருந்தது,. பேசாமல் அமர்ந்து பார்க்கில் ஓடிக்கொண்டிருந்தவர்களை வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள். ஆண் ,பெண் ,பேதமில்லாமல் மனிதர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். அந்த காட்சியும் கூட கொஞ்ச நேரத்துக்குமேல் உவப்பாயில்லை. எதிர்சாரியிலிருந்த உடல் பயிற்சி தளத்தில் கண்களை ஓட்டினாள். அந்த திறந்த வெளிச்சாலையில், இளைஞர்களும், வயதானவர்களும், கைகால்களை அசைத்தும் வளைத்தும், உடல்பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

நான்கு மாதங்களாய் கடுமையாக, தானும் உடல்பயிற்சியில் ஈடுபட்டு வருவதை நினைத்தபோது சசிரேகாவுக்கு துக்கமாக இருந்தது. உடல்பயிற்சி செய்யும் எல்லோருக்குமே உடம்பு குறைகிறது.ஆனால் சசி ரேகாவுக்கு மட்டும் ,ஒன்றோ இரண்டோ கிலோதான் குறையும். எப்படி கஷ்டப்பட்டாலும் அந்த உப்பல்தேகம் மட்டும் குறையவே இல்லை. ரொம்ப சிரமப்பட்டு பயிற்சி செய்வதெல்லாம் சரி, ஆனால்" வாயைக்கட்டுகிறாயா?" என்று அம்மா மரகதம் கத்தும்போதுதான் கோபம் வருகிறது. அதற்கு இவள் என்ன செய்ய முடியும்? உடல் பயிற்சி முடிந்து வீடு திரும்பும் வழியில் தான் ,K.F.C பில்டிங் கைக்கடக்கமாய் நின்று கொண்டு இவளைப்பார்த்து குசலம் விசாரிக்கிறது. என்ன ? என்று மென்னகையாய் இவளைப்பார்க்க, நின்று ஒரு வார்த்தை பேசலாமா என்று யோசிப்பதற்குள், மொறு மொறு கெண்டக்கி சிக்கனும், ஃப்ரென்ச் ஃப்ரைஸும், ஸ்மேஷ் பொடடோஸும், மனசையும் நாவையும் அலைக்கழிக்க, ஹ்ம்ம்ம்..பிறகென்ன ? சம்பிரம்மமாய் அமர்ந்து ஒரு வெட்டு வெட்டிவிட்டுத்தான் சசிரேகா நடையைத்தொடர்வாள். வேறு என்ன தான் செய்வது? முதலில் நாவை அடக்கணும், பிறகு ருசியை மறக்கணும்.அப்பதான் அந்த உப்பிய முகமும், கனத்த உடம்பும் கொஞ்சமாவது கட்டுக்குள் வரும், என்று அம்மாவும், டயட்டீஷியனும், ஏன் தோழிகள் கூட, புத்திமதி சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டார்கள். அது மட்டும் சசிரேகாவால் முடியாது. பசிநேரம் வந்தால்தான் சாப்பிடணும் என்றில்லை. பசி வரும் முன்னரே நொறுக்குத்தீனியாக சிப்ஸ், வறுத்த கச்சான், போக்கனா,என எது கிட்டுதோ, சாப்பிடுவாள். சாப்பாட்டு நேரத்திலும் எது உண்டோ, இல்லையோ,ஒரு துண்டாவது மீனோ, கோழித்துண்டோ, அவசியம் வேண்டும். அது மட்டும் இல்லாமல் சசிரேகாவால் சாப்பிடவே முடியாது. இத்தனைக்கும் சசிரேகா ஒன்றும் சாப்பாட்டு ராமியல்ல. ஆனால் ருசிநாடும் சாப்பாட்டுப்பிரியை தான் என்பதை மறுப்பதற்கில்லை. என்ன செய்ய?

ஆரம்பத்தில் இவளை குண்டு என்று சொல்லத் தயங்கியவர்கள் கூட, இப்போதெல்லாம் கூசாமல், அடைமொழியிட்டே, அழைக்கத் தொடங்கிவிட்டார்கள். தோழிகள் எல்லோரையும் விடவே இவள் கொஞ்சம் குண்டுதான். இதனாலேயே இவள் பல கடைகள் ஏறி இறங்க வேண்டியிருந்தது. உடைகளும் அப்படி ஒன்றும் லேசில் கிட்டாது. அலையாய் அலைந்து ,தப்பித்தவறி ஆசைப்பட்டுப்போய், வாங்க முயற்சித்தால் , சத்தியமாய் அந்த உடை இவள் சைசுக்கு இருக்காது. பிறகுதான் உடல்பயிற்சிக்குப் போகவேண்டிய அவசியம் பொட்டிலறைந்து கொண்டு உறைத்தது. சசிரேகா மூச்சு வாங்க வாங்க ஓடினாள். உடல் களைக்க களைக்க பயிற்சி செய்தாள். திணறத்திணற , குனிந்தும் நிமிர்ந்தும். கைகால்களை போட்டு அப்படி கஷ்டப்படுத்தியதில் வஞ்சனையின்றி உடம்பிலிருந்து வியர்வை ஆறாய் ஓடியது. அடைத்து விடைத்துக் கிடந்த ஊளைச்சதையெல்லாம் குறைந்துவிடும் என்றுதான் சசிரேகாவும் நம்பினாள். ஆனால் வரும் வழியில்" கெண்டக்கி சிக்கன், அல்லது, சிக்கன் ரைஸ், ஏன், ஹோக்கியன் மீ, " கூட அவள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டது.

டயட்டீஷியன் சசிரேகாவை கோபித்துக்கொண்டார்.. உடல்பயிற்சியாளரும் கூட முறைத்தார். ஆனால் அம்மா மட்டும் கடுமையாகத் திட்டினாள். இதொன்றும் அவளுக்குப் பெரிதாகப் படவில்லை.ஆனால் உடன் வேலை செய்யும் மோஹன் சொல்கிறான்.

" சேச்சே, என்ன பேச்சு பேசறே? ரஹிமா கொஞ்சம் தடிதான், அதுக்காக , போயும் போயும் சசிரேகா கூடயா ஒப்பீடு செய்யறே? சசி என்னா சைசு? ரஹிமா, பாவம் , ! சசி கூட ஒப்பிடும்போது ரஹிமா தடியே இல்லையே ? "

மதியம் லன்ச் டைமில் முகம்மதுவிடம் மோஹன் அடித்த கமெண்ட் இது. கேட்டுக்கொண்டிருந்த சசிரேகாவுக்கு மூச்சே நின்றுவிடுவது போலாகிவிட்டது.கேட்காதவள் போல் நடிக்க, முகத்தை ஒன்றுமே இல்லாமல் வைத்திருக்க ,அந்த பாடு பட்டாள். மனசெல்லாம் அப்படி வலித்தது. அன்றுதான் அவள் சாப்பாட்டை பாதியிலேயே விட்டு விட்டு எழுந்து போனாள்.

மாலை வரை ஒரு டீ கூட குடிக்கவில்லை. குளிர்பானம் கூட தொடவில்லை.ஆனால் இரவு வருவதற்குள் சசிரேகா தளர்ந்துபோனாள். சிறுங்குடலை பெருங்குடல் விழுங்க தவித்துப் போனாள்.நள்ளிரவு நெருங்கும்போது பசி தாங்காமல், சோறும் மீன் குழம்பும் , அள்ளி வாரி சாப்பிட்டாள். அப்படியும் பசி ஆறவில்லை. இரண்டு துண்டு பிரெட் டில் பட்டரும் ஜாமும் தடவி சாப்பிட்டாள். உபரியாக ஒரு கிளாஸ் நிறைய ஆரஞ்சு ஜூசும் உள்ளே போனபிறகு, தான் உடம்பு உடம்பாகியது .இவளும் மனுஷியானாள்..

சசிரேகா தொடர்ந்து உடல்பயிற்சி செய்தாள், இந்த முறை டயட்டிஷியன் கூறியபடி சாப்பிட முயற்சி செய்தாள். இரண்டு துண்டு ரொட்டித்துண்டும், அவித்த காய்கறியும்

பார்த்தாலே குமட்டிக்கொண்டு வந்தது. மனுஷி சாப்பிடுவாளா இதை? ---
இந்த அல்லாடலில் இவள் தவித்துக் கொண்டிருக்கும்போது தான் ,ஒரு நாள் அந்த மனிதரைப் பார்த்தாள். ஒரு சின்ன நாய்க்குட்டியைத் தூக்கிக் கொஞ்சிக் கொண்டும், பிறகு கொஞ்ச நேரம் அதை நடக்கவிட்டும், நாயின் பின்னால் ஓடிக்கொண்டிருந்த, அந்த மனிதரைப் பார்க்க சுவாரஸ்யமாக இருந்தது. ஒரு நாள் இவள் ஓடிக்களைத்து , அமர்ந்த போது எதேச்சையாக , அதே இருக்கையிலேயே அவரும் வந்தமர்ந்தார்.

" என்னுடைய ஜோனி, " என்று பெருமையாக அந்த மனிதர் நாயை அறிமுகப்படுத்த, சசிக்கு எப்படி ரியாக்ட், பண்ணுவதென்றே தெரியவில்லை. சிரித்து வைத்தாள். இப்படித்தான் தொடங்கியது சசிக்கும் கிறிஸ்டபருக்குமான நட்பு. ஒருநாள் பேச்சு வாக்கில், "" உனக்கென்ன ஒரு 35 வயதிருக்குமா? "என்று கேட்க, சப்த நாளங்களும் ஸ்தம்பிக்க விக்கித்துப் போனாள். அதற்குப் பிறகு அந்த ஆளிடம் பேசவே பிடிக்கவில்லை. நேருக்கு நேர் சந்தித்தால் கூட" சரிதான் போய்யா," என்பதுபோல் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். 24 வயசு கூட நிரம்பாத தன்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்க எப்படி மனசு வந்தது? முதன்முதலாக அவளுக்கு அழுகை வந்தது.சுய பச்சாதாபத்தில் மளமளவென்று வழிந்தது கண்ணீர்.

"இப்படி அழுவதற்கு உனக்கு வெட்கமாயில்லை? கிண்ணென்று 'திண்ணக்கமாய் அதட்டியது ஒரு குரல். யாரிந்த அசரீரி, என்று சுற்று முற்றும் பார்க்க, யாருமே இல்லை. குமுறிக்கொண்டிருந்த சசிரேகாவுக்கு ஒரு வினாடி ஒன்றுமே புரியவில்லை. யார் தன்னிடம் பேசினார்கள்?

"இங்கே பார் " ! பார்த்தாள். அட, மரம்,! மரம் எங்காவது பேசுமா ? மீண்டும் சுற்றும் முற்றும் பார்க்க, இவளைவிட இன்னும் கொஞ்சம் மட்டுமே உயரமுள்ள ஒரு சின்ன மரம், ஆனால் தெனாவெட்டான மரம் ஒன்று தான், அருகில் நின்று கொண்டிருந்தது. அந்த பார்க்கில் இந்த சைசில் தான் எல்லா மரங்களுமே இருந்தன. ஆனால் பார்க்க அழகாயிருந்தன அந்த மரங்கள். சசிரேகாவுக்கு கோபம் தாங்கவில்லை. போயும் போயும் ஒரு மரமா எனக்கு புத்திமதி சொல்லணும் ? இந்த அக்றிணைக்குக் கூடவா நான் கேடு கெட்டுப்போயிட்டேன்?

" ஏன் மரங்கள் என்றால் என்ன மட்டம்? உனக்கு ஏன் இப்படி கோபம் வருகிறது?? முதலில் என்னைப்பார், நான் மரம் தான், என்றாலும் எப்படி திண்ணக்கமாய் நிற்கிறேன் பார்! வெடவெடவென்று , எப்படிஒடிய ஒடிய நிற்கிறேன் பார், பச்சைப்பசேலென்று என்னுடைய இலைகள் கூட என்ன அழகு பார், வேர் கூட எப்படி அடி தழுவி,மண்ணுக்குள் பொசிந்துபோய் நிற்கிறது பார், ! என்னால் தான் இந்த பூமிக்கு என்னென்ன பலன் தெரியுமா?"

"அப்படியென்றால் என்னால் யாருக்குமே எந்த பலனுமே இல்லை என்கிறாயா?"

"அதை நீ தான் யோசித்து முடிவெடுக்கணும்? என்னை ஏன் கேட்கிறாய்?"

"நானா உன்னிடம் பேச வந்தேன்? நீ தானே வலிய வந்து என்னை வம்புக்கிழுக்கிறாய்?"

'யெஸ், நானே தான்' என்பதுபோல் ஒரு குலுக்கு குலுக்க,பன்னீர்த்தூவலாய் ரேகாவின் மேல் சிதறி விழுந்தது நீர்த்துளிகள்.

"முதலில் நீ ஏன் இப்படி அழுகிறாய்? !எனக்கு அழுகிறவர்களைக் கண்டாலே பிடிக்காது. அமைதியாக உட்கார்ந்து யோசித்துப்பார், இந்த பார்க்கில் ஓடுகிறவர்களில் பாதிப்பேராவது இந்த மரத்தின் கீழ் வந்து உட்காராமல் போவதில்லை. இத்தனைக்கும் நானொன்றும் கொப்பும் கிளையுமாய், இலை தழைகளோடு நிழல் குடை கூட விரிப்பதில்லை, என்றாலும் என்னை எல்லோரும் நேசிக்கிறார்கள், ஏன் தெரியுமா? நான் அழகாயிருக்கிறேன், அதுதான் காரணம், "

அவ்வளவுதான் , சசிரேகா விசித்து விசித்து அழுதாள்." நான் அழகாயில்லாதது என் குற்றமா? "

"நீ அழகாயில்லை என்று யார் சொன்னார்கள், நீ கொஞ்சம் பூசல் உடம்பு ,அவ்வளவுதான்.முதலில் இந்த உப்பல் மட்டும் குறைந்து விட்டால் உன்னை விட அழகி இங்கு யாரிருக்க முடியும்? "

சசிரேகா அப்படியே மலர்ந்து போனாள். கண்ணீர் சட்டென்று நின்றுவிட்டது.

"அதற்கு முதலில் நீ மனக்கட்டுப்பாட்டுடன் உணவைக் குறைக்க முயற்சி செய்ய வேண்டும்"

சசிரேகா பதில் சொல்வதற்குமுன் சடசடவென்று மழை தூரல் போடத்தொடங்கிவிட்டது. சசிரேகா ஓடினாள். அன்றிரவு அவள் சாப்பிடவில்லை. பசி எடுக்காதது ஆச்சரியமாக இருந்தது. ஆனால் மனம் முழுக்க மரத்தின் , உன்னை விட அழகி யாரிருக்க முடியும்?, என்ற வாசகமே பொம்மலாட்டம் போட்டது. ஒரே வாரத்தில் சசிரேகா 4 கிலோ குறைந்தாள், 2 வது வாரம் இன்னும் 3 கிலோ குறைந்தாள், . இரண்டே மாசத்தில் சசிரேகாவின் உடல் ஒரு கட்டுக்குள் வர முயலலாம் என உறுதியைக்காட்டியது.ஆனால் அப்பொழுதும் சசிரேகா குண்டுதான். விடாப்பிடியாக சசிரேகா உடல் பயிற்சி செய்தாள். வெட்டிய சாலட்,பிடிக்கவில்லயானாலும் கஷ்டப்பட்டு சாப்பிட்டதில், ஒரு சமயத்தில் அவளுக்கு சாலட் பிடித்தும் கூட போனது. யோகா வகுப்பில் சேர்ந்ததில் ஒரு

நண்பன் கிட்டினான். அவனுடைய அறிவுரைப்படி இருவரும் சேர்ந்து செய்யலாம் , என்ற வழமையில் சசிரேகா தொடர்ந்து யோகா செய்தாள். மூச்சுப்பயிற்சி முதலில் தான் கஷ்டமாகத்தான் இருந்தது,. நண்பன் மேத்யூவின் அருகாமையால் பிறகு அதுவும் கைப்பிடிக்குள் வந்துவிட்டது,. சசிரேகா ஒன்றை மட்டும் புரிந்து கொண்டாள். விடாது முயற்சி செய்தால் எதுவுமே சிரமமில்லை.

இப்போதெல்லாம் சசிக்கு நிறைய நண்பர்கள் தொலைபேசினார்கள். சதா போனை கட் செய்வது கூட அவளுக்கு பெரிய இன்பமாக இருந்தது. இந்த நேரத்தில் தான், ஒரு நாள் ஜோகிங் பார்க்கில், முன்பு சந்தித்த அதே மனிதர், கிரிஸ்டபர் அவள் அருகே வந்தமர்ந்தார்.

" நீ ரொம்ப அழகாயிருக்கிறாய்? " என்று அவர் கனிந்த குரலில் சொல்ல சசிக்கு கோபம் கோபமாய் வந்தது.

" எனக்கென்ன வயதிருக்கும் ?" என்று நினைக்கிறீர்கள் என்று கேட்க நினைக்கு முன்னரே, "இப்பொழுது உன்னைப்பார்த்தால் 20 வயது கூட சொல்லமாட்டார்கள்" என்று கிரிஸ்டபர் சொல்ல, சசிக்கு நாணிக்கண் புதைக்கும் வெட்கம் வந்தது.

மீண்டும் அவர்கள் நட்பு தொடர்ந்த வேளையில் , வீட்டில் அம்மா அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கியிருந்தார்கள். அவளுக்கு முற்றிலும் அறிமுகமே இல்லாத ஆண்களை மணக்க விருப்பமில்லை. யோகா வகுப்பிலும் மேத்யூ அவளை விரும்புவதாகச் சொல்லியிருந்தான். சசிக்கு யாரை தேர்வு செய்வது என்றே தெரியவில்லை. அப்பொழுதுதான் மேத்யூ அவளை ஒருநாள் ",ஹோட்டலில் சிலமணிநேரங்கள் இன்பமாயிருக்க வரமுடியுமா" என்று கேட்க , இடி விழுந்தாற்போல் திகைத்துப்போனாள். மேத்யூ இவளை மட்டுமல்ல, ஹோ ஸ்வீ, ரோஸ்மி, போன்றோரையும் கூட அழைத்திருக்கிறான் என்பது தெரிய வர, சீ, என்றாகிவிட்டது. மற்ற ஆண்களும் கூட டேட்டிங் என்ற பெயரில் உடல் இச்சைக்கே அழைக்கிறார்கள், என்று தெரிந்தவுடன் சசிக்கு வெறுப்பும் வேதனையும் சொல்லி மாளாது.

-"அன்று பார்க்கில் ஓடிக்கொண்டிருக்கும்போது, எதிரே வந்தார் கிறிஸ்டபர்,. முதலில் குசலம் விசாரித்தபின், " நாம் இப்படியே கொஞ்சம் நடந்துகொண்டே பேசலாமா? " என்று அன்போடு அவர் அழைக்க , தொடர்ந்தாள். "மனைவி இறந்துபோய் 3 வருடம் ஆகிறது, இதுவரை நான் ஒரு திருமணம் பற்றி யோசிக்கவே இல்லை, ஆனால் உன்னைப்பார்த்தபிறகுதான் எனக்கு அந்த ஆசையே வந்திருக்கிறது. நீ விரும்பினால் நாம் திருமணம் செய்து கொள்ளலாம் ? என்ன சொல்கிறாய்? "

சசியால் பேசவே முடியவில்லை. 24 வயது கூட நிரம்பாத தனக்கு 51 வயதுக்காரர்

ஒருவருடனா திருமணம்?

உடல் இளைத்தது மகிழ்ச்சியே. ஆனால் இப்படிப்பட்ட கோணத்திலிருந்தும் வில் அம்புகள் அவளைச் சூழும் என்பது அவள் எதிர்பாராதது. கிறிஸ்டபரிடமிருந்து எதையோ சொல்லி , விடுபட்டு ,விச்ராந்தியாய் மரத்தினடியில் வந்தமர்ந்தாள். வழக்கம் போல் மரம் அதட்டியது.

“ ஏன் எதற்கெடுத்தாலும் இப்படி இடி விழுந்தாற்போல் கவலைப்படுகிறாய்? ஆண்கள் இத்தனை பேர் விரும்புகிறார்கள், என்றாலே, நீ அழகாக இருக்கிறாய், என்றுதானே அர்த்தம்? ”

" அதற்காக , ? --“

" இதோ பார், சிங்கப்பூரில் வாழ்ந்து கொண்டு இப்படி கம்பளிப்பூச்சியாய் இருக்கிறாயே? வாழ்க்கையை அதனதன் போக்கில் அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடத் தெரியவில்லையென்றால்,பிறகு நீ என்ன பெண்? "

” என்னை என்ன செய்யச்சொல்கிறாய் ? “

” பேசாமல் என்னையே கட்டிக்கோயேன்.எனக்கென்ன குறைச்சல் ? "

,

அதிர்ச்சியின் எல்லையில் சசிரேகா, மரம் கேலி செய்கிறதா, என்று பார்க்க,மரமோ அசையாது, கம்மென்று திடுதண்டியாய் நின்று கொண்டிருந்தது. அடுத்த கணம் என்ன செய்கிறோம் என்ற உணர்வே இல்லாதவளாய், சசிரேகா இரண்டு கைகளாலும் மரத்தை ஓங்கி ஓங்கி அடித்தாள். கால்களாலும் மரத்தை எத்தி எத்தி உதைத்தாள் .” நீ, நீ, நீயா என்னை ”--” என்று மரத்தைபோட்டு வெறி பிடித்தாற்ப்பொல் குலுக்குவதைப் பார்த்து, ஏய், ஏய், என்று பாதசாரிகள் அவளைப் பார்த்து கத்த, பிறகுதான் அவள் ஆவேசமே மட்டுப்பட்டது.

மரத்திலிருந்து சில பட்டைகள் கீழே விழுந்தது. இலை தழைகள் லேசாய் நிலைகுலைந்து கோரமாய் கீழே விழுந்தது . ஆனால் மரம் ஏனோ கல்லாய் ஓய்ந்து நின்றது, . அக்றிணையாய் அதற்கே உரிய லக்ஷணத்தோடு, பிறகு மரம் பேசவே இல்லை. அப்பொழுதுதான் சசிரேகாவுக்கு, அம்மா ஏற்பாடு செய்த மாப்பிள்ளை, முல்லைவாணனிடம் இதுவரை தான் பேசவே இல்லையே என்ற அஞ்ஞானம் உறைக்க, எழுந்து விடுவிடுவென்று நடக்கத்தொடங்கினாள். கோபத்தில் வியர்த்த உடம்பில் பார்க்கில் வீசிய காற்று லேசாய் தழுவ, இன்னும் வேகமாய் நடக்கத்தொடங்கினாள் சசிரேகா.

kamaladeviaravind@hotmail.com 26 ஏப்ரில் 2011

29. பவானி - கடல்புத்திரன் -

வந்தான் வரத்தானாக மல்லிகைப்பூக் கிராமத்திற்கு போது எனக்கு 13 வயசு.8ம் வகுப்பில் படிக்கிற மாணவன். திருமதி சுப்பிரமணியம்-என்னுடைய அம்மா- சுகாதாரம் படிப்பித்தார். எல்லா வகுப்புகளுக்கும் அவரே சுகாதார ஆசிரியை.அதே போலவே கணிதம், விஞ்ஞானம்,ஆங்கிலம் எடுத்த ஆசிரியர்களும் எல்லா வகுப்புகளுக்கும் அவர்களே படிப்பித்தார்கள்.10ம் வரையில் இருந்த எங்க பாடசாலையில்,எல்லா தரத்திலும் ஒரு வகுப்பு மட்டுமே இருந்தது.எ,பி,சி...என பல பிரிவுகள் அவற்றில் இருக்கவில்லை.கிராமம் வேற எப்படி இருக்கும்.ஒரு வகுப்பில் 35- 40 பேர்கள்...என்று இருப்போம்.அதில் அரைவாசிப் பேர்கள் பெண்கள். சொல்ல மறந்து விட்டேன்.வள்ளுவர்,காந்தி, பாரதி..என எல்லாருக்கும் ஒவ்வொருப் பட்டப் பேர்களும் இருந்தன. ஆங்கில ஆசிரியருக்கு , 'குஞ்சியப்பு'என பேர் வைக்கப் பட்டிருந்தது.கனகலிங்கம் என அழகான பேர் அவருக்கு இருக்கிறது.அயன் பண்ணின நீள்காற்சட்டையும்,சேர்ட்டும் அணிந்து வாரவர்.ஆனால்,ஒய்வு நேரங்களில் ..சதா வெத்திலை சப்பிக் கொண்டிருப்பார்.வெத்திலைக் குஞ்சியப்பு என்பது தான் முழுமையான பட்டப்பேர்.ஸ்டைலாக இருக்கிற அவர், அப்படி இருப்பதற்கு ஏதும் விவசாயப் பின்ணணி இருக்க வேண்டும்.வெத்திலைப் பழக்கம் பொதுவாக அவர்களுடையது.நுனிப்புல் மேய்கிறவர் தானே மாணவர்கள்.எனவே தான் வாய்யிலே வந்தபேரை அவருக்கு வைத்து விட்டார்கள்.

கிராமத்தில்,வெட்டுவேன்;கொத்துவேன் என்றளவுக்கு பகை நிலவவில்லை. மேல்,கீழ், நடு, அண்டிய..என சாதாரண சாதி விலகல்கள்;அவற்றில், சிலவற்றில் ஆச்சரியப்படும் அளவுக்கு நேச உறவுகளும் இருந்தன.நேசமானவர்கள்,மணமுடித்தல்,செத்த வீடுகளில் பங்கு பற்றினார்கள் என்றில்லை.கோயில் திருவிழாக்களில் பங்களித்தனர்.திருப்பணிகளில் உபயங்களும் செய்தார்கள்.உபயத்தைப் பெற்றவையும்,நன்றி மறவாமல் நடந்து கொண்டன.திருப்பி மரியாதையும் செலுத்தியது.யாராலும் உபத்திரவம் என்று தெரிவித்தால்,உடனடியாக தம் பெடியள்களை அவ்விடத்திற்கு அனுப்பியது.

கிராமத்தில்,யாழ்ப்பாணச் சண்டியர்களின் வாரிசுகள சிலரும் இருந்தார்கள்.இந்த பாதுகாப்பு ஒப்பந்த்தால் அவர்களின் 'பாட்சா' அங்கே பலிப்பதில்லை.எல்லாச் சாதியிலும் ஒரு சுதந்திர அலை அடிக்கவே செய்தது.நாம் பழையவர்கள் இல்லை,சமமானவர்கள்!சொந்த வீடு ,காணி வேண்டும்..என்ற சிந்தனைகள் அவர்கள் மத்தியில் பரவலாக நிலவின.அதனால் நகரத்திற்கு மேசன் வேலைகளுக்கு கலந்து போனார்கள்.கார் திருத்துதல்,பெயின்ற் பண்ணுதல்,வீட்டுக்கு வெள்ளை அடித்தல்,வயரிங் செய்தல்,குழாய் இணைப்புக்கள் அமைத்தல் என பல்வேறான வேலைகளில்லும் ஈடுபட்டார்கள்.இவர்களில் கணிசமானவர்கள் மாணவர்களே. 6ம்,7ம்,8ம்,9ம்,10ம்..வகுப்புகளோடு நின்று விட்ட பல் தரப்பினர்.என்னுடைய வகுப்பில் தில்லையே 8ம் வகுப்போட பனை ஏறப் போய் விட்டான்.சரிவர கணக்குகள் போடுறவன்.கணக்கு ஆசிரியர் சுந்தரம் "பெடியனை படிக்க விடுங்களன்"என பெற்றோரிடம்

சென்று,மன்றாடிப் பார்த்தார்.பத்திரிகைகளில் கதை எழுதுகிற நல்லதம்பி ஆசிரியரும் "உங்க ஆட்களிலே இவன் படித்தால் நல்லம் தானே"என்று பலவாறு விளக்கிப் பார்த்தார். தோல்வி தான்.தாய்க்காரி,"இவனுடைய அப்பருக்கு ஏலாமல் கிடக்கிறது.இவனும் ஏறினாலே உலை கொதிக்கும்"வறுமையைச் சுட்டிக் காட்டி பிடிவாதமாக மறுத்து விட்டார்.அவனுக்கு 2 பெண் சகோதரங்களுமிருந்தனர்.இந்த வேலையில்.. நல்லபடி வாழ வைக்க முடியாது. இருந்தாலும்,'அன்றாடம்'அதை விட முக்கியமானதாக இருக்கிறது.கிராமத்தில், உயர் சாதியினருக்குமிடையில் கூட மண தொடர்பு இருக்கவில்லை.ஒருவேளை படித்த பெடியள்களாக இருந்து,காதல் என விரும்பி இருந்தால் எதிர்ப்பில்லாமல் நிறை வேறி இருக்கலாம்.ஆனால் படித்தவர்களுக்கு தான் காதல் லேசிலே வராதே.அந்த எண்ணிக்கையும் சொற்பம்.சீதனம் வாங்கிக் கட்டுற வாய்ப்பை இழக்க அவர்கள் என்ன முட்டாள்களா!புதியவர்களாக கிராமத்திற்கு வந்த எங்கள் குடும்பத்திற்கு செட்டிக் குறிச்சியிலே வாடகை வீடு கிடைத்தது.அப்பகுதிப் பெண்களுக்கும் படிப்பு சராசரிக்கு மேலே ஏறவில்லை.குடும்பமாக செட்டிலாகி இருந்தார்கள்.மிகச் சிலர் அவர்களுக்குள் இளைப்பாரிய ஆசிரியர்களாகவும் இருந்தார்கள். அங்குள்ள பெடியள்களுக்கு நேரான படிப்பு சரி வரா விட்டாலும்,ஏதோ படிக்க முயன்று தான் இருந்தார்கள். படம் பயில் வரைஞர்(வீட்டுப் படங்கள் கீறுகிற)படித்த ரவி,சிறிமா ஆட்சிக்காலத்தில் விசுவமடுப் பகுதிற்குச் சென்று,காணி வெட்டி,மிளகாய்,வெங்காயம் வைத்து லாபம் பெற்றிருந்தான்.பிறகு காணியை,நியாய விலைக்கு விற்று விட்டு,பெற்றோரிடமிருந்து சிறு தொகை பணமும் பெற்று வெளிநாடு போய் விட்டிருந்தான்.சிவத்தானும்,கதிரும் சேர்ந்து கூடு அடித்து கோழி வளர்த்தார்கள்.கடனை சம்பாதித்து,நட்டப்பட்டு பல கசப்பான அனுபவங்களால் துவளவேச் செய்தார்கள்.கலங்காது கொண்டிழுத்து கடைசியில்,வெற்றி கரமாக நடத்தும் வல்லமையைப் பெற்றுக் கொண்டார்கள்.

அயலுக்குள்ளே இருந்த கதிரமலை சாவைத் தழுவ மூத்தவனான செந்தில் கோழிப் பண்ணை வைக்க இவ்விருவருமே முழுமையாக உதவினார்கள்.பிறகு அவன் ஜேர்மனி போக தம்பிக்காரனான சீலன்,தற்போது அதை திறம்படக் கவனிக்கிறான்.அங்கிருந்து நகரக் கடைகளுக்கு முட்டைகள் போய்க் கொண்டிருக்கின்றன.

அங்குள்ளவர்களின் படிப்பின் தரம் குறைவாக இருந்திற்குக் ஆசிரியர்களை பிழை சொல்ல முடியாது.10ம் வகுப்பு வரையில் ஓரளவு படிக்கத் தான் செய்தார்கள்.எ.எல் படிக்க நகரப் பள்ளிக்கூடங்களுக்குப் போன போது,கிராமம் சமதரத்தில் இல்லாதது அவர்களைப் பாதித்தது.தவிர அங்கே டியூசனுக்குப் போற மாணவர்களே அதிகமாக இருந்தார்கள்.கிராமத்துப் பொருளாதாரம் தாழ்வானது.டியூசனுக்கும் போய் படிக்க வேண்டும் என்கிற போது அவனுக்கு படிக்கிறதிலே ஆர்வம் குறைந்து விட்டது.

சிங்கள தேசியம்,கல்வியில் தரப்படுத்தலை அமுல் படுத்தியதால் நகரத்தில் பரவலாக

மாணவ ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருந்தன.படித்தால் கூட பெரிசாய் ஒன்றும் சாதிக்க முடியாது;என்ன ஆசிரியராவதும் டியூசன் மாஸ்டராவதுமே முடிகிறது என்ற ஏலாமையுமே நிலவின.படிப்பிற்கான தரம் ஒரு படி இறங்கி விட்டிருந்தது.

ஆனால், எல்லாருக்கும் காணிசெய்யிறதும்,கோழி வளர்்க்கிறதும் இலகுவாக இருக்கவில்லை. விருப்பமாகவும் இருக்கவில்லை.ஆட்சியாளர்களால் வேலை வாய்ப்பு வழங்கப் படவில்லையோ..விவசாயம் செய்யலாம்.பிரித்தானிய் கல்விமுறையில் படித்ததால்,சிங்கள தேசியத்திற்கு கீழே இருக்கிறவர்கள் கௌரவமாக வேலை பார்க்கிற போது நாமும் பார்க்க முடியவில்லையே என்ற தாக்கம் வேறு கசப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.எதையும் செய்யவும் மனதையும் விடவில்லை.

அத்தேசியம் எம் விவசாயத்திலும் பல்வேறு பிரச்சனைகளை வைத்திருந்தது.சுதேச ஆட்சி அவசியமாகிக் கிடந்தது.இல்லாது இருந்தாலும் வடக்கு,கிழக்கு விவசாயிகள் கடுமையான உழைப்பாளிகள் என்ற பேரையே எடுதிருந்தார்கள்.காணிகள் சம்பந்தமான உரிமைகள் எம்மிடம் இல்லை.எம்மக்களுக்கான பாதுகாப்புச் செயலர்களை அன்னியர்களான அவர்களே நியமிக்கிறார்கள்.பாதுகாப்பு சந்தேகத்திற்குகிடமானது.

இரவும் பகலும் பயமின்றி எம்மவர்கள் நடமாட முடியாது.இதன் மத்தியில் வேலைக்குப் போகவும் வேண்டும்;விவசாயம் செய்யவும் வேண்டும்;மீன் பிடிக்கவும் வேண்டும்.

சகலதரப்பினருமே சதா அடக்குமுறைச் சங்கிலி இடப்பட்டிருப்பதை உணர்ந்து கொண்டிருந்தார்கள்.ஒரு விடியல் வராதா? என்ற ஏக்கம் அங்குள்ள காற்றிலே மிதந்து கிடந்தது.சிங்கள தேசியத்திற்கு அதைப் பற்றிக் கவலை இல்லை.அது தமிழ்த் தேசியம் ஒன்றே அங்கில்லை என்று கதைக்கிற புரட்சியை செய்து கொண்டிருந்தது.

ஜெயமண்ணை,சிறு பலசரக்கு கடை வைத்திருந்தார்.அதிலே எங்களுக்கு கடன்கொப்பி இருந்தது. அவருக்கு அம்மாவை ரொம்ப பிடிக்கும்.

"ரீச்சர்..ரீச்சர்.."எனக் கூப்பிட்டு,தம் குடும்பப் பிரச்சனைகளை சதா கதைப்பார்.அங்குள்ள பெண்களுக்கும் அம்மாவை நிரம்பப் பிடிக்கும்.அவர்களின் சரித்திரமே அம்மாவிற்கு அத்துப்படி!அம்மாவும் அவர்கள் வீட்ட அடிக்கடி போய் வருவார்.அவர்களும் எங்க வீட்ட வருவார்கள்.நானும் இப்ப அங்கே ஒருத்தன். ஜெயமண்ணை,மனைவியை "கிளி.."என்றே கூப்பிடுவார்.அவ்விடத்து பெட்டையும்,பெடியளும் அவரை'கிளியக்கா'என்றே கூப்பிடுவார்கள்.அந்தி சாயும் நேரத்தில்,தம் இரு சிறுபெண்களுடன் எங்க வீட்ட வந்து, மணிக்கணக்கில் இருந்து கதைப்பார்கள். பொதுவாக கடையிலே இருவருமே சேர்ந்து நிற்பார்கள்.சாமான்களை வாங்கிற போது கிளியக்கா,வாஞ்சையோடு என்னோடு கதைப்பார்.வெளியிலே யாருமே இப்படி என்னோடு கதைத்தில்லை.அதனாலே

எனக்கு அவரை நிரம்ப பிடித்திருந்தது. அதேசமயம் எனக்கு 'கிளியக்கா'என்று கூப்பிட விருப்பமில்லை. "ஜெயம் அக்கா.."என்றே கூப்பிடுவேன்.அதைக் கேட்டு ஜெயமண்ணை சிரிப்பார். அவரும் அன்பானவர். "நீ அப்படி கூப்பிடுறது பிழை இல்லை.உன் விருப்பம்"என்பார்.

ஜெயமக்காவிற்கு சிறு வயதிலிருந்தே நீரழிவு வியாதி.இன்சுலின் ஊசி எடுக்கிறவர்.அதனால் ஏற்படுற வாடல் தன்மை அவரிட ம்இருக்கவில்லை. ஜெயமண்ணையின் அன்பும் ஆதரவும் அவரை வாடவிடவில்லை போலும்!

நம்நாடு எப்பவும் ஓரே மாதிரியா இருக்கிறது.சங்கமித்தையும்,மகிந்தாவும் வந்த போது இருந்த சிறிலங்காவா இப்ப இருக்கிறது.சிங்கள தேசியம,(இஸ்ரேல்,பாலஸ்தீனப் பிரதேசங்களை கபளீகரம் செய்தது போல)தமிழ் பிரதேசங்களை அபகரித்த சிறிலங்கா அல்லவா இருக்கிறது. கிராமத்தில்,எங்களுடைய குடியிருப்பும் நெடுக அப்பகுதியில் இல்லாமல் தம்பைய்யா மடப்பகுதியிற்கு மாறியது.நானும்,எ.எல் வகுப்பில் சறுக்கி விட்டிருந்தேன்.என் தங்கச்சிமார் ஓருவாறு கடந்து விட்டிருந்தார்கள்.அவர்கள் பாடு ஓரளவிற்குப் பரவாய்யில்லை.ஆனால்,சிங்கள தேசியம் போலவே நம்தரப்பிலும் படித்த மாப்பிள்ளைமார்களும் இருக்கிறவர்களாச்சே!என்னென்ன துன்பங்கள் தலைவிதியாய் இருக்கிறதோ ..யார் அறிவார்கள்.ஆனால்,அவர்கள் தரப்படுத்தலையும் விலத்தி வேலை பார்க்கிற பெண்களாக .. காலூன்ற வேண்டும்.அதிலே சிமார்ட்டாக இருக்கிறவர்கள்,சிமார்ட்டாக இருப்பார்கள்.இல்லாதவர்கள்,படித்த படிப்பையும் வீணாக்கி விட்டு பெண்னடிமைத் தனங்களில் அகப்பட்டவர்களாக, சிறிலங்கன் தமிழனைப் போல அழுது கொண்டிருப்பார்கள்.நேரான பள்ளிக்கூடப் படிப்பிலே தரப்படுத்தல் வெளிபடையாக தெரிகிறது.நான் வாழ்ரதுக்கும் ஒரு வேலை அவசியமாகிறதே.அப்புதிய முயற்சியில்,மறைவாக படர்ந்திருக்கிற தரப்படுத்தலை சந்திக்க வேண்டும். ஆனால், இத் தரப்படுத்தல்' 2 ம்தரமாகவே நம்மவர்களாலும் பார்க்கப் படுகிறது.தரப்படுத்தல் எப்படியும் கிடந்து விட்டு போகட்டும்.ஒரு வேலை எடுப்பதற்கான தகுதி-படிப்பு-பூச்சியமாக இருக்கிறதே!என்ற கலக்கம் என்னை பிடித்தாட்டியது.சீலனைப் போல கோழி வளர்க்கிறதுக்கு ஒரு ரீச்சரின் மகன் போகவும் முடியாது.கழிந்த படிப்புக்காலம் வீண்.அதற்கான செலவுகளும் வீண்.8 ம் வகுப்போட மரம் ஏறின தில்லை யதார்தவாதியாய் தெரிந்தான்.ஜெயமண்ணையையும் இந்த கலக்கம் ஆட்டி வைத்திருக்கும் என்பது புரிந்தது.கொழும்பில் வேலை பார்க்கிற எந்தரவலிகளை பொறாமையுடன்பார்த்தேன்.லஞ்சம் கொடுத்தாவது பிச்சை எடுப்பது போல வேலை எடுப்பது புத்திசாலித்தனமா? ஆனால்,வறுமையில் வாடும் அம்மாவின் களைத்த தோற்றம் அந்த எண்ணத்தை விரட்டி அடித்தது.இனி தொழிநுட்பக்கல்லூரியில் சேர்ந்து பல்லைக் கடித்துக் கொண்டு படிக்க முயல வேண்டும்.

தற்காலிக சொர்க்கமாக தெரிந்த கொழும்பிலும்ஃ தமிழர்களை கண்மண் தெரியாமல்

அடிக்கிற கலவரங்களும் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.படிப்பு ஏறினால் என்ன ஏறாட்டி என்ன வாழ்க்கையில் கால் வைக்க வேண்டிய வயதில்,சிறையில் இருந்த பல தமிழ் கதாநாயகர்களை படுகொலை செய்த செய்தி என் மூளையையே விறைக்க வைத்து விட்டது.இந்த நாட்டில் தமிழன் சுதந்திரதிற்காக போராடிச் சாக வேண்டியது தான் தலைவிதியா!இந்தக் கனல் பல இளைஞர்களை தெரியா பல்வேறு ஆயுதக் குழுக்களிலே ஓடி ஓடி சேர வைத்தது.எப்பவும் எனக்கு ஒருவித தயக்கம் ஏற்படுவது வழக்கம்.குறைந்த பட்சம் கௌரவவேலைக்கான படிப்பு என்னிடம் இல்லை.ஓடிப் போய்ச் சேர்ந்து என்ன செய்யப் போகிறேன்.சிங்களதேசியம் ஒரு ஆமை.அது லேசிலே அசையாது.படிக்கிற தொழிநுட்பப் படிப்பை முதலில் முடித்தாக வேண்டும்.என் வகுப்பில் இருந்தவர்களும் இந்த சிந்தனைப் பிரிவினரே.அங்கே, 'நாம் ஈழவர்'என்ற குழுவைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் சிலர் வரத் தொடங்கினார்கள்.டீ,காப்பி குடிக்கிற உணவுப்பகுதியில் மாணவர்களோடு கலந்துரையாடுவார்கள்.என் வகுப்பில் இருந்த சிலர் அவர்களுக்கு நண்பர்களாக இருந்ததால் சிறு நூல்கள்,கட்டுரைகளைக் கொண்ட பத்திரிகைத் தொகுப்புக்களை இரவலாக எமக்கு படிக்கத் தந்தார்கள்.அரிய பொக்கிசங்களான அவை விலை கூடியவை. "பகுதிநேரமாக பங்களிப்பு செய்வது அவசியம்.அதற்காக நீங்கள் படிப்பை குழப்ப வேண்டியதில்லை.விடுதலைக்கு படிப்பு அவசியம்"என்ற அவர்களது பேச்சு எனக்கும் பிடித்திருந்தது.

நான் அவர்களுடன் சேரா விட்டாலும்,வேறொரு குழுவில் பகுதி நேரமாக சேர்ந்து கொண்டேன்.விடுதலைப்போராட்டத்தை ஒரு குழு மட்டும் நடத்தியதில்லை.

பல்வேறு குழுக்கள் உருப்பெற்று,தம்முள் அடிப்பட்டு,மிதிப்பட்டு,சுடுப்பட்டு கொண்டே நடத்தின.அவற்றைக் கட்டுப்படுத்தும் அமைப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டு கடைசியில் வெற்றியும் பெற்றன.ஈழவரும் நான் ...சேர்ந்ததை விமர்சிக்கவில்லை.நானும் சேர்ந்ததுடன் நம்பிக்கையுடம் இழுபடத் தொடங்கினேன்.

கிராம அமைப்பில் தலைவனாக இருந்தவன் 8ம் வகுப்போட படிப்பை விட்ட ராமு.நகரத்தில் வீட்டுக்கு வெள்ளை,கலர் அடிக்கும் வேலையைக் கற்று,தானே ஒப்பந்தங்களைப் பெற்று சிறு குழுவாக வேலை செய்பவன்.புடவைக் கடைக்கு வேலைக்குப் போன நம் கிராமத்துப் பெட்டை வாசுகியைப் பார்த்து ...காதலில் விழுந்தான்.முடித்து புதிய முகமாக கிராமத்திற்கு வந்தவன்.ஆச்சரியம்!,வாசுகி என்னோடு படித்தவள்்.அவளும்8ம் வகுப்போட நின்று விட்டவள்.அவனை இயக்கத்திற்கு இழுத்து விட்டவனும் தொழிநுட்பக்கல்லூரியில் எனக்கு தெரிந்த கதிர்.கம்பஸில் படித்துக் கொண்டிருந்த அவன்,கௌரவம் பாராது நம் தொழிநுட்பக்கல்லூரிக்கு வந்து,ஈழவர் போல கதைத்து,இரண்டுக்குமிடையில் ஒரு பொதுவான மாணவ மன்றத்தை அமைதது விட்டவன்.அதற்கு முதல் கம்பஸ் தனியாகவே ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், உண்ணாவிரதங்களை நடத்தின.நம்கல்லூரியும் தனியாகவே நடத்தியது.இரண்டும்

கைகோர்த்து நடத்திய போராட்டங்களை ஈழநாடு பத்திரிகை மாணவ எழுச்சி என பாராட்டி கட்டுரைகளை பிரசுரித்தது.கதிர் வெளியிலும் பாசறை வகுப்புக்கள்..என அரசியல் வகுப்புக்களை,ஊர்கள்,கிராமம்,குச்சுவெளிகள் எல்லாம் திரிந்து இரவிரவாக நடத்தி இருக்கிறான்.அந்த வகுப்புகளில் சிலவற்றில் பங்கு பற்றிய ராமு,அவ்வியக்கப் பெடியனாகி விட்டான்.பிறகு,அவன் கிராமத்துக்கு வர, கிராமத்து பொறுப்பாளராக்கி விட்டார்கள்.

மனைவியோடு படித்தவன்,கதிரை தெரிந்தவன் என அறிந்த போது..ராமு என்னோடு நண்பனாகி விட்டான். "நானும் நீயும் கூட்டாக வேலை செய்வோம்"என்றான். "எனக்கு விடுதலையைப் பற்றி ஒரு அட்சரமும் தெரியாதே"என்றேன். "எனக்கு மட்டும் என்னவாம்.பாசறை வகுப்பில் சொன்னதைக் கேட்டு நடக்கிறேன்.நீயும் பாசறைவகுப்புகளுக்குப் போய் வா.எல்லாம் புரியும் எங்கட அமைப்பு எப்பவும் தலைமைப் பகுதியுடன் தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும்.கல்யாணம் கட்டக் கூடாது.கட்டியிருக்கிறேன்.வேலைக்கும் போய் வர வேண்டும்.தலைமைப் பகுதிக்குப் போய் வர நேரம் இல்லை.அங்கிருந்தே நரசிம்மன் இங்கே வந்து என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறான்.நீ வகுப்பு முடிந்த பிறகு கிழமையில் 2 நாளாவது அங்கே போய் வாவன்.உன்மூலமாக தொடர்பு நிலவுமானால் நரசிம்மன் வரவேண்டியிருக்காது.உனக்கும், மற்ற தோழர்களும்,நம்வேலைகளும் ஓரளவு புரியும்"என்றான்.

நானும் ஒப்புக் கொண்டேன்.தலைமைப்பகுதியில் இருந்த 2-3 தோழர்கள் எனக்கு நகரசந்தைப் பகுதியில் ஏற்கனவே தெரிந்தவர்கள். எங்கள் தரவலியினர் தாம். தொழிநுட்பக்கல்லூரியில் சேராமல் ..என்னென்வோ வேலைகள்செய்து கொண்டிருந்தார்கள்.வீட்டிலே இருக்க முடியாது என்பதால் நகரசந்தைப் பகுதிக்கு தினமும் வந்தவர்கள்.புடவைக்கடைக்காரனும்,வீடியோக்கடைக்காரனும் இந்தியாவிலிருந்து சாமான்களை வாங்கி வர இவர்களையும் கூட்டிச் சென்றிருக்கலாம்.

தொழிநுட்பக்கல்லூரியில் வகுப்பு முடிந்த பிறகு உடனேயே எனக்கும் வீடு திரும்புற பழக்கம் இல்லை.வகுப்புத் தோழர்களுடன் நகரசந்தைப் பகுதிற்கு வந்து தேனீர் குடிப்போம்.இவர்களும் தேனீர் குடிக்க வருவார்கள்.சிலவேளை நாம் வாங்கிக் கொடுப்போம்.பொக்கற் மணி இல்லாத வருத்தம் அவர்கள் முகத்தில் எழுதி ஒட்டியிருக்கும்.ஆனால்,எலெக்ரிக்கல் வேலை,அந்த,இந்த வேலை என அவர்களுக்கு நிறைய அறிவிருந்தது.டீக்கடையில் நெடுக எலெக்ரிக்கல் பொயிலரை திருத்தி இயங்க வைக்கிறவன் அதிலே ஒருத்தன்.

தொழிநுட்பக்கல்லூரித் தோழர்களும, நானும்..வழக்கமான பாடசாலைப் படிப்பில் கூடப் படித்தமாணவர்களைப் பற்றி சரிவர அறியாதிருந்ததைக் குறித்து தற்போது வருத்தப்பட்டோம்.எங்களுடைய கம்பஸ் இது!ஒரு வருசப் படிப்பு இருந்தது. "கூடப்

படிக்கிறவர்களை அறிய வேண்டுமானால் கட்டாயமாக அவனுடைய வீட்டுக்கு மாணவக்குழுவாக போய் வர வேண்டும்"என்று சந்துரு நெடுக வலியுறுத்தினான்.சரியாகப் பட்டதால்..நாம் வகுப்பு முடிய போய்வரத் தொடங்கி இருந்தோம்.முதல் தடவையாக அவர்களின் பெற்றோரையும்,சகோதரர்களையும் கண்டோம்.அந்த வீடுகளில் கொறிப்பதற்கு பலகாரமும்,தேனீரும் தந்து உபசரித்தார்கள்.அங்கே நிலவுகிற பிரச்சனைகள் சில தெரிய வந்தன.விசேசமாக கோயில் திருவிழா என்றால்..அந்த இடத்திலிருக்கிற நண்பனின் வீட்டிலே ,திருவிழா முடிய தங்கினோம் .அவனோட அக்கிராமத்தையும் சுற்றி பார்த்து விட்டு வீட்டுக்கு வருவோம்.

பெண் தோழிகளும் சரிசமவளவில் எங்க வகுப்பில் படித்தார்கள். அவர்கள்,எல்லார் வீட்டிற்கும் போனதில்லை.முதலிலே கேட்டு 'வாருங்கள் என வீட்டிலேயும் கேட்டு அழைப்பு வந்தவர்கள் வீடுகளுக்குத் தான் விசிட் பண்ணினோம்.தனி மாணவனாக போகாது 5-6 தோழர்களாகச் சென்ற போது அவர்களும் முறையாக உபசரித்தார்கள்.அவ்வாறு சனி ஞாயிறு தினங்களில் பெண்கள் வீடுகளுக்குச் சென்று மதிய உணவு உண்டோம்.சிலர் வீடுகளுக்கு பஸ்சிலே போக வேண்டியிருந்தது. சிலருக்கு..சைக்கிளில் போய் வரக் கூடியதாயும் இருந்தது.அதிலேயும் பலவித செய்திகளை அறிந்தோம்.உதாரணத்திற்கு,விமலாவின் அப்பா ஒரு பொலிஸ்காரர்.முரட்டு மீசை உடையவர்.ஆனால் அன்பாக பேசினார்.ஒருத்தன் "வாங்கடா பொஞ்சாதி வீட்ட போய் வருவோம்"எனறு கூட்டிச் சென்றான்.அவன் கல்யாணம் கட்டவில்லை.எனவே நாங்கள் வியப்புடன் விழிக்க, "கட்ட அவளை நிச்சயித்திருக்கிறார்கள்"என்றான்.உண்மையிலே அங்குள்ளவர்களும் அப்படித் தான் அந்த வீட்டை குறிப்பிடுகிறார்கள்.

இப்படி விசிட் பண்ணுறது ஏற்கனவே கம்பஸ் மாணவர்களிடையே இருந்தது தான். தொழிநுட்பக் கல்லூரியில் முதல் தடவையாக விசிட் பண்ணியவர்கள் நாமாகத் தான் இருப்போம்.எம் தோழர்கள் தோற்றத்தில் பலவிதமாக இருந்தார்கள்.என்னுடைய உடுப்பும் தோற்றமும் கொஞ்சம் மோசம்.சந்துரு,கிட்டு ஈசன்..தோற்றம் நல்லாவே இருக்கும்.ஆனால் அது பெரிதாகப் பார்க்கப் படவில்லை.அப்படி போனதால் எம்மிடையே ஆழமான நேசபாவம் வளர்ந்து விட்டிருந்தது,

தேனீர் கடையில் அறிமுகமான நந்தும்,சுரேசும் தலைமைக் காம்பில் இருந்தார்கள். "டேய் கடைசியில் நீயும் வந்து சேர்ந்து விட்டாயா!"என்று சுரேஸ் வரவேற்றான்.நந்து, "உனக்கு தியாகுவை தெரியும் தானே.எங்களோட வருவான்.அவன் இந்தியாவிலே பயிற்சியில் இருக்கிறான்"என்றான்.அவர்களுக்குத் தலைவன் கமலக்கண்ணன்.என்னை விட 1 வயசு கூடியவன்.புதிய தோழர்களாக பரமு,சந்திரன்,பொன்..என பலரும் ..பிறகு எனக்கு நண்பரானார்கள்.

என்னுடைய மல்லிகைப்பூக் கிராமம் சிறிது பரப்பளவில் பெரியது.உப அரசாங்கப் பிரிவு

வசதிக்காக அதை 2 கிராமமாக பதிந்திருக்கிறது.கிராமசபைகள் 2,ஆனால் கிராம சேவகர் ஒருத்தர் தான்.மற்றைய கிராமத்திற்கு ராமு சென்று அடிக்கடி கூட்டங்களை வைத்தான்.நானும் அந்த பட்டாளத்தோடு செல்வேன்.ஆனால்,அவனுக்கு அதிரடி நடவடிக்கைகளிலே ஆர்வம் அதிகம்.சிலசமயம்,மக்கள் அவன் பேச்சைக் கேட்காது முரண்டு பிடித்தால்,கோபத்தில் இவன் டியூப் லைட் பல்ப்..இப்படி எதையாவது உடைத்து விடுவான்.கண்டிப்பாகவும் பேசி எச்சரிப்பான்.மக்களுக்கு அவனை நெருங்கவோ,தடுக்கவோ பயம்.அவனுக்குப் பின்னால் பல பேர் இருக்கிறார்கள்.ஒரு குழுப் பெடியனில் கை வைத்தால்,தலைமைப் பகுதியிலிருந்து வந்து அள்ளிக் கொண்டு போய் விடுவார்கள்.காம்பிலே வைத்து விசாரிக்கப் படுவார்கள்.சமயத்தில்,அடி உதையும் பொலிஸ் ஸ்டேசனில் நடக்கிறது போல விழும்.2-3 நாள் என நிறுத்தி விட்டு ஆறுதலாகவே விடுவார்கள்.பிறகு நோவிற்கு புக்கை கட்ட வேண்டியிருக்கும்.வேலைக்கு அந்த கிழமை போக முடியாது.பேச்சுச் சுதந்திரம் கட்டுப்பாட்டிலே இருந்தது.நான் சேர்ந்த பிறகு,எங்க தரப்பில் பிழையாக இருந்தால் சமாளிக்கப் போவேன்.ரீச்சர்ர மகன் என்பதால்,நட்ட ஈட்டை தவிர்த்து,தாழ்ந்த குரலிலே வந்து மன்னிப்பு மட்டும் கேட்கச் சொல்வார்கள்.அப்படி வருவானோ என்று அவர்களுக்கு சந்தேகம்.நான் சில தடவை ராமுவைக் கூட்டிச் சென்று மன்னிப்பு கேட்க வைத்தேன். ராமு என் பேச்சைக் கேட்பவன்.அவனுடைய அவசர செயல்கள் மட்டுப்படத் தொடங்கி இருந்தது.ஆனால்,அடி போட வேண்டிய இடங்களில் அவன் மிக துணிவாகவே இயங்கினான்.எந்த கத்தி,குறுவாளுக்கும் பயப்பட மாட்டான்.எந்த நேரம் என்றாலும் 4-5 பேரோட கொஞ்ச நேரத்திலே அவ்விடத்திலே நிற்பான்.அவனுக்கிருந்த துணிச்சல் எனக்கு இருக்கவில்லை. “எதுக்கும் பயப்படாதே”என்று எனக்கு கூறுவான்.அப்ப,இயக்கமும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

எம்மவர்கள் மட்டுமில்லை,மற்றவையும் அட்டென்சன் நிலையிலே இருந்தன.ஒன்றிலே சேட்டை விட்டு விட்டு திரும்பினால் மற்ற இயக்கம் எதிரே நிற்கும்.குறுநில மன்னர் போல தமிழர் பகுதியில் எல்லாம் அட்டகாசம் செய்து கொண்டு திரிந்த சண்டியர்களே அடங்கிப் போய்யிருந்தார்கள்.

இயக்கத்தில் இந்தியாவிற்குப் பயிற்சிக்காக போனவர்கள் எழுதிய கடிதங்கள் சில வர ஆரம்பித்தன.அந்தந்த கிராமத்துப் பொறுப்பாளரிடம்

சேர்ப்பார்கள்.அவன் அவர்களுடைய பெற்றோரிடம் கொடுப்பான்.நான் போய் வருவதால் மல்லிகைப்பூக்கு வந்த கடிதங்களை என்னிடம்

தந்தார்கள்.ராமு வேலைக்குப் போய் வந்து களைப்பில் இருப்பான் என்பதால்,தோழர்களில் 2 பேர்களை அழைத்துக் கொண்டு முதலில்

அந்த தோழரின் வீட்டிலே கொடுக்கச் சென்றேன்.வாசிகசாலையில் இருந்தவர்களிடம் குச்சி வீட்டை விசாரித்துக் கொண்டு கொடுத்த போது

இரவு 9.00 மணி இருக்கலாம்.அவர்களுக்கு ஏற்பட்ட சந்தோசம் எங்களையும் கண் கலங்க வைத்தது. "முதல் தடவை வார கடிதம்"என்றார்கள்.சிறு கடிதத்தை எழுதி வைத்து விட்டுப் போனவன் தான்.பிறகு என்ன ஆனான்?எங்கே இருக்கிறான்?என்பதே தெரியவில்லை. 'வழியில் நேவியால் சுடப்பட்டு ,அல்லது வள்ளம் கவிழ்ந்து ..இறந்தவர்களில் ஒருத்தனாகி இருப்பானோ..?என்ற கலக்கத்தில் என்னென்னோ நேர்த்தி எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம்'என்று சொன்னார்கள்.

போற பெடியள்கள்100 க் கணக்கில் என்பதால் எங்களுடைய சிறு தலைமைக் குழுவிற்கும் போறவர்களின் விபரம் சரிவர தெரிவதில்லை.தளம் வேற உலகம்.பிந்தளம் வேற உலகம்.பயிற்சியால் திரும்பி வந்தாலே சில பெடியள்கள் உயிரோடு இருப்பது தெரியும்.7-8 மாசங்களுக்குப் பிறகு வந்த கடிதம்.அதைப் போல அடிக்கடி கடிதங்கள் வள்ளத்தில் வருவதில்லை.இப்படி சேர்ந்த கடிதங்களை,பிரசுரங்கள்,பத்திரிகைகள் கொண்டு வார வள்ளத்தில் பாதுகாப்பாக போய்ச் சேரும் என்ற நம்பிக்கை இருந்தாலே சேர்த்து அனுப்புவார்கள்.சிறிலங்கா படைகளிடம் அகப்பட்டு விட்டால்,கடித்தால் பெற்றோர்,சகோதரங்களுக்கு ..கூட பிரச்சனைகள் ஏற்பட்டு விடும்.பலநாள் நரமாமிசம் சாப்பிட காத்திருந்த மிருகம் போல படையினர் நடந்து கொள்வார்கள்.எனவே பெடியள்களுக்கு கடிதம் எழுதச் சொல்லி ஊக்குவிக்கப் படுவதில்லை.பயிற்சி முடிந்த பிறகு காம்களை நிர்வக்கிற வேலைகளில் ஈடுபட்டு காலதாமதமாகினால் மட்டுமே ..கடிதம் எழுத அனுமதித்தார்கள்.அப்படி குச்சியிடமிருந்து வந்து சேர்ந்தது.10 ½ மணியிற்கு வீட்ட வந்து சேர்ந்தேன்.

காலையிலே, பூவரசம் குச்சியால் பல்லை தீட்டிக்கொண்டிருந்தேன்.இயக்கத்தோடு,வீட்டிலே இருந்து அறுபட்ட நிலையிலே திரிகிற போது பற்பசை,பற்பொடி கிடைக்காது.அப்ப பூவரசம் குச்சியால் பல்லை துலக்கிறதுக்குப் பயிற்சி.பக்கத்து வீட்டு விநாயகம் அண்ணை,அதிகாலையிலே எழும்பி வீதியில் நடக்கிறவர்.எங்கவீடு,வீதிப்பக்கம் மார்பளவு உயர மதில்ச்சுவரைக் கொண்டிருந்தது.என்னைப் பார்த்து விட்டு, "கேட்டுக்குப் பக்கத்திலே 2 பெண்கள் குந்தி இருக்கிறார்கள்.போய் பார்"என்று சொன்னார். 'கேட்'சங்கிலியால் பூட்டுவதில்லை.திறந்து கொண்டு வரலாமே.புரியவில்லை.விறுவிறுவென போய்ப் பார்த்தேன்.நெஞ்சு அதிர்ந்தது போல இருந்தது.சிறு வயதில் பார்த்த ஜெயமக்கா போல ஒருத்தியும்,கூட இன்னொருத்தியும் இருந்தார்கள். "யார் நீங்கள்?நான் பொறுப்பாளன் இல்லையே.ராமு தான்"என்று சொன்னேன்.பிரச்சனைகள் சொல்ல இயக்கத்திடம் வாரது இருந்தது. 'அப்படி ஒருவேளை வந்திருப்பார்களோ..?'என்று தோன்றியதால் அப்படிச் சொன்னேன். "தெரியும் தம்பி"என்றார் பக்கத்தில் இருந்தவர். "என்ன விசயம்?"தயங்கிக் கேட்டேன்.என்னைத் தேடி யாருமே வந்ததில்லை.ஒருவேளை அம்மாட்ட

வந்திருப்பார்களோ?..என்றும் தோன்றியது.உள்ளே வரலாமே,ஏன் வரவில்லை என்பதால் குழப்பம்.

“இவர் குகனின் அம்மா.அவன் உங்க இயக்கத்திற்கு பயிற்சிக்காக வள்ளம் ஏறினவன்.அவனைப் பற்றி ஒரு செய்தியும் இல்லை.”அவரைப் பார்க்க பாவமாக இருந்தது.விநாயகம் சொன்னது அம்மாவிற்கும் கேட்டதில்..கேட்டடிக்கு வந்தார். “அவர்களை உள்ளே கூட்டி வா.வாங்கோ”என்று அழைத்தார். “நான் இவவின் சினேகிதி.நீ குச்சி வீட்டுக்கு கடிதம் கொடுத்தாய்.அதிலே அவன் குகன் என்னோடு இருக்கிறான்’என்று ஒரு வரி எழுதியிருக்கிறான்.குச்சியிட அண்ணர் உடனேயே வந்து அதை இவவிடம் காண்பித்தார்.உடனேயே இங்க வரணும் என்று அழத் தொடங்கி விட்டாள்.நான் தான் இரு,காலையிலே போய் பார்க்கலாம் என்று நிறுத்தி வைத்தேன்.”உள்ளே வார போது கூறினார்.

அம்மா,விராந்தையில் இருந்த கதிரையில் முதலில் இருக்கச் சொன்னார்.தங்கச்சி இருவருக்கும் தேனீர் கொண்டு வந்தாள். “குடிச்சுப் போட்டு கதையுங்கள”என்றாள். “இவள் நித்திரையே கொள்ளவில்லை.காலையிலே என்னை வந்து எழுப்பி விட்டாள்” “எடியே விடியக் கூடவில்லையே”என்று தடுத்துப் பார்த்தேன்.பெரிதாய் அழுது விடுவாள் போல இருந்தது.அது தான் கூட்டி வந்தேன்.நீங்கள் எழும்பி இருக்க மாட்டீர்கள்.எப்படி எழுப்புறது? ..என்று வாசலிலே இருந்து விட்டோம்.1 மணிநேரம் இருந்திருப்போம்.கால் எல்லாம் வலிக்கிறது”என்றார்.அவர் என்னைப் பார்த்து “குகனை எப்படியாவது கடிதம் எழுதச் சொல்லு தம்பி”என்றார்.அவரது கரையல் எங்களையும் என்னவோ செய்தது.எனக்கு ஜெயமக்காவே நேரில் கதைப்பது போல வேறு இருந்தது.

“தங்கச்சியிட பேர் என்ன?”என்று அம்மா கேட்டார். “பவானி”என்று சினேகிதி கூறினார். “பவானி கவலைப்படாதியும்.குகன் நல்ல மாதிரி திரும்பி வருவான்”என்று அம்மா ஆதரவுடன் சொன்னார்.நான் “தலைமைப் பொறுப்பாளரிடம் சொல்றேனக்கா”என்றேன்.

கமலக்கண்ணன், “அங்கே இருந்த பள்ளியிலே இருந்து 10 வகுப்பிலே பலர் அள்ளுப்பட்டு போனவர்கள்.இவன் அதிலே ஒருத்தனாக இருக்க வேண்டும்!நாங்கள் போறவர்கள் பெயர்கள் எல்லாம் ஒழுங்காக பதிந்து வைப்பதில்லை.விடுதலை என்ன இயல்பாய் நடக்கிறதொன்றா? ..இல்லையே!எங்களை விட உங்க கிராமத்தில் இருப்பவர்களுக்குத் தான் கூடுதலாகத் தெரியும்.இங்கே இழுப்பட்டு போய் இருந்தால் ..எங்களுக்கும் கொஞ்சம் தெரிந்திருக்கும்.இவன் போன்றவர்கள் போன பிறகே ,என்ன இயக்கம்?அதன் கொள்கைகள் என்ன?..பற்றி எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் அறிந்து கொண்டிருப்பவர்கள்.”என்று விளக்கினான்.

நான்,எ.எல் கண்டு,டெக்கும் கண்ட பிறகே சேர்ந்தவன்.கொஞ்சம் அரசியல் தெரியும்.இடதுசாரிக் கருத்துக்களையும் சிறிது பேசத் தெரியும்.ஆனால்,குகன் தரவலியினரோ ..சின்னப் பெடியள்!பயிற்சிக்கு 17 வயதிற்கு மேற்பட்டவர்களையே அனுப்பினார்கள். 'வளர்ந்த பெடியனாக இருப்பான் 'என்றால்,பவானியக்கா,17-18 வயதிலே கல்யாணம் கட்டியிருப்பார் போலப் பட்டது.

அந்த மாசம் கழிய தெற்கு மல்லிகைப்பகுதியில் குச்சி,மாணிக்கம் இருவரும் வந்து சேர்ந்தார்கள்.குகனிடமிருந்து கடிதம் வரவில்லை.15 நாள் கழிய,அவனே வந்து சேர்ந்தான்.பவானியக்காவிற்கு புளுகம் என்ற புளுகம்.அவனில் அவரின் முகம் அப்படியே இருந்தது.

ராமுட அதிகரித்த அதிரடிச் செயற்பாடுகள் பலமாக விமர்சிக்கப்பட்டு,முறைப்பாடுகளை குவித்தன.எங்க பகுதியில் மட்டும் இந்த நிலை என்றில்லை.பரவலாக எல்லா இடங்களிலுமே இந்த நிலை தான்.

இது தான் சாட்டு என "எனது வலது குறைந்த சகோதரனை அடித்து விட்டான்; பொம்பிள்ளைப் பிள்ளையின் கையைப் பிடித்து இழுத்தான்;குடும்பபனகையை மனதில் வைத்து அடித்தான்..", 'பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு எதிராக.. முறைப்பாடு செய்யுங்கள்'என்று மாணவர்களுக்கு சுதந்திரம் கொடுத்தால் எப்படி இருக்கும்!,அப்படியிருந்தது.மனதிலுள்ள ஆற்றாமை,எரிச்சல்களால்..பல பொய்களையும் சேர்த்து பொறிந்து தள்ளிக்கொண்டிருந்தார்கள்.அவற்றை விசாரிக்கிறது முடியாத காரியம்.தோழர்கள் சென்றால், "நான் சொல்லேலை தம்பி!வேற ஒருவர் சொல்லி இருக்கிறார்"என்று நழுவலாக பதிலளித்தார்கள். 'யார் அந்த ஒருவர்?'தேடிப் பாருங்களன்.பொதுவாக விமர்சனத்திற்குள்ளானவர்களை தலைமை விசாரிக்கிறது மட்டுமே முடிந்தது.சில இடங்களில் அமைச்சர்களை மாற்றுவது போல ,இங்கேயும் புதியவர்களை நியமித்தார்கள்.ஆடத் தெரியாதவர்கள் 'மேடையைப்' பற்றி கரிச்சுக் கொட்டுறதை நிறுத்தவா போகிறார்கள். பிரச்சனையை நாம் விசாரிக்கப் போய் தானே இந்த நிலமை.பிரச்சனைகள் மலிந்த பகுதியில், கொஞ்சம் சுறுசுறுப்பானவர்களையும், பிரச்சனை வளர்க்கிறவர்களின் உறவினர்களையும் கலந்து 'விழிப்புக்குழு'என்ற அமைப்பை ஏற்படுத்துவதில் எங்கள் குழுவினர் எல்லாப் பகுதியிலும் இறங்கினார்கள். "இனிமேல் நீங்களே எதையும் விசாரியுங்கள்;தீர்பளியுங்கள்!,"எங்கள் தரப்பிலிருந்து குறைந்த பட்சம் 2 பிரதிநிதிகளாவது பிரசன்னம் ஆவார்கள்..என்று தெரிவிக்கப்பட்டது.

இரவு நேரம் பிந்தி நடை பெறுகிற கூட்டமாக இருப்பதால்,நம் பகுதியில் 4-5 பேர்களாகச் சென்றோம்.

கொஞ்சம் படித்தவர் பகுதியில்,வாசிகசாலைகள் திறம்பட இயங்கின.அவையே,விழிப்புக்

குழுவாக கருதப்பட்டன.அங்கிருந்து வரும் பிரச்சனைகளை அவர்களிடமே கொண்டு செல்ல வைத்தோம். சில வாசிகசாலைகள் அவற்றை எடுக்க தயக்கம் காட்டின. "சரி!,நாங்கள் விசாரிக்கிறோம்.சில பேர்க்கு அடிக்க வேண்டியும் வரு.சரியா?"என்று கேட்டோம்.வீணாக அடி விழுவதை அவர்கள் விரும்பவில்லை.

"எங்களைச் சேர்ந்தவர்கள் 2 பேர்களை அனுப்புகிறோம்.ஏதாவது பிரச்சனை எழுந்தால்...உங்களுக்கு பக்க பலமாக நிற்பார்கள்".

சிலர்,ஒரு விடுதலைக்குழுவில்லாது பல இருப்பதால், "பிரச்சனை ஏற்பட்டால் உங்களை அழைக்கிறோம்"என்றார்கள். "உங்கள் விருப்பம்!உங்களுக்கு விரும்பின எந்த குழுவிடமும் செல்லலாம்.எங்களுக்கு வருத்தம் கிடையாது"என்றோம்.

'பொலிஸ் வேலை பார்த்து கெட்டப்பேர் சம்பாதிப்பதை விட,நீங்களே பொலிஸ் வேலையைப் பாருங்கள்'என பந்தை அவர்களிடம் தள்ளி விடுவது புத்திசாலித்தனமாக இருந்தது.எந்த விமர்சனம் எழுந்தாலும்,அக்குழுக்கள் மேலே வைக்க முடியும்.

இந்த முறையால் எங்க மேல வைப்பது குறைந்தது.ஆனால், "நாங்கள் என்றால் இந்த மாதிரி தான் தீர்ப்போம்.அதற்காக எடுத்தவாக்கிலே கறாக இருக்க வேண்டும் என்பதில்லை.ஆனால்,இதைப் போல இனிமேல் எழுகிற பிரச்சனைகளில் தீருங்கள்.அது தான் புத்திசாலித்தனமானது"என எம் கருத்துக்களையும் வலியுறுத்தி விடுவோம்.அப்படி நம் பாணி மெதுவாக அமுலானது.நமக்கு நல்ல பேரும் கிடைத்தது.

பிரதிநிதிகள் என என் தலைமையில் குகன்,குச்சி,மாணிக்கம் சேர்ந்து வருவார்கள்.தவிர அவ்விடத்திலுள்ள எம் தோழர்களும் இருப்பார்கள்.ஒவ்வொரு கிராமத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு தீவிர ஆதரவாளர்களாக சில குடுபத்தினர் இருந்தது போல,எமக்கும் ஒவ்வொரு பகுதியிலும் 1-2 உறுதியான தோழர்கள் இருக்கவே செய்தார்கள்.அதனாலே,சண்டித்தனம் செய்தவர்கள் பலரும் தலைமறைவாகி விட்டிருந்தனர்.சில சண்டியர்,சாதாரண மனிதராக மாறிய அதிசயம் நிகழ்ந்திருந்தது.சண்டியர்களும் ஒரு அமைப்பு வடிவத்தினர் தான்.தலை எங்கேயோ இருக்கும்.ஜால்ராக்கள் எல்லாம் சிங்கள தேசியவாதிகளின் ஊக்குவிப்பால் சண்டித்தனம் செய்பவர்களாக இருந்தார்கள்.ஜால்ராக்கள் உண்மையிலே சண்டியர்கள் கிடையாது.சலுகைகள் கிடைக்கும் என்றால்,படலை கதவிலே இருக்கிற ஓணான் கூட எங்க வீட்டுக்கு கல்லை எறியும் தானே!எங்க கிராமத்தில்,அப்படிப்பட்டவர்கள் எனக்குத் தெரிந்து 2 பேர்கள இருந்தார்கள்.இப்ப, அவர்கள் சண்டியர்கள் இல்லை.தம் வேலை உண்டு,தம் குடும்பம் உண்டு என்றிருக்கிறார்கள்.

பெரும்பாலும் காதல்ப் பிரச்சனைகளைத் தான் கொண்டு வந்தார்கள்.பெற்றோர் எதிர்ப்பாக

நின்றார்கள்!,உறவினர் விட மாட்டேன் என்கிறார்கள்!,கிராமம் ஒரு பக்கம் எதிர்ப்புக் கொடி தூக்குது...என்றார்கள்!கிராமம் நின்றால் 2 பக்கத்திலும் இருக்கிற விழிப்புக் குழுவையும் சந்திக்க வைத்தோம்.2 பக்கத்தில் எழுகிற எதிர்ப்புக்களை அவரவர் அடக்கிக் கொள்ள வேண்டும் என்பதில் உடன் படச் செய்தோம்.முந்தி மக்களுக்கு எம் மேலே பயம்.இப்ப விழிப்புக் குழுவிற்குப் பயம்.காதலர்களை கட்டி வைக்கிறது நடந்தது.

ஆனால்,அப்படிச் செய்தது எங்களுக்கு உபத்திரவமாகியது.மூச்சுத் திணறுறளவிற்கு '15-16 வயசு பெடியன்,பெட்டைகள் கூட காதலிக்கிறோம்'என்று எங்க தோழர்களிடம் வரத் தொடங்கி விட்டார்கள்.தோழர் அவர்களை விழிப்புக் குழுவிடம் கூட்டிச் செல்வார்.ஆண் தரப்பையும்,பெண் தரப்பையும் விசாரிக்க இரவில் கூடுற போது,பேசுவார்கள்..,பேசுவார்கள் முடிவே இல்லாமல் பேசிக்

கொண்டிருப்பார்கள்.கேட்கிற எங்களுக்கு தலையைச் சுத்தும். 'கட்டாது போனால் தற்கொலை செய்து கொண்டு விடுவோம்'என்று ஓணானைப் போல இருவரும் தலையை ஆட்டுவார்கள்.நேரம் போய்க் கொண்டேயிருக்கும்.ஆனால்,நாம் ஒன்றைக் கண்டிருந்தோம்.தாத்தா,பாட்டி போல இருக்கிற கிழம் கட்டைகள் நீதிபதிகளாக இருப்பதை.நல்ல அனுபவஸ்தர்களாகவும் இருந்தார்கள்.பொதுவாக யாருமே அவர்களது புத்திமதிகளைக் கேட்பதில்லை.கதைக்கிற எல்லாப் பாத்திரங்களையும் நாங்கள் குழுமூலமாக கதைக்க வைத்தோம்.நம் கருத்துக்களையும் அப்பப்ப சொல்லிக் கொண்டிருப்போம். கடைசியில் தாத்தா,பாட்டி இன் பேச்சுப்படி நடக்க வைப்போம்.அவர்கள் பேச்சை கேட்பதில்லை தவிர,அவர்களுக்கு மரியாதை எல்லாரிடமும் இருந்தன.விழிப்புக் குழு பலமாக நிற்கவே,அதன்படி அமுலாக,பிரச்சனைகள் தீரும்.

வெளிய வார போது சாமக்கோழி கூவி விடும்.உண்மையிலே சாமத்திலே கோழி கூவுறது இருக்கிறது.கூட்டம் முடிந்த பிறகு,எங்களுக்கு மட்டும் குழு அங்கத்தவர் ஒருத்தர் வீட்டிலிருந்து தேனீர் வரும்.1 மணி-2 மணி போல இருட்டுச் சத்தங்களையும் கேட்டுக் கொண்டு,சைக்கிளிலில் உழக்கியபடி திரும்புறது புதிய அனுபவமாக இருந்தது.ஒவ்வொருவராக கழற தனிய வீட்டை வந்து சேருவேன்.இரவிலே முழிப்பதால் ரத்தம் உடம்பிலே செத்துப் போகும் என்பார்கள்.அது உண்மையோ?..இல்லையோ கண் சதா எரியும்.உடம்பு சோர்வாக இருக்கும்.விழுந்தால் மரக்கட்டை நித்திரை.விடிந்தாலும்,அந்த கண் எரிவு,சோர்வுகள் விட்டுப் போகாது.

விடுதலைக்கு என்று கிளம்பி விட்டு,இதை எல்லாம் பெரிதாக பார்த்து கொண்டிருந்தால் எப்படி!ஆயுதங்களை தூக்கிப் பிடிக்க பயிற்சிக்கு வேற போக வேண்டும்.முடியாது என்ற வார்த்தை போராளியின் அகராதியில் கிடையாது.சிங்கள தேசியத்தை துரத்தி,எம் தமிழ் தேசியத்தை நிலை நாட்டுவோம்!வரலாறு அதைச் சொல்லும்.கனவு மிதப்பில் இருக்கிற போது,கூட வார மாணிக்கம், "கடைசியிலே எங்களை கல்யாண

புரோகிதர்களாக்கி விட்டார்கள்.தீர்க்கிற எங்களுக்கு இந்த வாழ்க்கை இல்லை.பார்த்தாயா?முரணை"என்று என்னிடம் அடிக்கடி கேட்டான்.உண்மை தான்.இதற்கு என்னிடம் பதில் இல்லை.அதையும் வரலாறே சொல்ல வேண்டும்.

பல தோழர்கள் என்னிடம் சொல்லக் கேட்டிருக்கிறேன்.பள்ளிகூடத்தில் படித்த ஒருத்தியை வாழ்க்கையில் வந்தால் நல்லாய்யிருக்கும் என்று நினைக்கிறனான்.இதிலே சேர்ந்த பிறகு,அவளைக் குறித்து கனவே வர மாட்டேன் என்கிறது.அதிசயமாய் இருக்கிறதடா".சிங்கள தேசியம் நீட்டிய துவக்குடன் நேரிலே நிற்கிற போது எப்படி கனவு வரும். 'காதல்' என்பது கவர்ச்சியால் மட்டும் வருவதில்லை.சிமார்ட்டாக வாழ வேண்டும்,வாரவளின் முகத்தில் சந்தோசம் பூக்க வேண்டும்'என்றநினைப்போட வருவது.சிங்கள தேசியம்,தமிழ் தேசியத்தை அடக்குவதற்கு,எங்களோட சேர்ந்த பெண்னினத்தையே முதல் இலக்காக கொண்டிருக்கிறது.இருக்கிற பெண்களைக் காப்பாற்றுவதற்காக வீட்டை விட்டே 'நான் அனாதை'என்கிற மாதிரி ஓடி விடுற நாம்,புதிதாக ஒரு பெண்ணைச் சேர்த்து பலிகொடுக்க மனம் வருமா!ஒரு ஆணைப் பொறுத்த வரையில் அதிக பந்தமான பெண் மனைவியே.எதிரிப்படை அவளை இலக்காக வைத்தார்கள் என்றால்,அந்த நிமிசமே அவன் இறந்து விடுவான். ஓடிக் கொண்டிருக்கிற அந்தரம் எம்மை கனவு காண வைக்காது தான்.
விடுதலைக் குழுவில் சேர்கிற போது, 'எம்மை முழுமையாக ஒப்புவிக்கிறோம்'என வாக்குறுதி கொடுக்கிறோம்.பெண்ணை மனதில் இருத்தினால்..ஒப்புவிக்க முடியாது.சதா நிச்சியமற்ற நிலை.எதிராக நிற்கிற காரணிகளை எவ்வாறு எதிர் கொள்வது என்பது பற்றிய நினப்பே கிடந்தது.அந்த உணர்விலிருந்து விடுபடக் கூடாது என்பதற்காக 'விடுதலைப் பாடல்கள் பல இயற்றப் பட்டு ஒலிப்பரப்பாக்கப் பட்டன.விடுதலையை மையமாக கலைப் படைப்புக்கள்;எழுத்தாக்கங்கள் வெளியாகிறதுக்கு ஊக்குவிக்கப் படுகின்றன.எங்களையும் "நெடுக விடுதலப் பாட்டுக்களைக் கேளுங்கடா!"என்று சொல்கிறார்கள்.

மூளை சலவை செய்யப்பட்டாலே எம்மாலும்,வெறியுடனும்,துணிவுடனும்..இரக்கத்தை தூர வைத்து விட்டு மோத முடியும்.சிங்கள தேசியப் பகுதியிலும் ..இவ்வாறே உருவேற்றப் படுகிறார்கள்.தமிழர்கள் படுகொலையுறுவது இந்த வெறி ஏற்றலால் நடை பெறுகிறது.

புத்தரால் ஆசிர்வதிக்கப்பட்ட இந்த நாடு,கொஞ்சம் அவரின் கொள்கைகளை கவனத்தில் எடுத்திருந்தால் அமைதி பூத்த தீவாக அல்லவா

இருந்திருக்கும்.விதி,வெறியர்களைத் தான் படைக்கிறது.போதாக்குறைக்கு ...தேரர்களும் சேர்ந்து நிற்கிற நிலைக்கு மோசமாகிக் கிடக்கிறது.எம்முடைய எதிரி யார்?சிங்களப்படையா, புத்தகுருமார்களா, மக்களா?புரிந்து கொள்வது,எமக்கும் தான் சிரமாக

இருக்கிறது.எம் பலவீனத்தை எதிரி இலகுவாக பயன்படுத்தி வெற்றி பெறுகிறவனாக இருந்தான்.அதனால் கவிந்த நிலமை எங்களையும,கொடூர சிந்தையுள்ளவன் தலைவனாக இருந்தாலே வெல்ல முடியும் என்றதுக்குள் தள்ளி விட்டது.சிங்களப்படையைக் கொல்ல நாம் தயார்.ஆனால்,மற்ற எல்லா கொடூரங்களுக்கும் ஒத்துப் போகிற மனநிலை எமக்கிருக்கவில்லை.பெரும்பாலானக் குழுக்களுக்கும் இருக்கவில்லை.புனிதமான போராட்டம்!நேர்மையான போராளி..என்றே பேசியதால்,போராட்டமும் கொலை செய்யாமல் நடக்கிற ஒன்று என்ற கற்பனை வெளிக்குள் காலை வைத்து விட்டிருந்தோம்.எம் தலைமைப் பகுதி, 'ஒரு போராளியின் கையில் மனித ரத்தக் கறை படிந்திருக்கவே வேண்டும்'எச்சரித்துக் கொண்டு தான் இருந்தது.

உள்ளே மற்ற குழு உளவாளியோ'எனறெழுந்த சந்தேகம் காரணமாக.. துவக்கு திருப்பப் பட்டு,உட்கொலைகளும் நடைபெறத் தொடங்கின.மனித ரத்தக் கறை பூசும் செயற்பாடு.சரியோ..பிழையோ..?இதால் ஏற்பட்ட பதட்டம் விடுதலையில் நம்பிக்கையை இழக்க வைப்பதாக இருந்தது.

போராட்டத்தில் தீவிரமாக நின்ற குழு,மற்றயவை வீணாக சக்தியை சிதறடிப்பதாக கருதிக் கொண்டது.காலுக்க,கையுக்க வாரார்கள் என்று தடை செய்யவே கிளம்பி விட்டது.

பலகொலைகள்.அத்தனையும் சகோதரக் கொலைகள்.எங்களுடையதும் தடைக்குள்ளாகி விட்டது.

பிறகென்ன, களை எடுப்பு தானே!பெரும் தலைவர்கள் முதல் தர எதிரிகள்.பொறுப்பாளர்களாக இருந்தவர்கள் 2ம் தர எதிரிகள்.பயிற்சி பெற்றவர்களும்,பெறாதவர்களும் 3ம் தர எதிரிகள்.இப்படியே வரையறுக்கப் பட்டு வேட்டையாடல் ஆரம்பமாகின.

எங்களுக்கு கொழும்புக்கு போய் விடுங்கள் என அறிவித்தல்கள் வந்தன.தற்காலிகமாக எமது குரள்வளைகள் நசுக்கப் படுகின்றன.நானும்,பலரும் கொழும்புக்கு வந்து விட்டோம்.

குகன் போன்றவர்கள் 3ம் தர எதிரிகள்.பெரிதும் ஆபாயமற்றவர்கள்.அவர்களைக் கொல்வது குறைவாக இருந்தன.பதிலுக்கு, "எங்கடயளிலே வந்து சேருங்கள்"என்ற அழைப்பே ..விடுவிக்கப் பட்டன.பலர் சேர்ந்தும் இருந்தார்கள்.குச்சியும்,மாணிக்கமும் கொழும்பு வந்து சேர்ந்திருக்கவில்லை.புலம் பெயர்ந்த நாட்டிலே தான் அவர்களை சந்திதேன்.குகனைப் பற்றிய செய்திகளை மாணிக்கம் மூலமாகவே அறிந்து கொண்டிருந்தேன்.குகனும்,பிழைப்புக்காக மத்திய கிழக்கு நாடு ஒன்றிற்குப் போய் இருந்தான்.சிறிலங்கா,எங்கள் சொந்த நாடு.

‘தமிழீழம்’என்ற சொல் பிடிக்கா விட்டால்,தமிழ் சிறிலங்கா,சிங்கள சிறிலங்கா..என 2 பெரிய மாகாணங்களாகவாவது பிரித்திருக்கலாம்.வெளிநாடுகளில் ஒரு சிறிலங்கா என்ற பெயரே பாவித்திருக்கலாம்.சிங்கள அரசியல்வாதிகளுக்கு எதற்கும் மனம்
இல்லை.

2 ஆண்டுகளுக்குப் பிறகு,இடிபோல..குகனுக்கு நேர்ந்த விபத்தை கேள்விப்பட்டேன். சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்த அவனை கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று மோதியதில்,வலதுபுறம் முழங்காலுக்கு கீழே உள்ள கால்ப் பகுதியை இழக்க வேண்டி ஏற்பட்டு விட்டது.பவானியக்கா,அவனை வெளியில் அனுப்பக் கூடியவரில்லை.தடை செய்யப்பட்ட இயக்கம்.முக்கியமான எதிரியாகவே கிடந்து,மாற்றமே இல்லாது அடக்குமுறைகள் செய்யும் சிறிலங்கா .அவருக்கு நாடு பெரிதில்லை.மகன் தான் பெரிசு.வேறு வழியின்றியே அனுப்பி இருப்பார்.விதி கொடியது!மாணிக்கம் கூறிய போது,இங்கேயும் கூட பல தமிழர்கள் வீதி விபத்தில் இறந்தது நினைவு வரவே செய்தது.உண்மையிலே இந்த நாடுகள் ஒன்றும் பாதுகாப்பான நாடுகள் என்றில்லை.கார்கள் மலிந்து போய்க் கிடக்கின்றன.எரிபொருளின் விலை குறைவு.விலையை மலிவாக வைத்திருப்பதற்காக எண்ணை வள நாடுகளில் உள்ள மக்களையும்,அழகிய கட்டிடங்களையும் இரக்கமின்றி அழிக்கின்றார்கள்.சிங்கள அரசாங்கம் போல குண்டுகள் போட்டுத்தான்.

நம்முடைய உலகம் சிறியவை என்பதால்,நாம் இவர்களின் அரசியலைப் பற்றி அக்கறை கொள்வதில்லை.நம்மூர் அரசியலாலே களைத்துப் போய்க் கிடக்கிறோம்.இன்னொரு சாக்கடையில் கால் வைக்க விருப்பம் இல்லை.

கால் போன செய்தி கேட்ட மாத்திரத்திலே பவானியக்கா எத்தனையளவு துடித்திருப்பார்.சுனாமி அனர்த்தத்தால் எத்தனை அழிவுகளை சிறிலங்கா கண்டிருக்கிறது.அதற்குப் பிறகும் மனித பேரவலத்தை சிறிலங்கா நிகழ்த்தியிருக்கிறது.சிங்கள சிறிலங்கா என்றால் நிகழ்த்தி இருப்பார்களா? இல்லை.தமிழர்கள் என்பதாலே நிகழ்த்தி இருக்கிறது.பவானியக்கா போல எத்தனை 1000 தாய்மார்கள் துடித்து அழுது

கொண்டிருப்பார்கள்.இதை,அரசியலற்ற சாதாரண சிங்கள மக்கள் கூட மன்னிக மாட்டார்கள்.இதற்கு அனுபவிக்கத் தான் போறார்கள்.கொடூரங்கள் ஒவ்வொன்றுக்கும் ..விலைகள் இருக்கத்தான் செய்கின்றன.வரலாறு அதனை நிச்சியம் எழுதும்.

balamuraly@sympatico.ca
26 ஏப்ரில் 2011

30. பேய் பிடித்த வீடு - நடேசன் -

அந்த வீட்டின் படுக்கையறையுள் நுழைந்ததும் பெரிய புயல் வீசியபடி இருப்பதை உணர்ந்தேன். மெதுவாக ஆரம்பித்து பின் பலமாக வீசிய அந்தப் புயலால் சிறிது நேரத்தில் நிலத்தில் தூக்கி வீசப்பட்டேன். தரையில் இருந்து மெதுவாக என்னை சுதாகரித்தபடி அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து என்னை ஆசுவசப்படுத்திக் கொண்டேன். சில நிமிட நேரத்துக்கு பின் எழுந்து கண்ணாடி யன்னலை மெதுவாக மேலே உயர்த்த முயன்றேன். உயர்த்த முடியவில்லை. மிகுந்த பலத்தோடு உயர்த்தியபோது மீண்டும் வெளியில் இருந்து வீசிய புயல் காற்று என்னை அடித்து வீழ்த்தியது. நான்; எழுந்து வெளியே கூடத்திற்கு வந்து புத்தக அலுமாரியில் இருந்து இரண்டு புத்தகங்களை எடுத்துக் கொண்டு அந்த வீட்டை விட்டு வெளியேற நினைத்த போது அந்த புத்தக அலுமாரி நிலத்தில் விழுந்து புத்தகங்கள் தரையில் சிதறின. ஒன்றும் தேவையில்லை என வேகமாக வெளியே வந்து எனது சுவாசத்தை பலமாக உள்ளே இழுத்து விட்டு இது பேய்பிடித்த வீடு என நினைத்துக்கொண்டு திரும்பிப் பாராமல் அந்த வீட்டை விட்டு வெளியே வந்து நடந்தேன்.'

எனது நேர்சுக்கு இந்தக் கதையை டேவிட்; உரத்த குரலில் சொன்னபோது பரிசோதிக்கும் அறையில் இருந்த எனது காதுகளில் சிறுவயதில் விட்ட கடுதாசி ரொக்கட் போல் அக்கதை வந்தடைந்தது. எங்கேயோ இப்படியான வர்ணனையை படித்திருக்கிறேன் என நினைத்து எனது மூளையை கறி எலுமிச்சங்காயாக பிழிந்த போது மெதுவாக ஞாபகம் வந்தது.

(EMILY BRONTE)எமிலி புரன்ரி எழுதிய(WUTHERING HEIGHTS) வுதறிரிங் ஹயிற் என்ற ஆங்கில நாவலில் விவரிக்கப்பட்ட (LOCK WOOD) லொக்வூட் என்ற கதை சொல்லுபவர் தனது கெட்ட கனவை விவரித்தது போன்று இருந்தது. அங்கு ஆவி உள்ளே வர முயன்றது. டேவிட்டின் கதையில் ஏற்கனவே ஆவி வீட்டுக்குள் வந்து விட்டது.

நான் வெளியில் வந்து 'டேவிட் அதன் பின் என்ன நடந்தது?' எனக்கேட்டேன்.

'சில காலம் வங்கரத்தாவில் பிரைவேற் பஸ் சாரதியாக வேலை கிடைத்த போது நான் இருப்பதற்காக அந்த வீட்டைத் தந்தார்கள். அந்த வீட்டில் ஒரு இளம் பெண் தற்கொலை செய்ததால் அந்த ஆவி இருக்கும் வீடு என நான் பின்பு ஊர் மக்களிடம் இருந்து அறிந்து கொண்டேன்.'

'வேலைக்கு என்ன நடந்தது?'

'சில நாட்களின் பின் அந்த வேலையை விட்டு நான் விலகி மீண்டும் மெல்பனுக்கு வந்து விட்டேன்.'

எனக்கு பல காலமாக பரிச்சயமான டேவிட் சொல்வதை நான் முற்றிலும் நம்பத் தயாரில்லை. ஒவ்வொரு முறையும் பணம் செலுத்த தவறும்போது ஏதாவது சுவையான கதை சொல்லும் வழக்கம் டேவிட்டிடம் இருக்கிறது. அவுஸ்திரேலியாவில்(BULLSHIT ARTIST) புல்சிட் ஆட்டிஸ்ட் என்பார்கள்

இன்னும் வைத்தியம் செய்த பணம் பாக்கியிருக்கிறது.

தனக்கு வேலை பல காலமாக இல்லை என்ற காரணத்தால் பணம் பாக்கி செலுத்தாது கடத்தப்பட்டு வருகிறது.

டேவிட்டிடம் இரண்டு நாய்கள் இருக்கின்றன. கிரேகவுண்இனத்தைச் சேர்ந்தவை. ஆனால் இதயத்தில் ஓட்டை இருப்பதால் ஓட்டப்பந்தயத்தில் இருந்து ஒதுக்கப்பட்டதை டேவிட் எடுத்து வளர்க்கிறான். அவுஸ்திரேலியாவில் பணக்காரர் குதிரைப்பந்தயத்தில் ஈடுபடும்போது பணவசதி குறைந்தவர்கள் ஈடுபடுவது இந்த கிரேகவுண் ஓட்டப்பந்தயம். டேவிட்டுக்கு கிரேகவுண் பந்தயத்தில் பற்று இருந்தது.

டேவிட்டின் அடுத்த நாய் அவுஸ்திரேலியவுக்கு உரிய கெல்பி நாய். அந்த நாய் சில வருடங்களுக்கு முன் அறுபதடி உயரமான பாலத்தில் இருந்து குதித்தது. ஆனால் சில காயங்களோடு தப்பி பிழைத்தது .பல நாட்களாக நான் வைத்தியம் செய்த பணத்தை தரவில்லை. தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது வேலை இல்லாமல் இருப்பதாகவும் கிடைத்தவுடன் தருவதாகவும் சொன்னார்

இப்படி சில வருடங்கள் ஓடிவிட்டன.

ஒரு நாள் மீண்டும் அந்த கெல்பி நாயுடன் வந்தபோது நாயின் வயிறு பெரிதாக வீங்கி இருந்தது.

‘என்னால் முதலுதவி வைத்தியம் மட்டும் செய்யமுடியும். .இரத்த பரிசோதனைக்கு பணத்தை கட்டினால் மட்டுமே மேற்கொண்டு வைத்தியம் செய்யமுடியும்’ என்றேன்.

டேவிட்டின முகம் மாறிவிட்டது.

‘என்ன இப்படி சொல்லி விட்டீர்கள்?’

‘எனது சேவைக்கு நீங்கள பணம் தராமல் விட்டால் பரவாயில்லை. ஆனால் இரத்த பரிசோதனைக்கூடத்தை நான் நடத்தவில்லை. அவர்களுக்கு பணம் கட்டவேண்டும்.

இல்லாவிட்டால் நான் ஏதும் செய்யமுடியாது'

நாயை என்னிடம் விட்டு விட்டு, 'பணத்துடன் வருகிறேன்;' என்று சென்றுவிட்டார்

எனக்கு ஒருவிதத்தில் பாவமாக இருந்தது

சில மணி நேரத்தில் பணத்துடன் வந்து பக்கத்து வீட்டில் கடன் வேண்டியதாக சொன்னார். .இரத்தத்தை சோதித்து பார்த்தபோது வயிற்றில் கட்டி இருப்பதும் அதில் இரத்தம் தொடர்ந்து வயிற்றுக்குள் வடிந்திருப்பதும் தெரியவந்தது.

'மாற்று இரத்தம் ஏற்றி வைத்தியம் செய்யவெண்டியுள்ளது. ஆனால் பதின்மூன்று வயதில் இதை செய்தாலும் பலகாலம் உயிர்வாழப்போவதில்லை என்பது எனது அபிப்பிராயம்.'என்றேன்

வீட்டுக்குச் சென்ற சில நாட்களில் அந்த கெல்பி இறந்து விட்டது.

அதனது சடலத்தை அடக்கம் செய்ய மீண்டும் கொணடு; வந்த போது நான் அதன் ஒழுங்குகளை செய்தேன்.

இம்முறை அந்த அடக்கத்துக்கான பணத்தை தர வந்த போதுதான் இந்த பேய்கதையை டேவிட் எனது நர்சுக்கு கூறினார்.

பொய் சொல்வது உறுதியாக தெரிந்தாலும் பொய்யை அவதானமாக கேட்பது இந்த வைத்திய துறைக்கு தேவையாக இருக்கிறது.

'டேவிட இப்பொழுது நிரந்தரமான வேலை உள்ளதா?' எனக்கேட்டேன்.

சிறு பிள்ளைகளின் ஸ்கூல் பஸ் சாரதியாக வேலைக்கு சேர்ந்திருக்கிறேன். நான் வேகமாக ஓட்டுவதால் குழந்தைகளுக்கு என்னைப் பிடிக்கும.; இடையில் வாடகை பஸ் சாரதியாக சேர்ந்து இருந்த போது பல கனமான பெட்டிகளையெல்லாம் சுமக்க வேண்டும். அதனால் அதை விட்டு விட்டேன். இடையில் கொஞ்ச நாட்கள் வேலை இல்லாமல் இருந்ததால் உடல் பெருத்து விட்டது என சிரித்தபடி தனது வயிற்றை தடவினார்.

uthayam@optusnet.com.au

5 ஜூலை 2011